136404
சென்னை-600 008

## உள்ளடக்கம்

13-6-1985

பக்கங்கள்

(அ) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்
(ஆ) Personnel of the Government of Tamil Nadu .. i–vi
(இ) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. vii–viii
(ஈ) தொகுதிகள் உள்ளிட்ட, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப் பட்டியல் ix–xvi

வினாக்கள்–விடைகள்
1. உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 1–38

2. அறிவிப்புகள் :
(அ) கொள்கை விளக்கக் குறிப்புகளை முன் கூட்டியே அனுப்பி வைப்பது குறித்து 39
(ஆ) மேலவையிலிருந்து வரப்பெற்றுள்ள செய்தி 39–40
(இ) வேளாண்மைப் பல்கலைக்கழக நிர்வாகக் குழுதேர்தல் .. .. . 44

3. கவன ஈர்ப்பு :
கும்பகோணம் கூட்டுறவு வங்கியில் கடனைத் திருப்பிச் செலுத்தியோருக்குச் சொத்துப் பத்திரங்களை விடுவித்துத் தராததால் ஏற்பட்டுள்ள நிலை .. .. [illegible]

4. ஆளுனர் தீர்மானம் ..
வேளாண்மைப் பல்கலைகழக நிர்வாகக் குழு—தேர்தல் .. .. 43–44

5. வரவு–செலவுத் திட்டம் 1985-86 வாக்கெடுப்பு— 44–168
(அ) கோரிக்கை எண் 12 தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் ...
சின்கோனா ..
(அ) கோரிக்கை எண் 25 காட்டுவளத்துறை
(இ) கோரிக்கை எண் 45 செய்தி, சுற்றுலா,
(ஈ) கோரிக்கை எண் 47 திரைப்படத் தொழில் நுட்பவியல் ..
(உ) கோரிக்கை எண் 56 காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு ..

| | | பக்கங்கள் |
|---|---|---|
| | மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் .. | 47–50, 54–55, 145–164 |
| | திரு. மா. சுந்தரதாஸ் .. .. | 50–60 |
| * | திரு. சி. சுப்பராயர் .. .. | 6[illegible]–66 |
| * | திரு. சோ. மா. இராமச்சந்திரன் .. | 66–73 |
| * | திரு. க. சோலைராசு .. .. | 73–83 |
| | திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா .. | 83–90 |
| * | திரு. அ. வெங்டாசலம் .. .. | 90–94 |
| | திரு. வை. பாலச்சந்திரன் .. .. | 94–105,164 |
| * | திரு. செ. செம்மலை .. .. | 105–112 |
| | திரு. எஸ். என். இராமசாமி .. | 112–116 |
| * | தி[illegible] எம். செல்லமுத்து .. .. | 116–125 |
| * | திரு. கே. உச்சி .. .. .. | 126–130 |
| | திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் . | 130–140 |
| * | திரு. கே. கல்லன் .. .. . | 140–145 |
| | [illegible] பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 169 |

---

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

### திரு. சுந்தர்லால் குரானா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: (முதலமைச்சர்) —பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப் பாகு கழிவு, தொல்பொருள் இயல், மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக); ஆயத்துறை மற்றும் பயண இசைவுச் சீட்டு.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (நிதி அமைச்சர்)— நிதி, வருவாய், சட்டமன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள், இளைஞர் அணி மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (மின் துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு, எஃகு கட்டுப்பாடு, அச்சு காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)—தொழிலாளர், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

6. மாண்புமிகு திரு. க. இராசாராம் : (தொழில் துறை அமைச்சர்)—பெருந்தொழில்கள், சுரங்கம் மற்றும் கனிவளம், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

7. மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை.

8. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)— கல்வி ஆட்சிமொழி தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு.

9. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண் பொறியியல், வேளாண் பணி கூட்டுறவு சங்கங்கள், குடிநீர் வழங்கு மற்றும் கழிவு நீரகற்று வாரியம்.

10. மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (சட்ட அமைச்சர்)—சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு மற்றும் கடன் நிவாரணம், (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைகள்பற்றி சட்டம் இயற்றல் உள்பட).

11. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை, சுற்றுசூழல் மாசுக் கட்டுப்படுத்தல்.

12. மாண்புமிகு திரு. க. முத்துசாமி: (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்கு வரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்.

13. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (உணவு அமைச்சர்)—உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

14. மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: (கைத்தறித் துறை அமைச்சர்)—கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

15. மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : (சத்துணவு அமைச்சர்)—சத்துணவு.

16. மாண்புமிகு திரு. தா. வீராசாமி: (வணிக வரித் துறை அமைச்சர்)—வணிக வரிகள்.

17. மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: (வீட்டு வசதித் துறை அமைச்சர்)—வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

18. மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரக தொழில்கள்.

19. மாண்புமிகு திரு. த. இராமசாமி: (மறுவாழ்வு மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர்)—வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்.



2852

20. மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: (ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

21. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம் மற்றும் மீன் வளம்.

22. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் உள்ளிட்ட சமூக நலம், பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

23. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி: (கதர்த்துறை அமைச்சர்)—கதர், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

24. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (பொதுப்பணித் துறை அமைச்சர்)—பொதுப்பணித் துறை, சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ஃப்.

25. மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: (கூட்டுறவுத் துறை அமைச்சர்)—கூட்டுறவு.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU

**Thiru. SUNDAR LAL KHURANA**

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS :

1. **The Hon. Dr. M. G. RAMACHANDRAN** : (Chief Minister)—Public, General Administration, Indian Administrative Service, and other All India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaelogy, Prohibition excluding grant of Liquor permits, Excise and Passports.

2. **The Hon. Dr. V. R. NEDUNCHEZHIAN** : (Minister for Finance)—Finance, Revenue, Legislature, Elections, Statistics, Youth Service Corps, and Ex-servicemen.

3. **The Hon. Thiru S. RAMACHANDRAN**: (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

4. **The Hon. K. A. KRISHNASAMY**: (Minister for Labour)—Labour, Animal Husbandry, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. **The Hon. Thiru R. M. VEERAPPAN**: (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and grant of Liquor permits.

6. **The Hon. Thiru K. RAJARAM** : (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minerals, Electronics, Science and Technology.

7. **The Hon. Thiru P. U. SHANMUGAM** : (Minister for Local Administration)—Municipal Administration, Panchayats, Panchayat Unions, Community Development and Rural Indebtedness.

8. **The Hon. Thiru C. ARANGANAYAGAM** : (Minister for Education)—Education, Official Language, Tamil Development and Culture.

9. The Hon. Dr. K. KALIMUTHU: (Minister for Agriculture)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering, Agro-Service Co-operative Societies, Water Supply and Drainage Board.

10. The Hon. Thiru C. PONNAIYAN : (Minister for Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

11. The Hon. Dr. H. V. HANDE : (Minister for Health)—Health and Enviromental Pollution Control.

12. The Hon. Thiru S. MUTHUSAMY : (Miniter for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Acts, Ports and Highways.

13. The Hon. S. THIRUNAVUKKARASU : (Minister for Food)—Food, Price Control and Census.

14. The Hon. Thiru V. V. SWAMINATHAN : (Minister for Handlooms)—Handlooms and Textiles.

15. The Hon. Thiru R. SOUNDARARAJAN : (Minister for Nutritious Meals)—Nutritious Meals.

16. The Hon. Thiru T. VEERASAMY : (Minister for Commercial Taxes)—Commercial Taxes.

17. The Hon. Thiru N. NALLUSAMY : (Minister for Housing)—Housing and Slum Clearance Board, Town Planning and Accommodation Control.

18. The Hon. Thiru Anoor P. G. JAGADEESAN : (Minister for Rural Industries)—Rural Industries including Village, Cottage and Small Industries.

19. The Hon. Thiru T. RAMASAMY: (Minister for Rehabilitation and Employment)—Employment and Training, Indians Overseas Refugees and Evacuees.

20. The Hon. Thiru A. ARUNACHALAM : (Ministes for Adi-Dravidar Welfare)—Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

21. The Hon. Thiru M. R. GOVENDAN: (Minister for Backward Classes)—Backward Classes and Fisheries.



22. The Hon. Tmt. GOMATHI SRINIVASAN : (Minister for Social Welfare)—Social Welfare including Women and Children Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration.

23. The Hon. Tmt. VIJAYALAKSHMI PALANISAMY : (Minister for Khadi)—Khadi, Bhoodan and Gramdhan.

24. The Hon. Thiru Y. S. M. YUSUF : (Minister for Public Works)—Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

25. The Hon. Thiru K. K. S. S. R. RAMACHANDRAN : (Minister for Co-operation)—Co-operation.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

**பேரவைத்தலைவர்**

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்

**பேரவைத் துணைத் தலைவர்**

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

திரு. மா. சின்னராசு
திரு. செ. செம்மலை
திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்
திரு. மு. இராமநாதன்
திரு. வே. இரா. ஜெயராமன்

**சட்டமன்ற பேரவைச் செயலாளர்**

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

**இணைச் செயலாளர்**

திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.

**துணைச் செயலாளர்**

திரு. வி. சீதாராமன். பி.காம்., பி.ஜி.எல்.

**குழு அலுவலர்கள்**

திரு. கா. சீனிவாசன், பி.எஸ்.சி.
திரு. கு. அ. சீனிவாசன், பி.ஏ.

**சார்புச் செயலாளர்கள்**

திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.
திரு. வ. சா. ஜான், பி.ஏ.
திரு. கா. செ. சுந்தரராஜன், பி.ஏ., பி.ஜி.எல்.
திரு. டி. சாலமன் ஜெயபால், பி.எஸ்.சி. பி.எல்.

**எஸ்டேட் அலுவலர்கள்**

திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல்.

திரு. கேசவராம், பி.ஏ.

**பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்**

திரு. பி. கோதண்டராமன்

**துணைச் செயலாளர் (பதிப்பாளர்)**

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.

**தலைமை நிருபர்**

திரு. வை. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்எல்.பி.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களி (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப்பட்டியல்

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|
| 1. அப்துல் சமத், திரு. ஆ.கா.அ. | திருவல்லிக்கேணி |
| 2. அப்துல் மஜீத், திரு. எச். | வாணியம்பாடி |
| 3. அரங்கநாயகம், திரு. செ. | தொண்டாமுத்தூர் |
| 4. அரிக்குமார், திரு. இரா. | பெரணமல்லூர் |
| 5. அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ. வ.) |
| 6. அருணாசலம் திரு. எ. | வரகூர் (செ. வ.) |
| 7. அன்பழகன், திரு. க. | பார்க்டவுன் |
| 8. அன்பழகன், திரு. கே. | ஓமலூர் |
| 9. அன்பழகன், திரு. தி. | நாட்றாம்பள்ளி |
| 10. அன்பழகன், திரு. பொ. | இளையான்குடி |
| 11. ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 12. ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி | ஆண்டிமடம் |
| 13. ஆபிரகாம், திரு. ம. | ஆலந்தூர் |
| 14. ஆறுமுகம், திரு. அ. | வந்தவாசி |
| 15. ஆறுமுகம், திரு. எச். ஜி. | பென்னாகரம் |
| 16. ஆறுமுகம், திரு. ஆர். எஸ். | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 17. ஆறுமுகம், திரு. எ. எஸ். ஏ. | விருதுநகர் |
| 18. ஆறுமுகம், திரு. செ. | மதுராந்தகம் |
| 19. ஆறுமுகம், திரு. சேலம், மு. | சேலம்-2 |
| 20. ஆனந்த கிருஷ்ணா, திரு. ஜி. | பூந்தமல்லி |
| 21. ஆனந்தன், திரு. மு. | உளுந்தூர்பேட்டை |
| 22. இரகுபதி, திரு. கோ. | காட்பாடி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|
| 23. இரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 24. இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 25. இரத்தினவேலு, திரு. சே. | முசிறி |
| 26. இராசமாணிக்கம், திரு. ஆர். | அரூர் (செ. வ.) |
| 27. இராசமாணிக்கம், திரு. எல்ல. | தாம்பரம் |
| 28. இராசரத்தினம், திரு. எப். எம். | கொளச்சல் |
| 29. இராசரத்தினம் என்கிற மணி, திரு. எம். | விழுப்புரம் |
| 30. இராசாங்கம், திரு. மு. | திருவிடைமருதூர் |
| 31. இராசாம்பாள், திருமதி த. | தலைவாசல் (செ. வ.) |
| 32. இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 33. இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 34. இராசு, திரு. வி. கே. | அரக்கோணம் (செ. வ.) |
| 35. இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |
| 36. இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி. | ஆண்டிப்பட்டி |
| 37. இராமச்சந்திரன், திரு. கே. எஸ். எம். | போடிநாயக்கனூர் |
| 38. இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 39. இராமச்சந்திரன், திரு.ச. | பண்ருட்டி |
| 40. இராமச்சந்திரன், திரு. சோ. மா. | அண்ணாநகர் |
| 41. இராமச்சந்திரன், திரு. ப. ந. | பட்டுக்கோட்டை |
| 42. இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 43. இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 44. இராமநாதன், திரு. மு. | கோயம்புத்தூர் (மேற்கு) |
| 45. இராமலிங்கம், டாக்டர் கே. பி. | ராசிபுரம் |
| 46. இளங்கோவன், திரு. ஈ. வே. கி. ச. | சத்தியமங்கலம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|
| 47. ஈஸ்வரன், திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 48. உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 49. உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 50. எத்திராசன், திரு. கி. | அச்சரப்பாக்கம் (செ. வ.) |
| 51. கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 52. கதிர்வேலு, திரு. மா. | ராணிப்பேட்டை |
| 53. கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 54. கந்தசாமி, திரு. பெ. | பொங்கலூர் |
| 55. கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 56. கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |
| 57. காளிமுத்து, டாக்டர். கா. | மதுரை (கிழக்கு) |
| 58. கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம்விளக்கு |
| 59. கிருஷ்ணசாமி, திரு. வி. இரா. | அணைக்கட்டு |
| 60. கிருஷ்ணமூர்த்தி, திரு. கி. | கும்பகோணம் |
| 61. கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்-1 |
| 62. குப்புசாமி, திரு. கு. | ஒட்டன்சத்திரம் |
| 63. குமர குருபர ராமநாதன் திரு. ச. | விளாத்திக்குளம் |
| 64. குமரி அனந்தன், திரு. | ராதாபுரம் |
| 65. குமாரதாஸ் டாக்டர், தே. | கிள்ளியூர் |
| 66. குருசாமி என்கிற அண்ணா தாசன், திரு. எம். | திருவரம்பூர் |
| 67. கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கைமான் (செ. வ.) |
| 68. கோவிந்தசாமி, திரு. ஆர். | குடியாத்தம் |
| 69. கோவிந்தசாமி, திரு. ச. | எடப்பாடி |
| 70. கோவேந்தன், திரு. எம். ர். | பேராவூரணி |
| 71. சங்கரலிங்கம், திரு. ச. | சங்கரநாயனார் கோவில் (செ. வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|
| 72. சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 73. சண்முகம், திரு. என். | சோளிங்கர் |
| 74. சண்முகம், திரு. ப. உ. | மேல் மலையனூர் |
| 75. சண்முகையா பாண்டியன், திரு. | ஆலங்குளம் |
| 76. சந்திரசேகரன், திரு. ஆ. | சோழவந்தான் |
| 77. சந்திரசேகர், திரு. மு. | முகையூர் |
| 78. சம்சுல் ஆலம், திரு. வி.எஸ்.டி. | பாளையங்கோட்டை |
| 79. சமரசம், டாக்டர் கோ. | காவேரிப்பட்டினம் |
| 80. சரோஜா திருமதி. இரா. | உப்பிலியாபுரம் (ஆ. வா.) |
| 81. சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் (செ. வா.) |
| 82. சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 83. சிந்தன், திரு. வி. பி. | வில்லிவாக்கம் |
| 84. சிவக்குமார், திரு. ஆ. | சமயநல்லூர் (செ. வ.) |
| 85. சிவக்குமார், திரு. எம். | கூனூர் (செ. வ.) |
| 86. சிவஞானம், திரு. என். | திருவோணம் |
| 87. சிவப்பிரகாசம், திரு. சீ. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 88. சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 89. சிவராஜ், திரு. க. | ரிஷிவந்தியம் |
| 90. சின்னக்குழந்தை, திரு. மு. | ஆரணி |
| 91. சின்னச்சாமி, திரு. ரா. | தர்மபுரி |
| 92. சின்னசாமி, திரு. வே. கு. | பவானிசாகர் |
| 93. சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 94. சின்னராசு, திரு. மா. | மேட்டுப்பாளையம் |
| 95. சுந்தரதாஸ், திரு. மா. | விளவன்கோடு |
| 96. சுப்புராயர், திரு. சி. | கம்பம் |
| 97. சுப்பராயன், திரு. கு. | திருப்பூர் |
| 98. சுப்பிரமணிய ஆதித்தன் என்கிற சுப்பிரமணியன் திரு. எஸ். ஆர். | திருச்செந்தூர் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| 99. சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 100. சுப்பிரமணியன், திரு. வீ. | கண்டமங்கலம் (செ. வ.) |
| 101. சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 102. செங்காளியப்பன், திரு. ஆர். | சிங்காநல்லூர் |
| 103. செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டிப்பாளையம் |
| 104. செங்கோட்டையன், திரு. பெ | கபிலர்மலை |
| 105. செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 106. செல்லமுத்து, திரு. மொ. | திருவாரூர் (செ. வ.) |
| 107. செல்லப்பா, திரு. வி. கோ. | கடலூர் |
| 108. செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 109. சேகர் என்கிற குலசேகரன் திரு. கே. பி. | பொன்னேரி (செ. வ.) |
| 110. சொர்ணலிங்கம், திரு. கா. | திருவாடனை |
| 111. சோலைராசு, திரு. க. | மருங்காபுரி |
| 112. சைதை துரைசாமி, திரு. சா. | சைதாப்பேட்டை |
| 113. சௌந்திரராசன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 114. சௌரிராஜன், டாக்டர் கே. | தியாகராய நகர் |
| 115. ஞானசுந்தரம், திரு. சா. | மன்னார்குடி |
| 116. டேனியல்ராஜ், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம் |
| 117. தங்கமணி, திரு. மு. | மாயூரம் |
| 118. தங்கமணி, திரு. கே. எம். | திண்டிவனம் |
| 119. தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 120. தங்கராசு, திரு. செ. | மங்களூர் (செ. வ.) |
| 121. தங்கவேல்ராஜ், திரு. ப. ம. | கிருஷ்ணராயபுரம் (செ. வ.) |
| 122. தங்கவேலு, திரு. வி. | வால்பாறை (செ. வ.) |
| 123. தமிழ்மணி, திரு. | திருப்போரூர் (செ. வ.) |
| 124. தமிழரசன், திரு. கு. | பேரணாம்பட்டு (செ. வ.) |
| 125. தனபால், திரு. ப. | சங்கரி (செ. வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|
| 126. தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 127. தியாகராசன், திரு. ர. | விருத்தாசலம் |
| 128. திருஞானம், திரு. பி. ஆர். | ஏற்காடு (ஆ. வா.) |
| 129. திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 130. திருமலைசாமிக் கவுண்டர், திரு. சு. | உடுமலைப்பேட்டை |
| 131. தீர்த்தகிரி கவுண்டர், திரு. டி. | மொரப்பூர் |
| 132. தீர்த்தராமன், திரு. ப. | பாலக்கோடு |
| 133. துரை அன்பரசன் என்கிற இராமலிங்கம், திரு. | நெல்லிக்குப்பம் |
| 134. துரை கிருஷ்ணமூர்த்தி, திரு. | தஞ்சாவூர் |
| 135. துரை கோவிந்தராசன், திரு. | திருவையாறு |
| 136. துரைராசு, திரு. எஸ். பி. | காரைக்குடி |
| 137. துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 138. தெய்வநாயகம், திரு. எ. | மதுரை சென்ட்ரல் |
| 139. தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 140. நடராசன், திரு. ஆ. | பேரூர் |
| 141. நரசிம்ம பல்லவன், திரு. க. | உத்திரமேரூர் |
| 142. நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 143. நல்லமுத்து, டாக்டர் க. | பெரம்பலூர் (செ. வ.) |
| 144. நல்லுசாமி, திரு. என். | திருச்சிராப்பள்ளி—2 |
| 145. நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 146. நாராயணன், திரு. எஸ். | திருநெல்வேலி |
| 147. நாராயணன், திரு. பு. கோ. | பவானி |
| 148. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | ஆத்தூர் |
| 149. பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 150. பரமசிவம், திரு. பா. ந. | பல்லடம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|
| 151. பரிதி இளம்வழுதி, திரு. | பெரம்பூர் |
| 152. பழனி, திரு. த. | ஆற்காடு |
| 153. பழனிச்சாமி, திரு. கா. செ. | காங்கேயம் |
| 154. பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 155. பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 156. பாண்டுரங்கன், திரு. மு. | கலசப்பாக்கம் |
| 157. பாப்பா சுப்பிரமணியன், திரு. | குத்தாலம் |
| 158. பாரதி, திரு. ஜி. கே. ஜெ. | திருவொற்றியூர் |
| 159. பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ. வ.) |
| 160. பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 161. பாலகிருஷ்ணன், திரு. வ. | சிவகாசி |
| 162. பாலச்சந்திரன், திரு. வை. | பத்மநாபபுரம் |
| 163. பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ. வ.) |
| 164. பாலசுப்பிரமணியன், திரு. எஸ். | அம்பாசமுத்திரம் |
| 165. பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர் |
| 166. பாலன், திரு. சு. | எழும்பூர் |
| 167. பாலாஜி, திரு. கே. | காஞ்சிபுரம் |
| 168. பாலுச்சாமி, திரு. ஏ. | பரமக்குடி (செ. வ.) |
| 169. பாலுசாமி, திரு. அ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 170. பிச்சை, திரு. மு. | அருப்புக்கோட்டை |
| 171. பிரணவநாதன், திரு. அ. | கடலாடி |
| 172. பிரேம்குமார், திரு. ஆ. | திண்டுக்கல் |
| 173. புருசோத்தமன், திரு. எஸ். | அரியலூர் |
| 174. பஷ்பராசு, திரு. த. | திருமயம் |
| 175. பெரியசாமி, திரு. அ. | தாராபுரம் (செ. வ.) |
| 176. பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் | தொகுதியின் பெயர் |
|---|---|
| 177. பெருமாள், திரு. தெ. | கடையநல்லூர் |
| 178. பெருமாள் பிள்ளை, திரு. கோ. | கன்னியாகுமரி |
| 179. பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ். | பழனி (செ. வ.) |
| 180. பொன்னுசாமி, டாக்டர். அ. | பெருந்துறை |
| 181. பொன்னுரங்கம், திரு. ப. | ராயபுரம் |
| 182. பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 183. மணவாளன், திரு. எஸ்.பி. | திருப்பத்தூர் |
| 184. மணிமாறன், திரு. மா. | நன்னிலம் (செ. வ.) |
| 185. மலர் மன்னன், திரு. அ. | திருச்சிராப்பள்ளி—1 |
| 186. மனோகரன், திரு. நாஞ்சில் கி. | புரசைவாக்கம் |
| 187. மனோகரன், திரு. தி. நா. கோ. அ. | திருநாவலூர் |
| 188. மாசிலாமணி, டாக்டர் ந. | ஜெயங்கொண்டம் |
| 189. மாதவன், திரு. செ. | திருப்பத்தூர் |
| 190. மாதையன், திரு. யு. பி. | அந்தியூர் (செ. வ.) |
| 191. மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ. வ.) |
| 192. மாரிமுத்து, திரு. மு. | திருப்பரங்குன்றம் |
| 193. மீனாட்சி சுந்தரம், திரு. மா. | வேதாரண்யம் |
| 194. முகம்மது கனி, திரு. ஜே. | புதுக்கோட்டை |
| 195. முகமது சலீம், டாக்டர் த. | பெரியகுளம் |
| 196. முசிறிபுத்தன், திரு. பி. | குளித்தலை |
| 197. முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 198. முத்துராமலிங்கம், திரு. பி. கே. எம். | உசிலம்பட்டி |
| 199. முத்துராமலிங்கம், திரு. பொன். | மதுரை மேற்கு |
| 200. முத்துவேல், திரு. கே. | முதுகுளத்தூர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|
| 201. முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 202. முருகன், திரு. கி. | செய்யாறு |
| 203. முருகானந்தம், திரு. டி. என். | செஞ்சி |
| 204. முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 205. யசோதா, திருமதி. டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ. வ.) |
| 206. ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 207. ரவீந்திரன், திரு. ஏ. எஸ். | திருவண்ணாமலை |
| 208. ராமஜெயம், திரு. ம. நா. | வானூர் (செ. வ.) |
| 209. ராமன், திரு. கி. | ராஜபாளையம் (செ. வ.) |
| 210. ராஜாபாபு, திரு. ஜெ. | போளூர் |
| 211. ரெங்கசாமி, திரு. ஆர். | கோவில்பட்டி |
| 212. ரெத்தினராஜ், திரு. எஸ். | நாகர்கோவில் |
| 213. லட்சுமி, திருமதி. பி. | அவினாசி (செ. வ.) |
| 214. வச்சிரவேலு, திரு. ஏ. | தண்டராம்பட்டு |
| 215. வடிவேல், திரு. கு. | கரூர் |
| 216. வளர்மதி, திருமதி. பா. | மயிலாப்பூர் |
| 217. விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 218. விசயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | வீரபாண்டி |
| 219. வீராணம்பலம், திரு. க. வெ. | மேலூர் |
| 220. வீரய்யன், திரு. கோ. | நாகப்பட்டிணம் |
| 221. வீராசாமி, திரு. தா. | ஒரத்தநாடு |
| 222. வேங்கடரமணன், திரு. டி. ஆர். | தென்காசி |
| 223. வெங்கடரெட்டி, திரு. டி. | ஓசூர் |
| 224. வெங்கடாசலம், திரு. அ. | ஆலங்குடி |
| 225. வெங்கடாசலம், திரு. கி. | லால்குடி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
| --- | --- |
| 226. வெங்கடாசலம், திரு. டி. எம். | பர்கூர் |
| 227. வேணுகோபால், திரு. எஸ். | டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர். |
| 228. வேணுகோபால், திரு. கே. வி. | தள்ளி |
| 229. ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குநேரி |
| 230. ஜகதீசன், திரு. ஆனூர் பு. கோ. | செங்கல்பட்டு |
| 231. ஜெகதீசன், திரு. சு. | அரவக்குறிச்சி |
| 232. ஜெயச்சந்திரன், திரு. சா. | காட்டுமன்னார்கோவில் (செ. வ.) |
| 233. ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு |
| 235. பிரான்சிஸ், திரு. ஜி. கே. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன், அமைச்சர்.
2. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே, அமைச்சர்.
3. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப், அமைச்சர்.
4. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி, தலைமை வழக்கறிஞர்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1985, ஜூன் 13, வியாழக்கிழமை

வைகாசி 31, குரோதன, திருவள்ளுவர் ஆண்டு—2016.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"வேண்டுதல்வேண் டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல."

விருப்பு வெறுப்பு இல்லாத இறைவனின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்க்கு எப்போதும் எவ்விடத்திலும் துன்பம் இல்லை.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

254—(*வினா எண் 869)—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) மற்றும் திரு. கி. அன்பழகன் : மாண்புமிகு மீன் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மைய அரசின் அனுமதிக்காக மாநில அரசு விண்ணப்பித்துள்ள மீன் திட்டங்கள் எவை?

(ஆ) ஒவ்வொரு திட்டமும் எப்பொழுது அனுப்பப்பட்டது?

(இ) அனுமதி பெறுவதில் காலதாமதத்திற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, (அ), (ஆ) மற்றும் (இ) பேரவை முன் ஒரு விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

---

@ 170–175-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்ற விவரங்களைப் பார்க்கின்றபோது புனல் மின் திட்டங்களைப் பொறுத்தவரையில் 20, 25 ஆண்டுகளாகக் கூட நாம் அனுப்பிய திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் கொடுக்காத சூழ்நிலை இருந்து வருவதை நாம் பார்க்கிறோம். இதற்கான காரணங்களைப் பார்க்கின்றபோது காவிரி நதி நீர்ப் பிரச்சினையோடு சம்பந்தப்பட்டது. கேரள நதி நீர்ப் பிரச்சினையோடு சம்பந்தப்பட்டது என்றெல்லாம் சொல்லித் தான் இவ்வளவு காலதாமதம் ஆகிக் கொண்டு வருகின்றது. பல நதிகள் கிளை நதிகளாக இருக்கின்ற காரணத்தால் அவற்றின் தண்ணீர் கேரளம், கர்நாடகம் போன்றவற்றிற்குப் போகின்ற சூழ்நிலை இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரு மாநிலம் இருக்கின்றது என்பது வேதனையாகவும் வேடிக்கையாகவும் இருக்கின்றது. எனவே இதைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு சொன்னாலும் கட்டுப்படுத்தாது என்ற சூழ்நிலையில் அந்த மாநிலங்கள் சொல்கின்ற கருத்துக்கள் பொருத்தம் இல்லாதவை என்பதை அந்த மாநிலங்களுக்குச் சுட்டிக்காட்டுகின்ற வகையில் உச்ச நீதிமன்றத்திடமிருந்து ஒரு டைரக்ஷன் பெறுகின்ற வகையில் ஏதாவது வழக்கு தொடர்வது பற்றி பரிசீலிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்கள் எல்லாம் அனுமதிக்கப்படாததற்கு காவிரி நீர்ப் பிரச்சினை தீராததுதான் காரணம். தமிழ்நாடு அரசு திட்டங்களைப் போட்டு அனுப்புகின்றபோது காவிரியின் கிளை நதி என்ற காரணத்தால் அண்டை மாநிலங்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றன. இவ்வாறு மற்ற மாநிலங்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றபோது மத்திய அரசு அனுமதிக்க முடியாது. ஏனென்றால் பிறகு அது மாநில சுயாட்சி பிரச்சினையாகக் கூட ஆகிவிடும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் காவிரி நதியின் கிளை நதிகளாக இருக்கின்ற நதிகளின் தண்ணீர் மேலே போவதில்லை. அவை கர்நாடகத்திற்குப் போகப் போவதில்லை. இந்திய அரசினிடத்திலே நாம் இந்தக் கருத்தை வலியுறுத்தி இருக்கிறோம்.



ஆகவே போடுகின்ற மின் திட்டங்களை அனுமதிக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். இது குறித்து உச்ச நீதிமன்றத்தின் ஆணையைப் பெற வழி இருக்கின்றதா என்பதைப் பற்றி அரசு ஆராயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் புனல் மின் திட்டங்கள், அனல் மின் திட்டங்கள் பற்றிய விவரங்கள் மட்டும் தான் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆழ்கடலில் இருந்து கிடைக்கின்ற வாயுவைப் பயன்படுத்தி உத்தரப்பிரதேசத்தில் மின்சாரம் தயாரிக்கின்ற நிலையம் ஏற்படுத்த இருக்கிறார்கள். அதேபோன்று பீகார் மாநிலத்தில் 30 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்கின்ற நிலையம் சூரிய ஒளியிலிருந்து தயாரிக்கின்ற வகையில் உருவாக்க இருக்கிறார்கள். அப்படிப்பட்ட மின் நிலையங்களை நமது மாநிலத்திலும் அமைக்க தமிழக அரசின் மின்சாரத் துறை முயற்சிகள் மேற்கொண்டிருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, பம்பாய்க்கு அருகில் ஆழ்கடலில் இருந்து கிடைக்கின்ற எரிவாயுவைக் கொண்டு மின் உற்பத்தி செய்கின்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று தமிழக அரசின் சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது. ஆனால் ஏற்கெனவே பம்பாய் ஹை-யிலே இருந்து கிடைக்கக்கூடிய நேச்சுரல் காஸைப் பயன்படுத்தி உத்தரப் பிரதேசத்தில் மின் திட்டம் ஆரம்பிப்பதற்கு அனுமதி அளித்தாகிவிட்டது. ஆகவே இனிமேல் தமிழ்நாட்டில் அமைப்பது என்றால் மேற்கொண்டு எங்கேயாவது அத்தகைய எரிவாயு கிடைத்தால் பரிசீலிக்கலாம், இதன் மூலம் முடியாது என்று தெரிவித்து விட்டார்கள்.

சூரிய ஒளியில் இருந்து மின்சாரம் தயாரிப்பதைப் பொறுத்த வரையில் அதுகுறித்து தனியாகக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தர இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1985 ஜூன் 13

**திரு. கி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் விண்ணப்பித்துள்ள மின் திட்டங்களின் மூலம் எவ்வளவு மின் உற்பத்தி கிடைக்கும்? இத் திட்டங்களுக்கு மத்திய அரசின் முதலீடு எவ்வளவு எதிர்பார்க்கப்படுகின்றது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இதன் மூலம் எவ்வளவு மொத்தமாகக் கிடைக்கும் என்ற விவரம் இல்லை. ஒவ்வொரு திட்டத்தினுடைய அளவையும் மொத்தமாகக் கூட்டித்தான் சொல்ல முடியும். இந்திய அரசினுடைய நிதி உதவியைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திற்கும் இவ்வளவு என்று ஒதுக்கிவிடுகிறார்கள். அவ்வாறு ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மொத்தமாக நிதி உதவி பெற்று எந்தெந்தத் திட்டங்களை மாநில அரசு மேற்கொள்கிறதோ அந்தத் திட்டங்களை மேற் கொள்கிறோம். ஆனால் ஒவ்வொரு மின் உற்பத்தித் திட்டத்திற்கும் மத்திய அரசு தனித்தனியாக நிதியுதவி கொடுப்பது இல்லை. முழு விவரங்கள் மின்வாரிய நிதிநிலை அறிக்கையின்போது கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு பல்வேறு மின் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான விண்ணப்பத்தை நமது அரசு அனுப்பியும் அவைகளுக்கு மத்திய அரசினுடைய அனுமதி கிடைக்காமல் நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. நாம் இங்கே கடுமையான மின்சார நெருக்கடியால், மின்சாரப் பற்றாக்குறையால் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கும்படியான சூழ்நிலையில் 1965-லேயே திட்டக் கமிஷனிலே அனுமதிக்கப்பட்ட பாண்டியாறு—புன்னம்புழா மின் திட்டம்—100 மெகாவாட் உற்பத்தி செய்யக் கூடியது—அனுமதிக்கப்பட்டும், அது ஏன் நிறைவேற்றப்படாமல் இருந்து வருகிறது? வேறு ஏதாவது தாவா அதில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புவதோடு, எப்பொழுது அது நிறைவேற்றப்படும்? அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, பாண்டியாறு—புன்னம்புழா திட்டத்தைப் பொறுத்தவரையில் அது வெறும் மின் உற்பத்தித் திட்டமாகத்தான் இப்போது



1985 ஜூன் 13]

இருக்கிறது. அதிலிருந்து கொஞ்சம் நீரைத் திருப்பி கோவை மாவட்டத்திற்குக் கொண்டுவரலாமா என்று கருதி கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தப்படுகிறது. அப்படி அது ஏற்கப்பட்டு, கேரள அரசு ஒப்புக் கொண்டால், அந்தத் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டி வரும என்கிற கருத்தில் நாம்தான் அதை நிறைவேற்றவில்லை.

**திரு. கி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் பற்றாக்குறை மாநிலமாக இருக்கும் தமிழகம் தன்னிறைவு பெற வேண்டுமென்றால் போதிய மின் திட்டங்களின் மூலமாக மட்டுமே பெற முடியும். ஆகவே மாநில அரசு மத்திய அரசுக்கு அனுமதிக்காக அனுப்புகின்ற திட்டங்களுக்கு இவ்வளவு காலத்திற்குள் அனுமதி வழங்க வேண்டும் என்று ஒரு கால வரையறை நிர்ணயிப்பதற்கு மைய அரசை மாநில அரசு வற்புறுத்துமா? அத்தோடு நுண்ணிய புனல் மின் திட்டங்கள் குறைந்த அளவு மெகாவாட் மின்சாரமே தயாரிக்கும் என்று சொல்லப்படுகிறது. தமிழகத்திலே நூற்றுக்கணக்கான சிறிய மின் திட்டங்கள் இருந்தாலும் அவைகள் எல்லாம் ஆலோசனையில் இருப்பதாகவே சொல்லப்படுகிறது. அவைகளை நிறைவேற்றுகிற எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போல தமிழகத்தினுடைய மின் பற்றாக்குறையை நிறைவு செய்ய நிறைய மின் உற்பத்தித் திட்டங்கள் தேவை. இருந்தாலும் நீர் மின் திட்டங்களைப் போட்டு அனுப்பினால் காவிரி நீர் தகராறு வந்து விடுகிறது. அனல் மின் திட்டங்களைப் போட்டு அனுப்பினால், நிலக்கரியை எங்கிருந்து பெறுவது என்பதில் சிக்கல் வந்து விடுகிறது. அணுமின் நிலையம் கேட்டால் அதையும் இந்திய அரசுதான் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே, காலவரையறைக்குள் அந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்ற முறையில் மைய அரசுக்கு ஆணையிட இந்த அரசுக்கு உரிமை கிடையாது. வேண்டுகோள் விடுக்கிற நிலைமையிலேதான் நாம் இருந்து வருகிறோம். இந்தச் சூழ்நிலையிலேயே எந்த அளவுக்கு மின் உற்பத்தித் திட்டங்களை அதிகமாகப் போட முடியுமோ அந்த அளவுக்குப் போட்டு, மைய அரசினுடைய அனுமதியையும் பெறுவதற்குத்தான் இந்த அரசு

முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. அத்துடன் நுண்ணிய புனல் மின் திட்டங்கள் எனப்படும்—மைக்ரோ ஹைடல் ஸ்கீம் என்ற வகையில் ஏராளமான திட்டங்களை இந்த அரசு ஆய்ந்து அவற்றில் பல திட்டங்களை மத்திய அரசுக்கு அனுமதிக்காக அனுப்பியிருக்கிறது. எனவே அதிக மின் உற்பத்திக்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசினுடைய அனுமதிக்காக மாநில அரசு விண்ணப்பித்துள்ள திட்டங்களைத் தவிர வேறு திட்டங்கள் ஏதாவது தமிழகத்திலே இன்றைக்கு அரசு பரிசீலனையில் உள்ளதா? ஆம் எனில் அதன் விவரங்கள் என்ன என்பதை அறிய விரும்புவதோடு, பொதுவாக நாடாளுமன்றம் கூடுகிற நேரத்தில் மின் துறை மட்டும் அல்லாது, வேறு பல துறைகளிலிருந்தும் கூட பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்பட்டு மைய அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டு, அவைகள் பல ஆண்டுக் காலம் மைய அரசின் பரிசீலனையில் உள்ளன. ஆகவே, நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்பாக நமது தமிழகத்தின் நாடாளுமன்ற பிரதிநிதிகளைக் கொண்ட கூட்டத்தைக் கூட்டி—ஏனென்றால் அவர்கள் நம்மை விட மத்திய அரசோடு நெருங்கிய தொடர்பு உடையவர்கள்—அந்தக் கூட்டத்திற்கு அமைச்சரவையின் பிரதிநிதிகளும் சென்று, நம்முடைய மாநிலத்திற்குத் தேவையான திட்டங்களை, தமிழகத்தின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, இன்னின்ன திட்டங்களை மத்திய அரசை வற்புறுத்தி பெற அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற வகையில் நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி செய்யுமா? ஏன் என்றால், இதுபோல வேறு பல மாநிலங்களும் செய்திருப்பதாக அறிகிறேன். நம் அரசு இதுவரையில் அதுபோல் செய்திருக்கிறதா? அல்லது இனிமேலாவது செய்வதற்கு முயற்சியை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரையில் திட்டங்களின் அனுமதிக்காக இந்திய அரசோடு நெருங்கிய தொடர்பு கொண்டுதான் வருகிறது. மேலும் நம் நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்து அனுமதி பெறுவதற்கான வழிவகைகளைக் காண வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புவார்களேயானால்,



அதைப் பற்றி நிச்சயமாக அரசு பரிசீலிக்கும். ஆனால் நமக்கு இருக்கிற சிரமம், நீர்மின் திட்டங்களுக்குக் காவிரி நீர் பிரச்னை வருகிறது. அனல் மின் திட்டங்களுக்கு, நிலக்கரி தேவை, நிலக்கரிச் சுரங்கத்திற்காக முதல் போட வேண்டிய நிலை இந்திய அரசுக்கு இருக்கிறது. அணுமின் திட்டம் என்றால், அதில் செண்டிரல் இன்வெஸ்ட்மெண்ட் வருகிறது. ஆகவே இதிலேதான் சிக்கல்.

(முற்பகல் 9-10)

**திரு. கு. சுப்பராயன்:** தலைவர் அவர்களே, * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு கூடாது. உறுப்பினரின் வினா அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெறுகிறது.

### நெல்லித்துறை நீர் மின் திட்டம்.

255—(*வினா எண். 202)—திரு. மா. சின்னராசு: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லித்துறை நீர் மின் திட்டம் (குந்தா-ஐந்தாவது திட்டம்) அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) காவிரி நீர் தகராறு காரணமாக இத் திட்டம் செயல்படுத்த இயலாத நிலையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் 256 மற்றும் 257 ஒரே பொருள் பற்றி இருப்பதால் இரண்டு வினாக்களும் ஒன்றாக எடுத்துக்கொள்ளப் பெறுகின்றன.

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1985 ஜூன் 13

## மேட்டூரில் புதிய நீர் மின் திட்டம்.

256—(*வினா எண். 287)—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் அணைக்கும் மேலே காவிரியில் நீர் மின் திட்டம் அமைக்கப் பரிசீலிக்கப்படுவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : வெள்ளத் தடுப்பு, மின் உற்பத்தி ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு, மேட்டூர் அணைக்கு மேற்பகுதியில், காவிரி ஆற்றின் குறுக்கே நீர்மின் திட்டம் நிறுவுவதற்கான செயற்குறிப்புகள் உருவாக்கப்பட்டன. ஆனால் கர்நாடக அரசு இதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததால், மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவியலாத நிலை ஏற்பட்டுள்ளது.

## ஒகேனக்கல் நீர் மின் திட்டம்.

257—(*வினா எண். 289)—திரு. மா. மணிமாறன் மற்றும் திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒகேனக்கல் நீர் மின் திட்டப் பணிகள் தற்போது எந்நிலையில் உள்ளன ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, காவிரி நீர்ப் பிரச்சனையில் இறுதித் தீர்வு ஏற்படும் வரை ஒகேனக்கல் நீர் மின் திட்டத்தை நிறைவேற்றுவது பற்றிய செயற்குறிப்பு நிலுவையில் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. மா. மணிமாறன் :** தலைவர் அவர்களே, கர்நாடக அரசு மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமல் பல கிளை நதிகளில் அணைகளைக் கட்டி வருகிறார்கள். மத்திய அரசின் ஒப்புதலைக் கேட்காமல், திட்டமில்லாத பணிகளை அவர்கள் மேற்கொண்டு வருகிறபோது கர்நாடக மாநிலம் நம்மைக் கட்டுப்படுத்துவது நியாயமா? அந்த நிலையில் நாமே திட்டமில்லாத பணிகளை மேற்கொண்டு அந்தத் திட்டத்தைத் தொடர்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



1985 ஜூன் 13]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, ஒரு தவறுக்கு இன்னொரு தவறு பரிகாரம் ஆகாது. ஒகேனக்கல் நீர் மின் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு கரை தமிழகத்திலும், மற்றொரு கரை கர்நாடக மாநிலத்திலும் இருப்பதால் இருவரும் சேர்ந்துதான் அந்த நீர் மின் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

**திரு. மா. மணிமாறன் :** தலைவர் அவர்களே, மேட்டூர் அணைக்கு மேல் பகுதியில் நம்முடைய பகுதியில் கர்நாடக மாநிலத்தில் அனுமதி இல்லாமல் திட்டமில்லாத பணிகளின் கீழ் இந்தத் திட்டத்தை நாம் செய்ய இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மேட்டூர் அணைக்கு மேற்குப் பகுதியில் ஒகேனக்கல் பகுதியில் தான் நிறைவேற்ற முடியும்.

## குளச்சல் அருகே அனல் மின் திட்டம்.

258—(*வினா எண். 1627)—திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் குளச்சல் அருகே புதிய அனல் மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) குமரி மாவட்டத்தில் குளச்சல் அருகே புதியதாக அனல் மின் நிலையம் அமைப்பது குறித்து மின் வாரியம் ஆய்வு செய்து வருகிறது.

[1985 ஜூன் 13

## சமூகக் காடுகள் திட்டத்தில் மரங்கள் பராமரிப்பு.

259—(* வினா எண். 999)—**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சமூகக் காடுகள் திட்டத்தில் வைக்கப்படும் மரங்கள் நிலைத்து சுமார் 6 முதல் 8 அடி வளரும் வரை அரசு பராமரித்து வர நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவர் அவர்களே, ஆம்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** தலைவர் அவர்களே, இப்போது சமூகக் காடுகளை அரசாங்க நிலங்களிலும், அரசாங்கத்திற்குச் சொந்தமான தரிசு நிலங்களிலும் அமைத்துக் கொண்டு வருகிறோம். தனிப்பட்ட விவசாயிகள், தங்களிடத்தில் ஏராளமான தரிசு நிலங்களை வைத்திருப்பவர்கள் சமூகக் காடுகளை அமைக்க முன்வருவார்களானால் அவர்களுக்கு வனத் துறை மூலமாக மானியத்தில், சலுகை விலையில் கன்றுகளைக் கொடுத்து இந்தச் சமூகக் காடுகளை உருவாக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவர் அவர்களே, இந்தச் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம், தனியார்களும் இப்படிப்பட்ட சமுதாய நலக் காடுகளை வளர்க்கிற திட்டமாக சேர்த்து நிறைவேற்றப்படுகிறது. ஏழை விவசாயிகளுக்கு 500 மரக் கன்றுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. அவர்கள் அந்த மரக் கன்றுகளை நட்டு பாதுகாத்தால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ. 77.50 ஊக்குவிக்கிற தொகையாக வழங்கப்படுகிறது. அதற்குப் பிறகும் அந்தச் செடிகளை அவர்கள் பாதுகாப்பாக வைத்திருக்கிறார்களா என்பதைப் பார்த்து ஆண்டு இறுதியில் ஒவ்வொரு செடிக்கும் ரூ. 2.50 வழங்கப்படுகிறது. அதேபோல வசதியுள்ள விவசாயிகள் இத்தகைய சமூகக் காடுகளை வளர்க்கிற அந்த உணர்வோடு செயல்பட்டால் அவர்களுக்கும் குறைந்த விலையில் இந்த மரக் கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இலவசமாக தீப போன்றவற்றில்தான் இவைகள் ஊக்குவிக்கப்படுகின்றன. ஆகவே கடந்த 4 ஆண்டுக் காலத்தில் சுமார் 180 லட்சம் கன்றுகள் வழங்கப் பெற்று இருக்கின்றன.



1985 ஜூன் 13]

**திரு. எஸ். பி. மணவாளன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மூலம் சமூகக் காடுகள் வளர்க்கும் திட்டத்தில் சுமார் 2 அடிகள் வளரும் வரையில் அதற்குப் பாதுகாப்பு செய்யப்பட்டு பராமரிக்கப்படுகின்றது. இதை 8 அடி அல்லது 10 அடி வளரும் வரை பாதுகாப்பு செய்தால், ஆடு மாடுகள் போன்றவை மேய்வதைத் தடுக்கலாம். அதைச் செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவர் அவர்களே, இப்போதும் அரசு 8 அடி வரை வளர்கின்ற வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2 அடி என்பது சரியான தகவல் அல்ல.

**திரு. ஆர். தியாகராசன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அதிக நிலம் உடைய விவசாயிகள் இந்தச் சவுக்கு போன்ற மரங்களைப் போடுகிறார்கள், இதற்கு அரசு அனுமதி அளித்திருக்கிறதா? அவர்களிடம் நிறைய நிலம் இருக்கின்ற காரணத்தால், இதைப் போடும்போது, கொஞ்ச நிலம் வைத்திருப்பவர்களுடைய மகசூல் பாதிக்கப்படுகிறது, இது உண்மையா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவர் அவர்களே, இந்தச் சமுதாய காடு வளர்ப்புத் திட்டம் என்பது நஞ்சை நிலங்களில் அதிகமாக ஊக்குவிக்கின்ற முயற்சி இல்லை. புஞ்சை நிலங்கள், மழையை எதிர்பார்த்து இருக்கின்ற நிலங்கள் போன்றவற்றில்தான் இவைகள் ஊக்குவிக்கப்படுகின்றன. ஆகவே பக்கத்திலே உள்ள இத்தகைய நிலங்கள் பாதிக்கப்படுகின்றன என்ற பிரச்சனை எழவில்லை. என்றாலும் சில இடங்களில் விவசாயிகள் மற்ற பயிர்களோடு, இந்தப் பயிர்களுக்கு என்றும் சில பகுதிகளை ஒதுக்கி, இந்த வகை மரங்களைப் பயிரிடுகின்ற ஒரு முறையை மேற்கொள்கிறார்கள். இதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தைல மரத்தை வளர்ப்பதாலே பக்கத்திலே இருக்கிற மற்ற விவசாயிகளுக்குப் பாதிப்பு வருமா என்று கேட்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு அச்சம் நீண்ட காலமாகச் சொல்லப்பட்டு வருகிறதே தவிர, அதற்கு ஆதாரம் இல்லை என்று மிகத் தெளிவாக ஆய்வு செய்து, முடிவுகளை அறிவித்து இருக்கிறார்கள். இருந்தாலும் இந்தத் தைல மரங்களை மாத்திரம் வளர்க்கின்ற முயற்சிகள் இப்போது மேற்கொள்ளப்படுவதில்லை.

வேறு நல்ல பலன் தருகின்ற மரங்களும் வளர்க்கப்படுகின்றன. ஆகவே தைல மரத்தை வளர்ப்பதால் மற்ற பயிர்களுக்குப் பாதிப்பு வரும் என்ற நிலை வரும் என்று கருதுகின்றவர்கள், வேறு மரங்களை வளர்க்க முன்வரலாம்.

**திரு. தி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகக் காடுகள் திட்டத்திலே வளர்க்கின்ற மரங்களை ஒருசில நில ஆக்கிரமிப்பாளர்கள் தங்களுடைய சுயநலம் கருதி அகற்றி விடுகின்றனர். அப்படிப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்தும், அதிக அளவில் பாதுகாக்க இன்னும் அதிகமான ஆட்களை நியமிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, இது ஒரு சமுதாயப் பிரச்சனையாக உருவெடுத்துக் கொண்டிருக்கிறது. நீண்ட காலமாக மற்ற நிலங்களை ஆக்கிரமித்து பழக்கப்பட்டு இருக்கிற விவசாயிகள், அல்லது ஏழைகள் என்ற பெயரால் ஆக்கிரமித்துக் கொண்டு இருப்பவர்கள், இப்படிப்பட்ட முயற்சியை மேற்கொள்கிறார்கள். இன்றைக்கு மரங்கள் வளர்ப்பது எவ்வளவு அத்தியாவசியமான தேவை என்பதை உணர்ந்து கொள்ள முடியாத ஒரு நிலையில் அவர்கள் தங்களுடைய முயற்சிகளுக்கு மாத்திரமே பலன் கிடைக்க வேண்டும் என்ற வகையில் அத்தகைய மரங்களைப் பிடுங்கி எறிகின்ற கொடுமையான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுப்பது என்பது அவர்களுடைய வாழ்வு பிரச்சனையாக மாறிவிடுகிறது. ஆகவேதான் அதிலே அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தி முறையாகவும், தேவையான அளவிலும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. எஸ். என். இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புஞ்சை நிலத்திலேயும், குளங்களிலேயும் போடப்பட்ட மரங்கள் நல்ல முறையில் வளர்ந்து வந்தும், அங்கே அவைகளைப் பராமரிக்கக் கூடிய முறையில் ஆட்கள்



இல்லாத காரணத்தால், அவைகள் அழிக்கப்படுகின்றன. எனவே அதிக ஆட்களை நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, புஞ்சை நிலங்களில், குளங்களில், ஏரிக் கரைகளில் போடுகின்ற மரங்கள் ஓரளவுக்குப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இருந்தாலும், இதற்குச் சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டம் என்று பெயர் வைத்திருப்பதற்குக் காரணமே, சமுதாயத்திலே உள்ள மக்களும் சேர்ந்து இதைப் பாதுகாக்க வேண்டும், இதிலே அக்கறை செலுத்த வேண்டும் என்பதுதான்—இதனுடைய அடிப்படை லட்சியம். ஆகவே இத்தகைய மரங்களை மக்களும் முன்வந்து பாதுகாக்க வேண்டும். வேலியே பயிரை மேய்வது என்ற பழமொழிக்கு ஏற்ப, சமுதாயக் காடுகளை பாதுகாக்க வேண்டிய மக்களே, அதை அழிக்கிறார்கள் என்றால், இதிலே எவ்வளவு பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தாலும், காப்பாற்ற முடியாது. இன்றைக்குச் சுமார் 5 ஆயிரம் சமூக நல அலுவலர்களை அதற்காக நியமிக்க வேண்டும் என்று திட்டமிட்டு, 2500 அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, அதை பாதுகாத்துக் கொண்டு இருக்கிறார்கள். இருந்தாலும், மக்களும் கூட இருந்து இதைப் பாதுகாக்க வேண்டும் என்கிற உணர்வு பெற்றாலொழிய இதிலே நாம் முழுமையாக வெற்றி பெற முடியாது.

(முற்பகல் 9-20)

**திரு. கே. உச்சி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சமூக நலக் காடுகள் திட்டம் மிக அதிக அளவில் மிக நல்ல முறையில் நடந்து கொண்டு இருக்கின்றன. நீலகிரி மாவட்டத்தை இப்போது திருப்பூர் கோட்டத்தோடு இணைத்து இருக்கிறார்கள். நீலகிரி மாவட்டத்தின் வளர்ச்சியைக் கருதி தனியான கோட்டமாக அதை அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அது இயற்கைக் காடுகள் கொண்ட மலைப் பகுதியாக

இன்றைக்கு ஏற்கப்பட்டு வருகிறது. அங்கே சமூகக் காடு வளர்ச்சித் திட்டம் குறைந்த செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதையொட்டிதான் அது திருப்பூர் கோட்டத்தோடு இணைக்கப்பட்டு இருக்கிறது. நீலகிரி மாவட்டம் ஒரு முழுமையான சமுதாயக் காடு வளர்ச்சித் திட்டத்திற்குள் வருகிறபோது மாண்புமிகு உறுப்பினருடைய அந்த ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

**திரு. சி. சுப்புராயர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலை அடிவாரங்களிலும், மழை பொழியாத இடங்களிலும், வறட்சிப் பகுதிகளிலும் வனத் துறையின் சமூக நலக் காடுகள் திட்டத்தில் ஏராளமான மரக் கன்றுகள் நடுகிறார்கள். ஆனால் கோடை காலத்தில் தண்ணீர் இல்லாது அவைகள் இறந்து விடுகின்றன. சப் சாயில் இன்ஜக்டர் என்ற கருவியின் மூலமாக நேரிடையாக செடியின் வேர்களுக்குத் தண்ணீர் செலுத்த முடியும், தண்ணீரும் மிச்சப்படும். எனவே, சப் சாயில் இன்ஜக்டர் என்ற கருவியைப் பயன்படுத்தி சமூக நலக் காடுகள் திட்டத்தில் மரங்களைக் காப்பாற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சமுதாயக் காடு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் லட்சக்கணக்கான மரங்களை நாம் நட்டு வளர்க்கிறோம், பாதுகாக்கிறோம். இது நீர்ப்பாசனம் இருக்கிற பகுதியில் மட்டும் நடப்படுவதும் இல்லை, வளர்க்கப்படுவதும் இல்லை. மழையை நம்பித்தான் இந்த பயிரிடும் முறையே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆகவே இயற்கை நமக்கு ஒத்துழைத்தால் நம்முடைய முயற்சி பலன் அளிக்கும். இயற்கை நம்மை ஏமாற்றுகிறபோது, சோதிக்கிற போது நம்முடைய முயற்சிகளில் கொஞ்சம் நஷ்டம் ஏற்படுகிறது அல்லது கஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே அதை எல்லாம் தாண்டித் தான் இதிலே வெற்றி அடைய வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்த முறையின்படி பல்லாயிரக்கணக்கான மரங்களை நட்டு வளர்க்கிறபோது ஒவ்வொரு மரத்திற்கும் இப்படிப்பட்ட முயற்சியின் அடிப்படையில் தண்ணீர் பாய்ச்சுவது என்பது நடைமுறையில் இயலாத காரியம்.



**திரு. அ. பிரணவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் கடலாடித் தொகுதியில் வாலிநோக்கம் அருகில் சுமார் ஆயிரம் ஏக்கருக்கு மேல் உள்ள சமூகக் காடுகளில் அரசால் வளர்க்கப்பட்ட ஆர். எஸ். மரங்கள் ஒரு மாத காலமாக அத்தனை மரங்களையும் வெட்டி அரசு அதிகாரிகளுக்குத் தெரியாமல் விற்று விட்டார்கள். இன்னும் தொடர்ந்து வெட்டப்படுகிறது. இது அரசுக்குத் தெரியுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாக கேள்வி போட்டால் இதைப்பற்றி பதில் அளிக்க முடியும். ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் கொடுக்கிற தகவலில் ஆதாரம் இருக்கிறதா? அப்படி நடைபெற்றிருந்தால் அதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டதா? என்பதைப் பற்றி உடனடியாக அரசு ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும்.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சமூக நலக் காடுகள் ஏற்படுகிறபோது தைல மரங்களை நீர் ஆதாரம் குறைவாக இருக்கிற இடங்களில் நட்டால் அது அதிகமான தண்ணீரை உறிஞ்சி விடுவதால் அந்தப் பகுதி பாலைவனம் ஆகிற அபாயம் இருக்கிறது என்று ஒரு வாரத்திற்கு முன்னால் பத்திரிகையில் வந்து இருக்கிறது. இது குறித்து அரசுக்கு ஏதாவது தகவல் உண்டா? முன்னால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சமூக நலக் காடுகளில் தைல மரங்கள் அல்லாது வேறு மரங்களை நட முயற்சிக்கலாம் என்று சொன்னார்கள். அதுபோன்று நமது அரசின் மூலம் வளர்க்கப்படுகின்ற வேறு காடுகளில் மற்ற மரங்களை நடுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கருத்துக்குத் தான் நான் சற்று முன்பு பதில் அளித்து இருக்கிறேன். இந்த தைல மரங்களை வளர்த்தால் அது தரையில் இருக்கிற நீரை உறிஞ்சி விடுகிறது என்ற கருத்து விவாதிக்கப்பட்டு வருகிறது. அப்படி விவாதிக்கப்படுகிற கருத்துக்கு ஆதாரம் இல்லை என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். ஆஸ்திரேலிய நாட்டில் தண்ணீர் இல்லாத பகுதிகளில் இந்தத் தைல மரங்களை

நட்டு வெற்றி கண்டு இருக்கிறார்கள். ஆராய்ச்சியாளர்கள் என்றாலே ஆகவே, கருத்து மாறுபட்ட கருத்தாகச் ஒரு சொல்வது கருத்தோடு அது நடைமுறையில் இருந்து கொண்டு வருகிறது. வாடிக்கை. நடைமுறையில் என்ன பார்க்கிறோம் என்றால் ஆகவே நாம் மாவட்டத்தில் வறட்சியான பகுதியில் கூட புதுக்கோட்டை மரங்களை வளர்த்தால் அதன் வேர்கள் நீண்ட தூரம் ஆழமாகச் இந்தத் தைல செல்லாத காரணத்தினால் இந்த விவாதம் அல்லது இந்த கூற்று சரியானது அல்ல என்று ஆராய்ச்சியாளர்கள் முடிவு எடுத்து இருக்கிறார்கள். இருந்தாலும் நம்முடைய இந்தச் சமுதாய காடு வளர்ப்புத் திட்டத்தில் தைல மரங்கள் 5 சதவிகிதம் தான் நடுகிறார்கள். மற்ற மரங்கள் 95 சதவிகிதம் நட்டு வருகிறார்கள். ஆகவே, அஞ்சுகின்ற விவசாயிகள் தைல மரங்களைத் தான் நட வேண்டுமென்பதல்ல. வேறு ஜாதி மரங்களும் தரப்படுகின்றன. அவைகளை வளர்க்கலாம்.

## மனோரா பகுதியைச் சுற்றுலா மையமாக்கல்

260—(*வினா எண். 1645)—திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதியில் பட்டுக்கோட்டை அருகில் உள்ள 'மனோரா' சுற்றுலா மையமாக விரிவுபடுத்தப்படும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மாவட்ட உலாத் தலமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

**திரு. துரை கோவிந்தராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'மனோரா' சுற்றுலா மையமாக ஆக்குவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நன்றி. அப்படிப்பட்ட அந்தத் திட்டம் ஒரு மிகப் பெரிய திட்டமாக இருக்க வேண்டும். குறிப்பாக, மேல்நாட்டு



சுற்றுலாப் பயணிகள் சென்னைக்கு வந்ததற்குப் பின்னர், திருச்சி, கோயம்புத்தூர், மதுரை போன்ற பெரு நகரங்களில் தங்கி, அங்கிருந்து பல்வேறு ஆலயங்கள் இருக்கின்ற பகுதிகளுக்கும், பல்வேறு சிறப்புகளைப் பார்ப்பதற்கும் செல்லுகிறார்கள். திருச்சிக்கு வருகின்றவர்கள் திருச்சியிலே இருந்து திருவாரூர், நாகூர், வேளாங்கண்ணி, ஆவுடையார் கோயில் ஆகிய இடங்களைப் பார்த்துவிட்டு, விராலிமலைக்குச் சென்று, கடைசியாக திருச்சிக்கு வருகின்றார்கள். அவர்கள் அப்படி ஒரு வழியாக வரும்போது தஞ்சையிலே உள்ள கோயில்களைப் பார்த்து, அதற்குப் பின்னர் புதுக்கோட்டையிலுள்ள ஆலயங்களுக்குச் சென்று பார்த்து விட்டு வரும்போது, இடைவெளியில் மேலைநாட்டிலே இருந்து வருகின்றவர்கள் கடலோரத்தில் உள்ள இடங்களில் தங்கி ஓய்வெடுத்துச் செல்வது என்பது அவர்களுக்கு வழக்கமாக இருக்கிறது. மனோரா என்பது கடல் சூழ்ந்த ஒரு பகுதி, இயற்கை வளம் பொருந்திய ஒரு பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், ஒரு விரிவான திட்டத்தைத் தீட்டி, மேலை நாடுகளிலே இருந்து வருகின்றவர்கள் அந்த இடத்திலே தங்கி செல்லத்தக்க அளவுக்கு விரிவுபடுத்தக் கூடிய ஒரு செயற்குறிப்பு அரசிடம் இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது 'மனோரா' என்கிற அந்த கடற்கரைப் பகுதியில் மாவட்ட உலாத்தலமாகச் செய்ய சுமார் 3 இலட்சத்திலிருந்து 5 இலட்சத்திற்குள் சில அடிப்படை வசதிகளை மாத்திரம் செய்கின்ற திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற அந்தக் கருத்தின்படி 'மனோரா' என்கிற கிழக்குக் கடற்கரைப் பகுதி, தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற அந்தப் பகுதி, ஒரு மிகச் சிறந்த 'பீச் ரிசார்ட்'. கடற்கரை சுற்றுலா வளாகம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு புகழ் பெற்ற, பெருமை மிக்க ஒரு இடமாகும். ஆனால், நீண்ட காலமாக அது கவனிக்கப் படாமல் விடப்பட்ட காரணத்தினால், அப்படிப்பட்ட ஒரு சிறந்த தலமாக மேம்பாடு செய்ய வேண்டுமென்றால், சில கோடி ரூபாயாவது செலவிட வேண்டி வரும். ஆகவே, எதிர் காலத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணுகின்றபடி அதை ஒரு மிகச் சிறப்புமிக்க சுற்றுலாத் தலமாக, வெளிநாட்டுப்

பயணிகள் விரும்பி தங்குகின்ற தலமாக, தமிழகத்திலே தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களுக்கு ஒரு மிகச் சிறந்த 'பீச் ரிசார்ட்'-ஆக புகழ் பெறுகின்ற வகையில் ஆக்குவதற்கான திட்டங்களை வழிவகுத்து, அதை நிறைவேற்று வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை மட்டும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. கூடலூர் இ. வி. வேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலுள்ள சாத்தனூர் அணைக்கு சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகிறார்கள் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆனால், அங்கே ஒழுங்காக உணவு விடுதி இல்லை. அதேபோல் தங்குவதற்கு இல்லங்கள் இல்லை. எனவே, சாத்தனூர் அணையை சுற்றுலாத் தலமாக ஆக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாத்தனூர் அணையைக் குறித்து தனிக் கேள்வி போட்டால், விரைவிலே விவரமான பதில் அளிக்க ஏற்பாடு செய்யப்படும்.

### கோவை மாநகருக்கு அடிப்படை வசதிகள்

261—(*வினா எண். 513)—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகர எல்லைக்குள் இன்னமும் முழுமையாக பாதாள சாக்கடை வசதி, வடிகால் வசதி, குடிநீர் வசதி, சாலை வசதி, கழிப்பிட வசதி போன்றவைகள் செய்யப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், செய்யப்படாத பகுதிகளுக்கு செயல் படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) பாதாள சாக்கடைத் திட்டம், மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. அவற்றில் பகுதி ஒன்றில் பணிகள் முழுவதும் முடிக்கப்பட்டு விட்டன.



இதரப் பகுதியில் சுமார் 50 சதவீதம் வேலைகள் முடிக்கப்பட்டு பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. மாநகராட்சி முழுவதிலும் சுமார் 80 சதவீதம் குழாய் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. சாலை மற்றும் கழிப்பிட வசதிக்குத் தேவையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு திட்டங்கள் அமைக்கப்பட உள்ளன.

(முற்பகல் 9-30)

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, பாதாளச் சாக்கடைத் திட்டத்தின் முதற் பகுதி முடிவுற்று இரண்டாம் பகுதி மிகக் குறைந்த அளவுக்குத்தான் வேலை நடந்துள்ளதாகக் குறிப்பிட்டார்கள். இது பல ஆண்டுகளாகவே நின்று இருக்கிறது. குறிப்பாக கோவை கிழக்குத் தொகுதியிலே பாதாள சாக்கடைத் திட்டத்திற்காக பெரிய குழாய்கள் பதித்து விட்டு, 150 ஏக்கர் நிலத்தை கழிவுநீரைப் பாய்ச்சுவதற்காக வாங்கியும் கூட அந்த வேலை பல ஆண்டுகளாக நின்று விட்டதற்குக் காரணம் என்ன ? இந்தக் கேள்வியிலே முக்கியமான அம்சம் அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, விளக்கு வசதி, சாலை வசதி, கழிப்பிடங்கள் வசதி இவைகள் செய்யப்படாத பகுதிகள் சிங்காநல்லூர் உள்பட பல இருக்கின்ற காரணத்தினால் அந்த இடங்களிலே துரிதமான வகையிலே திட்டம் போடப்பட வேண்டும். அப்படி துரிதத் திட்டத்தைப் போட்டு நிறைவேற்றிட வேண்டுமென்று அரசாங்கத்திலிருந்து உத்திரவு பிறப்பிக்கப்படுமா ? அதற்குத் தேவையான உதவியும் அரசால் கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, கழிவு நீரை விடுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். தேர்வு செய்யப்படவில்லை. நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை என்றுதான் என்னிடம் தகவல் தரப்பட்டிருக்கிறது.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, 150 ஏக்கர் நிலம் அதற்காக செட்டிபாளையத்திலே—போத்தனூருக்கு 8 அல்லது 10 மைல் தாண்டியுள்ள இடத்திலே—இடமே ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது என்ற குறிப்புரைகளை, செய்திகளைத்தான் கீழே உள்ள அதிகாரிகள் எங்களுக்குக் கொடுக்கிறார்கள்.

[1985 ஜூன் 13

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, நில ஆர்ஜிதம் செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டார்கள். நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை என்று எனக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை. அங்கீகரிக்கப்பட்ட இடங்களிலே சாலை போன்ற அடிப்படை வசதிகளை செய்யவில்லையென்று குறிப்பிட்டார்கள். அதைப் பற்றி நான் நேற்றையதினம் மானியக் கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கும்போதே தெரிவித்து இருக்கிறேன். தமிழ்நாடு முழுவதும் ஒரு உத்திரவைப் போடுவதற்கு அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அங்கீகரிக்கப்பட்ட இடங்களிலே வசதிகளைச் செய்துவிட்டு 10 ஆண்டுகள் தவணையிலே அவர்களிடமிருந்து பெட்டர்மெண்ட் டாக்ஸ் வசூலிக்கலாமா என்பதைப் பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

**திரு. பொன்முத்துராமலிங்கம்:** தலைவர் அவர்களே, மதுரை மாநகரத்திலே உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றபோது பல முனைகளிலே கழிப்பிடங்கள் கட்டப்பட்டு அவை அதற்காகப் பயன்படுத்தப்படாமல் வேறு சமூக விரோதக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. அவைகளை மீண்டும் உரிய பணிக்குப் பயன்படுத்த வேண்டுமென்று உத்திரவிட அரசு முன்வருமா? அதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, அதுபற்றித் தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன்.

**ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தில் நெசவாளர்களுக்குக் கடன் வசதி.**

262—(* வினா எண். 754)—**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) I. R. D. P. திட்டத்தின்கீழ் கொடுக்கப்படும் கடன் தொகை, நெசவாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், நெசவாளர்களுக்கும் கடன் வழங்கப் படுமா?



1985 ஜூன் 13]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, (அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நெசவாளர்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தற்போது ஒன்றியத்திற்கு 600 பேர்களுக்குத்தான் ஐ.ஆர்.டி.பி. கடன்கள் வழங்கப்படுகின்றன. அதிலே சிறு விவசாயிகள், சிறு தொழில் செய்கின்றவர்கள் இப்படிப் பலதரப்பட்டவர்களுக்கு அந்தக் கடன்கள் வழங்கப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. அதனால் நெசவாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய சூழ்நிலை இல்லாமல் போய்விடுகிறது. 600 பேர்கள் என்பது குறைவாக இருக்கிறது. ஆகவே அதை உயர்த்தித் தரவும் நெசவாளர்களுக்கு அந்தக் கடன்கள் கிடைக்கிற நிலையில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் அவர்களுக்குக் கிடைக்கும்படியாகச் செய்யவும் ஏதாவது அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு கொடுத்த தொகையைவிட இந்த ஆண்டு மத்திய அரசு குறைத்து ஒதுக்கியிருக்கிறது. இருந்தாலும் நெசவாளர்களுக்கு ஒதுக்குவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. செம்மலை:** தலைவர் அவர்களே, தற்போது ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின்மூலம் கடன் வழங்குகிறபோது கிராம சேவக்குகள்தான் ஐடன்டிபை தகுதியானவர்களை செய்கிறார்கள். அதிலே குறைபாடுகள் இருக்கின்றன என்று கூறுகிறார்கள். தகுதியானவர்கள் விடுபடுகிற சூழ்நிலை இருந்து வருகிறது என்று கூறுகிறார்கள். ஆகவே ஐடன்டிபிகேஷன் செய்வதற்கான அந்த முறையை மாற்றி மாற்று முறை ஏதாவது கொண்டுவருவதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** போலைத் தலைவர் அவர்களே, இதில் ஏற்கனவே அரசு முடிவு எடுத்து ஆணை பிறப்பித்தாகி விட்டது. ஐ.ஆர்.டி.பி. ஒருங்கிணைந்த கடன்

வசதித் திட்டத்தின்கீழ், யார் யாருக்குக் கடன் கொடுப்பது என்பதைப் பற்றிப் பரிசீலிக்க இனிமேல் ஊரக வளர்ச்சி அலுவலர்கள் பயன்படுத்தப்பட மாட்டார்கள். தனிக் குழு ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் அமைக்கப்பட வேண்டும் என்று ஏற்கனவே ஆணை பிறப்பித்தாகி விட்டது.

### சென்னை மாநகராட்சிப் பணியாளர் குடியிருப்பு

263—(*வினா எண். 1015)—**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சைதை 146-வது வட்டம் கொத்தவால்சாவடி தெருவில் மாநகராட்சிக்குச் சொந்தமான சுமார் 45 கிரவுண்ட் நிலத்தில் மாநகராட்சி சமூகக் கூடம் மற்றும் ஊழியர்களுக்கான குடியிருப்புகள் கட்டுகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, கொத்தவால்சாவடி தெருவில் உள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான கம்போஸ்ட் உரம் தயாரிக்கும் மனையில் சமூகக் கூடமோ, ஊழியர்களுக்கான குடியிருப்புகளோ கட்டுவதற்கான திட்டம் ஏதும் இல்லை.

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்தில் உரத் தொழிற்சாலை அமைப்பதற்கு இல்லை என்று மாநகராட்சி அறிவித்து, இன்றைக்கு அந்த இடம் காலி ஆக இருக்கிறது. எனவே, காலியாக இருந்தால்,—இன்றைக்கு சென்னை மாநகரத்தில் குடிசைகளை ஆங்காங்கே போட்டுக் கொண்டு விடுகிறார்கள், அந்த சூழ்நிலையைத் தவிர்க்கவும்—அந்தப் பகுதியில் உள்ள நலிந்த பிரிவு மக்கள் பயன் அடைகிற வகையிலும் ஒரு சமூகக் கூடத்தை, மாநகராட்சி பல்வேறு இடங்களில் கட்டியிருப்பதைப் போல, கட்டினால், உபயோகமாக இருக்கும் என்பதற்காகத் தான் அங்குள்ள நிலையை அரசுக்குத் தெரியப்படுத்தினோம். அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லையென்றாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலனை செய்து, நடப்பு நிதியாண்டிலேயே பணிகளைத் துவக்க முயற்சி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, சைதாப்பேட்டை கொத்தவால்சாவடி தெரு பகுதியில், நாள் ஒன்றுக்குக் கிடைக்கும் 150 டன் குப்பையைப் பதப்படுத்தி, கம்போஸ்ட் உர ஆலை ஒன்றை நிறுவலாம் என்று திட்டமிடப் பட்டுள்ளது. அதற்கு ரூ. 95 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்திலே அடிக்கல் நாட்டு விழாவும் நடந்து, பொது மக்கள் அதிகமாக, நெருக்கடியாக வசிக்கின்ற பகுதி என்று கருதி, அந்த இடத்தில் உரத் தொழிற்சாலையைத் துவக்குகின்ற பணி தற்சமயம் இல்லை என்று மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்து இருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலை ஆரம்பித்துவிட்டால் நல்லது. அப்படி ஆரம்பிக்கவில்லையெனில், அந்த இடத்தைச் சரியான முறையில் பயன்படுத்த அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, உரத் தொழிற்சாலை அந்த இடத்தில் ஆரம்பிக்கத் தான் தற்போது திட்டம் உள்ளது.

### திருப்பூர் தினசரி சந்தை

264—(*வினா எண். 1190)—**திரு. கு. சுப்பராயன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தினசரி சந்தையை (மார்க்கெட்) புதுப்பித்துக் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): காமராஜ் சாலை தினசரி காய்கறி மார்க்கெட் மற்றும் ஈஸ்வரன் கோயில் வீதி தினசரி காய்கறி மார்க்கெட்டு, இரண்டும், மொத்தம் ரூ. 9.70 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. மீதமுள்ள வேலைகள் நடப்பாண்டில் (1985-86) நிறைவு பெறும்.

[1985 ஜூன் 13

## மோசுகுடி கூட்டுக் குடிநீர்த் திட்டம்

265—(* வினா எண். 594)—திரு. க. பாரமலை: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், மோசுகுடி ஊராட்சியைச் சேர்ந்த மோசுகுடி, இடையாத்தூர், பன்னீர்குளம், ஒத்தவீடு ஆகிய கிராமங்களுக்கு குடிநீர் வழங்க கூட்டுக் குடிநீர் திட்டம் Comprehensive ( Schem.) ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி, என்னுடைய தொகுதியிலேயே கடைசிக் கோடியிலே இருப்பதாகும். அந்தப் பகுதிக்கு பக்கத்திலே இருக்கிற கிராமங்கள் மூன்று திட்டங்களின் மூலமாகப் பயன் அடைகின்றன. அந்தத் திட்டங்களில் ஒன்றான ஆடியூர் திட்டம் அந்தக் கிராமங்களிலே ஒன்றான பன்னீர்குளத்துக்குக் கூட விரிவுபடுத்தப்பட்டிருக்கின்றது. கமுதிக்குச் செல்கிற தண்ணீர்த் திட்டமும் அந்தக் கிராமங்களுக்கு அருகில்தான் சென்று கொண்டிருக்கின்றது. ஆகவே, ஏதாவது ஒரு திட்டத்தின்கீழ் இந்த கிராமங்களை இணைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, மோசுகுடி, இடையாத்தூர், பன்னீர்குளம், ஒத்தவீடு ஆகிய கிராமங்களுக்குத் தனித்தனியாக குடிநீர் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். இடையாத்தூர் என்ற பகுதிக்கு, ஊருக்கு வெளியிலே ஆழ்துளை கிணறு அமைத்து, மேல் நிலை நீர் தேக்கத் தொட்டி கட்டி, அதன் மூலம், தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல, பன்னீர்



குளத்திற்கு மேல்பாக்கம் என்ற கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து தனியாக குழாய்கள் அமைக்க ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன. எனவே, 4 ஊர்களுக்கும் தண்ணீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டு விடும் சூழ்நிலை இருக்கிறது. எனவே, இதில் இனி எந்தப் பிரச்சினையும் இருக்காது.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தன்னுடைய பதிலிலே, தனித்தனியாகத் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். மோசுகுடியிலேகூட ஒரு ஆழ்துளைக் கிணறு போட்டு, மேல்நிலைத் தொட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கே தண்ணீர் கிடைப்பது சரியாக இல்லை என்ற காரணத்தால்தான் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாகக் கொடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். ஏற்கெனவே, வழிமறிச்சான் என்ற பகுதியில் ஆழ்துளைக் கிணறு போட்டார்கள். கிராமங்களுக்குத் தண்ணீர் கொண்டுவரத் திட்டம் அமலில் உள்ளது; அதன் மூலமாக, தேவநேரி, மாங்குடி, கள்ளிக்குடி, பிடாரிசேரி, புத்தூர் போன்ற பகுதிகளுக்குத் தண்ணீர் கொண்டு வர கிணறுகள் வெட்டி, குழாய்களும் பதிக்கப்பட்டு, அது நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. இந்தத் திட்டத்திலாவது, மோசுகுடி போன்ற கிராமங்களைச் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் அதிகப்படியான அளவுக்கு கிராமங்களைச் சேர்க்கின்றபோது, அந்தத் திட்டத்தினால் கிடைக்க வேண்டிய பயன் கிடைக்காமல் போய் விடக்கூடும். தனித்தனியாக குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுகின்ற வாய்ப்புக்கள் இருக்குமிடங்களில், அப்படி நிறைவேற்றினால்தான் சாலச் சிறந்தது. அப்படி எந்த நிலைமையும் இல்லை என்றால் அரசு அதைப் பற்றிப் பரிசீலிக்கும்.

[1985 ஜூன் 13

## அந்தாணி கூகலூர் குடிநீர்த் திட்டம்

266—(* வினா எண். 1051)—திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் அத்தாணி கூகலூர் குடிநீர்த் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) உலக வங்கி கடன் உதவித் திட்டத்தின்கீழ் கூகலூர் மற்றும் அத்தாணி பேரூராட்சிகளுக்கு ரூ. 119.65 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தயாரித்து வருகிறது.

**திரு. பு. கோ. நாராயணன்:** மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் திட்டம் எப்பொழுது துவங்கப்படும்? இதனுடைய மதிப்பீடு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவரவர்களே, மதிப்பீட்டை நான் ஏற்கனவே சொல்லியிருக்கின்ற பதிலில் குறிப்பிட்டிருக்கிறேன். 1985-86-ல் இது துவக்கப்பட்டு மூன்றாண்டுகளுக்குள் முடிக்கப்படும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்திலுள்ள குடிநீர்த் திட்டங்களுக்கு எவ்வளவு தொகை உலக வங்கியின் மூலம் பெற இருக்கிறோம்? எத்தனை திட்டங்கள் திட்டங்கள் அதில் இடம் பெறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவரவர்களே, 150 கோடி பெற இருக்கிறோம். மதுரை, சேலம், கோவை இவைகளின் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்காகவும், மற்றும் 75 நகராட்சிகளுக்கு 740 ஊரமைப்புக் குடிநீர் திட்டத்திற்காகவும் பயன்படுத்தவிருக்கிறோம். 14 நகராட்சிகளுக்குக் குறைந்த மதிப்பீட்டிலே சுகாதாரத் துப்புறவுத் திட்டம் செயல்படுத்தவிருக்கிறோம்.



1985 ஜூன் 13]

## பத்தமடை பகுதிக்கு குடிநீர் வழங்கல்

267—(* வினா எண். 1539)—**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம பத்தமடை நகரப் பஞ்சாயத்துப் பகுதிகளில் வசிக்கும் மக்களிடமிருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கக் கோரி மனுக்கள் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவற்றின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) ரூ. 35.77 லட்சம் மதிப்பீட்டில் பத்தமடை பேரூராட்சிக்கு குடிநீர் வழங்குவதற்கான செயற்குறிப்பிற்கு அரசு 19—4—1984-ல் நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இத் திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் 1985-86-ம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1984 ஆம் ஆண்டு தொடக்கத்திலேயே அரசு அனுமதி வழங்கி மாண்புமிகு பேரவைத் தலைவர் அடிக்கல் நாட்டியும்கூட இந்தப் பணி இன்னும் தொடங்கப்படாமல் இருக்கிறது. மேலும், சிறுபான்மைச் சமுதாயத்தைச் சார்ந்த முஸ்லீம் பெருமக்கள் அந்தக் கிராமத்தில் பெருமளவில் வசிக்கிறார்கள். இந்தத் திட்டத்தின்கீழ் சில தெருக்களுக்குத் தண்ணீர் கொடுப்பது விடுபட்டுப் போயிருக்கிறது. அதை மாற்றி எல்லாத் தெருக்களுக்கும் குழாய்கள் போடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூன் 13

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவரவர்களே, தங்களால் அடிக்கல் நாட்டப்பட்ட திட்டம் நிச்சயமாக எந்த வகையிலேயும் பாதிக்கப்படாது. உரிய நேரத்தில் எடுக்கப்பட்டு துவக்கப்படும் நிலை இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் குறிப்பிட்டதைப்போல், முஸ்லிம் பெருமக்கள் இருக்கின்ற பகுதிகளுக்கும் தண்ணீர் வழங்கப்படும். இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். அங்கே ஆதி திராவிட மக்கள் வசிக்கின்ற பகுதியான அய்பேத்சார் நகர்ப் பகுதிக்கும் தண்ணீர் வழங்கப்படும்.

**ஆரம்பச் சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவப் பிரிவு**

**268—(*வினா எண். 357)—டாக்டர் தே. குமாரதாஸ்; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரம்பச் சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவப் பிரிவுக்கு வழங்கப்படும் மருந்தின் மதிப்பு என்ன?

(ஆ) இதனை உயர்த்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவர் அவர்களே, (அ) ஒவ்வொரு நிலையத்தின் நோயாளிகள் வருகைப் பட்டியலின் அடிப்படையில் ஒவ்வொரு காலாண்டிற்கும் ரூ. 4092.85 (நான்காயிரத்து தொன்னூற்றிரண்டு ரூபாய் எண்பத்தைந்து காசுகள்) மதிப்புக் கொண்ட எண்பத்தொன்பது வகை மருந்துகளை உள்ளடக்கிய மருந்துப் பெட்டகங்கள் அனைத்து சித்த மருத்துவ மனைகளுக்கும் தவறாமல் வழங்கப் படுகிறது.

(ஆ) தற்பொழுது வழங்கப்படும் எண்பத்தொன்பது வகை மருந்துகளை உள்ளடக்கிய மருந்துப் பெட்டகமே, ஆரம்பச் சுகாதார நிலையத்தின் சித்த மருத்துவப் பிரிவை ஒரு காலாண்டின் தேவைக்குப் (சராசரியாக ஒரு நாளைக்கு 100 நோயாளிகள் வீதம் கவனிக்க) போதுமானது. அதிகமான எண்ணிக்கை நோயாளிகள் வரும் சுகாதார நிலையங்களில் மருத்துவ அலுவலரின் கோரிக்கையின் பேரில் இரண்டு



1985 ஜூன் 13]

பெட்டகங்களும் வழங்க இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை இயக்குநரால் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் குறிப்பிட்டதைப்போல இப்பொழுது மருந்துகள் சுகாதார நிலையங்களுக்குக் கொடுப்பது அதிகரிப்பாக இருந்தாலும், இப்பொழுது இன்கேப்ஸ் தேவையான அளவிற்கு சப்ளை இல்லை என்று தெரிகிறது. ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் அல்லது ஒவ்வொரு மாவட்டத்திலேயும் இந்த மருந்து செய்யும் நிலையத்தை ஆரம்பிக்க உத்தேசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மருந்து உற்பத்தியைப் பொறுத்தவரையில் ஏராளமாக நமக்குத் தேவைப்படுகிறது என்ற கருத்தின் அடிப்படையில் இன்கேப்ஸ இன்னும் கூடுதலாக சித்த மருந்துகளைத் தயாரிக்கச் சொல்லி யிருக்கிறோம். அது மட்டுமல்ல, அண்ணா நகரில் உள்ள, பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் இயங்கும் அண்ணா மருத்துவமனையிலேயும் ஒரு சித்த மருத்துவப் பிரிவு இருக்கிறது. அந்தப் பிரிவிலும் மருந்து தயாரிக்கிறார்கள். அங்கே கூடுதலாகத் தயாரிக்க வேண்டுமென்று நாம் ஆணையிட்டிருக்கிறோம். அது மட்டுமல்லாமல் வேறு சில, மேல்மட்டக் குழு, 'ஹை பவர் கமிட்டி' உறுப்பினர்கள் எல்லாம் கலந்து கொண்டு ஒரு உப குழுவை ஏற்படுத்தி, மருந்து தயாரிக்கக்கூடிய எந்த, எந்த தனியார் நிறுவனங்கள் மூலமாக, இந்த மருந்துகளை வாங்கலாம் என்று அதனை 'ஐடன்டிபை' செய்து அந்த இடத்திலேயிருந்து வாங்கிக் கொண்டிருக்கிறோம்.

அது மட்டுமல்லாமல், இன்னும் நல்ல வகையிலே, இன்னொரு பிரிவை பழனி போன்ற இடத்திலே ஏற்படுத்தலாமா என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, அந்த அடிப்படையிலே நாம் நல்ல முறையிலே பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். 1981–82-லே, ரூ. 22 இலட்சம் மதிப்புள்ள மருந்துகளை வாங்கியிருக்கிறோம். 1984–84-லே ரூ. 36.94 இலட்சம் மதிப்புள்ள மருந்துகளை வாங்கியிருக்கிறோம்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரிகிற சித்த மருத்துவ டாக்டர்களுக்கு டிராயிங் பவர் இல்லை; அலோபதி டாக்டர்களுக்குத்தான் டிராயிங் பவர் இருக்கிறது. இந்தப் பிரிவு தனியாகச் செயல்படுகிற காரணத்தால், சித்த மருத்துவத்தின் கீழ் செயல்படுகிறவர்களுக்கு டிராயிங் பவர் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்:

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப பரிசீலிக்கலாம்.

**திருமதி பி. லட்சுமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவர்கள் முழு நேர ஊழியர்களாகப் பணியாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா? வியாதியஸ்தர்களுக்கு மருந்துகள் முழுமையாக வழங்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையிலே 2 ஆண்டுகளுக்கு முன்பாக நாம சித்த மருத்துவர்களுக்கு ஏராளமான சலுகைகளைக் கொடுத்திருக்கிறோம் என்பது மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும். அது மட்டுமல்லாமல், டிஸ்டிரிக்ட் சித்தா மெடிக்கல் ஆபீசர்ஸ் என்ற ஒரு புதிய கேடரை அண்மையிலே நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். அது மட்டுமல்லாமல், அண்மையிலே மாண்புமிகு புரட்சித் தலைவரின் ஆணையின்படி சித்த மருத்துவர்களுக்கு நல்ல முறையிலே ஆங்கில மருத்துவர்களுக்கு இருக்கிற அந்தஸ்து கொடுக்கப்பட்டு அதே சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய கோரிக்கையை நாம் நிறைவேற்றுகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு இ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலுள்ள பெருவளப்பூர் ஆரம்ப சுகாதார நிலையப் பகுதியிலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் யானைக்கால் வியாதி அதிக அளவில் இருக்கிறது. அதனைப் போக்குகிற அளவில் அங்கேயிருக்கிற



ஆரம்பச் சுகாதார நிலையத்திற்குச் சித்த மருந்துகளோ அல்லது அலோபதி மருந்துகளோ போதுமான அளவுக்குக் கிடைக்கச் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது புதிதாக நியமித்திருக்கிற டிஸ்டிரிக்ட் சித்தா மெடிக்கல் ஆபீசர்கள், ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மருத்துவ மனைகளிலே, அது ஆரம்பச் சுகாதார நிலையமாக இருந்தாலும், தாலுகா மருத்துவ மனையாக இருந்தாலும், மாவட்ட மருத்துவ மனையாக இருந்தாலும், எந்த எந்தப் பகுதியிலே மருந்துகள் கிடைக்கின்றன என்பதை நேரடியாகக் கண்காணிக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், வேறு எங்கெங்கே ஆரம்பிக்கலாம், வேறு எந்த எந்த வகையிலே தயாரிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்று டிஸ்டிரிக்ட் சித்தா மெடிக்கல் ஆபீசர்கள், டிபார்ட்மென்ட் ஹெட்டுக்குப் பரிந்துரை செய்வார்கள். அந்தப் பரிந்துரைகளினுடைய அடிப்படையிலே நாம் உடனடியாக நடவடிக்கை எடுக்கலாம்.

**டாக்டர் ந. மாசிலாமணி:** பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத்திலே சித்த மருத்துவம் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது. அந்த வகையிலே, க்ரானிக் டிசீசஸ் என்று சொல்லக்கூடிய, வேறு வகையிலே தீர்க்க முடியாத வியாதிகளைத் தீர்க்க சித்த மருத்துவத்தில் வழி இருப்பதாகச் சொல்கிறார்கள். தமிழகத்து அனைத்து மக்களும் பயன் பெறுகிற வகையிலே, 439 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இப்பிரிவை விரிவுபடுத்தும் வகையில் அரசு திட்டம் ஏதாவது வகுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பொறுத்தவரையிலே, ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் 3 மருத்துவர்களை நியமிக்க வேண்டுமென்று மத்திய அரசு பரிந்துரை செய்து இருக்கிறது. பாமிலி பிளானிங் டிபார்ட்மென்ட்டிலிருந்து ஒரு டாக்டரும், மெடிக்கல் ஹெல்த் டிபார்ட்மென்டிலிருந்து ஒரு டாக்டரும்,

[1985 ஜூன் 13

சர்வீஸஸ் டிபார்ட்மென்ட் மூலமாக ஒரு டாக்டரும் என்று 3 டாக்டர்களை நியமிக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கம் தாக்கீது அனுப்பியிருக்கிறது. ஆனால், 2 ஆண்டுகளுக்கு முன்பாக, இந்தியன் மெடிசன் டாக்டரைக் கூட நியமிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, 3-லே ஒருவரை எடுத்து விட்டு, அவருக்குப் பதிலாக, இந்தியன் மெடிசன் டாக்டரைப் போடலாம் என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். அகில இந்திய அளவிலே 3 டாக்டர்களே நியமிக்கப்பட்டிருக்கும்போது, நாம் அந்த 3 டாக்டர்களை டிஸ்டர்ப் பண்ணாமல் நான்காவதாக இன்னொரு மருத்துவரை, சித்த டாக்டரை நியமித்து, இப்பொழுது 220 இடங்களிலே அவர்கள் பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். படிப்படியாக நம்முடைய நோக்கம் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் இருக்கிற மூன்று டாக்டர்களில் ஒருவரை மாற்றுவதற்குப் பதிலாக அடிஷனலாக, நான்காவதாக ஒரு சித்தா டாக்டரை நியமிக்க பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். வெகு விரைவில் எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் சித்த மருத்துவர் இருப்பார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க வினாக்கள் 269 மற்றும் 270 தள்ளி வைக்கப்படுகின்றன.

## நெசவாளர் ஆயுள் காப்பீட்டுத் திட்டம்

271—(* வினா எண். 544)—திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெசவாளர்கள் இன்ஷூரன்ஸ் திட்டத்தில் நெசவாளர் இறந்தால் கொடுக்கப்படும் அதிக பட்ச தொகையை இன்னும் அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இல்லை.



1985 ஜூன் 13]

**திரு. ஆ. பிரேம்குமார் :** தலைவரவர்களே, நெசவாளர் இறந்து விட்டால் அதிகபட்சம் 3,000 ரூபாய் அரசு கொடுக்கிறது. இதை வைத்துக் கொண்டு இறந்தவர் குடும்பம் நல்ல வாழ்க்கை அமைத்துக் கொள்ள முடியாத அவல நிலை இருக்கிறது. மரம் ஏறும் தொழிலாளர்கள், கட்டடத் தொழிலாளர்கள் இறந்து விட்டால் அதிகத் தொகையை அரசு கொடுக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு அதிகபட்சத் தொகையை அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, அரசு முயற்சி செய்யும்.

**திரு. ஆ. பிரேம்குமார் :** தலைவரவர்களே, இதைப் போன்று 'ஜனதா பாலிசி' என்று ஒன்று இருக்கிறது. அதற்கு 10 ரூபாய் அல்லது 20 ரூபாய் வழங்க வேண்டும். அப்படிச் செலுத்துகின்ற ஒருவர் இறந்து விட்டால் 10,000 ரூபாய் உடனடியாகக் கொடுக்கப்படுகிறது. அதையும் கருத்தில் கொண்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக இருக்கிற நெசவாளர் களுக்கு நெசவாளர் கூட்டுறவுச் சங்கமே 10 ரூபாய் அல்லது 20 ரூபாய் கட்டாயமாகக் கொடுத்து ஜனதா பாலிசி எடுக்க அரசு வழிவகை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, தற்போது ஆயுள் பாதுகாப்புச் சங்கத்துடன் இணைந்து, சாதாரண தொழிலாளி தன்னுடைய சம்பளத்தில் ஒரு ரூபாயில் 6 பைசாவும் தமிழக அரசு 3 பைசாவும் பங்காகச் செலுத்துகிறது. இப்படிச் செலுத்துகிற தொகைக்கு 7 சதவீதம் வட்டி கொடுக்கப்படுகிறது. இப்படி தமிழக அரசு 1980-81 ஆம் ஆண்டு 9,97,000 ரூபாய் சந்தாத் தொகையாகச் செலுத்தியுள்ளது. அதைப் போன்று 1984-85 ஆம் ஆண்டில் 15,34,000 ரூபாய் செலுத்தியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசு ஆய்வு செய்யும்.

**திரு. பி. எம். தங்கவேல்ராஜ் :** தலைவரவர்களே, நெசவாளர் களுக்கு வீடு கட்டும் திட்டம் ஒன்றை தமிழக அரசு வைத்திருக்கிறது. அந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது ? அனைத்து நெசவாளர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை; தனிக் கேள்வி போட வேண்டும்.

**பட்டுத் துணி ஏற்றுமதி.**

**272—(* வினா எண். 738)—திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இருந்து பட்டுத் துணிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில் 1983-84, 1984-85 ஆம் ஆண்டுகளில் எவ்வளவு ஏற்றுமதி செய்யப்பட்டது ?

(இ) எந்தெந்த நாடுகளுக்கு எவ்வளவு ஏற்றுமதி செய்யப்பட்டது ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) 1983-84-ல், 5.01 கோடி ரூபாய்க்கும், 1984-85-ல் ரூ. 3.81 கோடி மதிப்புக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

(இ) பெரும்பாலும் இவை மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

**திரு. எஸ். இராசாராமன் :** தலைவரவர்களே, 1983-84 ஆம் ஆண்டு 5 கோடி ரூபாய்க்கு மேல் துணி அனுப்பப்பட்டதாகவும், 1984-85 ஆம் ஆண்டு 3 கோடி ரூபாய்க்கு மேல் துணி அனுப்பப் பட்டதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். வெளிநாடுகளுக்கு அனுப்புகிற துணிகள் நல்ல சாம்பிளாக, நல்ல தரமாக இல்லாததால், சில தவறுகள் நடப்பதால் வெளிநாடுகளில் நம்முடைய துணிகளுக்கு அதிக கிராக்கி இல்லை, அதிக அளவு விற்கவில்லை என்று தெரிகிறது. ஆகையால் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்ற துணிகளை 'குவாலிட்டி இன்ஸ்பெக்டர்' போன்ற அதிகாரிகளை நியமித்து, சோதனை செய்து அனுப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா ?





**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரமான துணிகளை ஏற்றுமதி செய்வதற்காகத்தான் நடவடிக்கை எடுக்கப்படு கின்றது. இருந்தும் சில தவறுகள் நடக்கின்றன. அப்படி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதில் தவறுகள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும், நடந்தால் அதில் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு உத்தரவு அளிக்கப்பட்டுள்ளது.

**திரு. எஸ். இராசாராமன் :** தலைவர் அவர்களே, தர்மபுரி, ஆரணி, காஞ்சிபுரம் போன்ற பல்வேறு ஊர்களில் பட்டுத் துணிகள் அதிகமாக உற்பத்தி செய்கிறார்கள். எனவே அங்கே பட்டு உற்பத்தி செய்வதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுத் துணிகள் உற்பத்தி செய்ய அரசாங்கம் நிச்சயம் அவர்களை ஊக்குவிக்கும். பட்டுத் துணிகளுக்கு நல்ல கிராக்கி மேல்நாடுகளில் இருக்கின்றன.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, பண்டிகைக் காலங்களிலும், விழாக் காலங்களிலும் கைத்தறித் துணிகளுக்கு நாம் தள்ளுபடி தருகிறோம். அப்படி பெரும்பாலும் பட்டுத் துணிகளுக்கு 20 சதவீதம், 25 சதவீதம் என்று தள்ளுபடி தரப்படுகின்றபோது வியாபாரிகள் வாங்கி அவற்றை வெளிநாடுகளில் விற்கின்ற நிலைமை இருக்கின்றது. இதனால் அரசுக்குப் பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகின்றது. அரசு மூலமாக அனுப்பப்படும் துணிகளைவிட இந்த வியாபாரிகள் தள்ளுபடியின்போது வாங்கி அவற்றை சிலோன், சிங்கப்பூர், மலேசியா போன்ற வெளிநாடுகளுக்கு அனுப்பி விற்பதாகத் தகவல் வந்திருக்கின்றது. அது உண்மையா ? எனவே அத்தகைய பட்டுத் துணிகளுக்குத் தள்ளுபடி இல்லை என்றும், அரசின் தள்ளுபடி அனைத்தும் கைத்தறித் துணிகளுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்ற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் அரசுக்குக் கோரிக்கை ஏதேனும் வந்திருக்கின்றதா ? ஆனால் அதே நோக்கில்

வியாபாரிகள் தனியாக வெளிநாடுகளுக்குப் பட்டுத் துணிகளை ஏற்றுமதி செய்ய அனுமதி கொடுக்கக் கூடாது என்று அரசின் மூலமாக மத்திய அரசுக்குக் கடிதம் எழுதித் தெரிவிக்க மாநில அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுத் துணிகளைத் தனியார் ஏற்றுமதி செய்வதில்கூட அதிகமான தேக்கம் ஏற்பட்டிருக்கின்றது. எனவே பட்டுத் துணிகளை ஏற்றுமதி செய்யக் கூடாது என்று அரசு சொல்லத் தயாராக இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது மாதிரி தவறு நடந்து அது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் தக்கபடி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வே. இரா. ஜெயராமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு கடந்த வாரத்தில் அறிவித்திருக்கின்ற தேசிய டெக்ஸ்டைல் பாலிசி காரணமாக பவர்லூம் செக்டாருக்கு அதிகமான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே அதை அடிப்படையாக வைத்து தமிழகத்தில் பவர்லூம் சென்டர் என்ற வகையில் புதிய பவர்லூம காம்ப்ளெக்ஸ் ஏற்படுத்துகின்ற செயற்குறிப்பு அரசினிடத்தில் இருக்கின்றதா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாத கேள்வி. மத்திய அரசு அறிவித்திருக்கின்ற ஜவுளிக் கொள்கை பற்றித் தமிழக அரசு ஆய்ந்து கொண்டிருக்கின்றது.

**கைத்தறி ஜனதா துணி.**

273—(*வினா எண். 740)—**திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறியில் "ஜனதா துணி" 1983-84, 1984-85 ஆம் ஆண்டுகளில் எவ்வளவு தயாரிக்கப்பட்டது?

(ஆ) அதனால் பலன் பெறுவோர் எத்தனை பேர்?





**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, (அ) 1983–84 ஆம் ஆண்டில் கைத்தறியில் 41.42 மில்லியன் மீட்டர்களும், 1984-85 இல் 39.80 மில்லியன் மீட்டர்களும் ஜனதா துணி ரகம் உற்பத்தி செய்யப்பட்டது.

(ஆ) இந்த வகை துணிகளை நெய்வதில் 28,000 நெசவாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**திரு. எஸ். இராசாராமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமுதம் அங்காடியின் மூலமாகவும், கூட்டுறவு வாணிபச் சங்கத்தின் மூலமாகவும் கொடுக்கப்படுகின்ற துணிகள் அத்தனையையும் மொத்தமாகத் தனியார் ஜவுளிக் கடை அதிபர்களுக்கு விற்றுவிடுகிறார்கள். அது பொதுமக்களுக்குச் சரியாகச் சென்று சேர்கின்ற நிலைமை இல்லை. அதனால் ஏழை எளிய பொதுமக்கள் பயன்பெற முடியவில்லை என்பதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஜனதா ரகத் துணிகளாக வேஷ்டிகள், புடவைகள், லுங்கிகள் ஆகியவை கோ-ஆப்டெக்ஸ் கடைகள் மூலமாகவும், கிராமப்புறங்களில் நியாய விலைக் கடைகளின் மூலமாகவும்தான் விற்கப்படுகின்றன. அரசுக்கு வந்த தகவல் இன்றைக்கும் அவை சரியாக விற்பனையாகவில்லை என்பதுதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் தனியார்களுக்கு விற்கப்படுகின்றன என்பது பற்றிய, அந்தத் தவறுகள் பற்றிய புகார் கொடுத்தால் நாம் நடவடிக்கை எடுக்கிறோம்.

**திரு. எஸ். இராசாராமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்பது என்னவென்றால் ஜனதா ரகத் துணிகளை அரசு குறைந்த விலையில் கொடுத்தாலும், தனிப்பட்ட ஜவுளிக்கடை அதிபர்கள் அவற்றை மொத்தமாக வாங்கிச் சென்று விடுகிறார்கள். அவ்வாறு வாங்கிச் சென்று அவர்கள் அதிக விலைக்கு விற்கிறார்கள். இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் இருக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதையும், உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஜனதா வகை துணிகளைத் தயாரிப்பதில் நெசவாளர்களுக்குப் போதுமான கூலி கிடைப்பது இல்லை. இந்தத் துணிகளை நெய்வதால் வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கிறது என்ற ஒரு பொருளே தவிர அவர்களுக்கு நியாயமான கூலி கிடைப்பது இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல இந்தத் துணிகளைத் தனியார்கள் அதிக விலைக்கு வாங்கி விற்கிறார்கள் என்ற நிலை இருக்குமானால் அதை அவர்கள் புகாராக எழுதிக் கொடுப்பார்களேயானால், நிச்சயமாக அதன்மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

**திரு. அ. ரகுமான்கான்:** பாயின்ட் ஆப் ஆர்டர், * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என் அனுமதியின்றி பேசக் கூடாது. என் அறைக்கு வாருங்கள்; பேசிக் கொள்ளலாம். திரு. ரகுமான்கான் பாயின்ட் ஆப் ஆர்டர் என்பதாக எழுப்பியதிலிருந்து அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. வை. பாலச்சந்திரன்:** * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய வேண்டுகோளை ஏற்று இதுவரை பேசப்பட்டது அனைத்தையும் அவைக் குறிப்பில் இருந்து நீக்குகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



## 2. அறிவிப்புகள்.

### (அ) கொள்கை விளக்கக் குறிப்புகளை முன்கூட்டியே அனுப்பி வைப்பது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மானியக் கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்புகளும், மற்ற வெளியீடுகளும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மிகவும் தாமதமாகக் கிடைப்பதனால் அவற்றைப் படித்து, பேரவையின் விவாதங்களில் கலந்து கொள்ள நேரம் கிடைப்பதில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் என்னிடம் கூறுகின்றனர். கொள்கை விளக்கக் குறிப்புகளும் மற்ற புத்தகங்களும் மானியக் கோரிக்கை பேரவையில் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு நான்கு நாட்கள் முன்னதாகவே பேரவைச் செயலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும் என்று ஏற்கனவே எல்லாத் துறைகளுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அவையிலும் பலமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இம்முறை துறைகளுக்குப் போதிய அவகாசம் இருந்தும் சில மானியக் கோரிக்கைகள் பேரவையில் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்தினம்தான் குறிப்புகள் பேரவைச் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அதனால் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இவற்றை அனுப்புவதில் காலதாமதம் ஆகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர்கள் தங்கள் துறைகளிடம் சொல்லி இவற்றை நான்கு நாட்கள் முன்னதாகவே பேரவைச் செயலகத்திற்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யும்படியும், மீண்டும் இம்மாதிரி காலம் கடந்து இவை அனுப்பி வைக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் இவற்றைப் படிக்க நேரம் இல்லையென்று பேரவையில் கூறினால், அந்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தை ஒத்தி வைக்க நேரிடும் என்றும், மாண்புமிகு அமைச்சர்கள்தான் இதற்குப் பொறுப்பேற்க வேண்டி வரும் என்றும் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### (ஆ) மேலவையிலிருந்து வரப்பெற்றுள்ள செய்தி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு சட்ட மன்ற மேலவையில் 1985 ஆம் ஆண்டு தமிழ் நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட

[1985 ஜூன் 13

அறிவிப்புகள்

[பேரவைத் தலைவர்]

மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 28/1985) திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

3. கவன ஈர்ப்பு.

**கும்பகோணம் கூட்டுறவு வங்கியில் கடனைத் திருப்பிச் செலுத்தியோருக்குச் சொத்துப் பத்திரங்களை விடுவித்துத் தராததால் ஏற்பட்டுள்ள நிலை.**

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே. "கும்பகோணம் கூட்டுறவு பிரதம நிலவள வங்கியில் கடன் பெற்று அதனை முழுவதும் திருப்பிச் செலுத்தியுள்ள விவசாயப் பெருங்குடி மக்களின் நிலங்கள் மற்றும் சொத்துக்களின் பத்திரத்தைத் திருப்பிக் கொடுப்பதில் வங்கியின் அதிகாரிகள் வேண்டுமென்றே மாதக் கணக்கில் தாமதப் படுத்துவதால் அம்மக்களுக்கு புதுக் கடன்கள், பெறுவது, மற்றும் சொத்துக்களை மாற்றுவதில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானத்தை திரு. இ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறார்கள். இதுபோன்ற அனுமதி எல்லா உறுப்பினர்களுக்கும் வழங்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய அனுமதியைப் பெற்றுதான் திரு. சித்தன் அவர்கள் தீர்மானத்தை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள். உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.



1985 ஜூன் 13]

[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்]

**அறிக்கை.**

கும்பகோணம் கூட்டுறவு பிரதம நிலவள வங்கியில் கடன் பைசல் செய்த 27 உறுப்பினர்களிடமிருந்து தங்கள் பத்திரங் களைத் திருப்பி அளிக்க வேண்டும் என்ற மனுக்கள் பெறப் பட்டன. அவற்றில் 6 உறுப்பினர்கட்கு பத்திரங்கள் திருப்பி அளிக்கப்பட்டன. எஞ்சியுள்ள 21 உறுப்பினர்கட்கு பத்திரங்கள் திருப்பி அளிக்கப்பட வேண்டியுள்ளது.

மேற்கூறிய 21 மனுக்களில், 5 மனுக்கள் ஒரு மாதத்திற்குள்ளும், 9 மனுக்கள் 1 மாதம் முதல் 3 மாதத்திற்குள்ளாகவும், 5 மனுக்கள் மூன்று மாதத்திலிருந்து 6 மாதத்திற்குள்ளாகவும், இரண்டு மனுக்கள் 6 மாதத்திலிருந்து ஒரு வருடத்திற்குள்ளாகவும் பெறப்பட்டவையாகும். அவற்றின் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிரதம நிலவள வங்கிகளில் கடன்கள் முழுவதையும் பைசல் செய்து தங்களது பத்திரங்களைத் திருப்பித் தர வேண்டும் என்று கோரிக்கைகள் பெற்றவுடன் சம்பந்தப்பட்ட உறுப்பினரின் கடன் முழுமையாகப் பைசல் செய்யப்பட்டதற்கான சான்றிதழை கூட்டுறவு சார் பதிவாளர் (நி)/நில மதிப்பீட்டு அலுவலரிடம் பெற்று வங்கியின் தனி அலுவலரின் கோரிக்கையுடன் தமிழ்நாடு மாநில நிலவள வங்கிக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. உறுப்பினர்களின் பத்திரங்கள் தமிழ்நாடு மாநில நிலவள வங்கியில் பாதுகாப்பிற்காக வைக்கப்பட்டுள்ளதால், மேற்கூறிய சான்றிதழ்கள் பெற்றவுடன் அவை சரி பார்க்கப்பட்டு பத்திரங்கள் உறுப்பினர்களுக்கு சம்பந்தப்பட்ட நிலவள வங்கி மூலம் திருப்பி அனுப்பப்படுகின்றன.

கும்பகோணம் நிலவள வங்கியை பொறுத்த வரையில் 12 மாதங்கட்குள்ளாக பெறப்பட்ட மனுக்களுக்கு மட்டுமே பத்திரங்கள் திருப்பி அனுப்பப்பட வேண்டியுள்ளன. கடந்த நான்கு ஐந்து மாதங்களாக நிலவள வங்கிகள், கும்பகோணம் நிலவள வங்கி உட்பட, கடன் வழங்குதலிலும் குறிப்பாக பெருந்த திட்டத்தின் கீழ் சிறு விவசாயிகட்கு கடன் வழங்குவதிலும், உறுப்பினர் கடன் வசூலிலும் மும்முரமாக ஈடுபட்டிருந்ததால் மேற்படி பத்திரங்கள் திருப்பி அனுப்புதலில் தாமதம்

[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்]

ஏற்பட்டுள்ளது. ஆயினும் எஞ்சியுள்ள மனுக்களை விரைவில் ஆய்ந்து பத்திரங்களை விரைவில் திருப்பி வழங்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பிரதம நிலவள வங்கிகட்கு தங்களது கடன் தொகைகளை முழுமையாகத் திருப்பிச் செலுத்திய விவசாயிகளின் சொத்துக்கள் பற்றிய பத்திரங்கள் அவர்கட்கு திருப்பிக் கொடுப்பதில் தேக்க நிலை ஏற்படாவண்ணம் இருப்பதற்காகவும், துரிதமுடன் இயங்கவும், தமிழ்நாடு மாநில நிலவள வங்கி நெறிமுறைகளை தெரிவித்துள்ளது. அதன் அடிப்படையில் பைசல் செய்த கடன்காரர்கட்கு பத்திரங்களைத் திருப்பிக் கொடுப்பதில் ஏற்படக் கூடிய தாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு, கடன் பைசல் செய்த நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் பத்திரங்களை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று கண்டிப்பான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் 27 உறுப்பினர்களிடமிருந்து தங்கள் பத்திரங்களைத் திருப்பி அளிக்க வேண்டுமென்று மனுக்கள் பெறப்பட்டன என்றும், 21 உறுப்பினர்களுக்கு பத்திரங்கள் திருப்பி அளிக்கப்பட வேண்டியுள்ளன என்றும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. இதிலிருந்து யார் யார் பத்திரங்கள் திரும்ப வேண்டுமென்று கேட்கிறார்களோ அவர்களுக்குத் தான் திரும்பக் கொடுக்கப்படுகிறது என்பது தெரிகிறது. ஆகவே கடன் பெற்றவர்கள் கடனை திருப்பிக் கட்டிய உடனே பத்திரங்களைத் திருப்பிக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ? அதேபோல உறுப்பினர்களின் பத்திரங்கள் தமிழ் நாடு மாநில நிலவள வங்கியில் பாதுகாப்பிற்காக வைக்கப் படுகின்றன என்றும் சொல்லப்படுகிறது. அவ்வாறு பத்திரங்கள் சென்னையில் வைக்கப்படுவதால் இங்கேயிருந்து திருப்பி அனுப்புவதிலே காலதாமதம் ஏற்படலாம். ஆகவே மாவட்ட அளவிலே அந்தந்த நிலவள வங்கியிலே பத்திரங்களைப் பாதுகாப்பாக வைக்கின்ற முறைகளை அரசு ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல இப்போது நடைமுறையில் கடனைத் திருப்பிச் செலுத்தியதற்குப் பிறகு தனியாக அந்த விவசாயிகள் 10 தினங்கள், 15 தினங்கள் கழித்து தான் அந்தப் பத்திரங்கள் வேண்டுமென்று எழுதிக் கொடுக்கிற முறை இருக்கிறது. அதை மாற்றி கடன் திருப்பி செலுத்திய உடனேயே பத்திரங்களைத் திரும்பக் கேட்டு அவர்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற வேண்டுமென்று உத்தரவு இட்டிருக்கிறோம் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அதே போல பத்திரங்கள் பொறுத்தவரையில் சென்னையில் எஸ்.எல்.டி. பாங்கில் தான் பத்திரமாக வைக்கப்படுகின்றன. உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தை எந்த அளவிற்கு நிறைவேற்ற இயலும் என்பதைக் கருத்தில் கொண்டு அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



(முற்பகல் 10-10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு உறுப்பினர் அவையில் இல்லாதபோது வேறு உறுப்பினர் அமைச்சரின் கவனத்தை ஈர்க்கத்தான் முடியுமே தவிர, அந்தத் தீர்மானத்தில் கேள்விகள் கேட்க இயலாது. உறுப்பினர் சித்தன் எழுப்பிய இந்த வினாவே முதலும் கடைசியுமாக இருக்கட்டும். இனிமேல் இந்த முறை பின்பற்றப்பட வேண்டாம்.

4. அரசினர் தீர்மானம்.

**வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழு—தேர்தல்.**

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"இந்த அவையின் உறுப்பினர் திரு. மா. சின்னராசு, தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் நிர்வாக குழுவில் வகித்து வந்த பதவியின் காலம் முடிவுற்றதால், தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகச் சட்டம் 1971 (தமிழ்நாடு சட்ட எண் 8/1971) பிரிவு 18-ன் கீழ் உள்ள உட்பிரிவு (2)-ல் அடங்கிய "ஏனைய இரண்டாம் நிலை உறுப்பினர்கள்", என்ற தலைப்பின் கீழ் வரும் (h) உட்பிரிவின் கீழ், இந்த அவை அந்தப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று பேரவை உறுப்பினர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்".

அரசினர் தீர்மானம்

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (இ) வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழு—தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க, வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கு ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதற்கான வேட்பாளர் நியமனத் தாள்களை 17—6—1985 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 18—6—1985 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 19—6—1985 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப் பெற வேண்டிய எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 24—6—1985 திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் உள்ள குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

## 5. வரவு-செலவுத் திட்டம், 1985-86—வாக்கெடுப்பு தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண்—12 தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற



[திரு. ஆர். எம். வீரப்பன்]

தலைப்பின் கீழ் ரூ. 3,13,02,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

**Thiru N. S. V. CHITHAN.**—Sir,

"To discuss about the need to abolish the present HRCE Department and to set up an autonomous HR and CE Board"

I move that, that the allotment of Rs. 3,13,02,000 under Demand No. 12 be reduced by Rs. 12.

**திரு. எஸ். என். இராமசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் புராதன கலை நுட்பம் வாய்ந்த கோயில்கள் பல சேதமடைந்து அழிந்து கொண்டிருப்பதை தடுக்க அவற்றை ஆய்வு செய்ய ஓர் குழு அமைப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண் 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 3,13,02,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

### (ஆ) கோரிக்கை எண் 25—சின்கோனா.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண் 25—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,35,59,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

**Thiru K. KALLAN** : "To discuss policy" Sir, I move that the allotment of Rs. 3,35,59,000 under Demand No. 25 he reduced by Rs. 100.

[1985 ஜூன் 13

(இ) கோரிக்கை எண் 45—காட்டு வளத் துறை.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 45—காட்டு வளத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,34,43,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

(ஈ) கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்.

மாண்புமிகு திரு. ஆர் எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,49,65,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடம்பாக்குளத்தை ஆழப்படுத்தி, பெருகின்ற மண்ணை வைத்து மேற்கண்ட குளத்தின் மத்தியிலேயே ஓர் மீன்காட்சி சாலை அமைத்து, சுற்றுலா இடமாக மாற்றுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,49,65,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

(உ) கோரிக்கை எண் 56—காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 56 — காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 17,31,76,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".



1985 ஜூன் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகள் தொடர்பான துறைகளினுடைய கொள்கை விளக்கக் குறிப்புகள் * * இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப் பெற்று இருக்கின்றன. அவற்றை நான் இங்கே ஆற்றிய உரையாக தாங்கள் ஏற்றுக் கொண்டு, பதிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புகளில் இரண்டு கருத்துக்களை சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அறநிலையத் துறை பற்றிய விளக்கக் குறிப்பில் பக்கம் 38-ல் திருக்கோயில் நிலங்கள் குத்தகை என்ற தலைப்பில் ஒரு பாரா சொல்லப்பட்டிருக்கிறது. அதில், "நிலங்களையே வருமான வழியாகக் கொண்டிருக்கும் பெரும்பாலான திருக்கோயில்கள், குத்தகைதாரர்கள் பல ஆண்டுகளாக குத்தகை பாக்கிகளைத் தராத காரணத்தால், தினசரி பூசைகள், சிப்பந்திகளின் சம்பளம் மற்றும் இதர இனங்களுக்கான செலவுகளைச் சமாளிக்க முடியாமல் இடர்ப்படுவதைக் கருத்தில் கொண்டு சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான கட்டிடங்களுக்கு வாடகைக் கட்டுப்பாடு சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளித்திருப்பதைப் போல, அவர்களுக்குச் சொந்தமான நிலங்களிலிருந்தும் குத்தகைத் தொகையினைப் பெற வகை செய்யும் பொருட்டு, சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களை குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிப்பது பற்றி அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது" என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இந்தக் கொள்கையைப் பொறுத்த வரையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அதை ஏற்றுக் கொண்டு, அதற்கு விதிவிலக்கு அளித்து, சட்ட முன்வடிவு கொண்டு வர அனுமதி அளித்திருக்கிறார்கள். அந்தக் கருத்தையும் இந்தக் கொள்கைக் குறிப்பிலே சேர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

---

* * 176-341-ம் பக்கங்களில் இணைப்புகள் II, III, IV, V மற்றும் VIஆக அச்சிடப் பெற்றுள்ளன.

[1985 ஜூன் 13

[திரு. ஆர். எம். வீரப்பன்]

அதைப் போலவே சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில் அந்தக் கொள்கை விளக்கக் குறிப்பினுடைய கடைசி பக்கத்தில் தமிழகத்தில் சர்வதேச் சுற்றுலா வளாகங்கள் என்ற தலைப்பில் வெளிநாடுகளில் வாழ்கிற இந்தியர்கள் குறிப்பாக தமிழ் மாநில மக்கள் இங்கே சுற்றுலாத் துறையில் முதலீடு செய்ய வேண்டும் என்று விரும்பினால் அவர்களோடு இணைந்து நம்முடைய சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சில சர்வதேச அளவிலே பயன் பெறுகிற சில திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று அதற்காக ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட மிகப் பெரிய திட்டங்கள் சுமார் 25 கோடி ரூபாய் செலவில் அது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஏற்றுக்கொளப்பட்டு, அது கொள்கை முடிவாகவும், திட்டமாகவும் இன்றைக்கு நடைமுறைப்படுத்த இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தத் திட்டங்களுடைய விவரங்களைத் தெரிவித்தால் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இங்கே விவாதிப்பதற்கு அது வசதியாக இருக்கும்.

வெளிநாட்டில் வாழும் இந்தியர்களின் முதலீட்டைப் பயன்படுத்தி, கூட்டுத் துறையில் பின்வரும் சுற்றுலா வளாகங்களை நிர்மாணிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. 200 அல்லது 300 பயணிகளுக்கு மேல் பெரிய குழுக்களாக வருகை தரும் வெளிநாட்டுப் பயணிகள் ஒன்றாகத் தங்கவும், தமிழ் நாட்டில் பார்க்க வேண்டிய இடங்களைச் சென்று பார்க்கவும், தங்கியுள்ள இடத்தில் நல்ல பொழுதுபோக்கு வசதிகளுடன் ஓய்வும் மனமகிழ்வும் பெறவும் வாய்ப்பாக இந்த வளாகங்கள் ஒருங்கிணைந்து இயங்கும்.

1. திருவிடந்தை. திட்ட மதிப்பீடு 9 கோடி ரூபாய். 300 ஏக்கர் பரப்பில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும். இதனுடைய அடிப்படை சிறப்பு அம்சங்கள்: 400 பேர் தங்க அறைகள், கடல்வாழ் உயிரினங்கள் காட்சியகம், மாதிரி கிராமம், ஒலி-ஒளி காட்சிகள், மாநாட்டு அரங்கம், பலவித விளையாட்டுகள், புனல் விளையாட்டு, உடற்பயிற்சி சாலை, அண்டைக் கிராமங்களுக்கு பற்பல வசதிகள், மருத்துவ சிகிச்சைக்குப்



1985 ஜூன் 13]

[திரு. ஆர். எம். வீரப்பன்]

பிறகு உடல்நலம் பேணி தனி குடில்கள், கண்கவர் தோட்டங்கள், குழந்தைகளுக்கு கல்வி சேர்ந்த நவீன விளையாட்டுக்கள், யோகப் பயிற்சி, கைவினைக் கூடம், காட்சியகங்கள், விற்பனைக் கூடங்கள், பன்னாட்டு உணவு வகைகள்.

2-வது திட்டம். முட்டுக்காடு இளைஞர் வளாகம், திட்ட மதிப்பீடு 3 கோடி ரூபாய். இதன் சிறப்பு அம்சங்கள்:— 200 பேர் தங்க வசதி, சர்வதேச படகுத் துறை, புனல் விளையாட்டுக்கள், உடற்பயிற்சி சாலை, இளைஞர் முகாம்கள், பூங்கா, திறந்தவெளி அரங்குகள், மாநாட்டு அரங்கம்.

3-வது திட்டம். மாமல்லபுரம், சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வளாகத்தை சர்வதேச தரத்துக்கு உயர்த்துவது சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் இதன் சிறப்பு அம்சங்கள்:— 200 பேர் தங்க வசதி, மாநாட்டு அரங்கம், விளையாட்டுக்கள், பூங்கா, நீச்சல்கூடம், விற்பனை நிலையம், பன்னாட்டு உணவு வகைகள். திறந்த வெளி அரங்கம் முதலியன. இதற்கு திட்ட மதிப்பீடு 3 கோடி ரூபாய்.

4-வது திட்டம். வள்ளுவர் கோட்டம் சர்வதேச சுற்றுலா மையம், சுமார் 70 கிரௌண்டு. இது இளைஞர் மையமாக இருக்கும். திட்ட மதிப்பீடு 9 கோடி ரூபாய். இதன் சிறப்பு அம்சங்கள்: 200 பேர் தங்க வசதி, பொழுதுபோக்கு வசதிகள், உடற்பயிற்சி சாலை, தகவல் நிலையம், சுற்றுலா அலுவலகங்கள், பிற மாநில தகவல் மையங்கள், கைவினைக் கூடம், சர்வதேச காட்சியகங்கள், விற்பனைக் கூடங்கள்.

இவை தவிர பிராட்வே சாலையில் உள்ள பழைய சட்டக் கல்லூரி விடுதி இருக்கும் இடத்தில் மலிவான குறைந்த வாடகையில் அறைகள் கொண்ட ஒரு ஓட்டல் கட்டப்படும். இது சாதாரண மக்களும், குறைந்த வசதி படைத்த உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும், குறிப்பாக நம்முடைய மாநிலத்தில் இருக்கிற வெளி மாவட்டத்தில் இருக்கின்ற அரசு அதிகாரிகளும் பயன்படுத்துகிற வகையில் இது அமைக்கப்படும். இதற்கு மதிப்பீடு சுமார் 3 கோடி ரூபாய் ஆகும்.

[1985 ஜூன் 13

[திரு. ஆர். எம். வீரப்பன்]

இந்தத் திட்டங்களை சுமார் 3 ஆண்டுகளுக்குள் நிறைவேற்றி முடிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்து இருக்கிறார்கள். இந்தத் திட்டங்களிலே திருவிடந்தைத் திட்டம் என்பதும், முட்டுக்காடு திட்டம் என்பதும், மாமல்லபுரம் திட்டம் என்பதும், அண்டை கிராமங்கள் அதனைத் தந்து எடுத்துக் கொள்வது — ஏற்பு செய்து கொண்டு, கிராம ஏற்புத் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பணிகளாக மேற்கொள்ளப்படும். அதன் மூலம் சுமார் 5 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும். அவைகளையும், இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பின் மீது இணைந்துக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வார்களானால், இறுதியாக அரசின் தரப்பிலேயிருந்து விளக்கங்கள் அளிக்க வேண்டியிருந்தால், அளிக்கிறேன் என்று தெரிவித்து அமைகிறேன்.

**திரு. மா. சுந்தரதாஸ்:** தலைவர் அவர்களே, நான் காங்கிரஸ் கட்சியின் சார்பில், இந்த மானியக் கோரிக்கைகள் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற முன்வருகிறேன். இந்த ரிலிஜியஸ் என்டோமென்ட்-டைப் பொறுத்தவரையில், கோயில் சொத்துக்கள் எந்த அளவிலே இருக்கின்றன, கோயில்களுடைய நிலைமைகள் எவ்வாறு இருந்து கொண்டிருக்கின்றன, என்பதை யெல்லாம் குறித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்தியாவில், தமிழகத்தைப் பொறுத்தவரையில், கோயில்கள். கோபுரங்கள் எல்லாம் மிகச் சிறப்பு வாய்ந்தவை. ஆனால் அந்தக் கோயில்களில் வருவாய் இல்லை. அவைகளைச் சரியாகப் பராமரிப்பதில்லை. பூஜை செய்வதில்லை. பூசாரிகளுக்கு சம்பளம் கொடுப்பதில்லை என்ற பரிதாபகரமான நிலைமை தமிழகத்திலே எல்லாக் கோயில்களிலேயும் இருந்து கொண்டிருக்கிறது. காரணம் என்னவென்றால், ஒரு கோயிலிலே வருவாய் அதிகமாய் வந்தால் உடனே அதனை அரசாங்கம் எடுத்துக் கொள்கிறது. ஒரு கோயிலில் வருவாய் இல்லையெனில், அதனை எடுத்துக் கொள்வதில்லை. எந்த ஊரிலே பார்த்தாலும், பல இடங்களிலே கட்டி இருக்கின்ற



1985 ஜூன் 13]

[திரு. மா. சுந்தரதாஸ்]

திருக்கோயில்கள் மிக மோசமான நிலையிலே இருக்கின்றன. அந்தக் கோயில்களை எல்லாம் திருத்தி அமைப்பதற்கு எந்தப் பணமும், இந்த பட்ஜெட்டிலே ஒதுக்கியிருப்பதாகத் தெரிய வில்லை. ஆகவே, அத்தகைய கோயில்களுக்கு தேவையான பண உதவி செய்து, அந்தக் கோயில்களில் பூஜை செய்வதற்கு, பூசாரிகளை நியமனம் செய்வதற்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

அங்கே பூஜை செய்கின்ற பூசாரிகளுக்கு சம்பளம் மிகக் குறைவு. அவர்களால் வேறு வேலை செய்ய முடியாது. இந்த நாட்டிலே அரசு ஊழியர்களுக்கெல்லாம் சம்பள உயர்வு கிடைக்கிறது. கோயில் பூசாரிகளுக்கு அப்படி கிடைப்பதில்லை. அவர்கள் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். காலை 5 மணிக்கு எழுந்திருக்க வேண்டும். அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசு ஊழியக் கமிஷன் போட்டாவது, நிச்சயம் அவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் நிர்ணயிக்க வேண்டும். இல்லையெனில், அவர்களுக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்க வேண்டும் என்று ஆணையாவது பிறப்பிக்க வேண்டும். அவர்களுக்குக் குடும்பம் இருக்கிறது. இன்றைக்கு அறநிலையத் துறையிலே பல இலட்சக் கணக்கான அளவில் சொத்து இருக்கிறது. ஒரு கோயிலில் சொத்து இல்லை. ஒரு கோயிலில் சொத்து இருக்கிறது. எனவே, அந்த வருவாயை எடுத்தாவது, அவர்களுக்கு சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்க வேண்டும். அதேபோல் ஒரு சில கோயில்களுடைய தரத்தை உயர்த்த வேண்டும். குறிப்பாக, தக்கார்களை நியமிக்கிறார்கள். அதிலே அரசு தலையீடு இருப்பதாக நாங்கள் கருதுகிறோம். தக்கார்களை நியமிக்கும்போது, கட்சி வேற்றுமை பாராமல், கடவுள் பக்தர்களை நியமிக்க வேண்டும். உறுப்பினர்களை நியமிக்கிறபோதும், அந்த ஊரிலே கோயில்களுக்கு யார் யார் அதுவரையில் நியாயமாக இருக்கிறார்கள், அந்தக் கோயிலில் பக்தி வைத்து இருக்கிறார்கள் என்று பார்த்து நியமிக்க வேண்டும். சில பேர்களை நிரந்தரமாகத் தக்கார்களாக நியமித்து இருக்கிறார்கள். அங்கெல்லாம் மோசமான சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. தக்கார்கள் கூடச் சரியாக நடந்து கொள்வதில்லை.

[1985 ஜூன் 13

[திரு. மா. சுந்தரதாஸ்]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

குமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி முனையில் அம்மன் கோயில் இருக்கிறது. அந்தப் பக்கத்திலே இருக்கிற இடங்களிலேயெல்லாம் கடைகளை வைக்கக் கூடாது என்று மத்திய அரசு ஆணையிட்டிருந்தது. அன்னை இந்திரா அவர்கள்கூட கன்னியாகுமரி தேச்சுரல் தன்மையை இழந்து கொண்டிருப்பதால், கடைகளைக் கட்டக் கூடாது என்று ஆணையிட்டார்கள். அதற்காகத்தான் ரயில்வே நிலையத்தைக் கூட மத்திய அரசு ஒரு கிலோ மீட்டர் தள்ளி வைத்தார்கள். அப்படிப்பட்ட இடங்களில் கடைகளுக்கு வாடகைக்கு விட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கன்னியாகுமரி நகரத்தினுடைய அழகு குறைகின்றது. புனிதத் தன்மை குறைகின்றது. அத்தகைய இடங்களில் தக்கார்கள் வாடகைக்கு கடைகளுக்கு கொடுக்கக் கூடாது என்று சொல்ல வேண்டும். அதே போன்று சுசீந்திரம் டெம்பிள் இருக்கிறது. அங்கே உள்ள ஒரு பெரிய குளம், பக்தர்கள் குளிப்பதற்காக இருக்கிறது. பல ஆண்டுக் காலமாக அது சுத்தம் செய்யப்படாமல், கேவலமான நிலையில் இருந்து கொண்டு இருக்கிறது. அதை எல்லாம் அரசு கவனித்து, அந்தக் குளத்தில் தண்ணீரை மாற்றி, சுத்தமான நீரை விட்டு, பக்தர்களுக்கு குளிக்க வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டும், மாணாமதுரை தொகுதியைப் பொறுத்த வரையில், சுந்தரேசர் கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலிலே உள்ள நகைகள் திருட்டுப் போய்விட்டன. அதுபற்றி போலீசாரிடம் தெரிவித்து நகைகளைத் திரும்பப் பெற ஏற்பாடு செய்ய வேண்டும். ஊழியர்களிடம் மாதாமாதம் சம்பளத்தில் பிடித்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய சம்பளமே குறைவு. அந்த ஊழியர்களிடம் இருந்து நிச்சயமாக எடாக்கக் கூடாது என்பது என் கருத்து.

அதைப்போல தேவஸ்தானங்கள் இருக்கின்றன. அவர்கள் தங்கள் சொத்துக்களை ஏலம் போடுகிறார்கள். 20,000 ரூபாய்க்கு ஏலம் விட்டால் 1,000 ரூபாய்தான் கணக்கில் காட்டுகிறார்கள். 19,000 ரூபாயை எடுத்துக் கொள்கிறார்கள். பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை தேவஸ்தானத்தில் கொள்ளையடிக்கிறார்கள். அந்தப் பணம் கோயிலுக்கு வருவதில்லை; மக்களுக்குப் பயன்படுவதில்லை. அத்தகைய தேவஸ்தான நிலங்களை



1985 ஜூன் 13]

[திரு. மா. சுந்தரதாஸ்]

லீசுக்கு விடும்பொழுது நிச்சயமாக அரசு கண்காணித்து நல்ல வகையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேவஸ்தானத்திலே வேலை செய்பவர்களுக்குச் சம்பளம் மிகவும் குறைவாக இருக்கிறது. இதில் இத்தகைய கருத்துக்களைச் சொல்லிவிட்டு அடுத்த மானியக் கோரிக்கையான காட்டு வளம் பற்றிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் கன்னியாகுமரி மாவட்ட காட்டிலாக்கா மிகச் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் அந்த மாவட்டத்தில் இன்றைய நிலைமையில் காடுகள் குறைந்து கொண்டே வருவதால் மழைகூட போதுமான அளவிற்குப் பெய்யாத நிலையில் பாதிக்கப்பட்டிருக்கிறது. மேலும் கோனாவிலே இருக்கின்ற ஒருசிலரும், இங்கேயிருப்பவர்களும் எங்கேயோ சென்று பெரிய மரங்களையெல்லாம் வெட்டிச் செல்லுகிறார்கள். மருதாம்பாறை என்ற இடத்தில் உள்ள சுமார் 150-க்கும் மேற்பட்ட ஹெக்டேர் நிலப் பரப்பில் உள்ள ரப்பர் பிளான்டேஷனுக்கு ஒரேயொரு வாச்மேனைப் போட்டிருக்கிறார்கள். ஆனால் கோனாவிலிருந்து 100 ரௌடிகள் வந்து ரப்பர் மரங்களையும், ரப்பர் மரங்களிலிருந்து பாலையும் வெட்டிக் கொண்டு போகிறார்கள். இதைத் தடுப்பதற்கு நிச்சயமாக ஒரு வாச்மேன் போதாது. அங்கேயுள்ள சீஃப் கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்டிடம் கூட இதுபற்றிப் பேசப் பட்டிருக்கிறது.

செல்ல நாடார் என்பவர் சுமார் 50 ஏக்கர் நிலத்தை, காட்டிலாக்காவிற்குச் சொந்தம் என்று கூறப்படுகின்ற இடத்தை வைத்திருக்கிறார். உச்ச நீதிமன்றமும் அது தனியார் சொத்து என்று சொல்லி ஆணை பிறப்பித்திருக்கிறது. அந்த இடத்தில் 250 பேர் வீடு கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதை இந்த இலாக்கா பார்த்துக் கொண்டிருக்கிறது. நான் கேட்கிறேன். அது பாரஸ்ட் நிலமாகவே இருக்கட்டும், அல்லது தனியார் நிலமாகவே இருக்கட்டும், அங்கேயுள்ள பாரஸ்ட் அதிகாரி கிருஷ்ணன் நாயர் என்பவர், பாரஸ்ட் ரேஞ்சர் என்று நினைக்கிறேன், 250 வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அரசாங்க அதிகாரிகளே இப்படி வீடு கட்டிக் கொடுத்தால் பாரஸ்டுகள் இந்த நாட்டிலே இருக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்த வனத் துறை அதிகாரி, வனத் துறைப் பணியாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்திருக்கிறாரா அல்லது ஆக்கிரமிப்பாளர்கள் வீடுகள் கட்டிக் கொள்ள அனுமதித்தாரா அல்லது கட்டிக் கொடுத்தாரா? இதுபற்றிக் கொஞ்சம் விவரமாகச் சொன்னால் சரியாக இருக்கும்.

**திரு. மா. சுந்தரதாஸ்:** துணைத் தலைவரவர்களே, அந்த இடத்திலே ஊரிலே இருந்தவர்கள் 250 குடிசைகள் போட்டுக் கட்டி இருக்கிறார்கள். அதில் வனத் துறையைச் சார்ந்தவர்கள் வசிக்கவில்லை. அங்கே தங்குபவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள பல்வேறு ஏரியாக்களைச் சார்ந்த வசதி படைத்தவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிடுவதற்குப் பொறுத்துக் கொள்ள வேண்டும். காரணம், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசத் தொடங்கியதிலிருந்தே, பொதுவாக கொள்ளை அல்லது அங்கே மோசடி என்றெல்லாம் பேசிக் கொண்டே வருகிறார்கள். ஆகவே அவர்கள் விரும்புகின்ற சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்குமே தவிர அரசின் தரப்பிலே விளக்கம் பெறுவதற்கு வாய்ப்பாக அமையாது. இப்பொழுது சொல்லுகின்ற பிரச்னையில், தனியார் நிலமா, வனத் துறை நிலமா என்ற தகராறு ஏற்பட்டு, அரசு வனத் துறைக்குச் சொந்தமான நிலம் என்று சொல்கிறது; தனியார் சுப்ரீம் கோர்ட் வரை சென்று ஜெயித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஜெயித்துக் கொண்டு வந்திருப்பவர், தம்முடைய நிலம் என்று கருதப்படுகின்ற நிலத்தை வழக்குமன்றத்திலே போய் வெற்றி பெற்று வந்ததற்குப் பிறகு, அந்த நிலத்தைக் கையகப்படுத்த வேண்டிய பொறுப்பு அவருக்கு இருக்கிறது. பொதுவாகவே, கன்னியாகுமரி மாவட்டத்திலே ஆக்கிரமிப்பு என்பது சாதாரண அன்றாட நடைமுறை விவகாரமாக இருக்கிறது. ஆகவே, குடிசை போட்டுக் கொண்டு வீடு கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அதையும் வனத் துறை அதிகாரிகளையும் இணைத்து—முதலிலே வனத் துறை அதிகாரி கட்டிக் கொடுத்தார் என்று சொல்கிறார்.





[திரு. ஆர். எம். வீரப்பன்]

இப்பொழுது அதை மாற்றிக் கொண்டு அங்கே மற்றவர்கள் வந்து வீடு கட்டிக் கொண்டிருக்கிறார்கள், குடிசை போடுகின்றார்கள் என்கிறார்கள். நான் மாண்புமிகு உறுப்பினரை உங்கள் மூலமாக அன்பாகக் கேட்டுக் கொள்கிறேன், அரசு நடவடிக்கை எடுத்துத் தர வேண்டிய விவகாரங்கள் இருந்தால், கொஞ்சம் விவரமாக, தெளிவாகச் சொன்னால், அதிலே நடவடிக்கை எடுப்பதற்கு உதவியாக இருக்கும். பொதுவாக, ஒரு தனியாருக்காக ஒரு சட்ட மன்றத்தை நாம் பயன்படுத்திக் கொள்வது அவ்வளவு சரியாக இருக்காது.

(முற்பகல் 10-30)

**திரு. மா. சுந்தரதாஸ்:** துணைத் தலைவர் அவர்களே, நான் தனியார் ஒருவருக்காகச் சொல்லவில்லை. ஏனென்றால், இன்றையதினம் உச்ச நீதிமன்றம் நமது அரசாங்கத்திற்குச் சொந்தம் என்று சொல்லவில்லை, அதுதான் என்னுடைய பாயின்ட். நான் தனியாருக்காக வக்காலத்து வாங்கிப் பேசவில்லை. அரசு பணத்தில் உச்ச நீதிமன்றம் வரையில் வாதாடியிருக்கிறோம். 50 ஏக்கர் பாரஸ்ட் இலாகாவிற்குச் சொந்தமானது. அதைத் தனியார் ஒருவர் எடுத்ததற்காக, நமது நிலம் என்று அரசு பணத்தில் சுப்ரீம் கோர்ட் வரையில் சென்று வாதாடி இருக்கிறோம். வாதாடியதற்குப் பின்னால், தமிழக அரசுக்குச் சொந்தமான நிலம் அரசுக்குக் கிடைக்கவில்லையே என்பதுதான் என்னுடைய வருத்தமே தவிர, தனியாருக்காக வாதாடவில்லை. நம்முடைய நிலம் என்ற நிலையில் அதைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டாமா? அரசுக்குச் சொந்தமானது என்பதுதான் கேஸ். உச்ச நீதிமன்றம் எந்த விதத்திலும் தீர்ப்பு கொடுக்கட்டும், அது பிரச்னை அல்ல. இன்று நாம் எடுக்க முடியாத அளவிலே 250 வீடுகள் கட்டி இருக்கிறார்கள் என்று சொன்னேனே தவிர தனியாருக்காக வாதாடவில்லை. ஆகவே, அரசு, பாரஸ்ட் இலாகா, சரியாகக் கண்காணித்திருந்தால் அந்த நிலத்தை பாரஸ்டாக வைத்திருந்தால் நன்றாக இருக்கும் என்பது தான் என்னுடைய கருத்தே தவிர வேறொன்றும் இல்லை. அதே போன்று பல்வேறு இடங்களிலே தனியார் ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன என்றுதான் சொன்னேனே தவிர, அதிகாரிகளைக் குறை சொல்வதற்காக நான் சொல்லவில்லை.

[1985 ஜூன் 13

[திரு. மா. சுந்தரதாஸ்]

அடுத்து, தமிழ்நாடு டிம்பர் டிரான்சிட் ரூல்ஸ்ஸில் பார்ம் 2 பர்மிட் வாங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இதனால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஏனென்றால், தனிப்பட்ட மனிதன் தன்னுடைய பட்டா நிலத்திலே ரப்பர் பயிரிட்டால், அதை வேறிடத்திற்குக் கொண்டு போக வேண்டுமென்றால், வில்லேஜ் ஆபீசர், வி.எம். அனுமதி அளிக்க வேண்டும். 25 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்கள் கலெக்டரிடம் அனுமதி வாங்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. அதனால் மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஏனென்றால், தனிப்பட்ட மனிதனுக்கு ரப்பர் நட உரிமை இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் மூன்றில் ஒரு பங்கு ரப்பர் தோட்டங்கள் இருக்கின்றன. அந்த மரங்கள் 50 ஆண்டுகளுக்கு மேல் இருந்தால் அதனை முறித்து விட வேண்டும். 50 ஆண்டுகளாக அவன் தன் கையில் வைத்திருக்கிறான், அதில் பால் எடுத்திருக்கிறான். அதனை முறிப்பதற்கு அனுமதி வாங்க வேண்டும், பார்ம் 2-ல் வில்லேஜ் ஆபீசரிடம், வி.எம்.மிடம் அனுமதி வாங்க வேண்டும்; 25 ஏக்கருக்கு மேல் போனால் கலெக்டரிடம் போக வேண்டுமென்றால் கஷ்டம் இருக்கிறது. ரப்பர் மரம் நடுவதற்கு பாரஸ்ட் இலாகா அனுமதி வாங்க வேண்டும். இப்படி வாங்கிவிட்ட பிறகு அதை முறிப்பதற்கு, முறித்த பிறகு வேறிடத்திற்குக் கொண்டு போவதற்கு ஆணை கேட்கிறார்கள். அவர்கள் 6 மாதத்திற்குத்தான் ஆணை கொடுப்பார்கள். அதற்குள்ளே முறித்துக் கொண்டு போகவில்லையென்றால், இரண்டாவது ஆணை பெற வேண்டும். ஆகவே, பட்டா நிலங்களிலே இருக்கிற மரங்களை முறித்து வேறிடத்திற்குக் கொண்டு செல்ல வேண்டுமென்றால், பல்வித சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன. உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று ஒருசில முதலாளிகள் ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். நான் சொல்வது பார்ம் 2 தேவையில்லை; பட்டா நிலத்திலே இருக்கிற மரத்தை சொந்தக்காரன் எடுத்துச் செல்ல அரசினுடைய அனுமதி தேவை இல்லை. தேவை என்று சொல்வது அவனுடைய அடிப்படை உரிமையைப் பறிப்பதாக இருக்கின்றது. குறிப்பாக, ஷெட்யூல்ட் டிம்பருக்கு அனுமதி வேண்டுமென்று சொல்லட்டும். தேக்கு போன்ற ஷெட்யூல்ட் டிம்பர்களை விற்க இந்த பார்ம் 2 பர்மிட் தேவைதான்; அரசினுடைய வன இலாகா அவற்றைப் பாதுகாக்க வேண்டும். ஆனால் ரப்பர், ஷெட்யூல்ட்



1985 ஜூன் 13]

[திரு. மா. சுந்தரதாஸ்]

டிம்பர் அல்ல. அதேபோல் சில்வர் மரம் ஷெட்யூல்ட் டிம்பர் அல்ல. அத்தகைய நான்-ஷெட்யூல்ட் டிம்பர்களைக் கொண்டு போக சட்டத்திலிருந்து விதிவிலக்கு தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நோட்டிபைட் ஏரியா என்று சொல்கிறார்கள். 25 ஏக்கர்களுக்கு மேல் இருக்கிறது என்று சொன்னால். கலெக்டர் அனுமதி வாங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அத்தகைய சட்டங்களை ஷெட்யூல்ட் டிம்பர்களுக்குத்தான் உபயோகிக்க வேண்டும், நான்-ஷெட்யூல்ட் டிம்பர்களுக்கு நிச்சயமாக இந்தச் சட்டத்தை உபயோகப் படுத்தக் கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து.

அதைப்போன்று தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் கச்சா முந்திரி அதிகமாகக் கிடைக்கிறது. தமிழ் நாட்டில் இருக்கிற முந்திரித் தொழிற்சாலைகளுக்கு போதுமான கச்சா முந்திரி கிடைக்காததால் சுமார் 100 தொழிற்சாலைகளுக்கு மேல் மூடிக் கிடக்கின்றன. நம்முடைய வன இலாகாவிலிருந்து கிடைக்கிற கச்சா முந்திரியை அந்தத் தொழிற்சாலைகளுக்குக் கொடுத்தால் அவை செயல்பட ஏதுவாக இருக்கும். ஆனால் நம்முடைய வன இலாகாவிலிருந்து கிடைக்கிற கச்சா முந்திரியை கேரளத்திலுள்ளவர்கள் வாங்கிச் செல்கிறார்கள்; அவர்களுக்கு விற்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் உள்ள முந்திரித் தொழிற்சாலைகள் மூடிக் கிடக்கின்றன; அவர்கள் இங்கிருந்து முந்திரியை வாங்கிக் கொண்டு போய், நிறைய பணம் சம்பாதிக்கிறார்கள். ஆகையால் கச்சா முந்திரியை தமிழக அரசு நேரடியாகக் கொள்முதல் செய்து, தமிழ் நாட்டில் இருக்கிற தொழில் நிறுவனங்கள் மூலம் 'ஃபாக்டரி' களுக்குக் கொடுத்தால் மூடிக் கிடக்கிற அந்த ஆலைகளைத் திறந்து நடத்த வாய்ப்பு ஏற்படும். நூற்றுக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலையும் கிடைக்கும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று இன்றைக்கு வன இலாகாவில் இருக்கிற அதிகாரிகளுக்குப் பல சங்கடங்கள் இருக்கின்றன. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் பல பகுதிகளில் வேலை செய்வது கஷ்டமாக இருக்கிறது. ஏதாவது அங்கே ஒரு பிரச்சனை வந்தால் 'டவுன்' உடன் தொடர்பு கொள்ள வசதி இல்லை. சென்னை, மதுரையிலிருந்து வனத் துறை அதிகாரிகள் அங்கே இருக்கிற டி.எஃப்.ஓ.வுக்கு டெலிகிராம் கொடுத்தால் கூட

[திரு. மா. சுந்தரதாஸ்]

கிடைப்பதில்லை. அவர்களுக்கு மெசேஜ் போய்ச் சேருவதில்லை, அவர்கள் வெளியே தொடர்பு கொள்வதும் கஷ்டமாக இருக்கிறது. அதனால் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வனத் துறைக்கு ஒயர்லஸ் சிஸ்டம் நிச்சயமாகத் தேவைப் படுகிறது. வனத் துறைக்கு ஒயர்லஸ் சிஸ்டத்தைத் தனியாக அமைத்துக் கொடுத்தால்தான் சிறப்பாகச் செயல்பட முடியும் என்ற நிலை இருக்கிறது. அதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இரப்பர் பிளான்டேஷனைப் பொறுத்தவரையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற இரப்பர் தோட்டங் களில் ஒரு ரேஞ்சருக்கு 50 ஹெக்டேர் கொடுத்திருக்கிறார்கள். அந்த 50 ஹெக்டேர் பரப்பில் ஒருவர் சுற்றி வந்து, கண்காணிப்பது முடியாத காரியமாக இருக்கிறது. கேரளத்திலிருந்து நூற்றுக்கணக்கானவர்கள் வந்து ரப்பர் பாலைத் திருடிச் செல்கிறார்கள். தினமும் இப்படி திருட்டுத் தனமாக எடுத்துச் செல்கிறார்கள். ஒருவரால் அவர்களைக் கண்காணிக்க முடியவில்லை. மேலும் அவர்கள் பெரிய ரௌடிகளாக இருக்கிறார்கள். 100 பேர், 150 பேர் திடீரென்று வந்து ரப்பர் பாலை எடுத்துச் செல்வதால் ஒருவரால் அவர்களைத் தடுக்கவும் முடியவில்லை. நானே அவர்களைக் கேட்டபோது இந்த மலைப் பகுதியில் ஒருவர் சென்று கண்காணிப்பது கஷ்டமாக இருக்கிறது. முடியவில்லை, பரப்பளவைக் குறைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆகவே, அங்கே ஒரு காவல் நிலையத்தை ஏற்படுத்தி, அந்த ரௌடிகளைக் கண்காணிக்க வேண்டும்; அப்படியானால் தான் ரப்பர் பால் திருட்டுப் போகாமல் தடுக்க முடியும். காவல் நிலையத்தை ஏற்படுத்தவில்லை என்றால் நிச்சயமாக அரசுக்கு கிடைக்க வேண்டிய ரப்பர்பால் கிடைக்காது. அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று பெருஞ்சாணியில் இருக்கிற ரப்பர் ஃபாக்டரி செயல்படாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதைப் பார்த்திருக்கிறார்கள். ஃபாக்டரி செயல்படாததால் அங்கே இதுவரை ரப்பர் உற்பத்தியாகவில்லை. அதற்குப் பதிலாக தனியாருக்கு ரப்பர் பாலைக் கொடுத்து விடுகிறார்கள். ரப்பர் பாலைக் கொடுத்து விடுவதால் 250-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள்.





[திரு. மா. சுந்தரதாஸ்]

உடனடியாக அங்கே ஸ்மோக் ஹவுஸ் கட்டி, ரப்பர் பாளம் உற்பத்திச் செய்யப்பட்டால் அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும், நல்ல இலாபம் கிடைக்கும். பச்சைப் பாலைக் கொடுப்பதால் 10 ரூபாய்தான் கிடைக்கிறது, அதை ரப்பர் பாளமாக்கிக் கொடுத்தால் 20 ரூபாய் கிடைக்கும். அந்த ஃபாக்டரி பழுதடைந்து மூன்று ஆண்டுகளான பின்னாலும் சீர் செய்யப்படவில்லை. அந்தப் பணியை விரைவிலே நிறைவேற்றி, வேலை இல்லாமல் இருக்கிற 250-க்கு மேற்பட்ட தொழிலாளர் களுக்கு வேலை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று இரப்பர் தோட்டம் அரசாங்கத்தின் பொறுப்பில் இருந்தால் ஊழியர்களுக்கு போனஸ் கிடைக்காது என்பதால், அதை கார்ப்பரேஷன் ஆக்கினார்கள். அதற்குப் பின்னால் 'கிராஜுவட்டி' பிரச்சனை வந்திருக்கிறது. 15 நாள் சம்பளம் கிராஜுவட்டியாகக் கொடுக்க வேண்டும். ஆனால் அரசு கார்ப்பரேஷனில் 7 நாள் சம்பளம் மட்டுமே கிராஜுவட்டியாகக் கொடுக்கப்படுகிறது. அதன் காரணமாகத் தனியார்களுக்கு நிறைய இலாபம் வந்தும், அவர்களும் 15 நாள் சம்பளத்தை கிராஜுவட்டியாகக் கொடுக்க மறுக்கிறார்கள். முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் இந்தப் பிரச்சனை பெரிய பிரச்சனையாக இருக்கிறது. ஆகையால் அரசு கார்ப்பரேஷனில் வேலை செய்கிறவர்களுக்கு 15 நாள் சம்பளத்தை கிராஜுவட்டியாகக் கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று ரப்பர் பால் எடுப்பதை ஒரு 'சீசனல் ஒர்க்' என்கிறார்கள். நிச்சயமாக அப்படி இல்லை. 240 நாள் வேலை செய்தால் தொழிலாளர் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்று விதி இருக்கிறது. ஆனால் 500 நாள் வேலை செய்த பின்னால் கூட நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். 240 நாள் வேலை செய்தாலே நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்று விதி இருந்தும் மைலம், கல்லார் ரப்பர் தோட்டங்களில் வேலை செய்கிறவர்கள் 500 நாட்களுக்கு மேல் வேலை செய்தும் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள்; அதிகாரிகள் அவர்களை நிரந்தரம் செய்யவில்லை. அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. மா. சுந்தரதாஸ்]

மேலும், அங்கே இருக்கிற தொழிலாளர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். தொழிலாளர்களுடைய குழந்தைகள் பாடசாலைக்குச் செல்ல வேண்டுமென்றால் 15 கிலோமீட்டர், 20 கிலோமீட்டர் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. ஸ்டாஃப் அவர்களுடைய குழந்தைகள் போவதற்கு வண்டி இருக்கிறது. ஆனால் தொழிலாளர்களுக்கு அந்த வசதி இல்லை. அந்த இடத்திலே பள்ளிகள் கட்டிக் கொடுத்தால் அந்தத் தொழிலாளர் களுடைய குழந்தைகள் அங்கே படிப்பார்கள்.

(முற்பகல் 10-40)

அங்கே கல்லார், மைலம் போன்ற இடங்களில் பள்ளிக்கூடம் இல்லை. ஸ்டாஃப் குழந்தைகளைப் பொறுத்தவரையில் குலசேகரத்திற்கு பஸ்ஸில் வருகிறார்கள். அவ்வாறு ஏழைக் குழந்தைகள் பஸ்ஸில் செல்ல முடியாத சூழ்நிலை இருக்கின்றது. பள்ளிக்குச் சென்றுவிட்டால் எல்லாக் குழந்தைகளும் ஒன்று என்று சொன்னாலும் பஸ்ஸில் செல்வதைப் பொறுத்தவரையில் தொழிலாளர்களின் குழந்தைகள் ஏற்றப்படாத நிலைமை இருப்பதன் காரணத்தால் அந்தக் குழந்தைகள் 7 வயது, 8 வயது ஆனாலும் கூட பள்ளிக்குச் செல்ல முடியாத சூழ்நிலையிலே இருக்கிறார்கள். அவ்வாறு அவர்கள் அவதிப்படுகின்ற நிலைமை இருக்கின்றது. எனவே அந்தத் தொழிலாளர்களுக்கென்று தனியாக பஸ் கொடுக்க வேண்டும். இல்லை என்றால் வேறு ஏதாவது ஒரு வழி செய்து அந்தத் தொழிலாளர்களின் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். அதற்கு நிச்சயமாக ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

*திரு. சி. சுப்புராயர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுவதற்கு முன் என் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும், என் கம்பம் தொகுதி வாக்காளப் பெரு மக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு உரையைத் தொடங்குகிறேன்.





[திரு. சி. சுப்புராயர்]

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசில் சுற்றுலாத் துறை, இந்தியா மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளால் கவரப்பட்டு மிகவும் நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டு வருகின்றது. இதற்கு இரண்டு முக்கியமான காரணங்களை மட்டும் இங்கு நான் கூற விரும்புகிறேன். முதலாவதாக தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கு நல்ல முறையில் இயங்கிக் கொண்டு வருகிறது. வெளியே இருந்து வருகின்ற சுற்றுலா பயணிகளுக்கு எந்தவிதமான திருட்டுப் பயமும் கிடையாது. அவர்களுக்கு ஆங்காங்கே ஏற்படும் பலதரப்பட்ட பிரச்சினைகளை காவல் துறையினரும், போக்குவரத்துத் துறையினரும் உடனுக்குடன் தீர்த்து விடுகிறார்கள். எனவே சுற்றுலா வரும் பயணிகள் நிம்மதியாகத் தங்கிவிட்டு நல்ல முறையில் தங்கள் பயணங்களை முடித்து விட்டுத் திரும்பு கிறார்கள்.

அண்டை மாநிலங்களான கேரளா, மற்றும் கர்நாடகாவில் நான் பல சுற்றுலா மையங்களுக்குச் சென்றுள்ளேன். ஆனால் அங்கே ஒருசில இடங்களைத் தவிர மற்ற மையங்களில் தங்குவதற்கு வசதியோ, நல்ல முறையில் உணவு அருந்த விடுதிகளோ இருப்பதில்லை. எனவே அங்கு சுற்றுலாப் பயணிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆனால் நமது தமிழ் நாட்டில் உள்ள அனைத்து சுற்றுலா மையங்களிலும் நமது தமிழக அரசின் சுற்றுலாத் துறையினர் தங்குவதற்கு மிகவும் நவீன முறையில் சுற்றுலா விடுதிகளையும், உணவு அருந்துவதற்கு விடுதிகளையும் கட்டி உள்ளார்கள். இது சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும்.

மேல்நாடுகளில் நெடுஞ்சாலையில் மோட்டல்கள் எனப்படும் பெருவழி விடுதிகள் அமைத்து உள்ளார்கள். அதற்கேற்ப நமது தமிழ் நாட்டில் ராணிப்பேட்டை, உளுந்தூர்பேட்டை மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மூன்று ஊர்களிலும் நெடுஞ்சாலைகளை ஒட்டி மூன்று பெருவழி விடுதிகள் சிறந்த முறையில் செயல்பட்டு வருகின்றன. நெடுஞ்சாலையில் நீண்ட தூரம் செல்லும் சுற்றுலாப் பயணிகள் இந்தப் பெருவழி விடுதிகளில் தங்கி சிறிது ஓய்வு எடுத்து உணவருந்திச் செல்வதன் மூலம் பயணக் களைப்பும் குறையும். மேலும் விபத்துகளும் குறையும். தற்சமயம் இயங்கி வரும் பெருவழி விடுதிகளைப்

[1985 ஜூன் 13

[திரு. சி. சுப்புராயர்]

போல தொடர்ந்து வரும் ஆண்டில் திருத்தணி, தேனி, காரைக்குடி, நாகப்பட்டினம், தூத்துக்குடி மற்றும் பாளையங்கோட்டை ஆகிய ஊர்களில் அரசு பெருவழி ஓய்வு விடுதிகள் ஏற்படுத்த முன்வந்துள்ளது அரசின் சாதனையாகும். அதனை நான் மனமார வரவேற்கிறேன்.

நமது அரசுப் பேருந்துகள் அனைத்து சுற்றுலா மையங்களுக்கும் செல்கின்றன. மேலும் திருவிழா போன்ற விசேஷ நாட்களில் சுற்றுலாப் பயணிகளின் நன்மையைக் கருதி ஏராளமான பேருந்துகள் விடுவதால் நமது தமிழகத்திற்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள்.

எனது தொகுதியில் சுருளி நீர்வீழ்ச்சி என்ற இடம் உள்ளது. இயற்கையான வனத்தின் நடுவே அந்த நீர்வீழ்ச்சி அமைந்துள்ளது. இந்த அருவியில் வருடத்திற்கு 300 நாட்களுக்கு மேலாகவே தண்ணீர் விழுந்து கொண்டிருக்கும். இங்கே ஏராளமான சுற்றுலாப் பயணிகள் இந்த நீர்வீழ்ச்சிக்காக வருகிறார்கள்.

மதுரை மாவட்டத்தில் தற்போது கொடைக்கானல் ஒரு சிறந்த மலைவாசஸ்தலமும் சுற்றுலா மையமும் ஆகும். செப்டம்பர் 15 ஆம் தேதிக்குப் பின்னால் அண்ணா மாவட்டத்திற்கு கொடைக்கானல் சென்றுவிடுவதால் மதுரை மாவட்டத்திற்கு மலைவாஸஸ்தலமும், சுற்றுலா மையமும் கிடையாது. எனது தொகுதியில் மேகமலை என்ற ஹைவேவ்ஸ் எனப்படும் மலைப்பகுதி உள்ளது. தேயிலைத் தோட்டங்களுக்கு நடுவே அமைந்துள்ள இந்த மலைப் பகுதி ஒரு சிறந்த மலைவாசஸ்தலமாகும். எனவே மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் சுருளி நீர்வீழ்ச்சியையும், மேகமலை என்ற ஹைவேவ்ஸ் ஆகிய இரு இடங்களையும் சுற்றுலா மையமாக ஆக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதிக்கு அருகில் கேரள மாநிலத்தில் தேக்கடி என்ற சுற்றுலா மையமும் வனவிலங்குகள் பாதுகாப்பு இடமும் உள்ளது. எனது தொகுதியின் எல்லையில் குமுளி என்ற இடம் தமிழகத்தின் எல்லையிலேயே உள்ளது. தேக்கடி செல்பவர்களுக்கு சரியான விடுதி வசதி இல்லை. மேலும் கேரள மாநிலத்தில் தேக்கடியில், விடுதிகளில் நமது தமிழ் நாட்டில்



1985 ஜூன் 13]

[திரு. சி. சுப்புராயர்]

கிடைப்பது போல் சரியான உணவு கிடைப்பதில்லை. எனவே, குமுளி என்ற இடத்தில் அரசு சுற்றுலாத் துறையின் மூலமாக ஒரு தங்கும் விடுதியையும் உணவு விடுதியையும் அமைப்பதற்கு நமது அரசு முன்வர வேண்டும் என்று மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சமூக நலக் காடுகள் திட்டத்தின் கீழ் நமது அரசின் வனத் துறையினர் ஏராளமான புரட்சிகளை ஏற்படுத்தி உள்ளார்கள். புறம்போக்கு மற்றும் தரிசு இடங்களில் மாக்கன்றுகளை நட்டு அவைகளை சிறந்த முறையில் பாதுகாத்துக் கொண்டு வருகிறார்கள். இதனால் இன்னும் சில ஆண்டுகளில் எங்கு பார்த்தாலும் நமது தமிழகத்தில் நல்ல பசுமை தென்படும். ஆனால் மரங்கள் நன்கு வளர்ந்து விட்ட நிலையில் அவைகளை வெட்டி கட்டைகளாக கடத்திச் செல்வதற்கு சந்தர்ப்பங்கள் ஏராளமாக உள்ளன. எனவே அவற்றைப் பாதுகாப்பதற்கு அரசு தகுந்த முன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மலைவாழ் மக்களுக்கு விவசாயத்திற்காக நிலங்கள் இனாமாக அளிப்பது ஒரு சிறந்த திட்டமாகும். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத இந்தத் திட்டத்தை தமிழக அரசுதான் கொண்டு வந்துள்ளது. இது நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களின் சாதனையாகும். இதன் காரணமாக மலைவாழ் மக்கள் சட்டத்திற்குப் புறம்பான எந்தத் தொழிலிலும் ஈடுபடாமல், விவசாயத்தைப் பெருக்கி நாட்டில் உணவு உற்பத்தியை அதிகரிப்பதோடு, தாமும் வளமாக வாழ்வார்கள்.

சென்னை மூர் மார்க்கெட் அருகிலும், சென்டிரல் நிலையத்திற்குப் பக்கத்திலும் இயங்கிக் கொண்டிருந்த மிருகக் காட்சிசாலையை வண்டலூர் அருகில் ஒரு சிறந்த விசாலமான காற்றோட்டம் உள்ள இடத்தில் அமைத்திருப்பது வரவேற்கத் தக்கதாகும். எனது தொகுதியில் உள்ள மேகமலை எனப்படும் மலைப் பகுதியில் ஒரு வனவிலங்கு சரணாலயம் அமைப்பதற்கு அரசு முன்வந்திருப்பதற்காக என் நன்றியையும், என் தொகுதி மக்களின் சார்பாக அவர்களின் நன்றியையும் இந்த அரசுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. சி. சுப்புராயர்]

எனது தொகுதியில் குமுளி எனப்படும் மலைப் பகுதி உள்ளது. அதைச் சுற்றிலும் வனத் துறைக்குச் சொந்தமான மரங்கள் ஏராளமாக உள்ளன. தேக்கு, சந்தனம் போன்ற விலை மதிப்புள்ள மரங்கள் நிறைய உள்ளன. தமிழக-கேரள மாநில எல்லையில் இந்த மரங்கள் உள்ளதால், சில சமூக விரோத சக்திகள் இந்த விலை உயர்ந்த மரங்களை வெட்டி கேரள மாநிலத்திற்கு எடுத்துச் செல்கிறார்கள். எனவே குமுளியில் வனத் துறையின் மூலமாக ஒரு சோதனைச் சாவடி (செக் போஸ்ட்) அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல கேரள—தமிழக எல்லை ஓரத்தில் நமது தமிழகத்து ஏழை விவசாயிகள் பலர் கடந்த 20 வருடங்களாக தரிசாக இருந்த நிலத்தை கையகப்படுத்திக் கொண்டு, அதைப் பண்படுத்தி, மிளகு, ஏலம் போன்ற பொருள்களை விவசாயம் செய்து கொண்டு வருகிறார்கள். அங்கே மேலும் தென்னை, மா, பலா போன்ற மரங்களையும் வைத்து வளர்த்து பலன் பெற்று வருகிறார்கள். அவர்கள் சட்டத்திற்குப் புறம்பாக எந்தவித காரியங்களையும் செய்வதில்லை. எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பெயரைக் கொண்டு எம்.ஜி.ஆர். தோட்டம் என்ற பெயரை அந்த இடத்திற்கு வைத்துக் கொண்டு அவர்கள் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மிக நல்ல முறையில் விவசாயம் செய்து வருவதால், மலைப் பகுதியில் மண் அரிப்பு ஏற்படுவதையும் தடுத்து, அரசுக்கே உதவியாக இருந்து வருகிறார்கள். அப்படிப்பட்ட ஏழை விவசாயிகளுக்கு வனத் துறையைச் சார்ந்த சில அதிகாரிகள் தொந்தரவுகள் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வரை என்றென்றைக்கும் தங்களுடைய இதய தெய்வமாக வழிபடும் அந்த எம்.ஜி.ஆர். தோட்டம் சிறு விவசாயிகளுக்கு அந்த நிலங்களையே பட்டா செய்து கொடுத்து அவர்கள் வாழ வழிவகை செய்து கொடுக்குமாறு மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எனது தொகுதியில் உத்தமபாளையம், இராமசாமி நாயக்கன்பட்டி ஆகிய இரண்டு ஊர்களுக்கும் இடையே தாமரைக்குளம் என்ற பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான கண்மாய் உள்ளது. அந்தக் கண்மாயில் கோடைக் காலங்களில்





[திரு. சி. சுப்புராயர்]

தண்ணீர் இருக்காது. அந்தக் காலங்களில் சுமார் 200-க்கும் மேற்பட்ட ஏழை விவசாயிகளின் குடும்பங்கள் கடந்த 50 வருடங்களாக வெள்ளரிப் பயிரை விவசாயம் செய்து வருகிறார்கள். அவர்கள் சட்டத்திற்குப் புறம்பாக எந்தவித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை. அவர்களின் விவசாயம் இரண்டு மாதங்களில் முடிந்துவிடும். கண்மாய்களில் தண்ணீர் வர ஆரம்பித்தவுடன் அவர்கள் அந்த இடத்தை காலி செய்து விடுவார்கள். அந்த ஏழை விவசாயிகளின் நன்மையை கருதி தாமரைக்குளம் கண்மாயில் சமூக நலக் காடுகள் திட்டத்தின் கீழ் மரங்களை வளர்க்கும் திட்டத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நமது தமிழ் நாட்டில் ஏராளமான விலை மதிப்புள்ள தெய்வச் சிலைகள் உள்ளன. சில சமூக விரோத சக்திகளால் அவை திருடப்பட்டு, வெளிநாட்டிற்கு கடத்திச் செல்லப்பட்டு, நல்ல விலைக்கு விற்கப்படுகின்றன. எனவே விலை மதிப்புள்ள அந்த தெய்வீக திருவுருவச் சிலைகளைப் பாதுகாப்பதற்காக அரசு எடுத்துக் கொண்ட முயற்சிக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, எனது தொகுதியில் தமிழக—கேரள எல்லையில் வரலாறு புகழ்ப் பெற்ற கண்ணகி கோயில் உள்ளது. சித்திரை மாதம் பௌர்ணமி தினத்தன்றும், மற்றும் விசேஷமான காலங்களிலும் தமிழகத்தில் இருந்து ஏராளமான யாத்ரிகர்கள் கண்ணகி கோயிலுக்குச் சென்று வழிபடுகிறார்கள். ஆனால் கண்ணகி கோயிலுக்குச் செல்ல வேண்டுமென்றால் கேரள மாநிலத்திற்குள் சென்று கேரள மாநில வனத் துறையினரிடம் அனுமதி பெற்றுத்தான் செல்ல முடியும். நாம் நினைத்த நேரத்தில் அங்கு செல்ல முடியாது. திடீர் என்று அதிகாரிகளோ, அமைச்சர்களோ, சட்டமன்ற உறுப்பினர்களோ செல்ல வேண்டும் என்று நினைத்தாலும் கூட, கேரள வனத் துறையினர் அனுமதி கொடுத்தால்தான் செல்ல முடியும். இல்லையென்றால் முடியாது. எனவே அங்கு செல்வதே பெரிய பிரச்னையாக இருக்கிறது. எனவே தமிழகத்தின் எல்லையில் உள்ள பழியங்குடி என்ற இடத்திலிருந்து சாலை அமைத்து கண்ணகி கோயில் வரை புதியதாக பாதை போட்டால் அங்கு போய் வர நமக்கு வழி ஏற்படும்.

[1985 ஜூன் 13

[திரு. சி. சுப்புராயர்]

எனவே நமது தமிழக மக்கள் கண்ணகி கோயிலுக்கு சென்று வழிபடும் வகையில் வசதியாக இந்தப் பாதையை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று நமது அரசைக் கேட்டுக் கொள்வதோடு, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். லோயர் கேம்ப் குமுளி மலைச் சாலையில் அடிக்கடி விபத்துகள் நடைபெறுகின்றன. எனவே அந்தச் சாலையில் வழிவிடு முருகா என்னும் கோயிலை அமைக்க எண்ணியுள்ளார்கள். ஏற்கனவே அங்கே ஒரு மசூதியும், கிறிஸ்துவ தேவாலயமும் இருக்கின்றன. மூன்று கோயில்களும் அங்கே இருந்தால் அங்கே விபத்துகள் குறையுமென்ற நம்பிக்கை மக்களுக்கு இருக்கிறது. ஆகவே அந்தச் சாலையில் முருகன் கோவிலை அமைக்க வனத் துறை அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

(முற்பகல் 10-50)

*** திரு. சோ. மா. இராமச்சந்திரன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த மானியக் கோரிக்கையை பொறுத்தவரையில் குறிப்புகள் எனக்கு இந்த நேரம் வரையில் கிடைக்காத நிலையில் நான் உங்கள் முன்பு கருத்துக்களைச் சொல்ல முனைந்துள்ளேன். சென்ற தொடரிலே பேசப்பட்ட குறிப்புகளை மட்டும் வைத்துக் கொண்டு நான் இந்த மானியக் கோரிக்கையில் கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று எண்ணுகிறேன்.

சென்ற மானியக் கோரிக்கையின்போது அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில் நம்முடைய ஆளும் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் செம்மலை அவர்கள் ஒரு கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதேபோல மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவஞானம் அவர்களும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். கோவில் நிலங்கள் அனைத்தையும் அரசே எடுத்துக் கொண்டு, யார் நிலத்தில் பயிர் செய்து கொண்டிருக் கிறார்களோ அவர்களுக்கே விற்றுவிட்டு அரசாங்கம் தொகையை தவணை முறையில் பெற்றுக் கொள்ளலாம் என்றும், கோவில் நிலத்திற்கு அந்தத் தொகைக்கு ஈடாக அரசு கடன் பத்திரங்களை வழங்கலாம் என்றும், அப்படிச் செய்வதால் நிலம்



1985 ஜூன் 13]

[திரு. சோ. மா. இராமச்சந்திரன்]

உழுகிறவர்களுக்குச் சொந்தமாகிவிடும் என்றும் தவணை முறையில் வசூல் செய்கிற பணத்தை கோயில்களுக்கு நிரந்தரமாக பிக்சட் டெபாசிட்டில் போட்டால், அதில் கிடைக்கிற வருமானத்தைக் கொண்டு கோவில்கள் நிர்வாகத்தை கவனித்துக் கொள்ள இயலும் என்றும், மாண்புமிகு உறுப்பினர் செம்மலை அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தச் சமயத்தில் மாண்புமிகு உத்திராபதி அவர்களும் அந்தக் கருத்தை வலியுறுத்தி இருக்கிறார்கள். அடுத்து, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நெடுமாறன் அவர்களும் அதனை வலியுறுத்தி இருக்கிறார்கள். நானும் அதை வலியுறுத்தி, அதிலே ஒரு கருத்தை அரசு குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள், தலைவர் அவர்களின் அனுமதி யுடன் அதை படிக்க விரும்புகிறேன். 'திருக்கோவில்களுக்குச் சொந்தமான அதிக விலை மதிப்புள்ள காலி நிலங்கள் சென்னை போன்ற மாநகரங்களில் குறைந்த குத்தகைக்கு 99 வருடங்களுக்கு விடப்பட்டுள்ளன. இது காலப்போக்கில் திருக்கோவில்களின் நலன்களுக்கு இடையூறாக இருக்கின்றன. உதாரணமாக சென்னையில் அருள்மிகு கபாலீச்சுவரர் திருக்கோவில், அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோவில், அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோவில் போன்ற திருக்கோவில்களுக்குச் சொந்தமான 290 மனைகள் முதலில் 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டு, இன்றைக்கு அவர்களால் உள்குத்தகைக்கு பல்வேறு நபர்களுக்கு விடப்பட்டுள்ளன. உள்குத்தகைதாரர்கள் அந்த மனைகளில் நிலையான கட்டிடங்களைக் கட்டிக் கொண்டு இருந்து வருகிறார்கள். நிர்ணயிக்கப்பட்ட குத்தகைத் தொகையும் மிகவும் குறைவாக உள்ளது.

பயிலையில் லஸ் சர்ச் சாலையில் 14 மனைகள் உள்ள இடத்திற்கு மாத வாடகை ரூ. 53.25 என்றும், பெரியார் ஈ.வெ.ரா. சாலையின் அருகில் டெய்லர்ஸ் சாலையில் 46 மனைகளுக்கு வருட வாடகை 46.14 ரூபாய் என்று உள்ளது. அவ்வாறுள்ள சில முக்கியமான நிலங்களின் பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்னையில் மிக முக்கியமான இடங்களான லஸ் சர்ச் சாலை, திருவல்லிக்கேணி, பூந்தமல்லி சாலை ஆகிய பகுதிகளில் இவ்வளவு குறைவாக வாடகை இருப்பது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. அதனால் திருக்கோவில்களுக்கு அதிகமாக இழப்பு ஏற்படுகிறது. ஆகவே திருக்கோவில்களின் நிலங்களை நீண்டகால குத்தகைக்கு, விடுவது நல்லதல்ல. இன்றைய 99 ஆண்டு காலத்திற்கு

[1985 ஜூன் 13

[திரு. சோ. மா. இராமச்சந்திரன்]

நிலைமையில் பல ஆண்டுகளுக்கு முன்னால் நிர்ணயிக்கப்பட்ட தொகை மிகவும் சொற்ப குத்தகையாக இருக்கிறது. கோவில் சொத்துக்கள் மைனர் சொத்துக்களைப் போல் ஒரு குழுவினால் தொடர்ந்து நிர்வகிக்கப்பட்டு வருகிறது. ஆனால் தனிப்பட்ட மைனர் ஒருவருடைய சொத்து, அந்த நபர் மேஜர் ஆனதும் அவர் நிர்வாகத்திற்குப் போகும். ஆனால் கோயில் சொத்துக்கள் எப்போதும் பிறர் பொறுப்பில்தான் இருக்க வேண்டிய நிலையில் உள்ளது. எனவே குத்தகை நிலங்களை மீட்கவோ அல்லது தகுந்த அளவில் குத்தகை வருமானத்தைப் பெருக்கவோ, அல்லது தற்போது அந்த நிலங்களை உபயோகித்துக் கொண்டு இருப்பவர்களுக்கு நல்ல விலைக்கு விற்கவோ, இப்போது சட்டம் இயற்றுவது பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டு வருகிறது என்று அன்றைய குறிப்பிலே இருக்கிறது. இந்தக் குறிப்பை நான் வேறு ஒரு சட்டமன்ற உறுப்பினரிடமிருந்து கேட்டுப் பெற்றேன். இதே சட்டத்தை வலியுறுத்துவதாகத்தான் இதிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது நான் உங்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த விவசாயத்தைப் பொறுத்த வரையிலும், அந்த 75 : 25 குத்தகை என்ற அந்த விதத்தின் அடிப்படையில் அன்றிலிருந்து இன்று வரையில் குத்தகை பாக்கி ஏராளமாக இருக்கின்ற காரணத்தால் மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். குறிப்பாக, புயலாலும் சில சமயங்களில் வெள்ளத்தாலும் அவர்கள் அந்தக் குத்தகையைக் கட்டாமல் விடுவதும், அதனால், அன்றைய தினமே, எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த தோழர்கள் மூன்னுதாரணமாக அவர்களுக்கே சொந்தமாக்கிக் கொடுக்க வேண்டும் என்றும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் உட்பட இந்த மன்றத்திலே சொல்லியிருப்பதை நான் உங்கள் மூலமாக வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்து, அறங்காவலர்களைப் பற்றி எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். ஊழல் அது இது என்றெல்லாம் சொன்னார்கள். நான் இந்த அளவிலே சொல்ல வரவில்லை. அறங்காவலர்களாக சிலரைப் போடும்போது கொஞ்சம் கவனித்துச் செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில்



1985 ஜூன் 13]

[திரு. சோ. மா. இராமச்சந்திரன்]

ஏகாம்பரேசுவரர் ஆலயம் ஒன்று இருக்கிறது. அதிலே அறங்காவலராக போட்டு இருப்பவர், அதிலே அங்கம் வகிக்கக் கூடிய ஒருவர், அதே பகுதியில் உள்ள காவல் துறையால் தயாரிக்கப்பட்ட ரௌடி லிஸ்டிலேயும் இருக்கிறார். எனவே இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். ஏன் என்றால் இன்றைய தினம் இந்து பத்திரிகையில் பார்க்கின்ற போது, அவர்கள் 11 அதிகாரிகள் பேரில் நடவடிக்கை எடுத்து இருப்பதாக நான் பார்த்தேன். அதைப் பார்த்தபோது, இதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கையின் காரணமாக நான் இதைச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, காட்டு இலாக்காவைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். காட்டு இலாக்காவிலே இன்றைய தினம் இந்த மரங்கள் வெட்டுவதன் காரணமாக 10, 11 அதிகாரிகள் சஸ்பெண்ட் செய்யப்பட்டு இருப்பதாக கேள்விப்பட்டேன். ஒரு சிலர் காட்டு இலாக்கா அதிகாரிகளோடு சேர்ந்து கொண்டு, 1 மைல் சுற்றளவுக்கு தீயை வைத்து விட்டு, உள்ளே புகுந்து மரங்களை வெட்டுவதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. தீயை வைத்து விட்டால் உள்ளே யாரும் போக முடியாத காரணத்தால், இப்படிப்பட்ட வேலைகளைச் செய்வதாக சொல்கிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் உடனடியாக இதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தவிர, கோயில் நிலங்களைப் பொறுத்தவரையில் மைலாப்பூரில் உள்ள கபாலீசுவரர் கோயில் பற்றி குறிப்பாக தினமலர் பத்திரிகையிலே வந்திருக்கிறது. அந்தக் கோயிலைச் சுற்றி அசுத்தம் செய்வதைத் தடுக்க வேண்டும் என்பதற்காக, இரும்பு தகடால் அடிக்கப்பட்ட வேலிகள் அமைக்கப்பட்டு இருந்தது. அந்த வேலிகளைக் கூட உடைத்துவிட்டு, அங்கே மறுபடியும் அசுத்தம் செய்வதைக் கூட நம்முடைய அறநிலையத் துறையால் தடுக்க முடியவில்லை என்பதை நான் மிகவும் வேதனையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[1985 ஜூன் 13

[திரு. சோ. மா. இராமச்சந்திரன்]

அதுவும் தவிர, இந்தக் குறிப்பில் பார்க்கிறபோது எட்டு லட்சம் அர்ச்சகர்களுக்கு பாக்கி என்று இதிலே ஒரு குறிப்பு சொல்கிறது. நான் மிகவும் வேதனையோடு சொல்கிறேன். எங்களுக்கு கடவுள் நம்பிக்கை இல்லை என்று சொன்னாலும் சரி, இருக்கிறது என்று ஒத்துக் கொண்டாலும் சரி நான் குறிப்பிடுவது, மனிதத் தன்மையோடு எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அர்ச்சகர்களுக்கு மிகவும் குறைந்த வருமானமே வந்து கொண்டிருக்கிறது இதை யாரும் மறுக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். இந்த அர்ச்சகர்கள் கோயில்களுக்கு வருகின்ற பணக்காரர்களைப் பார்த்து திருப்திப்பட்டுக் கொண்டு இருக்கிறார்களே தவிர—அவர்கள் வருமானத்தை பெருக்குகின்ற அளவுக்கு இந்த அரசு இல்லை என்று நான் இந்த நேரத்தில் குற்றச்சாட்டாகச் சொல்ல விரும்புகிறேன். அவர்களுக்கு ஒரு சம்பளக் குழுவை அதிலே பணி புரிகின்ற அத்தனை தொழிலாளர்களையும் இணைத்து விரும்புகிறேன். அவர்களுக்கு ஒரு சம்பளக் குழுவை, அதிலே போட வேண்டும். அந்தச் சம்பளக் குழு போடும்போது நீங்கள் சட்ட மன்ற உறுப்பினர்களையும் மேலவை உறுப்பினர்களையும் அந்தக் குழுவில் இணைத்து போட. வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

அதேபோல் நம்முடைய செய்தித் துறையைப் பற்றி ஒரு கேள்வியை மட்டும் நான் எழுப்பலாம் என்று நினைக்கிறேன். நமது துணை ஜனாதிபதி அவர்கள் நெய்வேலிக்கு அண்மையில் வந்தபோது அங்கே பத்திரிகையாளர்களை. எஸ்.பி. அவர்கள் கொம்பால் தாக்கி, அவர்களைப் பிடித்துத் தள்ளியதை எல்லாம் செய்தித்தாள் மூலம் பார்த்து இருக்கிறோம். இருந்தாலும் பத்திரிகை நிருபர்கள் எல்லாம் அமைச்சரைப் பார்த்து கேட்டபோது அதற்கு நடவடிக்கையெடுத்து ஆவன செய்வதாகச் சொன்னார்கள். ஆனால் அதற்குப் பிறகு என்ன ஆனது என்று இதுநாள் வரை தெரியவில்லை என்பதை கூறி, இப்போது அதை விளக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அதுவும் தவிர சினிமாவைப் பொறுத்தவரை செய்தித் துறை அவர் கையில் இருப்பது மிகவும் நன்று. ஏன் என்றால்



1985 ஜூன் 13]

[திரு. சோ. மா. இராமச்சந்திரன்]

சினிமாத் துறை இன்றைய தினம் எப்படி இருக்கிறது என்பது அவருக்கு புரியாதது அல்ல. அந்தச் சினிமாத் துறை என்பது அரசுக்கு பணம் வருவாய் தரும் துறை என்பதை மறுக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். அந்தத் துறை இன்றைய தினம் எப்படி இருக்கிறது என்றால், மிகவும் நலிந்து கொண்டே வந்து கொண்டு இருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள் என்று நான் கருதுகிறேன்.

இன்றைய தினம் கிராமப் பகுதியில் தற்காலிக கொட்டகைகளை எல்லாம் அமைத்துக் கொண்டு, கிராமம் கிராமமாக ஒவ்வொரு சினிமாக் கொட்டகைக்கும் 5 பேர் 6 பேர் என்று விவசாயிகள் சேர்ந்து அதிலே கூட்டாக இருந்து அவர்கள் பெரும் நஷ்டத்தை அடைவதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். அதிலே குறிப்பாக செய்திப் படங்களை வெளியிடுகின்ற நேரத்தில் அந்தச் செய்திச் சுருளுக்கு அங்கே வருகின்ற வருமானம் மிகவும் குறைவாக இருக்கிறது. ஒரு கீத்து கொட்டகையில் நடத்துகின்ற ஒரு சினிமா கொட்டகைக்கு அந்தச் செய்திச் சுருள் அனுப்புவது என்றால் வாரம் 60 ரூபாய் கட்டினால் தான் அவர்கள் செய்திச் சுருளை அனுப்புகிறார்கள். அதன் மேல் வரியை அமைச்சர் அவர்கள் நீக்க வேண்டும். இது பெரும் தொல்லையாக இருக்கிறது. அந்தச் சினிமா கொட்டகைகளின் மூலம் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டாலும் இந்த 60 ரூபாய் கட்டுவது என்பது பெரிய சிரமமாக இருக்கிறது என்பதை நம்முடைய சினிமா சங்கத் தலைவர் திரு. டி. ஆர். அவர்கள் கூட மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துச் சொன்னதாகவும் நான் பத்திரிகையின் வாயிலாக பார்த்து இருக்கிறேன். அந்தச் செய்திச் சுருளுக்கு பணம் இல்லாமல் செய்ய வேண்டும். இது விஷயமாக மத்திய அரசை கேட்டு இதைச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் வலியுறுத்த கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல் இந்த காம்பவுண்டிங் டாக்ஸ் பற்றி சொல்லி இருக்கிறீர்கள். அதைப் பற்றி சொல்லுகிற நேரத்தில் அங்கே எவ்வளவு பாதிப்பு ஏற்படுகிறது என்று நீங்கள் அதிலே அனுபவ பூர்வமாக பார்க்கலாம் என்று கருதுகிறேன். அது உங்களுக்குத்

[திரு. சோ. மா. இராமச்சந்திரன்]

தெரிந்து இருக்கும் என்றும் கருதுகிறேன். ஆனால் காம்பவுண்டிங் எப்படி எல்லாம் அங்கே அந்த சீட்டுகளை அமைத்துச் செய்கிறார்கள் என்று விளக்கம் எல்லாம் இதிலே இருந்தது. அதைச் செய்வதற்கு காரணம் என்ன என்றால், அங்கே காம்பவுண்டிங் டாக்ஸ் என்று சொல்லுகிற நேரத்தில் 17 சதவீதம் நீங்கள் விதிக்கிறீர்கள். இந்தக் காம்பவுண்டிங் டாக்ஸை விதிக்கின்ற நேரத்தில் அவர்கள் தினமும் வசூல் இல்லாமல் மாலை 6 மணிக்கு 'வாங்க மச்சான் வாங்க' என்ற ரிக்கார்ட்டைப் போட்டு அதைப் பார்த்துக் கொண்டு அங்கே இருக்கிற முதலாளிகள் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமைகளைப் பார்க்கின்றபோது, அவர்களுக்கு காம்பவுண்டிங் டாக்ஸ் 17 சதவீதம் என்பது அதிகமாகத் தெரிகிறது.

இந்த அரசாங்கத்திலே சென்ற முறை சீட்டுகளை வேண்டுமானால் குறைத்துக் கொள்ளலாம் என்று ஒரு விதியை தளர்த்தியதன் காரணமாக, அதனாலாவது காம்பவுண்டிங் டாக்ஸ் குறையும் என்று கருதி சீட்டுகளைக் குறைத்து விட்டார்கள். அந்தச் சீட்டுகளை குறைத்துவிட்ட காரணத்தால் இன்றைய தினம், முதல் நாள் ஒரு படம்—எம்.ஜி.ஆர். படம் என்றே வைத்துக் கொண்டாலும்—அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் அத்தனை பேரும் ஒட்டுமொத்தமாக அங்கே வந்து விடுகிறார்கள். அவர்கள் அப்படி வருகின்ற நேரத்தில், சீட்டுகள் இல்லாத காரணத்தால் வந்தவர்களைப் போ என்று சொன்னால் மறுநாள் வரமாட்டார்கள் என்ற கருத்திலே அவர்கள் 10, 12 பேர்களை அங்கே தனியான சேர்கள் வைத்துக் கொண்டு, போட்டு உட்கார விடுகிறார்கள் என்று கருதுகிறேன். மறுநாள், 3-வது நாள், 4-வது நாள் பாதி ஜனங்கள் கூட இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே தான் நான் ஒன்றை இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது காம்பவுண்டிங் டாக்ஸ் என்று சொல்கிற அந்த முறையில் நீங்கள் 10 சதவீதம் குறைத்து விட்டால் அதே வருமானம்தான் உங்களுக்கு வரும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். காம்பவுண்டிங் டாக்ஸ் 17 சதவீதத்தை 10 சதவீதமாகக் குறைத்து விட்டால் அதே வருமானம் தான் உங்களுக்கு வரும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். காம்பவுண்டிங்



[திரு. சோ. மா. இராமச்சந்திரன்]

டாக்ஸ் கொடுத்துவிடுவார்கள். அதனால் எந்தச் சிரமமும் இல்லாமல் நம்முடைய அரசாங்கத்திற்கும் வருமானம் குறையாமல் இருக்கும், என்று இந்த நேரத்தில் எடுத்து வைத்து, இதை எல்லாம் நீங்கள் உடனடியாகச் செய்து முடிப்பீர்கள் என்ற ஒரு நல்ல நம்பிக்கையோடு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

* **திரு. க. சோலைராசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கையை வரவேற்று ஒரு சில கருத்துக்களைக் கூறிட விழைகிறேன். தமிழ் நாட்டினுடைய புகழையும் பெருமையையும் கூட்டுகிற வகையிலேயும், தமிழருடைய கலாச்சாரம், பண்பாடு, நாகரிகத்தினுடைய சின்னமாக இன்றைக்கு திருக்கோயில்கள் விளங்கி வருகின்றன. பண்டைத் தமிழருடைய தொழில் நுட்பத் திறனுக்கும், தெய்வ வழிபாட்டிற்கும் எடுத்துக்காட்டாய், உலகளாவிய கீர்த்தி மிக்க திருக்கோயில்களினுடைய பழமையையும், பெருமையையும் காக்கக்கூடிய வகையில் செயல்படுகின்ற தமிழக அரசையும், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரையும் வாழ்த்துவதற்கு வளமான வார்த்தைகள் கிடைக்கவில்லை.

இன்றைக்கு தமிழகத்திலே ஆயிரக்கணக்கான திருக்கோயில்கள், லட்சக்கணக்கான மதிப்புள்ள நிலங்களையும் கட்டிடங்களையும் பெற்றுள்ளன. அத்திருக்கோயில்கள் தன்னை நாடுபவர்களுக்கு நிலையான செல்வத்தையும், நிரந்தரமான இன்பத்தையும் தரும் என்று மக்கள் நம்பினாலும் கூட, அந்த மக்கள் நம்புகிற அந்த மகேசனுக்கு ஒரு வேளை பூஜை போட, ஒரு வேளை விளக்கேற்றக் கூட வழி இல்லாத, வகையில்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இந்த அவல நிலையைப் போக்க 7 கோடி ரூபாய் திட்டத்திலே மூலதனம் குறையாத வகையிலே, அதனுடைய வட்டியிலிருந்து கோயில்களிலே ஒரு வேளை விளக்கு எரிவதற்கும், பூசை நடத்தவும், பழுதான கோயில்களை செம்மைப்படுத்தவும், சீர்படுத்தவும், அர்ச்சகர்கள், ஓதுவார்கள், நாதஸ்வர வித்வான்கள் போன்றவர்களுக்கு உதவுகிற வகையில் நல்ல முயற்சியை எடுத்து இருக்கிற இந்தத் துறையை நாட்டிலுள்ள நல்லவர்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

1985 ஜூன் 13]

[திரு. க. சோலைராசு]

திருக்கோயில்கள் தெய்வ வழிபாட்டிற்கு மட்டுமின்றி, மக்களுடைய சமூக, பொருளாதார, கலை, கல்வி, கலாசாரத்தை பூர்த்தி செய்யவும், வளர்க்கவும் உதவக் கூடிய வகையில் இருக்க வேண்டும் என்ற சீரிய சிறப்பான திட்டத்தின் அடிப்படையில் செயலாற்றி வருகின்றன. அதனுடைய அடிப்படையில் சமுதாய பள்ளத்தாக்கில் நலிந்த பிரிவினராக இருக்கிற அந்த வறுமைப் பூங்காவிலே பிறந்து இருக்கிற வசந்த மலர்கள் கல்யாணச் சந்தையிலே விலை போக முடியாமல் இருக்கின்ற அந்த வேதனையிலே வெம்பித் திரிகிற சகோதர-சகோதரிகளுக்கு திருமணம் செய்து வைக்க வேண்டும் என்ற அறநிலையத் துறையினுடைய முடிவு, 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற வாக்கியத்தை நடைமுறைப்படுத்தி இருக்கிறது. திருக்கோயில் நிதியிலிருந்து 8 கோடியே, 40 இலட்சத்து 899 ரூபாய் செலவில் இன்றைக்கு 1092 திருமணங்களை நடத்தி வைத்திருக்கிறது. ஒவ்வொரு வருடமும் வருகிறபோது தன்னுடைய பிள்ளைகளுக்கு ஒரு வயது ஏறுகிறது என்று ஏக்கப் பெருமூச்சு விடுகிற பெற்றோர்களுடைய கண்ணீரைத் துடைக்கிற, இத்திட்டம் எதிரிலே இருப்பவர்களின் நெஞ்சத்திலே நிற்கும், நிலைக்கும், வாழ்த்துவார்கள் என்று நான் நம்புகிறேன். தொண்டுள்ளத்தோடு, துயர் துடைக்க வேண்டுமென்று நடைபெறுகின்ற இத்தூய பணி தொடர்ந்து நடைபெற வேண்டும்; அதிக அளவில் திருமணங்கள் நடாத்தி வைக்கப்பட வேண்டும் என்று நாங்கள் ஆசைப்படுகிறோம்.

(முற்பகல் 11-10)

துன்பப்படுகின்ற, துயரப்படுகின்ற ஆதி திராவிட மக்கள் கடினமாக உழைப்பதற்கும், ஓட்டுப் போடுவதற்கு பிறந்த பாவ ஜென்மங்கள், அவர்களைப் பார்த்தால் பாவம், தொட்டால் தீட்டு என்ற காலம் போய், புரட்சித் தலைவரினுடைய புனித ஆட்சி தோன்றிய பிறகு அவர்களுடைய வாழ்க்கையில் பலனும் பயனும் பெறத்தக்க வகையில் பல்வேறு திட்டங்களை இந்த அரசு முனைப்போடு தீட்டி வருகிறது. ஆதி திராவிடர் என்னும் வறுமைப் பூங்காவிலே மலர்ந்த அழகிய பெண் மலரைத் திருமணம் செய்வதாலும், அவர்களைச் சம்பந்தி என அழைப்பதாலும் மட்டுமே, அவர்களது வாழ்க்கைக்கு வழியும்,



1985 ஜூன் 13]

[திரு. க. சோலைராசு]

சமுதாயத்தில் உயர்வும் கிடைத்துவிடாது என்பதை இன்றைய அரசு உணர்ந்திருக்கிறது. அப்பாவி மக்கள் சிலரை ஏமாற்ற திட்டமிட்ட சிலர், ஆதி திராவிடரைத் தங்களுடைய சம்பந்தியாக ஆக்கிக் கொண்டது, ஆதாயம் தேடும் சுயநலவாதிக்குப் பயன்படுமே தவிர அந்தப் பாட்டாளிக்குப் பயன் தராது. ஆனால் இன்றைய புரட்சித் தலைவரவர்களின் அரசு, ஆக்கபூர்வமான யோசனைகளைச் செய்து, அடிப்படை உண்மைகளைப் புரிந்து கொண்டு, இந்தத் துறையைப் பொறுத்த அளவிலே நடத்தியிருக்கிற திருமணங்களிலே ஆதி திராவிடர்களுக்கு மட்டும் 754 திருமணங்களை நடத்தியுள்ளது. ஆதி திராவிடர் அறங்காவலராக இருந்தால் மட்டும் போதாது, வேதங்கள் தெரிந்த விற்பன்னராகவும் வர வேண்டும் என்பதற்காக ஜாதி பாகுபாடற்ற முறையில் ஆகம பயிற்சிப் பள்ளியில் அவர்களைச் சேர்த்திடும் நல்ல முயற்சியையும், சமபந்தி போஜனத்தையும் இன்றைய அரசு நடத்தி வருகிறது. அது போன்ற முயற்சிகளை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அதோடு அமைக்கப்பட்டுள்ள 29 அனாதைச் சிறுவர்களுக்கான அன்பு இல்லங்களையும், உடல் ஊனமுற்றோருக்குப் பள்ளியையும், நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, கல்லூரிகளையும், முதியோர் இல்லத்தையும், தொன்மையான நாதஸ்வரம், தவில் பயிற்சிப் பள்ளியையும், தெய்வத் திருமறையாம் தேவார பாடசாலைகளையும், திருமண மண்டபங்களையும் எண்ணிப் பார்த்து எங்கள் உள்ளம் பூரிக்கிறது.

சமுதாயம் வளர பல்வேறு வகையிலே உதவி வருகின்ற இச்செயல்கள் தொடர வேண்டுமென்றுச் சொன்னால், திருக்கோயிலினுடைய வருமானம் உயர வேண்டும். கோவிலினுடைய நிலங்களை வைத்துக் கொண்டு வசதியாக வாழ்பவர்கள் உரிய குத்தகையை கட்ட மறுப்பதினால் குறைகிறது. எனவே, அந்தக் குத்தகை உரிமைதாரர்களுக்குக் கோயில் நிலங்களுக்கு மட்டும் விதிவிலக்கு அளிக்கக்கூடிய சிறப்பான திட்டத்தைப் புரட்சிகாமான சூழ்நிலையிலே கொண்டு வந்திருக்கிறது என்பதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிலர் சொல்லலாம், உழைப்பவர்கள் மட்டுமே சமுதாயத்தின் அங்கம் என்று. அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், இந்த அறநிலையத் துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற

[திரு. க. சோலைராசு]

இலட்சக்கணக்கான பணியாளர்களும், இந்த அறநிலையத் துறையின் மூலமாகத் திருமணம் செய்து கொண்டவர்களும், அந்தப் பள்ளிகளிலே படித்துக் கொண்டிருக்கின்ற இலட்சக் கணக்கான மாணவர்களும், சமுதாயத்தின் அங்கம்தான் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். இப்படிப்பட்ட சமுதாயத்தின் பணிகளைச் செய்து, அவர்களுடைய வாழ்க்கையில் வசந்தம் வருகின்ற வகையில் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது. அதற்கு வருமானம் வர வேண்டுமென்ற வகையிலே கோயில் நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்பதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருமடங்களின் நிர்வாகத்தைக் கண்காணிக்கின்ற, புலனாய்வு செய்கின்ற வகையில் துணை ஆணையர் செயல்பட்டு வருவதாக இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. எனக்கு உள்ள வருத்தமெல்லாம், நாட்டிலுள்ள கபட வேடதாரியை, காமுகனை — அறநெறியைப் பரப்ப மேடையிலே தோன்றுவதை விடுத்து — மேடையிலே கத்தியும், துப்பாக்கியும் காட்டிக் கொண்டும், ஆலய நகைகளை திருடி உருக்கி ஆசை நாயகிக்கு ஆபரணங்கள் தயாரிக்கும் அற்பனை, பழமையான, புராதன கட்டிடங்களை இடித்து காசாக்குகின்ற கயவனுடைய முகத் திரையைக் கிழித்தெறிய வேண்டும். இத்துறையினர் வேகத்தோடு செயல்பட்டு வேதனைப்படும் பக்தர்களின் மனக் குறையைத் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கோயில் கொள்ளையடிக்கிற கூடாரம் ஆகிவிடக் கூடாது என்கிற உயரிய நோக்கோடு இத்துறை செயல்படுகிறது. என்றாலும் பரம்பரை அறங்காவலர் என்கிற பெயரிலுள்ளவர்கள் செய்கின்ற அட்டூழியங்களையும், அடிக்கின்ற கொள்கைகளையும் தடுத்து நிறுத்த வேண்டும். அத்தகைய பரம்பரை அறங்காவலர் பொறுப்புள்ள அத்தனை கோவில்களிலும் அவர்களோடு இணைந்து பணியாற்றுகின்ற வகையில் உள்ளூரில் இருக்கின்ற செல்வாக்கு படைத்தவர்களை, தரமானவர்களை ஏற்பாடு செய்தால் நல்ல முறையில் இருக்கும். அவ்வாறு செய்ய வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை மாண்புமிகு அமைச்சரவர்களிடத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.





[திரு. க. சோலைராசு]

ஆதி திராவிட சமுதாயத்தினர் சலவைத் தொழிலாளி ஆகிய மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அறநிலையத் துறை பாடுபட்டு வருகிறது

இந்த நேரத்தில் ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேற்கு வங்கத்திலே கம்யூனிஸ்ட் அரசு, யாத்திரிகர்களுக்குக் கூட வரி போடுகின்ற அவல நிலையுள்ளது. யாத்திரிகர்களுக்கு வரி போட்டாலும் பரவாயில்லை; அந்த எல்லையிலே நுழைகின்ற வியாபாரிக்கும், தொழிலாளிக்கும் வரி போட்டுக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கெல்லாம் போட்டால்கூடப் பரவாயில்லை. ஐயோ பாவம், 5 காசு போடுங்கள், 10 காசு போடுங்கள் என்று வாழ வழியில்லாது வயிற்றுப் பிழைப்புக்காக பிச்சை போடுங்கள் என கையேந்தி வருகிற பிச்சைக்காரர் களுக்கும் வரி போடுவதாகச் செய்தித்தாள்களில் செய்தி வந்திருக்கிற சூழ்நிலையில், தமிழக அரசு பக்தர்களுடைய உள்ளம் பூரிக்கும் வகையில், பக்தர்களுடைய கோரிக்கையை ஏற்று, சிறப்பாகப் பணியாற்றுவதை நான் உள்ளபடியே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபொழுது மேற்கு வங்காள அரசு பிச்சைக்காரர்களுக்கு வரி போட்டிருக்கிறது என்று பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது என்று சொன்னார். இப்படி ஒரு செய்தியைக் கொடுப்பது எப்படி சரியாக இருக்கும்? வேறு ஒரு அரசைப் பற்றி பத்திரிகைச் செய்தியை ஆதாரமாகக் காட்டி குறைசொல்லக் கூடாது. அவருக்குத் தனி ஆதாரம் இருந்தால் சொல்ல வேண்டும். இப்படிச் சொல்வது எப்படிச் சரியாக இருக்கும்? நீங்கள்தான் அதைப் பார்த்துச் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பத்திரிகைச் செய்தியை எப்படி ஆதாரமாக எடுக்க முடியும்? அரசே அறிவித்தது என்று ஒரு செய்தியோ, அல்லது அரசே காபினட்டில் டிசைட் செய்ததாக ஒரு செய்தியோ பத்திரிகையில் வந்ததா என்பதை உறுப்பினர் சொல்ல வேண்டும்.

**திரு. க. சோலைராசு:** இன்றைக்குச் சட்ட மன்றத்திலே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள், பேச்சுக்கள், மாலையிலே பத்திரிகைகளிலே வருகின்றன. அந்த அடிப்படையிலே அங்கே பத்திரிகைகளிலே வருகின்றன. அந்த அடிப்படையிலே அங்கே சட்ட மன்றக் கூட்டத்திலே பேசப்பட்ட செய்தியாக, அங்கே சட்ட மன்றக் கூட்டத்திலே

பேசப்பட்ட செய்தியாக வந்திருக்கிறது. இன்றைக்கு நானும்
மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களும் விவாதம்
செய்வது, பத்திரிகையிலே வந்தால், மக்கள் அதை நம்புகிறார்கள்.
அதனுடைய அடிப்படையிலே, மேற்கு வங்காள சட்ட மன்றச்
செய்தி பத்திரிகையிலே வந்திருக்கிறது, அந்த அடிப்படையிலே
சொல்கிறேன்.

**திரு. கு. ரமணி :** சட்ட மன்றப் பேச்சுக்கள், பத்திரிகையிலே
வரக்கூடிய நேரத்தில், அவை அத்தனையும் பரிபூரணமான ட்ரூ
ரிப்போர்ட் என்று சொல்லக்கூடிய அளவிலே, வெளியிலே
பப்ளிஷ் பண்ணக்கூடிய பல பத்திரிகைச் செய்திகள் இல்லை.
அதனால்தான் பத்திரிகைச் செய்திகளை ஆதாரமாகக் கொண்டு
மட்டும் பேசக்கூடாது என்று இந்த அவையிலே நீங்களும் நமது
மாண்புமிகு தலைவர் அவர்களும் பல தடவை எடுத்துச் சொல்லி
இருக்கிறீர்கள். அரசாங்கத்தினுடைய அறிவிப்பு இருக்கிறது.
சட்டம் இருக்கிறது என்று ஆதாரத்தோடு சொல்லட்டும்.
பிச்சைக்காரர்களுக்கு வரி போடுகிறார்கள் என்று சட்டம்
இருக்கிறதா? இருக்கிறது என்றால் சொல்லட்டும். இல்லை
யென்றால், இப்படிச் சொல்வது நியாயம் அல்ல. ஒரு சகோதர
அரசாங்கத்தைப்பற்றி இப்படிப்பட்ட விவாதம் சரியாக
இருக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதைத் தாங்களே
பார்த்து முடிவு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினரிடம
ஆதாரம் இருந்தால் கொடுக்க வேண்டும்.

**திரு. க. சோலைராசு :** பத்திரிகையில் வருவது அத்தனையும்
பொய் என்கிற வாதத்தை நான் மறுக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அது உண்மையா,
பொய்யா என்பதல்ல இப்பொழுது விவாதத்தில் இருப்பது.
அரசாங்கம் அறிவித்து உள்ளதா? அல்லது காபினெட்டிப்
டிசைட் செய்தார்களா? அப்படி பத்திரிகையில் வந்துள்ளதா
என்று சொன்னால் எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. க. சோலைராசு :** பத்திரிகையிலே அரசினுடைய
செய்தியாக வந்திருக்கிறது. அதற்கு நான் பொறுப்பேற்றுக்
கொள்கிறேன். அந்தப் ப்ரொசீடிங்சைத் தருவதற்கு நான்
தயாராக இருக்கிறேன் என்று கூறிக் கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பத்திரிகையிலே
வந்த பேச்சை வைத்து பேசக் கூடாது. இப்படி வரி
போடுகிறார்கள் என்று நிரூபிக்கும் பொறுப்பை எடுத்துக்
கொள்ள வேண்டும். அங்கே போடுகிறார்கள் என்பதற்கு
உறுப்பினர் பொறுப்பேற்க வேண்டும்.

**திரு. க. சோலைராசு :** நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு ரமணி அவர்கள்
திரு. சோலைராசு கிளப்பிய பிரச்னையைப் பற்றி
சொல்கிறார்கள். பெரும்பாலான உறுப்பினர்கள் பத்திரிகை
வாயிலாகக் கிடைக்கிற செய்தியை வைத்துதான் இங்கே எழுப்ப
வாய்ப்பு இருக்கிறது. அவ்வப்போது ஐ கோட் 'இந்தியன்
எக்ஸ்பிரஸ்' என்றுதான் சொல்லப்படுகிறது. ஆகவே, ஒவ்வொரு
செய்திக்கும் அந்த, அந்த அரசாங்கத்திலேயிருந்து நேரடியாக,
அதிகாரபூர்வமாக தகவலை பெற்றுத்தான் பேச வேண்டுமென்ற
நிலை இருக்கிறதா? இனிமேல், அந்த நிலையை இந்தச் சபை
கடைபிடிக்க வேண்டுமென்று கருதுகிறீர்களா என்று அறிய
விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அது அந்தச்
செய்தியினுடைய விவரத்தைப் பொறுத்தது. இப்படி அரசாங்கம்
அறிவித்திருக்கிறது, அல்லது அரசினுடைய காபினெட்
டெசிஷன் எடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், அதை
ஆதன்டிக்காக நம்பலாம். அதைத் தான் மாண்புமிகு உறுப்பினர்
அவர்களைக் கேட்டேன். பத்திரிகைச் செய்தியை வைத்து
பேசக் கூடாது என்றால் நிறைய பேசவே முடியாது.

**திரு. கு. ரமணி :** பத்திரிகைச் செய்தியை வைத்து
யாவற்றையும் பேசுவது, பத்திரிகைச் செய்தியை பரிபூரணமாகக்
கணக்கில் எடுக்கக் கூடாது என்ற இரண்டு முறையும் கூடாது.
ஆதன்டிக்காக இருக்கிறதா இல்லையா என்பதைத் தெரிவித்து,
அரசாங்கத்தினுடைய அறிக்கையாக கோட் பண்ணலாம்.
அரசாங்கத்தினுடைய 'காபினட் டிசிஷனை' கோட் பண்ணலாம்.
அரசாங்கம் இப்படிச் சட்டம் போட்டு நிறைவேற்றுகிறது
என்றால் கோட் பண்ணலாம். இப்படி வரக்கூடியவைகளை கோட்
பண்ணுவதில் தப்பு இல்லை.

[1985 ஜூன் 13

(முற்பகல் 11-20)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நம்முடைய மாநிலத்தில் மின்சாரக் கட்டணம் 50 பைசா என்று பத்திரிகையில் ஒரு செய்தி வருகிறது. மற்ற மாநிலங்களிலுள்ளவர்கள் இதை கோட் பண்ணுவார்கள். அதைப் போன்று கேபினட் டெசிஷன் பத்திரிகையில் வருகிறது. அதை கோட் பண்ணுவார்கள்.

திரு கு. ரமணி: மின்சாரக் கட்டணம் என்பதைப் பொறுத்த மட்டில் அமைச்சரால் அறிவிக்கப்பட்டது. அது பத்திரிகையில் வருகிறது. அதைச் சொல்லலாம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சொல்வது அப்படிப்பட்டதல்ல. பிச்சைக்காரர்களுக்கு வரி போட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்.

**திரு. க. சோலைராசு:** துணைத் தலைவரவர்களே, நான் சொல்வது முழுக்க முழுக்க நாட்டிலுள்ள அத்தனை பிச்சைக்காரர்களையும் அல்ல. ஒரு குறிப்பிட்ட கோவிலுக்கு வருகிற யாத்திரிகர்களுக்கும் பிச்சைக்காரர்களுக்கும் என்று சொல்கிறேன். அதை நிரூபிக்க நான் தயாராக இருக்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு ஆதி திராவிட சமுதாயத்திலிருந்தும், சலவைத் தொழிலாளி, மீன்பிடிப்போர், அரசு நிலையிலிருந்து ஒருவர் என்றும் 63 நாயன்மார்களை, தொண்டர்களைப் பற்றி பெரியபுராணம் பாடியவரும், தொண்டு செய்கிறவனை நோக்கி தெய்வம் வரும் என்றும், தமிழுக்காக தமிழ்ச் சமுதாயத்திற்காக உழைத்த முதலமைச்சர் தமிழவேள் என்றும், பச்சைத் தமிழன் என்றும் சொல்லிக் கொள்ளாத முதலமைச்சர், தெய்வப் புலவர் சேக்கிழார் அவர்களால் கட்டப்பட்ட குன்றத்தூர் ஆலயத்திற்குச் செல்வது தடுக்கப்பட்டு தேரடியில் நின்றார். அத்தகைய சூழ்நிலையை மாற்றி, 62 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நாட்டின் நாயகர், விண்ணும் மண்ணும் நீயே என போற்றுகிற முகத்தான் தலைவர் புரட்சித் தலைவரின் ஆட்சியிலே அவருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. தமிழுக்காக வாழ்ந்த அந்தச் சான்றோருடைய சேவையை நினைத்துப் பார்த்திருக்கிற அறநிலையத் துறையினுடைய அமைச்சர் அவர்களின் நல் இதயத்தை வாழ்த்துகிறேன்; பாராட்டுகிறேன்.



1985 ஜூன் 13]

[திரு. க. சோலைராசு]

அடுத்து, வனத் துறை, செய்தித் துறை பற்றி ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஆளுகிற இயக்கம் என்றால் சந்தன மரத்தை வெட்ட வேண்டும், கடத்த வேண்டும் என்ற நியதியை மாற்றி, மரம் பெருகினால்தான் மழை பெருகும் என்ற சிந்தனையோடு, இருக்கிற மரங்களைக் காப்பதோடு சமுதாய நலக் காடுகள் திட்டத்தின் மூலம் பல இலட்சக் கணக்கான மரங்கள் இன்று வைக்கப்பட்டுள்ளன. பண்டைய காலம் தொட்டு தமிழகம் சிறப்பான சுற்றுலா மையம் என்ற பேற்றினைப் பெறத்தக்க வகையிலே தொன்மை வாய்ந்த சிறப்பு மிக்க இடங்களைப் பெற்றுள்ளது. மாமல்லபுரம், இராமேஸ்வரம், கன்னியாகுமரி, உதகமண்டலம், முதுமலை, கொடைக்கானல், குற்றாலம் போன்ற அழகும் போற்றத்தக்க பெருமையும் கொண்டிருக்கிற இந்த நகரங்களை உள்ளடக்கிக் கொண்டு உள்ளது.

இந்திய அளவில் தமிழகத்திற்கு ஆர்வத்தோடு சுற்றுலாப் பயணிகள் வந்தாலும் கூட வெளிநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. இன்னும் அவர்களைக் கவரக் கூடிய வகையில் குறைவான செலவில் நிறைவான வசதிகளைத் தருகிற பணி மேலும் அதிகரிக்கப்பட வேண்டும். பழமையின் பெருமையும் தொழில் நுட்பத் திறனையும் கொண்ட திருக்கோயில்கள் பற்றியும், மனதைக் கவரக்கூடிய எழில்மிக்க பகுதிகள் பற்றியும் விளக்கமாகத் தெரிவிக்கின்ற திரைப்படம் ஒன்றை எடுத்து, அயல் நாடுகளிலும் திரையிட்டுக் காட்டி, வெளிநாட்டு யாத்திரிகர்களை அதிகமாக இழுக்கும் ஒரு நடவடிக்கையை நம்முடைய அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போன்று செய்தி-திரைப்படத் தொழிலில் சேவை செய்த செம்மல்களுக்கு சிறப்பு சேர்க்கும் வகையில் தந்தை பெரியார், இந்நாட்டு இங்கர்சால், தென்னாட்டு பெர்னாட்ஷா என்று போற்றப்படுகின்ற பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர், மூதறிஞர் இராஜாஜி, இன்றைக்கு மகாராஷ்டிரத்தில் பிறந்த அம்பேத்கார் பெயரில் மாவட்டம் வேண்டுமென்று அரசியல் இலாபம் நடத்திக் கொண்டிருந்தாலும் கூட தமிழ் மக்களுடைய பெருமையைக் காக்கும் தியாகத் தீபமாக இருக்கிற தில்லையாடி வள்ளியம்மை, கப்பலோட்டிய தமிழன் போன்ற

[1985 ஜூன் 13

[திரு. க. சோலைராசு]

அனைவருக்கும் நினைவாலயங்களை ஏற்படுத்தியும் மற்ற பெரியோர்களுக்கு பிறந்த நாள் விழாவினை சிறப்பாக நடத்தியும் வருகிறது தமிழக அரசு என்பதைப் பார்க்கிறபோது எப்படிப் பாராட்டுவது என்று தெரியாமல் வியப்படைகிறேன்.

திருச்சி மாவட்டத்தில் இருக்கிற தியாகராஜ கலை அரங்கம் போல் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் கலை அரங்கங்களை அரசாங்கம் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று சிறந்த திரைப்படங்களுக்கும், நடிக நடிகைகளுக்கும் தொழில் நுட்பக் கலைஞர்களுக்கும் பரிசுகள் வழங்குவது பாராட்டத்தக்கது. மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சி வந்த பிறகுதான் திரை அரங்குகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. மா. இராமச்சந்திரன் அவர்கள் திரை அரங்குகளுக்கு 'காம்பவுண்டிங் டாக்ஸ்' போட்டிருப்பதால் அந்தத் தொழிலை நடத்த முடியவில்லை என்று பத்திரிகையில் வந்திருக்கிற ஒரு செய்தியை எடுத்துக் காட்டிச் சொன்னார்கள். நானும் ஒரு பத்திரிகைச் செய்தியை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். காம்பவுண்டிங் டாக்ஸ் போட்டதினால் அதிகமான தியேட்டர்கள் கட்டப் பட்டிருக்கின்றன, திரைப்படங்கள் நிறைய வெளியிடப் பட்டிருக்கின்றன என்று ஒரு செய்தியும் பத்திரிகையில் வந்திருக்கிறது என்பதை அவர்களுக்கு பதிலாகக் கூற விரும்புகிறேன்.

இன்னொரு முக்கியமான கருத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். செய்திப் படங்கள், திரைப் படங்கள் ஆகியவற்றில் நடிக்கின்ற நடிகர்களுக்கு நாம் பரிசு வழங்குகிறோம். அதைப்போன்று இயல், இசை, நாடகக் கலைஞர்களையும் ஆதரிக்க வேண்டும். திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை, மதுரை, நெல்லை முதலிய மாவட்டங்களில் அதிகப்படியான ரசிகர்களைக் கொண்டிருக்கிற இந்த இயல், இசை நாடகக் கலைஞர்கள் வாழ்க்கையிலே மிகவும் அவல நிலைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள்.



1985 ஜூன் 13]

[திரு. க. சோலைராசு]

இன்றையதினம் அவர்கள் அரசாங்கத்திற்குக் கோரிக்கை வைக்கவில்லை என்றாலும் கூட இன்றைக்கு அவர்கள் மிகவும் துன்பகரமான சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். சிறப்பான பேச்சாற்றலும், அதிக சுதியில் பாடக்கூடிய குரல் வளமும் உடையவர்கள் அந்த நாடகக் கலைஞர்கள். அவர்கள் கோயில் திருவிழாக்களில் நாடகமாடிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு நாட்டிலே வீடியோ கேசட் வந்ததன் காரணத்தால் திரைப்படத் துறையும், தியேட்டர்களும் பாதிக்கப்பட்டது போன்று, திறந்த வெளியில் திரைப்படம் காட்டப்படுவதன் காரணத்தால் நாடகக் கலைஞர்கள் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. அப்படி அவர்களுக்கு மட்டுமல்ல, பக்கத்திலிருக்கிற திரையரங்கு உரிமையாளர்களும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திருவிழாக் காலங்களில் திறந்த வெளியில் திரைப் படங்கள் காட்டப்படுவதை அறவே நீக்க வேண்டும். அதைத் தடை செய்ய வேண்டும். நலிந்து கொண்டிருக்கின்ற நாடகக் கலைஞர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். மதுரை, மணப்பாறை, புதுக்கோட்டை, திண்டுக்கல் ஆகிய நகரங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நலிந்த நாடகக் கலைஞர்கள் முறையான வகையில் சங்கம் வைத்து சிறப்பாகப் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு அரசு கடன் உதவி அளித்தும், அங்கு இருக்கின்ற நாடகக் கலைஞர்களின் குழந்தைகளுக்கு கல்வி வசதியும் மற்றும் வீடு கட்டுவதற்கான உதவிகளையும் செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொண்டு இந்த மானியத்தில் பேச வாய்ப்பளித்ததற்காக நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்து சமய அறக்கட்டளை மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்திருக்கின்ற தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களை வைக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு சமய நிறுவனங்கள் என்பது நம்முடைய நாட்டில் வரலாற்றைப் பார்க்கின்றபோது அன்றைக்கு மன்னர்கள் பாதுகாப்பிலும் இன்றைக்கு அரசாங்கத்தால்

[1985 ஜூன் 13

[திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா]

பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு துறையாகவும் இருக்கின்றது. சமய நிறுவனத் துறையில் இருக்கின்ற நிறுவனங்கள், திருக்கோயில்கள், மடங்கள் எல்லாம் ஒரே நிலையில் இருக்கின்றனவா என்று பார்த்தால் அவ்வாறு இல்லாத நிலைமை தான் இருந்து கொண்டிருக்கின்றது. அரசாங்கமே முழுமையாக அறங்காவலர்களை நியமிக்கின்ற திருக்கோயில்களும் இருக்கின்றன. பரம்பரை தர்மகர்த்தாக்கள் இருக்கின்ற திருக்கோயில்களும் இருக்கின்றன. ஸ்கீம் டெம்பிள்ஸ் என்று சொல்லப்படுகின்ற திருக்கோயில்களும் இருக்கின்றன. நான் என்னுடைய கட்சியின் சார்பில் சொல்ல விரும்புவது என்னவென்றால் நடைபாதைக் கோயில்கள் முதல் தஞ்சைப் பெரிய கோயில் வரையில் அனைத்து கோயில்களுமே அறநிலையத் துறையினுடைய பாதுகாப்பில் உள்ள அறநிலையத் துறைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்ற கருத்தை நான் இந்த மன்றத்தின் முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிற்கு வராத கோயில்கள் எத்தனையோ பாதுகாக்கப்படாத நிலைமையில் இருந்து கொண்டிருக்கின்றன. அந்தக் கோயில்களை எல்லாம் அவற்றிலே வருமானம் வந்தாலும், வருமானம் இல்லாவிட்டாலும் கொள்கிறேன். அறநிலையத் துறையின் நிர்வாகப் பொறுப்பில் இருக்கின்ற பல்வேறு கோயில்களின் அறங்காவலர்கள் நியமிக்கப் படாத நிலைமை இருக்கின்றது. என்னுடைய தொகுதியில் இருக்கின்ற கருமாரியம்மன் கோயிலைப் பொறுத்தவரையில் 1983 ஆம் ஆண்டு முதல் அறங்காவலர் இல்லாத நிலைமை இருக்கின்றது. எனக்குத் தெரிந்த வரையில் பல கோயில்களில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கின்றது. தக்கார்கள் என்று சொல்லப்படுகின்ற ஃபிட் பெர்சன் போடப்பட்டிருக்கின்ற கோயில்கள் பல இருக்கின்றன. அவற்றுக்கு ஏன் இன்னும் அறங்காவலர்களை நியமிக்கவில்லை. ஏன் இந்த நிலைமை பல ஆண்டுகளாக நடந்து வருகின்றது என்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். கருமாரியம்மன் கோயிலைப் பொறுத்தவரையில் ஒரு பெரிய ஹோட்டல் அதிபர் தக்காராக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆனால் அவருடைய கவனத்தைப் பொறுத்தவரையில் இந்தக் கோயிலின் மீது இருக்கின்றதா என்று கேட்டால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இப்படி



1985 ஜூன் 13]

[திரு. ஜி. ஆனந்தகிருஷ்ணா]

எத்தனை கோயில்கள் தமிழ் நாட்டில் இருக்கின்றனவோ அத்தனை கோயில்களிலும் இப்படிப்பட்ட நிலைமை தான் இருக்கும் என்பது என்னுடைய கருத்தாகும்.

(முற்பகல் 11-30)

எனவே தக்கார்கள், அல்லது ஃபிட் பெர்சன்ஸ் என்ற முறையில் நிர்வாகிகளை போடுகிற நிலைமையை மாற்றி, அறங்காவலர்கள் நிரந்தரமாக அங்கே எப்போதும் இருந்து கொண்டிருக்க வேண்டும் என்ற வகையில், அவர்களுக்கு பதவிக் காலம், தகுதிக் காலம் நிர்ணயித்து இருந்தாலும் கூட, அந்தக் காலம், தகுதிக் காலம் முடிவடைவதற்கு முன்பே அடுத்த அறங்காவலர்களை நியமிக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. அந்த வகையில் அறங்காவலர்களை நிரந்தரமாக நியமித்து, இந்த தக்கார்கள், ஃபிட் பெர்சன் என்று சொல்லக் கூடிய நியமனங்களை அறவே அகற்ற வேண்டும் என்றும், அப்படிப்பட்ட பொறுப்புகள் இருக்கக் கூடாது என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஹெரிடிட்டரி ஸ்கீம் என்ற முறை பல கோவில்களிலே இருக்கிறது. கோவில்களிலே இருக்கிற நிலங்கள் சொத்துக்கள் இந்தப் பரம்பரை தர்மகர்த்தாக்களுடைய சொகுசு வாழ்வுக்கும் அவர்களுடைய வியாபாரத்தை, வணிகத்தை பெருக்குவதற்காக உபயோகப்படுத்துகின்ற சொத்துக்களாகவுமே இருக்கின்றதே தவிர அந்தச் சொத்துக்களில் இருந்து வரக்கூடிய வருமானம் அந்தக் கோயில்களைச் செப்பனிடுவதற்கோ அல்லது திருப்பணிகள் செய்வதற்கோ கூட உபயோகப்படாத நிலைதான் இருக்கிறது. எனவே இந்த பரம்பரை தர்மகர்த்தா முறையை ஒழிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக விடுக்கிறேன்.

அடுத்து இன்றைக்கு ஸ்கீம் டெம்பிள் என்ற முறையும் இருக்கிறது. ஆனால் அந்த ஸ்கீமை மதிக்கிற தன்மையே நம்முடைய அறநிலையத் துறைக்கு கிடையாது. அந்த ஸ்கீமிலே 3 அறங்காவலர்கள் இருக்க வேண்டும் என்று இருந்தால், 2 அறங்காவலர்களைத்தான் நியமிக்கின்ற தன்மை இருக்கிறது. அப்படி நிலைமை இருக்கும்போது, இந்த ஸ்கீமே

[1985 ஜூன் 13

[திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா]

எதற்கு என்ற கேள்விதான் எழுகிறது. எனவே, இப்படிப்பட்ட நிலையில், ஸ்கீம் டெம்பிள்கள், பாரம்பரை அறங்காவலர்கள் உள்ள கோவில்கள், மற்றும் அரசுப் பொறுப்பிலே உள்ள கோவில்கள் என்று மூன்று வகைகள் இருப்பதை மாற்றி, அனைத்து கோவில்களுமே அரசுப் பொறுப்பிலே உள்ள முழுமையான கோவில்கள் என்ற வகையில் வருமாறு சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டும்.

1950 ஆம் ஆண்டு கொண்டு வந்த சட்டத்தில் நிறைய ஓட்டைகள் இருக்கின்றன. அந்த ஓட்டைகளினால், கோவில் களின் நிர்வாகங்கள் சீர்கெட்டு மிகவும் க்ஷீணித்த நிலையிலே இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதனால் இன்றைக்கு எத்தனையோ கோவில்களுக்கு பூஜை கூட இல்லாமல், நிர்வாகம் சரியாக இல்லாத நிலையில் இருக்கிறது. நிறைய வருமானம் வரக்கூடிய கருமாரி அம்மன் கோவிலிலே கூட, வருகிற யாத்திரிகர்களுக்கு சரியான வசதிகள் செய்து தரப்படுவது இல்லை. அங்கே வாகனங்களில் சென்றால், வாகனங்களை நிறுத்துவதற்குக் கூட இடம் கிடையாது. யாத்திரிகர்கள் ஒழுங்கு முறையில் கியூ வரிசையில் நிற்கக் கூடிய பாதை வசதியை, திருப்பதியில் இருப்பது போன்ற முறையில் அமைக்க வேண்டும் என்று, பலமுறை கேட்டும் கூட இதுவரையில் அப்படி ஒரு வழிப்பாதை கோவிலுக்குள் செல்லக் கூடிய வகையில் அமைக்கப்படவில்லை. அங்கே கோவிலாவது சுத்தமாக இருக்கிறதா என்று கேட்டால் கோவிலும் சுத்தமான நிலையில் இருப்பது கிடையாது. என்னுடைய தொகுதியில் வரலாற்று சிறப்பு மிக்க பல கோவில்கள் இருக்கின்றன. அந்தக் கோவில்களுக்கு பல நூறு ஏக்கர் நிலங்கள் சொந்தமாக இருக்கின்றன. ஆனால் கோவிலுக்கு வருமானமே கிடையாது.

பூவிருந்தவல்லி திருக்கச்சி நம்பி வரதராஜப் பெருமாள் கோவிலுக்கு கிட்டத்தட்ட 99 ஏக்கர் நிலம் இருக்கிறது. ஆனால் அந்த நிலத்தின் வருமானம் அந்தக் கோவிலுக்கு உபயோகப் படுகிறதா என்றால் அல்லது குத்தகைக்கு நிலங்களை வைத்துக் கொண்டிருப்பவர்கள் குத்தகை ஒழுங்காகச் செலுத்துகிறார்களா என்றால் செலுத்துவது கிடையாது. கட்டிடங்களை வைத்துக் கொண்டிருப்பவர்கள் கட்டிடத்திற்கான வாடகையை ஒழுங்காகச் செலுத்துகிறார்களா என்றால் கட்டிட வாடகையும் சரிவர செலுத்துவது கிடையாது. எந்த மாதிரி சட்டம் கொண்டு



1985 ஜூன் 13]

[திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா]

வந்தாலும், எப்படி சட்டத்திலிருந்து சலுகை அளித்திருந்தாலும் கூட, இந்த நிலைமையை மாற்ற இயலாது என்பதுதான் என்னுடைய கருத்து. இதற்கெல்லாம் ஒரே வழி, அந்த நிலங்களை விற்று பிக்சட் டெபாசிட் செய்வதுதான். அந்த வழியின் மூலமாகத்தான் அந்தத் திருக்கோவில்களை காப்பாற்ற முடியும்.

இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் குத்தகை நிலங்களை பப்ளிக் டிரஸ்ட் ஆக்ட், மற்றும் டெனன்சி ஆக்ட் போன்ற சட்டங்களிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படி ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டால், அந்தச் சட்டம் உழைப்பவனை பெரிதும் பாதிக்கக் கூடிய ஒரு சட்டமாக இருக்கும். ஏற்கெனவே அறநிலையத் துறை அதிகாரிகளின் மத்தியிலே சிக்கிக் கொண்டு குத்தகைக்காரர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். 3 வருடம், 3 வருடம் என்று ஏலம் விடுகிற நேரத்திலே அந்த நிலத்தை செப்பனிட்டு பயிர் செய்த உழவன் அங்கேயிருந்து அகற்றப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது.

எனவே இருக்கிற பாதுகாப்பும் அகற்றப்பட்டு விட்டால் குத்தகைதாரர்கள், ஏழை விவசாயிகளுடைய நிலைமை என்ன என்பதை அரசாங்கம் யோசிக்க வேண்டும். ஆகவே டெனன்சி சட்டத்திலிருந்து பப்ளிக் ட்ரஸ்ட் ஆக்ட் அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கிறது. அந்தச் சட்டத்தினுடைய பாதுகாப்பை குத்தகைதாரர்களுக்கு நீக்கிவிட்டால் அவர்கள் நிலைமை மிகவும் கேவலமாக போய்விடும். ஆகவே அப்படிப் பட்ட சட்டத்தைக் கொண்டு வரக்கூடாது என்பதை என்னுடைய கருத்தாக தெரிவிக்க விரும்புகிறேன். நிலங்களைப் பொறுத்த வரையில் தனியார்களுக்கு ஒரு கொள்கை, சமய நிறுவனங்களுக்கு ஒரு கொள்கை என்று இருக்கக் கூடாது. உழுபவருக்கே நிலம் சொந்தமென்ற கோஷம் நம்முடைய நாட்டிலே, குறிப்பாக தமிழ் நாட்டிலே கடந்த 10, 15 ஆண்டுகளாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. அதற்கு வழிகோலுவதாக இந்த சமய நிறுவனங்களின் நிலங்களை உழுகிற விவசாயிகளுக்கு சொந்தமாக்குகிற அளவில் சட்டத்தினை இந்த மாமன்றத்தில் கொண்டு வரவேண்டுமென்ற என்னுடைய ஆசையை தெரிவித்துக் கொள்கிறேன். நிலங்களை விற்கிறபோது வருகிற தொகையை பிக்சட் டெபாசிட்டில் வைத்து, வருகிற வருமானத்திலிருந்து

[1985 ஜூன் 13

[திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா]

அந்தக் கோவில்களை நல்ல முறையில் பாதுகாக்க முடியும். அந்த நிலங்களையும் பாதுகாக்க முடியும்; மற்ற சொத்துக்கள், கட்டிடங்களையும் பாதுகாக்க முடியும்.

ஆகவே வங்கிகளிலிருந்து கிடைக்கிற வட்டித் தொகையை வைத்தே கோவில்களின் நித்திய பூஜைகளையும், திருவிழாக் களையும் நல்ல முறையில் நடத்திவிடலாம் என்பது என்னுடைய கருத்து. இன்றைக்கு கோவில்களுக்கு சரியான முறையில் வருமானம் கிடைக்காமல் இருக்கிறது. பல கஷ்ட நிலைகளில் விவசாயம் செய்யும்போது உரிய பலன் கிடைக்காத நிலையில் குத்தகைத் தொகையை கட்ட வேண்டிய நிலைமை விவசாயி களுக்கு இருக்கிறது. என்னுடைய மாவட்டத்தில் துங்ருவைரஸ் என்ற நோய் ஏற்பட்டு பயிர்கள் பாதிக்கப்பட்ட நேரத்திலேயும், மற்ற இயற்கைக் கோளாறுகள் ஏற்பட்ட நேரத்திலும் குத்தகை செலுத்த வேண்டிய கடமை விவசாயிகளின் மீது சுமத்தப் பட்டிருந்தது. ஆகவே இப்படிப்பட்ட பிரச்சனைகளை அறவே மாற்றியமைக்க வேண்டுமென்றால் அந்தச் சொத்துக்களை அவர்களுக்கு உடமையாக்குவது தான் சாலச் சிறந்ததாக இருக்குமென்று கருதுகிறேன்.

மேலும் இன்றைக்கு திருக்கோவில்களில் பல காட்டேஜ்களை கட்டி இருக்கிறார்கள். அந்த காட்டேஜ்கள் எந்தத் திருக்கோவிலிலும் சரியாக பராமரிக்கிற நிலைமை இன்றைக்கு இல்லை. என்னுடைய தொகுதியிலே இருக்கிற கருமாரி அம்மன் கோவிலில் நிறைய யாத்திரீகர்கள் தங்குகிற அளவில் நிறைய காட்டேஜ்களை, அறைகளை கட்டியிருக்கிறார்கள். இப்படி கட்டியிருக்கிற அறைகளில் யாத்திரீகர்கள் இரவில் வந்து தங்குகிற அளவிற்கு நிலைமை இருக்கிறதா என்றால் அறவே கிடையாது என்று தான் சொல்ல வேண்டும். அங்கே இருக்கிற குளிர் சாதனப் பெட்டிகள் ஆரம்ப காலத்தில் ஒருசில தினங்கள் இயங்கியதே தவிர அதற்குப் பிறகு இதுவரையில் செயல்படுவதே இல்லை. அவற்றை சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்கம் இந்து சமய நிறுவனங்களில் வேலை செய்கிற ஊழியர்களை அரசாங்க ஊழியர்களாக்க வேண்டுமென்பது என்னுடைய கருத்து. இன்றைக்கு திருக்கோவில்களில் இருக்கிற அர்ச்சகர்களின் நிலைமை மிகவும் மோசமாக



1985 ஜூன் 13]

[திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா]

இருக்கிறது. அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிற்கு வராத கோவில்களின் நிலைமையும் மிகவும் மோசமாக இருக்கிறது. ஆகவே அனைத்துத் திருக்கோவில்களிலும் இருக்கிற அர்ச்சகர்கள் முதற்கொண்டு அனைத்து ஊழியர்களையும் அரசாங்க ஊழியர்களாக ஆக்க வேண்டும், அவர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயிக்க வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்னொரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அறங்காவலர்களை நியமிக்கிறபோது அவர்களுடைய தகுதியின் அடிப்படையில் நியமிக்க வேண்டும். அவர்கள் கோவில்களின் புனிதத் தன்மையை காப்பாற்றுபவர் களாக இருக்க வேண்டும். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களை இன்றைக்கு அறங்காவலர்களாக நியமிக்கிற நிலைமை இருந்து வருகிறது. அவர்களை அப்படி நியமிக்கக் கூடாது என்று நான் சொல்லவில்லை. யாரை நியமித்தாலும் தகுதியுடையவர்களாக இருக்க வேண்டுமென்பது தான் என்னுடைய கருத்து. அவர்களுக்கு தெய்வ பக்தி இருக்க வேண்டும்; கோவில்களின் புனிதத் தன்மையை காப்பாற்றுகிற தன்மை இருக்க வேண்டும். கோவில் நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவர்களாக இருக்கக் கூடாது. எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் தகுதியின் அடிப்படையில் அறங்காவலர்களை நியமிக்க வேண்டும். ஆளும் கட்சியினரை மட்டும் அறங்காவலர் களாக நியமிக்கிற கொள்கை தவறான கொள்கை என்பதை சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-40)

அடுத்து, திருக்கோயில்களில் உள்ள குளங்களுடைய திருப்பணியைப் பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில், பூந்தமல்லியில் உள்ள திருக்கச்சி நம்பி ஸ்ரீவரதராஜ பெருமாள் கோவில் குளத்தை, ஒரு தனியாருக்கு குத்தகைக்கு விட்டு, அவர்கள் அங்கே ஒரு மாளிகை கட்டிக் கொண்டு, அதிலே ப்ளாஸ் அவுட் எல்லாம் வைத்துக் கொண்டு இருக்கிறார். இது குறித்து மக்கள் எத்தனையோ மனுக்கள் கொடுத்தும் கூட, அந்தக் குளத்தில் கட்டப்பட்ட மாளிகையை அகற்ற முடியவில்லை. இந்த அறநிலையத் துறை இதைப் பற்றி நீதிமன்றத்திலே வழக்கு போட்டு இருந்தும் கூட, அந்த வழக்கு

[1985 ஜூன் 13

[திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா]

என்ன காரணத்தாலோ, மர்மமான முறையில் வாபஸ் பெறப்பட்டு இருக்கிறது. எனவே இந்தத் துறை திருக்கோயில் குளங்களில் மாளிகை கட்ட அனுமதிக்கிறதா? அதனால்தான் அந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டதா என்ற ஐயப்பாடு மக்கள் மத்தியிலே எழுந்திருக்கிறது. இன்றைக்கு மக்களாகவே வழக்கு மன்றத்திலே, இந்தத் துறை மீதும், கோவில் மீதும் வழக்கு தொடுத்து, அந்தக் கோயில் குளத்தில் இருக்கிற அந்த மாளிகையை அகற்ற வேண்டும் என்றும், அதனுடைய புனிதத் தன்மை காப்பாற்றப்பட வேண்டும் என்றும் வழக்கு போட்டிருக்கிறார்கள். இந்த நிலையில் கோவில்களுடைய புனிதத் தன்மைக் கெட்டுவிடாமல் இருக்கவும், கோவில் நிர்வாகம் நல்ல முறையில் நடக்கவும், கோவில்களில் நியமிக்கக் கூடிய அறங்காவலர்கள் எல்லாம் நல்ல முறையிலே நியமித்து, கோயில்களுடைய நிர்வாகத்தைச் சீரமைக்க வேண்டும் என்றும், கோவில்களுடைய சொத்துக்களை நல்ல முறையில் பாதுகாக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன், வணக்கம்.

* திரு. அ. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகளான, அறக்கட்டளை, சட்ட நிர்வாகம், செய்தி திரைப்படத் துறை, சுற்றுலா, காட்டு வளத்துறை ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடு மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியைச் சொல்லி, மானியக் கோரிக்கை மீது பேச விழைகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்த பிறகுதான், இந்தத் துறையை, வள்ளுவப் பெருந்தகைச் சொன்னதைப் போல, "இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன்கண் விடல்" என்ற வாக்குக்கு ஏற்ப, இந்தத் துறைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, ஒரு பொலிவும், ஒரு அழகும் மிளிர்கிற வகையில், இந்தத் துறை விளங்கி வருகிறது என்பதை நான் முதற்கண் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகும், காணாமல் போன கோயில் சிலைகள் மீட்கப்பட்டும், நலிவடைந்தும், கேட்பாரற்றும்



1985 ஜூன் 13]

[திரு. அ. வெங்கடாசலம்]

கிடந்த கோவில்களைச் செப்பனிட்டும், ஓடாத தேர்களை ஓடச் செய்தும், அறக்கட்டளையில் மாபெரும் புரட்சியைச் செய்திருக்கிறார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக, திருச்சி மாவட்டத்தில் உள்ள காவிரிக் கரையோரம் பள்ளிகொண்டுள்ள, ரெங்கநாதர் பெருமாள் கோயிலுக்கு 8 அடுக்கு மாடி கொண்ட ராஜ கோபுரத்தைக் கட்ட நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்றால், இதைவிட எடுத்துக்காட்டு வேறு சொல்ல என்ன இருக்கிறது என்பதை நான் பணிவன்போடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதோடு, தமிழ் நாட்டின் பண்பாட்டையும் கலாசாரத்தையும் மற்ற நாட்டவரும் வியக்கும் வண்ணம், போற்றும் வண்ணம், இந்தத் துறைக்கு சிறப்பு ஏற்பட்டது, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில்தான் என்று சொன்னால் அது மிகையாகாது.

அதுமட்டுமல்ல, தேவஸ்தான திருக்கோயில்களிலிருந்து வரக் கூடிய வருமானத்தை வைத்து, கலைக் கல்லூரிகள், மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகள், மற்றும் தேவாரப் பாடசாலைகள் என்று இப்படி எத்தனையோ பள்ளிகளை எல்லாம் இன்றைக்கு நடத்திக் கொண்டு வருகிறார்கள். அதுமட்டுமல்லாமல், முதியோர் இல்லம், நூலகங்கள், மருந்தகம், மருத்துவமனைகள் என்று இவைகளை எல்லாம் ஏற்படுத்தி, இன்று கோயில்களை எல்லாம் பாடசாலைகளாக, பல்கலைக் கழகங்களாக மாற்றியது புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில்தான் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு கூட காட்டு வளத்தைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்றால், மனித சமுதாயத்திற்கு உயிர் நாடியும், மேம்பாடும் பெற வேண்டும் என்றால் அது வனத் துறையால்தான் முடியும் என்ற நோக்கத்தோடு, தமிழக அரசு காடுகளாக, மேடுகளாக, பயன் இல்லாமல் கிடந்த இடங்களை எல்லாம் இன்றைக்கு சமூக நலக்காடுகள் என்றும், வனத் தோட்டக் கழகம் என்றும், ரப்பர் தோட்டங்கள் என்றும் அவைகளை உருவாக்கி, அதன் மூலமாக இன்று நாடு செழிப்படையக் கூடிய வகையில், அவைகள் எல்லாம் பணம் காய்க்கும் சோலைகளாக இன்று திகழக்கூடிய வகையில் செயலாற்றி வருகிறது என்பதை நான் பெருமையாகச் சொல்ல முடியும்.

[1985 ஜூன் 13

[திரு. அ. வெங்கடாசலம்]

அதோடு வட ஆற்காடு, கோயம்புத்தூர் மாவட்டங்களிலே தொடங்கப்பட்டுள்ள உயர்நிலைப் பள்ளி, உணவு, சீருடை, புத்தகம், தங்கும் வசதி, மருத்துவ வசதி இதுபோன்ற வசதிகளை நமது அரசு செய்து வருகிறது. அதோடு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய உயிரியல் பூங்காவை 7 கோடி ரூபாய் செலவில் தென் இந்தியாவிலேயே பெரிய விலங்கு அகமாக அமையக்கூடிய வகையில் அமைத்து இருக்கிறது. சிறப்பாக இருக்கிறது. சுற்றுலாத் துறையைப் பற்றி சொல்ல வேண்டுமானால் காலம் தான் இடம் கொடுக்காது இருந்தாலும் சுற்றுலாத் துறையில் எந்த அரசும் செய்யாத, எண்ணாத அளவுக்கு மாமல்லபுரத்தில் உள்ள சிற்பங்களை பண்டையத் தமிழரின் அழியா புகழ் பூத்த பண்பாட்டு சிற்பங்களையும் தொன்மை நிறைந்த வரலாற்று சிறப்புக்களையும் கலைக் கண்ணோட்டத்துடன் கூடிய 47 தலைப்புகளை தற்போது தேர்ந்தெடுத்து இங்கே கவின் மிகு கல்லில் வண்ணம் செய்ததோடு அல்லாமல் ஒளி, ஒலிக் காட்சித் திட்டத்தையும் சிறப்பாக அங்கே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு 47 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், ஒளி, ஒலிக் காட்சி அமைக்க திட்டமிட்டு இருப்பதை பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதோடு சிறப்புக்கு சிறப்பாக விளங்குகிறது எனது மாவட்டமாகிய புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சித்தனவாசல் குகை ஓவியங்களை சிறப்பிக்கும் வகையில் 1983–84 ஆம் ஆண்டில் சுற்றுலா மையம் ஆக்கும் நோக்கத்துடன் நிதி ஒதுக்கிய மாண்புமிகு அமைச்சரை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இவ்வளவு சிறப்பாகச் செய்து வரும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் இன்று எந்தவித ஒரு வசதியும் இல்லாமல் அது ஒரு பின்தங்கிய மாவட்டமாக ஒரு சாதாரண மாவட்டமாக இருக்கிற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு தமிழ்நாடு உணவகம் ஒன்றும், சுற்றுலா மாளிகை ஒன்றும் கட்டித் தர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு தமிழ் நாட்டில் வனத்துறை கல்லூரி கோயம்புத்தாரில் மட்டும்தான் இப்போது இருக்கிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் வனத்துறை நிலங்களும், சமூக



1985 ஜூன் 13]

[திரு. அ. வெங்கடாசலம்]

நலக் காடுகளும் அந்தப் பகுதியில் நிறைய இருக்கின்றன. இந்தக் காரணத்தால் புதுக்கோட்டை மாவட்டத்தில் வனத்துறை கல்லூரி ஒன்று கட்டித்தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எனது தொகுதியான ஆலங்குடி தொகுதியில் அறக்கட்டளை நிதியில் இருந்து பாலிடெக்னிக் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும், அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு ஆலங்குடி தொகுதியில் தென் பழனி என்று சொல்லக் கூடிய அந்த கீரமங்கலம் அருகில் உள்ள நகரம் ஊராட்சியில் முருகன் கோவில் ஒன்று இருக்கிறது. அந்தக் காலத்தில் 75 அடி உயரத்திற்கு செயற்கை மழையால் உருவாக்கப்பட்ட ஒரு சிறப்பு மிக்க அந்த முருகன் கோயில் சீரழிந்து கொண்டு இருக்கிற ஒரு நிலையில் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்று திருக்கோவில்களையும், அறக்கட்டளைகள் அனைத்தையும் தமிழ்நாடு முழுவதும் இருக்கக் கூடிய அவைகளை எல்லாம் நல்ல முறையில் விளங்கக் கூடிய அளவுக்கு செய்து கொண்டு இருக்கிறார்கள். எனது தொகுதியில் இருக்கக் கூடிய கீரமங்கலம் நகரத்தில் இருக்கக் கூடிய அந்த முருகன் கோயிலை செப்பனிட்டுத் தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே பேசும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் ஆலய நிலங்களின் குத்தகைத் தொகை பாக்கிகளை வசூல் செய்ய வேண்டும் என்று எல்லாம் சொன்னார்கள். ஆலயங்கள் என்று சொல்வோமானால் இன்று தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு பொறுப்பில் அமர்ந்த பிறகு இன்று எத்தனையோ ஆலயங்களின் நிலங்களை வசதிப் படைத்தவர்கள் கையில் இருந்ததை மீட்டு இன்று சாதாரண மக்கள் ஆதி திராவிட மக்கள், பழங்குடி மக்கள், வாழ்க்கையில் நசுக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட அந்த மக்கள் பயன் பெறக்கூடிய அளவிலே அந்த நிலங்களை எல்லாம் அந்த சாதாரண ஆதி திராவிட பழங்குடி மக்கள் விவசாயம் செய்யக் கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இருந்தாலும் இன்னும் முழுமையாக அவர்கள் அந்தக் கோயில் நிலங்களை அனுபவிக்கக் கூடிய அளவுக்கு ஒரு சட்டத்தை, அவர்கள்

[1985 ஜூன் 13

[திரு. அ. வெங்கடாசலம்]

முன்னேற்றமாக வாழ்வதற்கு அவர்களுக்கு வாழ்க்கையில், அந்தஸ்து உயர்த்துவதற்கு ஒரு நல்ல சட்டத்தை இயற்ற வேண்டும் என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-50)

அதோடு, இவ்வளவு சிறப்புக்களைச் செய்த தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், இன்று காட்டிலாகா துறை மற்றும் அறநிலையத் துறையிலும் சிறப்புக்கு சிறப்பாக அமைந்திடும் அளவுக்கு ஆக்கியிருக்கிறார்கள். எந்தத் துறையாக இருந்தாலும், அது மக்களுக்கும், சமுதாயத்தில் இருக்கக் கூடிய சாதாரண மக்களுக்குப் பயன்படக் கூடிய நல்ல திட்டமாக அது அமைய வேண்டும் என்ற நோக்கத்தில்தான். இன்று இதற்கு முன்னால் இருந்ததை விட வனத் துறையிலேயும், அறநிலையத் துறையிலேயும், இன்று எத்தனையோ பன்மடங்கு நிதிகளை நமது அரசு பெற்றிருக்கிறது என்பதை நான் இங்கே பணிவோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு, ஆளுங் கட்சியைச் சார்ந்தவர்கள் அறங்காவலர்களாக நியமிக்கப் படுகிறார்கள் என்று இங்கே ஒரு குற்றச்சாட்டை மாற்றுக் கட்சிக்காரர்கள் சொன்னார்கள். அறங்காவலர்களைப் பொறுத்த வரையிலேயும், இங்கே ஆளுங்கட்சி, ஆளாத கட்சி என்ற ஒரு வேறுபாடு இல்லாமல் கோயில் மேல் பற்றுள்ளவர்களும், பொது நலம் கருதுபவர்களும், மற்றவர்களை மதிக்கக்கூடிய தன்மை உள்ளவர்களும், கோயிலை நல்ல முறையில் பராமரிக்கக் கூடிய பொது நோக்கம் உடையவர்களும்தான் அறங்காவலர்களாக இந்த அரசால் நியமிக்கப்படுகிறார்கள். அதன் காரணமாகத் தான் கோயில்களுடைய, வருவாய், கோயில்களுடைய நிதி உயர்ந்திருக்கிறது என்பதை நான் இங்கே பணிவோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி இத்தனைச் சிறப்புக்களைச் செய்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டி, இந்தத் துறையின் மானியக் கோரிக்கையை நான் மனதாரப் பாராட்டி, வரவேற்று வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அருள் ஆட்சி புரிகின்ற அன்னை பராசக்தியின் கடாட்சம் பெற்ற புரட்சித் தலைவரின் ஆட்சியின்



1985 ஜூன் 13]

[திரு. வை. பாலச்சந்திரன்]

சார்பாக அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் இந்தப் பேரவையில் வைக்கப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகள் மீது நடைபெறுகின்ற விவாதத்தில் நானும் கலந்து கொண்டு நான் சார்ந்திருக்கின்ற இந்த முன்னணிப் பேரியக்கத்தின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்வதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் என்னுடைய உரையை ஆரம்பிப்பதற்கு முன்பு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மானியக் கோரிக்கைகளை தாக்கல் செய்தபோது, சொன்ன அந்த அறிவிப்பிற்காக என் நன்றியையும், என் இயக்கத்தின் சார்பாகவும் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களிலே குத்தகைதாரர்களாக இருந்தவர்கள் பாக்கி வைத்திருந்த அந்தப் பணத்தைப் பெறுவதற்கு, குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிப்பது பற்றி, தமிழகத்திலே தனியாக ஒரு சட்டம் கொண்டு வர மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி அளித்திருக் கிறார்கள் என்று சொன்னார்கள். அதற்காக என் நன்றியை தெரிவித்து அந்தச் சட்டம் மிக விரைவில் வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கு முன்னாலே இருந்த ஆட்சிகளில் திருக்கோயில்கள் எந்த அளவுக்கு பராமரிக்கப்பட்டனவோ, அதை விட அதிகமாக இந்த ஆட்சியிலே திருக்கோயில்கள் பராமரிக்கப்படுகின்றன என்பதை நான் மனப்பூர்வமாக பாராட்டி, அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் திருக்கோயில்கள் எந்த அளவுக்கு பராமரிக்கப்பட வேண்டும் என்று இந்து சமுதாயம் எதிர்பார்க்கிறதோ, அந்த அளவுக்கு திருக்கோயில்கள் பராமரிக்கப்படவில்லை என்பதும், இந்த இந்து சமுதாயம் எந்த அளவுக்கு திருக்கோயில்களிலிருந்து வருகின்ற வருமானம் எந்த எந்த கொள்கைகளுக்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்று விரும்புகிறதோ, அந்த அந்த நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படவில்லை என்பதையும் நான் இங்கே சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

இன்றைக்கு இந்த நாட்டில் பரவலாக மனிதர் குலம் மதத்தின் பெயரால் பிரிக்கப்பட்டு விட்டது, மனிதர் குலம் மதத்தின் பெயரால் பழுதுபட்டு விட்டது என்ற அவலக் குரல் இன்று இந்த

[திரு. வை. பாலச்சந்திரன்]

நாட்டின் பல்வேறு பகுதியிலிருந்து வந்து கொண்டிருக்கிறது. ஒரு காலத்தில் இந்து சமுதாயத்தை 'உடைந்த சங்கு, ஊதாது, உதவாது' என்று சொன்னவர்கள், எந்த இந்து சமுதாயம் உதவாது, ஊதாது என்ற கருத்துக் கொண்டு, அதை ஒதுக்கி விடலாம் என்று கருதினார்களோ, இன்று அந்த இந்து சமுதாயம் வளர்ந்து வரும் நிலையினைக் கண்டு, மூக்கறுபட்டு வேறு வார்த்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இந்த நாட்டில் மனித குலத்தை மதத்தின் பெயரால் பிரித்தது இங்கேயுள்ள மனித சமுதாயமா என்றால் இல்லை. மனித குலம் இன்று மதத்தின் பெயரால் பிரிக்கப்படுகிறது என்றால், அப்படிப் பிரிக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது என்றால், அப்படி மனித குலம் பிரிக்கப்பட்டு அதன் காரணமாகச் சில பிரச்னைகள் ஏற்படக்கூடுமேயானால், அது தாய்த் திருநாட்டின் தலைமைச் சட்டமாக இருக்கின்ற அரசியல் அமைப்புச் சட்டம் இருக்கின்றதே, அதற்கு உட்பட்டு இந்த நாட்டிலுள்ள அரசாங்கம் இயங்குகின்றது, அந்த அரசாங்கம் நிறைவேற்றியுள்ள சட்டங்கள் காரணமாகும். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று சொல்லுகின்றது அரசியல் சட்டம் என்று அதன் சார்பாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற நிர்வாகங்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றன. என்பது சதவிதம் உள்ள இந்து சமுதாயம், சட்டத்தின் முன் அதற்குரிய உரிமைகள் கொடுக்கப் படாத நிலையில், சட்டத்தின் முன் அவமானப்படுத்தப்படுகிறது, எள்ளி நகையாடப்படுகிறது, கேவலப்படுத்தப்படுகிறது என்ற சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட சட்டம் இந்து சமுதாயத்தையே பழி வாங்குகிறது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

1959 ஆம் ஆண்டிலேயிருந்து அறநிலையச் சட்டம் இருந்து கொண்டு இருக்கிறது. அந்தச் சட்டம், இந்து சமுதாயத்தின் முதுகெலும்பை, நாடி நரம்புகளை அறுக்கின்ற அளவிற்கு 17 ஆண்டுகளாக இருப்பதாக அறிய முடிகிறது.

1810 ஆம் ஆண்டில் நம் நாட்டில், கிறித்தவர்கள், வெள்ளை ஏகாதிபத்தியம் என்ற பெயரால் ஒரு சாம்ராஜ்யத்தை உருவாக்கி, வெள்ளைக்கார சாம்ராஜ்யம் என்ற பெயரில், கிறித்தவ சாம்ராஜ்யம் நிறுவுவது என்ற நோக்கத்தில் வலுவான சாம்ராஜ்யத்தை நிறுவுவது என்ற நோக்கத்திற்காகக் கையாண்ட



[திரு. வை. பாலச்சந்திரன்]

முறைகள் இரண்டு. இந்து மதத்தை அழித்தால்தான் அவர்களின் ஸ்தாபனமான கிறித்தவ சாம்ராஜ்யத்தை இங்கே நிலைநாட்ட முடியும் என்று உணர்ந்து கொண்டார்கள். இந்து சமுதாயம் வலுவிழந்து, நலிந்து போனால்தான் தங்களுடைய ஸ்தாபனத்தை நிரந்தர சாம்ராஜ்யமாக மாற்ற முடியும் என்று அவர்கள் கருதினார்கள். இந்து சமுதாயத்தை நலிந்த சமுதாயமாக மாற்ற வேண்டுமென்றால், இந்து சமுதாயத்தை இந்த மண்ணிலேயிருந்து அழிக்க வேண்டுமென்றால் இந்து சமுதாயத்தின் நாடி நரம்பாக இருக்கின்ற, முதுகெலும்பாக இருக்கின்ற ஆலயங்களின் சொத்துக்களைப் பராமரிக்கிறோம் என்று இந்து சமுதாயத்தின் பல்வேறு நிறுவனங்களின் சொத்துக்களையும் எடுப்பதன் மூலமாக இந்து சமுதாயத்தை ஆயுதம் இல்லாத ஒரு சமுதாயமாக ஆக்கலாம் என்று கருதித் தான், அந்த நோக்கத்திற்காகவே, 1810 இல் ப்ரொக்ளமேஷன் ஃபார் பெங்கால் என்று சொல்லியும், 1816 இல் ப்ரொக்ளமேஷன் ஃபார் மெட்ராஸ் என்று சொல்லியும், 1827 இல் ப்ரொக்ளமேஷன் ஃபார் பம்பாய் என்று சொல்லியும் கொண்டு வந்து, இந்து ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களையும், இந்து ஆலயங்களையும் அவர்கள் பராமரிப்பது, கண்காணிப்பது என்ற முறையைக் கொண்டு வந்து, கிட்டத்தட்ட 20 ஆண்டுக் காலம் அந்த நிர்வாகத்தைக் கையாண்டார்கள். 20 ஆண்டுகளுக்குப் பிறகு இந்து சமுதாயம் அதை எதிர்த்துக் குரலெழுப்பியது. நீங்களே வெளியேறாவிட்டால் இந்த நாட்டை விட்டு மூட்டை முடிச்சுக்களோடு விரட்டப்படுவீர்கள் என்று ஆங்காங்கு குரல் எழுப்பப்பட்டதால் அப்படிக் கண்காணிக்கப்படுகின்ற பகுதியை மாற்றுவதற்கு முடிவு செய்து, 1840 ஆம் ஆண்டில் ஒரு ஆணை பிறப்பித்தார்கள். ஆலய நிலயங்களை நாங்கள் கண்காணிப்பதி லிருந்து "We will withdraw from the management and Administration of Hindu Temples" என்று சொல்லும் அளவிற்கு கண்காணிப்பதை வாபஸ் பெற்றார்கள்.

ஆனால், அதற்குப் பிறகும்கூட அவர்கள் சொன்ன கருத்தெல்லாம், இந்து சமுதாயத்திற்குச் சொந்தமான ஆலயங்களின் நிலங்கள் தவறாக நிர்வகிக்கப்படுகின்றன,

[திரு. வை. பாலச்சந்திரன்]

அவைகள் தவறான நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்று சொல்லி, கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை அபரிமிதமாக இழந்தால் வருவாய் இழப்பு வரும் என்ற காரணத்தைக் காட்டித்தான் ஆலய நிர்வாகத்தில் தலையிடுவதிலிருந்து வாபஸ் பெற்றாலும், நிலத்தைக் கொடுப்பதற்குத் தயங்கிக் கொண்டு இருந்தார்கள்.

இன்றைக்கு 1959 ஆம் ஆண்டுச் சட்டத்தைப் பெற்றிருக்கிறோம். ஒரு காலத்தில் இந்து சமுதாயத்தை அழிக்க வேண்டுமென்பதற்காக, கிருத்துவ சாம்ராஜ்யத்தை இங்கே நிலை நாட்ட வேண்டுமென்பதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டம் இன்றைக்கும் நம்மால் பின்பற்றப்படுகிறது என்றால், ஒருக்கால் இன்றைக்கிருக்கின்ற இந்த அரசோ அல்லது இதற்கு முன்னால் இருந்த அரசுகளோ இந்துக்களுக்கு எதிரானவர்களைக் கொண்ட அரசாக இருக்குமோ என்று வெளியிலே உள்ள பெரும்பாலானவர்கள் நினைத்துவிடக் கூடாது என்பதற்காக அதை வாபஸ் வாங்க வேண்டும் என்று இந்துப் பேரியக்கத்தின் சார்பாகவும், இந்து சமுதாய மக்களின் சார்பாகவும் நான் கேட்டுக் கொள்கிறேன். அரசியல் சட்டங்களையே திருத்துகிற பொழுது, நிலைமைக்கு ஏற்ப, சூழ்நிலைக்கு ஏற்ப திருத்தப்பட வேண்டுமென்ற சூழ்நிலை வரும் என்று சொன்னால், திருத்த வேண்டுமென்ற முடிவுக்கு ஆட்பட்டு அரசியல் சட்டங்களையே திருத்துகிற சூழ்நிலையில் நாம் இருக்கிறோம். நம்முடைய பேரவையில் கூட, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக பல்வேறு சட்டங்கள் திருத்தப்படுகின்றன. சட்டங்கள் ஒன்றும் கைபடாத ரோஜாக்கள் அல்ல. சட்டங்கள் மக்களுடைய உணர்வுகளை மதிக்கும் வகையில் திருத்தப்பட வேண்டுமென்ற வகையில் அந்தச் சட்டத்தை இந்த அரசாங்கம் திருத்த முன்வந்து இந்து சமய உணர்வுகளை மதிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் விடுக்கிறேன்.

(நண்பகல் 12-00)

ஒரு காலத்திலே ஆட்சியிலே இருந்தவர்கள், எங்களைப் பார்த்து கிண்டல் செய்தார்கள், எள்ளனம் செய்தார்கள். எங்களுடைய உணர்வுகளைப் புண்படுத்தி, அதனால் நாங்கள் புண்பட்டதைப் பார்த்து, அந்த அவலக் குரல் கேட்டு மகிழ்ச்சி பெறுகிறவர்கள் ஒரு காலத்திலே இருந்தார்கள். ஆனால்



[திரு. வை. பாலச்சந்திரன்]

அவர்கள் எல்லாம் இன்றைக்கு மாறி, புதிதாக இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பிறகு, இந்த அரசாங்கம் எங்களுடைய உணர்வுகளை மதிக்கிறது, போற்றுகிறது என்ற நம்பிக்கை இருக்கிற காரணத்தால் எங்களுடைய புண்பட்ட உணர்வுகளை இந்த அரசாங்கத்திற்குச் சுட்டிக் காட்டுகிறோம். எங்கள் சமுதாயத்தினரைக் கட்டுப்படுத்தாது, எங்கள் குரலை ஏற்று, செயல்படுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை நான் வலியுறுத்துகிறேன்.

குறிப்பாக, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரை வாபஸ் பெறுவது என்பது நடக்காத காரியம் அல்ல. 1940-லே ஒரு முறை வாபஸ் பெறப்பட்டது போல் இந்த முறை வாபஸ் பெறப்பட வேண்டும். 1940-ல் கவர்னர் ஜெனரல் கவுன்சில் இருந்தபோது எந்தக் கருத்தின் அடிப்படையில் இந்தச் சட்டத்தை வாபஸ் பெற்றார்களோ அதே கருத்தின் அடிப்படையில், இதனை வாபஸ் பெற வேண்டும்.

ஆலய நிர்வாகங்களில் ஊழல் நடக்குமானால், ஆலய நிர்வாகங்களில் முறைகேடுகள் நடந்தால், ஆலய நிர்வாகங்களில் தவறுகள் நடந்தால், நீதி மன்றங்களில் அவற்றைத் தீர்த்துக் கொள்ளலாம். அல்லது வேறு ஒரு அட்டாமஸ் பாடி என்ற அளவுக்கு, தன்னிச்சையாக செயல்படுகிற அமைப்பை ஏற்படுத்தி, சமய ஆன்றோர்களும், பெரியோர்களும், துறவிகளும் உள்ளடங்கிய அமைப்பை ஏற்படுத்தி, ஆலய நிர்வாகத்தை அவர்களிடத்திலே ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்படி சட்டத்தை வாபஸ் பெறுவதற்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்வதற்கு காலதாமதம் ஏற்படக் கூடும் என்பதை நாங்கள் உணர்கிறோம். அதுவரை இந்த அமைப்பு எப்படி, எப்படி செயல்பட வேண்டுமென்று நாங்கள் உணர்கிறோமோ அதை அரசாங்கத்தின் கவனத்திற்கு மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலமாகச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரை இந்தியத் திருநாட்டின் பாகமாக இருக்கிற தமிழகத்திலேதான் ஆலயங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆனால் ஆலய ஊழியர்கள் எல்லாம் நாட்டுக்கு வேண்டாதவர்கள், இந்த அரசாங்கத்திற்கு அவர்கள் ஏதோ விரோதிகள் போல ஒரு காலத்திலே இருந்த அரசாங்கம்

[திரு. வை. பாலச்சந்திரன்]

அவர்களைக் கருதியது. இந்துவை விரோதியாக கருதிய காலம் ஒன்று இருந்தது. ஆகவே, ஆலய ஊழியர்களை விரோதிகளாகக் கருதுகிற சூழ்நிலை இருந்தது. ஆகவே, ஆலயங்களில் பணி புரிகிறவர்களை அவர்கள் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடத்தினார்கள். அப்படி ஒரு சூழ்நிலை இருந்தது. இந்த அரசாங்கம் அப்படி மாற்றாந்தாய் மனப்பான்மையோடு அவர்களை நடத்தாமல் அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்க வேண்டும். அவர்கள் அங்கே மகிழ்ச்சியாக இருந்தால்தான் போகின்ற பக்தர்களும் மகிழ்ச்சியோடு திரும்பிவர முடியும். இல்லாவிட்டால் அங்கே பரதேசியைப் பார்த்துவிட்டு அந்தப் பரதேசி உருவத்தோடு தான் வெளியே வருகின்ற சூழ்நிலை பக்தர்களுக்கு ஏற்படும். இந்து முன்னணி பேரியக்கத்தின் சார்பாக, இன்றைக்கு ஆலயங்களுக்குள்ளே செல்ல முடியாத சூழ்நிலை எங்களுக்கு இருக்கிறது. நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து விட்டால், அதன் மூலமாக அவர்களுடைய ஊதியம் அதிகரிக்கப்படும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கிறது. கால் வயிற்றுக் கஞ்சி இல்லாதவர்களாக இருக்கிற நிலையில், அவர்களுக்கு ஒரு நாளைக்கு கால் வயிற்றுக் கஞ்சியாவது கிடைக்கும் என்ற நம்பிக்கை இப்பொழுது இருந்து கொண்டு இருக்கிறது. ஆகவே அவர்கள் ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் அரசுப் பணியாளர்களாக ஆக்கப்பட வேண்டுமென்று வேண்டுகிறேன்.

அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், அம்பாசமுத்திரத்தில் இருக்கிற திருக்கோயில் பணியாளர்கள் ஒரு நீண்ட நெடுநாளைய போராட்டம் நடத்துகிறார்கள். அவர்கள் சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பார்களோ என்ற அளவிற்கு ஆகிவிடுமோ என்று அஞ்சப்படுகிறது. அந்த வட்டத்திலே இருக்கிற ஆலயங்களில் அவர்களுக்கு அதிக அளவுக்கு ஊதிய பாக்கி இருக்கிறது என்று சொல்கிறார்கள். அரசாங்கம் ஊதிய பாக்கி இருப்பதை ஒத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், அவர்கள் சொல்கிற அளவு இருக்குமானால் அதை மட்டும் நம்பி வாழ்கிற அந்த ஊழியர்கள் வாழ்க்கைக்கு என்ன செய்வார்கள்? அவர்களை நம்பியிருக்கிற குழந்தைகள் என்ன செய்வார்கள் என்பதை இந்த அரசாங்கம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கனிவோடு வேண்டிக் கொள்கிறேன்.



 [திரு. வை. பாலச்சந்திரன்]

மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நாங்கள் [illegible] வேண்டியதைச் சொன்னோம் என்று ஆறுதல் அடையத் தக்க அளவுக்காவது நேரத்தை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் தந்திருக்கிற பட்டியலைப் பார்க்கிற போது ஒரு ஆலயத்தில், அதாவது கரியமாணிக்கப் பெருமாள் ஆலயத்தில் 46 மாதங்களாக வரி பாக்கி இருக்கிறது என்று தெரிகிறது. இப்படி 46 மாதங்களாக ஆலயத்திற்கு வரவேண்டிய வரி வராமல் இருந்தால், பாக்கி இருந்தால் எப்படி கோவில் நிர்வாகம் நடைபெற முடியும்? இப்படி பாக்கி இருப்பதால் ஊழியர்களுக்கு ஊதியம் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது.

இன்னும் சொல்லப் போனால், ஆலைய நிலங்கள் எல்லாம் பிறரால் கையகப்படுத்தப்பட்டு, ஆக்கிரமிப்பு செய்யப் பட்டிருக்கிறது, ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு வருகிறது. எப்படி இந்து சமயத்தில் உரிமைகள் ஒரு காலத்தில் சட்டத்தால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதோ அதைப்போன்று இன்றைக்கு இந்துமத ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்கள் ஆக்கிரமிப்புச் செய்யப்படுகின்றன. நாகப்பட்டினம் பகுதியிலே இருக்கிற கோவில் நிலத்தை வேறு ஒரு மதத்தைச் சேர்ந்தவர்கள் ஆக்கிரமித்து தொழுகை இடத்தைக் கட்டியிருப்பதாகச் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏராளமாக இருக்கின்றன. இப்படி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிற இடங்களை இந்த அரசு மீட்டித் தருவதாகத் தகவல் சொல்கிறார்கள். ஆகவே, உடனடியாக அந்த நிலங்களை மீட்பதற்கு தனியாக ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்து சமயத்தைச் சேர்ந்த பெரியோர்களைக் கொண்ட குழுவை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு எத்தனையோ ஆலயங்களில், ஆலயங்களுக்கு வருகிற பக்தர்களுக்கு போதுமான பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது. பக்தர்களுக்குப் பாதுகாப்பு தருவது அரசினுடைய கடமை. சில இடங்களிலே திருட்டுக்கள் நடைபெறுகின்றன. பக்தர்கள் கோவிலுக்குப் போக முடியாமல் தடுக்கப்படுகிறார்கள். இத்தகைய சங்கடங்களிலிருந்து தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டும். அது மட்டுமல்ல. மண்டைக்காடு கோவிலாக

[திரு. வை. பாலச்சந்திரன்] [1985 ஜூன் 13

இருந்தாலும் சரி, கொல்லங்கோடு கோவிலாக இருந்தாலும் சரி, கன்னியாகுமரி கோவிலாக இருந்தாலும் சரி, அங்கெல்லாம் இந்துக்கள் சென்று கடலிலே குளித்து, வழிபாடு செய்வது வழக்கம். அந்தப் பக்தர்கள் கடலில் குளிக்கச் செல்ல முடியாமல் பிற மதத்தினரால் தடுக்கப்படுகிறார்கள்; கொலை செய்யப்படுகிறார்கள்; தாக்கப்படுகிறார்கள், கேலி செய்யப் படுகிறார்கள். கோவிலுக்குச் செல்கிற பக்தர்களுக்கு ஏற்படுகிற இத்தகைய இடர்பாடுகளைப் போக்க வேண்டும்; இந்தத் துறை தகுந்த பாதுகாப்பு கொடுக்க வேண்டும். அரசாங்கத்தில் பாதுகாப்பு கொடுப்பார்கள் என்று இந்து சமுதாயம் ஆவலோடு எதிர்பார்க்கிறது.

இன்னும் ஒன்றைச் சொல்கிறேன். சொல்லப் போனால் வெட்கக்கேடு * * என்று சொல்லக் கூடிய அளவுக்கு வந்துவிடுமோ என்ற அச்சம் இருக்கிறது அந்த மாவட்டத்தில் ஏற்படுகின்ற நிலைமைகளைப் பார்க்கிறபோது வெகுவேகமாக அந்த மாவட்டம் மிசோரம் போன்று, பஞ்சாப் போன்று மாற்றப்பட்டு விடுமோ என்று எண்ணத் தோன்றுகிறது. இந்தியாவிலே ஒரு பகுதிதான் கன்னியாகுமரி மாவட்டம் என்ற நிலையையே மாற்றிவிடுவார்களோ என்று நாங்கள் அச்சப் படுகிறோம். கன்னியாகுமரி ஆலயத்திற்கும் வேறு சில ஆலயங்களுக்கும் ஒரு சட்ட மன்ற உறுப்பினா என்ற முறையில் என்னை அழைத்தார்கள். ஒரு சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையில் நான் அங்கே செல்லவிருக்கும்போது, நீங்கள் அங்கே சென்றால் கிறிஸ்தவ மக்கள் மனம் புண்படும் என்று தடுக்கின்ற சூழ்நிலை, என்னை அவர்கள் அழைக்கக் கூடாது என்ற சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் கோவில் திருவிழாக்களில் தேரோட்டம் நடத்த முடியவில்லை. (மணியடிக்கப் பெற்றது) பிற மதத்தைச் சேர்ந்தவர்கள் இன்றைக்கு எந்த அளவுக்கு இப்படி தொந்தரவு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதெல்லாம் அரசுக்குத் தெரியும்.

அங்கே இன்னும் ஒரு வெட்கக் கேடு என்னவென்றால், ஆண்டவனுடைய சன்னிதானத்தில், தேவி சன்னிதானத்தில் நடைபெறக் கூடிய இசை நிகழ்ச்சியில் * *

---

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1985 ஜூன் 13] [திரு. வை. பாலச்சந்திரன்]

இப்படிப்பட்ட நேரங்களில் காவல் துறை நீதி வழங்க வேண்டும், பக்தர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும்; அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

**திரு. கு. சுப்பராயன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு மைனாரிட்டி சமூகத்தினரைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகிறார்கள். அதற்குப் பதில் சொல்வதற்கான வாய்ப்பு இங்கே அவர்களுக்கு இல்லை. மேலும் எந்தவிதமான ஆதாரமும் அற்ற நிலையில் ஒரு மைனாரிட்டி சமூகத்தினர் மீது குற்றம் சாட்டிப் பேசுவது சரியா?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. இரா. ஜெயராமன்):** மைனாரிட்டி சமூகத்தினரைப் பற்றிக் குற்றம் சாட்டிப் பேசுவது கூடாது.

**Thiru A. RAHMANKHAN:** For the sake of communal harmony, I request that the words spoken by my Learned Friend may kindly be expunged.

**திரு. கு. சுப்பராயன்:** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே,

* *

யார் அறிவித்தது? அப்படி யாராவது அறிவித்திருக்கிறார்களா?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. இரா. ஜெயராமன்):** அது ரொம்ப சென்சிட்டிவ் பிரச்சினை. எனவே அதுபற்றிய கருத்துக்களைச் சொல்லும்போது பொறுப்போடு சொல்ல வேண்டும். ஆகவே மைனாரிட்டி சமூகம் பற்றிக் குறிப்பிட்டுப் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது.

---

** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1985 ஜூன் 13

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. வை. பாலச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களைப் பொறுத்தவரையில் யாருடைய உணர்வையும் புண்படுத்த வேண்டும், புண்படுத்திப் பார்க்க வேண்டும் என்ற ஆசை இல்லை. ஆனால் எங்கள் உடலிலே பட்ட புண்ணை, உள்ளத்திலே ஏற்பட்டிருக்கின்ற காயத்தை இங்கே சொல்லி ஆறுதல் பெற முடியும் என்ற நிலையில் அப்படி ஒரு நிலைக்கு நாங்கள் ஆளாக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் சொல்கிறேன். எப்படி பூனை முயலை அடித்து விரட்டுகிறதோ, அப்படி அடித்து விரட்டப்படுகின்ற நேரத்தில் இந்த அரசினுடைய ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கையில்தான் சொல்கிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த மாவட்டத்தில் நீண்ட நெடுங்காலமாக எங்களுக்குப் பாதுகாப்பு தர வேண்டிய காவல் துறையினர் பாதுகாப்பு கொடுக்கவில்லை, அதிகாரிகள் பாதுகாப்பு கொடுக்கவில்லை.

இந்து சமுதாயத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் எந்த ஆலயத்தை நம்பி சென்று கொண்டிருக்கிறார்களோ, அந்த ஆலயத்தை யார் நிர்வகிக்கிறார்களோ, எந்த அறநிலையத் துறை நிர்வகிக்கின்றதோ அந்தத் துறை எங்களுக்கு கார்டியனாக இருந்து பாதுகாப்பு வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளை இங்கே வைக்க நான் விரும்புகிறேன்.

அதுபோல் ஆலயங்களினுடைய நிலம் சம்பந்தமாகச் சொல்ல விரும்புகிறேன். ஆலய நிலங்களை, ஏழை என்ற பெயரில் பலருக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டும், விலைக்குக் கொடுக்க வேண்டும் என்ற அறிவிப்பை இந்த அரசு வாபஸ் பெற்றாக வேண்டும் என்ற வேண்டுகோளை நான் இங்கே வைக்க விரும்புகிறேன். அப்படிச் செய்வதன் மூலமாகத்தான் இந்து சமுதாயத்தின் உணர்வு புண்படாமல் இருக்கும். அப்படி வாபஸ் பெறவில்லை என்று சொன்னால், எங்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை என்று சொன்னால் நாங்கள் சிந்தித்துப் பார்க்கின்ற வழிமுறைகள் போராட்டங்களாக மாறிவிடக்



1985 ஜூன் 13]

[திரு. வை. பாலச்சந்திரன்]

கூடாது என்ற எண்ணத்தில் இந்த அரசின் மீது நம்பிக்கை வைத்து இருக்கிறோம். எனவே எங்களுடைய நம்பிக்கை சிதறடிக்கப்பட்டு விடக்கூடாது என்று சொல்லி வாய்ப்பு தந்ததற்காக நன்றி சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற, இந்து சமய அறநிலையத் துறை, வனத் துறை, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இங்கே எடுத்து வைக்க வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்து சமய அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில், இதுவரையில் எவரும் அக்கறை செலுத்தப்படாமல் இருந்த அந்த ஒரு நிலையை மாற்றி, புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகுதான் ஆன்மிக உணர்வுகளுக்கு மதிப்பு அளித்து ஆலயங்களை பாதுகாக்க வேண்டும் என்ற அந்த உணர்வோடு, இந்தத் துறையிலே நல்ல பல சீர்திருத்தங்களை இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னாலே செய்து வருகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தக் கொள்கை குறிப்பிலே கொடுத்திருக்கிற விவரங்களின் அடிப்படையில் பார்க்கிறபோது, 1975 ஆம் ஆண்டு ஆலயங்களுடைய வருமானமாக 11.69 கோடி என்று இருந்த நிலைமாறி, இன்றைக்கு 1985 ஆம் ஆண்டில் 21.86 கோடியாக அந்த வருமானம் உயர்ந்து இருப்பதும், அதே நேரத்தில் 1978-ல் 4 கோடியாக இருந்த கோவிலினுடைய வைப்பு நிதி 83 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 26¾ கோடி என்ற அளவுக்கு உயர்ந்து இருப்பதையும், அதேபோல ஒரு ஆண்டுக் காலத்தில் அதாவது 1984-வது ஆண்டில் மட்டும் வைப்பு நிதியாக 5 கோடி ரூபாய் அந்தத் துறையிலே சேமிக்கப்பட்டிருக்கிறது என்ற அடிப்படையினைப் பார்க்கும்போது எந்த அளவுக்கு

[1985 ஜூன் 13

[திரு. செ. செம்மலை]

அறநிலையங்களிலே வருகிற நிதிகள் முறையாக பாதுகாக்கப்பட்டும், பயன்படுத்தப்பட்டும் வருகிறது என்பதற்கு இவைகள் எல்லாம் சான்றாக இருந்து கொண்டிருக்கின்றன.

இதற்கு முன்னாலே கோவிலினுடைய வருமானம் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டு தாறுமாறாக செலவழிக்கப்பட்ட நிலைமைகள் எல்லாம் மாறி, இன்றைக்கு இந்தத் துறையைப் பொறுத்தவரையில், மக்களின் ஆன்மீக உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்கிற வகையிலே நிர்வாகத்தை சீர்திருத்தம் செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடத்திக் காட்டி வருகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னதான் இந்தத் துறை மாண்புமிகு அமைச்சர்களுடைய எண்ணத்தை பிரதிபலிக்கிற வகையிலே செயல்பட்டாலும், என்னைப் பொறுத்தவரையில், இன்றைக்கு இருக்கிற இந்து சமய அறக்கட்டளையினுடைய சட்டம், அதனுடைய அறக்கட்டளைகளுக்கு பாதுகாப்பு இல்லாத நிலைமையில் இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு அமைச்சருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், இன்றைக்கு சமூக கோவில்கள் இருக்கின்றன. சில கோவில்கள் சில சமயங்களுக்கு சம்பந்தப்பட்ட கோவில்களாக இருந்தாலும், அந்தக் கோவில்களுக்கு எல்லாம் அந்தச் சட்டத்தினுடைய ஷரத்துக்கள் பொருந்தும் என்ற வகையில் அந்தச் சட்டத்தின் விதிகளிலோ அல்லது அதன் பிரிவுகளிலோ சரியான விளக்கங்கள் இல்லாத சூழ்நிலையில் பல்வேறு வழக்குகள், இன்றைக்கு உயர்நீதிமன்றத்திற்கும், உச்ச நீதிமன்றத்திற்கும் தொடர்ந்து போய்க் கொண்டிருக்கின்ற சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது.

என்னதான் உச்ச நீதிமன்றத்திலே அந்தச் சட்டத்தினுடைய ஷரத்துக்கள் சமூகக் கோவில்களுக்கும் பொருந்தும் என்று தீர்ப்புச் சொன்னாலும், அந்த ஷரத்துக்களிலேயே அவற்றிற்கான விளக்கங்களைச் சொல்லாததால், மீண்டும் தொடர்ந்து வழக்குகள் இன்றைக்கும் நீதிமன்றத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிற நிலைமை இருந்து வருகிறது.



1985 ஜூன் 13]

[திரு. செ. செம்மலை]

இந்தச் சட்டத்திலே 51-வது பிரிவின்படி அந்தச் சமூக கோவில்களுக்கு, அந்தச் சமூகத்தைச் சார்ந்தவர்கள் உரிமை கொண்டாடலாம் அல்லது நிர்வாக உரிமைகளை ஏற்றுக் கொள்ளலாம் என்று இருந்தாலும், மற்ற ஷரத்துக்கள் எல்லாம் அந்தக் கோவில்களுக்கும் முறையாக பொருந்தும் என்கிற அளவிலே சட்டத் திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே என்னுடைய வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக அந்த அறநிலையத் திருக்கோயில்களில் நிர்வாகிகளாக அறங்காவலர்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்கிற போது சற்று சிக்கலான நிலை இருப்பதை கண்டு கொண்டிருக்கிறோம். அந்தச் சட்டத்தினுடைய 101-வது பிரிவின் படி, நியமிக்கப்படுகின்ற அறங்காவலர்கள், அந்தப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொன்னால், அந்தச் சட்டத்தினுடைய ஷரத்துக்களுக்கு உட்பட்டு, துணை ஆணையருடைய சான்றிதழைப் பெற்று, ஜுடிஷியல் ஃபர்ஸ்ட் கிளாஸ் மேஜிஸ்ட்டிரேட் கோர்ட்டிலே விண்ணப்பம் போட்டு, பிறகு அதன் வழியாகத்தான் இந்த உரிமையை பெற வேண்டும் என்ற நிலைமை இப்போது இருக்கிறது. அது ஒரு துறையினுடைய அல்லது அந்தத் துறையினுடைய உத்திரவிற்கு ஏதோ ஒரு தடையாகவே இருப்பதாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன். நியமிக்கப்படுகிற அந்த அறங்காவலர்கள் உடனடியாக பொறுப்பு ஏற்க ஒரு ஏற்பாட்டை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு புதிய சட்டத் திருத்தத்தின் மூலம் கொண்டு வருவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்ட போது, எனது நினைவு சரியாக இருக்குமானால், ஆக்ட் 24/76 என்று நினைக்கிறேன். அந்தச் சட்டத்தின்படி நியமிக்கப்படுகிற அறங்காவலர்கள் உடனடியாக உரிமைகளைப் பெறுவதற்கும், பதவியை அவ்வூம் செய்வதற்கும், வழிவகை செய்யப்பட்டிருந்தது. அந்தச் சட்டம் செயலிழந்துவிட்டாலும், நியமிக்கப்படுகிற அறங்காவலர்கள் உடனடியாக பதவியை

[1985 ஜூலை 13

[திரு. செ. செம்மலை]

அவர்கள் சொன்னதற்கு ஏற்ற வகையில் இந்தச் சட்டத் திருத்தங்களைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் அவர்கள் நியமிக்கப்படுகிற காலம் மூன்று ஆண்டுகள் என்று சொன்னால், ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டு காலம் பதவி ஏற்பதற்கே சரியாகப் போய்விடுகிறது. ஆகவே என்ன காரணத்திற்காக அவர்கள் நியமிக்கப் பட்டார்களோ அந்த நோக்கம் நிறைவேறாமல் போய் விடுகிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல கோவில் நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்தால் அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு இந்தத் துறை அதிகாரிகளுக்கு அதிகாரம் இல்லாமல் இருப்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே கோவில் நிலங்களை ஆக்கிரமிப்பவர்களை அகற்றுவதைப் பற்றி இந்தச் சட்டம் மௌனமாக இருக்கிறது. கோவில் வளாகத்தில் செய்யப்படுகிற ஆக்கிரமிப்பை மட்டும் அதிகாரிகள் நோட்டீஸ் விட்டு முறையாக அகற்றலாம் என்று இருக்கிறது. இதனால் நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்த முடியாமல் இன்றைக்கு இந்தத் துறை அதிகாரிகள் தடுமாறிக் கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, இப்படிப்பட்ட சட்ட திருத்தங்களைக் கொண்டு வருகிறபோது அந்தச் சட்டத்திலே [illegible] முறைகளை ஏற்படுத்தி, ஆக்கிரமிப்பாளர்களுக்கு தண்டனை கொடுக்கிற வகையில், ஆக்கிரமிப்புகளை தடை செய்கிற வகையில், நிலைமைகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதிக இன்றைக்கு ஆன்மீக உணர்வுகள் நல்ல முறையில் பரவியிருக்கிறது. புற்றீசல் போல பலப்பலக் கோவில்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். நடைபாதைகளில் கோவில்களை அமைக்கிறார்கள். போக்குவரத்திற்கு இடைஞ்சலாக கோவில்களை ஏற்படுத்து கிறார்கள். அவர்கள் அந்தக் கோவில்களில் உண்டியல்களையும் வைத்து விடுகிறார்கள். மக்களுடைய பக்திக்கேற்ப வருமானம் பெருகுகிறபோது நம்முடைய துறையும் அந்தக் கோவில்களை எடுத்துக் கொள்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, இப்படிப்பட்ட கோவில்களை [illegible] உருவாக்குகிறபோது, துறையினுடைய அனுமதியைப் பெற வேண்டுமென்று செய்ய வேண்டும். புதிய



1985 ஜூலை 13]

[திரு. செ. செம்மலை]

கடை வைப்பதற்குக் கூட முனிசிபாலிட்டிகளில் லைசென்ஸ் பெற வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே கோவில்கள் உருவாகிறபோது இதுபோன்ற எந்த அனுமதியும் தேவையில்லை என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே அனுமதி பெற்றுதான் கோவில்களை உருவாக்க வேண்டுமென்று செய்ய வேண்டும். புதிதாக உருவாகிய காலனிகளில் கோவில்கள் கட்டப்படுவதில் தவறில்லை. ஆனால் பழமையான கோவில்கள் இருக்கிற இடங்களில் புதுப்புதுக் கோவில்களை உருவாக்கினால் அந்தப் பழமையான கோவில்களுக்கு மதிப்பு இல்லாமல் போய் விடுகிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்ள விரும்புவது, புதிய கோவில்களை ஏற்படுத்துகிறபோது துறையின் அனுமதியைப் பெற வேண்டுமென்ற வகையில் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதுபோன்று ஒரிசாவில் கூட இந்த உத்தரவை பெற வேண்டுமென்று சட்டங்கள் எல்லாம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்று அறிகிறேன். ஆகவே அரசாங்கம் இதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல எவ்வளவோ கோவில்களின் சொத்துக்கள் இன்றைக்குத் தனியார்களின் பராமரிப்பில் இருந்து வருகின்றன. அப்படிப்பட்ட சொத்துக்களின் விவரங்களை நாம் கண்டுபிடித்தாக வேண்டும். இருக்கிற கோவில்களுக்கு சொத்துக்களிலிருந்து வருமானம் இல்லாமல் இருக்கிறது. குத்தகை பாக்கி போன்றவை சரியாக கிடைப்பதில்லை என்ற [illegible] இன்றைக்கு கோவில் சொத்துக்கள் பிறரால் அனுபவிக்கப்பட்டு அதன் வருமானம் கோவில்களுக்கு கிடைக்காமல் இருக்கிறது. சில பேர் சாமிகளின் பெயர்களை வைத்துக் கொண்டிருப்பதால் அந்தச் சொத்துக்கள் தங்களுக்குச் சொந்தமென்று [illegible] சென்று [illegible] பெற்று சொத்துக்களை வாரிசு இல்லாதவர்கள் தங்களுடையதாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதுபோல சிலர் தங்களுடைய சொத்துக்களை கோவில்களுக்கு எழுதி வைத்து விடுகிறார்கள். ஆனால் அந்தச் சொத்துக்கள் மற்றவர்கள் அனுபவத்தில் இருக்கின்றன. அப்படிப்பட்டவைகளையும் வெளிக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒருமுறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆலயங்களுக்குப் பாதகமாக

[1985 ஜூன் 13

[திரு. செ. செம்மலை]

கார்டியன்கள் இருக்கிறார்கள். அதைப்போல கோவில்களில் இருக்கிற கடவுள்களும் மைனர்களாகத் தான் கருதப்பட வேண்டும். மைனர்களுக்கு கார்டியன்களைப் போடுவதைப் போல கடவுள்களுக்கு ட்ரஸ்டிகளைப் போடுகிறோம். ட்ரஸ்டி என்பது பாதுகாப்பாளர் என்ற அடிப்படையில் வருகிறபோது, எவ்வளவோ சொத்துக்களை அட்வர்ஸ் பொசஷன் மற்றும் லிமிடேஷன் அடிப்படையில் தங்களுடையனவாக ஆக்கிக் கொள்கிற சூழ்நிலை இருக்கிறது. எனவே அமைச்சர் அவர்கள் அந்தக் கருத்துக்கு இணங்க இந்த லிமிட்டேசன், அட்வெர்ஸ் பொசஷன் பொருந்தாது என்ற அளவுக்கு சட்டம் கொண்டுவர வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமச்சந்திரன் அவர்கள் பேசுகிற போது, ஒரு கருத்தைச் சொன்னார்கள். நான் பேசிய பேச்சின் ஒரு பகுதியை இங்கே படித்துக் காட்டினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்படும் சட்ட முன்வடிவு பற்றி பேசப்படாத நேரத்தில் பேசப்பட்டது. கோயில் சொத்துக்களிலிருந்து வருமானம் வரவில்லை, எனவே இப்படி செய்தாலாவது அந்த வருமானத்தைப் பெருக்க முடியுமே என்று அந்தக் கருத்து சொல்லப்பட்டது. இந்த கல்டிவேடிங் டெனன்ட்ஸ் அன்ட் புரடக்சன் ஆக்ட் சட்டத்தில் விதிவிலக்கு அளிப்பதை நாங்கள் நிச்சயமாக வரவேற்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் இராமச்சந்திரன் அவர்களும் இதை ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். சொத்தை விற்றுவிட்டு, டெபாசிட்டிலே பணத்தைப் போட்டு வைக்கலாமென்றால் இன்றைக்கு இருக்கிற நிலையில் பணத்தின் மதிப்பு குறைந்து வருகிறது. 50 ஆண்டுகள், 100 ஆண்டுகளுக்குப் பிறகு பணத்திற்கு மதிப்பு இல்லாமல் போய்விடுகிறது. பணமும் செலவழிக்கப்பட்டு விட்டால், அதன் பிறகு கோயில்களை எப்படி பராமரிக்க முடியும் என்ற ஒரு கேள்வி நமக்கு எழுகிறது. கோவில் சொத்துக்களை விற்று விட்டால், பிறகு அதற்கு ஆதாரமான சொத்தே இல்லாமல் போய்விடும். கோயில் சொத்துக்களை விற்றுவிட்டால், பின்னால் அதனாலே இடைஞ்சல் ஏற்படும். கொடுக்கிற அந்த வாடகையை ஒழுங்காகக் கொடுத்துவிட்டால், கோவில்களுடைய வருமானத்தைப் பெருக்கி, அதனால் கோயில்களுடைய பராமரிப்பையும் நாம் செய்ய முடியும். இதற்காக



1985 ஜூன் 13]

[திரு. செ. செம்மலை]

குத்தகைதாரர்கள், வாடகைதாரர்கள், இந்த நியாயமான 25 சதவீதத்தைக் கொடுப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் போன்றவர்கள் முன்வர வேண்டும். அப்படி முன்வந்தால், இந்தத் துறை மேலும் சிறப்புற்று நல்ல முறையில் நடைபெறுவதற்கு காரணமாக அமையும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து வனத் துறை பற்றி ஒரு கருத்து. இதைப் பொறுத்த வரையில் வனத் துறை இன்றைக்கு பாதுகாக்கிற துறையாக இல்லாமல், மரங்களை உருவாக்குகிற துறையாக இருக்கிறது. சமூகக் காடுகள் என்ற அடிப்படையில் காடுகள் எல்லாம் வளர்க்கப்பட்டு வருகின்றன. என்னைப் பொறுத்தவரையில் இந்தத் துறையால் செய்யக்கூடியது என்னவென்றால், மக்களுடைய இன்வால்வ்மென்ட்டை அதிகமாக்க வேண்டும். இன்றைக்குக் கூட மவுன்ட் ரோடில் மரங்களை நட்டிருக்கிறார்கள். ஆனால் சிலர் அந்தச் செடிகளை ஒடித்து எறிகிற காட்சியைக் காண்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட இன்று காலையிலே கேள்விக்கு பதில் அளிக்கும்போது சொன்னார்கள், மக்கள் இதற்கு ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று. பல நண்பர்கள் எடுத்துக் காட்டியதைப் போல மழை இல்லாமல், எத்தியோப்பியா பஞ்சம், பட்டினி என்ற நிலைமை எப்படி நாட்டிலே ஏற்பட்டதோ, அதைப்போன்று இங்கே ஏற்பட்டு விடக் கூடாது. எனவே காடுகளை வளர்க்கவும், அதனுடைய பயனை மக்கள் உணரத் தக்க வகையில் அவர்களை நாம் எஜுகேட் செய்ய வேண்டும். இன்னும் சொல்லப் போனால், மொத்த நிலப் பரப்பில் மூன்றில் ஒரு பங்கு மரங்களை வைக்க வேண்டும். அது யாருடைய நிலமாக இருந்தாலும், தனிப்பட்டவர்கள் 15 சென்ட் நிலம் வைத்திருந்தாலும், அதிலே 5 சென்ட் நிலத்தில் கட்டாயமாக மரங்களை வைக்க வேண்டும் என்று சொல்ல வேண்டும். இப்படிப்பட்ட ஏற்பாடுகளை அரசாங்கமே செய்து கொண்டிருக்க முடியாது.

நம்முடைய துணைத் தலைவர் அவர்கள் கூட இன்றைக்கு காலையில் தரிசு நிலங்களைப் பற்றிக் கேட்டார்கள். இன்றைக்கு மக்களுக்கு வேண்டிய விறகுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும், அதேபோல் கால்நடைகளுக்குத் தேவையான தீவனப் புல்கள், செடிகளை அப்படிப்பட்ட தரிசு நிலங்களில் வளர்ப்பதற்கு

[1985 ஜூன் 13

[திரு. செ. செம்மலை]

இந்தத் துறை மூலம் வேண்டும். அதற்கு மக்களை ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒரே ஒரு கருத்தைச் சொல்லி முடித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். இன்றைக்கு மலைப் பிரதேசங்களில் மரங்கள் அடர்ந்த நிலப்பரப்பு தனியார்களுக்குச் சொந்தமாக இருக்கிறது. இதற்குக் காரணம் பிரிட்டிஷார் ஆண்ட காலத்திலே ஏதோ ஒரு காரணத்திற்காக ஒரு சிலருக்கு லாங் லீசில் 99 ஆண்டுகளுக்கு கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் மரங்களை வெட்டிக் கொண்டிருக்கிறார்கள். வனத் துறையிலே இருக்கக் கூடிய அரசு மரங்களை வெட்டினால்தான் நாம் தடுக்க முடியும். இவர்கள் வெட்டுவதை நாம் தடுக்க முடியாது. இதையெல்லாம் அரசாங்கமும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது என்று மக்கள் நினைக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, எப்படி அவர்களுக்கு இந்த மரங்கள் உரிமையாக்கப்பட்டது என்பதை எல்லாம் கண்டுபிடித்து, அந்த உரிமையை மீண்டும் பெற்று, அந்த நிலங்களை அரசாங்கத்திற்குச் சொந்தமாக்கி காடுகளைப் பாதுகாக்கும் வகையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள கடையங்கத்தில் அருள்மிகு கைலாசநாதர் கோயில் ஒன்று இருக்கிறது. அந்த ஸ்தலத்தை மாவட்ட சுற்றுலா மையமாக ஆக்கித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு தொலைக்காட்சியில் ஒலிபரப்பப்படுகின்ற நிகழ்ச்சிகளில் நமது செய்தித் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும், மத்திய அரசு அதிகாரிகளோடு கலந்து, அந்த நிகழ்ச்சிகளைத் தயாரிக்கின்ற வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசோடு பேசி, அந்த உரிமையைப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

(பிற்பகல் 12-30)

**திரு. எஸ். என். இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறை மானிய கோரிக்கையின் மீது நான் சார்ந்து இருக்கிற காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.



1985 ஜூன் 13]

[திரு. எஸ். என். இராமசாமி]

இன்று தமிழக அரசு தேவஸ்தானங்களை நல்ல முறையில் பராமரித்து அங்கே இருக்கக் கூடிய அறநிலைய பாதுகாப்பு கமிட்டி மூலம் செயல் ஆற்றி வருகிறது. ஆனால் தமிழகத்தில் இன்று பெரிய தேவஸ்தானங்களில் ஐம்பொன் சிலைகள் அதிகமாக இருக்கின்றன. அங்கே பாதுகாக்கக் கூடிய கமிட்டி சரியான முறையில் செயல் ஆற்றவில்லை என்று கருதுகிறேன். அங்கே உள்ள சிலைகள் களவு போவதாக அடிக்கடி பத்திரிகையில் செய்தியாக வந்து கொண்டு இருக்கின்றன. அதேபோல் எனது தொகுதியில் தென்திருப்பேரையில் உள்ள பெருமாள்சாமி கோயிலில் 2 சிலைகள் 2 மாதத்திற்கு முன்னால் களவு போய் விட்டன. என்னைப் போன்றவர்கள் எல்லாம் அங்கே சென்று அதனைத் தேடி துருவி பார்க்கும்போது யார் களவு செய்தார்கள் என்று சொல்ல முடியாத நிலையில் காவல் துறையினர் அதை சரியான முறையில் புலன் ஆய்வு செய்யாமல் நாங்கள் அங்கே அதை துப்பு துலக்க சென்ற நேரத்தில் ஒரு சிலை மறைந்து விட்டது. இன்னொரு சிலை நடராசர் சிலையின் வலது கை அறுக்கப்பட்டு அந்த சிலை கிணற்றில் போடப் பட்டுள்ளது. அதேபோன்று ஆழ்வார்குளம் ஸ்ரீவைகுண்டம் பகுதியில் அங்கேயும் அந்த கோவிலில் உள்ள சிலையும் களவாடப்பட்டு இருக்கிறது. கோவில்களில் இருக்கின்ற இதுபோன்ற சிலைகளை பாதுகாப்பதற்காக இந்தக் குறிப்பில் சொல்லப்பட்டு இருக்கிறது. பாதுகாப்பு கமிட்டி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக போடப்பட்டுள்ளது என்றும் அந்த கோவிலில் இருக்கக்கூடிய தக்கார்கள் இந்த கமிட்டியில் இருக்கிறார்களா? இல்லையா என்று தெரியவில்லை. தக்கார்களை போடும்போது தேவஸ்தானங்களில் நம்பிக்கை உள்ள நபர்களை தக்கார்களாகப் போட்டால் இதுபோன்ற சிலைகள் களவு போவதற்கு வாய்ப்பு இருக்காது என்று என்னுடைய கருத்தை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே சொல்லப்பட்டு இருக்கிறது, தஞ்சை கோவிலுக்கு பாதுகாப்பு கமிட்டிக்கு ஏற்பாடு செய்து அங்கே அந்த சிலைகள் பாதுகாப்பதற்கு ஒரு பெரிய கட்டிடம் கட்டி பாதுகாக்கப்பட்டு இருப்பதாக குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதுபோன்ற இங்கு உள்ள கோவில்களில் இருக்கக்கூடிய சிலைகளுக்கும் இதுபோன்ற கட்டிடங்கள் கட்டி அதை பாதுகாக்க ஏற்பாடு செய்தால் அது நன்மையாக இருக்கும்.

[திரு. எஸ். என். இராமசாமி]

அதேபோன்று குறும்பூரில் ஆதி நாராயண பெருமாள் சாமி கோவில் இருக்கிறது. அதில் உள்ள சிலை களவு போய் 5 ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் அதை தேடி துருவி கண்டு எடுக்கப்பட்டு இப்போது அங்கே ஒரு கட்டிடம் கட்டி அந்த கோவிலுக்குள் அதை வைத்து பராமரித்துக் கொண்டு இருக்கிறோம். அதுபோன்ற எல்லா கோவில்களில் இருக்கக் கூடிய சிலைகளுக்கும் இதுபோன்ற கட்டிடங்கள் கட்டி பராமரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ஆதி நாராயண பெருமாள் சாமி கோவில் திருப்பணி நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்தும் இன்னும் சீரான முறையில் அது முடிவு பெறவில்லை. ஆகவே, அந்த திருப்பணிக்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்து தர வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோன்று எனது தொகுதியில் உள்ள செய்துங்கநல்லூரில் ஒரு கோவில் இருக்கிறது. அதற்கும் இதுபோன்ற திருப்பணிக்கு ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எத்தனையோ கோவில்களுக்குச் சொந்தமான நிலங்கள் தனியார் கைவசம் இருக்கிறது. அதை எடுக்க முடியாத நிலை இருக்கிறது. அதேபோல் குறும்பூரில் ஆதி நாராயண பெருமாள் சாமி கோவிலுக்கு 6 ஏக்கர் நிலம் இருந்தும் அந்த நிலத்தினால் இதுவரையில் அந்த கோவிலுக்கு வருமானம் இல்லாத முறையில் தனியாருக்குச் சொந்தமாக அது செயலாற்றி வருகிறது. அந்தக் கோவில் நிலத்தை உடனடியாக எடுத்து அந்த கோவிலுக்கு பூசைகள் நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வனத் துறையைப் பொறுத்தவரையில், அரசாங்கம் பல வழிகளில் பராமரிப்பு செய்து, இன்று குளங்களிலும், கால்வாய்களிலும் மரங்களை நடுகின்றனர். அப்படி நடுகின்ற மரங்கள் நல்ல முறையில் செழிப்புற்று, வளர்ந்து பெரிய மரமாக வந்து கொண்டிருக்கிற நேரத்தில் தாமிரபரணி ஆற்றிலேயே நடப்பட்ட மரம், அந்த ஆற்று ஓரத்திலே ஆழ்வார்திருநகரி பகுதியிலே சில தேக்கு மரங்கள், ஸ்ரீவைகுண்டம் பகுதியிலே சில தேக்கு மரங்கள், ஏரல் பகுதியில் சில தேக்கு மரங்கள், ஆத்தூரில் சில மரங்கள், பெரிய மரங்களாக வளர்ந்து



[திரு. எஸ். என். இராமசாமி]

இருக்கிறது. ஆனால் அந்த மரங்களை பாதுகாக்கின்ற நபர் யார் என்று தெரியவில்லை. இரவு நேரங்களில் அங்கே மரங்கள் களவாடப்படுவதாகத் தெரிய வருகிறது. ஆகவே, அதனை பாதுகாக்கின்றவர்கள் சரியான முறையில் அங்கே இரவு நேரங்களில் அதனைப் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காட்டு அரப்புத் திட்டத்தின் மூலமாக இன்று கன்றுகளை நட்டு, பாதுகாப்பு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. ஆனால் இரண்டு ஆண்டுகள் வரை தான் அந்த பராமரிப்பு நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் திட்டத்துட்ட அங்கே பாதுகாக்க வேண்டியவர்களை 5 ஆண்டுக் காலம் நீடிக்க வைத்து, அந்தக் கன்றுகளை நல்ல முறையில் வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்வதோடு, அவர்களுக்கு கிடைக்க வேண்டிய ஊதியத்தையும் மாதா மாதம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். கடம்பை பாசனம் 28 ஆயிரம் ஏக்கர் நஞ்சைப் பாசனம். அது சுமார் 7 அடி உயரம் தூர்ந்து உள்ளதாகச் சொல்கிறார்கள். அதனை ஆழப்படுத்த வேண்டும் என்று பல முயற்சிகள் எடுத்தும், அந்தக் குளத்தை ஆழப்படுத்த முடியாத நிலை இருப்பதன் காரணமாக அந்தக் குளத்தை, சைடிலே உள்ள மண்ணை எடுத்து, மத்தியிலே சேமித்து அங்கே மீன்காட்சி சாலை அமைத்தால் அந்தக் குளம், பாசனத்திற்கு வாய்ப்பாகவும், பொது மக்கள் போய் மீன்காட்சி சாலையைப் பார்ப்பதற்கு வாய்ப்பாகவும் அமையும் என்பது என்னுடைய கருத்து.

கொற்கை மன்னர்கள் வாழ்ந்த கொற்கையில், பழங்காலத்தில் அதிலுள்ள பொருள்கள் எடுக்கப்பட்டு, அரசாங்கம் கிட்டத்தட்ட 5 ஆண்டுகளுக்கு முன்னதாக, அங்கே எடுக்கப்பட்ட பொருள்களை பரிசீலனைக்கு கொண்டு வந்திருக்கின்றது. அந்தக் கொற்கை மன்னர்களுடைய, அவர்கள் ஆண்ட கொற்கை பூமியை சுற்றுலா மையமாக ஆக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திருச்செந்தூர் பகுதியிலே அருஞ்சுனை காத்த அய்யனார் கோயில் இருந்து வருகிறது. அங்கே எல்லாக் காலங்களிலும் நீர் குறையாத அளவுக்கு சுனை ஊற்றாக எடுத்துக் கொண்டிருக்கிறது. பக்கத்திலே இருக்கக் கூடிய மரங்கள் அங்கே சோலை போல் காட்சி அளிக்கும் காரணத்தினாலும், அருஞ்சுனை

காத்த அய்யனார் கோயிலையும் சுற்றுலா மையமாக ஆக்கி, ஜனங்கள் போய் வர வாய்ப்புக்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் வனப் பாதுகாப்புத் துறையைப் பொறுத்தவரையில், இன்று தேனியிலே பல ஏக்கர் நிலங்கள் இருந்தும், பலவகைப் பட்ட மரங்கள் நல்ல முறையிலே இருந்தும், அந்த மரங்களைப் பாதுகாக்கக் கூடிய அளவுக்கு அங்கே யாரும் இல்லாதது போல் காட்சி அளிக்கிறது. ஆகவே, அங்கே சொசைட்டி என்ற அடிப்படையில், சுமார் 4, 5 சொசைட்டிகள் என்ற பெயரில், தனி நபர்கள் தான், பனை மரங்கள், கொல்லா மரம், மா மரம் போன்றவைகளை மேம்பாடு செய்து, அங்கே எல்லா வசதிகளையும் தனி நபர்களே பெற்றுக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, ஃபாரஸ்ட் மூலமாக 5 பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதிக்கும் 6 பேரை வாட்ச்மேனாகப் போட்டு, அந்த ஃபாரஸ்டிலே இருக்கிற மரங்களைப் பாதுகாத்து நல்ல முறையிலே சீர் அமைத்தால் தேனியின் வருவாயினை அரசாங்கத்திற்கு அதிகமாகப் பெறலாம் என்று சொல்லி வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எம். செல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து அறநிலையத் துறை, வனத் துறை, செய்தி-திரைப்படத் துறை, சுற்றுலாத் துறை, சின்கோனா போன்றவற்றின் மானியக் கோரிக்கைகள் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். திருவாரூரிலுள்ள கமலாலய திருக்குளம் நெடுங்காலமாக அதற்கு வடிகால் வசதி இல்லாமல், அந்தக் குளமே *நாறிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்தக் குளத்தை சீர் அமைக்க, அதற்குப் பணத்தை ஒதுக்கித் தரவேண்டும் என்று சென்ற கூட்டத் தொடரிலேயிருந்து அமைச்சர் அவர்களை வலியுறுத்தி வந்தேன். அதற்காக நிர்வாக அங்கீகாரம் என்ற முறையில் 5 இலட்சமும், அதை உடனடியாகச் செய்வதற்கு இரண்டு லட்சமும் நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒதுக்கித் தந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றியை திருவாரூர் தொகுதி மக்களின் சார்பில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.





அதைப்போன்று, திருவாரூரில், திருவுருவச் சிலைகளைப் பாதுகாப்பதற்காக, அறை கட்டுவதற்காக ரூ. 7.88 இலட்சத்தைக் கட்டிடத்திற்காக ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அதற்காகவும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

நிர்வாகத்தைப் பற்றிய குறிப்பிலே பல விவரங்கள் இருந்தாலும், அந்த நிர்வாகத்தை நடத்துகின்ற அறங்காவலர்கள் சரியான முறையில் நியமிக்கப்படாமல், அந்தக் கோயில்களின் மீது நம்பிக்கையில்லாதவர்களை நியமித்ததன் காரணமாக இன்றைக்கு இந்த அறங்காவலர்கள் பல்வேறு இடங்களில் சில தவறுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையை நாம் மறக்க முடியாது. இப்படிப்பட்ட கோயில்களை நிர்வகிக்கும் காலத்தில் அதன் மீது பற்று உள்ளவர்களையும், நம்பிக்கை உள்ளவர்களையும் போட்டு சிறப்பாக நடத்த வேண்டுமே தவிர, பற்றில்லாதவர்களை, கோயில்களைக் கொடியவர்களின் கூடாரமாக நினைக்கக் கூடியவர்களை நியமிக்காமல்—கொடியவர்களின் கூடாரமாக கோவில்கள் மாறாமல் இருக்கக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்க வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

கொரடாச்சேரி பகுதியில் பீரந்தகுடி என்ற இடத்தில் அறங்காவலர் கோயில் மரங்களை வெட்டியிருக்கிறார். இதுபற்றி அவர் காவல் துறையில் புகார் எழுதி கொடுத்திருக்கிறார்கள். காவல் துறையால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

திருவாரூர்—மயிலாடுதுறை சாலையில், முடிகொண்டான் என்ற இடத்தில் உள்ள பிடாரி அம்மன் கோவிலில் உள்ள அறங்காவலரே உண்டியலை உடைத்திருக்கிறார். இதுகுறித்து பொது மக்கள் காவல் துறையினிடத்தில் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இந்த முறையிலே அறங்காவலர்கள் பல்வேறு இடங்களில், பல்வேறு முறைகேடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.

[1985 ஜூன் 13

[திரு. எம். செல்லமுத்து]

தமிழகத்தில் கோயில் நிலங்கள் 5.25 இலட்சம் ஏக்கர் இருப்பதாகவும், குத்தகை பாக்கி 33.35 கோடி ரூபாய் இருப்பதாகவும், இவைகளையெல்லாம் வசூலிப்பதற்கு இந்தக் குத்தகைச் சட்டத்திலேயிருந்து விதிவிலக்கு அளிக்கின்ற ஒரு அறிவிப்பை மாண்புமிகு அமைச்சரவர்கள், தமிழக முதல்வர் அவர்கள் அதற்கு அனுமதி தந்திருக்கிறார்கள் என்று கூறினார்கள்.

சென்ற கூட்டத்தின்போது பொது விவாதத்தில் இந்தக் குத்தகை அளிப்பது சம்பந்தமாக விவாதம் வந்தபொழுது அமைச்சர் தலையிட்டுப் பேசிய நேரத்தில், எங்கள் கட்சித் தலைவர் திரு. ரமணி அவர்கள் குறுக்கிட்டுக் கேட்டபொழுது, இந்தக் கோயில் நிலங்கள் உழுபவனுக்குச் சொந்தமாக்குகின்ற கொள்கையை அரசு கொண்டிருப்பதாக வாக்குறுதி அளித்தார்கள். ஆனால், என்ன காரணத்தினாலோ, தொடர் கூட்டம் முடிவதற்குள்ளாகவே வேறொரு முடிவிற்கு வந்து, இந்தக் கோயில் நிலங்களையெல்லாம் இந்தக் குத்தகைச் சட்டத்திலேயிருந்து, நிலச் சீர்திருத்தச் சட்டத்திலேயிருந்து எடுத்து விட்டு கோயிலுக்கு ஒப்படைக்கின்ற காரியத்தைச் செய்கிறார்கள்.

இங்கே சொன்னார்கள், கடவுளுக்கு உரிய அந்த நிலங்களில் ஏழை விவசாயிகள் குத்தகை சாகுபடி செய்யக் கூடாது என்ற அரசின் கருத்தைப் பாராட்டினார்கள். உள்ளபடியே கடவுளின் குழந்தைகள் என்றால், அந்த மக்கள் அனுபவிக்கக் கூடாது என்ற வகையில் இந்தச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவது ஏன்? குத்தகை கொடுக்கக் கூடாது என்பது அல்ல எங்கள் நோக்கம்.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடவுளின் குழந்தைகள் என்பதை ஏற்றுக் கொண்டால், எப்படிக் குழந்தைகள் பெற்றவர்களைக் காப்பாற்ற வேண்டுமோ, அதைப் போல அந்தக் குத்தகைதாரர்களாலும் தகப்பனாக மதிக்கப்படுகின்ற அந்தக் கடவுளுக்கு ஒழுங்காகச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய வேண்டாமா என்று கேடக விரும்புகிறேன்.



1985 ஜூன் 13]

**திரு. எம். செல்லமுத்து:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அப்பன் சொத்து பிள்ளைக்கு உண்டு. அந்தப் பிள்ளைக்குக் கொடுக்கக் கூடாது என்று சொல்வதுதான் நீங்கள் சொல்லுகின்ற கடவுளுக்கே அடுக்காது. ஆகவே, அந்தச் சொத்துக்களை பிள்ளைகள்தான் அனுபவிக்க வேண்டும். அப்பனுக்குப் பிள்ளை கஞ்சி ஊற்றுவதைப் போலத்தான் 25 என்று சட்டம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டப்படி வாங்கத்தான் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர நிலத்தையே பறிக்கும் சூழ்நிலையை உருவாக்கக் கூடாது.

**திரு. வை. பாலச்சந்திரன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்து மதத்தைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு மனிதனுடைய உடலிலேயும் ஆண்டவனின் அம்சம் இருப்பதாகச் சொல்கிறது. ஆகவேதான் 'அந்தர்யாமி' என்று சொல்கிறோம். இப்படி ஒரு மனிதனிடத்தில் ஆண்டவனுடைய அந்த அம்சம் இருக்கும் என்று சொன்னால், ஒவ்வொரு மனிதனுடைய சொத்துக்களும் எல்லோருக்கும் சமமாகக் கருதப்படும். நான் இந்து முன்னணியைச் சேர்ந்தவன் என்ற காரணத்தால், என்னுடைய பெயரில் இருக்கிற சொத்துக்களை, என்னுடைய மனைவியின் பெயரில் இருக்கிற சொத்துக்களை, என்னுடைய குழந்தைகளின் பெயரில் இருக்கிற சொத்துக்களை, எந்தச் சந்தர்ப்பத்தில் ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்களோ, அந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். ஒரு திமுக, கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும், அவர்களுடைய பெயரில் உள்ள சொத்துக்களை, மனைவியின் பெயரில் உள்ள சொத்துக்களை, குழந்தைகளின் பெயரில் உள்ள சொத்துக்களை, ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்களோ, அந்த நேரத்திலே, தக்க ஆவணங்களோடு தரத் தயாராக இருக்கிறேன் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். அவர்கள் முன்வருவார்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

**திரு. கு. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு உயிரிலேயும், ஒவ்வொரு மனிதனிலேயும் ஆண்டவனின் அம்சம் இருப்பதாகச்

[திரு. கு. சுப்பராயன்]

சொன்னார்கள். ஆனால் சொல்கிற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிறிஸ்தவர்களையும் முஸ்லிம்களையும் அதே பார்வையில் பார்ப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. வை. பாலச்சந்திரன்:** எங்களைப் பொறுத்தவரையில், இந்துவாக இருந்தாலும், 'கிறிஸ்துவராக இருந்தாலும்,' முஸ்லீமாக இருந்தாலும் அவர்களை ஒன்றாகப் பார்க்கிற மனக் கண்ணோட்டம், எண்ணம்தான் இருக்கிறது. ஆனால், ஒருசில கிறிஸ்தவர்களுடைய அல்லது அமைப்புகளுடைய, அல்லது ஒரு சில முஸ்லீம்களுடைய அல்லது அமைப்புகளுடைய நிலையை நாங்கள் எதிர்க்கிறோம் என்று சொன்னால், அவர்கள் நிலை தேசத்திற்கு—நாட்டிற்கு எதிரானது.

**திரு. எம். செல்லமுத்து:** மாண்புமிகு துணைத் தலைவ
ரவர்களே, சட்டப்படியே, அந்தக் குத்தகைகளை வசூல் செய்ய
உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமே தவிர, அதிலே
இருந்து விதிவிலக்கு கொடுக்கக் கூடாது என்பதைச் சொல்லிக்
கொள்கிறேன். கம்யூனிஸ்ட்கள் சொத்துக்களை எல்லாம்
கொடுக்க வேண்டுமென்று இங்கே சொன்னார்கள். இருக்கக்
கூடிய நிலங்கள் எல்லாம் ஆண்டவன் படைத்தது என்ற அந்த
பாணியில், இந்திய நாட்டினுடைய அரசியல் சட்டத்திற்குத்
திருத்தங்களைக் கொண்டு வந்து, இந்திய அரசாங்கமே எல்லா
நிலங்களையும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதுதான்
எங்களுடைய கருத்து. அதற்கு அவர்கள் பாடுபடுவார்களா
என்பதுதான் என்னுடைய கேள்வி.

இந்தக் குத்தகைச் சட்டம் நீண்ட நெடுநாளைய
போராட்டத்திற்குப் பின் வந்திருக்கிறது. களப்பால் குப்பு,
இரணியன், சிவாமன் போன்ற பெரிய, பெரிய தியாகிகள்
பல்லாயிரக்கணக்கான மக்கள் எல்லாம் போராடிப் பெற்ற
உரிமையைத் தமிழக அரசு தயவுசெய்து பறித்துவிடக் கூடாது
என்ற கோரிக்கையை நான் அவர்கள் முன் வைக்க விரும்புகிறேன்.
அந்த உரிமையைப் பறிக்கின்ற காரியத்தைச் செய்தால்
தமிழகத்திலே உள்ள குத்தகை விவசாயிகள் மட்டுமல்ல,
அனைத்து ஜனநாயக சக்திகளும் இந்த ஆட்சியினுடைய இந்தச்
சட்டத்தை எதிர்த்துப் போராடுவார்கள் என்ற ஒரு கருத்தினை
நான் உங்கள் முன்னாலே வைக்க விரும்புகிறேன்.



[திரு. எம். செல்லமுத்து]

கோவில் பணத்திலேயிருந்து பல்வேறு காரியங்களைச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் குறிப்பு தந்திருக்கிறார்கள். அதிலே, திருமணக் கூடங்கள், பள்ளிக்கூடங்கள், கட்டிடங்கள் எல்லாம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட காரியத்தை செய்வதை நான் வரவேற்கிறேன்.

திருவாரூர் தொகுதிக்கு அமைச்சர் அவர்கள் நேரடியாக வந்த நேரத்தில் பல கோரிக்கைகளை நான் வைத்திருக்கிறேன். அந்தக் கோரிக்கையின் அடிப்படையில், பல திருமண மண்டபங்களை, தஞ்சை மாவட்டத்திலும் சரி, தமிழகத்திலும் சரி கட்டித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கோயில் நிலத்தில் குடியிருக்கக்கூடிய இலட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், இன்றைக்கும் அரசு சலுகைகளைப் பெற முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். கோயில் நிலத்தில் குடியிருப்பவர்களுக்குப் பட்டா கொடுக்க அரசு மறுக்கிறது, அரசாங்கம் அனுமதிக்க வில்லை என்று அங்கே சொல்கிறார்கள். எனவே, கோயில் நிலத்தில் குடியிருப்பவர்களுக்கு மனையைப் பட்டா செய்து கொடுக்கின்ற காரியத்தைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் ஒரே அறநிலையத் துறைதான் இருக்கிறதே தவிர, இரண்டு அறநிலையத் துறை இல்லை. தமிழக அரசு அதிகமான வருமானம் வரக்கூடிய கோயில் நிதியைக் கொண்டு, தமிழ் நாடு முழுவதும் எல்லா அரசு ஊழியர்களுக்கும் என்ன சலுகை அளிக்கப்படுகிறதோ, அந்த வகையில் அறநிலையத் துறை ஊழியர்களுக்குச் சம்பளம், போனஸ் போன்ற சலுகைகளை அளிக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் முன்வைக்கிறேன்.

அதே போல ஜாதி வித்தியாசம் இல்லாமல் பூசை வைக்கக் கூடிய பூசாரிகளை உருவாக்க ஒரு கமிட்டி போட்டிருப்பதாகவும் அதன் பரிந்துரை வந்தவுடன் கவனிப்பதாகவும் சொல்லி யிருக்கிறார்கள். அதை உடனடியாகச் செய்து அனைத்து ஜாதியினரும் பூசை வைக்கத்தக்க அளவுக்குக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

128—164—16

[1985 ஜூன் 13

[திரு. எம். செல்லமுத்து]

செய்தி, திரைப்படத் துறையைப் பொறுத்தவரையில், இன்றைக்கு வரக்கூடிய சினிமாக்களை எல்லாம் பார்த்தால், கிராமப்புறத்தில் எப்படியெல்லாம் கற்பனைகள் உருவாக்கப் பட்டு, மக்களுடைய மனநிலை கெடுகின்றது என்பதைப் பார்க்க வேண்டும். எனவே, தரமான, பகுத்தறிவுக்கு ஒப்ப, விஞ்ஞான அறிவை போதிக்கக்கூடிய அளவுக்கு படங்களைத் தயாரிக்க வேண்டும். திசை திருப்பக்கூடிய, கற்பனையில் மிதக்கக் கூடிய, கற்பனையில் வீணாகப் போகக் கூடிய சூழ்நிலையைத் தயவுசெய்து தடை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

அது மத்திய அரசு பொறுப்பு என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுவார்கள். இருந்தாலும் இப்படிப்பட்ட கருத்துக்களை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, நல்ல தரமான படங்களை உருவாக்க, விஞ்ஞான அறிவை வளர்க்கக் கூடிய படங்களைத் தயாரிக்க தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இருக்கிற திரை அரங்குகள் எல்லாம் இன்றைக்கு மிகவும் மோசமான நிலைமையில் இருக்கின்றன. கக்கூஸ் வசதி இல்லை; குடிநீர் வசதி இல்லை; இருக்கைகள் சரியாகப் பராமரிக்கப்படவில்லை; எவ்வளவு வேண்டுமானாலும் டிக்கட் போடலாம் என்று மக்கள் தலையிலே திணிக்கிறார்கள். இந்தக் குறைபாடுகளைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். திரை அரங்குகள் சரியாகப் பராமரிக்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க அரசாங்க அதிகாரிகளை நியமித்து செக் பண்ண வேண்டும்.

சுற்றுலா மையத்தைப் பொறுத்தவரையில், தமிழ் நாட்டில் சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடிய சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும் என்பது ஒரு கொள்கையாக இருக்கிறது. சுற்றுலாப் பயணிகளுக்கு சிறந்த வசதிகளைச் செய்து கொடுத்து, உலகம் முழுவதும் இருக்கக் கூடிய சுற்றுலா பயணிகளைக் கவரக் கூடிய சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும். அந்த வகையில் திருவாரூரை தலைமையாகக் கொண்டு அங்கே ஒரு சுற்றுலா மையத்தை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1985 ஜூன் 13]

[திரு. எம். செல்லமுத்து]

அதைப் போன்று வனத் துறையைப் பொறுத்தமட்டில் வனங்கள் நல்ல முறையில் பாதுகாக்கப்பட வேண்டும். மரங்களை வெட்டக் கூடாது என்று கொள்கைக் குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். மனிதன் வளமாக வாழ இயற்கை வளம், காட்டு வளம் முக்கியமானது என்று சொல்கிறார்கள். ஆனால் வனத் துறையிலே சில பெரிய மனிதர்கள் புகுந்து, மரங்களை எல்லாம் வெட்டிச் செல்கிறார்கள், அதிகாரிகள் அதற்கு உடந்தையாக இருக்கிறார்கள். மலைக் காடுகளில் சந்தன மரங்கள், ஈட்டி, தேக்கு போன்ற விலை உயர்ந்த மரங்களை வெட்டிச் சென்று, பல இலட்சக்கணக்கான ரூபாய் சம்பாதிக்கிறார்கள். பெரியார் மாவட்டத்தில் சத்தியமங்கலம், உடுமலைப்பேட்டை, திருமூர்த்தி மலை, நீலகிரி மலை அடிவாரம், பவானி போன்ற இடங்களிலிருந்து இப்படிப்பட்ட திருட்டுகள் பெருமளவில் நடைபெறுகின்றன. அதுபற்றி எங்கள் கட்சித் தலைவர் திரு. ரமணி அவர்கள் பல புகார்களை விவரமாகச் சொல்லியிருக்கிறார்கள். கூடலூர் பகுதியிலும் இப்படிப்பட்ட திருட்டு நடைபெறுகிறது. கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி, மங்களபாளையம், உச்சிமலை, வள்ளிமலை போன்ற இடங்களிலிருந்து சுமார் 15 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள விலை உயர்ந்த சந்தன மரங்கள், ஈட்டி மரங்கள் திருட்டுத்தனமாக வெட்டப்பட்டிருக்கின்றன என்பது 1984 அக்டோபரில் கண்டுபிடிக்கப்பட்டது. இன்னும் குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை. அதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாரஸ்ட் ரேஞ்சர்கள், பாரஸ்ட் ஆபீசர்கள், பாரஸ்ட் கார்ட்ஸ், வாட்ச்சர்கள் போன்றவர்கள் இதற்கு உடந்தையாக இருந்தார்கள் என்று எங்கள் கட்சித் தலைவர் 12—5—1985 அன்று அமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று இன்று வரையில் தெரியவில்லை. காட்டு இலாகா அதிகாரிகள் உஷாராக இல்லை. அவர்கள் உஷாராக இருக்க வேண்டும். திருட்டுப் போவதைத் தடுக்க வேண்டும். குற்றவாளியைக் கண்டுபிடித்து, கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு எல்லாம் உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எம். செல்லமுத்து]

காட்டு இலாகாவுக்குச் சொந்தமான சமவெளிகளில் மலைவாழ் மக்கள் விவசாயம் செய்ய உரிமை வழங்க வேண்டும்; அவர்களை அந்த நிலங்களிலிருந்து வெளியேற்றக் கூடாது. காட்டு இலாகா அதிகாரிகள் இன்றைக்கு அவர்கள் மீது அடக்கு முறைகளைக் கையாளுகிறார்கள். அதை நிறுத்த வேண்டும்.

காகிதத் தொழிற்சாலை, ரயான் தொழிற்சாலைகளுக்கு வாட்டில் மரப் பட்டைகளைக் குறைந்த விலைக்கு சப்ளை செய்கிறார்கள். குறைந்த விலையில் பெற்று, அவர்கள் பெருத்த இலாபம் சம்பாதிக்கிறார்கள். அந்த விலையை உயர்த்தி, வனத் துறையின் வருமானத்தைப் பெருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மலைவாழ் மக்களுக்கு கல்வி வசதி, வீட்டு வசதி போன்ற வசதிகளைச் செய்து தர வேண்டும். நான் கூட கல்வாராயன் மலைக்குப் போயிருந்தேன். அந்த மலைவாழ் மக்கள் சொல்கிற கதையைக் கேட்டால் மிகவும் கொடுமையாக இருக்கிறது. காட்டு இலாகா அதிகாரிகளும் மற்றவர்களும் அவர்களுக்கு எவ்வளவு துன்பங்கள் கொடுக்கிறார்கள் என்கிற விவரங்களை மிகவும் வருத்தத்தோடு சொன்னார்கள். அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

அதைப் போன்று கொடைக்கானல் மலையில் சின்கோனா துறையில் இருக்கிற ஜீவேனியம் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி இல்லை, மருத்துவ வசதி இல்லை, போக்குவரத்து வசதி இல்லை.

அதைப்போன்று குத்தியால், கல்லார் பகுதிகளிலுள்ள ரப்பர் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி இல்லை. போக்குவரத்து வசதி இல்லை. ஆம்புலன்ஸ் வசதி ஏற்படுத்த வேண்டும். இப்படிப்பட்ட கோரிக்கையை எல்லாம் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டம் வால்பாறை மலையிலும் நீலகிரி மலையிலும் சின்கோனா தொழிலைச் சேர்ந்த 2,166 நிரந்தரத் தொழிலாளர்கள் 786 தற்காலிகத் தொழிலாளர்கள் ஆக மொத்தம் 3,000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். தேயிலைத் தொழிலாளர்கள் வேலை செய்கின்ற அதே மலையில்தான் இவர்களும் வேலை செய்கிறார்கள். ஆனால் சம்பளத்தைப்





[திரு. எம். செல்லமுத்து]

பொறுத்தவரையில் 12 ரூபாய்தான் நாள் ஒன்றுக்குக் கொடுக்கப் படுகின்றது. அதாவது தேயிலைத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற ஊதியத்தை விட மூன்று ரூபாய் குறைவாகத் தான் சம்பளம் கொடுக்கப்படுகின்றது. எனவே அந்தச் சம்பளத்தை உயர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. சோலைராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற முறை இதே பேச்சு வருகின்றபோது பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் உழுபவர்களுக்கு நிலங்களைச் சொந்தமாக ஆக்க வேண்டும் என்று சொன்னார்கள். அப்படிச் சொல்கின்றபோது முஸ்லிம் மதத்தைச் சேர்ந்த, கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த, இந்து மதத்தைச் சேர்ந்த இப்படி அனைத்து மதங்களையும் சேர்ந்த கோயில்களின் சொத்துக்களை எல்லாம் உழுபவர்களுக்குச் சொந்தமாக்க வேண்டும் என்று கூறுகிறார்களா, அல்லது அவர்களுடைய கொள்கை என்ன என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

**திரு. கு. ரமணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி தொடர்ந்து விவாதிப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால் நாங்கள் ரெடியாக இருக்கிறோம். இந்த நிலத்தைச் சொந்தமாக்க வேண்டும் என்பது மதத்தையோ, ஜாதியையோ அடிப்படையாகக் கொண்டதல்ல. அது உற்பத்தி சக்தி, உற்பத்திக் கருவி என்ற முறையில் இருந்தாக வேண்டும். அதற்கு ஜாதியோ, மதமோ குறுக்கே நிற்காது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுதான், அதாவது இந்துக்கள் கோயில் சம்பந்தப்பட்டது மட்டுமல்லாமல் மற்றவற்றையும் எடுப்பதா இல்லையா என்று சொல்லக் கூடிய கருத்து உள்ளே இருந்து வெளியே கிளம்பினால் வீண் தகராறு வரும். எனவே அப்படிப்பட்ட பேச்சு வேண்டாம். அது நல்லதல்ல.

**திரு. க. சோலைராசு:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீணான தகராறுகளைக் கிளப்ப வேண்டும் என்ற நோக்கத்திற்காக இந்தக் கேள்வியை நான் எழுப்பவில்லை. அவர்களுடைய கொள்கை என்ன என்று தெரிந்து கொள்வதற்காகத்தான் கேட்டேன். எல்லோருடைய நிலத்தையும்

[1985 ஜூன் 13

[திரு. க. சோலைராசு]

எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை அவர்கள் ஒத்துக்
கொண்டதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர்
அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற வனத் துறை,
சுற்றுலாத் துறை, சின்கோனா துறை ஆகிய மானியக்
கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துச்
சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில்
வனத் துறையானது ஒரு காலத்தில் வனத்திலுள்ள காடுகளையும்,
காடுகளைச் சார்ந்த மரங்களையும் பேணிப்பாதுகாக்க வேண்டும்
என்ற நிலையில் இருந்து அதற்குப் பிறகு வனங்களில் புதிய
மரங்களை நட்டு சமுதாயக் காடுகளை ஏற்படுத்தித் தர
வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சி தொடர்ந்து கொண்டிருக்கும்
போதுதான் வனத் துறையின் சார்பில் தேயிலைத் தோட்டக்
கழகம் என்ற பெயரால் பல ஹெக்டேர்களில் தேயிலைத்
தோட்டத்தை வளர்த்து வருவது என்ற நிலைக்கு
வந்திருக்கிறோம் என்பதை நாம் பெருமையோடு ஏற்றுக்
கொண்டாக வேண்டும். தமிழ் நாடு தேயிலைத் தோட்டக்
கழகம் 1—4—1976-ல் துவக்கப்பட்டு வனத் துறையிலிருந்த
945 ஹெக்டேர் நிலங்களை ஏற்றுக் கொண்டது. தொடர்ந்து
2,400 ஹெக்டேர் பரப்பளவுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
மீண்டும் 347.70 ஹெக்டேர் பரப்பு 1—7—1984 முதல் வனத்
துறையிலிருந்து கொளப்பள்ளி தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு
மாற்றப்பட்டுள்ளது.

அது மாத்திரமல்ல. 1—7—1984 முதல் 31—3—1985 வரை
ஏறத்தாழ செலவு 5.4 கோடி போக, 2.20 கோடி மிச்சத்தைக்
காட்டக்கூடிய அளவில் அந்தத் தொழில் மிகக் குறுகிய
காலத்தில் ஒரு இலாபத்தை நோக்கி நடந்து கொண்டிருப்பதைப்
பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

(பிற்பகல் 1-00)

தற்போதுள்ள தேயிலைத் தோட்டங்களில் இருந்து 1984-85-ல்
17,950 டன்கள் தேயிலை தளிர் மகசூலிலிருந்து, 4,128 டன்கள்
பதப்படுத்திய தேயிலை உருவாக்கப்படும் என்றும் அறிய நாம்
பெருமைப்படுகிறோம். 1985-86-ல் இந்த மகசூல் இன்னும் அதிக
அளவில் கிடைக்கும் என்பதைப் பார்க்கும்போது நாம் மிக மிக



1985 ஜூன் 13]

[திரு. கே. உச்சி]

பெருமைப்படுகிறோம். தமிழ் நாடு தேயிலைத் தோட்டக்
கழகம் டைகர் ஹில் என்னும் தேயிலைத் தொழிற்சாலை
அயல் நாடுகளுக்கு 34,800 கிலோ ஏற்றுமதி செய்து 9.75 லட்சம்
ரூபாயை அன்னியச் செலாவணியை ஈட்டி உள்ளது. அதே
நேரத்தில் தமிழ் நாட்டில் உள்ள தனியார் துறைகள்
52.90 லட்சத்தை ஈட்டி இருக்கும்போது நம்முடைய தோட்டக்
கழகம் கிட்டத்தட்ட 5-ல் ஒரு பங்கைச் சம்பாதித்து இருப்பதை
இங்கே குறிப்பிட்டுப் பாராட்ட வேண்டும்.

தற்போது சேரங்கோடில் இரண்டும், டைகர் ஹில்லில்
ஒன்றுமாக மூன்றுத் தேயிலைத் தொழிற்சாலைகள் இருப்பதோடு,
கூடலூர் பகுதியில் 15 டன்கள் சி.டி.சி. திறன் கொண்ட புதிய
நான்காவது தேயிலைத் தொழிற்சாலையை நாடுகாணியில்
அங்குள்ள இலங்கைத் தமிழர்களுக்காக ஏற்படுத்த நமது அரசு
முடிவு செய்திருப்பதை நான் பாராட்டி வரவேற்கிறேன்.
ஏற்கெனவே பல ஆண்டுக் காலமாக அங்கே ஒரே ஒரு தேயிலைத்
தொழிற்சாலை தான் இருந்தது. பிறகு சேரங்கோட்டில்
ஒன்றும், டைகர் ஹில்லில் ஒன்றும் ஆக இரண்டு தேயிலைத்
தொழிற்சாலைகளை ஆரம்பித்ததோடு, இப்போது கூடலூரில்
நான்காவதும் ஆரம்பிக்க இருப்பதில், தமிழக அரசு மிக
வேகமாகச் செயல்படுவது குறித்து நான் அமைச்சர்
அவர்களைப் பாராட்டுகிறேன். 1984 வரை இலங்கையிலிருந்து
குடிபெயர்ந்த குடும்பங்கள் 2,325. அந்தக் குடும்பங்களைச்
சேர்ந்த நபர்களில் 4,464 பேர்களுக்கு அங்கே வேலை கொடுக்கப்
பட்டுள்ளது. 2,325 குடிபெயர்ந்த குடும்பங்களில் 2,201 குடும்பங்
களுக்கு மட்டும் குடியிருப்பு வசதிகள் அங்கே கட்டிக் கொடுக்கப்
பட்டுள்ளன. எஞ்சியுள்ள குடும்பங்களுக்கும் குடியிருப்புகளை
நம்முடைய தமிழக அரசு மிக விரைவில் கட்டிக் கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தோட்டத் தொழிலாளர்
களுக்கு கடந்த காலத்தில் அங்கே கொடுத்து வந்த கூலியைப்
பற்றி பெருமையாகப் பேசினார்கள். ஆனால் கடந்த காலத்தில்
கொடுத்த கூலி ரூ. 9.30 பைசாதான். பிறகு புரட்சித் தலைவர்
அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் அந்தத் தொழிலில்
உள்ள தொழிலாளர்களுக்கு 5 ரூபாயைச் சேர்த்து
14 ரூ. 30 பைசா என்று கொடுக்கப்படுகிறது.

1985 ஜூன் 13]

[திரு. கே. உச்சி]

ஆனால் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், இந்த ரூ. 14.30 பைசா என்ற தொகை கூட, தனியார்களின் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர் களுடைய ஊதியத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது சற்றுக் குறைவாகவே இருக்கிறது. கிட்டத்தட்ட 90 பைசா அல்லது 1 ரூ. குறைவாக இருக்கிறது. ஆகவே, நாமும் நல்ல லாபம் ஈட்டி வருகிறோம் என்ற வகையில் அந்த 1 ரூபாயையும் சேர்த்து தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று நான் என்னுடைய கருத்தாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தேயிலைத் தோட்டப் பணிகளில் அங்கே வசித்து வந்தவர்களின் குடும்பங்களில் ஒருவருக்குத்தான் முதலிலே வேலை கொடுக்கப்பட்டது. நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தான் ஒரு குடும்பத்திற்கு இருவருக்குக் கூட வேலை கொடுக்க வேண்டும் என்று, மேலும் ஒருவருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது. ஆனால் 5 பேர்கள் கொண்ட அல்லது 5 பேர்களுக்கு மேற்கொண்ட குடும்பத்தில் அவர்களின் வருமானக் குறைவு நிலையை அறிந்து, மீண்டும் மூன்றாவதாக ஒரு ஆளுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அந்தத் தொழிலாளர்களுக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள அந்த வீடுகளுக்கு போதுமான தண்ணீர் வசதி இல்லை என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு குடிதண்ணீர் வசதியையும் செய்து கொடுக்க வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வனப் பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ், காகிதம் செய்யும் தொழிற்சாலைக்காக அதன் மூலப் பொருள்களான யூக்கலிப்டஸ் பகாஸே, சில்வர் ஓக், ஃபைன் போன்ற மரங்களை வளர்க்க வேண்டும் என்று அந்த மரங்களை கூடலூர் பகுதியில் வளர்த்துக் கொண்டு வருகிறார்கள். அதனால் அங்கே வளர்க்கப் படும் அந்த மரங்களைக் கொண்டே கூடலூர் பகுதியில் காகிதத் தொழிற்சாலையை ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறி, அடுத்து சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை மேம்படுத்த வேண்டும் என்கிற ஒரு மாஸ்டர் பிளான் என்கிற



1985 ஜூன் 13]

[திரு. கே. உச்சி]

அளவில் 28 கோடி ரூபாய் சாங்ஷனில் பெரும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக நமது அமைச்சர் அவர்கள் அறிவித்திருக் கிறார்கள்.

அதை நாம் கிட்டத்தட்ட ஓர் ஆண்டுக்கும் மேலாக சொல்லிக் கொண்டிருக்கிறோம். குறிப்பிட்ட அளவுதான் ஒவ்வொரு ஆண்டும் அதற்காக தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. அதை அதிக அளவில் ஒதுக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஊட்டி, முதுமலைப் பகுதிக்கு 28 கோடி ரூபாய் என்றும், ஊட்டியிலே 10 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு இளைஞர் விடுதியும், தொட்டபெட்டாவில் ரூ. 4 லட்சம் செலவில் தொலை நோக்காடி இல்லம் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. உதகமண்டலத்தில் கூடுதலாக ஒரு படகுக் குழாம் கட்டும் பணிக்கு 6.50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. சிறுவர்கள் விளையாடுவதற்காக ஊட்டி ஏரியைச் சுற்றிலும் 11 லட்சம் ரூபாய் செலவில் சிறுவர் ரெயில் விடப்பட்டுள்ளது. ஆனால் அது பாதி வழிக்குத்தான் சென்றுள்ளது. அந்த ஏரியைச் சுற்றிலும் சிறுவர் ரெயில் அமைக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சுற்றுலா மையங்களை மேம்படுத்துவதற்காக அந்த அடிப்படையில் தொட்டபெட்டா, டால்பின்ஸ் நோஸ், லேம்ப்ஸ் ராக், கோட நாடு காட்சி முனை, கல்லட்டி நீர்வீழ்ச்சி ஆகிய இடங்களில் வசதிகள் செய்யவும், மலையேற்றப் பாதைகளில் முகாமிடங்களை அமைக்கவும் ரூ. 7.65 லட்சம் ஒதுக்கப் பட்டிருப்பதைப் பாராட்டுகிறேன்.

உதகையிலிருந்து தொட்டபெட்டா சிகரத்திற்கு "ககன வழிக் கயிற்றுப் பாதை" அதாவது ஏரியல் ரோப்-வே அமைக்கும் திட்டம் அரசின் தீவிர பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லப் படுகிறது. இப்போது இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. அதைச் சற்று வேகப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

முதுமலையில் கட்டப்பட்டுள்ள இளைஞர் விடுதி 10 லட்சம் ரூபாயில் கட்டப்பட்டுள்ளது. அது ஒரே ஹாலாக இருக்கிறது. கிழக்கு ஆசியாவிலிருந்து வருகிற இளம் தம்பதிகள் தனித் தனி அறைகளில் தங்குவதற்கு பெரிதும் விரும்புவதால் அங்கே தனி அறைகளைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[1985 ஜூன் 13

[திரு. கே. உச்சி]

ஊட்டி ஏரிப் பகுதியில் அலங்கார நடைபாதைப் பாலம் ஒன்று கட்டுவதற்கு அரசு எண்ணியுள்ளது. அந்த ஏரியிலே கழிவு நீர் பல ஆண்டுகளாகக் கலந்து வருவதை அரசு கருத்தில் கொள்ள வேண்டும். அதில் நடவடிக்கை எடுக்காவிட்டால் அந்த ஏரி தனது வனப்பை இழந்து விடும். சுத்தமற்றதாகி விடும். ஆகவே, அந்த ஏரியில் கழிவு நீர் கலப்பதைத் தடை செய்ய வேண்டும். அதற்கான ஏற்பாட்டை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றைச் சொல்லி முடிக்கிறேன். இந்தியாவின் பல பகுதிகளிலும், தமிழகத்தின் பல பகுதிகளிலும் தொலைக் காட்சி காட்டப்படுகிறது. ஆனால் துரதிஷ்டவசமாக நீலகிரியில் இருக்கிற மக்கள் தொலைக்காட்சியைப் பார்க்க முடியாமல் இருக்கிறார்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள் கடந்த முறை இதே மானியக் கோரிக்கையில் பதில் அளிக்கும் போது நிச்சயமாக இந்த ஆண்டு நீலகிரிக்கு தொலைக்காட்சி வசதி தருகிற அளவில் வகை செய்யப்படும் என்று சொன்னார்கள். இந்த ஆண்டிலாவது மத்திய அரசை வற்புறுத்தி டி.வி. நிலையத்தை நீலகிரிப் பகுதிக்குத் தருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல கோவை, ஊட்டி போன்ற பகுதிகளுக்கு வருகிற வெளி மாநில மற்றும் வெளி நாட்டு மக்கள் தங்களுடைய பிரயாண நேரத்தைக் குறைக்க அவர்களைக் கவரும் வகையில் அங்கே எலிகாப்டர் வசதியைச் செய்து தர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறை பற்றியும், வனத் துறை பற்றியும், சுற்றுலா பற்றியும், செய்தி-திரைப்படத் தொழில் பற்றியும் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கை மீது சில வார்த்தைகள் சொல்ல விழைகிறேன். சிலர் கூட எண்ணி இருக்கலாம். அப்துல் காதருக்கும், அமாவாசைக்கும் என்ன சம்பந்தம் என்று தமிழ் நாட்டில் சொல்வார்கள். ஆனால் நிச்சயமாக அப்துல் காதருக்கும் அமாவாசைக்கும் தொடர்பு உண்டு. ஏனென்றால் அமாவாசையைத் தொடர்ந்து வருகிற பிறையைப் பார்ப்பதிலே



1985 ஜூன் 13]

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

அப்துல் காதருக்கும் ஆவல் உண்டு. ஆனால் அறநிலையத் துறையில் அப்துல் சமதுக்கு என்ன வேலை என்றால் அதிலும் உண்டு. நான் இங்கே அறநிலையத் துறை குறித்து சில வார்த்தைகள் சொல்ல விழைகிறேன்.

(பிற்பகல் 1-10)

அப்படிச் சொல்வதால் கோவிலில் புக விரும்புகிறேன் என்று பொருள் அல்ல. கோவில்களுக்குச் செல்லும் பக்தர்கள் நிரம்ப இருக்கிற தொகுதி என்னுடைய தொகுதி என்பதால், அந்தத் தொகுதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தொண்டன் என்ற முறையில் இந்த அவையில் ஆற்ற வேண்டிய கடமையை ஆற்ற விரும்புகிறேன். ஏற்கனவே நான் ஒருமுறை பேசியபோது என்னுடைய தொகுதியில் இருக்கிற அருள்மிகு பார்த்தசாரதி கோவில் குளத்தில் தூர் எடுக்க வேண்டுமென்றும், முனைப்போடு அமைச்சர் அவர்கள் அந்தப் பணியைத் தொடங்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டபோது, அதற்காக ஏறத்தாழ ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு அந்தப் பணி தொடங்கப்பட இருக்கிறது என்ற நல்ல செய்தியை எனக்குச் சொல்லிக் காட்டினார்கள். நான் அன்றே நன்றி கூறினேன். இன்று அவர்கள் தந்திருக்கக்கூடிய குறிப்பில் ஏறக்குறைய 2 லட்சத்து, 30 ஆயிரம் ரூபாய் மேற்கொண்டு ஒதுக்கி அந்தப் பணியைப் பூர்த்தி செய்வதற்காக ஆணை வழங்கப்பட்டிருக்கிறது என்ற குறிப்பைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் நான் அங்கே சென்று பார்க்கின்றபோது, அமைச்சர் அவர்கள் தந்த வாக்குறுதியினுடைய அடிப்படையிலே அந்தப் பணி எந்த முறையிலே நடக்க வேண்டுமோ, அந்த அளவிற்குச் சிறப்பாகவோ, துரிதமாகவோ நடக்கவில்லை என்ற குறைபாடு அந்த வட்டாரத்திலே உள்ள மக்களுக்கும் உண்டு. எனக்கும் உண்டு. ஆகவே அதை அன்பு கூர்ந்து நீக்கி வைக்கக்கூடிய ஒரு உத்தரவை அமைச்சர் அவர்கள் இட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டிலே ஒன்று சொல்வார்கள். குன்றுகள் தோறும் குமரன் இருப்பான் என்று. ஆனாலும் கூட பழனிக் கோயிலில் குடி கொண்டு இருக்கக்கூடிய குமாரனுக்குத் தனி சிறப்பு உண்டு.

[1985 ஜூன் 13

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

தமிழ் நாட்டில் இருக்கக் கூடிய ஏறத்தாழ 32 ஆயிரம் கோயில்
களில் அதிகமான வருமானம் வரக் கூடிய ஒரு திருக்கோயில்
பழனி கோயில் என்பது மாத்திரம் அல்ல, அந்த வருமானத்தைக்
கொண்டு, வருமானம் இல்லாத பல கோயில்களுக்கும் வழங்கி,
மேலும் பல அறக் காரியங்களை, அதன் சார்பாக செய்து வரக்
கூடிய ஒரு விவரத்தை அமைச்சர் அவர்கள் வழங்கியுள்ள இந்தக்
குறிப்பிலே பார்க்கும்போது, நான் மகிழ்ச்சி அடைகிறேன்.
அந்தப் பழனி கோயிலுக்கு வரக்கூடிய வருமனத்தைக் கொண்டு,
பழனி நகரத்தினுடைய முன்னேற்றத்திற்கு எவ்வளவு
செலவழிக்கப்படுகிறது என்பதை நான் தெரிந்து கொள்ள
விரும்புகிறேன். ஏன் என்றால், பழனி கோயிலுக்கு அண்டை
மாநிலத்திலிருந்து லட்சக்கணக்கான பேர்கள், அதுவும்
குறிப்பாக கேரளத்திலிருந்து பக்தர்கள் நிரம்ப வருவதை நானே
நேரில் பார்த்திருக்கிறேன். அந்த அளவிற்கு பெருமையையும்
வருமானத்தையும் ஈட்டித் தரக்கூடிய அந்தப் பழனி நகரத்தை
மேலும் அழகுபடுத்த, சீர்படுத்த, ஒரு போதுமான தொகையை
இந்தத் துறை ஒதுக்கித் தர முன்வந்தால், அதற்கு நான் பெரிதும்
நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்தப் பழனியில்
தமிழர்களுடைய பண்டைய சமுதாயத்தை, சமயத்தைப் பற்றி
ஆய்வு நடத்துவதற்காக ஒரு மேல்நிலை ஆய்வுக் கூடம் ஒன்றை
ஏற்படுத்தி அதிலே உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளைச்
சேர்ந்த, இந்தியாவில் இருந்து வந்த சமயங்கள், இருந்து
கொண்டிருக்கிற சமயங்கள் ஆகியவற்றைப் பற்றி ஆய்வு
நடத்துவதற்குப் போதுமான வசதியும், வாய்ப்பும் ஏற்படுத்தித்
தருவது நன்மை பயக்கும் என்று நான் கருதுகிறேன்.

அதோடு தமிழகக் கோயில்கள் பற்றி சிறப்பான வரலாற்று
நூல் ஒன்றை அறநிலையத் துறையின் சார்பாக வெளியிட
வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய
தமிழகக் கோயில்களைப் பற்றி நிறையப் பாடல்கள் இருக்கின்றன.
ஸ்தல புராணங்கள் இருக்கின்றன. அவைகளைப் பார்க்கின்ற
போது, அவற்றிலுள்ள இலக்கியச் சிறப்பு தெரிகிறது. அவற்றில்
அந்தக் கோயில்களில் உள்ள மூர்த்திகளைப் பற்றிய பாடல்கள்



1985 ஜூன் 13]

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

இருக்கின்றனவே தவிர, அந்தக் கோயில்களைக் கட்டியது யார்
என்ற வரலாறு, கோயில்களைக் கட்டிய மன்னர்களுடைய
வரலாறுகள், கலை நுணுக்கங்கள் ஆகியவற்றைப் பற்றி எல்லாம்
நம்மால் தெரிந்து கொள்ள முடியவில்லை. இன்றைய நவீன
உலகத்தில் அந்த விவரங்களை எல்லாம் மக்கள் தெரிந்து கொள்ள
ஆசைப்படுகிறார்கள். அப்படிப்பட்ட விவரங்களை எல்லாம்
சொல்லக் கூடிய, தமிழ் நாட்டுக் கோயில்களைப் பற்றிய ஒரு
ஆதாரபூர்வமான வரலாற்று நூல் எழுதுவதற்கு அதற்காக
தனியாக ஒரு துறையை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தர
முன்வருவார்களானால், அது பெரும் பயன் தரத்தக்கதாக
இருக்கும்.

இன்றைக்கு உள்ள உறுப்பினர்கள் சிலர் ஏதேதோ பேசி
விடுகிறார்கள். இன்றைக்கு அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கக்
கூடிய கொள்கையின் காரணமாக அவர்கள் இப்படிப் பேசக்
கூடிய நிலையில் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் எல்லாம்
தமிழ் நாட்டினுடைய வரலாற்றை மட்டுமல்ல, தமிழகத்தில்
இருந்த சமயங்களைப் பற்றியும் தெரிந்து கொண்டால் நல்லது,
அதைத் தெரிந்துகொள்ளவும் முயற்சிப்பார்கள் என்ற
நம்பிக்கையும் எனக்கு உண்டு. குறிப்பாக இந்துக் கோயில்கள்
என்று சொல்லும்போது, இந்துக் கோயில்களைப் பற்றியும்,
அதைக் கட்டிய பெருமக்களைப் பற்றியும் மட்டும் தான் நாம்
தெரிந்து கொள்ள வேண்டும் என்று நாம் சொல்லிவிட முடியாது.
இந்த நாட்டில் எத்தனையோ கோயில்களுக்கு இஸ்லாமிய
சமுதாயத்தில் வாழ்ந்த பெரும் நிலக்கிழார்கள் எல்லாம்
திருப்பணிகள் செய்ய மானியங்கள் கொடுத்திருக்கிறார்கள்.
எத்தனையோ கோயில்களுக்கு, அரசுத் துறை பொறுப்பேற்றுக்
கொள்வதற்கு முன்னாலே முஸ்லீம்கள் அந்த அறப் பணிகளை
நடத்தியிருக்கிறார்கள்.

இன்று இருக்கக் கூடிய கோவில்களில் அதற்குச் சொந்தமான
நிலங்களில் பலவற்றை முஸ்லீம் மன்னர்கள் தந்து இருக்கிறார்கள்.
ஸ்வாமி குமர குருபரர் அவர்கள் டெல்லி சென்று மொகலாய
மாமன்னர் ஔரங்கசீப் அவர்களைக் கண்டு இருக்கிறார்கள்.
(குறுக்கீடு) அவரும் இவரை அன்போடு வரவேற்று என்ன செய்ய
வேண்டும் என்று மரியாதையோடு கேட்டபோது ஸ்வாமி குமர
குருபரர் அவர்கள் திருப்பனந்தாள் மடத்திற்கு மான்யம் வேண்ட,

அவரும் வழங்கலாம் என்று சொல்லி, அந்த அடிப்படையில் கொடுக்கப்பட்ட மானியம் இன்றும் அந்த மடத்துக்கு சொந்தமாக, காசியில் இருந்து வரும் வரலாறு இந்த நாட்டுக்குச் சொல்லிக் காட்ட வேண்டும்.

அதேபோல் மாமன்னன் திப்பு சுல்தான் தமிழகத்தில் இருக்கக் கூடிய எத்தனையோ கோவில்களுக்கு நிலம் வழங்கியிருக்கிறார், மானியம் வழங்கியிருக்கிறார். இன்னும் சொல்லப் போனால் ஒரு காலத்தில் ஸ்ரீரங்கநாதர் கோவில் ஸ்ரீரங்கப் பட்டணம் சிலரால் அழிக்கப்பட்டபோது தன்னுடைய தலைநகரில் ஸ்ரீரங்கநாதர் ஆலயத்தை அதை நிறுத்தி அங்கே ஸ்ரீரங்கநாதர் ஆலயத்தை நிலைநாட்டித் தந்தார். அங்கே இந்தக் காலத்தில் ஒவ்வொரு நாளும் பூசை நடப்பது கூட அவர் தந்த அந்த மானிய வருமானத்தில் தான். அந்த மானியம் இன்றும் வருமானத்தைத் தந்து கொண்டிருக்கிறது என்பது மறுக்க முடியாத வரலாறு. சமீபத்தில் சிதம்பரத்தில் உள்ள தீட்சிதர்கள் ஒரு அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார்கள். அதை தினமணிப் பத்திரிகையில் படித்தேன். அந்தக் கோவிலுக்குச் சொந்தமான எவ்வளவோ நகைகளைக் களவாடிக் கொண்டு போய்விட்டார்கள் என்றும், ஆனால் இருக்கக் கூடிய நகைகள் இனிக் களவு போகாமல் இருப்பதற்கு அரசு தக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு ஒரு உண்மையை அவர்கள் குறிப்பிட்டு இருந்தார்கள். இருக்கக்கூடிய அந்த அற்புதமான நகைகள் எல்லாம் மாமன்னர் திப்பு சுல்தான் மானியமாகத் தந்த நகைகள். அற்புதக் கலை நுணுக்கத்தோடு கூடிய வேலைப்பாடுகள் நிறைந்த அந்த நகைகள் களவு போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று அரசுக்குக் கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்பதற்குள் நான் போகவில்லை. என்னுடைய கண்ணோட்டம் எல்லாம் எவ்வளவோ ஒட்டுறவோடு ஒருவருக்கு ஒருவர் அன்பினால் கவரப்பட்டு ஒருவர் மதத்தை ஒருவர் மதித்து வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை சொல்லிக் காட்டுவதுதான். இப்படிச் சொல்லும்போது, கோவில்களுக்கு மானியம் அளிப்பவர்கள் எல்லாம் முஸ்லீம்களாக இருந்து இருக்கிறார்கள் என்ற வரலாற்றை மட்டும் நான் சொல்ல விரும்பவில்லை.







இன்று நாகூரில் இருக்கக் கூடிய தர்காவையும், அதன் வானளாவிய மினாராக்களையும் கட்டுவதற்குத் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்கள் பரம்பரையினர் சரபோஜி மன்னர் வழங்கிய மானிய வரலாற்றை எல்லாம் இந்த நாட்டுக்குச் சொல்லிக் காட்ட வேண்டும். இன்னும் சொல்லப் போனால் அந்த மினாராவால் கூடத்தில் விமானத்தில் வந்து அமரக்கூடிய புறாக்களுக்குத் தீவனம் போடுவதற்காக ஒரு கிராமத்தை வழங்கியிருக்கிறார்கள். அந்தக் கிராமத்திற்கு புறா கிராமம் என்று பெயர் இருக்கிறது. நன்னிலம் வட்டத்திலே திட்டச்சேரிக்கு அருகில் இன்னும் புறாகிராமம் இருந்து வருகிறது. இந்த நாட்டில் நிலவிய சமுதாய ஒற்றுமைக்கு, ஒருவரை மற்றவர் மதித்து வாழ்ந்த ஒரு மாட்சியை எடுத்துக் காட்டுவதாக இருக்கக்கூடிய இத்தகைய வரலாற்றை எல்லாம் அறநிலையத் துறை சிறப்பான முறையில் நூலாக வெளியிட்டால் அது சிறந்த பயனைத் தரும். இந்த மன்றத்தில் இருக்கக் கூடிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலச்சந்திரன் போன்ற உறுப்பினர்கள் இந்த உண்மையை உணர்ந்தால் நலமாக அமையும் என்று நான் கருதுகிறேன். (குறுக்கீடு) ஜிஸ்யா வரி என்பது இப்போது வாங்குவது இல்லை. மூகலாய மன்னர்களும், இந்துக்களும் எந்த அளவுக்கு இணக்கமாக இருந்தார்கள் என்பதைப் புரிந்து கொள்வதற்காக இதை நான் சொல்கிறேன். (குறுக்கீடு) நான் தெளிவான தமிழில் சொன்னேன். தமிழில் ஊர் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். இன்னும் புரியவில்லை என்றால் என்ன செய்வது அப்படிப்பட்டவர்களைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியது இல்லை.

(பிற்பகல் 1-20)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் யாரையும் புண்படுத்திப் பேசவில்லை. எனவே, நீங்கள் அமருங்கள்.

**திரு. வை. பாலச்சந்திரன்:** நானும் பேசும்போது யாரைப் பற்றியும் புண்படுத்திப் பேசவில்லை. நாணயமாகத்தான் பேசினேன். எனவே, அவரும் நாணயமாகப் பேச வேண்டும்.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** துணைத் தலைவர் அவர்களே, நானும் நாணயமாகத்தான் பேசுகிறேன். அத்தோடு நாநயத்தோடு பேசி இருக்கிறேன். நான் யாரையும்

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

புண்படுத்தக் கூடிய முறையிலே பேசவில்லை. அப்படிப் பேசுவது, என்னுடைய பண்பாடும் அல்ல. பழக்கமும் அல்ல. பாரம்பரியமும் அல்ல. அதை உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அடுத்து, நான் வனத் துறைக்குள் புக விரும்பவில்லை. புகுந்தால் வெளி வருவதற்கு நேரம் ஆகும் என்ற அச்ச உணர்ச்சி இருக்கிறது.

சுற்றுலாத் துறையைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அந்தத் துறை சமீப காலத்திலே மிக முனைப்போடு செயல்படத் துவங்கி இருப்பது நமக்கெல்லாம் மகிழ்வைத் தருகிறது. குறிப்பாக சுற்றுலாவை ஒரு தொழிலாக உருவாக்கக் கூடிய எண்ணத்தை இவ்வரசு கொண்டிருப்பதனை நான் வரவேற்கிறேன். அதிக முதலீடு செய்யாமலே, ஒரு நாட்டுக்கு வருமானத்தை தேடித் தரத்தக்க ஒரு சர்வதேசத் தொழிலாக இன்று சுற்றுலா அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அதிலும், உலகத்தினுடைய சுற்றுலாப் பயணிகளைக் கவரத் தக்க ஆயிரமாயிரம் தடயங்கள் நம்முடைய தமிழ் நாட்டிலேதான் இருக்கின்றன. தமிழகத்தினுடைய தொன்மையான வரலாறு ஒருபுறம் இருக்க கலை நுணுக்கங்கள் கொண்ட சிற்பங்களும் தமிழ்நாட்டிலே நிறைய இருக்கின்றன. அவற்றை எல்லாம், உலகத்திலுள்ள பழம் சின்னங்களை எல்லாம் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்ட மக்களுக்கு, தெரிவிக்க வேண்டிய முறையிலே தெரிவிக்கவில்லை. இந்திய நடுவண் அரசு சார்பாக ஒரு சுற்றுலாத் துறை செயல்படுகிறது என்றாலும், அவர்கள் செய்யக் கூடிய விளம்பத்திலே கூட தமிழ் நாட்டினுடைய சிறப்பு போதுமான அளவுக்கு சொல்லிக் காட்டப்படவில்லை.

ஆகவேதான் வெளிநாட்டிலிருந்து இந்தியாவுக்கு வரக் கூடிய பயணிகளில் 20 முதல் 23 விழுக்காடு தான் தமிழகத்திற்கு வருகிறார்கள் என்பது நமக்கு வேதனை அளிக்கக் கூடிய ஒரு புள்ளிவிவரமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, தமிழக சுற்றுலாத் துறையினுடைய சார்பாக சுற்றுலாப் பயணிகளுக்குச் சொல்லிக் காட்ட வேண்டிய உண்மைகளை வெளியிட வேண்டும். இந்தியாவிலே இருக்கக் கூடிய சுற்றுலாத் துறையினுடைய அதிகாரிகளுக்குக் கூட நம்முடைய உண்மைகளைச் சொல்லிக் காட்டத் தக்க பிரசுரங்களை இந்தியாவினுடைய எல்லா மொழிகளிலும் தயாரித்து, இந்தியா முழுவதும் வழங்குவது





[திரு ஆ. கா. அ. அப்துல் சமத்]

பயன் தரும் என்று நான் கருதுகிறேன். குறிப்பாக, இந்தச் சுற்றுலாப் பயணிகளைக் கவரத் தக்க ஒரு இடமாக நீண்ட நெடுங்காலமாக நம்முடைய தலைநகரத்திலே இருக்கக் கூடிய மெரீனா கடற்கரை இருந்து வந்திருக்கிறது. ஒரு காலத்திலே உலகத்திலேயே இரண்டாவது கடற்கரையாக—ரியோடி ஜெனரோவுக்கு அடுத்தபடியாக உள்ள கடற்கரை, மெரினா கடற்கரை என்ற பெருமை இருந்தது. இப்போது அது எத்தனையாவது இடத்திலே இருக்கிறது என்று என்னால் சொல்ல முடியவில்லை. உலகத்திலே பல கடற்கரைகள், அகலமும், நீளமும் இல்லாத கடற்கரைகளைக் கூட மிக அழகுசூழ் இடங்களாக அவர்கள் ஆக்கி இருக்கிறார்கள். மாற்றி இருக்கிறார்கள். நம்முடைய மெரினா அந்த அளவுக்குப் பாதுகாக்கப்பட, அழகுபடுத்தப்பட வேண்டியிருக்கிறது என்ற குறையையும் நான் சொல்லிக் காட்ட விரும்புகிறேன்.

சுற்றுலாப் பயணிகளாக வரக் கூடியவர்களை இன்னும் மனமகிழ்வோடு தங்கிச் சென்று தாங்கள் செல்லக் கூடிய நாடுகளில் எல்லாம் நம்முடைய தமிழகத்தினுடைய வளங்களைப் பற்றிச் சொல்லிக் காட்ட வேண்டுமானால், அவர்களுடைய பிரயாணத்திற்கு மேலும் பல வசதிகளைச் செய்து தர வேண்டும். இந்தத் துறையிலே எனக்கு ஒரு எண்ணம் ஏற்படுகிறது. சென்னையிலிருந்து மாமல்லபுரத்திற்கும், மாமல்லபுரத்திலிருந்து புதுவைக்கும், பிறகு திரும்ப, புதுவையிலிருந்து சென்னைக்கும் ஆக, பல நாடுகளிலே நடைமுறையில் இருப்பது போல், ஹோர்கிராஃப்ட் என்ற ஒரு போக்குவரத்து சாதனத்தை வாங்கி கடல் வழியாக விடுவோமானால், ஆயிரமாயிரம் பயணிகள் ஒரே நேரத்தில் அந்த மூன்று இடங்களையும் சென்று பார்த்து மிகுந்த மகிழ்வோடு தங்கள் நாடுகளுக்குச் செல்லக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும். அதற்கான வகையில் இந்தத் துறையின் அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாமல்லபுரத்தில் புராதன வாழ்க்கையைச் சித்தரித்துக் காட்டக் கூடிய ஒரு வளாகம் தோற்றுவித்து விடுவோமானால் அது பயன் தரத்தக்கதாக இருக்கும். ஹவாய்த் தீவிலே, பசிபிக் மஹாசமுத்திரத்தில் இருக்கக் கூடிய சிறிய தீவுகளிலே, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக உள்ள வாழ்க்கை

[திரு ஆ. கா. அ. அப்துல் சமத்]

நிலைகளை எல்லாம், இன்றும் செல்லக் கூடிய மக்கள் கண்டு தெரிந்து கொள்ளக் கூடிய முறையிலே பல வளர்களையே அமைத்து இருக்கிறார்கள். அப்படி மாமல்லபுரத்தில் ஒரு வளாகம் அமைத்து, பண்டைய காலத்தில், ரோமானிய நாட்டு வணிகர்களும், பிற நாட்டு வணிகர்களும் எப்படிக் கொள்வினை, கொடுப்பினை நடத்திச் சென்றிருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த வகையில் சிறு கிராமத்தை உண்டாக்கினால் கவர்ச்சிகரமாக அமையும் என்று நான் நம்புகிறேன். எனவே, இந்தத் துறையிலே அமைச்சரவர்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

குறிப்பாக, நம்முடைய உதகமண்டலம், மலைகளுக்கெல்லாம் இராணி என்று பாராட்டப்படக் கூடிய ஒரு பெருமை பெற்ற இடம். இந்த இடத்திற்குச் சென்றுவர வாகன வசதிகள் வேண்டும். சென்னையிலிருந்து விமான வசதி செய்யப்பட்டால் இந்தியாவிற்கு வரும் அன்னிய நாட்டு விமானப் பயணிகள் வெகு சுலபமாக அங்கே சென்று வரும் வாய்ப்பைப் பெறுவார்கள். அதன் மூலம் சுற்றுலாத் துறைக்குப் பெரிய ஆக்கம் ஏற்படும் என்று கருதுகிறேன்.

முட்டுக்காட்டை அபிவிருத்தி செய்வதற்கு அரசு மேற்கொண்டிருக்கிற முயற்சிகளை வரவேற்கிறேன். அடுத்து உள்ள கோவளம் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு இடம். அங்கே ஒரு தர்க்கா இருக்கிறது, ஒரு பெரியவர் அடங்கியிருக்கிறார். அவர் 1,000 ஆண்டுகளுக்கு முன்பு, நபிகள் நாயகத்தின் தோழர்களில் ஒருவராக இருந்தவர் என்று முஸ்லிம் வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. அப்படிப்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்த இடம் முட்டுக்காட்டிற்கு அருகில் இரண்டொரு மைல் தூரத்திலேயே இருப்பதால் அதையும் சீர்படுத்தி, செம்மைப் படுத்தினால், வருகின்ற பயணிகள் அங்கே சென்று வர வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



[திரு ஆ. கா. அ. அப்துல் சமத்]

நாகூரைத் தனி நகரியமாக ஆக்கி, அதைச் சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆண்டு முழுவதும் எல்லாச் சமய மக்களும் வந்து செல்லும் இடமாக நாகூர் இருப்பதை அமைச்சரவர்களும் நன்கு அறிவார்கள். தமிழ்நாடு ஓட்டல் ஒன்று நாகையிலே கட்டப்பட இருக்கும் அரசின் எண்ணத்தை அறிகிறேன். அன்புகூர்ந்து நாகைக்கும், நாகூருக்கும் இடைப்பட்ட இடத்திலே அது கட்டப்பட்டால் பெரும் பயன் தரும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

ஏற்கனவே இருந்த சுற்றுலா அமைச்சர்கள் அடிக்கடி உலகமெங்கும் சுற்றி வந்து அங்குள்ள நிலைமைகளைப் பார்த்து வந்தார்கள். நான் அறிய, நம்முடைய அமைச்சர் அப்படி வெளிநாடுகளுக்குச் சென்று வந்ததாகப் பத்திரிகையில் பார்க்கவில்லை, அவர்களும் சென்று வர வேண்டும், அப்படிச் சென்று வந்தால், (குறுக்கீடு) இப்பொழுது சென்றால் சுற்றுலாத் துறையில் என்னென்ன உத்திகளை நவீன முறையில் கையாண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றி நேரடியாகத் தெரிந்து கொள்ளலாம்—அது தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு வளம் சேர்க்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

அறநிலையத் துறையைப் பற்றி விவாதிப்பதற்கு வாய்ப்பு கொடுப்பதைப் போல, வக்ப் வாரியத்தைப் பற்றியும் விவாதிப்பதற்கு நேரம் ஒதுக்கித் தரப்பட்டால் முஸ்லிம் அறக் கட்டளைகள் எப்படி நிர்வகிக்கப்படுகின்றன என்பதைப் பற்றி சபையிலே ஆய்ந்து, அதில் உள்ள குறைபாடுகளைக் களைந்து, எப்படி உன்னதமான முறையிலே, செம்மையாக நிர்வகிக்கப்பட வேண்டுமோ அப்படி நிர்வகிப்பதற்கான யோசனைகளை நாங்கள் வழங்குவதற்கான வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செய்தித் துறை பற்றிய ஒரேயொரு வார்த்தை. செய்தித் துறையின் சார்பாக அரசின் விளம்பரங்கள் நிரம்ப வருகின்றன. அப்படி வருவதன் மூலம் நாட்டிலே அரசின் சார்பிலே என்ன நடக்கிறது என்று மக்கள் தெரிந்துகொள்ள வாய்ப்பு இருக்கிறது. அப்படி வழங்கப்படும் விளம்பரங்களை, அன்புகூர்ந்து எதிர்க் கட்சிப் பத்திரிகைகளுக்கும், அரசின் கருத்துக்கு முரண்பட்ட

[1985 ஜூன் 18

[திரு ஆ. கா. அ. அப்துல் சமத்]

வகையில் தலையங்கங்களை எழுதும் பத்திரிகைகளாக இருந்தாலும், அரசுக்கு எதிரான, அரசுக்கு விரோதமான கருத்துக்களை வெளியிடுகின்ற பத்திரிகைகளுக்கும் கூட அந்த விளம்பரங்கள் தரப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், விளம்பரங்கள் வழங்கப்படும்போது பெரிய பத்திரிகைகள் என்று மட்டும் கருதாமல், சில ஆயிரம் செல்லும் பத்திரிகைகளாக இருந்தாலும் சமுதாயத்தின் ஒரு தரப்பிலே சென்றடைந்து, அவர்களுக்கு செய்திகளைத் தெரிவிக்கும் வாய்ப்புகள் கொண்ட பத்திரிகைகளாக இருப்பதால் அவைகளையும் கணக்கில் எடுத்து அவற்றிற்கும் விளம்பரங்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்கு வாய்ப்பு அளித்ததற்காக நன்றி கூறி விடைபெறுகிறேன்.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

* **திரு. கே. கல்லன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகின்றேன். நாட்டிலுள்ள வளங்களில் காட்டு வளம் மிகவும் முக்கியமானது. இந்த வளத்தை நாம் காப்பாற்றினால் தான் மற்ற வளங்களையும் காப்பாற்ற முடியும். நாட்டிலே ஏறக்குறைய மூன்றில் ஒரு பகுதி காட்டு வளமாக இருக்க வேண்டுமென்பது நியதி. தமிழகத்தைப் பொறுத்தவரையில் அது 16 சதவீதமாகத்தானிருக்கிறது. கடந்த 1980-லே அமைச்சர் அவர்கள் இதே அவையிலே கூறும்போது, நிச்சயமாக நல்ல விதமாக நாம் தமிழகத்தை முன்னுக்குக் கொண்டு வருவோம் என்று கூறியிருக்கிறார். நானும் ஆண்டு ஒன்றுக்கு 1 சதவீதமாவது காட்டு வளத்தைப் பெருக்க முடியும் என்று நினைத்தேன். ஆனால் நாம் நினைத்தது இந்த இடத்தில் நடக்கவில்லை. ஆகவே, கவனத்தோடு இந்த முக்கியமான பிரச்னையில் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு உதாரணமாக, நீலகிரியில் கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பாக பெய்த மழையில் ஏறக்குறைய ½ பாகம் தான் இப்பொழுது பெய்கிறது. அதே நிலைமைதான் நாட்டில் பூராவும் நிலவுகிறது. நீலகிரியில் மழை பெய்யாததால் என்ன, என்ன துன்பங்கள் என்பது உங்களுக்குத்



1985 ஜூன் 18]

[திரு. கே. கல்லன்]

தெரியும். நீலகிரியில் ஹைடல் மின்சாரம் உற்பத்தி செய்யப் படுகிறது. மொத்த உற்பத்தியில் 30 சதவீதத்தை நீலகிரியிலிருந்து தான் உற்பத்தி செய்கிறோம். தண்ணீரைக் கொண்டு உற்பத்தி செய்யும் அந்த மின்சாரத்தின் உற்பத்திச் செலவு மிகவும் குறைவு என்பதை நாம் அறிவோம். கடந்த சில ஆண்டுகளாக மழை இல்லாமல் நாம் முழு அளவுக்கு உற்பத்தி செய்ய முடியவில்லை. எனவே, முழு அளவு உற்பத்தி செய்ய முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம் என்பதை மனதிலே கொண்டு எதிர் காலத்தில் நமது சந்ததிகள் நன்றாக இருக்க வேண்டுமென்றால், தட்ப வெப்ப நிலைமை, ஈக்கலாஜிக்கல் பாலன்ஸை ஈப் அப் செய்ய வேண்டுமென்றால், முனைப்பாகவும், நிர்வாகத் திறமையாகவும் இந்தத் துறையிலே செயல்பட வேண்டும்.

சமூகக் காடுகள் திட்டத்தைக் கடந்த சில ஆண்டுகளாக அமுல் நடத்தி, அதற்கான உதவிகளைச் செய்து வருகிறோம். அந்தத் திட்டம் நல்ல திட்டம். சர்க்கார் நல்லவிதமாக அந்தத் துறையிலே பணியாற்றிக் கொண்டு வருகிறது. இருந்தபோதிலும் நாம் நினைத்த அளவு பலன் கிடைக்கவில்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் போர்க் கால அளவிலே அதைச் செயல்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். சமூகக் காடுகள் திட்டத்தைச் செயல்படுத்தும் போது பலவித சிக்கல்கள் வருகின்றன. ரெவின்யூ பூமி, பஞ்சாயத்தைச் சேர்ந்த பூமி எல்லாம் இருக்கின்றன. மற்றும் வன இலாகா பூமிகளில் எல்லாம் சமூகக் காடுகள் திட்டத்தைச் செயல்படுத்த முயலும்போது பல சிக்கல்கள் வருகின்றன. எனவே, அதை நல்ல விதமாகச் செய்ய ரெவின்யூ டிபார்ட்மெண்ட், போலீஸ் டிபார்ட்மெண்ட் போன்ற பல துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளைக் கொண்ட ஒரு கமிட்டியை ஏற்படுத்தினால் அதை நல்ல விதமாகச் செயல்படுத்த முடியும் என்று நினைக்கிறேன்.

நீலகிரியிலே காடுகள் அழிக்கப்படுவது ஓரளவுக்கு நிச்சயமாக நிறுத்தப்பட்டிருக்கின்றது. என்றாலும் முழுமையாக அது நிறுத்தப்படவில்லை. அதில் ஒரு நல்ல அளவில், கணிசமான முன்னேற்றத்தைச் செய்திருக்கிறோம். அதே அளவில் இருந்தால் நாம் நிச்சயமாக காடுகள் அழிவதைத் தடுக்க முடியும். அதற்காக அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

[1985 ஜூன் 13

[திரு. கே. கல்லன்]

நீலகிரியில் தனியார்கள், தங்களிடம் உள்ள இயற்கைக் காடுகளை அழிக்காமல் இருக்க தயவு செய்து ஒரு அவசியமான அவசரச் சட்டம் இயற்ற வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் நீலகிரியில் விறகு ரூ. 6, ரூ. 7, ஒரு மணு விற்கிறார்கள். ஏறக்குறைய டன் ஒன்றுக்கு ரூ. 600, ரூ. 700 ஆகிறது. நீலகிரியிலேயுள்ள பெருவாரியான மரங்கள் வெளியே விற்கப்படுவதால் இந்த நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, உண்மையான தேவையிருப்பவர்களுக்குத் தகுந்த வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வனத் துறைக்குச் சொந்தமான பூமிகளில் மாடு மேய்ப்பது வழக்கம். குறிப்பாக மசினகுடி, வால்பாறை போன்ற பகுதிகளில் இது நெடுங்காலமாக இருந்து வருகிற வழக்கம். கடந்த மூன்று ஆண்டுகளாக வனத் துறை அதிகாரிகள் மாடு மேய்க்கக் கூடாது என்று மறுக்கிறார்கள். விவசாயிகள் தான் மாடு மேய்க்கிறார்கள். ஆகையால் வனத் துறை அதிகாரிகள் மறுப்பதைத் தளர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சின்கோனாத் துறை ஏறத்தாழ 125 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. 125 ஆண்டு நிறைவை ஒட்டி இந்த ஆண்டை ஒரு பெரிய விழாவாக கொண்டாட அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்கள் என்று நம்புகிறேன். அதற்கு முன்னால் சில நல்ல திட்டங்களை, மக்களுக்கு பயன்படும் திட்டங்களை அறிவிப்பார்கள் என்றும் நம்புகிறேன். இந்தத் துறையிலே ஏறத்தாழ 2,166 முழு நேர ஊழியர்களும் 780 தற்காலிக ஊழியர்களும் இருக்கிறார்கள். எனக்கு முன்னாலே பேசியவர்கள் குறிப்பிட்டதைப் போல அந்தத் தொழிலாளர்களுக்கு தேயிலைத் தோட்டத்தில் என்ன சம்பளம் கொடுக்கப்படுகிறதோ அதே சம்பளத்தைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சின்கோனாத் துறையில் சற்று அக்கறை செலுத்தினால் பல முன்னேற்றங்களைச் செய்ய முடியும். பல ஆயிரம் ஏக்கர்களைக் கொண்டிருக்கிற இந்த இலாகா சம்பந்தமாக பல நடவடிக்கைகள் எடுத்தால் நிச்சயமாக நல்ல பலன் அடையலாம். இப்போது ஏறத்தாழ ஆயிரம் ஏக்கரில் ஜிரேனியம் உற்பத்தி செய்து



1985 ஜூன் 13]

[திரு. கே. கல்லன்]

கொண்டிருக்கிறார்கள். அதற்கு நல்ல டிமாண்ட் இருக்கிறது. அங்கே ஒரு சென்ட் ஃபாக்டரியை, தேவைப்பட்டால் அயல்நாட்டு கொலாபரேஷனுடன், ஏற்படுத்தினால் அதன் மூலம் நல்ல வருவாய் கிடைக்கும். அதுபற்றி ஒரு ஆய்வு மேற்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சுற்றுலாவைப் பொறுத்தவரையில் பல மாநிலங்கள் இதை ஒரு தொழிலாக அறிவித்திருக்கின்றன. முதல் இல்லாத ஒரு தொழில் இது. ஊட்டியிலே நடைபெற்ற மலர் கண்காட்சியில் பங்கு கொண்ட மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நம்முடைய மாநிலத்திற்கு ஏறத்தாழ 70 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி சுற்றுலா மூலம் கிடைக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். தமிழ் நாட்டுக்கு மட்டும் 70 கோடி கிடைத்தது என்றால் மற்ற மாநிலங்களுக்கும் ஒரு கணிசமான தொகை கிடைத்திருக்கும். அதனால் இந்தத் துறையில் நம்முடைய அரசு அதிக அக்கறை செலுத்த வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் சமது அவர்கள் கூறியதைப் போல அவசியம் என்றால் இங்கே இருக்கிற அதிகாரிகள் வெளிநாடுகளுக்குச் சென்று, அங்கே இந்தத் துறை எப்படி செயல்படுகிறது என்பதை அறிந்து வந்து, இங்கே இத்துறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உல்லாசப் பயணிகளைக் கவர வேண்டுமென்றால் அவர்களுக்கு வழிகாட்டுகின்ற கைடுகளுக்கு நிறைய தகவல்கள் தெரிந்திருக்க வேண்டும். இப்போது அவர்களுக்கு மிகக் குறுகிய கால பயிற்சி கொடுக்கிறோம். அது போதாது. அவர்களுக்கு நல்ல பயிற்சி கொடுத்து சிறந்த கைடுகளாக நியமிக்க வேண்டும். நீண்டகால நோக்கோடு எண்ணிப் பார்க்கும்போது, அதற்காக ஒரு பயிற்சி நிலையத்தை வைத்து, படித்த இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து கைடுகளாக நியமிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் சுற்றுலாப் பயணிகளைக் கவர வேண்டுமென்றால் நகரங்களை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். முதல் கட்டமாக முக்கியமான நகரங்களையாவது சுத்தமாக வைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கே. கல்லன்]

உதகையைப் பொறுத்தவரையில் குதிரைப் பந்தயம் இன்டர்வெனியூ பெட்டிங் ஏறத்தாழ 200 நாள், 250 நாள் வருடத்தில் நடைபெறுகிறது. இது ஒரு பெரிய சூதாட்டமாக நடக்கிறது. அரசு அதைக் கட்டுப்படுத்தி, தடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அங்கே அதிகாரிகளும், மாணவர்களும், ஆசிரியர்களும், மற்றவர்களும் சென்று அவர்கள் வீட்டுக்கு எந்த அளவுக்கு வருமானத்தை எடுத்துச் செல்ல வேண்டுமோ அந்த அளவுக்கு எடுத்துச் செல்லாமல் இந்த இன்டர்வெனியூ பெட்டிங்கில் ஈடுபட்டு, பணத்தை இழந்து விடுகிறார்கள். ஆகவே, நீலகிரி பூராவும் நீங்கள் இந்த இன்டர்வெனியூ பெட்டிங் முறையை அடியோடு போக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-40)

எனக்கு முன்பு பேசிய நண்பர்கள் எல்லாம் டி.வி.-யின் உபயோகத்தை பற்றியும், அதனுடைய பல்வேறு பயன்கள் பற்றியும் சொன்னார்கள். இந்த நிலையத்தை உதகைக்குப் பெற்றுத் தர வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

உதகையைப் பொறுத்தவரையில் சுற்றுலாப் பயணிகளை இரண்டு முக்கியமான இடங்கள் கவர்கின்றன. ஒன்று அரசாங்கத்தினுடைய பொட்டானிகல் கார்டன். அடுத்தது எரி. அந்த அரசினர் பூங்காவைப் பொறுத்தவரையில் அன்னை இந்திரா அவர்களின் பெயரை வைக்க வேண்டும் என்று நான் வேண்டுகோள் விடுத்து அதை நீங்கள் ஏற்றுக் கொண்டதற்காக என் சார்பாகவும் நீலகிரி மக்கள் சார்பாகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதனை வெகு சீக்கிரத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஊட்டி ஏரியைப் பொறுத்தவரையில் இங்கே திரு. உச்சி கவுடர் அவர்கள் கூடச் சொன்னார்கள். அங்கே இருக்கின்ற தண்ணீர் மிகவும் மோசமான தண்ணீர். எனவே இந்த மழைக் காலத்திற்கு முன்பாவது தூர் எடுத்து ஆழப்படுத்தி அந்தக் கழிவுத் தண்ணீரை அப்புறப்படுத்தி விட்டு நல்ல தண்ணீர் வருகின்ற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த வகையில் அதனை ஒரு நல்லவிதமான சுற்றுலா மையமாக ஆக்க வேண்டும் என்று





[திரு. கே. கல்லன்]

கேட்டுக் கொள்கிறேன். பல இலட்சக்கணக்கான ரூபாய் அங்கே சாங்ஷன் செய்தும் நல்ல முறையில் செயல்படுத்த முடியவில்லை. எனவே அந்தப் பணிகளை விரைவில் செய்யும்படி இந்தத் தருணத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

நேரம் மிக அதிகமாக ஆகிவிட்டதன் காரணத்தால் அமைச்சரவர்களின் மற்ற மானியக் கோரிக்கைகளின் மீது பேச விரும்பவில்லை. மானாமதுரையிலே மேல்நட்டார் கிராமத்திலுள்ள பிரசித்தி பெற்ற கோயிலின் தேர் பல ஆண்டுக் காலமாக ஓடாமல் இருக்கின்றது என்று ஒரு நண்பர் சொல்லி யிருக்கிறார்கள். அதைச் சீர்படுத்தி ஓடச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் உதகையிலே இருக்கின்ற மாரியம்மன் கோயில் எல்க்ஹில் போன்ற கோயில்களைப் பற்றி அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதை நல்லவிதமாகச் சீர்திருத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி, சுற்றுலாத் துறை, அறநிலையத் துறை, வனத் துறை, சின்கோனாத் துறை ஆகிய ஐந்து துறைகளின் சார்பில் இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கைகளின் மீது பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த பதிமூன்று உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னதற்காக முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நேரம் அதிகம் ஆகிவிட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களே நினைவுப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இங்கே விவாதத்தில் கலந்து கொண்டிருக்கின்ற உறுப்பினர்கள் எல்லாம் இந்தத் துறைகளைப் பற்றி மிகப் பெரிய அளவில் பதில் சொல்ல வேண்டிய அளவுக்கு எந்தக் குற்றச்சாட்டையும் குறைகளையும் எடுத்துச் சொல்லாமல் இவ்வளவு பெரிய விவாதத்தில் ஏதாவது ஒன்றிரண்டு குறைகளைக் கூட எடுத்துச் சொல்லவில்லை என்றால் விவாதத்திற்குச் சுவை இருக்காது என்ற அந்த அளவில் சில குறைகளை அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சொல்லியிருக்கிறோம். அதுவும் குறைகளை நிவர்த்தி செய்கின்ற அரசு புரட்சித் தலைவரின் அரசு என்ற நம்பிக்கையில் இந்தக் குறைகளைக் கூடச் சொல்லியிருக்கிறோம்.

[1985 ஜூன் 13

[திரு. ஆர். எம். வீரப்பன்]

அதற்காக அமைச்சர் அவர்கள் இவ்வளவு சங்கடப்பட்டு 2 மணிக்கு மேலே ஏன் எங்களுக்குப் பதிலளித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள். உங்களுடைய எண்ணத்தைப் புரிந்து கொண்டு, உங்களுக்கு நீண்ட நேரம் பதிலளித்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற வகையில், நான் நேரத்தை அதிகம் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

இந்த ஐந்து துறைகளிலும் பேசிய உறுப்பினர்கள் அதிகமாக அறநிலையத் துறையைத்தான் முன்னிலைப்படுத்தி அவர்கள் விவாதத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அருமைச் சகோதரர் அப்துல் சமத் அவர்கள் உட்பட அறநிலையத் துறை பற்றிப் பேசுகின்ற அளவுக்கு அறநிலையத் துறை தமிழகத்தில் மிகச் சிறந்த ஒரு இடத்தைப் பெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை நாம் உணர்ந்து கொள்கின்ற அதே நேரத்தில் இந்தத் துறைக்கு இவ்வளவு சிறப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்ற தமிழகத்தின் நாயகன் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அறநிலையத் துறை பற்றிப் பேசுகின்றபோது அந்தத் துறையிலே அதிகமான குற்றச்சாட்டுக்களையோ அல்லது குறைகளையோ யாரும் எடுத்துச் சொல்லவில்லை. ஏதோ ஒன்றிரண்டு ஆலயங்களில் சில குறைபாடுகளைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஒரு ஆலயத்தினுடைய திருக்குளத்திலே கடைகளைக் கட்டியிருக்கிறார்கள். அதை நீக்குவதற்கு வழக்குப் போடவில்லை. நடவடிக்கை எடுக்கவில்லை. போட்ட வழக்கையும் திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டார்கள் என்ற குறைபாட்டைச் சொன்னார்கள். அதேபோல மானாமதுரை மாண்புமிகு உறுப்பினர், ஒரு ஆலயத்தில் திருடு போய்விட்டது, அதற்காக அங்கே இருக்கிற அர்ச்சகர்கள் மற்ற ஊழியர்களிடமிருந்து பணம் வசூல் செய்துக் கொண்டிருக்கிறாகள் என்கிற குற்றச்சாட்டை இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அவைகளின் மீதெல்லாம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



1985 ஜூன் 13]

[திரு. ஆர். எம். வீரப்பன்]

குறிப்பாக பூந்தமல்லியைப் பொறுத்தவரையில் அவர்கள் தண்ணீர் இல்லாத அந்தக் குளத்திலே ஏதோ கடைகளைக் கட்டுவதற்காக ஆக்கிரமிக்கின்ற வகையிலே முயற்சிகளை எடுத்துக் கொண்டு, அதற்காக நீதிமன்றத்திற்குப் போய், நீதிமன்றத்திலே பல சட்ட சிக்கல்களினாலே தள்ளுபடி செய்யப்பட்டு, கடைசியிலே நாம் மறுபடியும் நீதிமன்றத்திற்குப் போய்— அங்கே நெம்பர் கொடுக்கப்படாத நிலையிலே அது நிற்கிறது. நம்முடைய மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர் தெரிவித்ததைப் போல பொதுமக்கள் இன்றைக்கு அந்தப் பிரச்சினைகளை தங்களுடைய பிரச்சினைகளாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்கிற செய்தி எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. அது நல்லது. இந்த ஆலயங்களைப் பற்றி பொதுமக்கள் கவலைப் படுகிற நேரத்திலே, பிரச்சனைகளே வராது. பொதுமக்கள் ஒரு காலத்திலே இந்த ஆலயங்களை மறந்துவிட்டக் காரணத்தினால்தான் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஆலயங்களில் தோன்றியிருக்கின்றன என்பதையும், அப்படி பொதுமக்கள் ஆலயங்களை மறந்தால் சமுதாய வாழ்க்கையிலே சில பண்புகள் மறைந்துவிடும் என்று மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் அப்துல் சமத் சொன்னது போல, இப்போது பொதுமக்கள் இந்த ஆலயங்களைப் பற்றி அக்கறை கொள்கிற வகையிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே புதிய மறுமலர்ச்சி தோன்றியிருக்கிறது என்பதையும், நான் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்கு எடுத்து வைக்க விரும்புகிறேன்.

அந்த ஆலய நிர்வாகத்தைப் பற்றிச் சொல்கிறபோது, மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. அனந்தகிருஷ்ணன் அவர்களும், இங்கே நம்முடைய சுயேச்சை உறுப்பினர் திரு. வை. பாலச்சந்திரன் அவர்களும் ஆலயங்களின் நிர்வாகத்தை அரசு பொறுப்பிலேயிருந்து விடுவித்துவிட வேண்டும். அவைகள் தன்னாட்சி பெற்ற நிர்வாகமாக அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அரசு பொறுப்பிலே இருக்கிற காரணத்தினாலேதான், இந்தச் சட்ட மன்றத்திலே ஒரு நாள் நடக்கின்ற விவாதத்திலே 13 உறுப்பினர்கள் கலந்துக் கொண்டு பேசியிருக்கிறார்கள். இந்த நாட்டு மக்களுக்கு என்ன தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். என்ன குறைகள் நடைபெறுகிறது என்பதையும் அங்கே குறை இருக்கிறதோ இல்லையோ, குறை

[திரு. ஆர். எம். வீரப்பன்]

என்று உங்கள் காதுக்கு வந்த செய்திகளையும்—தெரிவித்திருக் கிறார்கள். குற்றம் கண்டிருந்தால் எடுத்துச் சுட்டிக்காட்டி யிருக்கிறார்கள்.

அரசு துறையிலே இது இல்லாதிருக்குமானால் அந்த வாய்ப்பை இந்த நாட்டு மக்கள் இழந்து விடுவார்கள் என்பதை அருள்கூர்ந்து நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அதைப்பற்றி இப்போது விரிவாக நான் எடுத்துச் சொல்வதற்கு விரும்பவில்லை என்பதற்குக் காரணம், இங்கே ஒரு சட்ட முன்வடிவு, ஆலய நிலங்களை இந்தக் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்திலே யிருந்து விடுதலை அளிக்க வேண்டும் என்ற அந்தச் சட்ட முன்வடிவு வருகிற நேரத்திலே, கொஞ்சம் பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்தால், அப்போது அதை நான் விரிவாகச் சொல்வதற்கு முடியும் என்று நினைக்கிறேன். ஆனால் ஒரே ஒரு கருத்தை மாத்திரம் இப்போது சொல்ல விரும்புகிறேன்.

அரசு பொறுப்பிலேயிருந்து எடுத்து விட்டு யாரிடத்திலே கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள்? அதை தயவுசெய்து கொஞ்சம் அடையாளம் காட்ட வேண்டும்.

பிறகு ஒரு நீண்ட கால வரலாறு சொல்லப்பட்டது. இந்த ஆலயங்களில் வெள்ளைக்காரன் ஏதோ செய்துவிட்டு போனான் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. பாலச் சந்திரன் அவர்கள் தெரிவித்தார்கள். வெள்ளைக்காரன் உண்மையில் அந்த ஆலயங்களில் நான் தலையிடவே மாட்டேன் என்று சொல்லிக் கொண்டிருந்தான். அதனால்தான் பல சிக்கல்கள், சங்கடங்கள் விளைந்தன.

இன்றைக்குக் கூட பூந்தமல்லி சட்ட மன்ற உறுப்பினர் சொன்னார்களே, பரம்பரை அறங்காவலர்கள் அந்த ஆலயங்களை நிர்வகித்துக் கொண்டு வருவதால், அந்த ஆலய சொத்துக்களை தங்கள் சொந்த சொத்துக்களைப் போலக் கையாளுகிறார்கள் என்று குறிப்பிட்டார்களே, அந்த ஆலயங்களின் நிர்வாகங்கள் எல்லாம் அறநிலையத் துறையிடம், அரசினுடைய பொறுப்பிலே வர வேண்டும் என்று கேட்டார்களே. அப்படிக் கொண்டு வர வேண்டும் என்று அன்றைக்கு வெள்ளைக்காரன் விரும்பாத காரணத்தினாலேதான் இன்றைக்கு இப்படிப்பட்ட பிரச்னைகள் எழுந்திருக்கின்றன. இந்த ஆலயத்திற்குள் நான் தலையிடுவது





[திரு. ஆர். எம். வீரப்பன்]

இல்லை என்று அவன் ஒதுங்கினான். ஆகவே, கரையான் புற்று எடுக்க கருநாகம் குடிபுகுந்தது போல என்று சொல்வார்களே அதுபோல, அந்த ஆலயங்களின் நிர்வாகங்களை பல தனிப்பட்ட சுயநலவாதிகள் ஏற்று, அதன் சொத்துக்களை தங்களுடைய சொந்த சொத்துக்களாக ஆக்கி, இன்று வரையிலும் சில இடங்களில் அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள்.

அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் போகிறபோது நீதிமன்றங்களுக்குச் சென்று வழக்காடுகிறார்கள். நம்முடைய பூந்தமல்லி சட்ட மன்ற உறுப்பினர் அவர்களும் கூட வழக்கறிஞர் தான். அவர் அந்த ஆலய வழக்குகளுக்கு எதிராக நீதி மன்றங்களில் வாதாடுகிறார்களா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. நானும் ஒரு பொது நிகழ்ச்சியில் கூட கேட்டுக் கொண்டேன். "வழக்கறிஞர்களின் காலைத் தொட்டுக் கேட்கிறேன். தயவுசெய்து இந்த ஆலயச் சொத்துக்களுக்கு எதிராக தனிப்பட்டவர்கள் அநியாயமாக வழக்கு மன்றத்திற்கு போகிறபோது, அந்த நீதிமன்றத்தில், வழக்கறிஞர்களாக இருப்பவர்கள், சட்டம் படித்தவர்கள் அதற்கு துணை போகாதீர்கள் என்று கூட கேட்டுக் கொண்டேன்."

நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர் அவர்களைப் போன்ற, வழக்கறிஞர்கள்—அவரைப் போன்ற என்று சொல்வதாலே, அவர் தான் என்று பொருள் அல்ல. அவர் ஒரு வேளை சட்ட மன்ற உறுப்பினராக இருக்கிற காரணத்தினாலே இதுபோன்ற வழக்கு களுக்குப் போகாமல் இருக்கலாம். வெறும் வழக்கறிஞர்களாக இருந்தால், அவர்களும் இது ஏதோ தங்களுடைய தொழில் தானே என்ற வகையில் அந்த வழக்குகளை ஏற்றுச் செய்யக் கூடும். ஆகவே இன்றைக்கு இந்த ஆலயம் சம்பந்தப்பட்ட வழக்குகள் நீதிமன்றம் வரையில், ஏன் சுப்ரீம் கோர்ட் வரையில் செல்லுகின்றன. அந்த நிலைமை இருக்கிறது.

மயிலை அருள்மிகு கபாலீசுவரர் கோவிலுக்குச் சொந்தமான ஒரு வீட்டில் குடியிருப்பவர் கொடுக்க வேண்டிய வாடகையையும் கொடுக்காமல், வாடகையை உயர்த்தினால் அதையும் கொடுக்காமல், காலியும் செய்யாமல், சுப்ரீம் கோர்ட் வரை செல்லுகிறார்கள். அவர் யார் என்று சொன்னால். தயவுசெய்து பத்திரிகை நண்பர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும், ஒரு

[1985 ஜூன் 13

[திரு. ஆர். எம். வீரப்பன்]

பத்திரிகையிலே உதவி ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்
அவர். அவர் சுப்ரீம் கோர்ட் வரையில் செல்வதற்கு வாய்ப்பு
இருக்கிறது.

(பிற்பகல் 1-50)

ஆகவே அப்படிப்பட்ட ஆலயச் சொத்துக்களை வைத்துக்
கொண்டு, சட்டத்தின் உதவியைப் பெற்று நிர்வாகத்தினை
முறியடித்துக் கொண்டிருக்கிறார்கள். அதேபோலத்தான் இந்தத்
தனியார் அறநிலையங்களில் பரம்பரை அறங்காவலர்களாக
இருப்பவர்கள் அறநிலையத் துறையினுடைய கட்டுப்பாட்டிற்
குள்ளே அவை வர முடியாமல் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.
இங்கே மாண்புமிகு பாலச்சந்திரன் அவர்கள் ஒன்றைச்
சொன்னார்கள். யாரோ ஆன்மீகப் பெரியவர்களிடம்
ஒப்படையுங்கள் என்று சொன்னார்கள். யார் ஆன்மீக
பெரியவர்கள்? எங்களுடைய ஆளும் கட்சியின் சார்பிலிருந்து
திரு. சோலைராசு அவர்கள் சொன்னார்கள் என்று கருதுகிறேன்.
யாரையோ பெயரிடாமல் குறிப்பிட்டுச் சொன்னார்கள்.
அப்படிப்பட்டவர்களிடம் ஒப்படைக்கச் சொல்கிறீர்களா?
100 ஆண்டுகளுக்கு மேலாக வருகிற நீண்ட வரலாறு.
அறநிலையத் துறைக்கு ஒரு சட்டம் வந்து அரசினுடைய
கட்டுப்பாட்டிற்குள்ளே வரவேண்டுமென்று கொண்டு வந்தது
தமிழகத்திலே வெள்ளைக்காரன் மட்டுமல்ல. இந்த நாட்டிலே
மிகச் சிறந்த பக்திமான்கள், சமயத்திலே நம்பிக்கையுள்ளவர்கள்,
நீதிக்கட்சி ஆட்சி நடத்திய காலத்தில்தான் இந்தச் சட்டமே
கொண்டுவரப்பட்டது. இது தனி போர்டாக வைக்கப்
பட்டது. அந்த போர்டு சரியாக இயங்கவில்லை என்ற
காரணத்தால் மீண்டும் அரசினுடைய பொறுப்பிலே கொண்டு
வரப்பட்டது. 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைச்
சட்டம் இருக்கிறது. இதுபற்றி 1962 ஆம் ஆண்டில் இந்திய
அரசு, டாக்டர் சி. பி. இராமசாமி அய்யர் அவர்களைத்
தலைவராகக் கொண்ட ஒரு குழு அமைத்து இந்தியா பூராவும்
ஆராய்ந்து, இந்த அறநிலையத் துறை நிர்வாகத்தை எப்படி
நடத்தலாமென்று ஆலோசனை கேட்டது. அவர்களும்
ஆலோசனை தெரிவித்திருக்கிறார்கள். அவர் தெரிவித்ததில்
ஒரே ஒரு பகுதியை மட்டும் படிக்கிறேன். மாண்புமிகு
பாலச்சந்திரன் அவர்கள் அதற்குப் பிறகு யாரிடத்திலே இந்த
நிர்வாகப் பொறுப்பை ஒப்படைக்கலாமென்று சொல்லட்டும்.



1985 ஜூன் 13]

[திரு. ஆர். எம். வீரப்பன்]

It is also due to the fact that there is a tendency among many Madathipathis to treat the institutions as their private property and utilise most of the resources thereof for personal purposes and not for the purposes for which these institutions came into being In many cases the heads of the mutts have become essentially worldly and in some cases have been found by Courts to be corrupt and immoral.

இது 1962 ஆம் ஆண்டிலே நாத்திகர்கள் தந்த உரை இல்லை.
சான்றில்லை. டாக்டர் சி. பி. இராமசாமி அவர்கள் இந்தியா
பூராவும் ஆராய்ந்து, எல்லாவற்றையும் பற்றி ஆராய்ந்து
சொன்னது. அவர்கள் மடாதிபதிகளிடத்தில், சமய சான்றோர்
களிடத்தில் எவ்வளவு மரியாதை உள்ளவர்கள் என்பது தெரியும்.
அவர்கள் கொடுத்த கருத்து. அதற்குப் பிறகு இந்த நிர்வாகம்
எப்படி இருக்க வேண்டும் என்பதையும் சொல்கிறார்கள்.

After a careful balancing of the considerations, pros and cons, we have arrived at the conclusion, that the excutive administration of temples by a single officer will be much more expeditious and efficient than administration by a body of persons or Board of Commissioners. The appointment of Commissioners in the States should be made by the Governor of the State in his individual capacity after such consultations as the deems to be necessary with religious and secular interests concerned.

ஆகவே இது நீண்ட காலமாக பல்வேறு அனுபவங்களுக்குப் பிறகு
தான், அரசர்கள் பொறுப்பிலே இருந்த நிர்வாகம் மாறி மாறி,
வெள்ளைக்காரன் காலத்திலே தனியாக விடப்பட்டு, கண்டவர்கள்
எல்லாம் உள்ளே புகுந்து கொள்ளையடிக்கிற இடங்களாக
மாறியதைப் பார்த்த பிறகு, நம்முடைய நீதிக் கட்சித் தலைவர்கள்
ஆளுகை நடத்தியபோதுதான் இந்த அற்புதமான அமைப்பு
உருவாக்கப்பட்டது. அதிலேயிருந்து நாம் இன்றைக்கு இவ்வளவு
சிறந்த நிர்வாகத்தைப் பெற்றிருக்கிறோம். இங்கே பூந்தமல்லி
சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள்.
நீங்கள் அறங்காவலர்களைப் போடாமல் இருக்கிறீர்கள், ஃபிட்
பெர்சன்' என்று போடுகிறீர்கள், உங்களுடைய கட்சிக்
காரர்களையே போடுகிறீர்கள், அங்கேயெல்லாம் விரைவிலே
அறங்காவலர்களைப் போட வேண்டும், ஃபிட் பெர்சன் என்று
போடக் கூடாது என்று சொன்னார்கள். கட்சிக்காரர்களைப்
போடுகிறீர்கள் என்று சொல்கிறார்களே என்ற காரணத்தால்,

[திரு. ஆர். எம். வீரப்பன்]

நம்முடைய அருள்மிகு தேவி கருமாரி அம்மன் ஆலயத்திற்கு ஒரு ஓட்டல் அதிபரை 'ஃபிட் பெர்சனாகப்' போட்டால் அவரை ஏன் போடுகிறீர்கள் என்று கேட்கிறார். வேறு யாரைக் கண்டுபிடித்துப் போடுவது? நான் கேட்கிறேன், கட்சிக்காரர்கள் என்றால், அவர்கள் என்ன பாவம் செய்தார்கள்? அவர்கள் இந்த நாட்டு மக்கள் இல்லையா? காங்கிரஸ் கட்சி ஆண்ட காலத்திலே என்ன நடந்தது? இருக்கிற கஷ்டம் எல்லாம் 20, 30 ஆண்டுக் காலம் அவர்களே ஆண்டு கொண்டு இருந்தார்கள். அப்படி இருக்கிற ஒரு முறையில் மாறுதல் வருகிறபோது, ஆட்சி மாற்றம் வந்த நேரத்தில் இந்த நிர்வாகத்திலேயும் மாறுதல் வந்தது. இதையும் மக்களே ஏற்றுக் கொண்டு, விரும்பி ஏற்றுக் கொண்டு, மாற்றம் வருகிறபோது குறைகள் சொல்லிக் கொண்டிருந்தால் எப்படி? அன்றைக்கு யாரும் இதைப் பற்றி கவலைப்படவில்லை. இன்றைக்கு எல்லோரும் கவலைப்படுகிற அளவிற்கு, இன்றைக்கு புரட்சித் தலைவர் ஆட்சியிலே இந்த அறநிலையத் துறை மாறியிருக்கிறது. ஆகவே இது எல்லோர் கண்ணுக்கும் பச்சைப் பசேல் என்று தெரிகிறது. ஆகவே காய்த்த மரத்திற்கு கல்லடி விழும் என்பதைப் போல எல்லோருடைய கண்ணும் இதன் மீது பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே உங்கள் கட்சி, உங்கள் கட்சி என்று சொல்கிறார்கள். எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ன பாவம் செய்தார்கள்? எனவே, தயவுசெய்து கட்சியை மறந்துவிடுங்கள். நல்லவரா என்று கேளுங்கள். நல்லவர்கள் அல்லாதவர்கள் என்றால், அடையாளம் காட்டுங்கள், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறோமா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். திருவாரூருக்குப் பக்கத்திலே ஒரு மரத்தை வெட்டினார்கள், அதனால் அறங் காவலரை நீக்கிவிட்டார்கள் என்று சொன்னார்கள்; இன்னொரு ஆலயத்தைப் பற்றியும் ஏதோ சொன்னார்கள். அவற்றை எல்லாம் முறையாக ஆதாரத்தோடு தெரிவித்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். யாராக இருந்தாலும் தாட்சண்யமே கிடையாது. மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் ஆனந்தகிருஷ்ணா போன்றவர்கள் இங்கே முதன்முதலாக வந்திருக்கிற காரணத்தால், எங்களுடைய வாதங்களை அவர்கள் கேட்கவில்லை. நாங்கள்



[திரு. ஆர். எம். வீரப்பன்]

3, 4 ஆண்டுக் காலமாகவே சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஒரு பட்டியலே இருக்கிறது. இன்றைக்கு மிகப் பெரிய வருமானம் வரக்கூடிய ஆலயங்களில் இருக்கக்கூடிய அறங்காவலர்கள் தலைவர்கள் அல்லது ஃபிட் பெர்சன் என்பவர்கள் எங்களுடைய கட்சியைச் சார்ந்தவர்களே அல்ல, எங்கள் மீது இருக்கிற கோபமே, கட்சிக்காரர்களை போடமாட்டேன் என்கிறார்கள் என்பதுதான்.

புரட்சித் தலைவர் மீது இருக்கிற வருத்தமே, எங்களை எல்லாம் ஆலயங்களிலே விடமாட்டேன் என்கிறாரே என்பது தான். நாங்கள் கூட நினைத்தோம். இவர்கள் எல்லாம் ஆலயத்திலே நம்பிக்கையில்லாதவர்கள், அங்கே போனால ஏதாவது இடையூறு வருமோ என்று. இல்லை, இல்லை, நாங்கள் எல்லாம் நம்பிக்கை உள்ளவர்கள் என்பதைத் தானே புரட்சித் தலைவர் உடல் நலம் குன்றியிருந்தபோது, இந்த நாடே காட்டியது. ஆகவே கட்சி பேதம் இல்லாமல், அவ்வளவு பேர்களும் பிரார்த்தனை நடத்தினார்கள். இதிலே இன்னும் சொல்லப் போனால், புரட்சித் தலைவருடைய மகிமையினால் தானே அறநிலையத் துறையினுடைய விவாதத்திலே மாண்புமிகு அப்துல் சமது அவர்கள் இன்றைக்குப் பேசி, திருவல்லிக்கேணி பார்த்தசாரதி ஆலயத்திலே எடுக்கிற நடவடிக்கையைப் பாராட்டுகின்ற வகையில் 'நீங்கள் தல வரலாறுகளை வெளி யிடுங்கள், அந்தத் தல வரலாறுகளை வெளியிடுகிறபோது, உண்மை வெளிவரும், அந்த உண்மைகள் வெளியே வந்தால், இந்த நாட்டிலே மதச் சண்டைகள் குறையும்' என்று அக்பர் காலத்திலே தொடங்கி, ஔரங்கசீப் காலம் முதல் திப்புசுல்தான் வரை சொல்லி அவர்கள் எல்லாம் எப்படி இருந்தார்கள் என்பதை எல்லாம் அவர்கள் எடுத்துக்காட்டினார்கள், அவைகள் எல்லாம் இன்றைக்கு புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான் நடைபெறுகிறது. ஆகவே அருள்கூர்ந்து இதில் குற்றம் காணக் கூடாது, உள்நோக்கம் கற்பிக்கக்கூடாது நாங்கள் எங்கே நல்லவர்கள் இருக்கிறார்களோ, அவர்களைத் தேடிக் தான் இந்த ஆலயங்களுக்கு அறங்காவலர்களாகப் போடுகிறோம், தக்கார் களாகப் போடுகிறோம். அந்த ஃபிட் பெர்சனை நீக்கி விட்டு, ஏன் 3 பேர்கள், 5 பேர்களைப் போடவில்லை என்றால் அதிலே சட்டச் சிக்கல் இருக்கிறது.

[1985 ஜூன் 13

[திரு. ஆர். எம். வீரப்பன்]

இன்னும் சொல்லப் போனால் டாக்டர் சர் பி. பி. இராமசாமி ஐயர் அவர்கள் சொன்னதைப் போல 5 பேர்கள் இருந்தால் குழப்பமே உண்டாகிறது. அதைவிட ஒருவராக இருந்தால் ஒழுங்காக நடக்கும். இன்னும் ஒரு இரகசியத்தை சட்ட மன்ற உறுப்பினர்களுக்குச் சொல்கிறேன். எங்களுடைய கட்சி உறுப்பினர்களுக்குக்கூடத் தெரியாது. ஃபிட் பெர்சன் என்ப வர்கள் என்றைக்கும் அரசாங்கத்தினுடைய ஆதிக்கத்திற்குள்ளே இருக்கிறார்கள். எப்போது வேண்டுமானாலும் நாம் போடலாம். எப்போது வேண்டுமானாலும் அவர்களை நீக்கலாம். அறங்காவலர்கள் குழு என்று போட்டு, அவர்களுக்கு அதிகாரத்தைக் கொடுத்துவிட்டால், 3 வருடங்கள் வரை நாங்கள் அவர்கள் பக்கமே போக முடியாது. நீங்கள் சொல்கிற எந்தக் குற்றச்சாட்டுக்கள் எங்களிடத்திலே வந்தாலும் கூட எங்களுடைய கைகள் கட்டப்பட்டு விடும். காரணம் எங்களை எதிர்த்தே அவர்கள் வழக்கு மன்றத்திலே போய்—மாண்புமிகு உறுப்பினர் ஆனந்தகிருஷ்ணா அவர்கள் அல்ல, அவர்களைப் போன்ற படித்தவர்களைப் பிடித்து—ஸ்டே வாங்கி விடுகிறார்கள். அரசால் போட்ட அறங்காவலர்கள் அரசுக்கு எதிராக ஸ்டே வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஒரு நிர்வாகம் ஒழுங்காக நடைபெறுகிறதா என்பதுதான் பிரச்சனையே தவிர, அங்கே இருப்பவர்கள் நல்லவரா, கெட்டவரா என்பதுதான் பிரச்சனையே தவிர, அவர் எந்தக் கட்சி என்பது பிரச்சனை அல்ல. இப்படி கட்சியைச் சொல்லிக் கொண்டு இருந்தால் நேற்றைக்கு உங்கள் கட்சியிலே இருப்பவர்களைப் போட்டால், அவர் இன்னொரு கட்சிக்குப் போகிறார்கள். சரி உங்கள் கட்சியிலே இருப்பவர் என்று நாங்கள் போட்டால், நாளைக்குப் பார்த்தால் அவர் வேறு எதிர்க்கட்சிக்கு போய்விடுகிறார்கள். எதிர்க் கட்சியிலே இருக்கிறாரே, பரவாயில்லை என்று போட்டால், நாளைக்கு அவர் ஆளுகிற கட்சிக்கு வந்துவிடுகிறார்கள். எனவே கட்சி என்று தயவுசெய்து குறை காணாது, இந்தத் தேவையற்ற, சாதாரண குறைகளைக் கூட நீங்கள் நினைக்க வேண்டாம். நல்லவர்கள் யார் இருந்தாலும் சொல்லுங்கள், அவர்களை நாங்கள் நியமிக்கிறோம் என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன்.



1985 ஜூன் 13]

[திரு. ஆர். எம். வீரப்பன்]

நிலங்களைப் பொறுத்து இந்த விதிவிலக்கு கொண்டுவர வேண்டும் என்று முடிவு எடுத்ததைப்பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் திரு. ஆனந்த கிருஷ்ணா அவர்கள் பேசினார்கள். வழக்கமாக பேசுவதற்கு என்றே இருக்கின்ற நம்முடைய மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்களும் பேசினார்கள். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. சோ. மா. இராமச்சந்திரன் அவர்களும் அதை தொட்டுக் காட்டிவிட்டுப் போனார்கள். இதைப்பற்றி ஒரு விவாதம் மேலவையில் வந்தது. அது ரெக்கார்டில் இல்லை. இப்போது அதைப்பற்றி நான் சொல்வதும் ஆப் தி ரெக்கார்டாக இருக்கட்டும் * * * *

(பிற்பகல் 2-00)

ஆகவே, இங்கே திரு. சோ. மா. இராமச்சந்திரன் அவர்களும் பட்டும் படாததுமாக நீங்கள் இந்த ஆலய நிலங்களை எல்லாம் உழுபவனுக்குச் சொந்தம் ஆக்க வேண்டியது தானே தவிர, நீங்கள் இதற்கு விதிவிலக்கு தரக்கூடாது என்று சொன்னார்கள். நான் அன்றைக்கே ஒரு விவாதத்தில் குறுக்கிட்டு சொன்னேன்; இந்த ஆலய நிலங்கள் மட்டும் அல்ல. நீங்கள் அதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். நிலங்கள் ஏழை எளிய விவசாயி களுக்கு, உழுபவனுக்கு, நிலத்தில் இறங்கி உழுபவனுக்கு சொந்த மாக்கப்பட வேண்டுமே. தவிர ஆப்செண்டி லான்டு என்று, வைத்துக்கொண்டு இருக்கக்கூடிய குட்டி மிராசுதாரருக்கு அல்ல. அரசியல் கட்சித் தலைவர்களுக்கு அல்ல.

நேரம் இருந்தால் பட்டியலே என்னிடத்தில் இருக்கிறது, நான் சொல்வேன். இந்த ஆலய நிலங்களை எத்தனை அரசியல் கட்சிக்காரர்கள் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள், சில கொலை வழக்குகளே இந்த ஆலய நிலங்களால் தான் ஏற்பட்டது. அதிலே மிகப் பெரிய தலைவர்கள் எல்லாம் சம்பந்தப்பட்டார்கள். நான் இங்கே சொல்வது ஏதோ உழுகின்ற உழவர்களுக்கு நீங்கள் தான் பாதுகாப்பு போலவும், இந்த அரசு, ஏழைகளுக்காகவே திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஏதோ

*** சில பகுதிகள் நீக்கப்பெற்றன.

[1985 ஜூன் 13

[திரு. ஆர். எம். வீரப்பன்]

எதிர்ப்பாக இருக்கிறார் என்கிற அந்த நிழலை உருவாக்குவதற்கு நீங்கள் முயல வேண்டாம், நிழலை உருவாக்கினால் அதிலே தோற்றுத்தான் போவீர்கள்.

நான் இன்றைக்கும் சொல்கிறேன், நான் மிகத் தெளிவாகச் சொல்கிறேன், உழுகின்ற ஏழை விவசாயிகளை இந்த அரசு என்றைக்கும் விட்டுக் கொடுக்காது. அவர்களுடைய உரிமையைப் பாதுகாக்கும். அவர்களுக்கு நிலம் சொந்தம் ஆக்கப்பட வேண்டுமா என்றால் சொந்தம் ஆக்கும். ஆனால் எப்படி சொந்தம் ஆக்குவது? எந்த அடிப்படையில் சொந்தம் ஆக்குவது? அங்கே சொந்தம் ஆக்கியதற்குப் பிறகு அதற்கு உரிய ஈயத் தொகையை யார் தருவது? எப்படி வசூலிப்பது? இது லட்சியம். இந்த லட்சியத்தை நாம் அடைவதற்கு முன்னாலே இன்றைக்கு செத்துக் கொண்டு இருக்கிற ஆலய ஊழியர்கள் 15 ரூபாய் சம்பளம் வாங்குகின்ற அர்ச்சகர்கள், ஓதுவார்கள், நாதஸ்வரக்காரர்கள் 1¼ லட்சம் பேர் இன்றைக்கு பாக்கியாக இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலச்சந்திரன் அவர்கள் பேசினார்கள், எங்கேயோ திருநெல்வேலி மாவட்டத்தில் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போகிறார்கள் என்று சொன்னார்கள்.

நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், அப்படி எல்லாம் ஆலய அலுவலர்களை மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில் சாகவிட மாட்டோம். தஞ்சையில் ஒரு குருக்கள் செத்தார். அவர் பணி செய்த ஆலயம் எங்களுடைய ஆளுகைக்குள்ளே இல்லை. தஞ்சையின் மன்னர் பரம்பரையில் வந்த, இன்றைக்கு பரம்பரை அறங்காவலராக இருக்கின்ற அவருடைய நிர்வாகத்திற்குள்ளே உள்ளது. நாங்கள் தலையிட முடியாத அளவுக்கு அந்தச் துயரச் சம்பவம் நடந்தது. ஆகவே அவர்கள் சுவீகாரனப் படுத்தப்பட்டு விட்டார்கள். வேறு வருமானம் இருக்கிற ஆலயங்களிலிருந்து சம்பளம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தாகிவிட்டது. அதைப்போலவே இங்கே கூட நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் சொன்னார், காலத்தை எப்படி புரட்சித் தலைவர் மாற்றியிருக்கிறார் என்ற அற்புதத்தை என்னால் பார்க்க முடிந்தது என்று. இது கடவுள்பற்றிய கொள்கைப் பிரச்சினை அல்ல.



1985 ஜூன் 13]

[திரு. ஆர். எம். வீரப்பன்]

ஆனால் அர்ச்சகர்கள் ஏழை அர்ச்சகர்கள் சம்பளம் பெறாமல் இருக்கிறார்களே என்று கவலைப்படுகிறார்களே அந்த அர்ச்சகர்கள் நம்பி இருப்பது ஆலய நிலங்களை. ஆலய நிலங்களை வைத்துக்கொண்டு இருக்கிற குத்தகைதாரர்கள் குத்தகையை தர மறுக்கிறார்கள். எப்படிக் கொடுப்பது? எங்கேயிருந்து கொடுப்பது? இங்கே எங்காவது காமதேனு கற்பக விருட்சம் என்று சொல்கிறார்களே அது இருக்கிறதா? அருள்கூர்ந்து சொல்லுங்கள். என்ன கேட்கிறோம், 25 சதவீதம் குத்தகையை. அதைக் கொடுங்கள். விளைந்தால் கொடுங்கள். விளையவில்லையானால் அரசு சட்டம் போட்டு கொடுக்க வேண்டாம் என்று சொல்கிறது. அது அவர்களுக்கும் தான் பொருந்தும். அந்தச் சட்டத்தை நாங்கள் மீறவில்லை. ஆனால் விளைவதில் 25 சதவீதத்தையாவது கொடுக்க வேண்டாமா? அந்த 25 சதவீதத்தை வைத்துக் கொண்டு இந்த ஆலயங்கள் ஆலய ஊழியர்களைக் காப்பாற்ற வேண்டாமா? இதைத் தானே கேட்கிறோம். விளைந்த நிலத்திலிருந்து குத்தகை தர மறுக்கிறவர்களை, கொஞ்சம் உன்னை வெளியேற்றிவிடுவேன் என்று மிரட்டினால் அந்த பாக்கி குத்தகையைத் தர மாட்டார்களா என்பதற்காகத்தான் இந்த விதிவிலக்கே தவிர, எந்த ஏழை விவசாயியையும், உழுகின்றவனையும், வெளியேற்றுவதற்கு அல்ல என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவிக்கிறேன்.

ஆனால், உழுபவர்களுக்கே நிலம் சொந்தம் என்பது இலட்சியம். அந்த இலட்சியத்தை அடைவதற்கு நாம் பல படிகளைக் கடந்து ஆக வேண்டும். அந்தப் படிகளை முறையாக விவாதித்து காலம் வருகிறபோது, நேரம் வருகிறபோது, அந்த முடிவை புரட்சித் தலைவருடைய அரசு எடுக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

வனத் துறையைப் பொறுத்தவரையில், மிகப் பெரிய குற்றங்களை யாரும் சொல்லவில்லை. அதற்கு மாறாக, பாராட்டி இருக்கிறார்கள். காரணம், இதிலே இரவும், பகலும் கண் விழித்து, கண் துஞ்சாது, குற்றவாளிகள் யாராக இருந்தாலும் கண்டுபிடித்து தண்டித்துக் கொண்டிருக்கிறோம். அவர்கள் வெளியிலே இருந்து வந்தாலும் சரி, அல்லது இந்தத் துறைக்குள்ளேயே இருந்தாலும் சரி அவர்கள் மீது கடுமையான

[1985 ஜூன் 13

[திரு. ஆர். எம். வீரப்பன்]

நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். மாண்புமிகு ரமணி அவர்கள் கூட, எனக்கு ஒரு தகவலை தபாலிலே அனுப்பியதாகச் சொன்னார்கள்.

நம்முடைய மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினரும் அதைக் குறித்துப் பேசினார்கள். அவர்கள் மீது ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆகிவிட்டது. ஒரு ஏ.சி.எஃப்., அசிஸ்டென்ட் கன்செர்வேட்டர் ஆஃப் ஃபாரெஸ்ட்ஸ், இரண்டு ரேஞ்சர்ஸ், அதற்குக் கீழே 10 அலுவலர்கள் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு இருக்கிறார்கள். எல்லை ஓரங்களிலே, கர்நாடக எல்லை, கேரள எல்லை ஓரங்களிலே மிகக் கடுமையான ஆயுதங்களோடு மரம் வெட்டுகிறவர்கள், நம்முடைய காட்டுக்குள்ளே புகுந்து, இந்தத் தீமைகளை, கொடுமைகளை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படியும், நம்முடைய கூடலூர் பகுதியிலே இருக்கின்ற வனத் துறையினர், கேரள எல்லைக்குள்ளேயே சென்று, அங்கே நம்முடைய சந்தனக் கட்டைகளைக் கொண்டுபோய் வைத்திருந்த அந்த ஆலைக்குள்ளேயே—எண்ணெய் தயாரிக்கின்ற ஆலைக்குள்ளேயே நுழைந்து—அந்த அதிகாரிகளோடு கைப்பற்றி, அவர்களைக் கைது செய்வதற்கு முயற்சித்த நேரத்திலே அவர்கள் முன்-ஜாமீன் வாங்கிக் கொள்கின்ற சூழ்நிலைக்கு, நம்முடைய கூடலூர் பகுதியிலே வனத் துறையிலே பணியாற்றிக்கொண்டிருக் கிறார்கள். அப்படிப் பணியாற்றுகிறவர்களும் இருக்கிறார்கள். தவறு செய்கிறவர்களும் இருக்கிறார்கள். சில நேரங்களில் தவறு செய்யவில்லை யெனினும், அஜாக்கிரதையாக இருப்பவர்களும் இருக்கிறார்கள்.

எப்படியானாலும், வனங்களைப் பாதுகாப்பதில் புரட்சித் தலைவருடைய ஆட்சி கடுமையாக இருக்கிறது. அதை அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் கல்லன் அவர்களே இங்கே பாராட்டினார்கள் என்கிறபோது—காரணம், அவர் நீலகிரியிலே அந்த மரங்களைப் பாதுகாக்க வேண்டும், பாதுகாக்க வேண்டும் என்று நீண்ட காலமாகச் சொல்லிக் கொண்டு இருக்கிறவர்—நான் வைக்கிற வேண்டுகோள் ஒன்றுதான் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் எல்லாம், நாங்கள் காஃபி போடுகிறோம், டீ போடுகிறோம் என்று மரங்களை வெட்டுவதற்கு விண்ணப்பித்துக் கொண்டு வந்தால் யாரும்



1985 ஜூன் 13]

[திரு. ஆர். எம். வீரப்பன்]

தயவுசெய்து சிபாரிசுக்கு வராதீர்கள். இதுதான் என்னுடைய பணிவான வேண்டுகோள். இந்திய அரசு, தமிழக அரசு கொள்கை முடிவாகவே அறிவித்து இருக்கிறது. இனிமேல் காடுகள் வேண்டுமா காஃபி வேண்டுமா? காடுகள் வேண்டுமா டீ வேண்டுமா? என்றால் காடுகள் தான் வேண்டும். இயற்கைக் காடுகளை, நிரந்தரக் காடுகளை அழித்து காஃபியோ, டீயோ போடுவதை அரசாங்கம் இனிமேல் ஏற்றுக்கொள்ளாது. ஏற்கனவே இருக்கிற தோட்டங்களை அவர்கள் புதுப்பிக்கலாம், மாற்றலாம்.

ஆனால் புதிய தோட்டங்கள், காடுகளை அழித்து ஏற்படுத் துவதை அரசு அனுமதிக்காது என்பதைச் சொல்லி இங்கே சுற்றுலாவைப் பற்றி மிகப் பெரிய அளவிலே எல்லோரும் பாராட்டினார்கள். பல இடங்களிலே சுற்றுலாத் துறை, அந்தப் பகுதிகளை வளப்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். மாண்புமிகு அப்துல் சமது அவர்கள் சில சிறந்த கருத்துக்களை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்கள் இங்கே ஏற்கனவே பரிசீலனையிலே இருக்கின்றன. சென்னையிலே தொடங்கி, மகாபலிபுரம் வழியாக அந்த மேற்குக் கடற்கரை நகரங்கள், கோவா வரை சென்று வருகின்ற ஒரு கடல் வழிப் பயணத் திட்டத்தை நிறைவேற்றலாமா என்று தென்னாட்டுச் சுற்றுலாத் துறை அமைச்சர்கள் மாநாட்டிலே ஒரு கருத்துரு விவாதத்திலே இருந்து அது பரிசீலனையில் இருக்கிறது. அதற்குப் பிறகு, சென்னையிலிருந்து மாமல்லபுரத் திற்குச் செல்வதிலே, அந்த முதலீட்டுக்கும் வருமானத்திற்கும் சரியாக இருக்காது என்ற கருத்து வந்த காரணத்தால், அது தள்ளிப்போடப்பட்டது. அதைப் போல, கொடைக்கானலுக்கு விமான வசதி செய்து,—கொடைக்கானலுக்கு மாத்திரம் அல்ல—23 சதவிகிதம் தான் இந்தியாவுக்கு வருகிற அயல் நாட்டுப் பயணிகள் தமிழகத்திற்கு வருகிறார்கள் என்பதை இந்திய சர்க்காரிடத்திலே வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம்.

இந்தியாவிலேயே மிகச் சிறந்த சுற்றுலாத் தலங்கள் இருக் கின்ற, புகழ்பெற்ற சுற்றுலா மையங்கள் இருக்கின்ற இடம் தமிழகம்தான். இந்திய அரசினுடைய சுற்றுலாத் துறை இதிலே கவனம் செலுத்தவில்லை. உலக அளவிலே நம்முடைய சுற்றுலா இடங்கள் இன்னமும் விளம்பரப்படுத்தப்படவில்லை என்பதை

[1985 ஜூன் 13

[திரு. ஆர். எம். வீரப்பன்]

நாம் அடிக்கடி சுட்டிக்காட்டிக் கொண்டே இருக்கிறோம். அந்த வகையிலே, பல இடங்களை இணைக்கின்ற மூன்றாவது விமானப் பயண வழியை ஏற்படுத்த வேண்டும்—அதாவது, தேர்டு லைன் ஃபீடர் சர்வீஸ் என்று சொல்கிற அந்த விமானத்தை நீங்கள் நடத்துங்கள், இல்லையெனில் மாநில அரசு நடத்தத் தயாராக இருக்கிறது என்றும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவர்கள் இன்னமும் அனுமதி அளிக்கவில்லை. அதற்காக நாம் போராடிக் கொண்டிருக்கிறோம் என்பது அல்ல, வாதாடிக் கொண்டிருக்கிறோம். விரைவிலே இந்திய அரசு தமிழக சுற்றுலாத் துறையை வளர்த்தால் அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கின்ற அந்நியச் செலாவணி, முதலீடு இல்லாத அந்நியச் செலாவணி 1,000 கோடியிலிருந்து 1,500 கோடியாக வளர்வதற்கும் அது துணை புரியும் என்பதை அவர்களுக்கு நாங்கள் எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கிறோம்.

(பிற்பகல் 2-10)

அதைப்போல, நம்முடைய சின்கோனாத் துறையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. கல்லன் அவர்கள் சொன்னார்கள். 125 ஆண்டுகளாக இருக்கின்ற அது வயது முதிர்ந்த துறையாகப் போய்விட்டது. வயது முதிர்ந்த துறையாக ஆனதாலோ என்னவோ அதன் தேவையும் போய் விட்டது. எப்படியோ அந்தத் தொழிலாளர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற முறையில் நஷ்டப்பட்டாவது காப்பாற்றிக் கொண்டிருக்கிறோம். திரு. கல்லன் அவர்கள் சொன்னதைப் போல, வேறு துறைகளில், வேறு தொழில்களில் அவர்களை ஈடுபடுத்தி, வேறு பொருட்களை உற்பத்தி செய்யும் முயற்சியிலே இந்த சின்கோனாத் துறை ஈடுபட இருக்கிறது. தொழிலாளர்களின் ஊதியம் பற்றிச் சொன்னார்கள். எவ்வளவு முடியுமோ, நஷ்டத்தை எவ்வளவு தாங்கிக் கொண்டு தரமுடியுமோ அந்த அளவிற்குத் தருகிறோம். இதையே நீங்கள் தேயிலைக் கழகத்தைப் பற்றி எடுத்துக் கொண்டால் இந்தப் பிரச்னை இல்லை, அது மிகச் சிறந்த கழகமாக வளர்ந்து இலாபம் ஈட்டுவதாகக்கூட இருந்தாலும், தனியார் தருவதை விட அதிகம் தருகிறோம் என்று சொல்லுகின்ற அளவிற்குத் தருகிறோம். ஆனால், இது அப்படி அல்ல. ஆதி திராவிட தொழிலாளர்களின்,



1985 ஜூன் 13]

[திரு. ஆர். எம். வீரப்பன்]

ஏழை எளிய மக்கள் ஆகியவர்களை வாழ வைக்க வேண்டுமென்பதற்காக, 2,500 தொழிலாளர்களை வாழ வைத்துக் கொண்டிருக்கிறோம். மிகப் பெரிய சிக்கல், பொருளாதார இடையூறுகள் ஆகிய இவைகளைச் சந்தித்துத்தான் நடத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

செய்தித் துறையைப் பற்றி யாருமே விமர்சனம் அளிக்கவில்லை. ஆனால் திரு. அப்துல் சமத் அவர்கள் போகின்ற போக்கிலே ஒன்றைப் பேசிவிட்டுப் போகலாமே என்பதற்காக, எதிர்க்கட்சிப் பத்திரிகைகளுக்கும் விளம்பரங்கள் கொடுங்கள் என்று சொன்னார்கள். எதிர்க்கட்சிப் பத்திரிகைகளை மட்டுமல்ல, எதிர்க் கட்சிகளையே மதிக்கின்ற அந்த மிகப் பெரிய பண்பாட்டை, "மாற்றான் வீட்டுத் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு" என்று அந்தத் தத்துவத்தை பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியிலே வந்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பத்திரிகை என்று சொல்லும் பொழுது, நான் முன்னாலே சொன்னேனே, யார் நிர்வகிப்பது என்று, அதைப்போல, பத்திரிகை என்பதனை வரைமுறைப் படுத்துவதற்கான ஒரு நியதி இருந்தல் வேண்டும். பத்திரிகைத் தர்மம் என்ன என்பதை நிர்ணயிக்க வேண்டும்; பத்திரிகை இலக்கணம் எது என்பதை நிர்ணயிக்க வேண்டும். இப்பொழுது பத்திரிகை இலக்கணம் என்பது எப்படியிருக்கிறது?

இந்த நாடே வேண்டிக் கொண்டிருக்கிறது, இந்த நாட்டினுடைய தலைவன் மீண்டும் உடல் நலம் பெற்றுத் திரும்ப வேண்டும் என்று. அந்த நேரத்தில் அவர் எழுந்து உட்கார்ந்தார், கை தூக்கினார் என்று அரசின் சார்பாகப் புகைப்படங்கள் வெளியிடப்படுகின்றன. அந்தப் புகைப்படத்தையே கூட, அந்த உணர்வை என்ன வார்த்தையால் வர்ணிப்பது என்றே தெரியவில்லை, இலக்கியம் கற்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் சமத் அவர்கள் அதற்கான வார்த்தையைத் தேடித் தரவேண்டும், அவர்கள் அந்த வார்த்தையைச் சொன்ன பிறகு அதை நான் பயன்படுத்துகிறேன், இருந்தாலும் கூட இப்பொழுது என்னால் சொல்லக்கூடியது, கொடுமையான கல் மனத்தோடு பத்திரிகையிலே வந்த அந்தப் படங்களை எடுத்துப் போட்டு, இது போலிப் படம் என்று சொல்லுகின்ற அளவிற்கு இருந்தால் பத்திரிகைத் தர்மம் என்று அதை ஒத்துக் கொள்கிறீர்களா?

[திரு. ஆர். எம். வீரப்பன்]

இந்த ஆட்சியை எதிர்ப்பவர்களைக் கண்டு நாங்கள் பயப்படவில்லை; ஆனால் கவலைப்படுவோம். கவலைப்பட்டால் தானே எங்கேயாவது குறை இருக்கிறதா என்று சிந்திப்போம். ஆனால் பயப்பட மாட்டோம். பயப்படுகின்றவர் எங்கள் முதல்வர் அல்ல; எங்கள் புரட்சித் தலைவர் பயப்படுகின்றவர் அல்ல. ஆகவே, எதிர்க்கட்சிப் பத்திரிகை "தலையங்கம் எழுதுகிறதே; எதிர்க் கட்சி செய்திகளை வெளியிடுகிறதே என்பது எங்கள் கவலை அல்ல, அதற்குத் தேவையும் இல்லை. ஆனால் பத்திரிகைத் தர்மம் என்று இருக்கிறதே. அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்ற பத்திரிகைத் தர்மத்தின்படி நடைபெறுகிறதா என்பது நிரூபிக்கப்பட்டாக வேண்டும். அப்படி நிரூபித்தால் அவர்களுக்கும் நாங்கள் எங்களால் இயன்ற உதவிகளைச் செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறிய பத்திரிகைகளையும் ஆதரிப்பதைக் கொள்கையாக ஏற்றுக் கொண்டிருக்கின்ற ஒரு முடிவாகும். எந்தப் பத்திரிகையாவது அப்படி விடுபட்டு இருந்தால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, இந்தச் சுற்றுலாத் துறையைப் பொறுத்த வரையில் மிகப் பெரிய அளவிற்கு இப்பொழுதுதான் துறை வளர்ந்து கொண்டு வருகிறது என்றாலும் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திலே பணிபுரிபவர்கள் தங்களுக்கு ஊதிய உயர்வு வேண்டுமென்றெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடத்தில் சொல்லிக் கொண்டிருக்கிறோம். பாடுபடுங்கள், நல்ல இலாபமீட்டித் தாருங்கள்; இலாபம் கிடைக்கவில்லை என்றாலும் நஷ்டம் இல்லாமல் நடத்துங்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அந்த உணர்வின் அடிப்படையில் அவர்கள் முயற்சிப்பார்கள் என்று நம்புகிறேன்.

போக்குவரத்து ஓட்டல் பிரிவுகளில் பணியாற்றுகின்றவர்களின் அடிப்படைச் சம்பளத்தை உயர்த்தவும், அகவிலைப்படியை மாற்றவும், ஊக்குவிப்புத் திட்டத்தைப் புனரமைக்கவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இது 1—7—1985 முதல் அமலுக்கு வரும்படி அறிவிக்கப்படும்.





[திரு. ஆர். எம். வீரப்பன்]

தொகை எவ்வளவு என்று நான் அறிவிக்காததற்குக் காரணம், சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் கூட்டத்தில் அது முடிவெடுக்கப்பட வேண்டும். மிகச் சிறந்த அளவிற்கு எட்டரை இலட்சம் பேர் அளவிற்கு மகிழும் வண்ணம் அறிவித்திருப்பதைப் போல இந்தச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் பணிபுரியும் அலுவலாளர்களும் மகிழும் வகையில் புரட்சித் தலைவர் ஆட்சியில் ஊதிய உயர்வு கிடைக்கும். இங்கே ஒரு திட்டத்தை சென்ற சட்ட மன்றம் இருந்தபொழுது நாங்கள் சட்ட முன்வடிவாகக் கொண்டு வந்தோம், தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் ஓய்வூதியத் திட்டம் என்று. அந்தச் சட்ட முன்வடிவு பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப் பட்டது. அதுபற்றி பல்வேறு பத்திரிகையாளர்கள், பத்திரிகை அதிபர்களிடத்திலே விவாதித்து ஒரு முடிவுக்கு வாவிருந்த சூழ்நிலையில் சட்டமன்றம் கலைக்கப்பட்டுவிட்டது. இப்பொழுது அந்தச் சட்ட முன்வடிவு காலாவதியாகிவிட்டது. மீண்டும் ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டுவர வேண்டும். அதற்கான முயற்சியை அரசு எடுத்துக் கொண்டு வருகிறது. அதுவரை மாண்புமிகு புரட்சித் தலைவர் கஷ்டப்படுகிற ஏழை, எளிய பத்திரிகையாளர்களுக்கு, பத்திரிகைத் துறையிலே யிருந்து ஓய்வு பெற்றதற்குப் பிறகு அரசினுடைய நிதியிலிருந்து மாதம் ரூ. 250 ஓய்வூதியமாக வழங்கலாம் என்று அறிவித்திருக் கிறார்கள்.

இதை நான் சொல்கிற நேரத்தில், நாம் நம்முடைய பத்திரிகை உரிமையாளர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன், உங்களுடைய உதவியோடு நிறைவேற்றப்படுகிற இந்தத் திட்டம் இன்னும் இருக்கிறது; நிறைவேற்ற இருக்கிறோம். அதற்கு உங்களுடைய உதவி வேண்டும். அரசாங்கம்தான் கொடுக்கிறது. உங்களைக் கேட்க மாட்டார்கள் என்று இருக்காதீர்கள். உங்களிடத்திலே வந்து கதவைத் தட்டுவோம். தயவுசெய்து உங்களுடைய பத்திரிகைகளை வளர்ப்பதற்குப் பணியாற்றியவர் களுக்கு நாங்கள் நிறையதான் தருகிறோம் என்று சொன்னாலும், அந்த அடிப்படையில் ஏழைப் பத்திரிகையாளர்களாக இருக்கிற, கஷ்டப்படுகின்ற பத்திரிகையாளர்களுக்கு உங்களுடைய உதவி கிடைக்க வேண்டுமென்பதுதான் இந்தத் திட்டத்தினுடைய நோக்கம், இந்தச் சட்ட முன்வடிவினுடைய

[திரு. ஆர். எம். வீரப்பன்]

நோக்கம். ஆகவே, அருள்கூர்ந்து இந்தச் சட்டம் நிறைவேற்றப்படுகிற நேரத்தில், முயற்சிக்கின்ற நேரத்தில், பத்திரிகை உரிமையாளர்கள் தாங்களும மனமுவந்து உதவி அளிக்க வேண்டும் இந்தச் சட்டம் நிறைவேற்றப்படும் வரை இப்பொழுது மாதம் ரூ. 250 ஓய்வு பெறுகின்ற அந்தப் பணியாளர்களுக்கு அரசின் சார்பிலே வழங்கப்படும். அதற்கான விதிமுறைகள் விரைவிலே தெரிவிக்கப்படும். நீண்ட நேரமாகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் என்னுடைய டிமாண்டுகளை நிறைவேற்றித் தருவது என்று முடிவெடுத்திருக்கிறீர்கள். ஆகவே, வெட்டுப் பிரேரணைகளைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டு அமர்கிறேன், வணக்கம்.

**திரு. வை. பாலச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊதிய பாக்கி உள்ள திருக்கோயில் பணியாளர்களுக்கு ஊதிய பாக்கி கொடுக்க ஏற்பாடு செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுடைய ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க இந்த அரசாங்கம் முன்வர வேண்டுமென்ற வேண்டுகோளை விடுக்கிறேன்.

டாக்டர் சி. பி. இராமசாமி அறிக்கையைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அமைச்சரிடத்திலே விவாதத்திற்காகச் சொல்லவில்லை, விளக்கத்திற்காகச் சொல்கிறேன், அந்த அறிக்கையிலே சொல்கிறபொழுது, மடாதிபதிகளில் பலர் ஊழல் நிறைந்தவர்களாக, ஒழுக்கக் கேடு உடையவர்களாக இருந்து கொண்டிருப்பதாகத் தான் சொல்லப்படுகிறது. பலர் அப்படி என்று சொன்னாலும் அங்கேயும் சிலர் ஒழுங்கானவர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அது அகில இந்திய அளவில் ஆய்வு நடத்தியவரால் ஒத்துக்கொள்ளப்பட்ட ஒன்றாக இருக்கிறது. என்னுடைய வேண்டுகோள் சமயப் பெரியவர்களும், துறவியர்களும், மதப் பெரியவர்களும் உள்ளடங்கிய ஒரு அட்டானமஸ் போர்ட்—பாடி—அமைக்க வேண்டுமென்பது. அந்தச் சிலரைக் கண்டறிந்து, அவர்களை உள்ளடக்கி அந்த போர்டை அமைக்க இந்த அரசு முன்வர வேண்டும். அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.





[திரு. கு. ரமணி]

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, நமது மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது இறுதியாக உறுதியிட்டு ஒரு விஷயத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இன்று கோயில்களுடைய நிலங்களில் உழுது கொண்டிருக்கக் கூடியவர்கள்—உழுது கொண்டிருக்கக் கூடியவர்கள் என்பதை நான் திட்டவட்டமாக, கூர்மையாக, பாயின்ட்டாகச் சொல்கிறேன். அப்படிப்பட்டவர்களை நிச்சயமாக வெளியேற்ற மாட்டோம். அந்த நிலத்தை அவர்களுக்குச் சொந்தமாக்குவது என்பதுதான் இலட்சியம். இப்பொழுது கொள்கை அல்ல; அந்த இலட்சியத்திற்கு முரண்பாடாக நீங்கள் இப்பொழுது கொண்டு வருவதாக இருக்கிற பிரேரணையில் இருக்கக் கூடிய சட்டம், குத்தகை வைத்திருக்கக் கூடியவர்கள், குத்தகை கட்டாமல் இருக்கக் கூடியவர்கள் என்ன நிர்பந்தப்படுத்தியும் கட்ட மாட்டேன் என்கிறார்கள். கோயில்களில் எதுவும் நடத்த முடியாமல், அவர்களை வெளியேற்ற இந்தக் குத்தகையைத் தரக்கூடியவர்களிடத்திலே நிலத்தை ஒப்படைக்கக் கூடிய ஒரு பொறுப்பு இந்தச் சட்டத்திலே இருக்கிறது. இப்பொழுது யார் உழுது கொண்டிருக்கிறார்களோ அந்த உழுது கொண்டிருக்கிற சில பேர்கள், கொடுக்காமல் இருந்தால் நியாயம் என்று நான் ஏற்றுக்கொள்ளவில்லை. விளைந்திருந்தால் குத்தகை கொடுக்க வேண்டும்; கொடுக்கவில்லை என்றால் வசூல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் கொடுக்கவில்லை என்பதால் இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் குத்தகை விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிற பாதுகாப்புச் சட்டத்திலிருந்து தனியாக விதிவிலக்குச் சட்டம் என்று போட்டு விட்டால் அவர்களை வெளியேற்ற வேண்டி வரும். அப்போது நீங்கள் சொல்லிவருகிற உழுபவனுக்கு நிலத்தைச் சொந்தமாக்கும் இலட்சியம் என்னவாகும்? ஆகவே, அவர்களை வெளியேற்றக் கூடாது. ஆனால் இடைத் தரகர்களாக இருக்கிறவர்களுக்கு, உண்மையிலே நிலத்தில் உழுது பயிர் செய்யாதவர்களுக்கு என்ன பாதகம் ஏற்பட்டாலும் பரவாயில்லை; அவர்கள் மீது என்ன நடவடிக்கை வேண்டும் என்றாலும் எடுக்கலாம். அப்படி இருந்தால்தான் ஒழுங்காக இருக்கும். இல்லை என்றால் இந்த அவையில் தருகிற உத்தரவாதத்திற்கு அது ஒத்து வராது. இலட்சியம் என்று சொல்லிக் கொண்டே இருப்பதைவிட்டு . . .

(பிற்பகல் 2.20)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கிளாரிஃபிகேஷனுடன் நிறுத்திக் கொள்ள வேண்டும். திரும்பவும் ஒரு ஆர்கியுமென்ட் ஆக்கக்கூடாது.

**திரு. வே. இரா. ஜெயராமன்:** தலைவரவர்களே, இங்கே சட்ட மன்ற உறுப்பினர்கள் அத்தனை பேர்களின் சார்பாக நான் ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் நடத்தப்படுகின்ற 'தமிழ்நாடு ஓட்டல்'களில் கன்செஷன் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி:** தலைவரவர்களே, நான் முடிக்கவில்லை; இடையிலே மாண்புமிகு உறுப்பினர் ஒருவரை அனுமதித்து விட்டீர்கள். . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நான் திரு. ரமணி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இப்போது விரிவாகப் பேச வேண்டாம். சட்டம் வரும்போது விரிவாகப் பேசலாம். நிறைய கருத்துக்களைச் சொல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

**கோரிக்கை எண் 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்.**

திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

திரு. எஸ். என். இராமசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,13,02,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண். 25—சின்கோனா**

திரு. கே. கல்லன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 25—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,35,59,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண் 45—காட்டு வளத் துறை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 45—காட்டு வளத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,34,43,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

[1985 ஜூன் 13

**கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்.**

திரு. எஸ். என். இராமசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி.

"மானியக் கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,49,65,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண் 56—காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 56—காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 17,31,76,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 14—6—1985 காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.25 மணிக்கு **ஒத்திவைக்கப் பெற்றது.**



**6. அவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.**

**(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்**

216. டாக்டர் ஆர். சுப்பராயன் அவர்களை பாரதியார் பல்கலைக் கழக துணை வேந்தராக மறு நியமனம் செய்வது குறித்து கல்வித் துறையின் 25—2—1985 ஆம் நாளிட்ட 158 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1982) 65(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

217. டாக்டர் ஏ. ஞானம் அவர்களை பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக நியமிப்பது குறித்து கல்வித் துறையின் 27—2—1985 ஆம் நாளிட்ட 166 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் (தமிழ்நாடு சட்டம் 2/1982) 65(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

218. அன்னை தெரஸா மகளிர் பல்கலைக் கழகத்தின் அதிகார அமைப்பினை ஏற்படுத்துவது குறித்து கல்வித் துறையின் 23—1—1985 ஆம் நாளிட்ட 70 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1984) 51 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

**(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.**

103. கோரிக்கை எண் 25—சின்கோனா துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1985-86. (தமிழ், ஆங்கிலம்.)

104. கோரிக்கை எண் 45—வனத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1985-86. (தமிழ், ஆங்கிலம்.)

105. கோரிக்கை எண் 47—செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1985-86. (தமிழ், ஆங்கிலம்.)

106. கோரிக்கை எண் 47—சுற்றுலா குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1985-86. (தமிழ், ஆங்கிலம்.)

107. 1985-86 ஆம் ஆண்டிற்கான சின்கோனாத் துறை பற்றிய சாதனைத் திட்டம். (ஆங்கிலம்.)

108. 1985-86 ஆம் ஆண்டிற்கான சின்கோனாத் துறை பற்றிய வணிக சம்பந்தமான வரவு-செலவுத் திட்டம். (ஆங்கிலம்.)

109. 1985-86 ஆம் ஆண்டிற்கான வனத் துறை பற்றிய சாதனைத் திட்டம். (ஆங்கிலம்.)

## இணைப்பு I.

(............1-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 254 (869)-க்கான விடையைக் காண்க)

அறிக்கை

| வரிசை எண் | மின் திட்டங்களின் பெயர்கள் | திட்ட அறிக்கை அனுப்பப்பட்ட மாதம் | மத்திய அரசு அனுமதி அளிப்பதில் கால தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| புனல் மின் திட்டங்கள் : | | | |
| 1. | ஹோகேனக்கல் புனல் மின் திட்டம். | டிசம்பர் 1964 | இத்திட்டம் காவிரி நீர் பங்கீட்டு பிரச்சனையில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆகவே கர்நாடக அரசின் ஒப்புதல் கிடைக்காததினால், இத்திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்க முடியவில்லை. |
| 2. | சோளத்தி புழா புனல் மின் திட்டம். | பிப்ரவரி 1968 | இத்திட்டம் தமிழ் நாடு, கேரளம் ஆகிய இரு மாநிலங்களிலும் இடம் பெறுகிறது. மத்திய மின்சார ஆணைக்குழு கேரளா அரசின் ஒப்புதல் கோருகிறது. கேரள அரசின் ஒப்புதல் இன்னும் கிடைக்கவில்லை. |
| 3. | பாண்டியார்—புன்னம் புழா புனல் மின் திட்டம். | மே 1968 | இத்திட்டம் திட்டக் குழுவினால் 1968-ஆம் ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்டு, இதற்கான ஆரம்ப வேலைகள் 1969ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. பாண்டியார் புன்னம் புழா நதிகளின் நீரையும் கிழக்கு நோக்கி கோவை மாவட்டத்தின் வறட்சி பகுதிகளுக்கு விவசாயத்திற்கு பயன்பட திருப்பி விட வேண்டும் என்ற கோவை மாவட்ட விவசாயிகளின் கோரிக்கையின் பேரில் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான சாத்தியக் கூறுகளை தமிழக அரசு மறு பரிசீலனை செய்தது. இதனால் இத்திட்டம் ஆரம்ப கால பணிகளோடு நிறுத்தப்பட்டு இத்திட்டத்தின் ஒரு பகுதி நீரையாவது கோவை மாவட்டத்திற்கு விவசாயத்திற்கு பயன்பட திருப்பி விடுவது குறித்து கேரள அரசோடு தொடர்பு கொண்டு பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது.<br>கேரள மாநிலம் காவிரியின் உபநதியான பவானி ஆற்று நீரைப்பங்கீடு செய்வது குறித்து வலியுறுத்தி வருகின்றது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது. |
| 4. | மேல் அமராவதி புனல் மின் திட்டம். | ஜனவரி 1972 | இத்திட்டம் காவிரி நதியின் உபநதியான அமராவதி ஆற்றின் குறுக்கே அமைகிறது. காவிரி நீர் பங்கீடு ஒப்பந்தம் ஆகாததால் இத்திட்டம் ஒப்புதல் பெறுவதில் கால தாமதம் ஏற்படுகிறது. |

| வரிசை எண் | மின் திட்டங்களின் பெயர்கள். | திட்ட அறிக்கை அனுப்பப்பட்ட மாதம். | மத்திய அரசு அனுமதி அளிப்பதில் கால தாமதத்திற்கான காரணம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 5. | சண்முகா நதி புனல் மின் திட்டம். | மார்ச் 1972 | மத்திய மின் ஆணைக்குழு இத்திட்டம் காவிரி ஆற்றுப் பள்ளதாக்கில் உள்ளதால் கேரளா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களின் ஒப்புதல் வேண்டும் என கோரியுள்ளது. மின் வாரியம் தமிழக அரசின் மூலமாக மத்திய மின் ஆணைக்குழுவிற்கு எழுதிய கடிதத்தில் இத்திட்டம் முற்றிலும் தமிழக எல்லைக்குள் அமைந்திருப்பதாலும் "நீர் இழப்பு இல்லாமல்" (Consumptive use) பயன்படுவதாலும் கேரளா, கர்நாடக மாநிலங்களின் ஒப்புதல் தேவை இல்லை என அறிவித்துள்ளது. மத்திய மின் ஆணையத்தின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. |
| 6. | மேல் தாமிரபரணி புனல் மின் திட்டம். | ஆகஸ்டு 1973 | இத்திட்டம் பொருளாதார ரீதியில் இலாபகரமானதல்ல என்று மத்திய மின்சார ஆணைக்குழு தெரிவித்து அந்த அடிப்படையில் திருத்தப்பட்ட நீரியல் ஆய்வின்படி, மிகவும் இலாபகரமாகவும் சிக்கனமாகவும் அமைக்கும் முகமாக 5 மின் நிலையங்களின் அமைப்புத் திறனை 165 மெகாவாட்டிலிருந்து 120 மெகாவாட்டாக குறைக்கவும் முதற்கண் 30 மெகாவாட் திறன் கொண்ட "பான தீர்த்தம்" மின் நிலையம் அமைப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் இத்திட்டம் மறு பரிசீலனையில் உள்ளது. முண்டன்துறை காடுகளில் பிரவேசித்து ஆய்வு பணிகள் நடத்த தமிழ் நாடு மின்சார வாரியத்திற்கு தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்தின் எஞ்சியுள்ள ஆய்வுப் பணிகள் முடிந்தவுடன் திட்ட அறிக்கை திருத்தி அமைக்கப்பட்டு மத்திய அரசுக்கு விளக்கங்கள் கொடுத்து ஒப்புதல் கோரப்படும். |
| 7. | மணிமுத்தாா் புனல் மின் திட்டம். | நவம்பர் 1974 | இத்திட்டம் பொருளாதார ரீதியில் இலாபகரமானதாக இல்லை என்று மத்திய மின்சார ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அந்த அடிப்படையின்பேரில் திருத்தப்பட்ட நீரியில் ஆய்வின்படி மிகவும் இலாபகரமாகவும் சிக்கனமாகவும் அமைக்கும் முகமாக இரண்டு மின் நிலையங்களில் 65 மெகாவாட் திறனிலிருந்து 45 மெகாவாட் அமைப்புத் திறனுக்கு குறைக்கும் திட்டம் மறு பரிசீலனையில் உள்ளது. ஆய்வுப் பணிகள் முடிந்தவுடன் திட்ட அறிக்கை திருத்தி அமைக்கப்பட்டு மத்திய மின்சார ஆணைக் குழுவிற்கு அனுப்பி மத்திய அரசின் ஒப்புதல் கோரப்படும். |

| வரிசை எண் | மின் திட்டங்களின் பெயர்கள். | திட்ட அறிக்கை அனுப்பப்பட்ட மாதம். | மத்திய அரசு அனுமதி அளிப்பதில் கால தாமதத்திற்கான காரணம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 8. | அக்காமலை புனல் மின் திட்டம். | ஜூலை 1975 | இத்திட்டம் பொருளாதார ரீதியில் இலாபகரமானதாக இல்லை என மத்திய மின் அதிகார மன்றம் தெரிவித்துள்ளது. மத்திய மின் ஆணையத்தின் பல்வேறு இயக்குநர் குழுமங்களின் விளக்கக் குறிப்புகளின்படி 20 மெகாவாட் திறனுக்கு ஏற்ப இத்திட்டம் மாற்றியமைக்கப்படுகிறது. மேலும் அது மறுபடியும் மத்திய மின் ஆணையத்திற்கும் மத்திய நீர் பொறுப்பாண்மைக் குழுவிற்கும் தமிழ் நாடு அரசு மூலமாக அனுப்பப்படும். |
| 9. | பைக்கார இறுதி. | ஆகஸ்டு 1982 | இத்திட்டம் மத்திய அரசு பரிசீலனையில் உள்ளது. நீரியியல் மற்றும் தொழிற்நுட்ப துறையின் விளக்கங்கள் கேட்கப்பட்டுள்ளன. நீரின் பண்பியல் இயக்குநர் குழுமம் மற்றும் நீர் பொறியியல் முன்னேற்றம் இயக்குநர் குழுமங்களின் ஆய்வுக் கருத்துக்களுக்கான பதில்கள் முடிவு செய்யப்பட்டு வருகின்றன. அவை முடிவு செய்யப்பட்டவுடன் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும். |
| 10. | பரளியார் புனல் மின் திட்டம். | மார்ச் 1984 | இத்திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்கு சுற்றுப்புற சூழ்நிலை சம்பந்தப்பட்ட அனுமதி வழங்கப்பட்டு விட்டது. மத்திய மின் அதிகார மன்றத்தின் பல்வேறு துறைகளிலிருந்து வரப் பெற்ற கருத்துக்களுக்கான விளக்கங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. |
| 11. | பவானி கட்டளை சிற்றணைத் திட்டம் முதல் நிலை. | மார்ச் 1984 | இத்திட்ட அறிக்கை மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மத்திய அரசின் சில துறைகளிலிருந்து விளக்கங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த விளக்கங்களுக்கு பதில் தயாரிக்கப்படுகிறது. விரைவில் அனுப்பி வைக்கப்படும். |
| 12. | சாத்தனூர் அணை புனல் மின் திட்டம். அனல்மின்திட்டம் | செப்டம்பர் 1984 | இத்திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மத்திய அரசின் சில துறைகளின் விளக்கங்களுக்கு பதில்கள் தயாரிக்கப்படுகிறது. |
| 13. | வடசென்னை அனல் மின் திட்டம். | டிசம்பர் 1981 | 1984ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்த இரு திட்டங்களுக்கும் மத்திய மின் அதிகார மன்றம் ஒப்புதல் அளித்தது. இத்திட்டங்கள் மத்திய திட்டக் குழுவின் முதலீட்டு முடிவதற்காகக் காத்திருக்கின்றன. 1985-86 ஆம் ஆண்டு இத்திட்டங்கள் மேற்கொள்வதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளன. 1985-86 ஆம் ஆண்டில் பணிகள் மேற்கொள்ளப்படும். |
| 14. | தூத்துக்குடி விரிவு அனல் மின் திட்டம் | டிசம்பர் 1984 | |
| 15. | எரிவாயு மின் இயந்திரம் பேசின் பிரிட்ஜ் அனல் மின் திட்டம். | ஜனவரி 1984 | இத்திட்டம் மத்திய மின் அதிகார மன்றத்தின் ஆய்வில் இருக்கிறது. |

(47-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண். 12.

## 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்துசமய அறக்கட்டளையின் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு.

### 1. சமய நிறுவனங்கள்.

**மாநிலத்திலுள்ள சமய நிறுவனங்கள் பற்றிய விபரம்:**

இந்துசமய அறநிலைய நிர்வாகத்துறையின் பொறுப்பில் 34,236 சமய நிறுவனங்கள் உள்ளன. இவற்றுள் திருக்கோயில்கள் 32,199, திருமடங்கள் 55, திருமடங்களுடன் இணைக்கப்பட்டுள்ள திருக்கோயில்கள் 55, குறிப்பிட்ட அறக்கட்டளைகள் 1,721, சமண சமய நிறுவனங்கள் 17, மற்றும் அறக்கட்டளைகள் 189 இந்நிறுவனங்களில் 25,936 நிறுவனங்கள் உதவித் தொகை விதிக்கத்தக்க வருமானமுடையனவாகும். இந்நிறுவனங்களுக்கு உதவித் தொகை விதிக்கத்தக்க ஆண்டு வருமானம் சுமார் ரூ. 21.86 கோடி என மதிப்பிடப்படுகிறது. இத்தொகை சென்ற ஆண்டு ரூ. 18.57 கோடியாக இருந்தது.

### 2. நிர்வாக அமைப்பு.

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 1960 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்தது. இச் சட்டத்தின் கீழ் இந்து சமய அறநிலையத் துறைக்கு பொது நிர்வாகத்திற்காக ஆணையாளர் ஒருவரும், அவருக்கு உதவியாக 7 துணை ஆணையாளர்களும், 17 உதவி ஆணையாளர்களும், 492 திருக்கோயில் செயல் அலுவலர்களும் (பல்வேறு பதவித் தரத்தில்) உள்ளனர். அதைத் தவிர, துணை ஆணையர் நிலையில், 2 நேர்முக உதவியாளர்கள் துறைத் தலைமையகத்தில் பணி புரிகிறார்கள்.

மாநிலத்திலுள்ள சில திருமடங்கள் செயல்படுவதில் நிர்வாகக் குறைபாடுகள், சீர்கேடுகள் காணப்படுவதாகக் கூறப்படும் குற்றச் சாட்டுகளை தனிப்பட்ட புலனாய்வு நடத்தும் பொருட்டு, தனியாக ஒரு துணை ஆணையர் செயல்பட்டு வருகிறார். இம் மாநிலத்திலுள்ள அனைத்து திருமடங்களின் நிர்வாகங்களை கண்காணிக்கும் பொறுப்பு இத்துணை ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



மாவட்டங்களில் துணை ஆணையாளர்களிடம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மேல் நிலுவையில் இருந்து வரும் வழக்குகளை விசாரித்து, விரைவில் முடிப்பதற்காக துணை ஆணையாளர் (நீதி) ஒருவர் நியமிக்கப்பட்டுப் பணியாற்றி வருகிறார்.

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான திருவாபரணங்களையும் மற்றும் விலையுயர்ந்த பொருட்களையும் ஆய்வு செய்து மதிப்பிடும் பணியை கவனிக்க உதவி ஆணையாளர் பதவித் தரத்தில் எட்டு நகை சரிபார்க்கும் அதிகாரிகள் அவர்களுக்குரிய துணைப் பணியாளர்களுடன் உள்ளனர்.

மேற்பார்வைப் பொறியாளர் ஒருவரின் தலைமையில், கோட்டப் பொறியாளர் ஒருவரும், தேவையான தொழில் நுட்ப மற்றும் மாவட்டப் பணியாளர்களும், சமய நிறுவனங்களின் திருப்பணி மதிப்பீடுகளை தயாரித்தும் மற்றும் அப்பணிகளையும், இதர கட்டிட வேலைகளையும் மேற்பார்வையிட்டும் கவனித்து வருகின்றனர்.

ஆணையாளர் அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பதவித் தரத்தில் தனி அதிகாரி ஒருவரும், தனி வட்டாட்சியர் நான்குபேரும் அடங்கிய வருவாய் தனிப்பிரிவு ஒன்று, திருக்கோயில் நிலங்களை ஆய்வு செய்தல், அடிப்படைப் பதிவேடுகள் தயாரித்தல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறது.

தலைமை அலுவலகத்தில் துறையின் அனைத்து வரவு-செலவு கணக்குகளில் ஆணையாளருக்கு உதவும் பொருட்டு 1984 ஆம் ஆண்டு முதல் கருவூலம் மற்றும் கணக்குத் துறையைச் சார்ந்த ஒரு முதுநிலை கணக்கு அலுவலரும் அவருக்கு உதவியாக ஏற்கனவே உள்ள ஒரு உதவிக் கணக்கு அலுவலரும் உள்ளனர்.

அறநிலையத்துறையில் மாநில கணக்காய்வுத் தலைவர் அலுவலகத்தைச் சார்ந்த கணக்கு அலுவலர் தரத்தில் உள்ள தலைமை தணிக்கை அதிகாரி ஒருவரின் கீழ் அவருக்கு தேவையான சார் நிலை அலுவலர்கள், பணியாளர்களுடன் சமய நிறுவனங்களின் கணக்குகளை தணிக்கை செய்வதற்காக ஒரு தணிக்கைப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

ஆணையாளர், துணை ஆணையாளர்கள், உதவி ஆணையாளர்கள், தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளை சட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு சட்டத்தின்படி அமைந்த அலுவலர்கள் ஆவர்.

### 3. செயல் அலுவலர்கள்.

தற்போது தமிழ்நாட்டில் 1,787 திருக்கோயில்கள் செயல் அலுவலர்கள் பொறுப்பில் உள்ளன. இக்கோயில்களை 492 செயல் அலுவலர்கள் நிர்வகித்து வருகிறார்கள். இதில், 54 நிலை—1 செயல் அலுவலர்களும், 117 நிலை 2-செயல் அலுவலர்களும், 172 நிலை-3 செயல் அலுவலர்களும், 138 நிலை-4 செயல் அலுவலர்களும் அடங்குவர். நிலை—1-லிருந்து நிலை-4 வரையில் உள்ள செயல் அலுவலர்களின் மொத்த எண்ணிக்கை, 481 ஆகும். அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில், மைலாப்பூர், அருள்மிகு தேவராஜசுவாமிகள் திருக்கோயில், காஞ்சிபுரம், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோயில், இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத தேவஸ்வம், சுசீந்திரம் இவைகளில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேல் உதவி ஆணையர் நிலையில் செயல் அலுவலர்கள் பணியாற்றி வருகிறார்கள். 7—7—1984 நாளிட்ட அரசாணை நிலை எண். 731-ல் அடியிற்கண்ட 8 திருக்கோயில்களின் நிலை-1 செயல் அலுவலர் பதவிகளை உதவி ஆணையர் நிலைக்கு உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது ;—

(1) அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், மருதமலை, கோயம்புத்தூர்.

(2) அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில், வடபழநி, சென்னை.

(3) அருள்மிகு பன்னாரி மாரியம்மன் திருக்கோயில், பன்னாரி, பெரியார் மாவட்டம்.

(4) அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை, வடாற்காடு மாவட்டம்.

(5) அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், மாங்காடு, செங்கல்பட்டு மாவட்டம்.



(6) அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி, சென்னை-5.

(7) அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயில், சங்கரன்கோயில், திருநெல்வேலி.

(8) அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயில், சுவாமி மலை, கும்பகோணம் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்.

இந்த உதவி ஆணையர் தரத்திலுள்ள செயல் அலுவலர் பதவிகளை, தகுந்த நபர்களைக் கொண்டு நிரப்புவதற்கு அரசு தகுந்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்த 8 பதவிகள் நிரப்பப்பட்டவுடன், நிலை-1 செயல் அலுவலர் பதவிகள் 46 ஆகக் குறையும்.

மதுரை மாவட்டம், பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் 1951 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே அறிவிக்கை செய்யப்பட்ட திருக்கோயிலாகும். இது அப்போது ஒரு செயல் அலுவலர் பொறுப்பில் இருந்து வந்தது. 16 ஆண்டு களாக அதாவது 1966 வரை, செயல் அலுவலர் பொறுப்பில் இருந்தது. 1966 முதல் இப்பதவி, உதவி ஆணையர் தரத்திற்கு உயர்த்தப்பட்டது. இத்திருக்கோயிலின் உயர்ந்து வரும் வருமானத்தைக் கருத்திற்கொண்டு இதன் செயல் அலுவலரின் நிலை 1971 ஆம் ஆண்டு முதல், துணை ஆணையர் நிலைக்கு உயர்த்தப்பட்டது. இத்திருக்கோயிலைத் தவிர, கீழ்க்கண்ட 7, திருக்கோயில்களுக்கும், உதவி ஆணையர் நிலை செயல் அலுவலர் பதவிகளை துணை ஆணையர் நிலைக்கு உயர்த்த 7—7—1984 ஆம் நாளிட்ட அரசாணை நிலை எண் 731-ல் ஆணை பிறப்பிக்கப் பட்டது :—

(1) அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு.

(2) அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயில், திருத்தணி, செங்கல்பட்டு மாவட்டம்.

(3) அருள்மிகு ரெங்கநாதசாமி திருக்கோயில் ஸ்ரீரங்கம், திருச்சி.

(4) அருள்மிகு மீனாட்சிசுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை.

(5) அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயில், திருச்செந்தூர்.

(6) அருள்மிகு ராமநாதசாமி திருக்கோயில், ராமேஸ்வரம்.

(7) கன்னியாகுமரி தேவஸ்வம் போர்டு, சுசீந்திரம்.

இந்து சமய அறநிலையத்துறையின் தலைமையகத்தில் ஆணை யருக்கு உதவியாளராக உதவி ஆணையர் தரத்தில் ஒரு கூடுதல் நேர்முக உதவியாளரும், துணை ஆணையர் தரத்தில் ஒரு நேர்முக உதவியாளரும் பணியாற்றி வந்தார்கள். இந்த பாகுபாட்டை நிரவல் செய்யவும், நிர்வாகத்தின் பளுவை உரிய பதவித் தரத்தில் உள்ள அலுவலர்களைக் கொண்டு செம்மையாக நடத்திச்செல்ல வும், தலைமையகத்திலுள்ள உதவி ஆணையர் தரத்திலுள்ள கூடுதல் நேர்முக உதவியாளர் பதவியை சுசீந்திரம் தேவஸ்வம் நிர்வாகத்திற்கு மாற்றவும், தேவஸ்வத்தில் துணை ஆணையர் தரத்தில் இருந்த செயல் அலுவலர் பதவியை தலைமையகத்தில் கூடுதல் நேர்முக உதவியாளராக மாற்றவும் அரசு 1985 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் ஆணை பிறப்பித்துள்ளது. எனவே, இன்றைய நிலையில், கீழ்க்கண்ட எண்ணிக்கையில் செயல் அலுவலர்கள் திருக்கோயில்களில் பணிபுரிந்து வருகின்றார்கள்:

| செயல் அலுவலர் நிலை. | எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| நிலை 4 | 138 |
| நிலை 3 | 172 |
| நிலை 2 | 117 |
| நிலை 1 | 54 |
| உதவி ஆணையர் நிலை | 4 |
| துணை ஆணையர் நிலை | 7 |
| மொத்தம் | 492 |





## 4. திருமடங்களின் மேற்பார்வையில் உள்ள திருக்கோயில்களுக்கு செயல் அலுவலர் நியமனம் செய்தல்.

திருமடங்களின் மேற்பார்வையில் உள்ள திருக்கோயில்களின் நிர்வாகத்தைப் பற்றிய புகார்களைக் கருத்தில் கொண்டு, சட்டத்தின் விதிமுறைகளின்படி அவ்வகை திருக்கோயில்களின் நிர்வாகத்தினை மேம்படுத்தவும், அறங்காவலருக்கு உதவி புரியவும், செயல் அலுவலர்களை நியமிக்க உத்தேசிக்கப்பட்டது. இதனை எதிர்த்து தருமபுரம் திருவாவடுதுறை மற்றும் குன்றக்குடி ஆதீனங்களின் மடாதிபதிகள் சென்னை உயர்நீதி மன்றத்தில் 664/80, 665/80, 815/80 மற்றும் 816/80 நீதிப் பேராணை மனுக்களை தாக்கல் செய்து தடை ஆணை பெற்றுள்ளனர்.

உயர்நீதி மன்ற அரசு வழக்கறிஞரை விசாரணையினை விரைவில் நடத்தி முடிக்கக் கேட்டு, அதற்கான மனு உயர்நீதி மன்றத்தில் அரசு வழக்கறிஞரால் தாக்கல் செய்யப்பட்டு விட்டது. நீதிமன்றத்தில் தேதி நிர்ணயிக்கப்பட்டு நீதிப்பேராணை மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவது எதிர் நோக்கப்படுகிறது.

### 5. தணிக்கை.

தணிக்கை செய்வதில் நல்ல முன்னேற்றமும், திறமையும் ஏற்பட, முன்பு உபயோகத்தில் இருந்து தணிக்கை அறிக்கை யுடன் இணைக்கப்பட்டும் தணிக்கை அட்டவணைகள் தணிக்கை வினாப் பட்டியல் இவைகள் தற்சமயம் புதுப்பிக்கப்பட்டுள்ளன. தணிக்கை முறைக்கும், தணிக்கை மேலாய்வு முறைக்கும் திருத்தி யமைக்கப்பட்டுள்ளன. இதுபோலவே திருப்பணி கணக்குத் தணிக்கை மற்றும் பெரிய மடங்கள் அவற்றுடன் சார்ந்துள்ள திருக்கோயில்கள் மற்றும் இதர திருக்கோயில்களின் கணக்கின் மீதான தணிக்கை ஆகியவற்றிலும் விரைவான முன்னேற்றம் ஏற்படதக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. குறைந்த வருவாய் உள்ள (ஆண்டு வருவாய் ரூ. 10,000-க்குக் கீழ் உள்ள) திருக்கோயில்களில் கணக்குகளின் தணிக்கைக்கு தனிக்கவனம் அளிக்கப்பட்டுள்ளது. கோயில் கணக்குகளைத் தணிக்கை செய்ய தணிக்கை அலுவலகத்திற்குக் கொண்டு வருதலில் கோயில் பொறுப்பாளர்களிடையே தயக்கம் உள்ளது கண்டு, இதனைத் தவிர்ப்பதற்காக தணிக்கையாளர்கள் மேற்படி கோயில்களுக்குச் சென்று தணிக்கை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

[1985 ஜூன் 13

தற்சமயம் சமய நிறுவனங்களின் ஆண்டு வருமானத்திலிருந்து
ஒரே சீரான 1½ சதவிகிதம் தணிக்கை கட்டணமாக அறநிலைய
சட்டப் பிரிவு 92(2)-ன் கீழ் வசூலிக்கப்படுகிறது. இந்த கட்டண
விகிதம் 1951 ஆம் ஆண்டு முதல் அமுலில் இருக்கிறது.
தணிக்கைப் பிரிவிற்கு ஆகும் செலவு தணிக்கைக் கட்டணத்தை
காட்டிலும் அதிகமாக உள்ளது. இதற்குக் காரணம், அரசு
ஊழியர்களாகிய தணிக்கைப் பணியாளர்களுக்குச் சம்பளம்
மற்றும் படிகள் மற்ற எல்லா அரசு ஊழியர்களைப் போல
அவ்வப்போது உயர்த்தப்பட்டு வருகின்றன. இச்செலவைச்
சரிக்கட்டும் பொருட்டு தணிக்கைக் கட்டணத்தை சமய நிறு
வனங்களின் ஆண்டு வருமானத்தில் உயர் அளவாக 4 (நான்கு)
சதவிகிதம் வரை உயர்த்துவதற்கு சட்டத் திருத்தத்திற்கான
குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

திருக்கோயில்களின் வருமானம் ஒரு பக்கம் அதிகரிக்க, மறு
பக்கத்தில் இத்திருக்கோயில்களால் பராமரிக்கப்படும் நிறுவனங்
களும் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. இத்திருக்
கோயில்கள் கணக்குகளை நல்ல முறையில் பேணி பாதுகாக்க
துணை ஆணையர் தரத்தில் செயல் அலுவலர்கள் பணிபுரியும்
திருக்கோயில்களில் கணக்கு அலுவலர் பதவி ஒன்றினை அத்
திருக்கோயில்களின் சம்மதத்தின்பேரில் ஏற்படுத்தும் திட்டத்
தினை அரசு கொள்கை அளவில் ஏற்று, துணை ஆணையர்
தரத்தில் உள்ள செயல் அலுவலர்கள் பணிபுரியும் எட்டு திருக்
கோயில்களில் 17—1—1985 எட்டு மண்டல தணிக்கை
அதிகாரிகள் கணக்கு அலுவலர்களாக நியமனம் செய்ய அரசு
அனுமதி அளித்துள்ளது.

## 6. ஆலயப்பணியாளர்கள்.

இத்துறையின் ஆளுகைக்குட்பட்ட திருக்கோயில்களில்
அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகள் உட்பட சுமார் ஒரு இலட்சம்
பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

1—4—1981 முதல் இவர்களுடைய சம்பளம் மற்றும் படிகள்
திருக்கோயில் வருவாயில் உயர்ந்த பட்சம் 30 சதவிகிதத்திலிருந்து
உயர்த்தி 40 சதவிகிதம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



1985 ஜூன் 13]

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் பணியாளர்
களுக்கு, அநேகமாக அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும்
சம்பளங்களும், படிகளும் வழங்கப்படுகிறது, இதர திருக்கோயில்
களில் 40 சதவிகிதத்திற்குட்படுத்தி பணியாளர்களின் சம்பள
விகிதம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அத்திருக்கோயில்களில்
உள்ள பணியாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு அவ்வப்போது அக
விலைப்படி அனுமதிக்கப்பட்டுள்ளது.

| அகவிலைப்படி உயர்வு அளிக்கப்பட்ட தேதி விவரம். | ரூ. 400 வரை ஊதியம் பெறும் பணியாளர்களுக்கு. | ரூ. 400க்கு மேல் ஊதியம் பெறும் பணியாளர்களுக்கு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1—2—84 முதல் | 165 | 185 |
| 1—3—84 முதல் | 175 | 195 |
| 1—5—84 முதல் | 185 | 205 |
| 1—6—84 முதல் | 195 | 215 |
| 1—8—84 முதல் | 205 | 225 |
| 1—10—84 முதல் | 215 | 235 |
| 1—12—84 முதல் | 225 | 245 |
| 1—3—85 முதல் | 235 | 255 |

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
நீங்கலாக, இதர துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர்
நிலையில் நிர்வாக அதிகாரிகள் உள்ள திருக்கோயில்களில் பணி
புரியும் ஆலய பணியாளர்களின் பல்வேறு சம்பள விகிதம் மற்றும்
இதரப்படிகளை அந்த ஆலயங்களின் நிதி நிலைமையைக் கருத்
தில் கொண்டு, அதற்கு ஏற்றாற்போன்று சீரமைத்து நிர்ணயம்
செய்யப்பட உள்ளது. மேலும் இந்நிறுவனங்களில் பணிபுரியும்
(அர்ச்சகர் ஓதுவார் மற்றும் நாதஸ்வர குழு போன்ற உள்துறை
பணியாளர்கள் நீங்கலாக) இதர பணியாளர்களை இந்நிறுவனங்
களுக்குள்ளாக மாறுதல் செய்வது நிர்வாக நலனுக்கு உகந்ததாக
இருக்கும். ஆதலால் அதற்கான வழிவகைகளும் வகுக்கப்பட்
டுள்ளது. இந்த ஊதிய சீரமைப்பு, பணியாளர்கள் மாற்றம்
இவைகளை மேற்குறித்த கோயில்களில் முதற்கட்டமாக

பரீட்சார்த்தமாக செயல்படுத்திய பின் அதன் நலன்களை பரிசீலித்து பின் காலகட்டத்தில் அவைகளை இதர திருக்கோயில் பணியாளர்களுக்கு படிப்படியாக அமுல்படுத்தப்படும்.

பெரும்பாலான திருக்கோயில்களில் நிதிநிலைமை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் அங்குள்ள பணியாளர்களுக்கு சம்பளப் பட்டுவாடா செய்யப்படாது நிலுவையாக உள்ளது. குறிப்பாக திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் 150 திருக் கோயில்களில் ரூ. 8,81,697 ரொக்க நிலுவையாகவும் நெல் பாக்கியாக 2,275 கலமும் உள்ளது. 2,275 கலம் நெல்லின் மதிப்பு இன்றைய சந்தை விலை அடிப்படையில் ரூ. 3,41,250 ஆக மொத்தம் ரூ. 12,22,947 ஆலய ஊழியர் ஊதிய பாக்கி உள்ளது. திருக்கோயில்களின் பணியாளர்களுக்கு உதவும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டுள்ள ரூபாய் ஒரு கோடி வைப்பு நிதி யிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து சம்பள பாக்கிகள் அதிகம் உள்ளவர்களுக்கு கோயில்களின் நிதி நிலைமையை கருத்தில் கொண்டு ஊதிய நிலுவைகளை உடனடியாக அளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் திருக்கோயில் பணியாளர்களுக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகம் மூலம் (எல்.ஐ.சி.) 1—7—1982 முதல் க்ரூப் இன்சூரன்ஸ் திட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டப்படி ரூ. 100-க்கு மேல் சம்பளம் பெறும் திருக்கோயில் பணியாளர்கள் குறைந்த பட்சம் பிரிமியமாக ஆண்டொன்றுக்கு ரூ. 25 செலுத்த வேண்டும். ரூ. 100-க்கு கீழ் சம்பளம் பெறும் பணியாளர்கள் எவ்வித பிரிமியமும் செலுத்த வேண்டியதில்லை. இத்திட்டம் அமுல் படுத்தப்பட்ட பின்பு மரணமடைந்துள்ள 50 திருக்கோயில் பணி யாளர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ. 5,000 வீதம் இன்சூரன்ஸ் தொகை பெற்று வழங்கப்பட்டு உள்ளது.

ஏதேனும் ஒரு திருக்கோயில் பணியாளர் பணியிலிருக்கும் போது மரணம் அடைந்தால், அப்பணியாளர்களின் சேமநல நிதிக் கணக்கிலிருந்து ஈமச்சடங்கிற்காக ரூ. 250 அளிக்கப் படுகிறது.

ரூ. 500 அல்லது இரண்டு மாத அடிப்படைச் சம்பளம் இதில் எது குறைவோ அதனை திருக்கோயில் பணியாளர்களுக்கும் பண்டிகை முன்பணமாக கொடுக்கப்பட்டு, அதனை 10 தவணை களில் (அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படுவது போல்) பிடித்தம் செய்யப்படுகிறது.



அரசு ஊழியர்களுக்கு உள்ள ஈட்டிய விடுப்பை சரண் செய்யும் சலுகை ஆலய ஊழியர்களுக்கு இல்லாத காரணத்தால் பெரிய திருக்கோயிலில் விழாக் காலங்களில் அதிகப்படியாக கூடுதல் நேரம் பணிபுரியும் ஆலயப் பணியாளர்களுக்கு ஒரு மாத சம்பளத்திற்கு நிகரான தொகை சிறப்பு ஊதியமாக வழங்கப் படுகிறது.

ரூ. 10,000 அல்லது அதற்கு மேல் ஆண்டு வருவாய் பெறும் ஆலயங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஆலயமும் பணி யாளர்களும் வைப்பு நிதிக்கு தொகை செலுத்தும் வருங்கால வைப்பு நிதித்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

ரூ. 10,000 அல்லது அதற்கு மேல் ஆண்டு வருவாய் பெறும் ஆலயங்களில் 10 ஆண்டுகள் பணியாற்றிய அலுவலகப் பணி யாளர் பணியிலிருந்து ஓய்வு பெற்றால் அவர் பணியாற்றிய ஒவ்வொரு முழு ஆண்டுக்கும் ½ திங்கள் சம்பளம் வீதம் 15 மாத அடிப்படைச் சம்பளத்திற்கு மிகைப்படாமல் பணிக்கொடை வழங்கப்படுகிறது.

திருக்கோயில் பணியாளர்கள் தற்காலிகப் பதவி நீக்கத்தில் இருக்கும்போது அவர்களுக்குப் பிழைப்பூதியம் வழங்க உதவி ஆணையர்/செயல் அலுவலர் தரத்தில் உள்ளவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

7. விலை மதிப்புள்ள திருவுருவச் சிலைகள் பாதுகாப்பு.

தமிழ்நாட்டிற்குத் தனிப்பெயரும் புகழும், பெருமையும் அளிக்கும் விலை மதிக்க முடியாத கலைப் பொருட்களான சிலை களைப் பாதுகாக்க இவ்வரசு சிறப்பான நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. அவைகள் பின்வருமாறு :

தமிழ்நாட்டில் உலோகத் திருமேனிகள் மிகவும் அதிகமாக உள்ள மாவட்டம் தஞ்சாவூர். அங்கு பாதுகாக்கப்படவேண்டிய திருமேனிகள் சுமார் 1955 ஆகும். இதில் விலைமதிக்க முடியாத திருமேனிகளும் உள்ளன. திருமேனிகளை பாதுகாக்க வேண்டி தமிழக அரசு ரூ. 10,00,000 நிதி ஒதுக்கீடு செய்து, திருவாரூரில் அருள்மிகு தியாகராசசுவாமி ஆலயத்தினுள் ஒரு சிலைகாப்பு கூடம் அமைக்க அரசு அனுமதி அளித்துள்ளது. இதற்கான மதிப்பீடு ரூ. 7,88,000 ஆகும்.

இந்த மதிப்பீட்டின்படி எளிதில் உடைக்க முடியாத கான்கிரீட் கூரைகளும், உறுதியான தளமும் உள்ள பலமான கட்டிடம் கட்டப்படும். திருமேனிகளை சிறந்த முறையில் வரிசைபடுத்தி அமர்த்த தகுந்த இருக்கைகள் கட்டிடத்தினுள்ளே அமைக்கப் படும். கட்டிடத்தை சுற்றி காவலர்கள் கண்காணிப்பதற்காக பாதுகாப்பான சுற்றளி அமைக்கப்படும். வங்கிகளிலுள்ளது போன்ற பாதுகாப்பான கதவுகள் பொருத்தப்படும். கட்டிடம் கோயில் மதிற்சுவருக்குள் இருப்பதால் திருக்கோயில் கட்டிடம் அமைப்பு இருக்கும். இந்தக் கட்டிடம் புதுமையாகவும் நுணுக்கமாகவும் அமைக்கப்பட இருப்பதால். இதைக் கட்டும் பணியை தமிழக அரசு நிறுவனமான 'கட்டுமானக்கழகம்" ஏற்று நடத்துகிறது. நடப்பு ஆண்டில் கட்டிடம் முடிவுபெற்று திருமேனிகள் பாதுகாப்பான இடத்தில் அமரும் என்று திட்டமிட்டு செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில் கோயில்களிலிருந்து அழகிய மற்றும் விலையுயர்ந்த சிலைகள் களவாடப்படுவதைத் தடுக்க ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கண்காணிப்புக் குழு நியமனம் செய்யப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்ட சபையில் அறிவித்ததைத் தொடர்ந்து (1984 ஆம் நிதியாண்டு உள்துறை மானியம் விவாதத்தின் போது) பாதுகாக்க வேண்டிய புராதன சிலைகள் உள்ள கோயில்கள் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட விழிப்புக் கமிட்டிகளை அமைக்க அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் 11—7—1983-ல் பணிக்கப்பட்டுள்ளனர் :—

(1) அந்த கிராமத்தில் உள்ளூர் மக்களால் மதிக்கப்படும் 4 பெரியோர்கள்.

(2) அந்தக் கிராமத்தில் வசிக்கும் முன்னாள் ராணுவ வீரர், முன்னாள் காவல் துறையினர், மற்றும் ஓய்வு பெற்ற அரசு அலுவலர்—4 பேர்கள்.

(3) அங்குள்ள காவல்துறை அதிகாரி.

(4) பிர்க்கா வருவாய் துறை ஆய்வர்.

(5) இந்து சமய அறநிலையத்துறை பிரிவு ஆய்வர்.





இதனைத் தொடர்ந்து புதுக்கோட்டை, மதுரை, சேலம், தர்மபுரி, தென்னாற்காடு மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் கிராம விழிப்புக் கமிட்டிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள மாவட்டங்களிலும் விரைவில் இத்தகைய கமிட்டிகள் நிறுவப்படவேண்டும் என சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைவருக்கும் தமிழக அரசு தலைமைச் செயலர் அவர்கள் மே, 85-ல் அறிவுறுத்தியுள்ளார்கள்.

புராதன திருமேனிகள் மற்றும் உலோகச் சிலைகள் களவுகளைத் தவிர்க்க ஒரு காவல்துறை கண்காணிப்பாளர் தலைமையில் ஒரு டி.எஸ்.பி., 4 இன்ஸ்பெக்டர்கள், 2 சப்-இன்ஸ்பெக்டர்கள், 4 தலைமைக் காவலர்கள், 3 முதல் நிலைக் காவலர்கள், 6 இரண்டாம் நிலைக் காவலர்கள் ஆகியோர் அடங்கிய ஒரு தனி ஸ்குவாட் அமைக்கப்பட்டுள்ளது.

களவு போன செப்புத் திருமேனிகள் மற்றும் விலை மதிப்பு வாய்ந்த பொருள்கள் பற்றித் துப்பு அளிப்பவருக்குத் தகுந்த சன்மானம் (ரூ. 500 முதல் ரூ. 1,000 வரை) வழங்க ஆணையாளருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

திருக்கோயில்களின் காவல் பணியாளர்களுக்கு துப்பாக்கிகளை உபயோகிக்கவும், நவீன முறைகளைப் பயன்படுத்தி திருடர்களைப் பிடிக்கவும் காவல் துறையினரால் போதிய தற்காப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

விலை மதிப்புள்ள சிலைகள் மற்றும் நகைகள் திருக்கோயில்களில் வைத்திருக்கும் இடங்களில் அன்னியர்கள் நுழையும்போது சப்தம் உண்டாவதற்கு எச்சரிக்கை மணி நிறுவ உத்தேசிக்கப் பட்டுள்ளது. அந்நியர்கள் உள்ளே நுழையும்போது மணி ஓசை கேட்கும். இதனால் காவலர்கள் உஷார் ஆவர். இதனால் திருடு தடுக்கப்படும். இம்மாதிரியான எச்சரிக்கை மணிகளை தேவைப்படும் திருக்கோயில்களில் நிறுவ நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

உலோகத் திருமேனிகள் தவிர நமது சமய நிறுவனங்களில் உள்ள கலைச்சிறப்பு மிக்க கல் சிலைகள், தந்தத்தால் ஆன பொருள்கள், தேர் பொம்மைகள் போன்ற விலை மதிப்பற்ற கலைக் கருவூலங்களை பேணி பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

வருங்காலத்தில் உலோகத் திருமேனிகள் போன்றவற்றை கண்காட்சிகளில்—உள்நாடு மற்றும் வெளி நாடுகளில் வைப்பதைக் குறித்து, வல்லுநர்களின் பரிந்துரைப்படி நெறிமுறைகள் மற்றும் வழிமுறைகள் வகுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

### 8. கோயில் நிலங்கள்.

இம்மாநிலத்தில், இந்து சமய அறநிலையங்களுக்கு சொந்த மான சுமார் 5.25 இலட்சம் ஏக்கர் நிலங்கள் உள்ளன. பசலி 1393 வரை இந்நிலங்களிலிருந்து பெறப்பட வேண்டிய குத்தகை வாடகை பாக்கி சுமார் ரூ. 33.35 கோடியாகும். குத்தகைதாரர் களை நிலத்திலிருந்து வெளியேற்றுவது போன்ற நடவடிக்கையி லிருந்து விதிவிலக்கு அளித்து பாதுகாப்பு கொடுக்கும் பல சட்டங்கள் காரணமாக, மேற்படி நிலுவைகளை வசூலிக்க முடியவில்லை. இதனால் கோயில்களின் வருமானம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக சில கோயில்களில் தினப்படி பூசைகள் செய்வதும் வேலையாட்களின் ஊதியம் கொடுப்பதும் இயலாததாக உள்ளது. எனவே சட்டப்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள 25 சதவிகித விளைச்சலையாவது முறையாக வசூல் செய்வதற்கு வசதியாக தனிப்பட்டவர்களின் ஆதிக்கத்தில் இல்லாத அறநிலைய நிலங்களுக்கு மேற்கூறிய சட்ட விதிகளிலிருந்து விலக்கு அளிப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

**நிலங்களின் குத்தகை வாடகை அதிகரித்தல்.**

1984 ஆம் ஆண்டில் 2,999.45 ஏக்கர் நிலங்களுக்கான ஆண்டு குத்தகை வருமானம் ரூ. 2,21,643.75 அளவிற்கு அதிகப்படுத்தப் பட்டுள்ளது.

**தரிசு நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டது.**

274.76 ஏக்கர் தரிசு நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டு அதன் மூலம் கூடுதல் வருமானம் அறநிலையங்களுக்கு கிடைக்கிறது.

ஆக்கிரமிப்பில் இருந்த 868.43 ஏக்கர் நிலங்கள் அற நிலையங்களால் திரும்ப பெறப்பட்டு, குத்தகைக்கு விடப் பட்டதில் அதன் மூலம் கூடுதல் குத்தகை வருமானம் வரப் பெற்றுள்ளது.

### 9. ஆலய நிலங்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணை.

தமிழ்நாட்டில் இருக்கும் ஆலயங்களுக்கு பெரும்பான்மையாக விவசாய நிலங்களும் கட்டிடங்களும் மற்றும் விவசாயம் இல்லாத நிலங்களும் சொந்தமாக இருக்கின்றன. விவசாய நிலங்கள்



குத்தகைக்கு விடப்பட்டு சாகுபடி செய்யப்படுகின்றன. ஒருசில சிறிய ஆலயங்களில் மட்டுமே நேரிடையாக பண்ணைச் சாகுபடி செய்யப்படுகின்றது. ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க தனி வருவாய் அலுவலர் நியமனம் செய்யப்பட்டு 1—4—1970 முதல் மாவட்ட வருவாய் அதிகாரியின் பார்வையில் திருக்கோயில் நிலங்கள் குறித்து ஆய்வு பணி தொடங்கப்பட்டது. அது முதல் இப்பணி தொடர்ந்து நடந்து வருகிறது.

தற்போது வேலூர், கும்பகோணம், நாங்குநேரி மற்றும் மதுரை ஆகிய நான்கு இடங்களில் தனி வட்டாட்சியர், ஆலய நிலங்கள் அலுவலகம் உள்ளன. பட்டியலில் சேர்க்கப்படாத திருக்கோயில் நிலங்கள் மற்றும் கட்டிடங்களுக்கு ஆதாரப் பதி வேடுகள் தயாரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு வட்டாட்சியரும் மாதம் 30 ஆலயங்கட்கு ஆதாரப் பதிவேடு தயார் செய்ய குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தனி வட்டாட்சியர்கள் ஒவ்வொருவரும் கிராமத்திற்குச் சென்று அந்த கிராமத்திற்குரிய வருவாய்துறை பதிவேடுகளை பரிசீலனை செய்தும், கிராம நிர்வாக அலுவலர்களையும் மற்றும் முக்கியஸ்தர்களையும் விசாரணை செய்து ஆலயத்திற்குச் சொந்த மான நிலங்கள் எவ்வளவு இருக்கின்றன. அவற்றின் தற் போதைய நிலை என்ன, யார் அனுபவத்தில் உள்ளது. இந்த நிலங்களினால் ஆலயத்திற்கு வருகின்ற வருமானம் முதலிய விபரங்கள் சேகரம் செய்யப்பட்டு ஆதாரப் பதிவேடுகள் தயாரிக்கப்படுகின்றன.

சிதம்பரம் அருள்மிகு சபாநாயகர் திருக்கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள் தமிழ்நாட்டில் தென் ஆற்காடு, திருச்சி, சேலம், திருநெல்வேலி மற்றும் தஞ்சை ஆகிய ஐந்து மாவட்டங் களில் உள்ளன. இவை குறித்து நடவடிக்கை எடுக்க தனி வட்டாட்சியர் ஒருவரை அரசு 1—3—1976-ல் நியமனம் செய்து பின் 31—12—1981 முதல் கடலூர் உதவி ஆணையர் மேற்படி பணிகளை கவனித்து வருகிறார்.

தனி அலுவலர் திருக்கோயில் நிலங்கள் ஆய்வு மேற்கொள்ளும் போது 10,275 (பட்டியலில் சேர்க்கப்பட்ட திருக்கோயில்கள் 9,747-ம் 328-ம் பட்டியலில் சேர்க்கப்படாத திருக்கோயில்கள் திருக்கோயில்களுக்கு 4.1 இலட்சம் ஏக்கர் நஞ்சை மற்றும்

புஞ்சை நிலங்கள் இருந்தன. திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டபின் மொத்தம் 41,306 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 2,01,343 ஏக்கர் நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்கள் அறநிலைய ஆட்சித்துறை ஆளுகையின் கீழ் கொண்டு வாராமல் இருந்தது. இக்குறிப்புகள் சம்பந்தப்பட்ட உதவி ஆணையர் அலுவலகத்துக்கு தக்க மேல் நடவடிக்கை எடுத்து இலாக்கா ஆளுகையின் கீழ் கொண்டுவரும் பொருட்டு அனுப்பப்பட்டுள்ளது.

இதுவரை 10,526 திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் குறித்து அனைத்து விபரங்கள் சேகரித்து 1—15 பதிவேடுகள் தயாரித்து தொடர் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட உதவி ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. இவற்றை ஆலய நிர்வாகிகட்கு அனுப்பி இதன் மீது தொடர் நடவடிக்கை சம்பந்தப்பட்ட உதவி ஆணையர், துணை ஆணையரால் கண்காணிக்கப்படுகிறது. இவை தனி அலுவரால் அவ்வப்பொழுது கண்காணிக்கப்படுகிறது.

சென்னை, செங்கற்பட்டு, தென்னாற்காடு, தஞ்சாவூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, கோயம்புத்தூர், பெரியார் மற்றும் நீலகிரி மாவட்டங்களிலுள்ள திருக்கோயில்களுக்கு 1–15 பதிவேடுகள் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இதில் சென்னை மற்றும் செங்கற்பட்டு மாவட்டத்தில் மேற்கொண்ட பணி 31—3—1982-ல் முடிவு பெற்றது. இதர மாவட்டங்களில் இப்பணிகள் தொடர்ந்து மெற்கொள்ளப் படுகின்றன.

## 10. கட்டிடங்களும், மனைகளும்

### கட்டிடங்கள்.

1983 ஆம் ஆண்டில் சமய நிறுவனத்தைச் சார்ந்த 915 கட்டிடங்களுக்கும் மற்றும் இடங்களுக்கும் வாடகை உயர்த்தப் பட்டது. அதன் விளைவாக. ரூ. 8,43,723,35 கூடுதல் வருமானம் கிடைக்கிறது.

சென்னை நகரில் கீழ்க்கண்ட மனைகள் திருக்கோயில்களுக்கு சொந்தமான நகர்ப்புற நிலங்கள் 99 ஆண்டுகளுக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. குத்தகைதாரர்கள் பல லட்சம் மதிப்புள்ள கட்டிடங்களை





கட்டிக்கொண்டு திருக்கோயிலுக்கு மிகக்குறைந்த வாடகை கொடுப்பதுடன் மேற்படி இடத்தினை உள் வாடகைக்கு விட்டு அதிக லாபம் சம்பாதிக்கிறார்கள்.

| திருக்கோயில் (1) | விஸ்தீர்ணம் (2) | வருட வாடகை (3) | குத்தகைக் காலம். (4) |
|---|---|---|---|
| | | ரூபாய் | |
| 1 அருள்மிகு கச்சாலீசுவரர் ஆலயம், சென்னை-1. | 320 சதுர அடி<br>4,600 சதுர அடி | 200<br>100 | 1–10–31 முதல் 30–9–2030 வரை<br>10–5–1899 முதல் 9–5–1998 வரை |
| 2 அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயில் சென்னை-5. | 55 கிரவுண்டு 1,623 சதுர அடி. | 3460.62 | 1–12–1947 முதல் 30–11–2046வரை |
| 3 அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம் | பூந்தமல்லி நெடுஞ்சாலை—<br>46 கிரவுண்டு 1,600 சதுர அடி.<br>58 கிரவுண்டு 1,651 சதுர அடி.<br>7 கிரவுண்டு 1,780 சதுர அடி | <br>2'9.96<br>35..14<br>46.14 | <br>18–8–1900 முதல் 17–9–1999 வரை.<br>1899 முதல் 1998 வரை.<br>18–11–1898 முதல் 17–11–1997 வரை. |
| 4 அருணாசலேஸ்வரர், திருவண்ணாமலை. | அருணாசலபுரம், 33 கிரவுண்டு<br>அடையாறு— 19 கிரவுண்டு | 232.12<br>11.87 | மாத வாடகை 1–6–36 முதல் 50 ஆண்டுகள் குறுகிய காலக் குத்தகை |
| 5 அருள்மிகு கங்காதரேஸ்வரர் திருக்கோயில் புரசைவாக்கம், சென்னை | 26 கிரவுண்டு 64 சதுர அடி, | கிரவுண்டு 1-க்கு ரூ. 25 மட்டும் | தற்போது பிரிவு 34-ன் படி துணை ஆணையர் சென்னை, இதை விற்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார். |

[1985 ஜூன் 13

மேற்படி நிலங்கள் அக்கால நிலவரத்திற்குத் தக்கவாறு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. தற்போது காலநிலைக்குத் தக்கவாறு நில மதிப்பு பல மடங்கு உயர்ந்துள்ளதால் அதற்கு தக்கவாறு வாடகை உயர்த்தி பெறுவதில் சட்டச் சிக்கல் உள்ளது. தற்போதைய அரசு நிர்ணயம் செய்யும் விலைக்கு விற்பனை செய்து அத்தொகையை முதலீடு செய்தால் கோயிலுக்கு தற்போது கிடைக்கும் வாடகையைவிட பல மடங்குத் தொகை வர சாத்தியக்கூறு உள்ளதால் அதற்குத் தக்கவாறு சட்டம் இயற்ற அரசு பரிசீலனை செய்து வருகிறது.

### 11. திருக்கோயில்களில் பழுது பார்த்தல் மற்றும் .திருப்பணி வேலைகளுக்கு அரசு மானியம் வழங்குதல்.

1984—85 ஆம் நிதியாண்டிற்கு திருக்கோயில்களைப் பழுது பார்க்கவும், புதுப்பிக்கவும் திருக்கோயில்களைச் சார்ந்த திருக் குளங்களின் சீரமைப்பு மற்றும் மராமத்து வேலைகளுக்கு ரூ. 22 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி தொகையில் ஸ்ரீரங்கம் அருள்மிகு ரெங்கநாத சுவாமி திருக்கோயில் இராச கோபுரம் 13-வது கட்டுமான பணிக்கு தமிழ்நாடு அரசின் சார்பாக ரூ. 7,00,000 அனுமதிக்கப்பட்டு மேற்படி ரூ. 7,00,000 மேற்படி திருக்கோயிலுக்கு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 15 இலட்சத்தை ஒதுக்கீடு செய்வதற்குத் தகுதி வாய்ந்த திருக் கோயில்களின் பட்டியல் அரசின் அங்கீகாரத்திற்கு அனுப்பப் பட்டு பரிசீலனைக்குப்பின் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. 1—1—1984 முதல் 31—12—1984 முடிய திருக்கோயில்களின் திருப்பணி வேலைகளுக்கு ரூ. 17,22,950-ம், கல்யாண மண்டபம் மற்றும் மலைப்பாதை அமைக்கும் பணி போன்ற கட்டுமான வேலைகளுக்கு ரூ. 3,30,000-மும், திருக்குள திருப்பணி வேலைகளுக்கு ரூ. 50,000-மும், தேர்த் திருப்பணி வேலைகளுக்கு ரூ. 1,00,000-மும் அரசு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### 12. திருக்கோயில்கள் செப்பனிடுதலும், திருப்பணிகளும்.

1—1—1984 முதல் 31—12—1984 முடிய உள்ள காலத்தில் ரூ. 4,26,19,051 மதிப்பீட்டில் 222 திருப்பணி மற்றும் 25 இதர கட்டுமானப் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



1985 ஜூன் 13]

ரூ. 42,17,200 மதிப்புடைய 105 திருப்பணிகளும் மற்றும் ரூ. 46,41,800 மதிப்புடைய 101 இதர கட்டுமானப் பணிகள் மேற் குறிப்பிட்ட காலத்தில் முடிக்கப்பட்டுள்ளது. ரூ. 3,29,36,230 மதிப்புள்ள 221 இனங்களுக்கான மதிப்பீடுகள் அங்கீகாரம் செய்யப்பட்டுள்ளன.

### மாமன்னன் இராச இராச சோழனின் ஆயிரமாவது முடிசூட்டு விழா நினைவைப் போற்றும் வகையில் 60 தொன்மை வாய்ந்த திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்தல்.

திருமுறை கண்ட மாமன்னன் இராசஇராச சோழனின் ஆயிரமாவது முடிசூட்டுவிழா நினைவைப் போற்றும் வகையில் பழைமையான சிறப்பு வாய்ந்த குறைந்தது 60 திருக்கோயில் களில் சுமார் ரூ. 70 லட்சம் உத்தேச மதிப்பீட்டில் 1985-ம் ஆண்டில் திருப்பணி செய்து குடமுழுக்கு செய்வதற்கு உத்தேசிக் கப்பட்டுள்ளது. இத்திருப்பணிகள் முழுவதும் புரவலர்கள் மற்றும் உபயதாரர்கள் உதவி கொண்டே செய்து முடிக்கப்படும்.

### ரூபாய் 5 இலட்சத்திற்கு மேல் திருப்பணி வேலைகள் நடைபெறும் திருக்கோயில்கள் பட்டியல்.

| வரிசை எண் | வேலை விபரம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | இராசகோபுரம் கட்டுதல், அருள்மிகு காசி விஸ்வநாத சுவாமி திருக்கோயில், தென்காசி, | 90.00 |
| 2 | வெளி அலங்கார வேலைகள், உள்விக்கிரப் பூச்சு வேலைகள் தவிர மற்ற வேலைகள் முடிவடைந்துள்ளன. அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம். | 100.00 |
| 3 | இராசகோபுரம் கட்டுதல், அருள்மிகு காமாட்சி யம்மன் திருக்கோயில், மாங்காடு. | 8.00 |
| 4 | திருப்பணி வேலைகள், அருள்மிகு சபா நாயகர் திருக்கோயில், சிதம்பரம், தென்னாற் காடு மாவட்டம். | 38.00 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| | | ரூபாய். |
| 5 | இராசகோபுரம் கட்டுதல், அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், சேலம். | 17.00 |
| 6 | மகாமண்டபம், பிரகார மண்டபம் கட்டுதல், அருள்மிகு அமரபாஜிஸ்வரர் கோயில் (இணைப்பு) கொண்டத்து காளியம்மன் திருக்கோயில், பாரியூர், பெரியார் மாவட்டம். | 11.25 |
| 7 | மலைப்பாதை அமைத்தல், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சிவன்மலை, பெரியார் மாவட்டம். | 7.50 |
| 8 | கிழக்கு பிரகாரம் விரிவுபடுத்துதல், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி. | 5.40 |
| 9 | ஜெயந்திநாதர் விடுதியில் முதல் மற்றும் இரண்டாவது மாடி கட்டுதல், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர். | 18.35 |
| 10 | தெற்கு வெளிபிரகாரம் அகலப்படுத்துதல், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி. | 7.50 |
| 11 | மருதமலை காம்பிளக்ஸ் கட்டுதல், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை. | 8.10 |
| 12 | பழுதுபார்த்தல், புதுப்பித்தல், அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில், ஸ்ரீபெரும்புதூர். | 6.00 |
| 13 | சுற்றுச்சுவர், மண்டபம் கட்டுதல், அருள்மிகு நாராயணப் பெருமாள் (இணைப்பு) கொண்டத்துக்காளியம்மன் திருக்கோயில், பாரியூர். | 5.00 |
| 14 | சுவாமி சந்நிதிக்குப் பிரகாரம் கட்டுதல், அருள்மிகு மங்களநாதசுவாமி திருக்கோயில், உத்தரகோசமங்கை. | 9.50 |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| 15 | 24 அறைகள் கொண்ட ஓய்வுவிடுதி கட்டுதல் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம். | 5.60 |
| 16 | 19 அறைகள் கொண்ட ஓய்வுவிடுதி, பிர்லா விஷ்ரம் பின்பக்கத்தில் கட்டுதல், அருள்மிகு மீனாட்சிசுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை. | 6.50 |
| 17 | ஆறுமுக விடுதிக்குள் மேல்முதல்மாடி கட்டுதல், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர். | 6.30 |
| 18 | பழுதுபார்த்தல், புதுப்பித்தல், வடக்கு கோபுரம், அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை. | 7.00 |
| 19 | இராசகோபுரம் கட்டுதல், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், பழனி. | 8.50 |
| 20 | பெருமாள் மலை அடிவாரத்திலிருந்து பிரசன்ன வெங்கடாசலபதி மலைக்கோயில் வரை மலைப்பாதை அமைத்தல், துறையூர். | 5.00 |
| 21 | இராசகோபுரம் பழுதுபார்த்தல், புதுப்பித்தல் அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம் | 6.00 |
| 22 | சுற்றுச்சுவர் கட்டுதல், தரை பூசுதல், சமையலறை, அருள்மிகு துர்க்கையம்மன் திருக்கோயில், திருவண்ணாமலை. | 5.00 |
| 23 | வழிபாட்டுக்கூடம் கட்டுதல் ஏற்கனவே உள்ள நினைவாலயம் மாற்றி அமைத்து முன்னேற்றம் செய்தல், மேட்டுக்குப்பம் கிராமம் கரும்பாடி அஞ்சல், குறிஞ்சிப்பாடி. | 6.00 |
| 24 | யாத்திரிகர்களுக்கு நான்கு ஜி.ஐ. கொட்டகைக் கட்டுதல், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோயில். | 6.20 |

| (1) | (2) | (3) |
| --- | --- | --- |
| | | ரூபாய். |
| 25 | கோசாமலை வளாகத்தில் ஒற்றை அறைகள் கட்டுதல், அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி (40 அறைகள்). | 17.00 |
| 26 | இராசகோபுரம் பழுதுபார்த்தல், புதுப்பித்தல் அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவாரூர். | 11.57 |
| 27 | திருப்பணி வேலைகள், அருள்மிகு விஸ்வநாத சுவாமி திருக்கோயில், மேலநத்தம், மன்னார் குடி வட்டம். | 5.00 |
| 28 | சிலைகள் பாதுகாப்பு அறை கட்டுதல், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவாரூர். | 7.30 |
| 29 | கல்யாணமண்டபம் கட்டுதல், அருள்மிகு கன்னிகா பரமேஸ்வரி திருக்கோயில், பெரிய விளாகம், பொள்ளாச்சி. | 6.00 |
| 30 | மலைப்பாதை அமைத்தல், அருள்மிகு அர்த்த நாரீஸ்வரர் திருக்கோயில், திருச்செங்கோடு. | 68.00 |

### 13. திருக்குள திருப்பணி.

1982-83-ம் ஆண்டிற்கு திருக்கோயில் திருப்பணிகளுக்காக அனுமதி வழங்கப்பட்ட அரசு மான்யத்தொகை ரூ. 20 லட்சத்தில் ரூ. 5 லட்சம் திருக்கோயில்களைச் சார்ந்த திருக்குளங்கள் மராமத்து மற்றும் சீரமைப்புப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ. 5 லட்சம், கீழ் விவரிக்கப் பட்ட 11 திருக்கோயில்களைச் சார்ந்த திருக்குளங்களின் மராமத்து மற்றும் சீரமைப்புப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது.



| வரிசை எண் (1) | திருக்கோயில் பெயர் (2) | அங்கீகரிக்கப் பட்ட அரசு மானியம். (3) |
| --- | --- | --- |
| | | ரூபாய் |
| 1 | அருள்மிகு கங்காதரேஸ்வரர் திருக்கோயில், புரசவாக்கம், சென்னை. | 40,000 |
| 2 | அருள்மிகு பரசுராமலிங்கேஸ்வரர் திருக் கோயில், அயன்புரம், சென்னை-23. | 35,000 |
| 3 | அருள்மிகு விருபாக்கீஸ்வரர் திருக்கோயில், மைலாப்பூர், சென்னை-4. | 45,000 |
| 4 | அருள்மிகு திருமூலநாதசுவாமி திருக்கோயில், புழல், சென்னை-66 | 25,000 |
| 5 | அருள்மிகு மாதவப்பெருமாள் திருக்கோயில், காலடிப்பேட்டை, சென்னை. | 30,000 |
| 6 | அருள்மிகு கல்யாண வரதராசப்பெருமாள் திருக்கோயில், காலடிப்பேட்டை, சென்னை. | 45,000 |
| 7 | அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில், குன்றத்தூர், செங்கற்பட்டு மாவட்டம். | 25,000 |
| 8 | அருள்மிகு ஆதிகேசவப்பெருமாள் மற்றும் பாஷ்ய காரசுவாமி திருக்கோயில், ஸ்ரீபெரும் புத்தூர், செங்கற்பட்டு மாவட்டம். | 50,000 |
| 9 | அருள்மிகு சிவலோகநாதசாமி திருக்கோயில், திருப்புன்கூர், சீர்காழி வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். | 45,000 |
| 10 | அருள்மிகு தியாகராஜஸ்வாமி திருக்கோயில், திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டம், கமலாலயத் திருக்குளம் திருப்பணி. | 1,00,000 |
| 11 | அருள்மிகு ராஜகோபாலசுவாமி திருக்கோயில் ஹரித்திரா நதி திருக்குளம், மன்னார்குடி, தஞ்சை மாவட்டம். | 60,000 |
| | ஆகக் கூடுதல் | 5,00,000 |

[1985 ஜூன் 13

மேற்காணும் திருக்கோயில்களில், வரிசை எண் 8-ல் காணும் ஸ்ரீபெரும்புதூர் ஆதிகேசவப்பெருமாள் மற்றும் பாஷ்யகாரசுவாமி திருக்கோயில் திருக்குளம் திருப்பணிக்கு ரூ. 1,00,000-க்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இப்பணிக்கு பெற்ற மதிப்பீட்டினை பரிசீலனை செய்து ரூ. 95,000-க்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டில் ரூ. 50,000 இத்திருப்பணிக்கு அரசு மான்யமாக வழங்கப்பட்டுள்ளது.

வரிசை எண் 10-ல் காணும் திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலுக்கு உரிமையான கமலாலய திருக்குளம் திருப்பணி செய்தல் குறித்து ரூ. 5,00,000-க்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து முதல் கட்டமாக ரூ. 1,00,000-க்கு மதிப்பீடுகள் பெற்று தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் ரூ. 5,00,000 மதிப்பீட்டில் அரசு மான்யம் ரூ. 2,00,000-க்கு மேற்படி திருப்பணிக்கு ஒதுக்கப் பட்டுள்ள இத்தொகையில் இந்த ஆண்டு ரூ. 1,00,000 அரசு மான்யமாக விடுவிக்கப்பட்டுள்ளது. இது தவிர இத்திருக்குளத்தின் வடிகால் செப்பனிடும் பணிக்கும் ரூ. 2.31 இலட்சம் அரசு மானியம் அளிக்கவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதர திருக்கோயில்களுக்கு உரிமையான திருக்குளம் திருப் பணிகளுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

மேற்காணும் திருக்குள திருப்பணிகள் தவிர, கீழ்க்காணும் திருக்கோயில்களில் திருக்குள திருப்பணிகள் செய்வதற்கு இத் துறையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது:

| வரிசை எண் | திருக்கோயில் பெயர் | அங்கீகரிக்கப் பட்ட அரசு மானியம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூபாய் |
| 1 | அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக் கோயில் திருவல்லிக்கேணி, சென்னை. | 2,40,000 |
| 2 | அருள்மிகு கோனேஸ்வரர்சுவாமி திருக்கோயில் குடவாசல், தஞ்சை மாவட்டம். | 40,000 |



1985 ஜூன் 13]

| வரிசை எண். | திருக்கோயில் பெயர். | அங்கீகரிக்கப் பட்ட அரசு |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூபாய். |
| 3 | அருள்மிகு தில்லைகாளியம்மன் திருக்கோயில் சிதம்பரம், தென்னாற்காடு மாவட்டம். | 1,20,000 |
| 4 | அருள்மிகு அங்காள பரமேஸ்வரி திருக் கோயில், மேல்மலையனூர், செஞ்சி வட்டம், தென்னாற்காடு மாவட்டம். | 32,000 |

## 14. திருமண மண்டபங்கள்.

தற்போது நிலவி வரும் விலைவாசிகளைக் கருத்தில் கொண்டால் பெரும்பாலான மக்களுக்கு திருமணங்களுக்காக சொந்தச் செலவில் பந்தல்கள் மற்றும் இதர செலவுகளை செய்வது இயலாத காரியங்களாகவே உள்ளது. இதைப்போன்ற எளிய மக்களுக்கு உதவுவதற்காக திருமண மண்டபங்கள் கட்டுவது சமுதாயப் பணிகளில் ஒன்றாகும். ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்கள் குறைந்த செலவில் திருமணங்களை முடிப்பதற்கு தேர்ந்தெடுக்கப்படும் இடம் கோயில்களாகவே இருக்கின்றன. அத்தகைய கோயில்கள் பலவும் வருவாய் ஏதுமின்றி உள்ளன. கோயில்களில் திருமண மண்டபங்கள் கட்டுவதால் அவற்றின் வருமானம் பெருக வழி உள்ளது. ஆகவே கோயில்கள் சார்பில் திருமண மண்டபங்கள் கட்டுவதை இந்த அரசு ஆதரிக்கும். நிதி வசதியற்ற திருக்கோயில்களுக்கு வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியைக் கொண்டு கடனாகப் பெற்று திருமண மண்ட பங்கள் கட்ட உதவி செய்யப்படும். இவ்வாறு கட்டப்படும் மண்டபங்கள் கடன் அளிக்கும் திருக்கோயில்களின் பெயரால் வழங்கப்பட்டு, அக்கோயிலின் நிலையான சொத்தாக அதன் பதிவேடுகளில் குறிக்கப்படும். இவற்றிலிருந்து கிடைக்கப் பெறும் வருமானத்தின் ஒரு பகுதி சம்பந்தப்பட்ட திருக் கோயிலின் செலவுகளுக்காக எடுத்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டு, மீதித் தொகை நிதி வசதி அளித்த திருக்கோயில் களுக்குக் கடனை திரும்பச் செலுத்தவும் வழிவகை செய்யப்படும். இக்கொள்கையைச் செயல்படுத்தும் முறையில் முதல் கட்டமாக ஏற்கெனவே தொடங்கப்பட்டு நிதி வசதியின்மையால் பாதியில் நின்றிருக்கும் திருமண மண்டபங்களை இந்த ஆண்டில் கட்டி முடிக்க அவசியமான நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

[1985 ஜூன் 13

தற்பொழுது ரூ. 81.66 இலட்சம் மதிப்பீட்டில் 32 திருமண மண்டபங்கள் கட்டுமான வேலை நடைபெற்று வருகின்றது.

**15. ஆலயங்கள் சார்பில் வழிபடுவோர்களுக்கு செய்து தரப் பட்டுள்ள வசதிகள் :—**

| | | |
|---|---|---|
| ஓய்வு விடுதிகள் | — | 58 |
| குடில்கள் | — | 231 |
| அறைகள் | — | 951 |
| திருமண மண்டபங்கள் | — | 108 |

பல திருக்கோயில்களில் குளிக்கும் வசதி மற்றும் குடிநீர் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. போதிய விளக்கு வசதியும் செய்யப்பட்டுள்ளது. சிறிய பேருந்துகளும் (மினி பஸ்) பல திருக்கோயில்களில் பக்தர்களின் வசதிக்காக விடப்படுகின்றன. இழுவை ரயில் வசதியும் (வின்ச்சு) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலில் உள்ளது. பல திருக்கோயில் களில் மலைப்பாதை வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இவ்விதம் வழிபடுவோர்களுக்குத் தேவையான வசதிகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன. வழிபடுபவர்களுக்கு இத்தகைய வசதிகள் தொடர்ந்து செய்து கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**16. திருக்கோயில்கள் பராமரிப்புக்கு ரூபாய் ஏழு கோடி நிதியமைப்பு :—**

இந்தியத் திருநாட்டிலுள்ள மாநிலங்களில் தமிழகத்தில்தான் மிக அதிக திருக்கோயில்கள் உள்ளன. அவைகளில் ஆழ்வார்கள், நாயன்மார்கள் ஆகியவர்களால் பாடல்பெற்ற புனிதமான திருக் கோயில்கள் பெருமளவில் உள்ளன. இம்மாதிரி பெரிய, இறை உறையும் பதிகளைக் கட்டி முடித்த முந்தைய மாமன்னர்களும், குறுநிலத் தலைவர்களும் மிக அதிக அளவில் சொத்துக்களை, அவைகளின் பராமரிப்புக்காக அளித்துச் சென்றனர். காலப் போக்கில் இந்தச் சொத்துக்களிலிருந்து வரக்கூடிய வருமானம் குறைந்து விட்டது. மேலும் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார மாற்றங்களால் இத்திருக்கோயில்களை சீரிய முறையில் பராமரிக்க இயலாது போயிற்று.



1985 ஜூன் 13]

சில திருக்கோயில்களில் விளக்கேற்றி அன்றாட வழிபாடு செய்தல் மற்றும் அர்ச்சகர், ஓதுவார் மற்றும் முக்கியப் பணி யாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய சொற்ப சம்பளம் கொடுத்தல் போன்றவற்றிற்குக்கூடத் தேவையான நிதிவசதி இல்லாமல் இருக்க, பல திருக்கோயில்கள் மிகவும் பழுதுள்ள நிலையிலும் உள்ளன. இவைகளைப் பராமரித்து பாதுகாக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும்.

இந்தச் சூழ்நிலையில், புனிதமான இந்தத் திருக்கோயில்களில் குறைந்தது தினமும் ஒருநேர வழிபாடாகிலும் நடத்துவதற்கும், அர்ச்சகர்கள், ஓதுவார்கள் போன்ற குறைந்த ஊதியம் பெறும் பணியாளர்கள் நலன் காப்பதற்கும், கிராமப் புறங்களில் போற்றத்தக்கதாகவும், புகழ் வாய்ந்ததாகவும் உள்ள கிராமத் திருக்கோயில்களைக் கட்டவும், புதுப்பிக்கவும், தமிழக சட்டப் பேரவையில், வரவு-செலவுத் திட்ட கூட்டத்தொடரில், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை பற்றிய 1984-85 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை பற்றிய விவாதத்தின்போது மூன்று தனித் தனி நிதி அமைப்பது பற்றி அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஆலயங்களின் உபரி நிதியிலிருந்து பெறப்பட்ட ரூ. 7 கோடி மூலதனத்தில் மூன்று வகையான நிதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த மூன்று வகை நிதிகளுள் முதலாவது தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து மாற்றம் செய்யப் பட்டுள்ள ரூ. 5 கோடியினைக் கொண்டதாகும். மூலதனம் கரையாது கட்டாகப் பேணப்படும். அதன்பேரில் வரப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, தொன்மையான, நலிந்து நிற்கும், திருக்கோயில்களின் சந்நிதிகளில் விளக்கேற்றி ஒரு கால வழிபாடாகிலும் முறைப்படி நடக்க ஏற்பாடுகள் செய்யப்படும். நிகர வைப்புத் தொகை ரூ. 5,06,82,061.63 பெறப் பட்டுள்ளது. பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் நிதியிலிருந்து நிதிமாற்றம் செய்யப்பட்ட ஒரு கோடி ரூபாயினைக் கொண்டு இரண்டாவது நிதி அமைக்கப்பட்டுள்ளது. மாதம் ரூ. 100-ம் அதற்குக் குறைவாகவும் ஊதியம் பெறும் அர்ச்சகர்கள், ஓதுவார்கள் மற்றும் நாதஸ்வர வித்வான்கள் போன்ற திருக்கோயில் பணியாளர்களுக்கு உதவி புரிய இந்த நிதியிலிருந்து கிடைக்கப் பெறும் வட்டித் தொகை அடியிற்கண்டவாறு பயன்படுத்தப்படும் :—

[1985 ஜூன் 13

(1) இன்றியமையாத செலவினங்களுக்கு அதிகபட்சம் ரூ. 500 வரை கடனாக வழங்கி, சுலப தவணைகளில் திரும்பப் பெறப்படும்.

(2) பணியாளர்கள் இறந்தால் ஈமச்சடங்குகளுக்காக ரூ. 200 மானியமாக வழங்கப்படும்.

(3) மருத்துவ மற்றும் கல்வி செலவிற்காக ரூ. 100 மானியமாக வழங்கப்படும்.

மூன்றாவது நிதிக்கு பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் உபரி நிதியிலிருந்து ரூ. 1. கோடி ஒதுக்கப்பட்டு உள்ளது. அதன்மூலம் கிடைக்கும் வட்டி வருமானம் கிராமப்புறங்களில் உள்ள திருக்கோயில்களைப் புதுப்பித்தல் மற்றும் பழுதுபார்த்தலுக்காகப் பயன்படுத்தப்படும்.

1984-ம் ஆண்டில் திருக்குட நன்னீராட்டு விழா 86 திருக்கோயில்களில் நடைபெற்றுள்ளது.

## 17. சமுதாய நலப் பணிகள்.

நமது ஆலயங்கள் வெறும் வழிப்பாட்டு கூடங்களாக மட்டுமல்லாமல் மக்களின் சமூகப் பொருளாதார கலை, கல்வி கலாச்சார தேவைகளை பூர்த்தி செய்யும் மையங்களாக மாமன்னன் ராஜராஜன் காலந்தொட்டு செயல்பட்டதை வரலாறு நமக்குத் தெரிவிக்கிறது. அந்த வகையில் சத்துணவுக் கூடங்களை அமைப்பதற்காக திருக்கோயில்கள் உபரி நிதியிலிருந்து ரூ. 59,20,000 1982-ம் ஆண்டில் வழங்கப்பட்டது. இத்தகைய சத்துணவுக் கூடங்கள் நிர்மாணிக்க ஆலய உபரி நிதியிலிருந்து நிதி மாற்றம் செய்ய இந்து சமய அறநிலையச் சட்டம் இடமளித்தாலும், இதனை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளதால் மேற்படி தொகை நாட்டுடமையாக்கப்பட்ட வங்கியில் வைப்பு நிதியாக வைக்கப்பட்டுள்ளது.



1985 ஜூன் 13]

## 18. இந்து ஆதிதிராவிடர், பிற்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த இந்துக்கள் ஆகியோர் திருமணங்கள்.

இந்து ஆதிதிராவிடர், பிற்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த ஏழை இந்துக்கள் ஆகியோரின் திருமணம் ஒவ்வொன்றிற்கும், அரசின் கொள்கைக்கிணங்க, நிதி வசதி படைத்த கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ. 750-லிருந்து ரூ. 1,000 வரை செலவிடப்படுகிறது. 15—8—1981-லிருந்து சுமார் ரூ. 8,40,899.70 செலவில் இதுவரை 1,092 திருமணங்கள் நடத்தப்பட்டன. இதில் 754 திருமணங்கள் ஆதிதிராவிட மக்களுக்கு நடத்தி வைக்கப்பட்ட திருமணங்களாகும். இத்தகைய திருமணங்கள் திருக்கோயில்களின் நிதியைக் கொண்டு தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

## 19. 1984 ஆம் ஆண்டு, ஆகஸ்டு 15, சுதந்திரநாள் அன்று நடந்த சிறப்பு வழிபாடும், பொது விருந்தும்.

தமிழகத்தில் இந்துக்கள் அனைவரும் சாதி வேறுபாடின்றி திருக்கோயிலில் வழிபாடு செய்வதற்கு எந்த இடையூறும் இல்லை இந்த நிலைமையை எடுத்துக்காட்டும் வகையிலும், ஆதிதிராவிட மக்கள் இந்து சமய நிகழ்ச்சியில் அதிக அளவில் பங்கு கொள்வதற்கான வழிவகைகளை உயர்த்தும் பொருட்டும், சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்தும் தமிழகம் முழுவதும், 2,700-க்கும் அதிகமான திருக்கோயில்களில் ரூ. 13 இலட்சம் செலவில் 15—8—1984 சுதந்திர நாளன்று நடத்தப்பட்டன. இத்தகைய சிறப்பு வழிபாடுகளையும், பொது விருந்துகளையும் ஆண்டுதோறும் சுதந்திரத் தினத்தன்று நடத்துவதற்கு உரிய நெறிமுறைகள் வகுக்கப்பட்டு திருக்கோயில்களில் தொடர்ந்து நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## 20. பொருட்காட்சி.

மாவட்டத் தலைமையிடங்களில் ஏற்பாடு செய்யப்படும் பொருட்காட்சிகளிலும், சென்னையில் நடைபெற்ற சுற்றுலா தொழில் பொருட்காட்சிகளிலும் சிறந்த துறையில் அரங்குகளை

அமைத்து இந்து சமய அறநிலைய நிருவாகத்துறை முதற் பரிசினையும் பெற்றுள்ளது. இதன் விவரம் வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| 1 | அரசு பொருட்காட்சி, வேலூர்- | 18-12-83 முதல் 5-2-84 | முதற் பரிசு |
| 2 | அகில இந்திய சுற்றுலா மற்றும் வாத்தகப் பொருட்காட்சி சென்னை. | 30-12-83 முதல் 12-3-84 | முதற் பரிசு |
| 3 | அரசு பொருட்காட்சி, கோயம்புத்தூர். | 11-3-84 முதல் 29-4-84 | முதற் பரிசு |
| 4 | அரசு பொருட்காட்சி, மதுரை. | 7-4-84 முதல் 20-5-84 | முதற் பரிசு |
| 5 | அரசு பொருட்காட்சி, திருச்சிராப்பள்ளி. | 30-5-84 முதல் 15-7-84 | முதற் பரிசு |
| 6 | அரசு பொருட்காட்சி, திருநெல்வேலி. | 17-6-84 முதல் 29-7-84 | முதற் பரிசு |

சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற 12-வது சுற்றுலா மற்றும் வர்த்தக கண்காட்சியில் உள்ள இந்து சமய அறநிலையத் துறையின் அரங்கிற்கு 28—3—1985 அன்று மேதகு தமிழக ஆளுநர் Out standing என்ற மிக உயர்ந்த விருதை வழங்கி னார்கள்.

## 21. "திருக்கோயில்".

இந்து சமய அறநிலையத் துறை அரிய சமயக் கட்டுரையைக் கொண்ட 'திருக்கோயில்' என்ற மாத இதழை 1958 ஆம் ஆண்டு முதல் நடத்தி வருகிறது.

"திருக்கோயில்" என்ற மாத இதழின் ஆசிரியராக சைவ, சித்தாந்த வித்தகர் திரு. நா. ரா. முருகவேள் 1962 முதல் திறம்பட பணியாற்றி 8—4—1985 அன்று எதிர்பாராதவகையில் இயற்கை எய்தினார். 4,500 பிரதிகள் உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் விற்பனையாகும் இந்த மாத ஏட்டில் திரு. முருகவேளின் சீரிய முயற்சியால் பல அரிய சமயக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. திரு. முருகவேள், தமிழ் சமய இலக்கியத்துக்கு ஆற்றியுள்ள ஈடிணையில்லா பணியைக் கருத்தில் கொண்டு 30—11—1984-ல் 60 வயதை அடைந்த இவருக்கு ஒரு சிறப்பு நேர்வாக 30—11—1984



முதல் இரண்டாண்டு பணி நீட்டிப்பை அரசு வழங்கியிருந்தது. இவர் நினைவைப் போற்றும் வகையில் அவரது திருவுருவப் படத்தை இந்துசமய அறநிலையத் துறை சார்பில் முதன் முறையாக மே 85-ல் நடத்தப்பட்ட சேக்கிழார் விழாவில் திறந்து வைக்கப்பட்டு புகழாரம் சூட்டப்பட்டது. சீருடனும் சிறப்புடனும் திரு. முருகவேள் நடத்திவந்த திருக்கோயில் பத்திரிகை, அந்த சிறப்பை வருங்காலத்திலும் தன்னகத்தே கொண்டு தொடர்ந்து வெளிவர உரிய எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த இதழுக்காக தகுதி வாய்ந்த ஒரு ஆசிரியரை நியமிப்பதுடன், உரிய அனுபவமும் தமிழ்ச் சமய அறிவும் பெற்ற தமிழ்ச் சான்றோர்கள் கொண்ட ஆசிரியர் குழுவொன்றும் அமைக்கப்படவுள்ளது.

## 22. கடந்த ஐந்து ஆண்டுகளில் பழநி ஆண்டவர் கோயில் ஆற்றிய பணிகள்.

கல்வி, மருத்துவம், கலாச்சாரம், சமூக நலம் ஆகியவைபற்றிய கல்வி நிலையங்கள் பல சமய நிறுவனங்களால் நிர்வகிக்கப் படுகின்றன. தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களில் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அதிக வருமானம் பெறும் திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிதியிலிருந்து 1979-ம் ஆண்டு முதல் கீழ்க்காணும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன :—

(1) திருக்கோயில் மருத்துவமனை, 7—7—1979 முதல் திருக் கோயிலுக்குச் சொந்தமான காரமடைத் தோட்டத்தில் 7 இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது.

(2) பழனி அடிவாரத்திலிருந்து மலைக்கோயிலுக்கு பக்தர்கள் எளிதாகச் செல்வதற்காக 14—3—1981 முதல் இரண்டாவது மின்னிழுவை ரயில் பாதை ரூ. 18.15 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

(3) பழனி ஆண்டவர் மகளிர் கலைக் கல்லூரிக்கு ரூ. 27 இலட்சம் செலவில் புதிய வசதிகளுடன் கூடிய கட்டிடம் கட்டப் பட்டு அதில் 1981 மே முதல் அது இயங்கி வருகிறது.

(4) மகளிர்களுக்கென அருள்மிகு பழனி ஆண்டவர் பாலி டெக்னிக் (மகளிர்) 1—10—1981 முதல் ஆரம்பிக்கப்பட்டு, மூன்று பொறியியல் பிரிவுகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

(5) ஆண்களுக்கென, பழனி ஆண்டவர் பாலிடெக்னிக் 10—10—1982 முதல் மூன்று பொறியியல் பிரிவுகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. 1982-83 கல்வி ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகளாக திருக்கோயில் நிதியில் இயங்கி வந்த பாலிடெக்னிக் 1985-86 நிதி ஆண்டிலிருந்து அரசு மானியத்தில் இயங்கவுள்ளது.

(6) மலைக் கோயிலின் தெற்கு வெளிப் பிரகாரம் ரூ. 7.5 இலட்சம் செலவில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

பழனி ஆண்டவர் திருக்கோயில் தற்பொழுது அதன் உப கோயில்களில் மேற்கொண்டுள்ள திருப்பணிகள் வருமாறு :—

| | மதிப்பீடு ரூபாய். |
|---|---|
| 1. அருள்மிகு குறிஞ்சியாண்டவர் திருக்கோயில் கொடைக்கானல் — | |
| (1) திருமண மண்டபம் கட்டுதல் | 90,000 |
| (2) அம்மனடி பங்களா சீர்திருத்தப் பணி | 70,000 |
| 2. அருள்மிகு குழந்தை வேலப்பர் திருக்கோயில் பூம்பாறை, கொடைக்கானல்— | |
| (1) திருமதில் கட்டும் பணி | 3,50,000 |
| (2) தரைமட்ட நீர்த்தொட்டி கட்டுதல் | 30,000 |
| (3) படிகள் கட்டும் பணி | 60,000 |
| 3. அருள்மிகு குழந்தை வேலப்பர் திருக்கோயில், ஒட்டன்சத்திரம்— | |
| (1) ஓய்வு இல்லம் கட்டுதல் | 2,50,000 |
| (2) திருமண மண்டபம் கட்டுதல் | 2,00,000 |
| 4. பழனி அருள்மிகு மலைக்கோயில் தியான மண்டபம் கட்டும் பணி | 2,25,000 |
| 5. மேற்குறித்த திருக்கோயிலின் நிதியிலிருந்து நடைபெறவிருக்கும் வேலைகள்.— | |
| (1) அருள்மிகு மாரியம்மன் கோயில் ராஜ கோபுரம் கட்டும் வேலை | 8,40,000 |



| | மதிப்பீடு ரூபாய். |
|---|---|
| (2) கோசாலா காலியிடத்தில் 80 அறைகள் கொண்ட தங்கும் விடுதி கட்டும் வேலை | 20,00,000 |
| (3) தண்டபாணி நிலையத்தில் திருகுடில் கட்டும் வேலை | 1,60,000 |
| (4) மலைக்கோயில் சின்னகுமாரர் மண்டபத்தில் வெதரிங் காங்கிரிட் போடும் வேலை | 42,000 |
| (5) மலைக்கோயில் தங்க விமானம் பாது காப்பிற்கு இரும்புக் கம்பிகளால் ஆன வேலி அமைக்கும் வேலை | 26,000 |
| (6) கிரிவீதி வடக்குப் பகுதியில் சுற்றுச் சுவர் கட்டும் வேலை | 60,000 |
| (7) அருள்மிகு பழனியாண்டவர் ஆண்கள் கலைக் கல்லூரி மேல்மாடி பாட்டனி பிளாக் அமைக்கும் வேலை | 4,25,000 |
| (8) அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி, சின்னகலையம்புத்தூர் மேல் மாடி கட்டும் வேலை | 10,00,000 |
| (9) ஒட்டன்சத்திரம் அருள்மிகு குழந்தை வேலப்பர் கோயிலில் காவடி மண்டபம் கட்டும் வேலை | 1,50,000 |

மேற்படி திருக்கோயிலின் திட்டங்களை அமுல்படுத்துவதில் கால தாமதத்தைத் தவிர்த்து உடனுக்குடன் செயலாக்க அற நிலையத் துறை ஆணையரைத் தலைவராகக் கொண்ட ஒரு நிர்வாகக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் பழனி திருக்கோயில் சார்பில் கீழ்க்காணும் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன :—

1. தேவஸ்தான சத்திரம்.
2. தண்டபாணி நிலையம்.
3. கார்த்திகேயன் விடுதி.
4. சிறு குடில்கள்.
5. அன்பு இல்லம்.

6. குழந்தைகள் காப்பகம்.
7. நாதஸ்வரம் மற்றும் தவுல் பள்ளி.
8. பழனியாண்டவர் ஆங்கில மீடியம் பள்ளி.
9. காது கேளாதோர், ஊமையர் பள்ளி.
10. வேத ஆகமப் பாடசாலை.
11. சித்த மருத்துவமனை.
12. ஆண்டவர் நூலகம்.

இதர கோயில்களால் நடத்தப்படும் பள்ளிகளும், கல்லூரிகளும்.

| | | |
|---|---|---|
| 1. கலைக் கல்லூரி (ஆண்கள்) | — | 1 |
| 2. கலைக் கல்லூரிகள் (மகளிர்) | — | 2 |
| 3. மேல்நிலைப் பள்ளிகள் | — | 5 |
| 4. உயர்நிலைப் பள்ளிகள் | — | 15 |
| 5. நடுநிலைப் பள்ளிகள் | — | 5 |
| 6. தொடக்கப் பள்ளிகள் | — | 3 |
| 7. வேத ஆகமப் பாடசாலைகள் | — | 5 |
| 8. தேவாரப் பாடசாலைகள் | — | 7 |
| 9. தவில் நாதஸ்வரப் பள்ளிகள் | — | 2 |
| 10. காது கேளாதோர் ஊமையர் பள்ளி | — | 1 |
| 11. முதியோர் இல்லம் | — | 3 |
| 12. நூலகங்கள் | — | 201 |
| 13. சித்த மருத்துவமனை | — | 19 |
| 14. ஆங்கில மருத்துவமனை | — | 1 |
| 15. முற்றிலும் திருக்கோயில் நிதியிலிருந்து நடத்தப்படும் அன்பு இல்லங்கள் | — | 6 |
| 16. இருபத்தைந்து சதவீதம் அரசு மானியத்துடன் நடத்தப்படும் அன்பு இல்லங்கள் | — | 29 |

### 23. 25 சதவீத அரசு மானியத்தைக் கொண்டு அன்பு இல்லங்களைப் பராமரித்தல்.

கோயில்களின் ஆதரவில் 1,292 சிறார்களைக் கொண்ட (1,129 சிறுவர்கள், 163 சிறுமிகள்) 29 அன்பு இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த இல்லங்களை நடத்துவதற்காகும் தொடர் இனச் செலவில் 75 சதவீதத்தைக் கோயில்கள் ஏற்றுக் கொள்கின்றன. எஞ்சிய 25 சதவீதத்தை அரசு ஏற்கிறது. இப்பணிக்காக 1983-84 ஆம் ஆண்டில் 10.85 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. இந்த இல்லங்கள் தொடர்ந்து சீரிய முறையில் நடைபெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.





### 24. சாதி பாகுபாடற்ற ஆகம பயிற்சிப் பள்ளி ஆரம்பித்தல்.

திருக்கோயில் அர்ச்சகராக பயிற்சி பெற விரும்புகிறவர்கட்கு சாதி பாகுபாடின்றி பயிற்சி அளிக்க 1983-ல் கொள்கை அளவில் அரசு முடிவு எடுத்துள்ளது.

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில பூஜை செய்யும் பூசகர்கள் பரம்பரை உரிமையை நீக்கும் பொருட்டு 1959 ஆம் ஆண்டு 32 ஆவது சட்டமாகிய இந்து சமய அறநிலையச் சட்டத்தின் 55 ஆவது பிரிவு, தமிழ்நாடு அரசின் 1971 ஆம் ஆண்டு 2 ஆவது சட்டமாகிய இந்து சமய அறநிலையச் சட்டத்தின் திருத்தச் சட்டம் மூலம் திருத்தப்பட்டது. எல்லோருக்கும் வேலைவாய்ப்பு சமமாக இருக்க வேண்டுமென்று இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டிருப்பதையும், உச்ச நீதிமன்றத் தீர்ப்பினையும் கருத்தில் கொண்டு சாதி, இன வேறுபாடின்றி பூசகரையும் இதர உள்துறை பணியாளர்களையும் நியமனம் செய்வது குறித்து அரசுக்குத் தக்க ஆலோசனை கூறுமாறு நீதிபதி மகராஜன் தலைமையில் ஒரு வல்லுநர் குழு அமைக்கப் பட்டது. இந்த வல்லுநர் குழு சனவரி 1982-ல் தனது பரிந்துரைகளை அரசுக்குச் சமர்ப்பித்தது.

மேற்படி நீதிபதி மகராஜன் வல்லுநர் குழு பரிந்துரைகளைச் செயல்படுத்த உரிய வழிமுறைகளை வகுத்து அரசுக்கு ஆலோசனைகள் வழங்க 14 நபர்கள் கொண்ட குழுவை ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் அரசு நியமித்தது, இக்குழுவின் பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை சார்பில் அர்ச்சகர்கள் பயிற்சி நிறுவனம் ஒன்றை பழனியில் துவக்க உரிய கருத்துருக்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

### 25. பழனி ஆண்டவர் மூலவர் திருமேனி பாதுகாப்புக் குழு தொடர்பான விவரம்.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலின் மலைக் கோயிலில் உள்ள மூலவர் விக்கிரகத்திற்கு பல நூற்றாண்டுகளாக செய்யப்பட்டு வரும் அபிஷேகங்கள், தங்க கவசம் சாத்தல், சந்தனக்காப்பு இடுதல் போன்றவைகளால், மூலவரின் திரு

மேனியின் முகத்தைத் தவிர இதர பகுதிகள் தேய்மானத்திற்கு ஆளாகியுள்ளன. மேலும், தேய்மானம் ஏற்படாமல் இருக்க 13—1—1984 முதல் திருக்கோயில் மூலவர் விக்கிரகத்திற்குத் திருக்கோயிலின் சார்பில் மட்டும், தினமும் 6 காலங்களில் பூசை மற்றும் அபிஷேகங்கள் செய்ய வேண்டும் என்றும், உபயதாரர்களால் செய்யப்படும் இதர அபிஷேகங்கள் மூலவருக்கு முன்னால் வைக்கப்படும் உற்சவ விக்கிரகத்துக்குத் தான் செய்யப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டு, அவ்வாறு செய்யப்பட்டு வருகிறது.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் மூலவர் திருமேனியை தேய்மானத்திலிருந்து நிரந்தரமாகப் பாதுகாக்கும் பொருட்டு, பரிசீலித்து பரிந்துரை செய்ய "வல்லுநர் குழு" ஒன்றினை அரசு நியமித்துள்ளது. அக்குழுவில் 41 உறுப்பினர்களும் 5 மடாதிபதிகளும் இடம் பெற்றுள்ளனர். இக்குழு மூன்று முறை கூடி பல்வேறு கருத்துக்களை ஆராய்ந்தது. ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி திரு. ஆர். சதாசிவம் அவர்களை தலைவராகக் கொண்ட இக்குழு அதன் பணிகளை முடித்து விரைவில் அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பிக்கும்.

### 26. ஆலய வழிபாட்டில் விஞ்ஞான அடிப்படை.

தமிழ்நாட்டிலுள்ள ஆலயங்களில் சொல்லப்படும் பாக்கள், மந்திரங்கள், மற்றும் வழிபாட்டு விக்கிரகங்களுக்குத் தண்ணீர், எண்ணெய் முதலியவற்றால் செய்யப்படும் அபிஷேகங்கள். அவைகளுக்கு பழங்கள், இலைகள் இவைகளை உபயோகித்தல் ஆகியன அறிவியல் அடிப்படையிலானது என்பது பற்றியும், வழிபாட்டின்போது ஒலிக்கப்படும் ஓம் என்ற மந்திரமும், அபிஷேகத்தின்போது விக்கிரகங்களில் இருந்து அபிஷேகப் பொருளுக்கு ஏற்ப மாறுபடும் மின் அதிர்வுகளும் வழிபடும் பக்தர்கள் உடல் ஆரோக்கியம் பெற உதவுகிறது என்பது பற்றிக் கூறப்படும் கூற்றுகளுக்கு விஞ்ஞான பூர்வமாக ஏதாவது அடிப்படை உள்ளதா என கண்டறிய இயற்பியலிலும், மின் கருவி இயக்கங்கள் மற்றும் மின் சுற்றுகளிலும் வல்லுநர்களைக் கொண்ட சென்னைக் கிண்டி பொறியியல் கல்லூரி பவர் சிஸ்டம்ஸ் பேராசிரியர் டாக்டர் ப. இளங்கோ அவர்களைத் தலைவராகக் கொண்ட ஏழு பேர்கள் அடங்கிய வல்லுநர்குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது.



இந்தக் குழு 25—4—1985 தேதியில் கூடி வழிபாட்டு முறைகளை சோதனைகள் மூலம் பரிசீலிக்க மனோதத்துவ மருத்துவர் மற்றும் ஆகம விதிகளில் தேர்ச்சிபெற்ற வல்லுநர் ஒருவரையும் குழுவில் சேர்த்து பின் ஆய்வுகளை நடத்தி கருத்துக்களைத் திரட்டி அறிக்கை அனுப்ப நடவடிக்கை எடுத்து வருகிறது.

### 27. கவிச்சக்கரவர்த்தி கம்பருக்கு நினைவாலயம் அமைக்கும் பணி.

தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், தேரழுந்தூர் கிராமத்தில் கவிச் சக்கரவர்த்தி கம்பருக்கு ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டில் நினைவாலயம் அமைக்க 17—3—1984 அன்று கால்கோள் விழா செய்யப்பட்டது, இக்கட்டுமானப் பணிக்காக இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆளுகையின்கீழ் உள்ள 10 திருக்கோயில்களிலிருந்து ரூ. 12 இலட்சம் திரட்டப்பட்டும், தமிழக அரசு சுற்றுலாத்துறையிலிருந்து ரூ. 8 இலட்சம் மானியமாகப் பெறப்பட்டும், இப்பணி தமிழ்நாடு கட்டுமானப் பணிக் கழகத்தாரால் செய்து முடிக்கப்பட்டு 10—12—1984 அன்று கம்பர் கோட்டம் திறப்பு விழா செய்யப்பட்டது.

### சேக்கிழார் விழா :

சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்பு (கி.பி. 1133 முதல் 1150 வரை) தொண்டை மண்டலத்தில் குன்றத்தூரில் சேக்கிழார் மரபில் தோன்றிய இராமதேவர் மற்றும் அருண்மொழித்தேவர் என்று வழங்கப்பட்ட தமிழ்ச் சமயச் சான்றோர் அநபாயச் சோழன் என்கிற இரண்டாம் குலோத்துங்க சோழனால், அவரது புலமை மற்றும் தகுதி காரணமாக தமது முதலமைச்சராக நியமிக்கப்பட்டார். இவர் ஆன்மிக நாட்டம் கொண்டு 500 ஆண்டு காலத்தில் வாழ்ந்த பலதரப்பட்ட சாதி மற்றும் இனங்களைச் சார்ந்த பாமரத் தொண்டர்களை மையமாக வைத்து சாதி பாகுபாடற்ற வகையில் திருத்தொண்டத்தொகை என்ற தமிழர் வரலாற்றுக் காப்பியத்தை இயற்றியுள்ளார், தெய்வப் புலவர் என்ற அடைமொழி தமிழில் திருக்குறளை ஈன்ற திருவள்ளுவருக்கும் திருத்தொண்டத் தொகை இயற்றிய சேக்கிழாருக்கும் மட்டுமே உரித்தாக்கப்பட்டுள்ளது. தமிழ், தமிழ்நாடு மற்றும் தமிழ்ச் சமயத்திற்காக தனது வாழ்நாளையே அர்ப்பணித்த

சேக்கிழார் பெருமானுக்கு இந்து சமய அறநிலையத்துறை 1985 ஆம் ஆண்டு மே திங்களில் அவரது பெருமைக்கேற்ற வகையில் ஒரு விழா மிகச் சிறப்பாக நடத்தியதுடன் சென்ற 62 ஆண்டுகளாக குடந்தை திருநாகேஸ்வரர் திருக்கோவில் அமைப்பை ஒட்டி அவரது பிறந்த மண்ணில் அவரால் நிருமாணிக்கப்பட்ட திருநாகேஸ்வரர் திருக்கோவிலுக்குள், அவரது உலோகத் திருமேனி போக முடியாது தடுக்கப்பட்டு, திருநாகேஸ்வரம் தேர்நிலை வரை மட்டுமே கொண்டு செல்லப் பட்டு திரும்ப எடுத்துவரும் அவல நிலை இருந்ததை மாற்றி குன்றத்தூர் பகுதி மக்களுக்கு மட்டுமல்லாமல் தமிழ்ச் சான்றோர்கள் எல்லோருக்குமே மகிழ்வளிக்கும் வகையில், 18—5—1985-ல் சேக்கிழாரின் உலோகத்திருமேனி திருநாகேஸ்வரர் திருக்கோவிலுக்குள் சென்று இறைவனை வழிபட அறநிலையைத் துறை அமைச்சர் அவர்களால் வகை செய்யப்பட்டது. வருங்காலத்திலும் இந்த நிகழ்ச்சி உரிய சிறப்புகளுடன் நடைபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுதவிரவும் சேக்கிழார் போன்ற தமிழ்சான்றோர்களின் நினைவைப் போற்றும் வகையில் உரிய இடங்களில் நினைவுக் கோட்டங்கள் தமிழ் அறிஞர்களின் பரிந்துரைக்கேற்ப, நிதிநிலைக்கேற்ப இந்து சமய அறநிலையத்துறையால் அமைக்கப்படவுள்ளன.

## 28. ஆணையாளரின் பொது நலநிதி.

1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தில் 97 ஆம் பிரிவின்படி இந்து சமய அறக்கட்டளைகள் பொது நலநிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. சமய நிறுவனங்கள் தங்கள் உபரி நிதியிலிருந்தும் அல்லது வேறு எவரேனும் மனமுவந்து கொடுக்கும் தொகையைக் கொண்டும் இந்நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து இந்து சமய அறநிலையங்களுக்கும் அல்லது யாதொரு வகை சமய நிறுவனங்களுக்கும் பொதுவாக உள்ள சமய நெறிகளை பரப்பவும், சட்டப்பிரிவு 66(1)-ல் குறிப்பிட்டுள்ள செயல் நோக்கங்கள் வெற்றிக்காகவும் திருக்கோயிலையும் அதில் உள்ள சிற்பங்கள் மற்றும் ஓவியங்கள் ஆகியவற்றை புதுப்பிக்கவும் அவற்றைப் பாதுகாக்கவும் இந்நிதியிலிருந்து தொகை வழங்கப்படுகிறது. இந்நிதி ஆணையாளரின் பொறுப்பிலுள்ளது.



1984-85 ஆம் நிதியாண்டில் ரு. 3,40,262.45 தொகை கீழ்க்கண்ட விவரப்படி மேற்படி நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது :—

| | ரூபாய். |
|---|---|
| 1. திருப்பணி வேலைகள் | 2,54,000.00 |
| 2. திருமணமண்டபம் கட்டுமான வேலைகள் | 42,000.00 |
| 3. தேவாரப் பாடசாலை | 10,000.00 |
| 4. அமெரிக்காவில் உள்ள ஹூஸ்டன் அருள்மிகு மீனாட்சி டெம்பில் சொசைட்டிக்கு பக்தி நூல்கள் வாங்கி அனுப்பிய வகையில் செலவு. | 4,934.45 |
| 5. பிஜித்தீவு நாடிநகர், அருள்மிகு சிவசுப்ரமணிய சுவாமி திருக்கோயிலில் பணியாற்ற சிவாச்சாரியரை அனுப்பி வைத்த வகையில். | 29,328.00 |
| மொத்தம் | 3,40,262.45 |

## 29. சென்னை, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் அலுவலகத்துடன் இணைந்த ஆய்வுப்பிரிவு.

தமிழ்நாட்டில் உள்ள பெரிய மடங்களின் ஆய்வினை ஆணையர் மேற்கொள்ளும் பொருட்டு அவருக்கு உதவி செய்வதற்காக துணை ஆணையர் மற்றும் மண்டலத் தணிக்கை அலுவலர் மற்றும் கூடுதல் பணியாளர்களுடன் கூடிய ஆய்வுப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டு, 16—10—1980 முதல் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள பெரிய மடங்களின் ஆய்வினை பசலி 1371 முதல் 1390 முடிய உள்ள 20 பசலிக்கு எடுத்துக்கொள்வது என்று தீர்மானித்து இந்த மடங்களுக்கு வினாப்படிவம் பூர்த்தி செய்து அனுப்ப அந்தந்த மடாதிபதிகளுக்கு அனுப்பப்பட்டது, 1984 சனவரி முதல் டிசம்பர் முடிய உள்ள காலத்தில் 13 மடங்களுக்கும் திருக்கோயில்களுக்கும் ஆய்வுக் குறிப்புகள் தயாரிக்கப் பட்டுள்ளன.

[1985 ஜூன் 13

### 30. திருமடங்கள் நிர்வாகத்தை சீரமைக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.

தமிழ்நாட்டிலுள்ள திருமடங்களின் நிர்வாகத்தில் உள்ள முறைகேடுகளை களைந்து நிர்வாகத்தினை சீராக்கும் பொருட்டு 1959-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டம் 22-ல் தேவையான சில மாற்றங்கள் செய்வது குறித்து சட்ட மன்றத்திலே 1981-ம் ஆண்டு சட்ட முன்வடிவு கொண்டு வந்து (சட்ட முன்வடிவு எண். 64/81) அது மத்திய அரசிற்கு அனுப்பப் பட்டு அதன் இசைவினை எதிர் நோக்கப்படுகிறது.

தமிழகத்து திருக்கோயில்களின் பெருமையும் மிடுமிக்க சிற்பங் களும் உலோகத் திருமேனிகளும் உலகின் கலை மற்றும் பண் பாட்டு அறிஞர்களால் போற்றிப் புகழப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டின் விஞ்ஞானக் கருவிகளின் துணையைக் கொண்டு கூட 9-ம் நூற்றாண்டில் ராஜராஜசோழன் போன்ற தமிழ் அரசர் களின் காலத்தில் வார்க்கப்பட்டுள்ள உலோகத் திருமேனிகளைப் போல அப்பழுக்கற்று உருவாக்க முடியுமா என்பது ஐயப்பாடே. இத்திருக்கோயில்கள் நம் தமிழர்களின் கலை உணர்வின் முதிர்ச் சியையும் கட்டிடக்கலை மற்றும் உலோக வார்ப்பு போன்ற துறை களில் அடைந்திருந்த போற்றத்தக்க முன்னேற்றத்தையும் உலகுக்கு பறை சாற்றுகிறது. இவ்வகையான கலைக்களஞ்சியங் களை பேணி பாதுகாக்க தேவையான எல்லா நடவடிக்கைகளை யும் அரசு அவ்வப்போது எடுத்து வருகிறது.

### 31. சுருங்கக் கூறின், கீழ்க்கண்டவை இக்கொள்கை விளக்கத்தின் சிறப்பு அம்சங்களாகும்.

#### ஆலய நலன் காக்கும் வைப்பு நிதி.

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களில் வருவாய், வறட்சி மற்றும் வெள்ளங்களினாலும், குத்தகைதாரர்கள் பாதுகாப்பு சட்டங்களாலும், நிலச்சீர்திருத்த சட்டங்களாலும் குறைந்து விட்டது. இதனால் கடுமையான நிதிப் பற்றாக்குறையினால் சிரமப்படும் திருக்கோயில்களில் ஒருகால பூஜை கூட நடைபெற முடியாமல் உள்ள திருக்கோயில்களில் ஒருகால பூஜைக்காக வழிவகை செய்யும் நோக்கத்துடன் முதல் கட்டமாக உபரிநிதி உள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ. 5 கோடி வைப்பு நிதியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.



1985 ஜூன் 13]

அந்த வைப்பு நிதியின் வட்டி வருவாயிலிருந்து அந்தந்த திருக்கோயிலின் தன்மைக்கு ஏற்ப ஒருகால பூஜை நடைபெறு வதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டு முதல்கட்டமாக 29 திருக் கோயில்களுக்கு நிதி உதவி வழங்கப்பட இருக்கிறது. அந்த திருக்கோயில்கள் விபரம் :

| வரிசை | திருக்கோயில் பெயர், இருப்பிடம். |
|---|---|
| 1 | அருள்மிகு வரதராஜப்பெருமாள் கோயில், நரவலூர் அக்ர ஹாரம், நாமக்கல் வட்டம், சேலம் மாவட்டம். |
| 2 | அருள்மிகு பிரசன்ன வெங்கட்ராமப்பெருமாள் கோயில், திப்ரமாதேவி, நாமக்கல் வட்டம், சேலம் மாவட்டம். |
| 3 | அருள்மிகு சொக்கநாதசாமி கோயில், அமாகுந்தி, ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம். |
| 4 | அருள்மிகு முட்டத்துநாகேஸ்வரர் கோயில், இக்கரை போனாலம்பட்டி, கோவை மாவட்டம். |
| 5 | அருள்மிகு காலகாலேஸ்வரர் திருக்கோயில், அக்ரஹார சாமக்குளம், கோவை மாவட்டம். |
| 6 | அருள்மிகு பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில், திருமாகாளம், தஞ்சாவூர் மாவட்டம். |
| 7 | அருள்மிகு நந்தனார் திருக்கோயில், செங்கட்டான்தெரு, சிதம்பரம் நகர், தென்னாற்காடு மாவட்டம். |
| 8 | அருள்மிகு கமலவிநாயகர் கோயில், வில்வநகர், மஞ்ச குப்பம், கடலூர் நகரம், தென்னாற்காடு மாவட்டம். |
| 9 | அருள்மிகு சரவணப்பிள்ளையார் கோயில், திண்டிவனம், தென்னாற்காடு மாவட்டம். |
| 10 | அருள்மிகு விநாயகர் கோயில், அகரம், உடையார்பாளையம் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| 11 | அருள்மிகு செண்பகவல்லியம்மன் கோயில், தெற்கு அரிய நாயகிபுரம், அம்பாசமுத்திரம் வட்டம், திருநெல்வேலி மாவட்டம். |

12 அருள்மிகு வேணுகோபாலசுவாமி, இராஜகோபாலசுவாமி திருக்கோயில், மேலப்பாவூர், தென்காசி வட்டம், திருநெல்வேலி மாவட்டம்.

13 அருள்மிகு கடும்பாடியம்மன் கோயில், அரிமுத்து ஆச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

14 அருள்மிகு கல்யாணசுந்தரராஜப்பெருமாள் கோயில், அருங்குளம், திருத்தணி வட்டம், செங்கற்பட்டு மாவட்டம்.

15 அருள்மிகு நிரஞ்சீஸ்வரர் திருக்கோயில், சின்னமண்டலி, திருத்தணி வட்டம், செங்கற்பட்டு மாவட்டம்.

16 அருள்மிகு கள்ள மட்டம்மன் திருக்கோயில், ஓமலூர், (அரிசனக் காலனி திருக்கோயில்), செங்கற்பட்டு மாவட்டம்.

17 அருள்மிகு ஹரிச்சக்கர மூர்த்திபெருமாள் திருக்கோயில், வீரசோழம், திருச்சுழி வட்டம், காமராஜர் மாவட்டம்.

18 அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயில், தேவகோட்டை நகர் மற்றும் வட்டம்.

19 அருள்மிகு சுவர்ணபுரீஸ்வரர் திருக்கோயில், ஆண்டாள் கோயில், வலங்கைமான் வட்டம், தஞ்சை மாவட்டம்.

20 அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், திங்களூர், திருவையாறு வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்

21 அருள்மிகு வரதராசப்பெருமாள் திருக்கோயில், மாத்தூர், கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

22 அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், புந்தகாம், கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

23 அருள்மிகு முத்துமாலையம்மன் திருக்கோயில், பாலக்குறிச்சி, திருமயம் வட்டம்.

24 அருள்மிகு விசுவநாதசுவாமி திருக்கோயில், ஆதனக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம்.

25 அருள்மிகு விசுவநாதசுவாமி திருக்கோயில், எரிச்சி, அறந்தாங்கி வட்டம்.



26 அருள்மிகு சிதம்பரேஸ்வரர் திருக்கோயில், தாழானூர், ஆவுடையார்கோயில் வட்டம்.

27 அருள்மிகு ஈஸ்வரன் திருக்கோயில், பல்வயல் கொளத்தூர் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்.

28 அருள்மிகு சேக்கிழார் திருக்கோயில், குன்றத்தூர், செங்கற்பட்டு மாவட்டம்.

29 அருள்மிகு தத்தாத்ரேயஸ்வாமி திருக்கோயில், சேந்தமங்கலம், நாமக்கல் வட்டம், சேலம் மாவட்டம்.

**அர்ச்சகர் சம்பள பாக்கி:**

நிலங்களின் வருமானத்தையே நம்பியிருக்கும் திருக்கோயில்களின் சிப்பந்திகளுக்கு குறிப்பாக அர்ச்சகர்கள் போன்ற உள்துறை ஏழை பணியாளர்களுக்கு சம்பளம் கொடுக்க இயலாது பெருமளவில் பாக்கிகள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் உள்ள திருக்கோயில் பணியாளர்களின் சம்பள நிலுவையாக ரொக்கம் ரூ. 8,81,697,32-ம் நெல் நிலுவையாக ரூ. 3,41,250-ம் ஆக மொத்தம் ரூ. 12,22,947, நிலுவையில் உள்ளது. அவ்வப்போது இவ்வகையான திருக்கோயில்களுக்கு நிதி வசதியுள்ள திருக்கோயில்களிலிருந்து கடன் முதலியவை பெற்றுத் தரப்பட்டு உதவி செய்யப்பட்டு வந்தது. இந்த வகையில் திருக்கோயில்களுக்கு உதவ நிரந்தரமாக ஏற்பாடு செய்யப்பட்டு ரூபாய் கோடி வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வைப்பு நிதியிலிருந்து கிடைக்கிற வட்டித் தொகையைக் கொண்டு சிப்பந்திகளுக்கு சம்பளம் முதலிய பாக்கிகள் அதிக அளவில் நிலுவையிலுள்ள திருக்கோயில்களுக்கு சம்பந்தப்பட்ட திருக்கோயில்களின் நிதி வசதி வருமானம் பெறக் கூடிய சாத்தியக்கூறுகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு சம்பள பாக்கிகளைக் கொடுக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திருக்கோயில் பணியாளர்களுக்குச் சீரான சம்பள விகிதம் நிர்ணயம் செய்தல்:**

பழனி திருக்கோயில் பணியாளர்கள் சம்பள விகிதம் அரசு ஊழியர்கள் பெறும் சம்பள விகிதம் அளவிற்கு இருந்து வருகிறது.

[1985 ஜூன் 13

இதர திருக்கோயில்களின் பணியாளர்கள் சம்பள விகிதம் அந்தந்த திருக்கோயில்களின் வருமானங்களைப் பொறுத்து ஏற்ற தாழ்வாக இருந்து வரும் நிலைமையை போக்க முதல் கட்டமாக பழனி திருக்கோயில் நீங்கலாக இதர துணை ஆணையாளர், உதவி ஆணையாளர் தரத்தில் நிர்வாக அதிகாரிகள் உள்ள முறையே 6 மற்றும் 4 திருக்கோயில்களின் பணியாளர்கள் சம்பள விகிதத்தினை சீராக்குவதற்கும், நிர்வாக நலனைக் கருத்தில் கொண்டு திருக்கோயில் பணியாளர்களை ஒரு திருக்கோயிலிலிருந்து மற்றொரு திருக்கோயிலுக்கு மாற்றம் செய்யவும் வழிவகைகள் ஆராய்ந்து வகுக்கப்படும். இந்த ஊதிய விகித சீரமைப்பு மற்றும் பணியாளர் மாற்றம் படிப்படியாக இதர திருக்கோயில்களுக்கும் அமுல்படுத்தப்படும்.

**திருக்கோயில் நிலங்கள் குத்தகை :**

நிலங்களையே வருமான வரியாகக் கொண்டிருக்கும் பெரும்பாலான திருக்கோயில்கள், குத்தகைதாரர்கள் பல ஆண்டுகளாக குத்தகை பாக்கிகளை தராத காரணத்தால் தினசரி பூசைகள், சிப்பந்திகளின் சம்பளம் மற்றும் இதர இனங்களுக்கான செலவுகளை சமாளிக்க முடியாமல் இடர்படுவதை கருத்தில் கொண்டு சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான கட்டிடங்களுக்கு வாடகைக் கட்டுப்பாடு சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளித்திருப்பதைப் போல அவர்களுக்குச் சொந்தமான நிலங்களிலிருந்தும் குத்தகைத் தொகையினைப் பெற வகை செய்யும் பொருட்டு சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களை குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிப்பது பற்றி அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

**பழனி திருக்கோயில் நிர்வாக முடிவுகளைச் செயலாக்க காலதாமதத்தினைத் தவிர்க்க ஒரு குழு :**

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் தொடர்பான நிர்வாக முடிவுகளை உடனுக்குடன் செயலாக்கவும் அதன் திட்டங்களை அமுல்படுத்தவும், காலதாமதம் ஏற்படாமல் தவிர்க்கவும், அறநிலையத்துறை ஆணையரைத் தலைவராகக் கொண்ட ஒரு நிர்வாகக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் துறையின் கண்காணிப்புப் பொறியாளர், தலைமைத் தணிக்கை அலுவலர் மற்றும் திருக்கோயிலின் தக்கார் உறுப்பினர்களாகச் செயல்படுவர்.



1985 ஜூன் 13]

இக்குழு, மேற்படி திருக்கோயிலின் நிர்வாக அபிவிருத்திக்காகவும், வளர்ச்சிக்காகவும் மேற்கொள்ளும் முடிவுகளை துரிதமாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**தமிழக சமயச் சான்றோர்களுக்கு நினைவுக் கோட்டம் அமைத்தல்.**

தமிழ், தமிழ்நாடு, தமிழ்ச் சமயம் இவற்றைப் பேணிக்காத்த திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர், சேக்கிழார் போன்ற தமிழ்ச் சான்றோர்களுக்கு அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் உரிய இடங்களில் நினைவுக் கோட்டங்கள் தமிழ் அறிஞர்கள் பரிந்துரைப்படி இந்து சமய அறநிலையத் துறையால் அமைக்கப்பட உள்ளது.

**திருக்கோயில்களின் கணக்குகள், மேலாண்மைத்திறன் மேம்பாடு**

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையில் துணை ஆணையர் செயல் அலுவலராக உள்ள எட்டு திருக்கோயில்கள் ஒவ்வொன்றிலும் அவைகளின் வரவு-செலவு கணக்குகளின் மேலாண்மைத் திறன் மேம்பாட்டிற்காக முதுநிலை கணக்கு அலுவலர் பணியிடங்களை ஏற்படுத்தி, துறையிலுள்ள மண்டல தணிக்கை அலுவலர்களை அப்பணியிடங்களில் அயல் பணியில் நியமிக்கலாம் என அரசு கொள்கை அளவில் ஏற்று 17—1—1985-ம் தேதியில் ஆணை பிறப்பித்துள்ளது.

**மகாராஷ்டிர மாநில சதாரா உத்திர சிதம்பர திருக்கோயிலின் திருப்பணியில் பங்கேற்றல்.**

மகாராஷ்டிரா மாநிலத்தில் சதாராவில் சில ஆண்டுகளுக்கு முன் காஞ்சி மாமுனிவர் தவத்திரு சந்திரசேகரேந்திர ஸ்வாமிகள் தங்கி இருந்த போது இட்ட அருளாணைப்படி தெற்கே உள்ள சிதம்பரம் நடராஜர் கோயில் அமைப்பில் வடக்கும் தெற்கும் சந்திக்கும் இடமாகிய சதாராவில் 108 நடன சரணங்களுடன் பல மாநில அரசுகள் நிதி உதவியுடன் கட்டப் பெற்றுள்ள உத்திர சிதம்பர ஆலயத்தின் தெற்கு கோபுரம் கட்டும் பணியை தமிழ் நாடு அரசு ஏற்று தமிழ்நாடு இந்து அறநிலைய துறையில் ஆலயங்களில் உபரி நிதியிலிருந்து ரூ. 4.30 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது. இக்கோயிலின் புனித நன்னீராட்டு விழா 9—6—1985-ல் நடைபெற்றுள்ளது.

**அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், திருச்செங்கோடு, சேலம் மாவட்டம்.**

பழமை வாய்ந்த இத்திருக்கோயில் மலை மீது அமைந்துள்ளது. இதற்கு மலைச்சாலை ஒன்று ரூ. 55 இலட்சம் மதிப்பீட்டில் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டு இப்பணி தமிழ்நாடு கட்டுமானப் பணிக் கழகத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

இப்பணிக்கு சிறப்பு மான்யமாக ரூ. 10 இலட்சம் (இரு தவணைகளில், 1985-86-ல் ரூ. 5,00,000-மும், 1986-87-ல் ரூ. 5,00,000-மும் ஆக மொத்தம் ரூ. 10 இலட்சம்) அளிப்பதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மலைப் பாதை வேலை மேற்கொள்ளப்பட இருக்கிறது.

**அருள்மிகு காசி விஸ்வநாதஸ்வாமி திருக்கோயில், தென்காசி, திருநெல்வேலி மாவட்டம்.**

தென்காசி, அருள்மிகு காசி விஸ்வநாத சுவாமி திருக்கோயி லின் தற்போது உள்ள கல்காரத்தின் மீது இராஜகோபுரம் ஒன்று அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான மதிப்பீடு ரூ. 90 இலட்சத்திற்கு அங்கீகரிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**இந்து சமய தத்துவ நூல்கள் வெளியீடு மற்றும் சமய ஆராய்ச்சிக்கு, பல்கலைக் கழகங்களுக்கு நிதி உதவி செய்தல்.**

(1) **அண்ணாமலை பல்கலைக் கழகம்.**—சமரச சன்மார்க்க நெறியைப் பரப்பிய அருட்பெருங் கவிஞர் திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகளாரால் இயற்றப்பட்ட திருவருட் பாவின் ஆறு திருமுறைகளையும் வரலாற்று முறையுடன் கூடிய உரை விளக்கமாக பத்து தொகுதிகளில் அடங்கிய நூலை சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெளியிட திருக் கோயில்கள் உபரிநிதியிலிருந்து இதுவரை ரூ. 2.25 லட்சம் வழங்கப்பட்டு நான்கு தொகுதிகள் வெளிவந்துள்ளன. ஐந்தாவது தொகுதி பதிப்பில் இருந்து வருகிறது.



(2) **தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம்.**—(1) சைவ சித்தாந்தம், (2) வைஷ்ணவ சித்தாந்தம், (3) வேத இந்துமதம், (4) பௌத்த தர்க்கப் படிப்பு மற்றும் (5) ஜைனமத வரலாறு என்ற ஐந்து உட்துறைகள் கொண்ட தத்துவ நிறுவனம் ஒன்று அமைக்க ஒன்பது திருக்கோயில்களின் உபரி நிதிகளிலிருந்து ரூ. 10.5 லட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

(3) **சென்னை பல்கலைக் கழகம்.**—சைவ சித்தாந்த ஆராய்ச்சி பேராசிரியர் பதவிக்கான அற கட்டளை ஏற்படுத்த மாங்காடு அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில் மற்றும் இதர திருக் கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ. 6.00 லட்சம் நிதி வழங்கப் பட்டுள்ளது.

ஏற்கனவே வெளியான இதுபோன்ற சமய தத்துவ நூல்களை, தற்கால இளைஞர்களுக்கு பயன்படும் வகையில் தமிழ் அறிஞர்கள் பரிந்துரைப்படி மலிவுப் பதிப்புகளாக இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை மூலம் வெளியிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

[1985 ஜூன் 13

# இணைப்பு III

(…ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## சின்கோனாத் துறை.

## கொள்கை விளக்கக் குறிப்பு.

## 1985–86-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம்:

## கோரிக்கை எண். 25 சின்கோனா மற்றும் 56 மூலதனச் செலவு:

### 1. முன்னுரை:

1.1. சின்கோனாத் துறை கடந்த 124 ஆண்டுகளாக, குனைன் சல்பேட், மற்றும் குனைன் ஹைட்ரோ குளோரைடு போன்ற கொய்னாப் பொருட்கள் குனிடின் சல்பேட், மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள் முதலியவற்றை உற்பத்தி செய்து வருகிறது. இது வணிக அடிப்படையில் தமிழக அரசின் கீழ் ஒரு துறையாக இயங்கி வருகிறது. 2,166 நிரந்தரத் தொழிலாளர்களும், 786 தற்காலிகத் தொழிலாளர்களும் ஆக மொத்தம் 2,952 தொழிலாளர்கள் இத்துறையில் பணியாற்றி வருகின்றனர். இத்துறை தயாரிக்கும் பொருட்களுக்குத் தேவையான மூலப் பொருட்கள், நீலகிரி, கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள ஆனைமலை, மதுரை மாவட்டத்திலுள்ள கொடைக்கானல் தாலுக்காவில் மேல் பழனிமலை ஆகிய இடங்களில் உள்ள இத்துறையின் தோட்டங்களிலேயே பயிரிடப்படுகின்றன. கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைமலையிலுள்ள தொழிற்சாலையிலும், நீலகிரி மாவட்டம் நடுவட்டத்திலுள்ள தொழிற்சாலையிலும் அவ்வகை மூலப் பொருட்கள் பதனிடப்படுகின்றன.

1.2. துறையின் தொழிலாளர்களில் பெரும்பான்மையோர் ஆதிதிராவிடர்கள் (60 சதவீதம்) / di-Dravidars Scheduled Castes பின்தங்கிய வகுப்பினர் (30 சதவீதம்) (Backward Classes) ஆவர் என்பதைக் குறிப்பிடுவதில் இத்துறை பெருமையடைகிறது. சின்கோனாத் துறையின் நடவடிக்கைகள் இரு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. ஒரு பிரிவு மலேரியா நோயை



1985 ஜூன் 13]

ஒழிப்பதற்காக பயன்படுத்தப்படும் குனைன் சல்பேட் மருந்தையும், இதய நோய்களைக் குணப்படுத்தப்படும் குனிடின் சல்பேட் போன்ற உயிர் காக்கும் மருந்துகள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. மற்றொரு பிரிவு, மருந்து மற்றும் நறுமணத் தைலங்களைத் தயாரிக்கிறது. மருந்து மற்றும் நறுமணத் தைல வகைத் தாவரங்களைப் பயிரிடும் பணியை, 1950 ஆம் ஆண்டு முதல் இத்துறை மேற்கொண்டுள்ளது. துறையின் பணிகளைப் பலதிறப்படுத்துவதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அண்மையில் இத்துறை முதலமைச்சரின் மாணவர்கட்கு பற்பொடி வழங்கும் திட்டத்தின் கீழ் பற்பொடி தயாரித்து கிராமப்புறக் குழந்தைகளுக்கு வழங்கும் பணியை மேற்கொண்டுள்ளது. பற்பொடி, 30 கிராம் எடையுள்ள பைகளில், நீலகிரி, கோயம்புத்தூர், பெரியார், சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களிலுள்ள கிராமப்புற குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. இதன் மூலம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து மாவட்டங்களில் ஏறக்குறைய பதினொன்று இலட்சம் குழந்தைகள் ஒவ்வொரு மாதமும் பயனடைகின்றனர்.

### 2. தயாரிப்பு:

#### சின்கோனாப் பொருட்கள்:

2.1. உலக நாடுகளின் தேவைகள், மற்றும் உள்நாட்டு தேவைகளுக்கேற்ப கொய்னாப் பொருட்களின் விற்பனை அமைந்துள்ளது. இரண்டாம் உலகப் போரின்போது இப்பொருட்களுக்கான தேவை அதிகமாக இருந்தது. போர் முடிந்ததும் இப்பொருட்களின் தேவை குறைந்து விட்டது. ஆனால் 1960 ஆம் ஆண்டிற்கும் 1970 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் இப்பொருட்களின் தேவை அதிகரித்தது. உலக நாடுகளில் கொய்னாப் பொருட்களின் விற்பனை சீராக அதிகரித்து வரும் நிலையில் நம் நாட்டில் மலேரியா நோய் மீண்டும் தோன்றி பரவி வருவதால், இந்திய அரசு, 1978 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் கொய்னாப் பொருட்களின் வெளி நாட்டு ஏற்றுமதிக்குத் தடை விதித்தது. மாநில அரசு பலமுறை வேண்டியதற்கிணங்க, 1978-79, 1979-80, 1980-81, 1981-82 மற்றும் 1982-83 ஆண்டுகளில் மத்திய அரசு இப்பொருட்களை ஓரளவிற்கு ஏற்றுமதி செய்ய அனுமதித்தது. ஆனால் இத்தகைய உயிர்

[1985 ஜூன் 13

தாக்கும் மருந்துகள் தடையேதுமின்றி நிலையாக கிடைக்க வேண்டுமென்று அனைத்து நாடுகளும் கருதுவதால் இவற்றை ஏற்றுமதி செய்வதற்கு திடீரென்று தடை விதிக்கப்பட்டதன் காரணமாக நீண்ட காலமாக நிலவிய அனைத்து நாடுகளுக்கான விற்பனை பெரிதும் பாதிக்கப்பட்டது. மேலும் தொடர்ந்து ஏற்றுமதிக்குத் தடை விதிக்கப்பட்ட காலத்தில் அனைத்து நாடுகளிலும் விற்பனை செய்ய இயலாததால் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்வது கடினமாகி விட்டது. தற்போது, மத்திய அரசு கொய்னாப் பொருட்களை ஏற்றுமதி செய்வதன் பேரிலிருந்த தடையை நீக்கி. "பொது அனுமதியின்" பேரில் ஏற்றுமதி செய்ய அனுமதி அளித்துள்ளது.

2.2. விற்பனை செய்யப்பட்ட கொய்னாப் பொருட்களின் அளவு மற்றும் அவற்றின் மூலம் கிடைத்த வருவாய் ஆகியவற்றின் விவரம் பின்வருமாறு :—

| ஆண்டு. (1) | விவரம். (2) | அளவு. (3) (கிலோ கிராமில்.) | வருவாய் (4) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| 1981—82 (உள்ளபடி) | உள்நாட்டு விற்பனை. | 1,746 *9.010 | 15.75 |
| | வெளிநாட்டு விற்பனை. | — | — |
| | மொத்தம் | 1,746 *9,010 | 15.75 |
| 1982—83 (உள்ளபடி) | உள்நாட்டு விற்பனை. | 507 | 4.61 |
| | வெளிநாட்டு விற்பனை. | — | — |
| | மொத்தம் | 507 | 4.61 |
| 1983—84 (உள்ளபடி). | உள்நாட்டு விற்பனை. | 660 | 5.10 |
| | வெளிநாட்டு விற்பனை. | 1,900 | 14.50 |
| | மொத்தம் | 2,560 | 19.60 |

* சின்கோனா அல்கலாய்டு விற்பனை.



1985 ஜூன் 13]

| | | | |
|---|---|---|---|
| 1984—85 (உள்ளபடி). | உள்நாடடு விற்பனை. | 757 | 5.79 |
| | வெளிநாட்டு விற்பனை. | 6,000* | 0.48 |
| | மொத்தம் | 6,757 | 6.27 |
| 1985—86 (மதிப்பிடப்பட்டது). | உள்நாட்டு விற்பனை. | 1,000 | 8.00 |
| | வெளிநாட்டு விற்பனை. | 3,000 | 42.00 |
| | மொத்தம் | 4,000 | 50.00 |

* சின்கோனா சுல்கலாய்டு விற்பனை

31—3—1985 ஆம் நாளன்று இருப்பிலுள்ள கொய்னாப் பொருட்கள் அவற்றின் மதிப்பு ஆகிய விவரங்கள் வருமாறு :—

| வரிசை எண்ணும், கொய்னாப் பொருட்களின் பெயரும். (1) | இருப்பிலுள்ள அளவு. (2) (கிலோ கிராம்) | விலை கிலோ ஒன்றுக்கு. (3) (ரூபாய்) | மொத்த மதிப்பு (4) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. குனைன் சல்பேட் | 3,220 | 788 | 25.37 |
| 2. குனைன் ஹைட்ரோ குளோரைடு | 2.173 | 1,088 | 23.64 |
| 3. சின்கோனா பெப்ரிபியூஜ் | 1,033 | 215 | 2.22 |
| 4. குனிடின் சல்பேட் | 2 | — | 0.03 |
| 5. சின்கோனாடின் | 2,314 | 24.80 | 0.57 |
| 6. குனைன் சல்பேட் மாத்திரைகள் | 500 | — | — |
| மொத்தம் | 8,742 | — | 51.83 |

128—164—29

[1985 ஜூன் 13

குறிப்பு.—1985 ஏப்ரல் மாதம் 2.1 மெட்ரிக் டன் எடையுள்ள குனைன் ஹைடிரோ குளோரைடு 1 கிலோ ரூ. 910 என்ற விலையில் ரூ. 19.11 லட்சத்திற்கு ஆர்டர் பெறப்பட்டது. ரூ. 9.1 லட்சம் பெறப்பட்டு 1 மெட்ரிக் டன் குனைன் ஹைடிரோ குளோரைடு விற்கப்பட்டது. இருப்பில் மீதமுள்ள அனைத்துக் கொய்னா பொருட்களும் 1985-86 ஆம் ஆண்டு விற்பனை செய்ய இயலும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாட்டுச் சந்தையில் கொய்னாப் பொருட்களின் தேவை மற்றும் அவற்றின் விலைகளில் சரிவு ஏற்பட்டமையால் அவற்றின் உற்பத்தி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டு முதற்கொண்டு தேசிய மலேரியா ஒழிப்பு திட்ட நிறுவனத்திடமிருந்து கொய்னாப் பொருட்களுக்கான தேவை ஏதுமில்லை.

2.3. கொய்னாப் பொருட்களின் விற்பனை விலையை, மருந்துகள் விலை கட்டுப்பாட்டு ஆணையின்படி இந்திய அரசு நிர்ணயிக்கிறது. இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட விலை கொய்னாப் பொருட்களின் உற்பத்தி விலையை விட குறைவாக உள்ளதால், விற்பனை விலையை உயர்த்த வேண்டுமென்று மாநில அரசு இந்திய அரசை கேட்டுள்ளது. இது இந்திய அரசின் ஆய்வில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது:—

| பொருட்களின் பெயர். | உற்பத்தி விலை (1982—83) | இந்திய அரசு நிர்ணயித்துள்ள விலை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (விலைகள் கிலோகிராம் ஒன்றிற்கு.) | |
| | ரூபாய். | ரூபாய். |
| 1. குனைன் சல்பேட் (Quinine Sulphate) | 914.79 | 788.00 |
| 2. குனிடின் சல்பேட் (Quindine Sulphate) | 3,552.14 | 1,313.00 |
| 3. குனைன் ஹைட்ரோ குளோரைடு (Quinine Hydrocloride) | உற்பத்தி இல்லை. | 1,088.00 |
| 4. சின்கோனா பெப்ரியூஜ் (Chinchona Febrifuge) | 112.53 | |



1985 ஜூன் 13]

கொய்னாப் பொருட்களின் தேவை மற்றும் அவற்றின் விலைகளில் சரிவு ஏற்பட்டமையால் அவற்றின் உற்பத்தி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள் :**

2.4. மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள் ஆகியவற்றின் வாயிலாகக் கிடைக்கும் வருவாய் சீராக அதிகரித்து வருகிறது. தற்போதுள்ள நிலையிலேயே வருவாய் விகிதத்தையும் அவற்றின் வளர்ச்சி வேகத்தையும் நிலை நிறுத்த முற்பட்டு வருகிறது.

பொது மக்கள் விரும்புகின்ற சின்பிரல், சினோமாஸ் போன்ற வீட்டு உபயோகப் பொருட்களின் தேவை அதிகரித்துக் கொண்டே வருகிறது. இத்துறையில் விற்பனை செய்யப்படும் மிக சுத்தமான யூகலிப்டஸ் தைலத்திற்கான அதிகப்படி தேவை குறிப்பிடத்தக்கதாகும்.

மருந்து மற்றும் நறுமணத் தைலங்களின் தேவை மக்களிடையே ஒரே சீராக இருந்து வருகிறது. அதன் விளைவாக ரூ. 30,245 மதிப்புள்ள துறையின் பொருட்கள் தமிழகமெங்குமுள்ள காதி கிராப்ட் விற்பனை நிலையங்களில் 1983-84 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டு ரூ. 4,316.70 மதிப்புள்ள பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. 1986-86 ஆம் ஆண்டும் காதி கிராப்ட் மூலமாக விற்பனை செய்யப்படும்.

1983-84 ஆம் ஆண்டில் ரூ. 64,160 மதிப்புள்ள பொருட்கள், மதுரை, வேலூர், சேலம், கோயம்புத்தூர் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் நடைபெற்ற சுற்றுலா மற்றும் தொழில் கண்காட்சிகளில் விற்பனை செய்யப்பட்டது. 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 66,972 மதிப்புள்ள பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. தமிழகத்தின் வெவ்வேறு மாவட்டங்களில் ஆங்காங்கு இனிமேல் நடைபெறும் கண்காட்சிகளில் இத்துறை பங்கேற்று துறையில் தயாரிக்கப்படும் பொருட்களை விளம்பரம் செய்தும், விற்பனை செய்தும் வருவாய் ஈட்டப்படும்.

மற்றும் நறுமணத் தைலவகைப் பயிர்கள் கொண்ட நிலங்களையும் இத்துறை தனது நேரடி மேற்பார்வையில் கொண்டுள்ளது. அவற்றின் விபரம் பின்வருமாறு :—

| பயிர்கள். (1) | நீலகிரி. (2) | கோயமுத்தூர் மாவட்டத்திலுள்ள ஆனைமலை. (3) | மதுரை மாவட்டத்திலுள்ள கொடைக்கானல். (4) | மொத்தம். (5) |
|---|---|---|---|---|
| | (நிலப் பரப்பு ஹெக்டேர்களில்) | | | |
| சின்கோனா | 492.12 | 1,649.71 | .. | 2,141.83 |
| மருந்து மற்றும் நறுமணத் தைலப் பயிர்கள் | 789.77 | 359.20 | 240.25 | 1,589.22 |
| மொத்தம் .. | 1,281.89 | 2,008.91 | 240.25 | 3,531.05 |

**4. மலைத் தோட்ட திட்டங்கள் :**

4.1. ஏற்கெனவே இருப்பிலுள்ள கொய்னா பொருட்களை விற்பனை செய்யும் வாய்ப்பு திருப்திகரமாக இல்லாமையால் 1984-85 ஆம் ஆண்டில் சின்கோனா புதிதாக பயிர் செய்யும் பணி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் பயிர் செய்யும் பருவக் காலம் தொடங்குமுன் நிலையான வேறு வணிகப் பயிரை சாகுபடி செய்வது பற்றி முடிவு செய்யப்படும். 1983-84 ஆம் ஆண்டில் 163.40 ஹெக்டேர் நிலப் பரப்பில் மருந்து மற்றும் நறுமணத் தைலப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டன. அது 1984-85 ஆம் ஆண்டில் 124.10 ஹெக்டேர் நிலப் பரப்பிலும், 1985-86 ஆம் ஆண்டில் 106 ஹெக்டேர் நிலப் பரப்பிலும் சாகுபடி செய்யப்படும்.

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஜாவா சிட்ரோனெல்லாபுல் என்னும் நறுமணத் தைலப் பயிர் நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூர் தாலூக்காவில், சாகுபடி செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டம் 1980 ஆம் ஆண்டு, அக்டோபர் திங்களில் ஆரம்பிக்கப்பட்டது. 1983-84 ஆம்



ஆண்டில் 40 ஹெக்டேர் நிலப் பரப்பில் இப்பயிர் சாகுபடி செய்யப்பட்டது. தேவையான நிலப்பரப்பு இல்லாமையால், மேற்கொண்டு சாகுபடி செய்ய இயலவில்லை.

**5. ஆராய்ச்சி :**

5.1. அதிக விளைச்சலைக் கொடுக்கக்கூடிய மருந்து மற்றும் நறுமணத் தைலப் பயிர்களையும் ஏனைய மருந்து மற்றும் நறுமண செடி வகைகளை வளர்க்கும் முறைகளை மேம்படுத்துவதில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சின்கோனா மருந்து மற்றும் நறுமணத் தைலப் பயிர்கள் ஆகியவற்றைக் குறித்து முறையான தீவிர ஆராய்ச்சிகள் நடத்த, ஆராய்ச்சி நிலையம் ஒன்றும் 1976 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. 1981-82 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து சின்கோனா மருந்து மற்றும் நறுமணத் தைலப் பயிர்களைப் பயிரிடுதல் குறித்து ஆராய்ச்சிகள் தொடங்கப்பட்டு அப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இவ்வாராய்ச்சிப் பணிகளுக்காக செலவிடப்படும் தொகையை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும், சின்கோனாத் துறையும் சமமாக ஏற்றுக்கொள்ளும். குனைனிலிருந்து குனிடின் தயாரிப்பது பற்றிய ஆராய்ச்சிப் பணி லக்னோவிலுள்ள மத்திய மருந்தாய்வுக்கூடத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த மத்திய மருந்தாய்வுக்கூடம் மேற்சொன்ன ஆராய்ச்சிப் பணியை 1—6—1982 முதல் செய்து வருகிறது.

**6. தொழிலாளர் நலன் :**

6.1. தொழிலாளர்கள் இத்துறையின் உற்பத்திப் பணிகளில் பெரும் பங்காற்றி வருகின்றனர். மலைத் தோட்டங்கள் அமைக்கும் திட்டங்கள் ஆகியவை செவ்விய வகையில் செயற்படுவதில் நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்குமிடையே நல்லுறவு நிலவுவதற்கும் தொழிலாளர் நலனைக் காப்பதற்கும் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. ஆடவர், மகளிர் ஆகிய இருபால் தொழிலாளர்களுக்கும் சமமான ஊதியம் வழங்கப்படுகிறது. விலைவாசிப் புள்ளியின் அடிப்படையில் அகவிலைப்படி வழங்கப்படுகிறது. வயது வந்த தொழிலாளர்களுக்கு

நாளொன்றுக்கு கூலியாக ரூ. 12.15 (ரூபாய் பன்னிரண்டு மற்றும் பைசா பதினைந்து மட்டும்) வழங்கப்படுகிறது. 1,281 தரமான தொழிலாளர் குடியிருப்புகள் தற்போதுள்ள தொழிலாளர்களுக்கு வேண்டியுள்ளது. இதனை கருத்திற்கொண்டு புதிய குடியிருப்புகளை கட்டுவது மற்றும் பழைய குடியிருப்புகளைப் புதுப்பித்தல் போன்ற பணிகளை முறையாக மேற்கொண்டு முடிக்கப்பட்டு வருகிறது. தரமான தொழிலாளர் குடியிருப்புகள் கட்டும் பணி மாநில திட்டப் பணிகளின் கீழ் தொடங்கப்பட்டது. 1983-84 ஆம் ஆண்டின் இறுதி வரையில் மொத்தம் 421 தரமான தொழிலாளர் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டன. அவற்றின் விவரங்கள் வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1976—77-ம் ஆண்டு இறுதிவரை கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகள் | 141 | |
| 1977—78 முதல் 1983—84 வரை கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகள். | 280 | 421 |
| 1984—85 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கும் பணி மேற்கொண்டுள்ள குடியிருப்புகள். | 190 | |
| 1985—86 ஆம் ஆண்டு கட்டப்பட உள்ள குடியிருப்புகள். | 670 | |
| | | 860 |
| மொத்தம் .. | | 1,281 |

1984-85 ஆம் ஆண்டில் 25 புதிய தொழிலாளர் குடியிருப்புகள் கட்டும் பணி மேற்கொள்ள ரூ. 8.50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ரூ. 50,000 செலவில் 25 தொழிலாளர் குடியிருப்புகளுக்கு மின்வசதி செய்து கொடுக்கும் பணி நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் 25 தொழிலாளர் குடியிருப்புகள் கட்ட ரூபாய் 7 லட்சம் மற்றும் 75 குடியிருப்புகளுக்கு மின்வசதி பொருத்த ரூ. 1.20 இலட்சங்கள், பகுதி 2 திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 421 தரமான தொழிலாளர் குடியிருப்புகளை இத்துறை கட்டி முடித்துள்ளது. மேலும் 190 குடியிருப்புகள் கட்டும் பணி செவ்வனே நடைபெற்று வருகிறது. புதிய தொழிலாளர் குடியிருப்புகளில் மின்வசதி, நீரடிக் கழிப்பிட வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆகிய



வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தொழிலாளர் குடியிருப்புகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆண்டு பழுது பார்க்கும் பணிகள் (Annual repairs) அல்லாமல் தொழிலாளர் குடியிருப்புகளுக்கு சிறப்பு பழுதுபார்க்கும் பணிகள் (Special repairs) குடியிருப்புகளிலுள்ள பழுதடைந்த பொருட்களை புதுப்பித்தல் போன்ற பணிகளும் காலவாரியாக மேற்கொள்ளப்படுகிறது. பல்வேறு பிரிவுகளிலுள்ள துறையின் மருந்தகங்கள், மற்றும் ஆனைமலை பிரிவிலுள்ள அனைத்து வசதிகளுடன் கூடிய மருத்துவ மனை ஆகியவற்றின் வாயிலாக மருத்துவ வசதிகளும் இத்துறையின் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. நீலகிரியில் கூடலூரிலுள்ள அரசு மருத்துவ மனையில் சின்கோனா தொழிலாளர்களுக்கென்றே 5 படுக்கைகள் தனியாக ஒதுக்கப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களின் நடமாடும் பிரிவு தொழிலாளர்களுக்குத் தேவையான நல்வாழ்வு மருத்துவ வசதிகளைச் செய்து கொடுக்கின்றன.

இத்துறையில் பணியாற்றும் தொழிலாளர்களின் குழந்தைகள் அரசு சின்கோனாத் தோட்டங்களிலுள்ள குழந்தைகள் காப்பகத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். அக்குழந்தைகளின் உணவளிக்கும் தொகையை அரசு கீழுள்ளவாறு அதிகரித்துள்ளது :—

1. இரண்டு வயதிற்கு மேற்பட்ட குழந்தைக்கு நாளொன்றுக்கு 0.50 பைசாவாக உள்ளதை ரூ. 1-க்கு அதிகரிக்கப் பட்டுள்ளது.

2. இரண்டு வயதுக்கு குறைவாக உள்ள குழந்தைக்கு நாளொன்றுக்கு 0.30 பைசாவிலிருந்து 0.80 பைசாவிற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

தனியார் தோட்டங்களில் வழங்குவது போல் இத்துறையின் தொழிலாளர்களுக்கு தினமும் இலவச தேநீர் வழங்கப் படுகிறது.

இத்துறையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நலன் சட்டங்களும் அவற்றின் கீழ் வரும் விதிகளும் பொருந்தும். ஆண்டு தோறும் தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுப்பு, பேறுகாலச் சலுகைகள், சம்பளத்துடன் கூடிய நோய் கால விடுப்பு, ஓய்வுக்கால ஊதியம், வருங்கால சேம நல நிதியில் சேர்ந்துள்ள தொழிலாளர்களுக்கு அரசு சந்தாத் தொகை அளித்தல், வெம்மை கம்பளியும் ( sleeping rug ) மற்றும் மழைக் கம்பளியும் Rain Cumbly ) அளித்தல், இலவச வீட்டு வசதி அளித்தல் போன்ற சலுகைகளுக்காக இத்துறை கணிசமான தொகையை செலவு செய்கிறது.

**7. துறையின் நிதி நிலைமை :**

1. அனைத்து நாடுகள் சந்தைகளில் விலை ஏற்ற இறக்கம், மற்றும் கொய்னாப் பொருட்களின் ஏற்றுமதிக்கு இந்திய அரசு விதித்த தடை ஆகியவற்றின் விளைவாக இத்துறையின் பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டில் மூலதனத்தின் மீதான வட்டித் தொகை ரூ. 76.73 இலட்சங்கள் செலுத்தப்பட்ட பிறகு ரூ. 25.80 இலட்சங்கள் இழப்பு ஏற்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டில் மூலதனத்தின் மீதான வட்டித் தொகை ரூ. 106.34 இலட்சங்கள் செலுத்தப்பட்ட பிறகு ரூ. 34.78 லட்சங்கள் (சென்னை மாநில கணக்காரால் ஆய்வு செய்யப்பட வேண்டியுள்ள 1983-84 ஆம் ஆண்டின் அமைந்த படிவ கணக்குகளின்படி) துறைக்கு இழப்பு ஏற்படும். 1984-85 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டின்படி மூலதனத்தின் மீதான வட்டி ரூ. 126.27 லட்சங்கள் செலுத்திய பின்னர் ரூ. 32.33 இலட்சங்கள் (மதிப்பிடப்பட்டது) இழப்பாகவும், 1985-86 ஆம் ஆண்டின் திட்ட மதிப்பீட்டின்படி மூலதனத்தின் மீதான வட்டி ரூ. 140.00 இலட்சங்கள் செலுத்திய பின்னர் ரூ. 35.26 இலட்சங்கள் (மதிப்பிடப்பட்டது) இழப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1984 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளின்படி நிலையான சொத்துக்கள் ரூ. 7.84 கோடி, பண்டகசாலை இருப்புகள், முடிக்கப்பட்ட பொருட்கள், நடைபெற்று வரும் பணிகள் சில்லறைக் கடன்கள் ஆகியவற்றின் வாயிலாக ரூ. 5.14 கோடி உட்பட இத்துறையின் சொத்துக்களின் மதிப்பு ரூ. 12.98 கோடியாகும்.



**8. இத்துறையின் வளர்ச்சி திட்டங்கள் :**

8.1. சின்கோனா பெப்ரிபியூஜிலிருந்து குனைன் சல்பேட் குனிடின் சல்பேட் ஆகியவற்றை தயாரித்தல், தேயிலை கழிவிலிருந்து "கபின்" ( Coffeine ) தயாரித்தல் போன்ற பணிகள் இத்துறையின் அண்மைக் கால முக்கிய சாதனைகளாகும். குடும்ப நலத் திட்டத்திற்காகத் தயாரிக்கப் படும் கருத்தடை மாத்திரைகளில் உள்ள கார்டிசான் ஸ்டிராய்டு ஹார்மோன் போன்றவற்றைத் தயாரிக்கத் தேவைப்படும் மூலப் பொருளான "டயஸ்ஜெனின்" என்ற பொருளை தயாரித்தல், கொசுக்களை விரட்டும் "ஓடோமாஸ்" என்ற களிம்பையும் "சின்ஸ்ப்ரே" என்ற தெளிப்பான் மருந்தையும் தரையைத் தூய்மையாக்கப் பயன்படும் கிருமிநாசினி "சின்பிரஷ்" என்ற தெளிப்பான் மருந்தையும் தயாரித்து விற்பனை செய்தல் "சினிநோரமா" "தொட்டபெட்டா மிஸ்ட்" ஆகிய வாசனை திரவியங்களை தயாரித்தல் போன்றவை உற்பத்தியைப் பல திறப்படுத்தும் இத்துறையின் பணிகளாகும்.

காதி மற்றும் கிராமிய விற்பனை நிலையங்களின் மூலமாகவும் இத்துறையின் பொருட்களை விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாநிலமெங்குமுள்ள 55 காதி கிராப்ட் விற்பனை நிலையங்களில் இத்துறையின் பொருட்கள் விற்பனைக்கு உள்ளன. சென்னையிலும் மற்றுமுள்ள மாவட்டங்களில் நடைபெறும் கண்காட்சிகளில் பங்கெடுத்து, பொருட்களை விற்பனை செய்வதன் வாயிலாக இத்துறையின் நடவடிக்கைகள் மேலும் பரவ வழி செய்கிறது.

8.2. தற்போது கையிருப்பிலுள்ள கொய்னாப் பொருட்களின் அளவைக் கருத்திற் கொண்டு ஆனைமலையிலுள்ள கொய்னா தொழிற்சாலையில் சின்கோனாப் பட்டை பதனிடப்படும் பணி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இப்போது கையிருப்பிலுள்ள கொய்னாப் பொருட்கள் யாவும் விற்பனை செய்த பின்னர், உற்பத்திப் பணி மீண்டும் தொடரப்படும்.

இதற்கிடையில் நீலகிரி கோயம்புதூர் மற்றும் பெரியார் மாவட்டங்களின் கிராமிய குழந்தைகளுக்கு இலவசமாக பற்பொடி வழங்குவதற்காக பற்பொடி தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பற்பொடி தயாரிக்கும் பணி மற்றும்

அதை விநியோகம் செய்யும் பணிகள் 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 19.71 இலட்சங்கள் மதிப்புள்ள பற்பொடி தயாரிக்கப் பட்டு மேற்சொன்ன மாவட்டங்களுக்கு விநியோகம் செய்யப் பட்டுள்ளது.

நடப்பு நிதி ஆண்டு முதற்கொண்டு சேலம் மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்களின் கிராமிய குழந்தைகளுக்கும் பற்பொடி விநியோகம் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. இதுவரை ரூ. 39.64 இலட்சங்கள் மதிப்புள்ள பற்பொடி விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இத்துறையில் தயாரித்து விநியோகம் செய்யப்படும் பற்பொடியின் தரம் போற்றப்படும் வகையில் உள்ளது. தமிழ்நாட்டிலுள்ள இன்னும் சில மாவட்டங்களுக்கும் பற்பொடி வழங்கும் பணி இத்துறைக்கு ஒப்படைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

8.3. இத்துறையின் தோட்டப் பணிகளை மாற்றியமைத்தலின் மூலம் வேறு வணிக பயிர்களை பயிர் செய்ய முடிவு செய்யப் பட்டுள்ளது. இதன் விளைவாக ஏற்கனவே பணியாற்றி வரும் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திட இயலும்.

8.4. மேற்கூறிய அபிவிருத்தி பணிகள் யாவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திட்டப் பணிகளின் கீழ் அமுலாக்கப்பட்டு வருகின்றன.

**மாநில திட்டப் பணிகள் :**

1. சின்கோனாப் பயிரை மூனைப்பு சாகுபடி மற்றும் பழியன் முறையில் பயிரிடுதல்.

2. மருந்து மற்றும் நறுமணத் தைலச் செடி வகைகளை வாணிப முறையில் பயிரிடுதல்.

3. மருந்து மற்றும் நறுமணத் தைலச் செடி வகைகளின் வளர்ச்சிக்காக, முனைப்பு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல்.

4. இத்துறையின் தோட்டப் பிரிவுகளுக்கான அலுவலக கட்டிடம் மற்றும் தொழிலாளர் குடியிருப்புகள் கட்டுதல்.



**மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் :**

5. தொழிற்சாலையின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக தொழிற்சாலைக்குத் தேவையான கருவிகள் வாங்குதல்.

6. **தேயிலை கழிவிலிருந்து "கபீன்" தயாரித்தல்.**

இத்திட்டத்தின் கீழ் ஜாவா சிட்ரோனல்லா புல் பயிரிட்டு அதனின்று தைலம் எடுத்தல் பணி செயல்படுத்தப்படுகிறது. 1983-84 ஆம் ஆண்டு வரை 80 ஹெக்டேர் நிலப்பரப்பில் இப்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தேவையான நிலப்பரப்பு இல்லாமையால் இத்திட்டத்தின்கீழ் மேற்கொண்டு 120 ஹெக்டேரில் திட்டமிட்டபடி பயிர் செய்ய இயலவில்லை.

**மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் :**

மத்திய அரசு பொறுப்பேற்கும் மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சில பயனளிக்கும் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அவை வருமாறு :

(1) டயஸ்கோரியா பயிரிடுதல், அதிலிருந்து ஆண்டொன்றுக்கு 3 டன் டயஸ்ஜெனின் தயாரித்து பதப்படுத்து வதற்குத் தொழிற்சாலை நிறுவுதல். 1984-85 வரை 136 ஹெக்டேர் நிலப்பரப்பில் டயஸ்கோரியா பயிரிடப்பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டில் 20 ஹெக்டேரில் டயஸ்கோரியா பயிரிடப்பட்டுள்ளது. வரும் 1985-86 ஆம் ஆண்டிலும் 27 ஹெக்டேர் நிலப்பரப்பில் டயஸ்கோரியா பயிரிடப்படும். ஸ்டிராய்டு தொழிற்சாலையில் சோதனை அளவில் டயஸ்ஜெனின் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

(2) மதுரை மாவட்டம் கொடைக்கானல் தாலுக்காவிலுள்ள பேரிஜம் மற்றும் பெருமாள்மலை (பெரும்பள்ளம்) ஆகிய இடங்களில் ஜெரேனியம் பயிரிடுதல், மொத்தம் பயிரிடப்பட்ட நிலப்பரப்பின் விவரங்கள் வருமாறு :

| | |
|---|---|
| 1. பெருமாள் மலை | 200 ஹெக்டேர் |
| 2. மேல்பழனிக்குன்று (பேரிஜம்). | 40.25 ஹெக்டேர் |

இத்திட்டத்தின்கீழ் திட்டமிட்டபடி பயிர் செய்யும் வேலைகள் முடிக்கப்பட்டன. போதுமான நிலப்பரப்பு இல்லாமையால் மேற்கொண்டு பயிரிடும் பணி மேற்கொள்ள இயலவில்லை.

9. திட்டப் பணிகளின் கீழ் செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகையின் விவரம் வருமாறு :—

| ஆண்டு. | மாநிலத் திட்டப் பணிகள். | மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம். | மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம். | மொத்தம் |
|---|---|---|---|---|
| (1) | (ட) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| 1982-83 (உள்ளபடி) | 43-52 | 3.86 | 28.97 | 76.35 |
| 1983.84 (உள்ளபடி | 45-06 | 3.24 | 26.11 | 74.41 |
| 1984-85 (வரவு செலவு திட்ட மதிப்பீடு) | 50.55 | 9.22 | 43.13 | 102.90 |
| 1984-85 (திருத்திய மதிப்பீடு) | 38.04 | 4.72 | 33.37 | 76.13 |
| 1985-86 (வரவு செலவு திட்டமதிப்பீடு) | 15.69 | 4.82 | 45.25 | 65.76 |

10. வரவு செலவுத் திட்டம்;

| விவரங்கள். | 1983-84 உள்ளபடி. | 1984-85 (வரவு செலவு திட்ட மதிப்பீடு.) | 1984-85 (திருத்திய மதிப்பீடு.) | 1985-86 வரவு செலவு திட்ட மதிப்பீடு.) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| கோரிக்கை எண் 25-சின்கோனா-320 தொழில்கள். | | | | |
| நெறிமுறை படுத்துதல் | 13.64 | 14.27. | 15.20 | 15.60 |
| மலைத் தோட்டங்கள். (நீலகிரி, ஆனைமலை) | 63.88 | 64.72 | 71.75 | 68.05 |
| தொழிற்சாலைகள் (மருந்து மற்றும் நறுமணத் தைலத் தொழிற்சாலை. நடுவட்டம்- அரசு கொய்னாத் தொழிற்சாலை ஆனைமலை) | 20.79 | 26.09 | 31.31 | 31.79 |
| விற்பனை | 2.37 | 2.52 | 2.35 | 2.23 |
| திட்டங்கள் (ஆராய்ச்சி திட்டங்கள் மாநிலத் திட்டங்கள் மத்திய அரசு திட்டங்கள்) | 80.92 | 88.95 | 77.96 | 77.92 |
| வட்டி | 95.25 | 111.35 | 137.75 | 140.00 |
| மொத்தம் 320 தொழில்கள். | 276.85 | 370.90 | 336.32 | 335.59 |
| கோரிக்கை எண் 56-526 மூலதனச் செலவு, | | | | |
| கட்டிடங்கள் | 13.69 | 34.57 | 19.87 | 33.22 |
| இயந்திர தளவாடங்கள் | 0.34 | 2.00 | | 2.00 |
| மொத்தம் 526 மூலதன செலவு. | 14.03 | 36.57 | 19.87 | 35.22 |
| பெருமொத்தம் | 290.88 | 344.47 | 356.19 | 370.81 |

## இணைப்பு IV

(47 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### வனத்துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு.

1985-86.

1.1. காடுகள் பலதரப்பட்ட இயற்கைச் சூழல் அமைப்பினை உடையதாக, புதுப்பிக்கப் புதுப்பிக்கப் புத்துயிர் பெற்று இயற்கை வளங்களைத் தன்னகத்தே கொண்டு இயற்கையன்னையின் மாபெரும் அமைப்பான இந்த உலகில் முக்கிய ஒரு அங்கமாகத் திகழ்கிறது. மனித சமுதாயத்தின் உயிர் நாடியும், மேம்பாடும் இந்த ஒரு வாழ்க்கை நலன் தரும் முறையினைப் பின்பற்றியுள்ளது. காடுகளிலிருந்து பெறும் பயனை இயற்கைச் சூழ்நிலை போன்றவற்றை காக்கும் இறுதி நோக்கோடு சீராகப் பயன்படுத்தி வனவளத்தைத் தொடர்ந்து காக்க வழி செய்ய வேண்டும். எனவே, வன நிர்வாகம் கீழ்க்கண்ட நோக்கங்களைக் குறிக்கோளாகக் கொண்டதாக இருக்கும் :—

(1) அத்தியாவசிய உயிரின் வாழ்க்கைச் சூழலை காத்து பயன்படுத்தும் வகையில் மண்வளம், நீர்வளம், உயிரினம் ஆகியவற்றினை வளங்காத்தல்; கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் பொருட்டு அவர்களுக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்தல்; வனவிலங்குகளை அதன் இயற்கைச் சூழலிலேயே பாதுகாத்து மக்களின் பொழுதுபோக்கு நிலையங்களாக அவ்விடங்களை மேம்பாடு செய்தல்; தொழிற் துறைகளுக்குத் தேவையான மூலப் பொருட்களின் உற்பத்தியை தீவிரப்படுத்தல்.

(2) கிராமப்புற அபிவிருத்தியுடன் இணைந்த நிலங்களில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதும், பாதுகாத்தலும்.

1.2. இத்தகைய பின்னணியில் சமூகத்திற்குச் சேவை செய்யும் உறுதி கொண்டு, சமுதாய மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு வேண்டிய மதிப்பு மிகுந்த பொருட்களையும் சேவையினையும் நல்கும் நோக்கோடு வகுக்கப்பட்ட கொள்கையினை தொடர்ந்து



தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இந்த கொள்கையினை கடைப்பிடித்து காடுகளின் நிர்வாக நடவடிக்கைகள் பின்வரும் வகையில் செயல்படுத்தப்படுகின்றன :—

(அ) கிராமப்புற பொருளாதாரத்திற்குப் பயன் தரும் வகையில் காடுகளின் பரப்பை விரிவுபடுத்தவும், பாதுகாக்கவும் செய்தல்.

(ஆ) வனவிலங்கு பாரம்பரியத்தைப் பாதுகாத்தல்.

(இ) கிராமங்களிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் காடு வளர்ப்புப் பணிகளை பெருமளவு மேற்கொண்டு (சமூகநல காடுகள்) கிராமப்புற மக்களுக்கு பயன் தரும் வகையில் அவர்களின் ஒத்துழைப்பு மற்றும் ஈடுபாட்டுடன் வேலை வாய்ப்புகளைப் பெருக்குதல்.

(ஈ) எரிபொருள், தீவனம், உரம், பழவகைகள், தடிமரங்கள் மற்றும் இதர பாரம்பரிய வனப் பொருட்களை கணிசமான அளவு உற்பத்தி செய்து கிராமப்புற மக்களின் அத்தியாவசியத் தேவைகளை கூடியவரை நிறைவு செய்தல்.

(உ) தரங்குன்றிய புதர் நிலங்களை அடர்ந்த காடுகளாக மாற்றுதல்.

(ஊ) சந்தனம், ரப்பர், தேயிலை, முந்திரி, எண்ணெய் வித்துக்கள் போன்ற வனப் பொருட்களை வர்த்தக ரீதியில் நிர்வகித்தல்.

(எ) தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மூலப் பொருட்களின் உற்பத்தியை ஒருங்கிணைந்த நிர்வாக முறையில் அதிகரித்தல்.

(ஏ) அபிவிருத்தி செய்யப்பட்ட விரிவாக்க முறையில் மரம் வளர்க்கும் பணியினை வேளாண்மைப் பணியோடு இணைத்தல்.

(ஐ) பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்களை சமுதாய பொருளாதார கூட்டமைப்பின் கீழ் பழங்குடியினர் நாகரீகம் மற்றும் ஒழுக்கவியல்புகளுக்கு பொருந்தும் வண்ணம் அவர்களின் உயர்வுக்கு செயல்படுத்துதல்.

(ஓ) வனச் செல்வங்கள் குறைவதை தடுக்கும் வகையில் வனப் பாதுகாப்பை நவீனப்படுத்துதல்.

(ஔ) ஆராய்ச்சிப் பிரிவை திருத்தியமைத்து பயிற்சி, படிப்பினை மற்றும் விரிவாக்கப் பணிகளுக்கான உள் அமைப்புகள் ஏற்படுத்துதல்.

(ஓள) நீர் சேகரிப்பு நுணுக்கங்களை தகுந்த நடைமுறைப் பயிற்சி மூலம் மேம்படுத்துதல்.

(ஃ) புள்ளி விபரத் தகவல்கள், திட்டங்களை செயற்படுத்துதல், ஆய்வுக்கான தனி அமைப்புகள் ஏற்படுத்துதல்.

**வனப்பரப்பு :**

2.1. 1983-84 ஆம் ஆண்டில் மொத்த வனப் பரப்பு 22,235 சதுர கிலோ மீட்டர். அதில் காப்பு வனம் 18,264.100 சதுர கிலோ மீட்டர், காப்பு நிலங்கள் 3,407 சதுர கிலோ மீட்டர்; வகைப்படுத்தப்படாத காடுகள் 564 சதுர கிலோ மீட்டருமாகும்.

**வனங்களிலிருந்து கிடைக்கும் வருவாயும், செலவுகளும்.**

**வருவாய் :**

3.1. 1984-85 ஆம் ஆண்டில் காடுகளின் மூலம் 24.40 கோடி ரூபாய் வருவாய் கிட்டியது. வருவாயில் மிகுதியான பங்கு சந்தன மரத்திலிருந்தும், வனத்தைச் சார்ந்த தொழிற்சாலைகளுக்கு வழங்கப் பெறும் மரங்கள் மற்றும் மாப்பட்டைகள் ஆகிய மூலப் பொருட்களிலிருந்தும் கிடைக்கிறது.

வெவ்வேறு வனப் பொருட்களிலிருந்து கணிசமாக பெறப்படும் வருவாய் பற்றிய விபரம் வருமாறு :—

| | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|
| (அ) சந்தன மரம் | 7.92 |
| (ஆ) தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் மூலப் பொருட்கள் | 4.65 |





| | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|
| (இ) காடுபடு சிறு பொருள்கள் | 0.75 |
| (ஈ) ரப்பர் | 4.76 |
| (உ) வெட்டு மரங்கள், விறகு, மூங்கில், முந்திரி, சவுக்கு, மென்மரம், வனப் பண்ணை தோட்டங்கள், இதர இனங்கள் | 6.32 |
| மொத்தம் | 24.40 |

3.2. 1985-86 ஆம் ஆண்டில் உத்தேச வருவாய் 21.31 கோடி ரூபாயாகும். அரசு ரப்பர் தோட்டங்கள் தனி நிறுவனமாக மாற்றப்பட்டதனால் வருவாயில் 5 கோடி ரூபாய் அந்த நிறுவனத்திற்கு செல்கிறது. எனவே துறைக்கு வரும் வருவாய் அந்த அளவிற்கு குறைகிறது.

தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகம் மற்றும் அரசு ரப்பர் கழகங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வன நிலங்களுக்குக் குத்தகைத் தொகையை உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு குத்தகையின் மூலம் கிடைக்கும் கூடுதல் வருவாயினால், மொத்த வருவாய் பெருக வாய்ப்புள்ளது.

**செலவினம் :**

3.3. வனத் துறையில் 1983-84 ஆம் ஆண்டில் காடுகள் தொடர்பாக 29.09 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டில் 30.19 கோடி ரூபாய் செலவாகியது. வனத் துறையின் மேம்பாட்டிற்கென இதுவரை ஒதுக்கப்பட்ட முதலீடுகளில் இதுவே மிகவும் அதிகமானதாகும்.

3.4. 1985-86-ல் 29.30 கோடி ரூபாய் செலவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இந்த செலவில் மிகுதியான பகுதி காடுகளை மேம்படுத்தும் பணிகளுக்கென அவற்றின் உற்பத்தித் திறனை பெருக்கும் நோக்குடன் மூலதனச் செலவாகச் செய்யப்படும். மரங்கள், விறகு மரங்கள், தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் மர வகைகள், இதர அத்தியாவசிய மர பொருட்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் காப்புக் காடுகளின் உள்ளேயும் மற்ற வெளி நிலங்களிலும் மிகுந்த அளவில் மரம் வளர்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**வனப் பாதுகாப்பு :**

4.1. வனச் செல்வத்தை குறிப்பாக சந்தன மரம், வெட்டு மரங்கள் ஆகியவற்றை சீரிய முறையில் பாதுகாக்க 1977 ஆம் ஆண்டுக்கு முன்னர் 8 வனப் பாதுகாப்புப் பணிகள் இயங்கி வந்தன. 1977-க்குப் பின்னர் மேலும் ஐந்து வனப் பாதுகாப்புப் படைகள் அரசால் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு வனப் பாதுகாப்பு படையும் ஒரு உதவி வனப் பாதுகாவலரை தலைமையாகக் கொண்டு இயங்கி வருகிறது. இதைத் தவிர நீலகிரி மாவட்டத்தில் கூடலூரில் ஒரு பறக்கும் படையும், ஒரு வனச்சரகரின் தலைமையின் கீழ் சிறப்பு ரோந்து வனப்படை ஒன்றும் இயங்கி வருகின்றன. நீலகிரி மாவட்டத்தில் வனச் செல்வத்தை திருட்டுகளிலிருந்து காப்பாற்றவும், வனப் பாதுகாப்பை தீவிரப்படுத்தவும், குன்னூர், உதகை ஆகிய இடங்களில் இரண்டு பறக்கும் படைகளும், தேவர்ஷோலா மற்றும் சேரம்பாடி ஆகிய இடங்களில் ஒவ்வொரு சரகரின் தலைமையில் காவல் துறை மற்றும் வருவாய் துறையினரிடமிருந்து பெறப்பட்ட பணியாளர்களுடன் பணியாற்ற இரு வனப் பாதுகாப்பு படைகளும் 1984-85 ஆம் வருடத்திலிருந்து இயங்கி வருகின்றன. அரசு ரப்பர் கழகத்திலும் இரண்டு வனப் பாதுகாப்பு படைகள் உள்ளன.

தற்போது மாநிலத்தில் முக்கியமான இடங்களில் 89 வனச் சோதனைச் சாவடிகள் உள்ளன.





4.2. வனச் செல்வத்தை திருடு மற்றும் கள்ளக்கடத்தலிலிருந்து காப்பாற்றவும், அத்தகைய குற்றவாளிகள் மேல் சட்ட நடவடிக்கை தொடரவும், 1983-84 ஆம் வருடத்தில் ஒரு வனக் குற்றப் பிரிவு காவல் துறை துணைத் தலைவர் ஒருவரின் தலைமையின் கீழ் போதிய பணியாளர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. இந்த வனக் குற்றப்பிரிவு வனத் துறைத் தலைவரின் நேரிடை கண்காணிப்பின் கீழ் வனக் குற்றங்களைத் தடுக்கச் செயல்பட்டு வருகிறது. நவீன முறையில் வனச் செல்வங்களைப் பாதுகாக்க கம்பியில்லா தொலைபேசி மற்றும் "வாக்கி டாக்கி" போன்ற தகவல் தொடர்பு சாதனங்களை நிறுவ மதுரை மாவட்டத்தில் பழனியில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சந்தன மரம் அதிகமாக உள்ள பகுதிகளில் மின் அணு தொடர் சாதனம் நிறுவுவதற்கு பாரத மின்சாதன கழகம் (Bel) அதனுடைய ஆய்வினை முடித்து மதிப்பீட்டை தந்துள்ளது.

4.3. 1983-84 ஆம் வருடத்தில் 417 சந்தன மரக் குற்றங்கள் பிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் பிடிபட்ட சந்தன மரத்தின் எடை 61,534 கிலோ ஆகும். அவற்றின் மதிப்பு ரூ. 16,43,296 ஆகும். 886 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு அவற்றில் 693 குற்றவாளிகளின் மேல் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குற்றத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களும் கைப்பற்றப்பட்டன.

4.4. 1984-85 ஆம் வருடத்தில் 349 சந்தன மரக் குற்றங்கள் பிடிக்கப்பட்டன. பிடிபட்ட சந்தன மரங்களின் எடை 60,596 கிலோ, மதிப்பு ரூ. 21,11,846. 891 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். குற்றத்தில் சம்பந்தப்பட்ட 28 வாகனங்கள் கைப்பற்றப்பட்டன.

4.5. 1983-84 மற்றும் 1984-85 ஆம் வருடத்தில் 309 அட்டவணை பெருமரக் குற்றங்கள் பதிவு செய்யப்பட்டன. குற்றங்களில் சம்பந்தப்பட்ட 670 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 584 நபர்களின் மேல் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இக்குற்றங்களில் சம்பந்தப்பட்ட மரத்தின் மதிப்பு ரூ. 4,30,032 ஆகும்.

1983-84-ல், 37,851 வனக் குற்றங்கள் பிடிக்கப்பட்டன. 47,03,926 ரூபாய் இணக்கக் கட்டணம் வசூலிக்கப்பட்டது. இணக்கக் கட்டணம் வசூலிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 24,975. 1,793 வழக்குகள் தண்டிக்கப்பட்டன.

4.6. திருட்டுத்தனமாக மரங்கள் எவ்வப்போது வெட்டப் படுகின்றனவோ உடனே குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதே சமயம் இத்திருட்டு வெட்டைத் தவிர்க்கத் தவறிய அல்லது உடந்தையாக இருந்த ஊழியர் மீதும் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவற்றில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

செங்கலார் நீர் பிடிப்பு பகுதியில் பெருமளவு மரவெட்டுகள் கவனத்திற்கு வந்தவுடன் ஒரு வனப் பாதுகாவலரினால் அது விசாரிக்கப்பட்டு அவருடைய அறிக்கையின் பேரில் 41 ஊழியர்கள், (3 உதவி வனப் பாதுகாவலர்களையும் சேர்த்து) தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டு, துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திண்டுக்கல் கோட்டத்தைச் சேர்ந்த கன்னிவாடி சரகத்தில் ஒரு பட்டா நிலத்திற்கு ஒட்டிய ஒதுக்கக் காடுகளில் கண்டுபிடிக்கப்பட்ட திருட்டு வெட்டுகளுக்காக, 11 ஊழியர்கள் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டு அவர்கள் மேல் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தேனி கோட்டத்திலுள்ள கூடலூர் சரகத்தில் தேக்கு மற்றும் பல மரங்கள் வெட்டப்பட்டது கவனத்திற்கு வந்தவுடன் இத்தகைய மோசமான பாதுகாப்பு நடவடிக்கைக்காக 12 ஊழியர்கள், இரு உதவி வனப் பாதுகாவலர்கள் உட்பட, தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

சேலம் கோட்டத்தில் 1983-84-ஆம் ஆண்டில் சந்தன மரம் பெயர்ப்பதில் கண்டுபிடிக்கப்பட்ட சில ஒழுங்கீனங்களுக்காக 13 ஊழியர்கள் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டு குற்றத்தாள் பிறப்பிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டுள்ளனர். இரு வனச் சரகர்கள் மீது உள்ள குற்றப் பத்திரிக்கை பரிசிலனையிலுள்ளது.



4.7. 1984-85-ல் மொத்தம் 94 பணியாளர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டனர். குற்றத்தாள் 735 அலுவலர் மற்றும் பணியாளர் மீது வழங்கப்பட்டன.

மாநிலங்களுக்கிடையே சந்தன மரக் கடத்தல் :

5.1. சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சந்தன மரக் குற்றங்களிலிருந்து அவைகளை புலனாய்வு செய்ததிலிருந்தும் தமிழ் நாட்டிலுள்ள சந்தன மரங்களை கேரள மாநிலத்திற்கு கடத்துவதில் இம்மாநிலங்களுக்கிடையே நிறுவிக்கப்பட்ட கடத்தல் குழுக்கள் இயங்கி வருவதாக கண்டுபிடிக்கப்பட்டது. கேரள தமிழ்நாடு எல்லையோர பகுதிகளிலுள்ள நால்பழா, கல்லூர், மன்னார்காடு ஆகிய இடங்களிலுள்ள சில சந்தன மர எண்ணெய் தொழிற்சாலைகளில் சோதனைப் புலனாய்வு செய்யப்பட்ட பொழுது இக்கருத்து உறுதிப்படுத்தப்பட்டது. அத்தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் மீது நமது மாநிலத்தில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. அவர்கள் கூடலூர் உட்கோட்ட நீதிமன்ற நடுவர் முன்பு சரணடைந்ததின் பேரில் சில நிபந்தனைகளுடன் ஜாமீனில் விடுவிக்கப் பட்டுள்ளனர். கேரள மாநில வணிக வரித் துறையினரின் உதவியோடு மேற்கொண்டு இக்கடத்தல் குறித்து புலன் விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

பாம்புத் தோல் வியாபாரத்தைக் கட்டுப்படுத்துதல்:

6.1. இந்தியாவில் உள்ள பாம்புகள் நாட்டின் வேளாண்மை பொருளாதார மேம்பாட்டிற்கு பேருதவி புரிகின்றன. விவசாயி அவருடைய உழும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளபோது பாம்புகள்தான் பயிர்களையும், தானியங்களையும் எலிகளிடமிருந்து பாதுகாக்கின்றன என்பதை பலர் உணர்வதில்லை. இந்த அரிய முக்கியத்துவத்தைக் கருதியே, பாம்புகள், வன விலங்கு (பாதுகாப்பு) சட்டம், 1972-ல் ஷெட்யூல் நான்கில் சேர்க்கப்பட்டுள்ளன. பெல்ட்டுகள், செருப்புகள் மற்றும் பைகள் போன்ற அனேக அழகிய பொருட்கள் செய்வதற்கு பாம்புத் தோல்களுக்கு நல்ல கிராக்கி உள்ளது. பாம்புத் தோல்களை ஆதாயமான வியாபாரம் செய்யும் பொருட்டு, பாம்புகள் [illegible]

தனமாக பலரால் கொல்லப்படுகின்றன. பாம்புகளைத் திருட்டுத் தனமாக கொல்லுவதைத் தடுப்பதற்காகவும், பாம்புத் தோல் வியாபாரத்தை ஒழுங்குமுறைப்படுத்தவும், அரசு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம் 1972-ன் கீழ் பாம்பு பிடிக்கும் உரிமம், தோல் பதப்படுத்தும் உரிமம் மற்றும் வியாபார உரிமங்களை வழங்கி வந்தது. விஷ எதிர்ப்பு மருந்து தயாரித்தலுக்காக அரசால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு நியாய விலையைச் செலுத்தி விட்டு, பாம்புகளை பிடித்து விஷம் எடுக்க, தமிழ் நாட்டில் இருளர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு மட்டும் அனுமதி அளிக்கப் பட்டுள்ளது. விஷம் எடுக்கப்பட்ட பின்னர் இப்பாம்புகள் திரும்பவும் காட்டில் விடப்படுகின்றன.

6.2. வனவிலங்கு காப்பாளர், சென்னை மற்றும் உதவி வனப் பாதுகாவலர், வனப் பாதுகாப்புப் படை, சென்னை ஆகியோர் பாம்புத் தோல்கள் விற்பனையைத் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். வியாபாரிகளின் உரிமங்களும் திடீர் தணிக்கை செய்யப்படுகின்றன. தோல் பதனிடும் சாலை, கிடங்குகள் மற்றும் இரயில் நிலையங்களில் தனிக் குழு திடீர் தணிக்கை செய்து சட்டத்திற்கு புறம்பாக வியாபாரம் செய்தலை கண்டுபிடித்து, தோல்களை பறிமுதல் செய்தும், குற்றவாளிகளை கைது செய்தும் வருகின்றனர். இந்த திடீர் தணிக்கைகள் திருட்டு வியாபாரத்தினை கட்டுப்படுத்த பெரிதும் உதவியாயுள்ளன.

6.3. 1982-83 ஆம் ஆண்டில் சுமார் ஒரு லட்ச ரூபாய் மதிப்புள்ள 24,319 தோல்கள் 4 குற்றங்களிலும், 1983-84 ஆம் ஆண்டில் சுமார் 6 லட்சம் ரூபாய் மதிப்புள்ள 64,445 தோல்கள் 5 குற்றங்களிலும் பறிமுதல் செய்யப்பட்டன.

1984-85 ஆம் ஆண்டில் சுமார் 16.55 லட்ச ரூபாய் மதிப்புள்ள 1,35,182 தோல்களும் 225 பாம்புத் தோல் பொருட்களும், 31 குற்றங்களில் பறிமுதல் செய்யப்பட்டன.

6.4. இந்திய அரசின் அறிவுரைகளின்படி, பறிமுதல் செய்யப்பட்ட தோல்களை பதப்படுத்தி விற்பனை செய்வதற்காக பாம்புத் தோல்கள் அனைத்தும் இந்திய அரசு நிறுவனமாகிய பாரத் லெதர் கார்ப்பரேஷனிடம் சேர்க்கப்பட்டு வருகின்றன.



1985-86 ஆம் ஆண்டில் பாம்புத் தோல்கள் சட்ட விரோதமாக வியாபாரம் செய்யப்படுவதை தீவிரமாக கண்காணித்து பாம்புகள் வகைதொகையின்றி கொல்லப்படுவதை கட்டுப்படுத்த தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**வனத்தைச் சார்ந்த தொழில் நிறுவனங்களுக்கு மூலப் பொருட்கள் விநியோகம் செய்தல்:**

7.1. வன உற்பத்தி வனத்தைச் சார்ந்த தொழில் நிறுவனங்களுக்கு சீகைப்பட்டை மற்றும் கூழ்மரங்கள் விநியோகம் செய்வதில் ஓர் இன்றியமையாத பங்கை வகிக்கின்றது. வனப் பொருட்களான புளுகம், இராண்டிஸ், ஹைபிரிட், சீகைப்பட்டை, பட்டை உரிக்கப்பட்ட சீகை மரங்கள், மூங்கில் போன்றவைகள் தொழில் நிறுவனங்களுக்கு தொடர்ச்சியாக அளிக்கப்பட்டு வருகின்றன. 1983-84 ஆம் ஆண்டில் 1.05 லட்சம் டன்கள் மூலப்பொருட்கள் விநியோகம் செய்வதில் இரண்டு கோடியே நாற்பது லட்சம் ரூபாய் வருவாய் கிட்டியது.

7.2. 1984-85-ல் மூலப் பொருள்கள் தொடர்ச்சியாக அளிக்கப் பட்டு சுமார் 2.45 லட்சம் டன்கள் விநியோகம் செய்து நான்கு கோடியே அறுபத்தைந்து லட்சம் ரூபாய் வருவாய் கிட்டியது. அதேபோல் வரும் 1985-86-ல் 2.82 லட்சம் டன்கள் மூலப் பொருள்கள். விநியோகம் செய்து சுமார் 6.44 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

**சந்தன மரம்:**

8.1. சந்தன மரங்கள் இயற்கையாகப் பீடபூமிகளிலும், குறிப்பாக வடாற்காடு, சேலம், தர்மபுரி, பெரியார், கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள மலைப் பகுதிகளிலும், நீலகிரி. தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் குறைந்த அளவிலும் வளர்கின்றன. பட்டுப் போன சந்தன மரங்கள் மட்டுமே மூன்றாண்டுகட்கு ஒரு முறை வெட்டி எடுக்கப்படுகின்றன. வெட்டப்படும் சந்தன மரங்கள் கிடங்கு களுக்குக் கொண்டு வரப்பட்டு, சுத்தப்படுத்தப்பட்டு ஏலத்தில் விற்கப்படுகின்றன.

8.2. சந்தன மரத்தை ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசு தடை விதித்ததன் காரணமாக ஏலத்தில் விடப்படும் சந்தன மரங்களின் விலை குறைந்ததால் இத்துறைக்கு கிடைக்க வேண்டிய வருவாய் பெருமளவு குறைந்தது. இவ்வரசு இது குறித்து அடிக்கடி மத்திய அரசிற்கு தொடர்ந்து பல வேண்டுகோள்கள் விடுத்தும் மத்திய அரசு சந்தன மர ஏற்றுமதி மீதான தடையை அகற்றவில்லை. அயல் நாடுகளுக்கு சந்தன மரங்களை ஏற்றுமதி செய்வதை அனுமதித்து, மத்திய அரசின் ஏற்றுமதிக் கொள்கை திருத்தி அமைக்கப்பட்டால், இனிவரும் வருடங்களில் மேலும் அதிக வருவாய் சந்தன மரங்களிலிருந்து கிட்ட வழியுள்ளது. அத்துடன் கூடுதல் அந்நிய செலாவணியும் நாட்டிற்கு கிடைக்கும். ஆகவே மேலும் காலம் தாழ்த்தாமல் இதில் நல்ல முடிவை விரைவில் மத்திய அரசு அறிவிக்கும் என எதிர்பார்க்கிறோம்.

8.3. 1983-84 ஆம் வருடத்தில் 19.08 மெட்ரிக் டன் சந்தன மரங்கள் ஏலத்தில் விற்கப்பட்டதில் ரூ. 7.24 கோடி வருவாய் கிட்டியது. 1984-85-ல் 2,000 மெட்ரிக் டன் எடையுள்ள சந்தன மரங்களை ஏலத்தில் விற்றதின் மூலம் ரூ. 7.92 கோடி வருவாய் கிட்டியது.

தெக்குப்பட்டில் சந்தனப் பொருட்கள் தொழிற்சாலை :

9.1. வட ஆற்காடு மாவட்டம், வாணியம்பாடி தாலுக்கா தெக்குப்பட்டு கிராமத்தில் அரசினால் சந்தன மர பொருட்கள் தொழிற்சாலையை எண்பத்து ஐந்து லட்சம் ரூபாய் செலவில் நிறுவியுள்ளது. இந்த தொழிற்சாலைக்கான கட்டுமானப் பணிகள் மற்றும் இயந்திரங்களை பொருத்துதல் உட்பட அனைத்து வேலைகளும் தமிழ்நாடு சிறுதொழில் கழகத்தார் (Tansi) வசம் ஒப்படைக்கப்பட்டது. TurnKey Basts

9.2. திருவாளர்கள் டான்சி நிறுவனத்தினர் தொழிற்சாலைக்கான கட்டுமானப் பணிகளை 1983 ஏப்ரல் மாதத்தில் தொடங்கினர். 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் முதல் சோதனை முறையினை ஓராண்டு காலத்திற்குள் மேற்கொண்டது. 1—12—1984 அன்று இந்த தொழிற்சாலையினை வனத் துறை



ஏற்றுக் கொண்டு அன்றைய தினமே இதனை தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தாரிடம் வர்த்தக ரீதியில் இயங்க குத்தகை முறையில் ஒப்படைத்தது.

9.3. இந்திய தர நிர்ணய கழகத்தார் நிர்ணயித்துள்ள தரத்திற்கேற்ப இங்கு உற்பத்தி செய்யப்படும் எண்ணெயின் தரம் இருக்கும். இந்திய தர நிர்ணய கழகத்தார் சந்தன எண்ணெய்க்கு நிர்ணயம் செய்துள்ள குறைந்தபட்ச விகிதம் 92 சதவிகிதம் இங்கு உற்பத்தி செய்யப்படும் எண்ணெயில் 94.17 சதவிகிதம் சந்தன எண்ணெய் ( Santalol ) உள்ளது

9.4. இந்தத் தொழிற்சாலை ஆண்டுக்கு 400 முதல் 500 மெட்ரிக் டன் சந்தனக் கட்டையிலிருந்து எண்ணெய் எடுக்கும் அளவில் நிறுவப்பட்டுள்ளது. மேலும் ஆண்டுக்கு 22 மெட்ரிக் டன் சந்தன எண்ணெய் உற்பத்தி செய்யக் கூடிய அளவிலும் உள்ளது. இது சராசரியாக 4.5 சதவீதம் ஆகும். இந்தத் தொழிற்சாலை நவீன இயந்திரங்களைக் கொண்டதோடல்லாமல் சர்வதேச தர நிர்ணயத்திற்கு ஒப்ப மிக நவீனமான தொழில் நுட்பங்களைக் கொண்டதாகும்.

9.5. இந்தத் தொழிற்சாலையில் உபயோகப்படுத்தப்பட்ட சந்தன மரங்களை மேலும் லாபகரமான முறையில் பயன்படுத்த இதே தொழிற்சாலை உள்ள இடத்தில் ரூ. 6.15 லட்சம் செலவில் தனியாக Sap wood dust (வெள்ளடை) Factory ஏற்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆண்டிற்கு 1,050 மெட்ரிக் டன் வெள்ளடை சந்தனத் தூள் (Sap wood dust) இத்தொழிற்சாலையில் பயன்படுத்தப்படும். இவ்விரு தொழிற்சாலைகளை நிறுவுவதால் வேலை வாய்ப்புகள் அதிகரிக்கப்பட்டு, தொழில் திறன் உள்ளோர் மற்றும் தொழில் திறன் இல்லாதோர் ஆகிய சுமார் 175 நபர்களுக்கு வேலை கிடைக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. சந்தனக் கட்டைகளை நேரடி ஏலத்தில் விற்காமல் எண்ணெய் எடுத்து விற்பதன் மூலம் ஆண்டுக்கு இத்துறைக்கு கூடுதல் வருவாயாக ரூபாய் 21 லட்சம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சர்வதேச சந்தையில் நுழையவும் வாய்ப்பேற்றுள்ளது.

9.6. இந்த இரு தொழிற்சாலைகளில் ஆண்டு விற்பனை அளவு ரூபாய் 5.40 கோடியளவில் இருக்குமெனவும், இந்த இரு நிறுவனங்கள் மூலம் ஆண்டிற்கு 1.57 கோடி ரூபாய் லாபம் கிடைக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

9.7. இத்தொழிற்சாலை விரைவில் வர்த்தக ரீதியில் உற்பத்தியை தொடங்குவதற்காக திறக்கப்படவுள்ளது. வெள்ளடை சந்தனத் தூள் (Sapwood dust) தொழிற்சாலையின் கட்டுமான பணிகள் 1986 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**காடுபடு சிறு பொருட்கள் :**

10.1. வனப் பகுதிகளிலும் அதனைச் சுற்றி உள்ள பகுதிகளிலும் வசித்து வரும் மலைவாழ் குடியினர் ஏழ்மையின் பிடிப்பில் உள்ளவர்கள். அவர்களது பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்யும்பொருட்டு, புளி, கடுக்காய் முதலான காடுபடு சிறு பொருட்கள் யாவும், மலைவாழ் குடியினரை அங்கத்தினர்களாக கொண்ட பெரும் பலநோக்கு சங்கங்களுக்கும், இதர ஆதி திராவிட பின்தங்கிய சமூகத்தினரால் அமைக்கப் பெற்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நியாய விலையில் 10 சதவீதம் தள்ளுபடி செய்து குத்தகை அளிக்கப்படுகிறது. குத்தகை அளிக்கப்படும்பொழுது நிர்ணயிக்கப்படும் நியாய விலை கடந்த ஆண்டு பொது ஏல விலையைவிட அதிகமாக இருக்கக்கூடாது என்றும், கடந்த ஆண்டு அசாதாரணமான வறட்சி ஆண்டு முதலானவையாக இருக்கும் பட்சத்தில், சமீபத்திய இயல்பான ஆண்டில் கிடைத்த ஏல விலையைவிட அதிகமாக இருக்கக் கூடாது எனவும் அரசு முடிவு எடுத்துள்ளது.

10.2. 1983-84-ல் காடுபடு சிறுபொருட்கள் விற்பனையில் 55.57 லட்சம் ரூபாய் வருவாய் கிட்டியது. இதில் 17.38 லட்சம் ரூபாய் மதிப்புள்ள காடுபடு சிறுபொருள் குத்தகைகள் பெரும் பலநோக்கு மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. பெரும் பலநோக்கு சங்கம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த குத்தகைப் பகுதிகளை எடுத்துக் கொள்ள முன்வராவிடில், அரசுக்கு மகசூல் விற்காமல் இழப்பு





ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு பொது ஏலம் மூலமாகவோ அல்லது துறை மூலமாகவோ மகசூலை சேகரம் செய்து விற்க முடிவு செய்யப்படுகிறது.

10.3. 1984-85-ல் 75 லட்சம் ரூபாய் வருவாய் கிட்டியது. இதில் 18 லட்சம் ரூபாய் வரவு காடுபடு சிறுபொருள் குத்தகைகள் பெரும் பலநோக்கு சங்கம் மற்றும் இதர கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பெறப்பட்டது.

10.4. காடுபடு சிறுபொருள் வியாபாரம் குறித்து முற்றிலும் ஆராய அரசு ஒரு ஆய்வுக் குழு அமைத்துள்ளது. அக்குழுவின் அறிக்கை தற்போது கிடைக்கப் பெற்று அது பரிசீலனையில் உள்ளது.

**முந்திரி :**

11.1. தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள பெரும்பான்மையான முந்திரித் தோட்டங்கள் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் பொறுப்பிலுள்ளன. செங்கற்பட்டு, தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள சுமார் 18,000 எக்டேர் பரப்புள்ள முந்திரித் தோட்டங்கள் வனத் துறையின் பராமரிப்பிலுள்ளன. தற்போது 23,948 எக்டேர் பரப்புள்ள முந்திரித் தோட்டங்கள் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்திடமுள்ளன.

11.2. 1983-84 ஆம் ஆண்டு வனத் துறையிலுள்ள முந்திரித் தோட்டங்களிலிருந்து 19.98 லட்சம் ரூபாய் வருவாய் கிட்டியது. 1984-85 ஆம் ஆண்டில் வனத் துறையிலுள்ள முந்திரித் தோட்டங்களிலிருந்து பெற்ற வருவாய் 28.17 லட்ச ரூபாயாகும். 1985-86 ஆம் ஆண்டிலும் 13.50 லட்சம் ரூபாய் வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

11.3. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் முந்திரித் தோட்டங்களுக்கான திட்டத்தில் தீவிர மண்வள பாதுகாப்புப் பணிகளுடன் 873 எக்டேர் பரப்பில் முந்திரித் தோட்டங்கள் எழுப்ப 36.71 லட்சம் ரூபாய் மூலதனம் செய்யப்பட்டுள்ளது.

முந்திரித் தோட்டங்களிலிருந்து கிடைக்கும் மகசூலை அதிகரிக்க தீவிர மண்வளப் பாதுகாப்பு, களையெடுத்தல், வேர் பறித்து அப்புறப்படுத்துதல், உரமிடுதல் ஆகிய பணிகளை ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1985-90) மேற்கொள்ள உத்தேசிக்கப் பட்டுள்ளது. ஏழாவது திட்ட காலத்தில் 6,000 எக்டேர் பரப்பில் தோட்டங்கள் எழுப்புதல் மற்றும் தீவிர மண்வள பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள ரூ. 50.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

11.4. 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 7.90 லட்சம் செலவில் 700 எக்டேர் பரப்பில் தீவிர மேம்பாட்டுப் பணி செய்வதன் மூலம் இத்திட்டத்தை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**ரப்பர் தோட்டங்கள் :**

12.1. தமிழ் நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமே ரப்பர் தோட்டங்கள் வளர்ப்பதற்கு சாதகமான தட்பவெட்ப நிலையும், மண்வளமும் அமைந்துள்ளன. வனத் துறை இம்மாவட்டத்தில் சுமார் 4,800 எக்டேர் பரப்பில் ரப்பர் தோட்டங்கள் எழுப்பியுள்ளது. கீரிப்பாறை மற்றும் பெருஞ்சாணி ஆகிய இடங்களில் அரசு ரப்பர் தொழிற்சாலைகளை நிறுவி ரப்பர் பாளங்கள், கிரேப் ரப்பர் மற்றும் அடர்த்தியான ரப்பர்பால் போன்றவை தயாரிக்கப்படுகின்றன.

12.2. 1983-84 ஆம் ஆண்டு முடிய இந்த ரப்பர் தோட்டங்களில் சுமார் 20 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதே காலத்தில் 18 கோடி ரூபாய் வருவாயும் பெறப்பட்டுள்ளது.

12.3. இந்த ரப்பர் தோட்டங்களை வர்த்தக ரீதியாக திறம்பட பராமரித்து நடத்திச் செல்ல 1—10—1984 முதல் அரசு ரப்பர் கழகம் என்ற தனி அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**தமிழ் நாடு வனத் தோட்டக் கழகம் :**

13.1. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் 13—6—1974-ல் 2 கோடி ரூபாய் மூலதனத்துடன் துவங்கப்பட்டது. மூலதனத் தொகை முழுவதும் தமிழக அரசால் அளிக்கப்பட்டது. இதுவரை ஈட்டிய மூலதனம் 72.06 லட்சம் ரூபாய்.





13.2. வனத் துறையிலிருந்து இக்கழகத்திற்கு மொத்தம் 73,768.22 எக்டேர் மாற்றப்பட்டது. அதில் தோட்டங்கள் எழுப்பப்பட்ட 35,339.54 எக்டேர் பரப்பும் அடங்கும். கீழ்க்கண்ட வளர்ச்சிப் பணிகளை கழகம் மேற்கொண்டுள்ளது :—

(1) முந்திரித் தோட்டங்களில் மகசூலை அதிகரிக்க பழைய தோட்டங்களில் தீவிர பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதும், புதிதாக முந்திரித் தோட்டங்களை வளர்ப்பதும்.

(2) தொழிற் துறைகளுக்குத் தேவையான மூலப் பொருட்களை வழங்கும் பொருட்டு கலப்பின தைல மரங்களை வளர்த்தல்.

(3) விறகு மர தேவைக்காக சவுக்கு மற்றும் பலவகை மரங்களை வளர்த்தல்.

13.3. 1984-85-ல் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன:—

| | எக்டேர் |
|---|---|
| 1. கலப்பின கற்பூர மரம் வளர்த்தல் | 1,684 |
| 2. பலவகைத் தோட்டங்கள் வளர்த்தல் | 245 |
| 3. முந்திரித் தோட்டங்கள் வளர்த்தல் | 177 |
| 4. மும்முர தோட்டக் கலைப் பணி | 2,944 |
| 5. ஆகாசப் பதியன் கன்றுகள் (நெய்வேலி பகுதியில் வளர்த்தல்) | 230 |

மேலும் மாநில பண்ணைக் கழகத்திடமிருந்து குத்தகை அடிப்படையில் நெய்வேலியிலுள்ள 605 எக்டேர் நிலம் இக்கழகத்திற்கு மாற்றப்பட்டது. 1984-85-ல் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன :—

| | எக்டேர் |
|---|---|
| (1) ஆகாசப் பதியன் கன்றுகள் நடப்பட்டு தோட்டங்கள் வளர்த்தல் | 241 |
| (2) மேம்படுத்தப்பட்ட பதியன்கள் மூலம் தோட்டங்கள் வளர்த்தல் | 177 |

13.4. 1—12—1984 முதல் தெக்குப்பட்டியிலிருக்கும் சந்தன பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை குத்தகை முறையில் வனத் துறையிடமிருந்து பொறுப்பில் எடுத்துக் கொள்ளப் பட்டது. தொழிற்சாலை உரிமம் கிடைக்கும் வரையில், சந்தன மரத்தை பக்குவப்படுத்தி "சான்ட்டலால்" இருப்பாக வைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 400 டன்கள் சந்தன மரத்திலிருந்து 18 டன்கள் "சான்ட்டலால்" உற்பத்தி செய்யும் செயல் திறன் கொண்டதாயிருக்கும். வெள்ளை சந்தன மரங்களை பக்குவப்படுத்தி சந்தனத் தூளாக விற்கவும் பரிசீலனையிலுள்ளது. இதற்கு உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் நல்ல வியாபாரம் கிடைக்கும் எனக் கருதப்படுகிறது.

சந்தனப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையின் விற்பனை அளவின் மதிப்பு வருடத்திற்கு சுமார் 2 கோடி ரூபாயாகயிருக்கும். உத்தேசிக்கப்பட்டுள்ள சந்தன மரத்தூள் தொழிற்சாலை 1985-86-ல் முடிவுற்றால், சந்தனத் தூள் விற்பனை அளவின் மதிப்பு வருடத்திற்கு சுமார் 3 கோடி ரூபாயாகயிருக்கும். வருடத்திற்கு 965 மெட்ரிக் டன் சந்தனத் தூள் தயாரிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

13.5. அரக்கு தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட ரூ. 33.24 லட்சம் பெறுமான பலவகைப் பொருட்கள் விற்கப்பட்டன.

எதிர்பாராத நிலை ஏதேனும் ஏற்பட்டாலன்றி அரக்கு தொழிற்சாலையின் விற்பனை அளவு வருடத்திற்கு சுமார் 60 முதல் 65 லட்சம் ரூபாயாகயிருக்கும். தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் பெரும்பாலான பொருட்களான வார்னிஷ், தின்னர் போன்றவை வருடத்திற்கு 2.5 லட்சம் லிட்டர்கள் தயாரிக்கப்படும்.

**தமிழ் நாடு தேயிலைத் தோட்டக் கழகம்:**

14.1. தமிழ் நாடு தேயிலைத் தோட்டக் கழகம் 1—4—1976 முதல் செயல்படத் தொடங்கியது. வனத் துறையிலிருந்து 945 எக்டேர் தேயிலைத் தோட்டங்களை இக்கழகம் பொறுப்பேற்றுக் கொண்டது. மேலும் தொடர்ந்து 2,400 எக்டேர் பரப்பளவில் தேயிலை தோட்டங்களை இக்கழகம்





விரிவுபடுத்தியுள்ளது. இத்துடன் தொடர்ந்து 347.70 எக்டேர் பரப்பளவில் தேயிலை தோட்டங்களைக் கொண்ட கோலப்பள்ளி தேயிலைத் தோட்டம் 1—7—1984-லிருந்து வனத் துறையிலிருந்து கழகத்திற்கு மாற்றப்பட்டது.

14.2. 1—7—1984 முதல் 31—3—1985 முடிய ஆன செலவு 5.04 கோடி ரூபாய். இவ்வாண்டு வருவாய் ரூ. 7.24 கோடி.

14.3. தற்போதுள்ள தேயிலை தோட்டங்களில் 1984-85-ல் 17950 டன்கள் தேயிலை தளிர் மகசூலிலிருந்து 4,128 டன்கள் பதப்படுத்திய தேயிலை தயாரிக்கப்படும். 1985-86 ஆம் ஆண்டில் 185 லட்சம் டன்கள் தேயிலை தளிர் மகசூல் எதிர்பார்க்கப் படுகிறது. அதிலிருந்து 42.01 லட்சம் டன்கள் பதப்படுத்திய தேயிலை தயாரிக்கப்படும்.

14.4. இக்கழகம் 34,800 கிலோ "டைகர் ஹில்" தேயிலை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து 9.75 லட்சம் ரூபாய் வருமானம் ஈட்டியுள்ளது. 2,17,290 கிலோ தேயிலை தனியார் விற்பனை மற்றும் உள்ளிட விற்பனை மூலமும் விற்கப்பட்டு 12.94 லட்சம் ரூபாய் ஈட்டப்பட்டுள்ளது.

14.5. தற்சமயம் சேரங்கோடில் இரண்டும், டைகர் ஹில்லில் ஒன்றும் ஆக மூன்று தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ளன. தேயிலைத் தோட்டங்களின் ஒட்டு மொத்த உற்பத்தித் திறன் மற்றும் வளர்ச்சிப் பருவமடைவதைக் கருத்தில் கொண்டு, கூடலூர் பகுதியில் தேயிலை உற்பத்தி செய்ய 15 டன்கள் சி.டி.சி. திறன் கொண்ட நான்காவது தேயிலை தொழிற்சாலையை நிர்மாணிக்க இக்கழகம் உத்தேசித்துள்ளது. இதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

14.6 1984 டிசம்பர் மாதம் வரை 2,325 இலங்கை நாடு பெயர்ந்தோர் குடும்பத்தினரைச் சேர்ந்த 4,464 நபர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு இக்கழகத்தில் அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை கட்டப்பட வேண்டிய 2,325 தொழிலாளர் குடியிருப்பு களில் 2,201 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள குடியிருப்புகள் வருங்காலத்தில் கட்டி முடிக்கப்படும்.

[1985 ஜூன் 13

**புதிய 20 அம்ச திட்டம்—மரம் வளர்ப்பு :**

15.1. நம் நாட்டின் கிராமப்புற ஏழை மக்களையும், நலிந்த பிரிவினரையும் மேம்படுத்துவதற்காக பாரத பிரதமரின் புதிய 20 அம்ச திட்டத்தை தமிழ் நாடு மிகவும் தீவிரமாக செயல்படுத்தி வருகிறது. 1981-82 ஆம் வருடத்திலிருந்து இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1984-85 முடிய மரம் நடவு வேலை கீழ்க்கண்டவாறு செய்து முடிக்கப்பட்டுள்ளது :—

| | | 1981-82 | 1982-83 | 1983-84 | 1984-85 |
|---|---|---|---|---|---|
| 1 | காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் நடப் பட்ட மரக் கன்றுகள் | 746 லட்சம். | 1161.66 லட்சம். | 1192.46 லட்சம். | 1106.86 லட்சம். |
| 2 | சமூக காடு வளர்ப்பு (மரம் நடப் பட்ட பரப் பளவு) | 35,434 எக்டேர் | 38,212 எக்டேர் | 28,768 எக்டேர் | 38,249 எக்டேர் |
| 3 | வனப்பண்ணை திட்டத்தின் கீழ் பொது மக்கள் மற்றும் தனியார் நிறு வனங்கள் ஆகியவர்களுக்கு அளிக்கப்பட்ட கன்றுகள். | 65.29 லட்சம் | 173.040 லட்சம் | 459.809 லட்சம் | 443.510 லட்சம் |

**சமூகக் காடுகள் திட்டம் :**

16.1. அச்சந்தரத்தக்க மக்கட்தொகை பெருக்கமும், தொழில்களின் ஆதாவிற்கு வளர்ந்துள்ள ஒட்டு மொத்த கொள்கையும் இயற்கைச் சூழ்நிலையை நிலை குலைத்து கவிழ்க்கும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. வனப் பகுதிகள் மனிதக் குடியிருப்பு பகுதிகளிலிருந்து மிகவும் பின்னடைந்துள்ளன. அன்றாடம் வளர்ந்து வரும் மக்கட்தொகைப் பெருக்கத்தின் விறகு மற்றும் மரங்களின் தேவைகளை பூர்த்தி செய்ததால் மரங்கள், காடுகள், வனப் பகுதிகள் ஆகியவற்றை வகை தொகையின்றி அழிக்க நேர்ந்துள்ளது.



1985 ஜூன் 13]

16.2. கிராமப்புற மக்களின் தேவையான விறகு, சிறு மரம் ஆகியவற்றை பூர்த்தி செய்ய நிலையான சொத்து ஏற்படுத்தும் அவசரத் தேவையை உணர்ந்து 1960 ஆம் ஆண்டிலிருந்து அரசு காடுகளுக்கு வெளியே வனப் பண்ணைத் திட்டத்தை வனத் துறை செயல்படுத்தி வருகிறது. தேசிய வேளாண்மை சமூக காடுகள் குழுவின் பரிந்துரைக்கேற்ப 1970-ல் "விரிவாக்க காடுகள்" "பலவகை தோட்டங்கள்" "கிராம காடுகள்" முதலிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. 1960-81-ல் முடிந்த இரு பத்து வருடங்களில் காப்புக் காடுகளுக்கு வெளியே புறம்போக்கு நிலம், குளக்கரை பகுதி, வறண்ட மலைப் பகுதி ஆகிய இடங்களில் 1,33,000 எக்டேர் பரப்பளவில் காடு வளர்க்கப் பட்டுள்ளது. ஆனால் கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் (1981-82 முதல் 1984-85 முடிய) 97,425 எக்டேரில் சமூக நலக் காடுகள் வளர்க்கப்பட்டன.

16.3. சமூக வனவியல் முயற்சியை தீவிரப்படுத்துவதன் அவசரத் தேவையை உணர்ந்து 1981-82 ஆம் வருடத்தில் தமிழ் நாட்டில் ஸ்வீடன் சர்வதேச மேம்பாட்டு நிதி உதவியுடன் ஒரு மாபெரும் சமூக வனவியல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஏற்கனவே உள்ள பலவகையான சமூகக் காடுகள் திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டன. இத்திட்டத்தின் முதல் கட்ட காலம் 1981-82 முதல் ஐந்து வருடங்களாகும். இந்த முதல் கட்ட திட்டம் ரூ. 45.00 கோடி செலவில் செய்து முடிக்கப்பட உள்ளது.

16.4. திட்ட காலத்தின் முதல் மூன்று வருடங்களில் 1981-82 முதல் 1983-84 வரை 75,750 எக்டேர் பரப்பில் தொகுதி தோட்டங்களும், 4836 கி.மீ. தூரத்திற்கு வரிசை தோட்டங்களும் ரூ. 1,947.44 லட்சம் செலவில் வளர்க்கப்பட்டுள்ளன. இவை தவிர 121.10 லட்சம் மரக் கன்றுகள் பொதுமக்களுக்கு அவர்களுடைய நிலங்களில் வளர்ப்பதற்காக இலவசமாகவோ, சலுகை விலையிலோ அளிக்கப்பட்டுள்ளது.

[1985 ஜூன் 13

16.5. 1984-85 ஆம் வருடத்தில் ரூ. 923.08 லட்சம் கீழ்க்கண்ட வேலைகளுக்காக செலவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| (1) தொகுதி தோட்டங்கள் | .. | 21,655 எக்டேர் |
| (2) வரிசை தோட்டங்கள் | .. | 1,770 கி. மீ. |
| (3) மரக்கன்றுகள் வளர்த்து பொதுமக்களுக்கு அளித்தல். | .. | 312.87 லட்சம் |

16.6. 1985-86 ஆம் வருடத்தில் இத்திட்டம் 1004.74 லட்சம் ரூபாய் செலவில் கீழ்க்கண்ட வேலைகள் செயல்படுத்தப்பட உள்ளது :—

| | | |
|---|---|---|
| (1) தொகுதி தோட்டங்கள் | .. | 17,000 எக்டேர் |
| (2) வரிசை தோட்டங்கள் | .. | 1,430 கி. மீ |
| (3) மரக்கன்றுகள் வளர்த்து பொது மக்களுக்கு அளித்தல். | .. | 302.5 லட்சம் |

16.7. இத்திட்டம் அதன் ஐந்தாவது வருடத்தில் தற்போது உள்ளது. நவம்பர்–டிசம்பர் 84-ல் " SIDA " இடைக்கால ஆய்வு குழுவினால் ஆய்வு செய்யப்பட்டது.

16.8. கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் (1981-82 முதல் 1984-85 முடிய) 97,425 எக்டேரில் சமூக நலக் காடுகள் வளர்க்கப் பட்டன. 6,606 கி.மீ. வரிசைத் தோட்டங்கள் வளர்க்கப்பட்டன. 2,260.31 லட்சம் கன்றுகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டன.

16.9. புதியதாக தொடங்கப்பட்டுள்ள சமூக வனவியல் திட்டத்தின் வெற்றி பொது மக்களின் பங்கேற்பினை சார்ந்துள்ளது என்பதை உணர்ந்து இத்திட்டத்தை செயல் படுத்துவதில் பொது மக்களைப் படிப்படியாக தாங்களே ஈடுபடுத்திக் கொள்ள முயற்சி எடுக்கப்படுகிறது. 30—9—1984 வரை 2,594 கிராம சமூக வனவியல் குழுக்கள் இம்மாநிலத்தில் அமைக்கப்பட்டு வனத் துறைக்கு உதவி வருகின்றன.



1985 ஜூன் 13]

16.10. இதுவரை 2,591 கிராம சமூக வன ஊழியர்கள் (2,418 ஆண்கள், 173 பெண்கள்) நியமிக்கப்பட்டுள்ளனர். இன்னும் 1,489 ஊழியர்கள் 1985-86 ஆம் வருடத்தில் நியமிக்கப்பட உள்ளனர். இவர்கள் தங்கள் வேலையை செவ்வனே செய்வதற்கு விரிவாக பயிற்சியும், தொழில் நுட்ப பயிற்சியும் அளிக்கப் படுகிறது.

மாநில அரசின் ஊரக விரிவாக்க பயிற்சி மையங்களில் வனவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. 30—9—1984 வரை 578 வனவர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. புதிதாக வந்துள்ள 246 வனவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது. வனச் சாகர்கள் கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் 15 நாட்களுக்கு பயிற்சியளிக்கப் படுகின்றனர். முதல் கட்ட பயிற்சியில் 130 வனச் சாகர்கள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர். புதிதாக வந்துள்ள 63 பேர்களுக்கு பயிற்சியளிக்கப்பட வேண்டியுள்ளது.

16.11. 1983, 1984 ஆகிய இரு வருடங்களில் சென்னையில் நடந்த அகில இந்திய சுற்றுலா மற்றும் வர்த்தக பொருட் காட்சியில் சமூக வனவியல் கிளை பங்கேற்றுள்ளது. தற்போது குளக்கரை தோட்ட சமுதாய காடுகள் 10 வருட சுழற்சியில் வெட்டப்படுகின்றன. இம்மாதிரியான காடுகளை விற்ற வருவாய் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துகளுடன் 50:50 விகிதத்தில் பங்கிட்டுக் கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தில் நீண்ட கால இலக்கினை அடைவதற்கு கிராம மக்களின் பங்கேற்பிற்கான இத்திட்டத்தின் கீழ் வளர்க்கப்பட்ட காடுகளினின்று பெறப்படும் பயன்களை பொதுமக்களுடன் பகிர்ந்து கொள்வதில் பலவகை முறைகள் பரிசீலிக்கப்படுகின்றன. சமூகக் காடுகள் ஏலத் தொகையில் இதுவரை 170 பஞ்சாயத்துக்களுக்கு 57.19 லட்சம் ரூபாய் பங்காக கொடுக்கப்பட்டது.

16.12. சமூக வனவியல் திட்டத்தில் அரசினரல்லா நிலையங்களையும், தன் விருப்பார்ந்த நிறுவனங்களையும் சேர்த்துக் கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

16.13. இத்திட்டத்தின்கீழ் தனிப்பட்ட பயிற்சி, படிப்பாய்வு பயணம், சர்வதேச கருத்தரங்குகளில் பங்கேற்பு ஆகியவை ஆராயப்படுகின்றன. சமூக வனவியல் பயிற்சிக்கு இரு தொகுதி களாக அதிகாரிகள் ஆக்ஸ்போர்ட் சென்று வந்தனர். சமூக வனவியல் திட்டம் செயல்பாடு பற்றி பயிற்சிக்காக ஒரு தொகுதி அதிகாரிகள் பிலிப்பைன்ஸ், தாய்லாந்துக்கு பயிற்சிக்குச் சென்று வந்தனர். ஒரு அதிகாரி எத்தியோப்பியா சமுதாய வனவியல் கருத்தரங்கில் பங்கேற்றுள்ளார்.

16.14. சமூக காடுகள் திட்டத்தில் பயிற்சி, செயல்முறை விளக்கம், ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் பற்றி பணியாற்றும் நிலையங்களாக வன ஆராய்ச்சி மையங்கள் (வன விஞ்ஞான மையங்கள்) நிறுவப்படவிருக்கின்றன. இந்த மையங்கள் விவசாயிகளின் பயிற்சி நிலையங்களாகவும் சமூக வனவியல் பணியாளர்களுக்கு உள்ளிருப்பு பயிற்சி ( Inservice Training) திட்டத்திற்கும் பணியாற்றும் நிலையமாக விளங்கும்.

பழங்குடியினர் மேம்பாடு :

17.1. பழங்குடி மக்கள் மேற்குமலைத் தொடர்ச்சி மற்றும் கிழக்குமலைத் தொடர்ச்சி ஆகிய பகுதிகளில் மிகுதியாய் வசித்து வருகிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை காடுகளோடு மிகவும் ஒருங்கிணைந்ததாகும் தொடக்கம் முதல் அவர்களின் நலனுக்காக வனத் துறை செயலாற்றி வருகிறது. பழங்குடியினர் வனத் துறையில் பல்வேறு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். துறை வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டதைத் தவிர வனப் பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினரின் வாழ்க்கை தரத்தினை உயர்த்துவதற்காக வனத் துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. வனத் துறை மேற்கொண்டுள்ள பல்வேறு நல நடவடிக்கைகள் பற்றிய விபரம் வருமாறு :—

(1) பயிரிடுவதற்காக நிலங்கள் குத்தகைக்கு விடப் பட்டுள்ளன (1,990 எக்டேர்).

(2) பழங்குடியினர் வசிக்கும் வேலூர், தர்மபுரி, திருப்பத்தூர், சேலம் ஆகிய வனப் பகுதிகளில் கால்நடைகளை மேய்ச்சல் நிலங்களில் இலவசமாக மேய்ப்பதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.





(3) வனத் துறையில் அவர்கள் தொழிலாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். தகுதியுடைய பழங்குடியினர், வனப் பணியாளர், வனக் காப்பாளர், வனக் காவலாளர், யானைப் பாகன், காவடிகள் போன்ற அரசுப் பணிகளில் இத்துறையில் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் இலவசமாக குடியிருப்பு இல்லங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(4) வட ஆற்காடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் பழங்குடியினருக்காக 15 தொடக்கப் பள்ளிகளையும் 2 உயர் நிலைப் பள்ளிகளையும் வனத் துறை நடத்தி வருகிறது. இப்பள்ளிகளில் மொத்தம் 1,984 மாணவர்களும், 45 ஆசிரியர் களும் உள்ளனர்.

(5) பழங்குடியினரின் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு நண்பகல் உணவு, சீருடைகள், புத்தகங்கள், எழுது பலகைகள் முதலியன வனத் துறையினரால் இலவசமாக வழங்கப் படுகின்றன.

(6) பழங்குடியினரின் பிள்ளைகளுக்காக தங்கும் விடுதி வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மற்றும் மருத்துவ வசதிகள் டாப்சிலிப், முதுமலை ஆகிய பகுதிகளில் செய்து கொடுக்கப் பட்டுள்ளன. டாப்சிலிப்பில் உள்ள மருத்துவமனை ஒரு உதவி மருத்துவர் தலைமையில் இதர மருத்துவ பணியாளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. முதுமலையில் உள்ள மருத்துவ மனை மருந்தாளுநர் மற்றும் இதர பணியாளர்கள் உதவியுடன் செயல்பட்டு வருகிறது. விரைவில் இது ஒரு முழுமையான மருத்துவ மனையாக மாற்றப்படவுள்ளது.

(7) காடுபடு பொருள்கள் பழங்குடியினர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 10 சதவீத சலுகை வீதத்தில் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. சுமார் 7.98 லட்சம் ரூபாய் மதிப்புள்ள காடுபடு பொருள்கள் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

(8) பழங்குடியினருக்கு பயனளிக்கும் வகையில் 19 தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

(9) முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின்கீழ் 5 வயது முதல் 9 வயது வரை பயிலும் 1,548 பழங்குடியினரின் பிள்ளைகளுக்கு வனத்துறையால் நடத்தப்படும் எல்லா பள்ளிகளிலும் சத்துணவு வழங்கப்படுகிறது.

(10) பழங்குடியினரின் குடிசைத் தொழிலுக்குத் தேவையான மூலப் பொருட்களான மூங்கில், பிரம்பு மற்றும் சிறிய மரங்கள் முதலியவை சலுகை விலையில் வழங்கப் படுகின்றன. மேலும் விவசாயம் செய்வதற்குத் தேவையான சிறிய மரம் மற்றும் வனப் பொருட்கள் இலவசமாக பழங்குடியினருக்கு வழங்கப்படுகிறது.

17.2. பழங்குடியினர் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தில் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் இத்துறை பின்வரும் பணிகளை நிறைவேற்றி வருகிறது :—

(1) மலைத் தோட்டங்களை வளர்த்தல் (வருடத்திற்கு 1,500 எக்டேர் வரை).

(2) பழங்குடியினரின் பகுதிகளில் சாலை போடுதல் (வருடத்திற்கு 5 முதல் 10 கி.மீ வரை).

(3) பள்ளிக் கட்டிடங்கள், ஆசிரியர்களுக்கு மற்றும் பாதுகாப்பு வனப் பணியாளர்களுக்கு குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல் (வருடத்திற்கு 5 முதல் 10 வரை குடியிருப்பு இல்லங்களும் ஒன்று அல்லது இரண்டு பள்ளிக் கட்டிடங்களும்).

17.3. இவற்றைத் தவிர தென்னாற்காடு, வட ஆற்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் (வனப் பகுதிகளுக்கு வெளியே) சமூகக் காடுகள் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு குடும்பத்திற்கும் பயன் தரும் செடிகளான பழ வகைகள், புல் வகைகள், 500 நாற்றுகள் தங்களுடைய சொந்த நிலங்களில் பயிரிட, இலவசமாக கொடுக்கப்படுகின்றன.





17.4. பழங்குடியினர் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்திற்காக 1980-81 முதல் 1984-85 ஆம் ஆண்டு வரை திட்டப் பணிகளுக்காக செலவிடப்பட்ட விபரங்கள் கீழே தரப் படுகின்றன :—

| வருடம். | | சாதனை. (ரூ. லட்சத்தில்.) |
|---|---|---|
| 1980–81 | .. | 18.34 |
| 1981–82 | .. | 33.78 |
| 1982–83 | .. | 33.22 |
| 1983–84 | .. | 49.09 |
| 1984–85 | .. | 46.68 |
| 1985–86 | .. | 53.51 |
| | | (இலக்கு) |

17.5. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பழங் குடியினர் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்திற்காக (1985–90) ரூபாய் 273.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

17.6. இது தவிர ரூபாய் 227.00 லட்சம் செலவில் பழங் குடியினருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் சந்தன மர தோட்டம் எழுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**வறட்சிக்குள்ளாகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம்:**

18.1. தர்மபுரி, ராமநாதபுரம் மாவட்டங்களில் மத்திய அரசு பொறுப்பேற்கும் வறட்சிக்குள்ளாகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. காடு வளர்ப்பு, மேய்ச்சல் நில அபிவிருத்தி ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய பணியாகும். 1983-84-ல் இத்திட்டம் 35.69 லட்ச ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டது. 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 39.70 லட்சம் செலவில் இத்திட்டம் தொடர்ந்து இந்த இரு மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டது.

[1985 ஜூன் 13

**அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா :**

19.1. வண்டலூரில் நவீனமான உயிரியல் பூங்காவினை அமைக்கும் பணியினை நாம் மேற்கொண்டுள்ளோம் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இந்த நவீன பூங்காவினை 140 எக்டேர் பரப்பளவில், மூன்று கோடி ரூபாய் செலவில் அமைப்பதென திட்டமிடப்பட்டிருந்தது. இத்திட்டத்தின் முதல் கட்டத்தினை 105 லட்ச ரூபாய் திட்டத்தில் 1979-80 ஆம் ஆண்டில் துவக்கி, வேலைகள் செய்து முடிக்கப் பெற்றது. விலங்குகளுக்கு ஏற்றவாறு இயற்கைச் சூழல் கொண்ட பரப்பளவு போதுமானதாக இல்லை. மற்றும் வருங்காலத்தில் பூங்காவினை விரிவுபடுத்துதல்/ஆராய்ச்சிப் பணிகளுக்குத் தேவையான இடங்கள் ஆகியவைகளை கருத்தில் கொண்டு, 510 எக்டேர் பரப்பளவில், சுமார் 7 கோடி ரூபாய் செலவில் இப்பூங்காவினை அமைப்பதென மாற்றம் செய்யப் பட்டது. நமது நாட்டிலேயே, ஏன் தென்கிழக்கு ஆசியாவிலேயே, பெரிய விலங்ககமாக அமையக் கூடிய வகையில் இப்பூங்கா உருவாக்கப்பட்டு வருகிறது. அடுத்துள்ள குன்றுகளில் சஃபாரி ( Safari ) பூங்காவினை, இந்த விலங்ககத்தில் அமைப்பதெனவும் திட்டமிடப்பட்டுள்ளது. இயற்கை சூழலும், எழிலும், மேடு பள்ளங்கள் கொண்டதாகவும் இந்நிலப் பகுதி அமைந்துள்ளது. மேலும் இப்பகுதியில் நிழல்மர வளர்ச்சி பணியும் செய்யப்பட்டுள்ளது.

19.2. 1982–83 ஆம் ஆண்டில், வனவிலங்குகள் குறிப்பாக நீர்யானை, வரிக்குதிரை, சிறுத்தை, ஆப்பிரிக்கா சிங்கம், யானை, புள்ளிமான் மற்றும் சில பறவையினங்கள், சென்னை மாநகராட்சி விலங்ககத்திலிருந்து இப்புதிய நவீன பூங்காவிற்கு மாற்றப்பட்டுள்ளன. பறவையினங்களும், விலங்கினங்களும், காடுகளில் இருந்து பிடிக்கப்பட்டும், மற்றைய விலங்ககங்களி லிருந்து மாற்றுதல் மூலமாகவும், இப்பூங்காவில் சேர்க்கப்பட்டு வருகின்றன. சமீபத்தில் சுமார் 3.15 லட்சம் ரூபாய் செலவு அளவில் அஸ்ஸாம் மாநிலத்திலிருந்து, ஒரு ஆண் காண்டாமிருகம் இப்பூங்காவிற்கென வாங்கப்பட்டுள்ளது.



1985 ஜூன் 13]

19.3. விரிவான, மற்றும் இயற்கையான சூழலில் இப்பூங்காவினுள் விலங்குக் கூண்டுகள் அமைக்கப்பட்டுள்ள மையால், சில விலங்கினங்கள் குறிப்பாக தாமின், இளமான், புள்ளிமான், கடமான், வெளிமான் மற்றும் சாரஸ் கிரேன், பறவையினங்கள் தென் அமெரிக்க பஞ்சவர்ணக் கிளி, இப்பூங்காவிற்கு வந்த பின்னர் தன் இனத்தை பெருக்கியுள்ளது. தற்பொழுது 205 மிருகங்கள் (28 வகைகள்), 353 பறவைகள் (61 இனங்கள்), 16 ஊர்வன வகையை சேர்ந்த பிராணிகள் இப்பூங்காவில் வைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது. கடந்த ஓராண்டில் 168 பிராணிகள் புதியதாக சேர்க்கப் பட்டுள்ளது.

19.4. இன்னமும் இப்பூங்கா திறக்கப்படாமல் இருந்த போதிலும், அதிகமான மக்கள் கூட்டத்தினை கவர்ந்து வருகிறது. விடுமுறை நாட்களில் 3,000–5,000 மக்களும், ஏனைய நாட்களில் சராசரி 1,000 மக்களும் சிறுவர்களும் குறிப்பாக பள்ளி வண்டிகளிலும் ஊர்திகளிலும் வந்து இப்பூங்காவினை கண்டு களிக்கின்றனர்.

19.5. இப்பூங்காவிற்கென, இந்தியாவில் உள்ள பகுதிகளி லிருந்து விலங்கு இனங்களை, மாற்றம் செய்யும் முறையிலோ அல்லது விலைக்கோ பெறுவது மட்டுமன்றி, யூகோஸ்லேவியாவி லிருந்தும் விலங்குகளை மாற்றம் செய்து பெறும் முறையினைப் பற்றிய திட்டம் ஆய்வில் இருந்து வருகிறது.

19.6. மாமரம், கொய்யா, ஆலமரம், தென்னை, போன்ற பழவகை இன மரங்கள் பல இப்பகுதியில் வளர்க்கப்பட்டு வருகின்றன. நிழல் மற்றும் அழகு தரும் மர இனங்களும் நடப்பட்டுள்ளன. நடப்பட்ட மரங்களில் பெரும்பாலானவைகள் ஊன்றி வளரத் தொடங்கி விட்டன. கடந்த மார்ச் 1985 வரை 320.90 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. வரும் 1985-86 ஆம் ஆண்டில் 112.31 லட்சம் ரூபாய் திட்ட செலவு செய்வதென வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

[1985 ஜூன் 13

19.7. இவ்விலங்ககத்தினை, மறைந்த நம் அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய தலைவர் அறிஞர் அண்ணா அவர்களின் நினைவாக, அவருடைய பெயரில் "அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா" என அழைப்பதென திட்டமிடப்பட்டுள்ளது. இப்பூங்காவினை, விரைவில் நமது மதிப்பிற்குரிய மாண்புமிகு முதல்வர் திறந்து வைக்க இருக்கிறார்கள்.



1985 ஜூன் 13]

திட்டப் பணிகள் நிறைவேற்றுதல்:

20.1 1984-85-ஆம் ஆண்டு ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தின் கடைசி ஆண்டாகும். ஆறாம் திட்ட காலத்தில் வனத் துறைக்கு ஒப்பளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு 57.00 கோடி ரூபாய். ஆறாவது ஐந்தாண்டு திட்டகால முடிவில் 63.32 கோடி ரூபாய் பல்வேறு பணிகளுக்காக செலவிடப்பட்டது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கும் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கும் வன மேம்பாட்டுத்திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் செலவு பற்றிய விபரம் வருமாறு;—

| வரிசை எண் | தலைப்பு | ஆறாவது ஐந்தாண்டு திட்ட ஒதுக்கீடு (1980-85) | ஆறாவது ஐந்தாண்டு திட்ட சாதனை (1980—85) | 1984—85 சாதனை. | 1985-86 இலக்கு | ஏழாவது ஐந்தாண்டு திட்ட உத்தேச ஒதுக்கீடு. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | | (ரூபாய் லட்சத்தில்) | | |
| 1 | மாநிலத் திட்டங்கள் | 5,700.00 | 6,332.47 | 1,727.69 | 1,858.51 | 11,598.00 |
| 2 | மைய அரசுத் சார்புத் திட்டங்கள் | .. | 1,256.75 | 368.62 | 286.17 | 1,433.80 |
| | மொத்தம் .. | | 7,589.22 | 20,96.31 | 2,144.68 | 13,033.80 |

20.2. 1985-86 ஆம் ஆண்டில் மாநில மற்றும் மைய அரசுத் திட்டங்களின்கீழ் மொத்தம் 36,170 எக்டேர் நிலப்பரப்பில் தோட்டமெழுப்பவும், சாலை ஓரங்களில், கால்வாய் கரைகள் மற்றும் இருப்புப்பாதை ஓரங்களில் மொத்தம் 1,732 கி.மீ. அளவிற்குத் தொடர் தோட்டங்களும், அத்துடன் 353 லட்சம் மரக் கன்றுகள் எழுப்பி பொது மக்களுக்கு வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. வனவியல் நீண்ட காலம் பயன் தரும் ஒரு நெடுநோக்குத் திட்டங்கொண்டது வனத் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட பராமரிப்பு பணிகளினால் முந்தைய திட்டக் காலங்களில் பல திட்டங்களின் மூலம் செயல்படுத்தப் பட்ட விரைத்து வளரும் இனங்களான தைல மரங்கள், பட்டை மரங்கள், கருவேல மரங்கள் போன்றவை பயன்தரத் தொடங்கி யுள்ளன.

20.3. மாநிலத் திட்டக் குழுவின் செயற்குழு முடிவு செய்த வகையில், மைய அரசின் சார்புத் திட்டங்களுக்கான மாநில அரசின் பங்குடன் சேர்த்து ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1985-90) மாநில அரசின் வனத் திட்டங்களுக்கு 100.70 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு உள்ளது. இது தவிர, மண்வளப் பாது காப்புத் திட்டங்களுக்கென ரூ. 15.28 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 1984–85 ஆம் ஆண்டிற்கான சாதனைகளும், 1985–86 ஆம் ஆண்டிற்கான சில முக்கிய திட்டங்களும்.

**21.1. வனச் செயல் திட்டங்கள் :**

செயல் திட்டங்கள் வனங்களை நிர்வகிப்பதற்கு அடிப்படை யாக அமைகின்றன. செயல் திட்டங்கள் ஒவ்வொரு ஆண்டும் தோட்டம் எழுப்புதல், வெட்டுதல் மற்றும் இதர வகையான வனக் கோட்டங்கள் நிர்வாகம் குறித்த வரையறுக்கப்பட்ட செயல்முறைகளை கொண்டுள்ளன. இத்திட்டம் வனச் செயல் திட்ட அமைப்பை பலப்படுத்தவும், செயல் திட்டங்கள் தயா ரிப்பதை நவீனப்படுத்த அத்தியாவசிய கருவிகள் வாங்கவும் வகை செய்கிறது. 1984-85 ஆம் ஆண்டில் ஆன செலவு 0.78 லட்சம் ரூபாய். ஆறாவது திட்டக் காலத்தில் சாதனை 1.94 லட்சம் ரூபாய். ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடு 35.00 லட்சம் ரூபாய், 1985-86 ஆம் ஆண்டில் இத்திட்டம் 8.64 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட உள்ளது. தற்போதுள்ள





வனச் செயல் திட்ட மண்டலத்தைச் சீரமைத்து ஒரு முதுநிலை அலுவலரின் முழுக் கவனத்தையும் செயல்திட்டங்கள் தயாரித்தல், புதுப்பித்தல் ஆகிய பணிகளுக்குப் பிரத்தியேகமாகச் செலுத்தும் வகையில் மேலும் ஒரு வனச் செயல் திட்ட மண்டலம் அமைக்கவும், வேலூரில் கூடுதலாக ஒரு வனச் செயல் திட்ட கோட்டம் அமைத்து அதன் மூலம் ஒப்புதல் வழங்கப்பட்ட செயல் திட்டங்களை குறிப்பிட்ட கால வரம்புக்குள் தயாரிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**21.2. வன ஆராய்ச்சி :**

வனவியலின் பல்வேறு நிலைகளை ஆராய்ந்து பரிசோதனை களின் மூலம், பல்வேறு தட்பவெப்ப நிலைகளுக்கும் மண் வளத்திற்கும் ஏற்ப பொருத்தமான மர வகைகள் மற்றும் தொழில் நுட்ப உத்திகளை கண்டறிவதும், இவ்வாராய்ச்சிப் பிரிவை விரிவுபடுத்துவதும் இத்திட்டத்தின் குறிக்கோளாகும். 1984-85-ம் ஆண்டில் இத்திட்டத்திற்கு 15.92 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டது. ஆறாவது திட்ட காலத்தில் சாதனை ரூ. 46.37 லட்சம் ரூபாய் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 340.00 லட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அதிகமாக நிதி ஒதுக்கப் பட்டதன் காரணம், தற்போதுள்ள ஆராய்ச்சிப் பிரிவை பயிற்சி, ஆராய்ச்சி கருவி மற்றும் விரிவாக்கம் Tree என்ற ஒரு அமைப்பின்கீழ் ஒருங்கிணைத்து செயலாற்ற உத்தேசிக்கப் பட்டுள்ளது. இது ஒரு முக்கியமான திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் சேலம், திருச்சி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் ஆராய்ச்சி மையங்கள் அமைக்கப்படவுள்ளன. வன ஆராய்ச்சிக்கென கணிசமான அளவு தொகை இவ்வாறு ஒதுக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

1985-86-ல் இத்திட்டம் செயல்பட மொத்தம் ரூ. 21.97 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**21.3. வன வள ஆய்வு :**

காடுகளிலுள்ள இயற்கை வன ஆதாரங்களைப் பயனுள்ள அறிவார்ந்த முறையில் திட்டமிட்டு பயன்படுத்தும் பொருட்டு விரிவான பட்டியல் ஒன்றை தயாரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். வளர்ந்து வரும் மரங்களைக் குறித்த மேலும் நம்பத்தக்க வகையிலான பட்டியலைப் பெறுவதும் இதன் நோக்கமாகும்.

1984-85 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 1.19 லட்ச ரூபாய் செலவில் கணக்கெடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்திட்டத்தின் கீழ் மொத்தச் செலவு 3.42 லட்சம் ரூபாய் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1985-90) 25.00 லட்சம் ரூபாய் செலவில் இத்திட்டத்தை நிறைவேற்ற கருதப்பட்டுள்ளது. நிலப்படம் வரையும் வேலையும் ( C rtogrephy ) மேற்கொள்ளப்படும்.

**21.4. திட்டம் தயாரித்தல், ஆய்வு செய்தல், கண்காணித்தல் மற்றும் புள்ளிவிவரம் சேகரித்தலுக்கான அமைப்பு ஏற்படுத்துதல் ( FEMA )**

காடுகள் உற்பத்தியின் முக்கிய நோக்கம் வனவள ஆதாரங்களை ஏற்படுத்துதல், பராமரித்தல் மற்றும் பயன்படுத்துதலாகும். வன வளர்ச்சியின் அளவானது வளர்ச்சிக்குத் தகுந்த இடங்களைத் தேர்ந்தெடுத்தல், அப்பகுதிக்குத் தகுந்த திட்டங்களைத் தயாரித்தல் ஆகிய பணிகளை எவ்விதம் செயலாக்குகிறோம் என்பதைக் கொண்டே நிர்ணயிக்கப்படும். களப்பணியாளர்கள் தங்களுடைய பலதரப் பட்ட பணிகளுக்கிடையே இந்த விசேடமான வேலைக்குத் தங்களுடைய முழுக் கவனத்தையும் திருப்ப இயலாதிருக்கிறது. திட்டம் தயாரிப்பதற்கான திறமையும், நிர்ணயிக்கப்பட்ட இலக்குமுடைய தனிப்பட்ட அமைப்பு தக்க பணியாளர்களுடன் ஏற்படுத்தப்பட்டாலன்றி இத்திட்டமிடும் வேலை சரிவரச் செய்ய இயலாது. ஆகவே, மேற்கண்ட இலக்குகளை அடைவதற்காக ஒரு தனி அமைப்பை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்திட்டத்திற்காக 90.00 லட்சம் ரூபாய் செலவிட கருதப்பட்டுள்ளது. 1985–86 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 7.79 லட்சம் ரூபாய் செலவு செய்யக் கருதப்பட்டுள்ளது.

**21.5. ரப்பர் தோட்டத் திட்டம் :**

ரப்பர் தோட்டங்கள் எழுப்பும் திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் துவக்கப்பட்டு நடைபெற்று வரும் திட்டமாகும். ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு 102.69 லட்சம் ரூபாய் 1—10—1984 முதல் நாகர்கோயிலில் ஏற்படுத்தப்பட்டுள்ள அரசு ரப்பர் கழகம், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசு ரப்பர் தோட்டங்களை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுள்ளது.

**21.6. கூழ் மரத் தோட்டங்கள் :**

மரக்கூழை அடிப்படையாகக் கொண்ட காகிதம், ரயான் போன்ற தொழில்களுக்கு தேவைப்படும் மூலப் பொருட்களை வழங்குவதற்காக விரைவில் வளரும் மர வகைகளை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1984-85 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 70.35 லட்சம் ரூபாய் செலவில் சுமார் 1,673 எக்டேர் பரப்பில் தோட்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டது. மேலும் இடை நடுதல் 2,183 எக்டேரிலும் தீவிரப் பராமரிப்புப் பணி 840 எக்டேரிலும் செய்யப்பட்டன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 10,429 எக்டேர் பரப்பில் தோட்டம் எழுப்ப 280.47 லட்ச ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1985-90) இத்திட்டத்தைச் செயல்படுத்த 400.00 லட்ச ரூபாய் செலவு செய்ய கருதப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 65.55 லட்ச ரூபாய் செலவில் 1,500 எக்டேர் பரப்பில் தோட்டங்கள் எழுப்புதல் மற்றும் தீவிர பராமரிப்பு வேலைகள் 2,200 எக்டேரிலும் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**21.7. தேக்கு மற்றும் செம்மரங்கள் :**

நமது மாநிலத்தின் வெட்டு மரத் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு தகுந்த இடங்களில் தேக்கு, செம்மரம் மற்றும் ஏனைய கடின மர வகைகள் உற்பத்தி செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1984-85 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 10.27 லட்சம் ரூபாய் செலவில் 493 எக்டேர் பரப்பில் தோட்டம் உற்பத்தி செய்யப்பட்டது. ஆறாவது திட்ட காலத்தில் 2,348 எக்டேர் பரப்பில் தோட்டம் எழுப்ப 39.33 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1985-90) இத்திட்டத்தை செயல்படுத்த 100.00 லட்சம் ரூபாய் செலவு செய்யக் கருதப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 8.23 லட்சம் ரூபாய் செலவில் 260 எக்டேர் பரப்பில் தோட்டம் எழுப்ப கருதப்பட்டுள்ளது.

**21.8. மென் மரம் :**

மென் மரம் வளர்க்கும் திட்டம் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ள திட்டங்களில் ஒன்றாகும். தீப்பெட்டி தயாரிக்கும் தொழில் தமிழ் நாட்டின் முக்கியமான சிறு தொழிலாகும். இத்தொழிலுக்கு வேண்டிய மரங்களைப் பெறுவதற்கு இம்மாநிலம் ஏனைய மாநிலங்களை நம்பியுள்ளது. ஆகவே, எங்கெங்கு இவ்வகை மரங்களை பயிரிட தட்ப வெப்ப நிலை சாதகமாக உள்ளதோ அவ்விடங்களில் மென் மரங்களை வளர்க்க கருதப்பட்டுள்ளது.

1984-85 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 2.25 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 160 எக்டேர் பரப்பில் தோட்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 639 எக்டேர் பரப்பில் தோட்டம் எழுப்ப 8.01 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1985-90) இத்திட்டத்தை செயல்படுத்த 20.00 லட்சம் ரூபாய் செலவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 2.35 லட்சம் ரூபாய் செலவில் 150 எக்டேர் பரப்பில் புதிய தோட்டங்கள் எழுப்பப்படவுள்ளது.



**21.9. மிலாறு மரத் தோட்டங்கள் :**

ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ள திட்டங்களில் மிலாறு மரத் தோட்டங்கள் எழுப்பும் திட்டமும் ஒன்றாகும். தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருட்களை வழங்குவதற்காக நீலகிரியிலும் பழனி மலைத் தொடர் காடுகளிலும் மிலாறு மரங்களை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தோல் பதனிடுவதற்கு தேவைப்படும் படிகப் பொருளை எடுப்பதற்கு மிலாறு மரப் பட்டையும், ரேயான் கூழ் தயாரிப்பதற்கு மிலாறு மரமும் பயன்படுத்தப்படுகிறது.

1984-85 ஆம் ஆண்டில் 6.58 லட்ச ரூபாய் செலவில் 1,306 எக்டேர் பரப்பில் தோட்டம் எழுப்பப்பட்டது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 24.92 லட்சம் ரூபாய் செலவில் 5,301 எக்டேரில் தோட்டங்கள் எழுப்பப்பட்டது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்திட்டத்தினை 37.00 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்த கருதப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 9.06 லட்சம் ரூபாய் செலவில் 600 எக்டேரில் தோட்டம் எழுப்பவும், 1,700 எக்டேர் தோட்டங்களில் அடர்த்தி குறைத்தல் வேலை செய்யவும் கருதப்பட்டுள்ளது.

**21.10. விறகு மரத் திட்டம் :**

விறகு மரத் தோட்டங்கள் உற்பத்தி செய்யும் திட்டம் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள திட்டங்களில் ஒன்றாகும். பெரு நகரங்கள், மற்றும் நகரங்களைச் சார்ந்த பகுதிகளிலும் படுகை நிலங்களிலும் உள்ள காட்டுப் பகுதிகளில் விறகு மரங்களை எழுப்பி அந்தப் பகுதி மக்களின் எரிபொருள் தேவையை பூர்த்தி செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இத்திட்டத்தின் கீழ் 650.00 லட்சம் ரூபாய் செலவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

1984-85 ஆம் ஆண்டில் 3,852 எக்டேரில் தோட்டங்களில் எழுப்ப 70.44 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டது. ஆறாவது ஐந்தாண்டு திட்ட முடிவில் 346.40 லட்சம் ரூபாய் செலவில் 23,743 எக்டேர் பரப்பில் விறகு மரத் தோட்டங்கள் வளர்க்கப்பட்டது.

1985-86 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை 73.78 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தி 3,575 எக்டேர் பரப்பில் தோட்டம் எழுப்பவும், தற்போதுள்ள தோட்டங்களில் தீவிரப் பராமரிப்புப் பணி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**21.11. சந்தன மரத் தோட்டங்கள் :**

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வன வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ள திட்டங்களில் சந்தன மரத் தோட்டம் எழுப்பும் திட்டமும் ஒன்றாகும். சந்தனத் தோட்டப் பரப்பை அதிகப்படுத்துவது மற்றும் தீவிர பராமரிப்பு வேலைகள் மூலம் இயற்கை சந்தன வளர்ச்சியை ஊக்குவதற்கு தமிழ் நாட்டின் சந்தன மர வளத்தை மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1984-85 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் 25.55 லட்சம் ரூபாய் செலவில் 108 எக்டேர் பரப்பில் தோட்டம் எழுப்பப்பட்டது. புதரில் விதைக்கும் வேலை 880 எக்டேரில் செய்யப்பட்டது. ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் 155.42 லட்சம் ரூபாய் செலவில் 815 எக்டேர் பரப்பில் புதிய தோட்டம் எழுப்பப்பட்டது. மண்வளப் பணி 50 எக்டேரில் செய்யப்பட்டது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 227.00 லட்சம் ரூபாய் செலவில் சந்தன மரத் தோட்டம் ( Sandal Estates) எழுப்ப திட்டமிடப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 23.16 லட்சம் ரூபாய் செலவில் 60 எக்டேரில் இயற்கை சூழ்நிலை பராமரிப்பு முறையில் தோட்டம் எழுப்புதல் 473 எக்டேரில் புதர்களில் விதைக்கும் வேலையும் செய்யக் கருதப்பட்டுள்ளது.



**21.12. புயல் தடுப்பு மரம் வளர்ப்புத் திட்டம் :**

தமிழ்நாட்டின் கடற்கரையோரங்கள் நெடுகிலும் புயல் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யும் திட்டம் மத்திய அரசின் இசைவு பெற்ற ஒரு திட்டமாகும். புயல் காற்றைத் தடுக்கும் அரணாக அமைவதற்காகவும், புயலால் விளையும் சேதங்களைக் குறைக்கவும், செங்கற்பட்டு, தென்னாற்காடு, தஞ்சாவூர், ராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி ஆகிய கரையோர மாவட்டங்களில் வருவாய்த் துறை மற்றும் வனத் துறை நிலங்களில் மரங்களை வளர்க்க இத்திட்டம் வகை செய்கிறது.

1984-85 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 1.04 லட்சம் ரூபாய் செலவில் 19 எக்டேர் பரப்பில் தோட்டம் எழுப்பப்பட்டது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் இத்திட்டத்தின் கீழ் 21.64 லட்சம் ரூபாய் செலவில் 1,125 எக்டேர் பரப்பில் தோட்டம் எழுப்பப்பட்டது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1985-90) 1,000 எக்டேரில் தோட்டம் எழுப்ப 20.00 லட்சம் ரூபாய் செலவு செய்ய திட்டமிடப் பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 2.47 லட்சம் ரூபாய் செலவில் பழைய தோட்டங்களைப் பராமரிப்பதுடன் புதியதாக 30 எக்டேரில் தோட்டம் எழுப்பவும் கருதப்பட்டுள்ளது.

**21.13. தரம் குன்றிய காடுகளைப் புதுப்பித்தல்:**

அழிந்த காடுகளை மீண்டும் வளர்ப்பதற்கான திட்டம் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள திட்டங்களில் ஒன்றாகும். புதர் காடுகளின் உற்பத்தித் திறனைப் பெருக்கவும், விறகு மரங்கள், சிறு வெட்டு மரங்கள் ஆகியவற்றிற்கு ஏற்பட்டுள்ள தேவையை நிறைவு செய்யவும், அழிந்த காடுகள் அனைத்திலும் மரங்களை மீண்டும் வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1984-85 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் 57.33 லட்சம் ரூபாய் செலவில் 3,117 எக்டேரில் தோட்டங்கள் எழுப்பப்பட்டன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 257.90 லட்சம் ரூபாய் செலவில் 15,502 எக்டேரில் தோட்டம் எழுப்பப்பட்டது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் 450.00 லட்சம் ரூபாய் செலவு செய்து 15,000 எக்டேரில் தோட்டம் எழுப்ப திட்டமிடப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 55.18 லட்சம் ரூபாய் செலவில் 2,500 எக்டேர் பரப்பில் தோட்டம் எழுப்ப கருதப்பட்டுள்ளது.

**21.14. அரக்கு உற்பத்தி :**

பலவகை உபயோகங்களுக்கு அரக்கு மிகவும் தேவையானதாலும் எளிதில் கிடைக்காமலும் உள்ளது. மதுரை மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள குசும் மரங்களில் அரக்குப் பூச்சியை வளர்த்து அதிகபட்ச அரக்குக் குச்சிகளை தயாரிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். அரசுக்குக் குச்சிகளைத் தயாரிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தை ஏழாவது ஐந்தாண்டுக் காலத்தில் எவ்விதம் செயலாக்கலாம் என ஆராய்ந்து தக்க திட்டங்கள் தயாரிக்கப்படும். இத்திட்டத்திற்கு அடையாள ஒதுக்கீடாக 0.01 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**21.15. காடுபடு சிறு பொருட்கள்:**

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வன வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ள திட்டங்களில் காடுபடு சிறு பொருள் மர உற்பத்தித் திட்டமும் ஒன்றாகும்.

புளி, கடுக்காய், சீயக்காய் போன்ற மதிப்புள்ள பொருட்களின் மரங்களை பெருமளவில் வளர்ப்பதன் மூலம் வருவாயைப் பெருக்க சாத்தியம் உள்ளதால் இந்த வகை காடுபடு பொருள்களை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1984-85 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 26.86 லட்சம் ரூபாய் செலவில் 1,038 எக்டேர் பரப்பில் தோட்டம் எழுப்பப் பட்டன. 5 கி. மீட்டரில் சாலை ஓரத் தோட்டங்கள் வளர்க்கப் பட்டது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 95.45 லட்சம் ரூபாய் செலவில் 5,441 எக்டேரில் இவ்வனத் தோட்டங்கள் எழுப்பப்பட்டன.





ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இவ்வகைத் தோட்டங்களை வியாபார நோக்கோடு பராமரிக்கவும் வன இயல் அடிப்படையில் உற்பத்தியைப் பெருக்கவும் 3,750 எக்டேர் பரப்பில் இவ்வகைத் தோட்டங்களை பண்ணை முறையில் ஏற்படுத்த 104.95 லட்சம் ரூபாய் செலவில் திட்டம் தீட்டப் பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 29.58 லட்சம் ரூபாய் செலவில் தர்மபுரி மாவட்டத்தில் 150 எக்டேர் பரப்பில் கத்தாழை பயிரிடுவது உள்பட 660 எக்டேர் பரப்பில் தோட்டங்கள் எழுப்ப கருதப்பட்டுள்ளது.

இந்த நிதி ஒதுக்கீடு நூற்றிஇருபத்து ஐந்து (125) எக்டேர் பரப்பில் 5 எண்ணெய் வித்து பண்ணைகளும், 125 எக்டேர் பரப்பில் 5 புளியமரப் பண்ணைகளும் மற்றும் 125 எக்டேர் பரப்பில் 5 பழ மரப் பண்ணைகளும் ஏற்படுத்துவதற்குண்டான தொகையும் உள்ளடக்கியதாகும். பண்ணை முறையில் சிறு மகசூலை சீரிய முறையில் நிர்வகிக்க இந்த ஏற்பாடு செய்யப் படுகிறது.

**21.16. சாலைகள் :**

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்களுள் 'சாலைகள்' திட்டமும் ஒன்றாகும்.

வன உற்பத்திப் பொருட்களை எளிதாக எடுத்துச் செல்வதற்காக போக்குவரத்து வசதிக்கென காடுகளில் புதிய சாலைகள் அமைக்கவும், ஏற்கெனவே இருக்கும் சாலைகளைப் பழுதுபார்த்து சீர்படச் செய்வதுமே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1984-85-ல் இத்திட்டம் 26.44 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மொத்தச் செலவு 133.30 லட்சம் ரூபாய்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்திட்டத்திற்கு 150 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[1985 ஜூன் 13

1985-86-ல் இத்திட்டம் 149.84 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீட்டில் நெடுஞ்சாலைத் துறையினரால் மதுரை மாவட்டத்தில் கடமலைக் குண்டு சாலை அமைக்கத் தேவைப்படும் ரூபாய் 1 கோடியும் அடங்கும்.

**21.17. வன விளம்பரத் திட்டம் :**

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 'காடுகள்' தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்ட திட்டங்களில் வன விளம்பரத் திட்டமும் ஒன்றாகும்.

பொது மக்களின் நல்வாழ்க்கைக்கு காடுகள் எவ்வாறு பயன்படுகிறது என்பதையும் வன விலங்குகள், காடுகள் ஆகியவற்றைப் பாதுகாக்கும் அவசியத்தையும் பொது மக்கள் மனதில் பதிய வைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1984-85-ல் இத்திட்டம் 2.02 லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 7.35 லட்சம் ரூபாய் இத்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்டது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் விளம்பரம் மற்றும் பிரச்சாரத்திற்காக 65 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1985-86-ல் இத்திட்டம் 1.11 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

**21.18. வனங்களை ஒருங்கிணைத்தல் :**

முன்னாள் ஜமீன் வனப் பகுதிகளை ஆய்வு செய்து 1882 வருட தமிழ்நாடு வனச் சட்டத்தின்கீழ் சேமக் காப்பு வனங்களாக அமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1984-85-ல் இத்திட்டம் 11.14 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 27.07 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், இத்திட்டத்திற்கு 50 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1985-86-ல் இத்திட்டம் 7.93 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.



1985 ஜூன் 13]

**21.19. வனப் பாதுகாப்பு :**

காடுகளை, தீ விபத்து மற்றும் காடுபடு பொருட்களைக் களவாடல் முதலியவற்றிலிருந்து காக்க, வனப்பாதுகாப்பு அமைப்பினைச் சீரமைத்தலே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1984-85-ல் இத்திட்டம் 14.90 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டது. ஆறாவது திட்ட காலத்தில் 88.09 லட்சம் ரூபாய் இத்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்டது.

ஏழாவது திட்ட காலத்தில் (1985-90) இத்திட்டத்திற்கு 120 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1985-86-ல் இத்திட்டம் 1.96 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

**21.20. தொழிலாளர், பணியாளர் நலத் திட்டம் :**

"பணியாளர் மற்றும் தொழிலாளர் நலங்கள்", "மர அறுப்பும், வனப் பயன்பாடும்" மற்றும் "கட்டிடங்கள் கட்டுதல்" போன்ற திட்டங்களின் கீழ் காடுகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள், பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல், கம்பளிகள், யானைகளுக்குச் சங்கிலி போன்றவைகள் வாங்குதல் மேற்கொள்ளப்படுகிறது.

1984-85-ல் இத்திட்டங்களின் கீழ் 30.50 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. ஆறாவது திட்ட காலத்தில் செலவிடப்பட்ட மொத்த தொகை 128.24 லட்சம் ரூபாய். ஏழாவது திட்டக் காலத்திற்கு 215 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1985-86-ல் இத்திட்டங்கள் 17.01 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

**21.21. இயற்கைப் பாதுகாப்புத் திட்டம் :**

வன விலங்குகள் அதிகமுள்ள காட்டுப் பகுதிகள் எல்லை வரையறை செய்து 6 வனவிலங்கு புகலிடங்களாகவும் ஒரு தேசிய பூங்காவாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த புகலிடங்கள் மற்றும் தேசிய பூங்காவின் மொத்த பரப்பளவு 2,17,774 எக்டேர்.

(4) முகுர்தி (நீலகிரி தார்) புகலிடம்.
(5) முண்டந்துறை வன விலங்கு புகலிடம்.
(6) ஆனைமலை வன விலங்கு புகலிடம்.
(7) கிண்டி தேசிய பூங்கா.
(8) முதலை வளர்ப்புப் பண்ணை.
(9) மன்னார் வளைகுடா பகுதியில் கடற்பகுதி தேசிய பூங்கா அமைத்தல்.
(10) கிண்டியில் நிரந்தர பொருட்காட்சி.
(11) சேலம் மாவட்டம் குரும்பப்பட்டி மனமகிழ் மன்றம்.
(12) அமிர்தியில் சிறிய உயிரியல் பூங்கா.

22.2. களக்காடு சிங்கவால் குரங்கு புகலிடம் :

திருநெல்வேலி மாவட்டத்தில் இந்திய அரசு உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின்படி இயற்கை பாதுகாக்கும் முறைகள் நீர் பிடிப்பிற்காக சிறிய அணைகள், மிருக உணவிற்கான பயிர்கள் வளர்த்தல் சிப்பந்திகளின் குடியிருப்பு மற்றும் பாதை அமைத்தல் முதலிய வேலைகள் செய்யப்படுகின்றன. 1984-85-ல் இத்திட்டம் 4.11 லட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டது. ஏழாவது திட்டக் காலத்தில் 50 லட்சம் ரூபாய் தோராயமாக இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

1985-86-ல் இத்திட்டம் 10.00 லட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

22.3. கோடிக்கரை வனவிலங்கு புகலிடம் :

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து இது இந்திய அரசின் நிதி உதவி பெறும் திட்டமாக நிறைவேற்றப்படுகிறது. 1985-90 வரையுள்ள 7-வது திட்டத்திலும் சேர்க்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் தஞ்சை மாவட்டத்தில் நிறைவேற்றப்படுகிறது. அபிவிருத்தி வேலைகளான பாதை அமைத்தல், தண்ணீர் வசதிகள் செய்தல், தாவர உணவுப் பயிர்கள் வளர்த்தல்,



சிப்பந்திகள் குடியிருப்பு முதலிய வேலைகள் செய்யப்படுகின்றன. 1984-85-ல் இந்தத் திட்டம் 1.10 லட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டது. 6-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மொத்தம் 5.07 லட்ச ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. 7-வது திட்ட காலத்தில் மொத்தம் 12 லட்ச ரூபாய் செலவு செய்ய தற்காலிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. 1985-86-ல் பகுதி-1 திட்டமாக ரூ. 2.10 லட்சத்தில் நிறைவேற்றப்பட உள்ளது.

இது தவிர 1985-86-ம் ஆண்டில் பகுதி-11 திட்டத்தில் பறவைகள் மற்றும் விலங்குகளைப் பாதுகாக்கவும் அபிவிருத்தி செய்யவும், கூடுதல் பணியாளர்கள் நியமிக்கவும் 1.50 லட்சம் ரூபாய் செலவில் திட்டமும் உள்ளது.

22.4. முதுமலை வன விலங்கு புகலிடம் :

இதுவும் 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து இந்திய அரசின் நிதி உதவி பெறும் திட்டமாக நிறைவேற்றப்படுகிறது. 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் இது சேர்க்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் இது செயல்படுத்தப்படுகிறது. அபிவிருத்தி வேலைகளான தாவரவியல் மற்றும் விலங்கியல் அபிவிருத்தி, பாதை அமைத்தல் தண்ணீர் வசதிகள் ஏற்படுத்தல், சிப்பந்திகள் குடியிருப்பு செய்யப்படுகின்றன. 1984-85-ல் இத்திட்டம் 12.95 லட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப் பட்டது. 6-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 20.16 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. 7-வது திட்டக் காலத்தில் 50 லட்சம் ரூபாய் தற்காலிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. 1985-86-ல் இத்திட்டத்திற்கு 11.00 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

22.5. முகுர்தி (நீலகிரி தார்) புகலிடம் :

நீலகிரி மாவட்டத்தில் 1982-83-ல் வரையாடு ( Nilgiris Tah பாதுகாப்பிற்காக முகுர்தி புகலிடம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் அபிவிருத்தி வேலைகளுக்காக 3.13 லட்ச ரூபாய் செலவிடப்படும்.

1984-85-ல் இந்தத் திட்டம் 1.10 லட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டது. 7-வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 20 லட்சம் ரூபாய் தோராயமாக இந்த திட்டத்திற்காக ஒதுக்கப் பட்டுள்ளது.

**22.4. முதுமலை வன விலங்கு புகலிடம்:**

1984-85-ல் இந்தத் திட்டம் 0.58 லட்சம் ரூபாய் செலவில் 6-வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இதற்காக 0.64 லட்ச ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. 7-வது திட்ட காலத்தில் இது திட்டம் அல்லாத இனத்தில் செயல்படுத்தப்படும்.

**22.13. அமிர்தியில் உயிரியல் பூங்கா:**

வட ஆற்காடு மாவட்டத்தில் அமிர்தி என்ற இடத்தில் ஒரு சிறிய உயிரியல் பூங்காவினை மேம்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது.

**23.1. வைகை நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும் மேட்டூர் ஸ்டான்லி நீர்ப் பிடிப்பு பகுதிகளிலும் மண்வளப் பாதுகாப்பு திட்டங்கள்:**

வைகை நீர்த் தேக்கம் மற்றும் மேட்டூர் ஸ்டான்லி நீர்த் தேக்க நீர்ப்பிடிப்பு பகுதிகளில் ஏற்படும் மண் அரிப்பை குறைப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 1983-84 ஆம் வருடம் முடிய மேற்கூறிய நீர்த் தேக்க பகுதிகளில் 211.17 லட்ச ரூபாய் செலவில் சுமார் 21,013 எக்டேர் நிலப் பரப்பில் காடு வளர்ப்புப் பணிகளும் மண்வள பாதுகாப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. 1984-85 ஆம் வருடத்தில் மேற்கூறிய இரு நீர்த் தேக்க நீர்பிடிப்பு பகுதிகளிலும் 79.52 லட்ச ரூபாய் செலவில் சுமார் 2,710 எக்டேர் நிலப் பரப்பில் காடு வளர்க்கவும் மற்றும் மண்வளப் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

1985-86 வருடத்தில் மேற்கூறிய இரு நீர்த்தேக்க நீர்பிடிப்பு பகுதிகளிலும் 70,83 லட்சம் ரூபாய் செலவில் 41.00 எக்டேர் பரப்பில் காடு வளர்ப்பு பணிகளை மேற்கொள்ளவும் மண்வளப் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ளவும் உத்தேசிக்கப் பட்டுள்ளது.



**24.1. மலைப்பகுதி மேம்பாடு திட்டம்;**

இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்படுகிறது. வாழ்க்கைக்கு உதவக்கூடிய முறையிலும், காகிதம் தயாரிக்க மூலப் பொருட்களின் கூடுதல் தேவையினைக் கருதியும் புளூகம், மிலாறு, யூகலிப்டஸ் கிராண்டிஸ் மற்றும் பைன் போன்ற மரத் தோட்டங்கள் எழுப்புவதும் இத்திட்டத்தின் குறிக்கோளாகும். மேலும் விறகு சிறுமரம், காடுபடு பொருட்கள் தேவையைச் சமாளிக்க கிராம தரிசு நிலங்களிலும் உபயோகிக்கப்படாத தரிசு நிலங்களிலும் தோட்டங்கள் எழுப்பப்படும். இதனால் அங்குள்ள அமைப்பின் அழகை அதிகரிப்பதுடன் சுற்றுப்புற சூழ்நிலையை மேம்படுத்தவும், மண்வளம், ஈரத் தன்மையை பாதுகாக்கவும் உதவி புரிகிறது. தனியார் நிலங்களில் மரங்கள் பயிர் செய்வதை ஊக்குவிக்க பொது மக்களுக்கு நாற்றுகள் விற்கப்படும், சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில், உதகை ஏரியில் ஒரு மான்பூங்கா அமைக்கும் பணி நடைபெறுகிறது. இத்திட்டத்தின் கீழ் முதுமலை வனவிலங்கு புகலிடத்திலுள்ள மசினகுடி பகுதியில் நீர் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

24.2. 1984-85-ல் இத்திட்டத்தின் கீழ் 38.55 லட்சம் ரூபாய் செலவில் 165 எக்டேர் பரப்பில் தோட்டங்கள் எழுப்பப்பட்டது. ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இத்திட்டத்தின் கீழ் 147.12 லட்சம் ரூபாய் செலவில் 1119 எக்டேர் தோட்டங்கள் எழுப்பும் பணியும், சாலைகள் அமைத்தல், கட்டிடங்கள் கட்டுதல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டது.

24.3. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இந்த மாவட்டத்தில் வாழ்க்கை சூழ்நிலை பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ள 460 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப் பட்டுள்ளது.

24.4. 1985-86-ல் 220 எக்டேர் பரப்பில் தோட்டங்கள் எழுப்பவும், 400 எக்டேர் பரப்பில் களைப்பணி செய்யவும், 40,000 மரக் கன்றுகள் வழங்குதலும் போன்ற வேலைகள் 55.08 லட்சம் ரூபாய் செலவில் செயற்படுத்தப்படும். மேலும் 1985-86-ல் முடிவடையாத கட்டிடங்கள், சாலைகள், மான் பூங்கா அமைத்தல் ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்படும்.

**ஊரக விறகு மரத் தோட்டத் திட்டம்:**

**25.1** மத்திய அரசு சார்பு திட்டமான இது, ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செங்கற்பட்டு, திருச்சிராப்பள்ளி, தர்மபுரி, மற்றும் மதுரை மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. கிராமங்களிலுள்ள தரிசு நிலங்களிலும், தரங்குறைந்த காடுகளிலும், கடற்கரைப் பகுதி தரிசு நிலங்களிலும் சாலைகள், கால்வாய்க் கரைகள், குளங்கள், ரயில் வழித்தடங்கள் முதலியவற்றின் அருகாமையிலும் விறகு மரத் தோட்டங்கள் வளர்ப்பதன் மூலம் கிராமபுறங்களில் விறகு பற்றாக்குறையினால், மாநிலத்திலுள்ள காடுகளின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிப்பதைத் தடுக்க இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்தை நமது மாநிலத்தில் மேலும் வடாற்காடு, தென்னாற்காடு ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் விரிவுபடுத்த மத்திய அரசு சம்மதம் தெரிவித்துள்ளது.

25.2. 1984-85-ல், 4,407 எக்டேரில் தோட்டங்கள் எழுப்புதல், சாலையோர மரங்கள் 195 கி.மீட்டரில் வளர்த்தல், மற்றும் 117.86 லட்சம் மரக் கன்றுகள் வழங்கும் பணியும் 148.60 லட்சம் ரூபாய் செலவில் செயல்பட்டது. ஆறாவது திட்ட காலத்தில் மொத்தமாக 413.54 லட்சம் ரூபாய் செலவில் 22,995 எக்டேரில் தோட்டங்கள் எழுப்புதலும், சாலையோர மரங்கள் வளர்ப்பு 678 கி.மீ. மற்றும் 277 லட்சம் மரக்கன்றுகள் வளர்த்து வழங்குதல் பணிகளும் முடிக்கப்பட்டது.

25.3. ஏழாவது திட்ட காலத்தில், இத்திட்டத்தை செயற்படுத்த 800.00 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1985-86-ல் செலவிடப்படும் தொகை 130.85 லட்சம் ரூபாய். இத்திட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு:—

| | | |
|---|---|---|
| தோட்டங்கள் எழுப்புதல் | .. | 5,500 எக்டேர் |
| சாலையோர மரங்கள் வளர்த்தல் | .. | 282 கி.மீ. |
| மரக் கன்றுகள் வழங்குதல் | .. | 210 லட்சம். |



## மேற்கு மலைத் தொடர் மேம்பாடு திட்டம்:

**26.1. தேயிலைத் தோட்டம்:**

மேற்கு மலைத் தொடர் மேம்பாடு திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களில், நீலகிரி மாவட்டத்தில் கோலப்பள்ளி கோட்டத்தில் தேயிலைத் தோட்டங்கள் எழுப்பும் திட்டம் ஒன்றாகும். 348 எக்டேரில் காடுகளில் தோற்றுவிக்கப்பட்ட இத்தேயிலைத் தோட்டங்களை தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு 1—7—1984-ல் மாற்றப்பட்டது. 1984-85-ல் இத்திட்டத்தின் கீழ், தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு ஒப்படைக்கும் வரையில் செலவிடப்பட்ட தொகை 4.76 லட்சம் ரூபாயாகும். இனிமேல் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தால் இத்தோட்டங்கள் தொடர்ந்து பராமரிக்கப்படும்.

**26.2. கிராம்புத் தோட்டங்கள்:**

இத்திட்டம் மத்திய அரசு சார்பு திட்டமான மேற்கு மலைத் தொடர் மேம்பாடு திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இயற்கைக் காடுகளை வெட்டுவது தடை செய்யப்பட்டுள்ளதால், 1978-ம் வருடத்திற்குப் பிறகு புதிய தோட்டங்கள் எழுப்பப்படவில்லை. முந்தைய ஆண்டுகளில் (102 எக்டேரில்) எழுப்பப்பட்ட தோட்டங்கள் பராமரிக்கப்படுவதுடன், இத்திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களுக்கான குடியிருப்பு கட்டிடங்களும் கட்டப்படுகின்றன.

1984-85-ல் இத்திட்டம் 27.67 லட்சம் ரூபாய் செலவில் தோட்டங்கள் பராமரிப்புக் கட்டிடங்கள் கட்டுதல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆறாவது திட்ட காலத்தில் மொத்தச் செலவு 70·31 லட்சம் ரூபாயாகும்.

**26.3. கூழ்மரத் தோட்டங்கள்:**

மேற்கு மலைத் தொடர் மேம்பாடு திட்டத்தின் கீழ், மதுரை மாவட்டத்தில் கூழ்மரங்கள் வளர்க்கும் திட்டமும் ஒன்றாகும். தொழிற்சாலைகளுக்கான கச்சாப் பொருட்களின் வளர்ந்து வரும் தேவையை சரிக்கட்ட கூழ்மரத் தோட்டங்களை வளர்த்தலே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1984-85-ல் 19.28 லட்சம் ரூபாய் செலவில் 1,340 எக்டேரில் தோட்டங்கள் எழுப்பவும், 4 சாலைப் பணிகள் அமைத்தலும் செயற்படுத்தப்பட்டன.

**26.4. கத்தாழை வளர்த்தல் ;**

கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாவட்டத்திலுள்ள மேற்கு மலைத் தொடர் பகுதியில் கத்தாழை பயிரிடும் திட்டமானது மத்திய அரசு திட்டக் குழுவால், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1984-85) செயற்படுத்த அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களில் ஒன்றாகும்.

1984-85-ல் இத்திட்டத்தின் கீழ் கோயம்புத்தூரில் தனியாக கோட்டம் நிறுவுதலும், 14.08 லட்சம் ரூபாய் செலவில் முன்னோடி வேலைகள், கோட்டத்திற்கு வாகனங்கள் வாங்குதல் ஆகியவையும் செயல்படுத்தப்பட்டது.

1985-86-ல், 200 எக்டேரில் கத்தாழைத் தோட்டங்கள் பயிரிடுதலும், நாற்றங்கால் எழுப்பவும் செய்து திட்டம் செயல்படும்.

**26.5. வருசநாடு பகுதியில் மண்வளப் பாதுகாப்பு :**

மேற்கு மலைத் தொடர் மேம்பாடு திட்டங்களில் புதியதாக அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும். தேனியை தலைமை இடமாகக் கொண்ட ஒரு புதிய கோட்டம் டிசம்பர் 1984-ல் அமைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் நோக்கம், 1984-85-லிருந்து 5 வருட காலத்திற்கு தீவிர மண்வளப் பாதுகாப்பு பணியாக, காடு வளர்ப்பும், Contour trencees தோண்டுதலும் Gull Control பணிகளும் ஆற்றுக் கரைகளை பலப்படுத்துவதும், வைகை ஆற்றிலுள்ள வருசநாடு பள்ளத்தாக்கு மூன்று நீர்ப்பிடிப்பு பகுதியில் வேளாண்மைக் காடுகள் உண்டாக்குவதன் மூலம் மண் அரிப்பினைக் குறைத்து, அப்பகுதியின் ஈரத் தன்மையினை மேம்படுத்தி, மண் இழப்பைத் தடுத்தலே ஆகும்.





1984-85-ல் 400 எக்டேர் பரப்பில் முன்னோடி பணிகளை மேற்கொள்ளவும், மண்வளப் பாதுகாப்பு பணிகள் மற்றும் புதிய கோட்டத்திற்கு வாகனங்கள் வாங்குதல் முதலியன 11.99 லட்ச ரூபாய் செலவில் செயல்பட்டது.

1985-86-ல் 400 எக்டேர் காடு வளர்ப்பும் மற்ற மண்வளப் பாதுகாப்பு பணியும், 300 எக்டேர் பரப்பில் முன்னோடி வேலைகள் மேற்கொள்ளுதல் ஆகியவையும், 9.85 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

**26.6. மஞ்சளார் நீர்ப்பிடிப்பு பகுதியில் காடு வளர்த்தல் ;**

இத்திட்டம் 5 வருடங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த திட்டமாகும். இத்திட்டத்தில் வனத் துறையின் பங்கு காடுகள் வளர்ப்பது, மண்வளப் பாதுகாப்பு பணிகள், மஞ்சளார் நீர்ப்பிடிப்பு பகுதியில் மரக் கன்றுகள் உற்பத்தி செய்து, வழங்குதல் முதலியனவாகும். 70 எக்டேரில் மரம் வளர்ப்புப் பணியும், மண்வளப் பாதுகாப்புப் பணியும் 1984-85-ல் 0.62 லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டது. 1985-86-ல் அங்கீகரிக்கப்பட்ட 0.71 லட்சம் ரூபாய் செலவில் 20 எக்டேரில் காடு வளர்க்கவும், மண்வளப் பாதுகாப்பு பணிகளுக்கும், ஒரு லட்சம் மரக் கன்றுகள் வளர்த்து, வழங்கவும் இத்திட்டம் செயல்படும்.

வரவு—செலவுத் திட்டம்

27. வனத் துறையின் வரவு—செலவு திட்ட விவரம் வருமாறு ;—

| கணக்கின் தலைப்பு | 1983–84 (கணக்குகள்.) | 1984–85 (வரவு—செலவுத் திட்ட மதிப்பீடு.) | 1984–85 செலவு | 1985-86 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் லட்சத்தில்) | | | |
| **மானியக் கோரிக்கை—45** | | | | |
| 1, 259. பொதுப்பணிகள் | 0.12 | 0.20 | 0.30 | 0.30 |
| 2. 288. சமூக பாதுகாப்பும் நலனும் | 37.17 | 21.26 | 19.71 | 7.55 |
| 3. 307 மண்வள, நீர்வளப் பாதுகாப்பு | 19.49 | 31.89 | 86.42 | 24.92 |
| 4. 308பகுதி மேம்பாடு | 10.40 | 19.57 | 14.56 | 17.65 |
| 5. 313 காடுகள் | 11,62.91 | 11,47.76 | 12,34.53 | 11,84.02 |
| 6. 320 சந்தன எண்ணைத் தொழிற்சாலை | 1.03 | 0.98 | 0.73 | .. |
| மொத்தம் | 1231.22 | 1211.66 | 1356.25 | 1234.44 |



| கணக்கின் தலைப்பு | 1983–84 (கணக்குகள்) | 1984–85 (வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. | 1884–85 செலவு | 1986–86 வரவு—செலவு திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | ,2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| **மானியக் கோரிக்கை—56.** | | | | |
| 1. 488 சமூகப் பாதுகாப்பு நலன் குறித்த மூலதனச் செலவு | 24.49 | 32.01 | 28.13 | .. |
| 2. 506 சிறு பாசனம், மண்வளப் பாதுகாப்புப் பகுதி மேம்பாடு குறித்த மூலதனச் செலவு | 82.61 | 88.48 | 68.45 | 105.29 |
| 3. 513 காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 1546.11 | 1580.43 | 1534.85 | 1590.23 |
| 4. 526 சந்தன எண்ணை தொழிற்சாலை நிறுவுதல் குறித்த மூலதனச் செலவு | 24.30 | 0.01 | 31.00 | 0.01 |
| மொத்தம் | 1677.51 | 1700.93 | 1622.43 | 1695.53 |

| கணக்குத் தலைப்பு | 1983-84 (கணக்குகள்). | 1984-85 செலவு. | 1985-86 வரவு—செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் லட்சத்தில்) | | |
| மொத்த மானியக் கோரிக்கை-45 | 1231.22 | 1356.25 | 1234.44 |
| மொத்த மானியக் கோரிக்கை-56 | 1677.51 | 1662.43 | 1695.53 |
| மொத்தம் | 2908.73 | 3018.68 | 2929.96 |

முடிவுரை :

28. மனித சமுதாயத்திற்கு நல்வாழ்வு நல்குவதில் காடுகளின் பங்கு என்னவென உணர்ந்துள்ள மக்களின் விழிப்புணர்வினைச் சாதகமாக்கிக் கொண்டு, உலகம் போற்றும் கான்காப்பு இயல் வல்லுநர்களின் சிரிய கொள்கைகளையும், கோட்பாடுகளையும் மக்களிடையே பரப்பவும், அவற்றை நடைமுறைப்படுத்தவும் ஆக்கபூர்வமாக எல்லாவித முயற்சியும் மேற்கொள்ளப்படும். பாதுகாப்புப் பணிகளைத் தீவிரப்படுத்தவும் சீரமைப்புப் பணிகளையும், நிர்மாணப் பணிகளையும் புதுப்பிக்கப்பட்ட வேகத்தோடு மேற்கொண்டு 'இயற்கைச் சூழல் சீரமைப்பு (Eco-Resto a on ) மற்றும் 'இயற்கைச் சூழல் மேம்பாடு (Eco Devlopment ) முதலியவற்றின் மூலம் மக்களின் தேவையை நிறைவு செய்ய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.



## இணைப்பு

(47 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### சுற்றுலாத் துறை—கொள்கை விளக்கக் குறிப்பு.

பண்டு தொட்டே தமிழகம் சிறப்பாக சுற்றுலாப் பயணிகளைத் தன்பால் ஈர்த்து வந்துள்ளது. இன்றும் தன்னகத்தே, நமது பாரதத்தின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் வரும் சுற்றுலாப் பயணிகளின் ஆர்வங்களுக்கேற்பவும், சுவைகட்குப் பொருந்தவும், அமையுமாறு பல தன்மைகளையும் தொடர்ந்து பெற்றுள்ளது. ஆயினும் இந் நாட்டில், மற்ற மாநிலங்களுக்கு வருகை தரும் அளவுக்கு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தமிழகத்துக்கு வருவதில்லை. தற்போது இது மொத்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் 20 முதல் 23 விழுக்காடுதான் உள்ளது. ஆனால், ஏழாவது திட்டக் காலத்தில் இது 50 விழுக்காட்டுக்கு உயரும் அளவுக்கு திட்டமிட்ட கூட்டு முயற்சியை நாம் எடுத்தாக வேண்டும். அதுமட்டுமின்றி, தமிழகத்திற்கு வேறு மாநிலங்களிலிருந்து சுற்றுலாப் பயணிகளை இன்னும் அதிக அளவில் கவருவதற்குரிய வாய்ப்புக்கள் நிறைய உள்ளன. ஆனால் இதனை எய்துவதற்கு நமது மாநிலத்தில் உள்ள அடிப்படைச் சுற்றுலா வசதிகளை மேலும் பெருக்கினாலன்றி, இதனை அதிகரிக்க முடியாது. தமிழக அரசு, சுற்றுலாப் பயணிகட்கு பல்வேறு சுற்றுலா மையங்களிலும் தேவையான வசதிகளையும் அவை தரப்படும் பெற்றியினையும், அடிக்கடி சீர்தூக்கி, ஒருங்கிணைந்த அணுகுமுறையில் பல்வேறு திட்டங்களைத் தொடர்ந்து வகுத்து வருகிறது. தமிழக அரசின் சுற்றுலாத்துறை, சுற்றுலா மேம்பாட்டுக்கும், வாய்ப்புகளுக்கும் வழிவகுத்துச் செயல்படுகிறது ; தமிழக அரசுத்துறை நிறுவனமான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் வாணிபரீதியில் சுற்றுலாப் பயணிகட்கு, உறைவிடம், உணவு, ஊர்தி; உல்லாசப் பொழுதுபோக்கு வசதிகள் ஆகியவற்றைச் செய்து தரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

இயற்கைவனப்பு, வரலாற்றுச் சிறப்பு, சமயச் சால்பு, பண்பாட்டுப் பாரம்பரியம், புதைபொருள் கருவூலங்கள், அலை கடல் ஆழிசூழ் வளாகங்கள், வனவிலங்குச் சரணாலயங்கள்

[1985 ஜூன் 13

இவையெல்லாம் சுற்றுலாப் பயணிகள் பெரிதும் நாடிவரும் சிறப்பு அம்சங்கள். இவையனைத்துமே தமிழகத்தில் அள்ளக் குறையா அளவில் மல்கியுள்ளதால், சுற்றுலாவிலான ஒரு நல்ல பலனளிக்கும் தொழிலாகவே வளர்க்க முடியும். ஏழாவது திட்டக் காலத்தில், இந்தச் சிறப்பையெல்லாம், முழுமையாகத் துய்ப்பதற்கேற்ற வகையில், திட்டங்கள் தீட்டி, சுற்றுலாப் பயணிகளை மிக அதிக அளவில் தமிழகத்துக்கு வரச்செய்யும் வண்ணமும், வந்தவர்கள் அனைவருமே நன்கு மகிழ்ந்து செல்லும் பாங்கிலும், சுற்றுலா வளர்ச்சியின் கொள்கை இலக்குகள் வகுக்கப்பெறும்.

ஏழாவது திட்டக் காலத்தில் அரசின் சுற்றுலா வளர்ச்சிக்கு வழிவகைகளின் கூறுகளாவன :

1. வெளிநாடுகளிலிருந்தும், நம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், தமிழகத்துக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகட்கு, இங்கு அனைத்து நாட்டு, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலா மையங்களில் அடிப்படை வசதிகளைப் பெருக்குதல்.

2. ஒவ்வொரு பகுதி மக்களும் அருகேயுள்ள சுற்றுலா மையங்களை நாடிச் சென்று, அயர்வு நீங்கி, புத்துணர்வு பெறும் வகையில் ஆங்காங்கே சுற்றுலா மையங்களைப் பரவலாக வளப்படுத்துதல்.

3. சுற்றுலா வளர்ச்சிக்கென விஞ்ஞான ரீதியான புத்தகம் புது தகவல் தொடர்பு மற்றும் விளம்பர உத்திகளைக் கையாளுதல்.

4. குறைந்த செலவில் சுற்றுலா மையங்களைக் காண விழையும் பயணிகளுக்கும், குறைந்த வருமானமுள்ள பயணிகளுக்கும், சுற்றுலா இடங்களைக் காணும் வகையில் குறைந்த செலவில் இட வசதியும், போக்குவரத்து வசதிகளும் செய்து கொடுக்க ஏதுவாக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்துக்கு நிதியுதவி வழங்குதல்.

5. தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கென அடிப்படை ஆதாரங்களைத் தருவதில், தனியார் துறையினரும் மற்றும் வெளிநாடுவாழ் இந்தியரும் பெரிதும் பங்கு கொள்ள ஊக்கமளித்தல்.



1985 ஜூன் 18]

## சுற்றுலாவினைத் தொழிலாக அறிவித்தல்.

சுற்றுலா வளர்ச்சிக்கு இம்மாநிலத்தில் நிலவும் நிறைந்த வசதிகளைக் கருத்தில் கொண்டு, 'சுற்றுலாவினுக்கு' ஒரு தொழில் ரீதியான அந்தஸ்தினை வழங்கக் கொள்கையளவில் அரசு முடிவெடுத்துள்ளது. இதனால் வேறு தொழில்களுக்குக் கிட்டும் எல்லாச் சலுகைகளும், சுற்றுலாத் தொழிலில் பல அங்கங்களுக்கும் எட்ட வாய்ப்பு உண்டு. மறைந்த நமது பாரதப் பிரதமர் திருமதி இந்திரகாந்தி அவர்களது சீரிய தலைமையில் 1984 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் நடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மேற்கொண்ட முடிவினையொட்டியும், 1985 ஜனவரியில் மைய அரசு அறிவித்த கொள்கையினைத் தொடர்ந்தும் இத்தகைய கொள்கையினைத் தமிழக அரசு மேற்கொண்டது. அரசின் இந்த முடிவினால், தமிழ்நாட்டில் சுற்றுலா பெரிதும் வளர்ச்சியடைவதற்குரிய சாத்தியக் கூறுகளைப் பலப்படுத்துவதில், தனியார் பெரிதும் ஈடுபடும் சூழ்நிலை உருவாவதுடன், தனியாரிடமிருந்து பெருமளவில் மூலதனங்கள் இதற்குக் கிடைக்கும் வாய்ப்பும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கூட்டுத்துறை முயற்சியும், அயல்நாடுவாழ் இந்தியர் ஈடுபாடும்.

இம்மாநிலத்தில் சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களை விரைவுபடுத்தும் முயற்சியாக, தனியார் துறை ஈடுபாட்டுடன் கூட்டு முயற்சி பல மேற்கொள்ளவும் அரசு முடிவெடுத்துள்ளது. வெளிநாடுகளில் வாழும் நமது இந்தியர்கள் தமது மூலதனத்தினை இத்தொழிலுக்கு முதலீடு செய்வதற்கு உரிய ஆக்கம் அளிக்கப்பெறும். இந்த முயற்சியினால் அந்நியச் செலாவணி முதலீடு அதிகரிப்பதோடு வெளிநாட்டு தொழில் விஞ்ஞானப்பட்டறிவும், மேலாண்மைத் திறன்களும், உலகரீதியான அளவில் நமக்குக் கிடைக்க ஏதுவாகும்.

## தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை மேம்படுத்தல்.

தமிழகத்திலுள்ள பின்வரும், தேசிய முக்கியத்துவம் மிகுந்த இடங்களில் சுற்றுலா வளர்ச்சிக்குக் கடந்த நான்கைந்து ஆண்டுகளாக பெருந்திட்டங்கள் (Master Plans) வகுக்கப் பெற்றுள்ளன :—

| | மதிப்பீடு (ரூபாய் கோடிகளில்.) |
|---|---|
| மாமல்லபுரம் | 6.00 |
| இராமேஸ்வரம் | 28.00 |
| கன்னியாகுமரி | 16.00 |
| உதகமண்டலம்—முதுமலை | 28.00 |
| ஆக மொத்தம் | 76.00 |

இப்பெருந்திட்டங்களுக்குப் பெரிய அளவில் நிதியுதவி தரும் படியும், அனைத்து நாட்டு நிதி நிறுவனங்களிலிருந்தும் தக்க நிதியுதவி பெற்று உதவுமாறும் இந்திய அரசிடம் கேட்டுக் கொள்ளப் பட்டது. மேற்குறிப்பிட்ட நான்கு மையங்களின் வளர்ச்சிக்கு உலக வங்கி போன்ற நிறுவனங்களிடமிருந்து ரூ. 28 கோடி நிதியுதவி பெற்றுத் தந்து உதவுமாறும் இந்திய அரசிடம் கோரப் பெற்றது. ஆனால் இந்திய அரசின் சுற்றுலாத் துறை, தமது நிதிக் குறைப்பாட்டின் காரணமாக இவ்வேண்டுகோளுக்கு இசைய இயலவில்லையெனவும், உலக வங்கியின் கோட்பாடுகளுக்கும், நிதி வழங்கும் முறைகளுக்கும் பொருந்தும் வண்ணம் நமது வேண்டுகோள்கள் அமையவில்லையாகையால் அங்கிருந்தும் நிதி பெற இயலாதெனவும் தெரிவித்தது. ஆயினும், நமது சுற்றுலாத் துறையின் இடையறாத நன்முயற்சியின் விளைவாக, இதுகாறும் இல்லாத ஒரு புதுப் பலனாக, மைய அரசிடமிருந்து முதன் முதலாக இம்மாநிலத்துக்கு மாமல்லபுரத்தில் நிலச் சீரமைப்பு (Landscaping) செய்ய ரூ. 15.32 இலட்சங்களும், சென்னைக்கருகேயுள்ள முத்துக் காட்டில் புனல் விளையாட்டு வளர்ச்சிக்கென ரூ. 6.39 இலட்சங்களுமாக, மொத்தம் ரூ. 21.71 இலட்சம் நிதியுதவி கிட்டியுள்ளது, இந்நிதியாண்டிலேயே, தமிழகத்தில் மேலும்



பல புதிய முயற்சிகளுக்கு இந்தியப் பேரரசின் நிதியுதவி மேலும் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் கன்னியாகுமரியிலிருந்து விவேகானந்தர் நினைவாலயத்துக்குச் செல்ல ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டில் புதிய விசைப்படகு வாங்கும் திட்டத்திற்கு நிதி உதவி அளிப்பதற்குக் கொள்கையளவில் ஏற்றுள்ளார்கள். காஞ்சிபுரத்தில் 'பல்லவபுரம்' என்ற வாலாற்றுச் சித்திர அமைப்பு கட்ட ரூ. 20 இலட்சம் தரவும் முன்வந்துள்ளார்கள்.

தமிழக அரசின் வேறு துறைகள் மேற்கொள்ளத்தக்க பல திட்டங்களையும், சுற்றுலாச் சார்ந்த நிலையினால் நமது பெருந் திட்டங்களின் அமைப்பில் ஏற்றுள்ளோம். மேலும், பிற துறைகளால் செய்ய இயலாத சில பணித் திட்டங்களையும் இத்துறையில் ஏற்றுச் செய்கிறோம். உதாரணமாக, பின்னால் வரும் முத்துக்காடு திட்டம்.

இத்துறையினரால் கீழ்க்கண்ட திட்டங்கள் தற்போது செயல்படுத்தப் பெறுகின்றன :—

### மாமல்லபுரம்.

மாமல்லபுரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் :

1. திறந்தவெளி அருங்கலைப் பொருட்காட்சியகம்.—பழந் தமிழரின் அழியாப்புகழ் பூத்த பண்பாட்டுச் சிறப்புக்களையும், தொன்மை நிறைந்த வரலாற்றுச் சிறப்புக்களையும், நம் நாட்டவரும் எந்நாட்டவரும் கண்டு களித்து, சிந்தை மகிழும் வண்ணம் திறந்தவெளி அருங்கலைப் பொருட்காட்சியகம் ஒன்றை மாமல்லபுரத்தில் எழில் கொஞ்சும் கடலோரத்தில் நிறுவும் பணிகள் தொடங்கப்பெற்றுள்ளன, இதற்கு ரூ. 68 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பெற்றுள்ளது. அரசு நிறுவியுள்ள ஒரு உயர்நிலைக் குழு அதற்கெனக் கூடி தற்போது கலைக் கண்ணோட்டத்துடன் கூடிய 48 தலைப்புகள் தேர்ந்தெடுத்துள்ளது. அதனையடுத்து, பண்டை இலக்கியப் பண்பாட்டின் சொல்வண்ணங்களுக்கு கவின்மிகு கல்லில் கைவண்ணம் படைக்கும் முயற்சி வளர்ந்து வருகிறது. அதற்கென ரூ. 27.09 இலட்சம் இதுகாறும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

2. ஒளி-ஒலிக் காட்சித் திட்டம்—பெருந்திட்டத்தில் பரிந்துரைக்கப்படி, மாமல்லபுரத்தில் ஐந்து ரதப் பகுதியில் ரூ. 47.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒளி-ஒலிக்காட்சி அமைக்கும் திட்டம் உருவாக்கப்பட்டது. இந்தச் செலவினைப் பின்வரும் முறையில் பங்கு கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது :—

| | |
|---|---|
| இந்திய அரசு சுற்றுலாத் துறை | ரூ. 20 இலட்சம் |
| தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறை | ரூ. 20 இலட்சம் |
| தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் | ரூ. 7 இலட்சம் |
| மொத்தம் | ரூ. 47 இலட்சம் |

ஆயினும், தற்போது, இந்திய அரசு இதில் பங்குகொள்ள விழையாததால், மாமல்லபுரம் திறந்தவெளி அருங்கலைப் பொருட் காட்சியகத்திலேயே இந்த ஒளி-ஒலிக்காட்சியை நிறுவ அரசு எண்ணியுள்ளது.

3. முத்துக்காடுப் பகுதி மேம்பாடு—சென்னை—மாமல்லபுரம் கடற்கரையோரச் சாலையில் உள்ள, முத்துக்காட்டுப் பகுதியினை அங்கேயுள்ள நீர்நிலையைப் பயன்படுத்தி, சுற்றுலா மையமாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1984 ஜனவரி திங்கள் எட்டாம் நாளில் இங்கு ஒரு படகுத் துறை தொடங்கப் பெற்றது. இதன் வளர்ச்சிக்காகவும், அந்தப் பகுதியினை அழகுபடுத்தவுமாக ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மாமல்லபுரத்தில் மேலும், ஓய்வகம் கட்டவும், முகாமிடம் அமைக்கவும், கடற்கரைக் கோவிலருகே ஏற்கனவேயுள்ள முகாமிடங்களுக்கு வேலியமைத்தல், உணவு விடுதி கட்டுதல், பணியாளர் ஓய்விடம் முதலியன அமைக்கவும் ரூ. 9,13,814 ஒதுக்கப்பட்டது.

[illegible] சிறு குடில்கள் கட்ட ரூ. 5 இலட்சங்களும் சுற்றுலா அலுவலகம் கட்ட ரூ. 3,30,000 மும் ஒதுக்கப்பட்டது.





## இராமேஸ்வரம்.

இராமேஸ்வரத்தில் இத்துறை ஏற்கனவே கீழ்க்கண்ட பணிகளை மேற்கொண்டுள்ளது :—

1. இராமேஸ்வரத்தில் துயிலக விடுதி கட்டுதல் — 1979–80-ல் இராமேஸ்வரத்தில் துயிலக விடுதி, சுற்றுலாத் தகவல் நிலையம், குளியல் துறை ஆகியவற்றிற்கு ரூ. 3 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் நிறைவு பெற்றன. 1981—82-ல் குறைந்த கட்டணத்தில் தங்கும் வசதியளிக்கும் இளைஞர் இல்லம் கட்டுவதற்கு ரூ. 10 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு பணி நிறைவுறும் நிலையில் உள்ளது. 1982–83-ல் உணவகம் கட்டுவதற்கு ரூ. 12.5 இலட்சம் ஒப்பளிக்கப் பட்டது. மேலும், 1983–84-ல் ரூ 5 இலட்சம் சுற்றுலா வளாகத்துக்குக் குடிநீர் வசதிக்கென ஒதுக்கப்பட்டது.

2. இராமேஸ்வரத்தில் சுற்றுலா அலுவலகம் — இத்திருத்தலத்திற்கு வரும் பயணிகட்குப் பேருதவியாக பலரும் பாராட்டும் வண்ணம், இங்கு புதிய சுற்றுலா அலுவலகம் 1983-84 முதல் இயங்கி வருகிறது. இது இத்துறையின் ஒன்பதாவது சுற்றுலா அலுவலகமாகும். பம்பாய், கல்கத்தா ஆகிய பெரு நகரங்களிலும் இத்தகைய சுற்றுலா அலுவலகங்கள் விரைவில் தொடங்கப்பெறும். மேலும், தமிழ்நாட்டில் 11 இடங்களில், இத்துறையினால், சுற்றுலாத் தகவல் நிலையங்கள் நடத்தப் பெறுகின்றன.

3. மண்டபம் வளாகத்தில் வசதிகள் — மண்டபத்தில், துயிலகம், படகுத்துறை, உணவகம் ஆகியன நிறுவ ரூ. 6.66 இலட்சம் ஒதுக்கப்பெற்று, இக்கட்டுமானப் பணிகள் நிறைவுறும் நிலையிலுள்ளன. மேலும், நீரேற்றுகுடில், மேல்நிலைத்தொட்டி, 12 சிறுகுடில்கள் ஆகியன அமைக்கவும் தற்போதுள்ள பாதையினைச் செப்பனிடவுமாக ரூ. 12.5 இலட்சம் ஒப்பளிப்பு செய்து பணிகள் நிறைவேறி வருகின்றன. மண்டபத்தில், 1984—85-ல் இளைஞர் இல்லம் கட்டுவதற்கென ரூ. 22.75 இலட்சம் ஒப்பளிக்கப் பெற்றுள்ளது.

1985—86-ல் ரூ. 3.00 இலட்சம் செலவில் "ஓட்டல் தமிழ்நாடு" சுற்றிய கடற்கரைப் பகுதியினை அழகுபடுத்தவும், இராமேஸ்வரத்தில் சுகாதார வசதிகள் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## கன்னியாகுமரி.

**கன்னியாகுமரிப் பகுதியில், இத்துறையினால் மேற்கொள்ளப் பட்ட பணிகள் :**

1. **துயிலக விடுதி, ஓய்வுக் கூடம்** — குறைந்த வசதி சுற்றுலாப் பயணிகளின் (Budget Tourists) நன்மை கருதி, கன்னியாகுமரியில் ரூ. 5.00 இலட்சம் செலவில் துயிலக விடுதி ஒன்று கட்டப்பட் டுள்ளது. குறைந்த காலம் தங்குவோர் வசதிக்காக, ஓய்வு அறை மற்றும் ஊர்தி நிலையம் கன்னியாகுமரியில் கட்டுவதற்கு 1983—84-ல் ரூ. 5.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. மேலும் கன்னியாகுமரியில் இரண்டாம் நிலை ஆய்வு மாளிகையினை துயிலக விடுதியாக மாற்றுவதற்கு ரூ. 1.5 இலட்சம் ஒதுக்கப்பட்டு, பணி தொடர்கிறது. பெருகிவரும் பயணிகளின் தேவையைச் சமாளிக்க மேலும் ஒரு துயிலக விடுதி கட்ட ரூ. 23.40 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

2. **சுற்றுலா அலுவலகம்** — 1983-84-ல் கன்னியாகுமரி சுற்றுலா அலுவலகத்திற்குப் புதிய கட்டிடம் கட்டப்பட்டது.

1985—86-ல் ரூ. 3.00 இலட்சம் செலவில் கன்னியாகுமரியில் சுகாதாரம் மற்றும் குடிநீர் வசதிகள் செய்யும் பணியினை எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## உதகமண்டலம்.

கீழ்க்கண்ட முக்கியப் பணிகளை இத்துறை எடுத்துக் கொண் டுள்ளது.

1. **உதகமண்டலத்தில் இளைஞர் இல்லம்** —குறைந்த வருவாய் உள்ள சுற்றுலாப் பயணிகள் மற்றும் இளைஞர் குழுக்கள் ஆகியோ ருக்கு இடவசதி அளிக்கும் பொருட்டு உதகமண்டலத்தில் ரூ. 10,00,000 செலவில் இளைஞர் இல்லம் ஒன்று கட்டப் பட்டுள்ளது.

2. **தொட்டபெட்டாவில் தொலைநோக்காடி இல்லம்** — தொட்டபெட்டாவில் தொலை நோக்காடி இல்லம் ஒன்று ரூ. 4.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது.





3. **படகுக் குழாம், சிறுவர் இரயில்** —மலைப்பகுதி மேம் பாட்டுத் திட்டத்தின் கீழ், உதகமண்டலத்தில் கூடுதலாக ஒரு படகுக்குழாம் கட்டும் பணிக்கு ரூ. 6.50 இலட்சம் ஒப்பளிக்கப் பட்டு பணி நிறைவு பெற்றது. ரூ. 11.00 இலட்சம் செலவில் சிறுவர் இரயில் வாங்கவும், இரயில் பாதை அமைக்கவும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டன. ஏரியின் அருகே ரூ. 3.00 இலட்சம் செலவில் பொழுதுபோக்கு வளாகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. புதிய படகுகள் வாங்கும் பொருட்டு ரூ. 1.92 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

4. **உல்லாச இடங்களை மேம்படுத்துதல்** — தொட்டபெட்டா டால்பின்ஸ் நோஸ், லேம்ப்ஸ் ராக், 'குடநாடு' காட்சிமுனை கெல்லஹட்டி நீர்வீழ்ச்சி ஆகிய உல்லாச இடங்களில் வசதிகள் செய்யவும், மலையேற்றப் பாதைகளில் முகாமிடங்கள் அமைக்க வும் ரூ. 7.65 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் வனத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வரு கின்றன.

5. **உதகமண்டலத்தில் சிறிய ஊர்தி** — நீலகிரியில் பயணிகள் சுற்றுலா ஊர்தி வாங்குவதற்கு ரூ. 2.75 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு இந்த ஊர்தி பெரிதும் பயன்பட்டு வருகிறது. இந்த ஊர்தி நிறுத்துவதற்காக நிலையம் ஒன்று ரூ. 40 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ளது.

6. **உதகமண்டலத்தில் சுற்றுப்புறச் சூழல் மேம்பாடு** —மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், உதகை ஏரி சுற்றுப்புறச் சூழலைத் தூய்மையாக்கி வளப்படுத்துவதற்கு ரூ. 6.8 இலட்சம் ஒதுக்கி இப்பணியினை நிறைவேற்றும் பொறுப்பு தோட்டக் கலைத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

1984—85-ல் நிலச்சீரமைப்புப் பணி, வனப்புச் செடி-கொடிப் பூங்கா நிறுவுதல் போன்றவற்றிற்காக ரூ. 3 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

7. **உதகையிலிருந்து தொட்டபெட்டா சிகரத்திற்கு "ககன வழிக் கயிற்றுப் பாதை" (Aerial ropeway) அமைத்தல்** — உதகைக்கும் தொட்டபெட்டாவுக்கும் இடையே விந்தையாக ககனப் பெருவழியில் இரும்புக் கயிற்றுப் பாதையொன்று அமைக்கும் திட்டம் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

8. **முதுமலை வனவிலங்கு சரணாலயத்தில் (தெப்பக்காடு) இளைஞர் இல்லம்** — மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் பகுதியாக முதுமலையில் எளிய வருவாய் பிரிவுச் சுற்றுலா பயணிகள் மற்றும் இளைஞர் குழுக்களின் வசதி கருதி ரூ. 10 இலட்சம் செலவில் இளைஞர் இல்லம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

9. **பிற பணிகள்** — நீலகிரியில் சுற்றுலா வளர்ச்சிக்காக கீழ்க் கண்ட பணிகளும் செயல்படுத்தப்படுகின்றன :—

| | | |
|---|---|---|
| (1) | பழங்குடி வகுப்பு இளைஞர்கட்கான 'வழிகாட்டிகள்' பயிற்சி | ரூ. 0.35 இலட்சம் |
| (2) | தோடர்கள் வாழ்வு நெறி, கலாசாரம் பற்றிய கையேடு, மற்ற வெளி யீடுகள் | ரூ. 1.00 இலட்சம் |
| (3) | உதகை ஏரிப் பகுதியில் அங்காடி மற்றும் பரி வாழ்மனையிடங்கள் (Pony Stations) | ரூ. 2.00 இலட்சம் |
| (4) | உதகை ஏரி பற்றிய வெளியீடு | ரூ. 1.00 இலட்சம் |

1985-86-ல் மிதக்கும் உணவகம் ஒன்று உதகமண்டலம் ஏரியில் அமைத்திட திட்டம் ஒன்றும் ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பெருந் திட்டத்தில் இடம் பெறுகிறது. இதற்கு சுமார் ரூ. 10 இலட்சம் செலவாகலாம். இதற்கென 1985-86-ல் இத்துறையின் வழி ரூ. 4.00 இலட்சம் ஒதுக்கப்பெறும்.

உதகமண்டலத்தில் ஏரிப் பகுதியிலேயே அலங்கார நடை பாதைப் பாலம் ஒன்றும் இப்பகுதிக்கு எழில் சேர்க்க ரூ. 25 இலட்சம் செலவில் உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக சிறு உருவமைப்பு ஒன்று அனைத்து விவரங்களுடன் வழுவமைத்து ஆய்வு மேற்கொள்ளப்படும். 1985-86-ல் ரூ. 50,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

உதகமண்டலத்தில், சுற்றுலாப் பயணிகள் இன்பக் கேணி, இந்த ஏரிப்பகுதிதான். எனவே, இதனை உடனடியாக தூர் எடுத்து, மாசு அகற்றியாக வேண்டும். இதற்கெனத் தக்கவர் துணை கொண்டு, திறம்பட செயல்பாட்டுக் கூறுகள் கொண்ட





விரிவான திட்ட அறிக்கை உருவாக்கப்படல் மிக இன்றியமை யாதது. இதற்கென 1985-86-ல் ரூ. 50,000 ஒதுக்க அரசு எண்ணி யுள்ளது.

**சுற்றுலாச் சிறப்பு வாய்ந்த உள்ளூர் பகுதிகளை மேம்படுத்துதல்.**

(அ) **மாவட்ட உலாத்தலங்கள்** — தமிழகத்தின் பல பகுதி களிலும் உள்ள சுற்றுலாச் சிறப்பு அம்சங்கள் கொண்ட பல்வேறு இடங்களையும் மேம்படுத்தி, ஆங்காங்கேயுள்ள மக்கள் அவற்றால் பயனடையும் வகையில் மாவட்ட உலாத்தலங்களை வளப் படுத்தும் முயற்சியினை அரசு 1980-ல் தொடங்கியது. இந்த அடிப்படையில் மாவட்டத்திற்கு இரண்டு மையங்கள் தெரிந் தெடுக்கப்பட்டன. இந்த மையங்களில் சுகாதார வசதி, குடிநீர், உணவகம், ஊர்தி நிறுத்த வசதி, ஓய்விடம் ஆகியவற்றை அமைத்து மக்களைக் கவர்வது இத்திட்டத்தின் சிறப்பு அம்ச மாகும். எளிய வருவாய்ப் பகுதியினருக்கு மிகுந்த உதவியாக இருப்பதற்கென, இதற்கு அரசு முன்னிடம் தந்துள்ளது. பல அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் இதற்கென தங்கள் உபரி நிதியிலிருந்து, அந்தந்த மாவட்டத்திலும், ஒவ்வொரு மையத்திற்கும் ரூ. 3.00 இலட்சம் வழங்க முன்வந்துள்ளன. இதுகாறும், மொத்தமாக ரூ. 13.50 இலட்சம், மாவட்ட உலாத்தலங்கள் அமைக்க பல்வேறு போக்குவரத்துக் கழகங்கள் வழங்கியுள்ளன. அரசின் பல்வேறு துறைகளும், இம்முயற்சியில் ஈடுபடுத்தப் பெறும்.

இவ்வகையில் 1983-84-ல், சுற்றுலாத் துறை கீழ்க்கண்ட மாவட்ட உலாத்தலங்கள் வளர்ச்சிக்காக ரூ. 10.00 இலட்சம் ஒதுக்கியது :—

(1) சித்தன்னவாசல் (புதுக்கோட்டை மாவட்டம்).

(2) பவானி-கூடுதுறை (பெரியார் மாவட்டம்).

(3) கங்கை கொண்ட சோழபுரம் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்).

(4) திருமூர்த்திமலை (கோயம்புத்தூர் மாவட்டம்).

(5) பாபநாசம் (திருநெல்வேலி மாவட்டம்).

அவ்வாறே 1984-85-ல் கீழ்க்கண்ட மாவட்ட உலாத்தலங்கட்கு என ரூ. 8.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது :—

(1) கொல்லிமலை (சேலம் மாவட்டம்).

(2) ஏலகிரிமலை (வடாற்காடு மாவட்டம்).

(3) கல்லணை (தஞ்சாவூர் மாவட்டம்).

(4) பிளவக்கல் (காமராஜர் மாவட்டம்).

கன்னியாகுமரி மாவட்டத்தில், பேச்சிப்பாறை அணைப் பகுதி 11—9—1984-லிருந்து ஒரு மாவட்ட உலாத்தலமாக அறிமுகம் ஆனது. இனி அடுத்து வரும் ஆண்டுகளில் இது போன்ற மாவட்ட உலாத்தலங்கள் மேலும் அமைக்கப் பெறும். இது போன்ற புதியன காணும் முயற்சிக்காக 1985-86-ல் ரூ. 8.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) மற்ற மையங்கள் —

(1) சென்னை —சென்னைப் பெருநகருக்கு வரும் குறைந்த வருவாய்ப் பயணிகளின் வசதிக்கென சுற்றுலா முகாம் ரூ. 25.00 இலட்சம் செலவில் கட்ட முடிவு செய்யப்பட்டு ரூ. 12.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

(2) திருச்சிராப்பள்ளி — அவ்வாறே குறைந்த வருவாய்ப் பிரிவுச் சுற்றுலாப் பயணிகட்கென இளைஞர் இல்லம் கட்டுவதற்கு ரூ. 10.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அங்கு சுற்றுலா அலுவலகக் கட்டிடம் ரூபாய் 2.50 இலட்சம் செலவில் கட்ட நிதி ஒதுக்கீடு செய்து, பணி நடந்து வருகிறது.

(3) மதுரை —மதுரைப் பகுதியில் வரலாற்றுத் தொன்மை கொண்ட திருமலை நாயக்கர் மகாலில் இங்கு நடத்தும் ஒலி-ஒளிக் காட்சி சுற்றுலாப் பயணிகட்கு வாய்த்ததொரு நல்விருந்து. 1984-85-ல் மதுரை நகரில் சந்திப்பு நிலையத்தில், சுற்றுலாத் தகவல் மையத்திற்கு மனைப்பொருள் சேர்க்க நிதி ஒதுக்கப்பட்டது.



(4) குற்றாலம்—நீராடி, மகிழும் சுற்றுலாப் பயணிகளுக்கு மேலும் இடவசதியளிக்க, ரூ. 7.97 இலட்சம் செலவில் துயிலக விடுதி ஒன்று கட்ட முடிவு மேற்கொண்டு, இப்பொறுப்பினை குற்றாலம் நகரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு நிதியும் தரப் பெற்றுள்ளது.

(5) ஒகேனக்கல்—ஒகேனக்கல் துயிலக விடுதி மற்றும் சமுதாயக் கூடம் ரூபாய் 3.30 இலட்சம் செலவில் கட்டப் பட்டுள்ளது. மேலும் காவேரியின் குறுக்கே தொங்குபாலம் அமைக்க ரூ. 7.50 இலட்சம் ஒதுக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

(6) ஏற்காடு—ஏற்காடு ஏரி மேம்பாட்டுப் பணிகட்காக ரூ. 3.72 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு அப்பணிகள் நிறைவுற்றன. ரூ. 1.00 இலட்சம் செலவில் ஏற்காட்டில் சீமாட்டி இருக்கை (Lady's Seat) என்னுமிடத்தில் தொலை நோக்காடி இல்லம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. குறைந்த வருவாய்ச் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக அங்கு ரூ. 3.44 இலட்சம் செலவில் துயிலகக் கூடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

(7) கொடைக்கானல்—மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொடைக்கானலில் ரூ. 1.60 இலட்சம் செலவில் இரு தொலை நோக்காடி இல்லங்கள் கட்டப் பெற்றன. ஏரிப்பகுதியை ஒப்பனை செய்யும் முயற்சிக்கென ரூ. 58,100 ஒப்பளிக்கப்பட்டுப் பணிகள் நிறைவேற்றப்பட்டன. எளிய வருவாய்ப் பயணிகளுக்காக கொடைக்கானலில் ரூபாய் 11.95,000 செலவில் துயிலக விடுதி மற்றும் உணவு விடுதி கட்டப் பெற்றன.

1983-84-ல் கொடைக்கானல் அருகிலுள்ள வெள்ளி அருவி (Silver Cascade) என்னுமிடத்தில் சிற்றுண்டிச் சாலை, கழிப்பிடம், உடைமாற்று அறைகள், குளியல் அறைக் கைப்பிடிக் குழல்கள் ஆகியன அமைக்கவென ரூ. 2.60 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. கொடைக்கானலிலுள்ள சுற்றுலாத் தகவல் நிலையத்திற்கு மனைப் பொருட்கள் வாங்க 1984-85-ல் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும், மாவட்ட ஆட்சித் தலைவரும்

அனைத்துத் துறை அலுவலர்களும் தந்துள்ள பரிந்துரைகளை யொட்டி, ரூ. 20 கோடி மதிப்பீட்டில் பெருந் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்தியாவில் இன்றும் பண்டை இயற்கை எழில் குலையாமல் பொலிவோடு திகழும் மலைப்பகுதி களில் ஒன்றான கொடைக்கானல் மேலும் சிறந்த சுற்றுலாத் தலமாக வளருவதற்கு இது வழி செய்யும்.

(8) **பிச்சாவரம்**—பிச்சாவரத்தில், மூன்று கட்டங்களாக நிறைவேற்றும் வகையில் துயிலக விடுதி, சிறுகுடில்கள், படகுத் துறை, சிற்றுண்டிச்சாலை, புதிய படகுகள் வாங்குதல் ஆகிய வற்றிற்காக, அரசு ரூ. 17.28 இலட்சம் ஒப்பளிப்பு செய்தது. இப் பணிகள் நிறைவு பெற்றன. நான்காம் கட்டமாக, 4 குடில்கள் கட்டுவதற்கும், படகுகள் வாங்கவும், ரூ. 5 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. ஐந்தாம் கட்டமாக உணவக விடுதி கட்டவும், மேலும் சில படகுகள் வாங்கவும் ரூ. 7.5 இலட்சம் நிதி ஒப்பளிக் கப்பட்டது. பிச்சாவரம் ஏரிப் பகுதி சுற்றுச் சூழல் மற்றும் இயற்கை வனப்புக்கு முரண்படாமல் தான் எந்தப் பணியும மேற் கொள்ளப்பட வேண்டும் என்பதில் அரசு மிகுந்த கண்ணோட்டம் கொண்டுள்ளது.

(9) **பூம்புகார்**—பூம்புகார் சுற்றுலா வளாகத்தில், சாலை மேம்பாட்டுக்கெனவும், குடிநீர் வசதிக்கென மேல் நிலைத் தொட்டி அமைக்கவும் ஆக ரூ. 8.79 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு அப்பணிகள் முடிவுற்றன. 1983-84-ம் ஆண்டில், இலஞ்சி மன்றத்தில் படிகள் பழுதுபார்க்க ரூ. 15,000 ஒப்பளிக்கப்பட்டது. 1984-85-ல் பார்வையாளர் தங்கும் அறை செப்பனிட ரூ. 95,000 ஒப்பளிக்கப்பட்டது. மேலும், பூம்புகார் சுற்றுலா வளாகத்திற்கு மதிற்சுவர் எழுப்ப ரூ. 5 இலட்சம் தரப்பெற்றது.

(10) **தேரழுந்தூர்**—இந்து சமய அறநிலையத் துறை நிறுவிய தேரழுந்தூர் கம்பர் நினைவுச் சின்னத்தின் கட்ட மைப்புச் செலவுக்கென, அரசு சுற்றுலாத் துறை பங்காக ரூ. 8 இலட்சம் வழங்கியது.

(11) **கோத்தகிரி**—கோத்தகிரியில் இளைஞர் இல்லம் கட்டுவதற்காக ரூ. 4.5 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இப் பணி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நிறை வேற்றப்படும்.



(12) குன்னூர்—குன்னூரில் (நீலகிரி) இளைஞர் இல்லம் கட்டும் பணிக்காக, 1984–85-ல் ரூ. 4 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இப்பணியும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நிறைவேற்றப்படும்.

(13) **எலியட்ஸ் கடற்கரை (சென்னை)**—சென்னை எலியட்ஸ் கடற்கரை பகுதியினைத் தூய்மைப் படுத்தவும், மக்களை மேலும் ஈர்ப்பதற்கு வழிவகைகளைப் பரிந்துரைக் கவுமென இரண்டாம் செயலர் தலைமையில் குழுவொன்று நிறுவப்பட்டது. அதன் துணை கொண்டு பல்வேறு துறை களின் கூட்டு முயற்சியால் இந்தக் கடற்கரைப்பகுதி நன்கு துப்புரவாக்கப்பட்டதுடன், "ஸ்கிமிட்" நினைவுப் பகுதியும் புதுப்பிக்கப்பட்டது. கடற்கரைச் சாலைப் பகுதியில் மரங்கள் நடவும், பாதுகாக்கவும், தோட்டங்கள் அமைக்கவும், பல நிறுவனங்களின் துணை நாடப் பெற்றுள்ளது. இதுபோன்ற அழகுபடுத்தும் திட்டங்கள் மெரினா கடற்கரை மற்றும் பட்டினப்பாக்கம் கடற்கரைப் பகுதிக்கும் விரிவுபடுத்தப்படும்.

**புனல் விளையாட்டு வளர்ச்சி மற்றும் இளைஞர் சுற்றுலா**—இன்றைய சுற்றுலா வளர்ச்சியில் புனல் விளையாட்டு ஒரு புதிய திருப்பம், கடல் ஏற்றத்து நீர் நிலைகளிலும் ஏரிப்பகுதிகளிலும் படகு விடுதல், காற்றுத் தோணி செலுத்துதல், சிறு நாவாய் ஊர்துதல், ஆகியன இன்று பல நாடுகளிலும் இளைஞர்களிடையே மிக வேகமாக வளர்ந்து வரும் நவீன பொழுதுபோக்கு அம்சமாகும். இந்திய அரசும் இவற்றிற்கு முக்கிய இடம் தந்துள்ளது. இந்த அடிப்படையில், மாமல்லபுரம் செல்லும் வழியிலுள்ள முத்துக்காட்டில் இத்தகைய பொழுதுபோக்கு விளையாட்டு கருவிகட்கும், படகுத்துறை வசதிகளுக்கும் என மத்திய அரசு தக்க நிதியுதவி அளிக்க முன் வந்துள்ளது. அன்றாடம் பெருகிவரும் பொது மக்கட் தேவையினைச் சமாளிக்க தற்போது ஒதுக்கியுள்ள ரூ. 5.00 இலட்சம் சாலாது. ஆகவே நடப்பு 1985–86 ஆம் ஆண்டில் கூடுதலாக ரூ. 2.00 இலட்சம் ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாமல்லபுரத்தில் 17—1—1984 அன்று கட்டுமரப் போட்டி நடந்தது.

[1985 ஜூன் 13

இதுபோலவே அழகுதுள்ளும் அமைதிச் செம்பரம்பாக்கம் ஏரியில் 15—4—1984 அன்று காற்றுத் தோணி செலுத்தும் போட்டி ஒன்று நடந்தது.

மத்திய அரசு சுற்றுலாத் துறை தரும் ஊக்கத்தினைத் தொடர்ந்து தமிழக அரசு சுற்றுலாத் துறையும் அண்மையில் முத்துக்காட்டில் தேசிய அளவிலானதொரு படகுப் போட்டியினை நடத்தத் திட்டமிட்டுள்ளது. ஆசியாக் கண்ட அளவிலும் உலகப் பெருநிலையிலும் ஆன போட்டிகள் முத்துக் காட்டிலேயே நடைபெறும் சாத்தியக் கூறுகள் அதிகமாகி வருகின்றன.

அனைத்துலக இளைஞர் ஆண்டினை ஒட்டி மலை வழி நடை பயணங்களுக்கான தடங்கள் இவ்வாண்டில் கொடைக்கானல், நீலகிரிப் பகுதிகளில் இளைஞர்களிடையே சுற்றுச் சார்பு அறிவு பெருகும் வண்ணமும், இயற்கையொட்டி வாழும் மனநிலை வளர்க்கும் பாங்கிலும், இத்துறை அமைத்து நிறைவேற்றி வருகிறது.

### சுற்றுலாத் தகவல் தருதல் மற்றும் விளம்பரம்.

(அ) விளம்பரம்—இத்துறையில் விளம்பரப்பிரிவு கையேடுகள், சுவரொட்டிகள், அஞ்சலட்டைகள், வண்ணப் படங்கள் போன்ற சுற்றுலா வெளியீடுகள் சுற்றுலா கருத்துக்களை மையமாகக் கொண்டு பல படித்தாக வெளியிட்டுள்ளது. பல மொழிகளிலும் சுற்றுலாச் சார்ந்த வார மாத இதழ்களிலும், பல்வேறு நாளிதழ்களிலும் சுற்றுலா ஆர்வத்தைப் பொது மக்களுக்கு ஊட்டும் வகையில் விளம்பரம் வெளியிட்டு வந்துள்ளது.

1985-86-ல் புதிய திட்டங்கள் கருத்தில் உள்ளன. தமிழகத்தினை நான்கு பகுதிகளாக்கி அவற்றிற்குப் பொருத்தமாக வரைபடம் தயாரிக்கப் பெறுகிறது. தமிழ்நாட்டின் கிராமியக் கலை பற்றிய சுவரொட்டிகளும் வெளியிடப்பெறும். வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம்பற்றி அழகிய வண்ண நூலொன்று புனையப் பெற்றுள்ளது. 1985-86-ல் தமிழ் நாட்டிற்கான சுற்றுலாக் கையேடு ஒன்றும் வெளியிடப்பெறும். ரூ. 1.70 இலட்சம் செலவில் 10,000 படிகள் அச்சடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



[1985 ஜூன் 13

இத்துறையில் புகைப்படப் பிரிவையும் சுற்றுலா வளர்ச்சிக்கான ஆதாரப் பணிகளில் பெரிதும் ஈடுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான புகைப்படம் கழுவும் அறை புதிதாகக் கட்டப்பட்டு வருகிறது. மாறிவரும் புதிய உத்திகளையும், வண்ணப்படங்களையும் உருவாக்கத்துணை செய்யும் புகைப்படத் தொகுதி வலுப்படுத்தப்பட்டு, பல நாளிதழ், வார இதழ், வெளியீடுகளுக்கு புகைப்படங்கள் அளிக்கப்படும்.

மேலும் வேறு மொழி நூல் ஆசிரியர்கள் மற்றும் பத்திரிகையாளர்களைத் தமிழகத்துக்கு அழைத்து சுற்றுலா மையங்களையும் கலாச்சாரங்களையும் காணச் செய்து அவர்கள் எழுத்துக்களின் வழி நமது பண்பாட்டை நாடறியச் செய்யும் முயற்சியும் இவ்வாண்டில் மேற்கொள்ளப்படும்.

(ஆ) சுற்றுலாத் தகவல் மையம்—1985-86-ல் சென்னை மீனம்பாக்கம் புதிய விமான நிலையத்தில் சுற்றுலாத் தகவல் மையம் ஒன்று நிறுவப்படும்.

(இ) சுற்றுலாச் சார்ந்த புள்ளி விவரங்கள்—உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் பற்றிய மாதிரி ஆய்வு முக்கிய சுற்றுலா மையங்களில் மேற்கொள்ளப்படும், இவற்றின் வழி தற்போதுள்ள வசதி வாய்ப்புகளின் நிலையும் பயனும் உய்த்தறிவதுடன் சுற்றுலா வழியாக சமூகப் பொருளாதார கண்ணோட்டத்துடன் பரிசீலிக்கப்பட்டு, புதிய அணுகு முறைகளுக்கு உத்திகள் காணப் பெறும். சுற்றுலா புள்ளியியல் பற்றிய கையேடும் தயாரிக்கப் படும்.

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

சுற்றுலா வளர்ச்சிக்கு தமிழக அரசு இருவழிகளில் உதவுகிறது. ஒன்று, சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்கிறது. மற்றொன்று தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து வருகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது திட்டப் பணிகளைச் செவ்வனே நிறைவேற்ற இத்துறை அதற்குப் பங்கு மூலதனமும் கடன் உதவியும் வழங்குவதுடன், திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பினையும் இக்கழகத்திடம் ஒப்படைத்து வருகிறது.

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு பங்கு மூலதனமாகவும், கடன் உதவி யாகவும் ரூ. 181.40 இலட்சம் கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1971-ம் ஆண்டில் நிறுவப்பட்டது. சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்குமிட வசதி செய்து கொடுப்பதிலும், உல்லாசப் பேருந்துகளில் சுற்றுலாப் பயணங்கள் நடத்துவதிலும் இக்கழகம் ஆரம்பத்தில் கவனம் செலுத்தி வந்தது. ஆண்டுகள் பலவாக இக்கழகம் விரைந்து முன்னேறி ஏராளமான சுற்றுலா மையங்களுக்கு உல்லாசப் பயணிகளை அழைத்துச் செல்லும் நிலைக்கு இதன் பணி இன்று பல்கிப் பெருகியிருக்கிறது. தமிழ்நாட்டைக் காண வருகின்ற சுற்றுலாப் பயணிகள் இந்தக் கழகம் அளிக்கும் போக்குவரத்து வசதிகளையும், தங்குமிட வசதிகளையும் பாராட்டி அவற்றையே விரும்பிக் கேட்கின்றனர். இக்கழகத்தின் வரவு-செலவு இப்போது சுமார் ரூ. 400 இலட்சமாக உயர்ந்துள்ளது. குறிப்பிட்ட கால நீண்ட சுற்றுலாப் பயணங்களும், சென்னை நகரில் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைக் கண்டுகளிக்கும் பயணங்களும் மக்களிடையே பிரபலமடைந்துள்ளன. இவை வெளி நாட்டுப் பயணிகளை, முக்கியமாக, தென்கிழக்கு ஆசிய நாடுகளி லிருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகளைப் பெருமளவில் கவர்ந் துள்ளன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு சிங்கப்பூரிலும், கோலாலம்பூரிலும் விற்பனை முகவர்கள் உள்ளனர்.

### ஓட்டல் வசதி.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் "ஓட்டல் தமிழ்நாடு" ஓட்டல்கள் :—

நட்சத்திர ஓட்டல்கள் :

கோயம்புத்தூர்.
மதுரை.



ஓட்டல்கள் :

சிதம்பரம்.
மதுரை.
கன்னியாகுமரி.
ஒகேனக்கல்.
இராமேஸ்வரம்.
தஞ்சாவூர்.
திருச்சிராப்பள்ளி.
திருச்செந்தூர்.
"டிரைவ்-இன்-ரெஸ்டாரெண்ட்". சென்னை.

பயணவழி இல்லங்கள் :

இராணிப் பேட்டை.
உளுந்தூர்பேட்டை.
கிருஷ்ணகிரி.

குறிஞ்சி நகர் இல்லங்கள் :

உதகமண்டலம்.
கொடைக்கானல்.
ஏற்காடு.

கடற்கரை ஓய்வு வளாகங்கள் :

மாமல்லபுரம்.
கன்னியாகுமரி.

படகு இல்லங்கள் :

உதக மண்டலம்.
ஏற்காடு.
முத்துக்காடு.
பிச்சாவரம்.

[1985 ஜூன் 13

**தொலை நோக்காடி இல்லங்கள் :**

கொடைக்கானல்.
உதகமண்டலம்.
ஏற்காடு.

**இளைஞர் இல்லங்கள் :**

ஒகேனக்கல்.
முதுமலை.
கன்னியாகுமரி.
மண்டபம்.
இராமேஸ்வரம்.
பிச்சாவரம்.
உதகமண்டலம்.
ஏற்காடு.
கொடைக்கானல்.
முகாமிடம், மாமல்லபுரம்.

**போக்குவரத்து வசதி :**

இக்கழகத்தின் போக்குவரத்துப் பிரிவில் உள்ள பேருந்துகளின் எண்ணிக்கை வருமாறு :—

| | |
|---|---|
| குளுமை வசதிகொண்ட பேருந்துகள் | 3 |
| சொகுசு பேருந்துகள் | 15 |
| சிறு பேருந்துகள் | 3 |
| குளுமை வசதி கொண்ட அயல்நாட்டு கார்கள் | 5 |
| சுற்றுலா வாடகைக் கார்கள் | 3 |

**அனைத்திந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி :—**

நம்முடைய மாநிலத்தில் சுற்றுலாத் துறையும் தொழில் துறையும் வளர்ச்சி பெற இக்கழகம் ஆண்டு தோறும் 'அனைத்திந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை' நடத்தி வருகிறது. மத்திய மாநில அரசைச் சேர்ந்த பல துறைகளும், நிறுவனங்களும் இப்பொருட்காட்சியில் பங்கேற்கின்றன.



1985 ஜூன் 13]

**நினைவுப் பொருள் பகுதி :**

சுற்றுலாப் பயணிகட்குப் பொருத்தமான சிறு நினைவுப் பரிசுகள், வண்ணப்படங்கள், பட அஞ்சல் அட்டைகள், சுற்றுலா தழுவிய ஓவியங்கள் இவற்றினைத் தொடர்ந்து இப்பகுதி தயாரித்து வருகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் வெளியிடும் பட அஞ்சல் அட்டைகளும், தமிழ்நாடு சுற்றுலா வரைபடமும் மக்கள் ஆர்வத்தினை தூண்டுவனவாகவும், நிறைய வாங்கப்பெறும் நிலையிலும் சிறப்புப் பெற்றுள்ளன.

**சாதனைகள், 1984-85 :**

மாமல்லபுரம் கடற்கரை ஓய்வு வளாகத்தில் 10 தனிக் குடில்கள், 18 சிறு குடில்கள், புதுமை வசதி கொண்ட உணவு விடுதி, நீச்சல் குளம் ஆகியன ரூ. 53.75 இலட்சம் செலவில் புதியதாக ஜூலை 1984-ல் துவங்கப்பட்டன.

**வருங்காலத் திட்டங்கள்:**

1. நாகப்பட்டினத்திலும், குன்னூரிலும் உணவு விடுதியும், தங்கும் விடுதியும் அமைத்தல்.

2. கோவையிலுள்ள ஓட்டலில் கூடுதல் தளம் அமைத்து அறைகள் அதிகப்படுத்துதல்.

3. மாமல்லபுரம் கடற்கரை ஓய்வில்ல வளாகத்தில் மாநாட்டு அரங்கம் அமைத்தல்.

4. திருத்தணி, தேனி, காரைக்குடி, நாகப்பட்டினம், தூத்துக்குடி, பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் பெருவழி விடுதி அமைத்தல்.

5. பல்லவ நாகரிகத்தின் பிரதிபலிப்பாக காஞ்சியில் பல்லவபுரம் என்ற அமைப்பும், ஓட்டலும் கட்டுதல்.

6. குளுமை வசதி கொண்ட புதிய கார்கள் டாக்சியாகப் பயன்படுத்த வாங்குதல்.

7. புதிய வேன்கள் வாங்குதல்.

8. புதிய பேருந்துகள் வாங்கி புதிய 'பேக்கேஜ் டூர்கள்' நடத்துதல்.

9. நிரந்தர கலையரங்கம், கேளிக்கை மையம் முதலிய அமைப்புகளுடன் ஆண்டு முழுவதும் செயல்படும் புதியதொரு நிரந்தரப் பொருட்காட்சி தொடங்குவதற்கு பூர்வாங்கப் பணிகள் செய்தல்.

10. எலியட்ஸ் கடற்கரை, மெரினா கடற்கரை, பட்டினப் பாக்கம் கடற்கரை போன்றவற்றின் இயற்கை சூழல் சிதையாது காத்து சுற்றுலா முக்கியத்துவம் தருதல்.

11. முக்கியச் சுற்றுலா இடங்களுக்கு ஹெலிகாப்டர் பயணங் களைத் துவக்குதல்.

### தமிழகத்தில் சர்வதேச சுற்றுலா வளாகங்கள்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மாமல்லபுரம் கடற்கரை வளாகத்தை உலகில் உயர்ந்து சிறந்த வளாகங்களோடு ஒப்பிடத் தக்க அளவுக்கு மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாமல்ல புரம் செல்லும் வழியில் முத்துக்காட்டிலும் திருவிடந்தையிலும் உலகிலேயே தலைசிறந்த வளாகங்கள் வரிசையில் சேரக் கூடியனவாய் சுற்றுலா வளாகங்கள் புதியதாய் அமைக்கப்படவும் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னையில் வள்ளுவர் கோட்டத் துக்கு அருகில், சர்வதேச சுற்றுலா மையம், தமிழ்ப் பண்பாடு பாரம்பரியம், வரலாற்றுச் சிறப்பு ஆகியவற்றைச் சித்தரிக்கும் அம்சங்களோடு அமைக்கவும் திட்டமிடப்பட்டு வருகிறது. பழைய சட்டக்கல்லூரி விடுதியிருக்கும் இடத்தில் புதிதாக, குறைந்த வருவாயுடைய சுற்றுலாப் பயணிகளும், நடுத்தர மக்களும் பயனடையும் வகையில் ஒரு ஓட்டல் கட்டப்படவிருக் கிறது. சுற்றுலாத்துறை தீவிரமாக பரிசீலித்துவரும் இப்புதிய திட்டங்களுக்கு மொத்த மதிப்பீடு ரூ. 25 கோடியாகக் கூடும். இத்திட்டங்கள் நிறைவுபெறும்போது நம் நாட்டிற்கு வரும் வெளி நாட்டு சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டுக்கு மிக அதிக அளவில் வருகை தரும் வாய்ப்பு ஏற்படும்.

இக்குறிப்பில் கூறப்பட்டுள்ள திட்டங்கள் தவிர, பல புதிய இடங்களை சுற்றுலா தலங்களாக வளர்க்கத் திட்டங்கள் தயாரிக்க சுற்றுலாத் துறை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. சுற்றுலாவினால் ஆங்காங்கே வாழும் மக்கள் எந்த அளவுக்குப்



பயனடைகிறார்கள், சுற்றுலா மையங்களிலும் சுற்றுப்புறங் களிலும் வாழும் ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத்தரம் எவ்வாறு முன்னேறுகிறது என்பது பற்றிய ஆய்வும் நடத்தப்பட்டு வருகிறது. இந்த அடிப்படையில் புதுவகை ஆக்கப் பணிகளும் மேற்கொள்ளப்படும். சுற்றுப்புறச் சூழ்நிலை சுகாதாரத்தை பாதுகாப்பதிலும், இயற்கையெழிலைப் பேணிப் பாதுகாப் பதிலும், சுற்றுலாத்துறை முக்கியமான பங்கை வகிக்கிறது.

[1985 ஜூன் 13

## இணைப்பு — VI

(47 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### மானியக் கோரிக்கை எண் 47.

### செய்தி–திரைப்படத் தொழில் நுட்பவியல் குறித்து கொள்கைக் குறிப்பு

மக்களாட்சி முறை செவ்வனே செயல்பட்டு வரும் நமது நாட்டில் செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் பணி மிகவும் இன்றியமையாததாகும். அரசின் முக்கியத்துவம் வாய்ந்த எவ்வகையான நடவடிக்கைகளிலும் மக்கள் தொடர்பின் தேவை தெளிவாக உணரப்படுகிறது. மக்கள் தொடர்புப் பணிக்குச் சிறப்பான செய்முறைத் திறன்களும், அறிவியல் முறையில் அறிந்து கொள்ளும் நுட்பங்களும் அவசியமாகின்றன. அரசின் கொள்கைகளையும் பல்வேறு சமூக–பொருளாதாரத் திட்டங்களையும் அறிந்து கொள்ளும் உரிமை மக்களுக்குண்டு. அரசின் கோட்பாடுகளையும், அரசு மக்களுக்கு ஆற்றி வருகின்ற பணிகளையும், சாதனைகளையும் பத்திரிகைகள், நூல்கள், வானொலி, தொலைக்காட்சி மற்றும் திரைப்படம் வாயிலாகச் செய்தி-மக்கள் தொடர்புத் துறை மக்களுக்கு எடுத்துரைத்து வருகிறது.

அரசின் ஆக்கப் பணிகளைப் பொதுமக்கள் செவ்வனே புரிந்துகொள்ள அரசின் திட்டங்களை நிறைவேற்றுவதில் அவர்களின் ஒத்துழைப்பை நல்கச் செய்யும் மக்கள் தொடர்புச் சாதனங்களை இத்துறை சீரிய வகையில் திறம்படச் செயலாற்றி வருகிறது.

**விளம்பரம்:**

அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் மக்கள் தெளிவாக உணர்ந்தறியும் நோக்கத்தில் மாநில அரசின் சார்பில் இத்துறை விளம்பரங்களைத் தயாரித்து வெளியிடுகின்றது.



1985 ஜூன் 13]

பல்வேறு அரசுத் துறைகள், பொது நிறுவனங்கள், வாரியங்கள், மாநில அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் பிற நிறுவனங்கள் ஆகியவற்றின் விளம்பரங்கள் பத்திரிகைகளுக்கு இத்துறையின் மூலமே வெளியிடப்படுகின்றன.

**பலநோக்கு விளம்பரப் பணிகள்:**

சென்னையில் ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் பலநோக்கு விளம்பர ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இந்திய அரசின் சார்பில் நடைபெறுகிறது. அக்கூட்டத்தில் இருபது அம்சத் திட்டத்தின் கீழ் ஆற்றப்பட்ட வளர்ச்சிப் பணிகள் பற்றி ஆய்வு செய்யப்படுகின்றது. இக்கூட்டத்தின் பரிந்துரைகள் மீது தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஏழை எளிய மக்களும், கிராமப்புற மக்களும் அரசின் திட்டங்களை எளிதில் அறிந்துகொள்ளும் வண்ணம் இத்துறை பல்வேறு விளம்பரப் பணிகளை மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் மூலம் செயல்படுத்தி வருகிறது.

**கள விளம்பரம்:**

அரசின் வளர்ச்சிப் பணிகள் பற்றிய செய்திகளையும், மக்கள் அத்திட்டங்களில் எவ்வாறு தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும் கள விளம்பரப் பணிகள் மூலம் செய்தியினை மக்களுக்கு இத்துறை எடுத்துரைக்கிறது.

மாவட்டங்களில் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்களின் கட்டுப்பாட்டின் கீழ் 63 திரைப்படக் கருவிகள் உள்ளன. அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும் மக்களுக்குத் தேவையான செய்திகளையும் மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் திரைப் படக் காட்சிகள் கிராமப் பகுதிகளில் நாள்தோறும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

பொது மக்களின் நலனில் அக்கறை கொண்ட இவ்வரசு சிறு சேமிப்பு, தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, குடும்ப நலம் ஆகிய திட்டங்களை பொது மக்கள் அறிந்து கொள்வதற்கேற்ப வில்லுப்பாட்டு, நாடகங்கள், பொதுக் கூட்டங்கள், சிறு அளவிலான பொருட்காட்சிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் மூலம் விளக்கி வருகிறது.

மக்கள் அறிந்து கொள்வதற்கேற்ப சென்னையில் நடைபெற்ற சுற்றுலா மற்றும் வர்த்தகப் பொருட்காட்சியில் இத்துறை எழில்மிகு மாவட்ட அரங்கங்களை இவ்வாண்டும் சிறப்புற அமைத்தது. அந்தந்த மாவட்டங்களின் கலை, கலாச்சாரம், சுற்றுலா இடங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றையும் அவற்றின் முன்னேற்றங்களையும் இந்த அரங்கங்கள் தெளிவாகச் சித்தரித்துக் காட்டின.

பத்திரிகைத் தொடர்பு :

இத்துறை பொது முக்கியத்துவம் வாய்ந்த பத்திரிகைச் செய்திகளை பத்திரிகைகளுக்கு அளித்து வருகிறது. மேலும் செய்தி நிருபர்கள் கூட்டங்கள் அவ்வப்போது ஏற்பாடு செய்து நடத்தப்பட்டு வருகின்றன.

தலைமைச் செயலரும், மற்றும் பிற துறைச் செயலர்களும் அரசின் பல்வேறு ஆக்கப் பணிகளையும், திட்டங்களின் முன்னேற்றங்களையும் வாரம் ஒரு முறை நடத்தப்படுகின்ற செய்தியாளர்கள் கூட்டத்தில் தெரிவிக்கின்றனர்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், மற்றும் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொள்ளும் செய்தியாளர்கள் கூட்டங்களை இத்துறை ஏற்பாடு செய்து வருகிறது.

அரசின் வளர்ச்சித் திட்டங்களை நேரில் அறிந்து அவற்றைத் தங்கள் பத்திரிகைகளில் எழுதிப் பொது மக்களுக்குத் தெரிவிக்கும் வகையில் இம்மாநிலத்தின் பல பகுதிகளுக்குப் பத்திரிகையாளர்கள் அழைத்துச் செல்லப்படுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படும் வனவிலங்கு வார விழாக்களையொட்டி கடந்த ஆண்டு அக்டோபரில் தமிழ்நாடு அரசு பத்திரிகையாளர்களை முதுமலைக்கு அழைத்துச் சென்றது. சுற்றுலா வளர்ச்சியின் முன்னேற்றத்தை மக்களுக்குத் தெரிவிக்கவும், சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கவும், பயணிகளைக் கவரும் வண்ணம் பல்வேறு மேம்பாடுகளை மக்களுக்கு அறிவிக்கவும் மாமல்லபுரம், [illegible], வேடந்தாங்கல் ஆகிய இடங்களுக்கும் செய்தியாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.





இராமநாதபுரம் மாவட்டம், மூன்று மாவட்டங்களாக முறையே இராமநாதபுரம், காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கம் எனப் பிரிக்கப்பட்ட நிகழ்ச்சியினைக் கண்டு மக்களுக்குத் தெளிவான முறையில் தெரியப்படுத்தும் வண்ணம் செய்தியாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். மேலும் தஞ்சாவூரில் நடைபெற்ற இராஜராஜ சோழன் 1,000 மாவது முடிசூட்டு விழாவிற்குப் பத்திரிகை நிருபர்கள் அழைத்துச் செல்லப்பட்டு அதன் பெருமைகளை மக்களுக்குத் தெரியப்படுத்த இத்துறை இப்பணியை மேற்கொண்டது.

அண்மையில் இராமேசுவரத்தில் தாயகம் திரும்பும் இலங்கைத் தமிழர்களுக்கு அரசின் மூலம் அளிக்கப்படும் நிவாரணப் பணிகளை அறிந்து மக்களுக்குத் தெரிவிக்கும் வண்ணம் பத்திரிகையாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் பத்திரிகைத் தொடர்பு அலுவலராகவும் பணி புரிகின்றனர். மாவட்டங்களில் உள்ள பத்திரிகையாளர்கள், அந்தந்த மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வளர்ச்சி வட்டாரங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மாவட்டங்களில் உள்ள செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் இப்பணியினை மேற்கொண்டார்கள்.

வெளிநாட்டிலிருந்து வரும் பத்திரிகையாளர்களும், தொலைக்காட்சியினரும், வானொலி நிலையத்தினரும், பிற மாநிலங்களிலிருந்து வரும் பத்திரிகையாளர்களும் இம்மாநிலத்தின் பல பகுதிகளைப் பார்வையிடவும் அரசின் திட்டங்களை ஆராயவும் இத்துறை அனைத்து உதவிகளையும் செய்கிறது.

சென்னை நகரிலுள்ள பத்திரிகையாளர்கள், மாவட்டத் தலைநகரிலுள்ள பத்திரிகையாளர்கள் செய்தி சேகரிப்பதற்கு உதவியாக இத்துறை அரசுச் சான்றிதழ் வழங்குகிறது.

"வளரும் தமிழகம்" என்ற தலைப்பில் மாதம் இருமுறை அனைத்திந்திய வானொலியில் உரையாற்றும் வாய்ப்பினை இத்துறை ஏற்பாடு செய்கிறது. மாண்புமிகு அமைச்சர்கள்,

அரசுச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், தங்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் துறைகளின் வளர்ச்சிப் பணிகளை, இதன் மூலம் அறிவிக்க இத்துறை ஏற்பாடுகளைச் செய்கிறது.

மாநில வளர்ச்சிப் பணிகளை மக்களுக்கு எடுத்துரைக்க விரும்பினால் தொலைக் காட்சி, வானொலி நிறுவனங்களுக்கும் உதவி வருகிறது. இம்மாநிலத்தில் அச்சாகும் எல்லாப் புத்தகங்களும் இத்துறையின் மூலம் பதிவு செய்யப்படுகிறது.

**தமிழ் தந்திமுறைத் தட்டச்சுப் பொறிப் பணி (TELEX):**

சென்னையுடன் இணைந்து எல்லா மாவட்டத் தலைமையிடங்களிலும் தமிழில் தந்தி முறைத் தட்டச்சுப் பொறியை (TFLEX) அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளது. தபால், தந்தித் துறையுடன் கலந்து இந்த ஏற்பாட்டிற்கான பணி தொடங்கப்பட உள்ளது.

**செய்தியறிவிப்பு நுட்பவியலை நவீனமாக்குதல்:**

செய்தியறிவிப்புத் தொழில் நுட்பவியலில் பெருமளவு நவீனக் கருவிகளைப் பயன்படுத்த இத்துறை திட்டமிட்டுள்ளது. நவீனப்படுத்தும் பணியையும் தொடங்கியுள்ளது. எலக்ட்ரானிக் யுகமாக உள்ள இந்நாளில் 'வீடியோ' சக்தி வாய்ந்த மக்கள் தொடர்புச் சாதனமாக நிலவுகிறது. இத்துறை அவற்றை வாங்கிப் படிப்படியாக அரசின் முக்கிய கள விளம்பரப் பணிக்குப் பயன்படும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் இதற்காகும் செலவு ரூ. 4.75 இலட்சம் ஆகும். பழைய செய்தித் தாள்களையும், பத்திரிகைகளையும், வார, மாத இதழ்களையும் பத்திரிகைச் செய்தித் தொகுப்புகளையும் நிரந்தரமாக வைத்துக் காப்பதற்காக மேற்கோள் பிரிவிற்கென 'மைக்ரோ பிலிம் யூனிட்' ஒன்றை வாங்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது. இத்துறையின் பத்திரிகைச் செய்தி வெளியீட்டுப் பிரிவில் எலக்ட்ரானிக் 'படி பெருக்கும் கருவி' ஏற்கெனவே வாங்கிப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.





**தொலைக் காட்சி நிலையங்கள்:**

1984-85 ஆம் ஆண்டில் குறைந்த சக்தி தொலைக் காட்சி ஒளிபரப்பு நிலையங்கள் வேலூர், ஏர்க்காடு கோயம்புத்தூர், கும்பகோணம், திருச்சிராப்பள்ளி போன்ற இடங்களிலும், சமீபத்தில் நெய்வேலியிலும் மத்திய அரசால் ஆரம்பிக்கப்பட்டன. ஒரு கிலோவாட் சக்தி கொண்ட தொலைக் காட்சி ஒளிபரப்பு நிலையம் கொடைக்கானலில் அமைக்கப்பட்டது. இந்த ஆண்டில் கொடைக்கானலில் 10 கிலோவாட் சக்தியுள்ள உயர் சக்தி தொலைக் காட்சி டிரான்ஸ்மீட்டரும் தொடங்கப்பட உள்ளது. இந்த நிலையங்கள் அமைக்கப்பட்டு விரைவில் பணியைத் தொடங்க இந்த அரசு எல்லா உதவிகளையும், ஒத்துழைப்பையும் அளித்துள்ளது.

மேலும் இவ்வரசு தொலைக் காட்சியில் வண்ணத்தில் ஒளிபரப்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அமைத்துத் தர வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது. கொடைக்கானல் மற்றும் குறைந்த சக்தி தொலைக் காட்சி ஒளிபரப்பு நிலையங்களில் சென்னை தொலைக் காட்சி நிலையத்தில் தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பு செய்ய மைக்ரோவேவ் வசதிகளைச் செய்து தருமாறு மத்திய அரசின் தகவல் தொடர்புத் துறையிடம் கேட்கப்பட்டுள்ளது.

10—3—1985 ஆம் நாளிலிருந்து தமிழ் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பு நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் அரைமணி நேரம் (8-30 மணியிலிருந்து 9-00 மணி வரை) தமிழல்லாத விளம்பரதாரர்களின் இணைத் தொடர் நிகழ்ச்சிகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. தமிழ் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படும் இம்முக்கிய நேரத்தை வேறு நிகழ்ச்சிகளுக்கு ஒதுக்கப்பட்டிருப்பது தமிழ் மக்களுக்கு இடைஞ்சலைத் தருகிறது என்றும், இதனை மாற்றி முன்போலவே தமிழ் நிகழ்ச்சிகளை இந்நேரத்தில் ஒளிபரப்ப வேண்டும் என்றும் மத்திய செய்தி ஒலிபரப்பு அமைச்சருக்கு மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களும், பாரதப் பிரதமருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கடிதங்கள் அனுப்பியுள்ளனர். இரண்டாவது அலைவரிசை ஏற்படுத்தப்படும் போது தமிழ் நிகழ்ச்சிகள் ஒளிபரப்புவதற்காக அதிக நேரம் ஒதுக்கப்படும் என்று மத்திய ஒலிபரப்புத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மாண்புமிகு பிரதமர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பிய பதிலில், சென்னையைப் பொறுத்தவரை குறிப்பிடப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் தமிழ் மொழி பெயர்ப்பு தரப்படவுள்ளது என்றும், இரண்டாம் அலைவரிசை தொடங்கும்போது இது மீண்டும் பரிசீலிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்கள்.

**வானொலி நிலையங்கள் :**

இவ்வாண்டு நாகர்கோவில் வானொலி நிலையம் செயல்படத் தொடங்கியுள்ளது. வட ஆர்க்காடு, தர்மபுரி, சேலம் போன்ற மாவட்டங்களிலும், மலைவாழ் மக்கள் வாழும் பகுதிகளிலும் வானொலி நிகழ்ச்சிகள் கேட்கும் வகையில் இப்பகுதியில் வானொலி நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தப் பட்டுவருகிறது. சென்னை நிலையத்தின் ஒலிபரப்பும் சக்தியை மேலும் அதிகரிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டு வருகிறது.

**மக்கள் தகவல் தொடர்புப் பயிற்சி நிறுவனம் :**

ஏழாவது திட்டக் காலத்தில் தமிழ்நாடு மக்கள் தகவல் தொடர்பு நிறுவனம் ஒன்றை அமைக்க இவ்வரசு ஆய்ந்து வருகிறது. இந்நிறுவனத்தில் தகவல் தொடர்பு சார்ந்த இதழியல், மக்கள் தொடர்பு, விளம்பரம் மற்றும் காட்சி விளம்பரம், தகவல் அளிப்பு மற்றும் தொடர்புச் சாதனங்கள், மற்றும் பொருட்காட்சி போன்ற பொருட்களில் பட்டயப் படிப்பு நடத்த உத்தேசித்துள்ளது.

**புகைப்படப் பிரிவு விரிவாக்கப் பணிகள் :**

இவ்வாண்டு புகைப்படப் பிரிவிற்குப் புதிய புகைப்படக் கருவிகளும், நவீனசாதனங்களும் வாங்கப்பட்டன. தலைமை யிடப் புகைப்படப் பிரிவு நவீன சாதனங்களைப் பெற்று இயங்கி வருகிறது. மேலும் 1985-86 ஆம் ஆண்டில் மூன்று மையங்களில் மூன்று புகைப்படப் பிரிவுகள் தொடங்கப்படவுள்ளன.

**விழாக்கள் :**

வரலாற்றுச் சிறப்புமிகு நிகழ்ச்சிகளையும், பெருந்தலைவர் களின் தியாக வரலாறுகளையும் மக்கள் அறிந்துணரும் நோக்கத்தில் இத்துறை தேசியத் தலைவர்கள், தமிழறிஞர்கள்,





பெருந்தலைவர்களின் பிறந்த நாள் மற்றும் நினைவுநாள் விழாக்களையும் நடத்தி வருகிறது. இவ்வாண்டு தலைசிறந்த விடுதலை வீரரான சுப்பிரமணிய சிவாவின் நூற்றாண்டு விழாவினைத் தர்மபுரி மாவட்டத்திலுள்ள பாப்பாரப்பட்டியில் 26—11—1984 அன்று சிறப்பாகக் கொண்டாடியது. இந்திய அரசின் வேண்டுகோளின்படி மறைந்த குடியரசுத் தலைவர் டாக்டர் இராஜேந்திர பிரசாத் அவர்களின் நூற்றாண்டு விழாவும் கொண்டாடப்பட்டது. மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் பிறந்த நாளையொட்டி இந்திய அரசு அறிவித்ததற்கேற்ப சென்னையில் ஆயிரக்கணக்கான மாணவர்களைக் கொண்டு மரம் நடும் விழா மற்றும் சுற்றுப்புறச் சூழல் பணி நடைபெற்றது. மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் அஸ்திக்கலசம் சென்னையில் பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்குச் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

புதுடெல்லியில் இந்த ஆண்டு நடைபெற்ற குடியரசு நாள் கொண்டாட்ட அணிவகுப்பில், வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கொக்கலிக்கட்டை நடனக் குழுவினர் கலந்து கொண்டனர். சென்னையில் நிகழ்ந்த குடியரசு நாள் அணிவகுப்பு ஊர்வலத்தில் அழகுமிகு வண்ண அலங்கார ஊர்தி ஒன்றையும் கிராமிய நடனங்களையும் இத்துறை ஏற்பாடு செய்தது.

மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு விழா நினைவாக பாரதியாரின் நூல்கள், பாட்டுகள், கட்டுரைகள், கதைகள் என மூன்று வகையாகப் பிரித்து தனித்தனிப் புத்தகங்களாக வெளியிட அரசு முடிவு செய்து தஞ்சாவூரிலுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கென ரூ. 3 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நூலின் முதல் பாகம் விரைவில் வெளிவர இருக்கிறது. புதுடெல்லியில் 10 அடி உயரமுள்ள பாரதியார் சிலையை வைப்பதற்கு இந்திய அரசு இடத்தினைத் தேர்ந்தெடுத்து அறிவித்துள்ளது. சிலை செய்யும் பணி முடிவடைந்துள்ளது. சிலைக்கான பீடத்தை அமைக்கும் பணியினை இந்திய அரசு பொதுப் பணித் துறை ஏற்றுக் கொண்டுள்ளது.

[1985 ஜூன் 13

தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழாவினைத் தொடர்ந்து பெரியாரின் வாழ்க்கை வரலாறு (முதல் தொகுதி), பெரியாரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் முதலியவை வண்ண வரை படங்களிலும் அவரது பொன் மொழிகளைத் தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடும் பணியும் துரிதமாக நடைபெற்று வருகிறது.

1924 ஆம் ஆண்டு கேரளத்தில் 'வைககம்' என்ற இடத்தில் பெரியார் அவர்கள் தீண்டாமைககு எதிராகப் போராடிய வரலாற்றின் நினைவாக, 'பெரியார் வளாகம்' அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக, 91 சென்ட் நிலப் பரப்பினை கேரள அரசு இலவசமாகக் கொடுக்க ஏற்பாடு செய்து வருகிறது. இந்நிலத்தைப் பெற்றவுடன் தமிழ்நாடு அரசு பணியினைத் தொடரும்.

**பொருட்காட்சி :**

பொருட்காட்சிகள் பொழுதுபோக்கு அம்சங்களைப் பெற்றிருப்பதோடு மட்டுமல்லாமல், மக்களுக்குக் கல்வி அறிவூட்டும் சாதனமாகவும் பயன்படுகின்றன. 1978 முதல் இதுவரையில் இத்துறை 26 பொருட்காட்சிகளை நடத்தியுள்ளது. நுழைவுக் கட்டணம், அரங்கு வாடகை, உரிமைக் கட்டணங்கள், மின் கட்டணம் முதலிய வகையில் நிகர வசூல் ரூ. 367 இலட்சம் இத்துறைக்கு வருமானமாக வந்துள்ளது. கட்டுமானப் பணிகள், மின் இணைப்பு, கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றுக்கான செலவு ரூ. 177 இலட்சம், பொருட்காட்சியில் பங்கு கொள்ளும் அரசுத் துறைகளும், நிறுவனங்களும் ரூ. 88 இலட்சம் செலவு செய்துள்ளன. நிகர லாபம் அரசுக்குச் சுமார் ரூ. 102 இலட்சம் என்ற அளவில் கிடைத்துள்ளது. நாட்டிலேயே அரசுக்கு இவ்வகையில் வருமானத்தை ஈட்டித் தருகின்ற தனிப் பெருமையுடன் தமிழ்நாடு செய்தித் துறை செயல்பட்டு வருகிறது.

1984 அக்டோபரில் புதுடெல்லியில் நடைபெற்ற பூல்வலான்டி-சாயிக் விழாக் கொண்டாட்டத்தில் இத்துறை பங்கேற்றது. புதுடெல்லியில் நடைபெற்ற இந்திய உலக வர்த்தகப் பொருட்காட்சியில் தமிழ்நாடு அரங்கும் பங்கு கொண்டது.



[1985 ஜூன் 13

**நினைவகங்கள் :**

சென்னையிலுள்ள வள்ளுவர் கோட்டம், அண்ணா சதுக்கம், காமராஜ் இல்லம், இராஜாஜி நினைவகம், காமராஜ் நினைவகம் ஆகியவையும், காஞ்சிபுரத்திலுள்ள அண்ணா இல்லம், ஈரோட்டிலுள்ள பெரியார்-அண்ணா நினைவகம், தர்மபுரி மாவட்டத்திலுள்ள தொரப்பள்ளியில் அமைந்துள்ள இராஜாஜி நினைவகம், தில்லையாடியிலுள்ள வள்ளியம்மை நினைவு மண்டபம், விருதுநகரிலுள்ள காமராஜ் நினைவகம், எட்டய புரத்திலுள்ள பாரதியார் மண்டபம், ஒட்டப்பிடாரத்திலுள்ள வ.உ.சி. இல்லம், கன்னியாகுமரியிலுள்ள காந்தி மண்டபம் ஆகியவையும் செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப் பாட்டிலுள்ள அரசின் நினைவகங்களாகும்.

பேரறிஞர் அண்ணா எழுதிய நூல்களும் அவரைப் பற்றிய நூல்களும் அடங்கிய நூலகம் ஒன்றினை ஏற்படுத்தும் பணி முடிவுறும் நிலையில் உள்ளது.

ரூ. 11 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் சென்னையிலுள்ள வள்ளுவர் கோட்டத்தை மேம்படுத்தும் பணி நிறைவேற்றப் படுகிறது. அழகுபடுத்துதல், பார்வையாளர்களுக்குப் புதிய வசதிகள் செய்து தருதல், கடைகள், சிற்றுண்டிச் சாலை கட்டுதல், பேருந்துகள் நிற்கக் கூடாரம் கட்டுதல், சுற்றுச் சுவர் அமைத்தல், தோரணவாயிலின் எழிலை மேம்படுத்துதல், பூங்கா அமைத்தல் ஆகிய பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

கிண்டியிலுள்ள இராஜாஜி நினைவகத்தில் ரூ. 3 இலட்சம் செலவில் இராஜாஜி அருங்காட்சியகம் ஒன்றினை அமைத்துள்ளது.

மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து சென்னை வரும் சாலையில் கத்திப்பாரா சந்திப்பில் ரூ. 11.25 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேருவிற்குச் சிறப்பானதொரு நினைவுச் சின்னம் ஏற்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

[1985 ஜூன் 13

நாகர்கோயிலில் செய்குத்தம்பி பாவலருக்குச் சிறப்பளிக்கும்
வகையில் ரூ. 4.00 இலட்சம் செலவில் நினைவகம் ஒன்றினைக்
கட்டும் பணி முடியும் தருவாயில் உள்ளது.

தர்மபுரி மாவட்டத்திலுள்ள பாப்பாரப்பட்டியில் சுப்பிரமணிய
சிவா நினைவுத் தூண் 24—11—1984-ல் அமைக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நாகர்கோவிலில் தலைவர்
ப. ஜீவானந்தம் சிலை, அதங்கோட்டில் அதங்கோட்டாசான்
சிலை, சேலத்தில் காமராஜர், விஜயராகவாச்சாரியார் சிலைகள்
ஆகியவை மாண்புமிகு முதலமைச்சரால் திறந்து வைக்கப்
பட்டன. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள திருமயத்தில்
சத்தியமூர்த்தி அவர்களின் நினைவாக நூலகம் ஏற்படுத்து
வதற்கும், சிலையமைப்பதற்கும் நிலம் கையகப்படுத்தும் பணி
முடிவடைந்துள்ளது.

குற்றாலத்திலுள்ள இரசிகமணி டி. கே. சிதம்பரநாதரின்
இல்லத்தையும், திருச்சிராப்பள்ளியிலுள்ள வ. வே. சு. ஐயர்
இல்லத்தையும், திருவல்லிக்கேணியிலுள்ள மகாகவி
பாரதியார் இல்லத்தையும், நாகர்கோவிலில் கலைவாணர்
என். எஸ். கிருஷ்ணன் வாழ்ந்த இல்லத்தையும் அரசே
மேற்கொண்டு அவற்றை நினைவகங்களாக நிர்வகிக்கும்
திட்டத்தினை அரசு ஆலோசித்து வருகிறது.

இவ்வாண்டில் காரைக்குடியில் கவியரசு கண்ணதாசன்
நினைவாக ரூ. 40 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் மணிமண்டபம்
ஒன்றினைக் கட்டவும், திருப்பூரில் ரூ. 5 இலட்சம் மதிப்பீட்டுச்
செலவில் திருப்பூர் குமரனின் நினைவகம் ஒன்றினை
ஏற்படுத்தவும் தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது.

**செய்தி நிலையங்கள் :**

சென்னை, மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் மூன்று
செய்தி நிலையங்கள் உள்ளன. இவற்றிற்கென நூலகங்களும்,
படிக்கும் அறைகளும், திரைப்படம் நடத்துவதற்கான வசதி
களும் உள்ளன. பொதுமக்களுக்கு அளித்திடும் வகையில்
பொதுவான செய்திகளைத் தொகுத்து வைத்துள்ளன. பொதுக்



1985 ஜூன் 13]

கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கான அரங்கு
களுடன் செய்தி நிலையங்களைப் பிற மாவட்டங்களிலும்,
புதுடெல்லியிலும் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில்
உள்ளது.

**கலைவாணர் அரங்கம் :**

சென்னை அரசினர் தோட்டத்திலுள்ள கலைவாணர் அரங்கம்
குளிர்சாதன வசதி கொண்ட அரங்கமாகும். அரசு நிகழ்ச்சிகள்,
தனியார் நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள் இங்கு
நடைபெறுகின்றன. தனியார்களுக்குக் கட்டணத்தின் பேரில்
ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அரசுத் துறைகளுக்குச் சலுகைக்
கட்டண விகிதத்தில் அளிக்கப்படுகிறது. 1984 ஆம் ஆண்டு
ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் 1985 மார்ச் 31 ஆம் தேதி வரையில்
இந்த அரங்கத்தின் மூலம் ரூ. 2.65 இலட்சம் அரசுக்கு வருமானம்
கிடைத்துள்ளது.

கலைவாணர் அரங்கில் மின்வசதி தொடர்ந்து கிடைப்பதற்கு
ஜெனரேட்டர் நிறுவப்பட்டுள்ளது. மேலும் நவீன ஒலிபெருக்கி
பொருத்துவதற்கான அமைப்புப் பணிகளை அரசு மேற்கொள்ளத்
திட்டமிட்டுள்ளது.

**அண்ணா கலையரங்கம் :**

வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேலூரில் அமைந்துள்ள
அண்ணா கலையரங்கத்தில் அரசு விழாக்களும், கலை நிகழ்ச்சி
களும் நடத்தப்படுகின்றன. தினமும் திரைப்படக் காட்சிகளும்
நடத்தப்படுகின்றன. 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 2.19 இலட்சம்
நிகர வருமானம் இந்த அரங்கத்திலிருந்து பெறப்பட்டுள்ளது.

மாவட்டத் தலைநகரங்களில் செய்தி நிலையம் உட்பட
கலையரங்கங்கள் கட்டுவதற்கு ஆன திட்டத்தை அரசு
மேற்கொண்டு உள்ளது. இதன் அடிப்படையில் கோயம்புத்தூரில்
சிறப்பானதொரு கலையரங்கம் அமைக்கும் பணி விரைவில்
தொடங்கப்பட இருக்கிறது. இதற்கென 1985-86-ல் ரூ. 15 இலட்சம்
ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுபோன்று மதுரையில்
கலையரங்கம் கட்டுவதற்கான கருத்துருவொன்று அரசின்

[1985 ஜூன் 13

பரிசீலனையிலுள்ளது. மேலும் புதிய மாவட்டங்களான பசும்பொன் முத்துராமலிங்கம், காமராசர், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் செய்தி நிலையம் மற்றும் கலையரங்கங்களைக் கட்டுவதற்கும் அந்தந்த மாவட்டத் திட்டங்களில் (மாஸ்டர் பிளான்) சேர்க்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

தமிழரசு :

தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியாகும் 'தமிழரசு' இதழ்கள் மூலம் அரசின் நோக்கங்களும் கொள்கைகளும் மக்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன. மாதம் இருமுறை வெளிவரும் தமிழ் இதழ்கள் சராசரி 45,000 பிரதிகளும், ஆங்கில இதழ்கள் 5,000 பிரதிகளும் விற்பனை செய்யப்படுகின்றன. தனியார், முகவர்கள், சந்தாதாரர்கள் மூலமும், மாவட்டங்களிலுள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மூலமும் இந்த இதழ்கள் விற்பனை செய்யப்படுகின்றன. அரசின் பல்வேறு துறைகளின் வளர்ச்சிப் பணிகள், சாதனைகள் அடங்கிய சிறப்பு மலர்களும் வெளியிடப்படுகின்றன. 'தமிழரசு' இதழ்களுடன் அவ்வப் போது இலவச இணைப்புகளும் அச்சிட்டு அவற்றுடன் வழங்கப் படுகின்றன.

'தமிழரசு' அலுவலகத்திலுள்ள வெளியீட்டுப் பிரிவு, புத்தகங்கள், துண்டு வெளியீடுகள், சுவரொட்டிகள் ஆகியவற்றை வெளியிட்டு வருகிறது. 1984 ஆம் ஆண்டில், இந்த அரசு இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் எய்திய சாதனைகள் பற்றிப் புத்தகங்களை வெளியிட்டுள்ளது. முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் குறித்து ஆங்கிலத்திலும் தமிழிலும் பல கையேடுகளை வெளியிட்டதுடன் வண்ணச் சுவரொட்டிகளையும் வெளியிட்டது. 'தமிழ்நாடு ஒரு பார்வையில்' என்ற தலைப்புள்ள அழகிய வெளியீடு ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டு மாவட்டங்களிலுள்ள செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் மூலம் பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. தனியார் நிறுவனங்கள் தமிழரசில் தங்களுடைய விளம்பரங்களை வெளியிட்டுப் பயன் பெறுகின்றன.



1985 ஜூன் 13]

தமிழரசு அச்சகம் :

1984 ஆம் ஆண்டு தமிழரசு அச்சகத்தை விரிவுபடுத்துவதற்கு ரூ. 6.5 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

'தமிழரசு' தமிழ்—ஆங்கில இதழ்கள் இங்கு அச்சிடப் படுகின்றன. இந்த அச்சகத்தில் அச்சாகும் வேறு இதழ்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

1. திட்டம் (மாதம் ஒருமுறை—மத்திய அரசு வெளியீடு).

2. உழைப்பவர் உலகம் (மாதம் ஒரு வெளியீடு—தொழிலாளர் துறை வெளியீடு).

3. திருக்கோயில் (மாதம் ஒரு வெளியீடு—இந்து சமய அறநிலையத் துறை வெளியீடு).

4. தமிழகக் கல்வி (காலாண்டுக்கு ஒருமுறை—கல்வித் துறை வெளியீடு).

5. தமிழர் விளையாட்டு மடல் (மாதம் ஒருமுறை—விளையாட்டுப் பயிற்சித் துறை வெளியீடு).

அரசு விழாக்கள், அழைப்பிதழ்கள், அரசு ஆற்றிய பணிகளை விளக்கும் வகையில் துண்டு வெளியீடுகள், மடிப்புகள், சிறு கையேடுகள் அனைத்தும் இங்கு அச்சாகின்றன.

திரைப்படங்களுக்கு உதவித் தொகையளித்தலும், சிறந்த திரைப் படங்களுக்கும் கலைஞர்களுக்கும் பரிசுகள் வழங்குதலும்.

மதுவிலக்கு, சாதிமுறையைப் போக்குதல், தீண்டாமை ஒழிப்பு, தேசிய ஒருமைப்பாட்டை ஊக்குவித்தல் முதலிய சிறப்பான கொள்கைகளைப் பரப்பிடும் வகையில் சமூகப் பொருளாதாரக் கோட்பாட்டு அடிப்படையில் தயாரிக்கப்படும்

[1985 ஜூன் 13

சிறந்த தமிழ்ப் படங்களின் தன்மையினை ஊக்குவிக்கும் நோக்கத்தில், சிறந்த தமிழ்ப் படங்களுக்கு 1978 ஆம் ஆண்டு பிப்ரவரியில் திரைப்பட உதவித் தொகை திட்டம் செயலாக்கப் பட்டது. இத்திட்டத்தின்படி தரமான திரைப்படங்களிலிருந்து மிக கவனத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து தரமான திரைப் படங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு இலட்சம் ரூபாய் வீதம் நிதி உதவியினை அரசு அளிக்கிறது. 1978--79 ஆம் நிதி ஆண்டு முதல் மிகச் சிறந்த கலை நுட்பமும் உயர்ந்த தொழில் நுட்பத் திறனும் கொண்ட தமிழ்த் திரைப்படங்களைத் தயாரிப்பதற்கு ஊக்கமும் ஆக்கமும் நல்கிடும் வகையில் ஆண்டுதோறும் அரசு விருதுகள் வழங்கும் திட்டம் செயலாக்கப்பட்டது. சிறந்த திரைப்படக் கலைஞர்களுக்கும், தொழில் நுட்பக் கலைஞர்களுக்கும் பரிசுகளும், விருதுகளும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப் படுகின்றன.

ஜவகர்லால் நேருவின் நினைவாக, சிறந்த குழந்தைகள் திரைப்படங்கள் மூன்றுக்கு, மூன்று பரிசுகள் வழங்கப் படுகின்றன. ரூ. 5 ஆயிரம் மதிப்புள்ள தங்கப் பதக்கமும், ரூ. 10 ஆயிரம் ரொக்கப் பணமும் முதல் பரிசாகவும் மற்ற இரண்டு படங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 5 ஆயிரம் மதிப்புள்ள தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு திரைப்படம், தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்.**

திரைப்படத் தயாரிப்பு, தொலைக்காட்சி மற்றும் இவை தொடர்பான படங்கள் ஆகிய எல்லாப் பிரிவுகளிலும் பயிற்சி அளித்து தேர்வுகள் நடத்தி தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு டிப்ளமாக்கள் வழங்கப்படுகின்றன. திரைப்படத் தொழிலில் காணும் சீரிய சிறப்பு அம்சங்களை அறிந்து பாராட்டும் வகையில் மக்களுக்கு அறிவுறுத்தலும் திரைப்படங்கள் குறித்து ஆய்வுகள் நடத்திட வாய்ப்பளித்தலும் இப்பயிற்சி நிறுவனத்தின் நோக்கமாகும்.



1935 ஜூன் 13]

சென்னையிலுள்ள தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக் காட்சி நிறுவனத்தில் கீழ்க்கண்ட பயிற்சிப் பிரிவுகள் உள்ளன:

| பயிற்சி | காலவரையறை | எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| இயக்குதல் திரைக்கதை எழுதுதல். | 3 ஆண்டுகள் | 24 |
| திரைப்படப் பதிவு .. | 3 ஆண்டுகள் | 44 |
| ஒலிப்பதிவு ஒலிப்பொறியியல் .. | 3 ஆண்டுகள் | 29 |
| படச் சுருள் கழுவுதல் .. | 3 ஆண்டுகள் | 29 |
| படத் தொகுப்பு .. | 2 ஆண்டுகள் | 18 |
| நடிப்பு .. .. .. | 1 ஆண்டு | 19 |

(சான்றிதழ் பெறும் பயிற்சி)

மொத்தம் 163 மாணவர்கள் பல்வேறு பிரிவுகளில் பயில்கின்றனர்.

மாணவர்கள் தயாரித்த Rheroric of Cortinuity, என்ற கருத்து விளக்கப் படம் இந்த ஆண்டு புதுடெல்லியில் நடந்த பத்தாவது உலகத் திரைப்பட விழாவில் பார்வையாளர்களுக்குக் காட்டுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இந்தியாவிலேயே இந்தப் பயிற்சி நிறுவனத்தில்தான் படச் சுருள்கள் கழுவுதல் பயிற்சியும், நடிப்புப் பயிற்சியும் அளிக்கப் படுகிறது.

திரைப்படமெடுக்கும் அரங்குகளும், இந்த நிறுவனத்திலுள்ள கருவிகளும் தனிப்பட்ட தயாரிப்பாளர்களுக்கு வாடகை முறையில் அளிக்கப்படுகின்றன. வருவாய் கிடைப்பதுடன் இந்த ஏற்பாட்டின்படி அனுபவம் மிக்க தொழில் நுட்பக் கலைஞர்கள் திரைப்படத் தயாரிப்பில் எவ்வாறு செயல்படுகின்றனர் என்பதை இங்கு பயிலும் மாணவர்கள் நேரில் கண்டறிவதற்கும் அவர்களுடன் இணைந்து பணி செய்வதற்கும் வாய்ப்பாக அமைந்துள்ளது.

இந்நிறுவனத்திலிருந்து பயிற்சி முடித்துச் சென்ற மாணவர்கள் தனியார் துறையிலும், பொதுத் துறையிலும் குறிப்பாகத் தொலைக்காட்சி நிலையங்களிலும், திரைப்படத் தொழிலிலும் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். பழைய மாணவர்கள் பலர், திரைப்படத் தொழிலில் ஏற்கெனவே சிறப்படைந்துள்ளனர்.

1984-85 ஆம் ஆண்டில் ரூ. 6.51 இலட்சம் மதிப்புள்ள எடிட்டிங் மற்றும் பிராசசிங் இயந்திரங்களை இறக்குமதி செய்ய அரசு அனுமதி வழங்கியுள்ளது. கூடுதலாக மாணவர்களைச் சேர்க்கும் பொருட்டு நடப்பாண்டில் ரூ. 5 இலட்சம் செலவில் மாணவர்கள் தங்கும் விடுதி விரிவாக்கப்படவுள்ளது. வெளிநாட்டிலிருந்து ரூ. 15 இலட்சம் செலவில் கருவிகள் வாங்கும் செயற்குறிப்பும் மற்றும் பூங்காவை மேம்படுத்துவதற்கும் ஏழாவது திட்டத்தின் கீழ் செயல் திட்டம் உள்ளது.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு:

பொது மக்களுக்கு அரசின் ஆக்கப் பணிகளைத் திரைப் படங்கள் மூலம் தெரியப்படுத்துவது திரைப்படப் பிரிவின் நோக்கமாகும்.

இம்மாநிலத்தில் நடைபெறும் அரசின் ஆக்கப் பணியையும் குடும்ப நலம் மற்றும் சிறப்புமிக்க விழாக்களைத் திரைப்படம் எடுத்து மாதம் இருமுறை செய்திப் படங்களாகத் தயாரிக்கிறது இப்பிரிவு. இந்த அரசின் பல்வேறு துறைகளின் சார்பிலும் செய்திப் படங்களை இப்பிரிவு தயாரிக்கிறது. 35 மி.மீ. பிரதிகள் எடுக்கப்பட்டு இந்திய அரசின் திரைப்படப் பிரிவு மூலம் விநியோகிக்கப்படுகின்றன. செய்திப் படங்களும், கருத்து விளக்கப் படங்களும் 16 மி.மீ. பிரதிகள் எடுக்கப்பட்டு கிராமப் புறங்களில் மக்களுக்குத் திரையிடும் பொருட்டு மாவட்ட விளம்பரப் பிரிவுகளுக்கு அனுப்பப்படுகின்றன.

நடப்பாண்டில் குடும்ப நலத் திட்டத்தின் முக்கியத்துவத்தை விளக்கும் வகையில் ரூ. 15.15 இலட்சம் செலவில் இத்துறை மூலமாக 10 படங்கள் தயாரிக்க ஒப்பளிக்கப்பட்டு 6 படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. மற்றும் பல் பாதுகாப்பு, தீண்டாமை ஒழிப்பு, சமூக நலம் ஆகிய ஒவ்வொன்றிலும் ஒரு கருத்து விளக்கப் படம் தயாரித்து வெளியிடப்பட்டுள்ளது. மேலும்,



மகாகவி பாரதியார் வாழ்க்கை வரலாறு, சுற்றுலா மற்றும் முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் பற்றிய கருத்து விளக்கப் படங்கள் வெளியிடப்படவுள்ளன.

தமிழ்நாடு திரையரங்குக் கழகம்:

தமிழ்நாடு திரையரங்குக் கழகம், பொறுப்பு வரையறுக்கப் பட்ட அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக அமைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் பல பகுதி நிலைத் திரையரங்குகளைக் கட்டவும், அவற்றை நிலையான திரையரங்குகளாக மாற்றவும் புதிதாக நிலையான திரையரங்குகள், டூரிங் திரையரங்குகள், திறந்த வெளித் திரையரங்குகள் கட்டவும், திரைப்படக் கருவிகள் வாங்கவும் நிதி உதவியளிப்பது இக்கழகத்தின் முக்கிய நோக்கம் ஆகும். பகுதி நிலைத் திரையரங்குகள் கட்டுவதற்கும் நிலையான திரையரங்குகளாக மாற்றவும் இக்கழகம் இதுவரை கடன் அனுமதித்துள்ளது.

இக்கழகத்தின் நிதி ஆதாரம், செலுத்திய மூலதனம் ரூபாய் 35 இலட்சம் ஆகும். தமிழ்நாடு அரசால் செலுத்தப்பட்டதும், அரசின் நீண்டகாலக் கடன் ரூபாய் 15 இலட்சம் அடங்கியதும் ஆகும். ஒரு திரையரங்கிற்கு ரூபாய் 1.20 இலட்சம் அதிக அளவுக் கடன் தொகை வழங்கப்படுகிறது. இத்தொகை 60 சமமான மாதத் தவணைகளில் ஆண்டுக்கு 17 சதவீத வட்டியுடன் திருப்பி வசூலிக்கப்படுகிறது. மொத்தம் ரூபாய் 89.90 இலட்சம் கடன் தொகை 80 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்நாள் வரையில் 76 பகுதி நிலை திரையரங்குகள், திரைப் படங்களைத் திரையிடத் தொடங்கி உள்ளன.

தனிப்பட்டவர்களுக்கு இதுவரை கடன் வழங்கி வந்துள்ள இக்கழகம், ஏர்க்காடு நகரியத்தில் ரூபாய் 2.80 இலட்சம் செலவில் ஒரு திரையரங்கினைக் கட்டியுள்ளது. 1—10—1984 முதல் இத்திரையரங்கில் திரைப்படம் காட்டப்படுகிறது. எளிய தவணை முறையில் 17 சதவீத வட்டியுடன் ஏர்க்காடு நகரியத்திடமிருந்து வசூலிக்கப்படுகிறது. கடன் கணக்கில் இந்நகரியம் ரூபாய் 1.09 இலட்சம் அளித்துள்ளது.

கடன் பெற்ற 80 பேரில் 36 பேர் தங்கள் கடன் தொகை முழுவதையும் செலுத்தி விட்டனர். இக்கழகம் 27 பேர் மீது சிவில் வழக்குகளைத் தாக்கல் செய்து ரூபாய் 54.03 இலட்சம் அளவிற்கு வரவேண்டியுள்ள அசல், வட்டித் தொகையை

வசூலிக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. இவ்வழக்குகளில் 12 வழக்குகள் இக்கழகத்திற்குச் சாதகமாக முடிவுற்றன. எஞ்சியவை நீதிமன்றத்தில் உள்ளன.

**1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) சட்டமும், 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) விதிகளும்.**

தமிழ்நாட்டு மக்களில் பெரும்பாலோருக்கு, குறிப்பாக மத்திய தர மக்களுக்கும் பொழுதுபோக்கு ஆதாரமாகத் திரைப்படத் தொழில் அமைவதுடன் ஊராட்சிகள், நகராட்சிகள், அரசாங்கம் ஆகியவற்றுக்கு வருவாய் தரும் ஆதாரமாகவும் உள்ளது. திரையரங்குகளை அதிகரிக்கவும் திரைப்படத் தொழிலின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்திடவும் விதிகளும் விதிமுறைகளும் எளிமையாக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக இம்மாநிலத்திலுள்ள முக்கிய நகரங்களிலும், மாநகரங்களிலும் நல்ல வசதியான திரையரங்குகள் பெருமளவில் கட்டப் பட்டுள்ளன. மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் நோக்கத்துடன் எளிதில் தீப்பிடிக்கும் கூரைகளை நீக்கி, தீப்பிடிக்காத மேற் பகுதிகளை அமைத்திடவும், பிற பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றிடவும் ஏற்ற வகையில் டூரிங் திரையரங்குகள் கட்டுவதற்கான முன் நிபந்தனைகள் வகுக்கப்பட்டுள்ளன. இக்கொள்கையின் விளைவாக டூரிங் திரையரங்குகள் கட்டும் செலவு வெகுவாக உயர்ந்துள்ளது. திரையரங்குகளின் உரிமையாளர்களின் பொதுவான கோரிக்கையைக் கவனமுடன் ஆய்ந்து, அவர்களின் உரிமங்களின் கால அளவு 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் திரைப்படம் பார்க்கச் செல்லும் பொது மக்களுக்கான அடிப்படை வசதிகளும் பாதுகாப்பும் இருத்தல் வேண்டுமென்று கண்டிப்புடன் அரசு அறிவித்துள்ளது. திரையரங்குகளில் கள்ளச் சந்தையில் நுழைவுச் சீட்டுகள் விற்பதைத் தவிர்க்க, உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்குத் தக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. நுழைவுச் சீட்டுகள் விற்பனையில் திரையரங்கு உரிமையாளர் களும் கள்ளச் சந்தை விற்பனைக்கு உடந்தையாக இருந்தால் கடும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பணிக்கப்பட்டுள்ளன. 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) சட்டத்திலோ அல்லது 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்



படங்கள் (முறைப்படுத்தல்) விதிகளிலோ இது சம்பந்தமாகத் தண்டனை அளிப்பு விதிமுறையை ஏற்படுத்தும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

இம்மாநிலத்திலுள்ள ஆட்சி மொழியாகிய தமிழைப் பேசும் பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, இம்மாநிலத்திலுள்ள திரைப்பட அரங்குகள், ஆண்டில் ஒன்பது மாதங்களுக்கு மேற்படாத கால அளவிற்காவது தமிழ்த் திரைப் படங்களைத் திரையிட வேண்டுமென்று சட்டம் இயற்றப் பட்டுள்ளது. 'வீடியோ கேசட் ரிக்கார்டர்கள்" மூலம் தொலைக் காட்சித் திரையில் (சினிமாட்டோகிராப்) திரைப் படங்களைக் காட்டும் நிலையினால் கேளிக்கை வரி இழப்பு ஏற்படுகிறது. இதைத் தடுக்க 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீடியோ கேசட் ரிக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சித் துறையில் சினிமாட்டோ கிராப் படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டம் இயற்றப்பட்டது.

ஆபாசத் திரைப்பட விளம்பரங்கள் அதாவது சுவரொட்டிகள், பேனர்கள் முதலியவற்றைத் தடுத்திடும் பொருட்டு, திரைப்பட விளம்பரச் சாதனங்களைத் தணிக்கை செய்யச் சட்டமியற்றவும், போக்குவரத்திற்குத் தடையும் ஊறும் ஏற்படுத்தும் வகையில் சாலைப் புறங்களில் விளம்பரங்கள் செய்வதை முறைப்படுத்த அல்லது தடுக்க மற்றொரு மசோதா கொண்டு வரவும் அரசு ஆலோசனை செய்து வருகிறது.

1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப் படுத்தல்) சட்டத்திற்கு விரிவான திருத்தம் கொண்டு வர மசோதா ஒன்றை நிறைவேற்ற அரசு கருதியுள்ளது. இம்மசோதா நிறைவேற்றப்பட்டால், 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப் படங்கள் (முறைப்படுத்தல்) சட்டத்தின் கீழ் உள்ள விதிகளும் விதிமுறைகளும் மேலும் எளிமையாக்கப்படும்.

திரைப்பட அரங்குகளின் உரிமைதாரர்கள், திரையரங்குகளில், படம் பார்ப்பவர்களைக் காப்புறுதி செய்வதைக் கட்டாயப் படுத்துவது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது.

குளிர்சாதன வசதியுள்ள திரையரங்குகளில் குளிர்சாதன வசதி அளிக்கப்படாதது, திரைப்படம் பார்ப்பவர்களின் உடல் நலத்தைப் பாதிப்பதுடன் உரிமம் பெற்றவர்களின் ஏமாற்று

136404

நடவடிக்கை எடுக்கும் உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்கு, குளிர்சாதன வசதியுள்ள திரையரங்குகளில் திடீர் சோதனை நடத்தி அங்கு குளிர்சாதன வசதி உரிய முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிந்து அவ்வாறு இல்லையெனில் அத்தகைய திரையரங்குகளின் உரிமதாரர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

1—7—1978-க்கு முன்னதாக தமிழ்நாட்டில் மொத்தம் 1,728 திரையரங்குகள் மட்டுமே இயங்கி வந்தன. அவற்றில் 36 திரை அரங்குகள் குளிர் சாதன வசதி செய்யப்பட்டு இருந்தன. 31—3—1985-ல் 2,423 திரை அரங்குகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 82 திரை அரங்குகள் குளிர் சாதன வசதிகளுடன் செயல்படுகின்றன.

**தமிழ்நாடு 1984-85 ஆம் ஆண்டு தொலைக்காட்சியில் வீடியோ கேசட் ரிக்கார்டர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டம்.**

வீடியோ கேசட் ரிக்கார்டர்கள் மூலம் பெருமளவில் தொலைக்காட்சி திரையில் திரைப்படங்கள் காட்டப்படுவதால் அரசுக்குக் கேளிக்கை வரி மூலம் வரும் வருமானத்தில் இழப்பு ஏற்படுதல் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. எனவே, வீடியோ கேசட் ரிக்கார்டர்கள் மூலம் திரையிடப்படும் படங்களை ஒழுங்குபடுத்த அரசு தீர்மானித்தது. வீடியோ நூலகங்களை வைத்துக் கொள்ளுதல், வீடியோ படங்களை உரிமம் வழங்கப்பட்ட இடத்தில் மட்டும் காட்டுதல் போன்ற நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தவும் அரசு தீர்மானித்தது. மேற்கூறிய குறியீட்டை அடையவும், வீடியோ ஒழுங்கீனமாகப் பயன்படுத்துவதைத் ( Video Pieyr ) தடுக்கவும் தமிழக அரசு, தமிழ்நாடு வீடியோ கேசட் ரிக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) விதி 1984-ல் சட்டமியற்றியது. உரிமம் இல்லாமல் வீடியோ நூலகம் நடத்துபவர்களுக்கு நான்காவது பிரிவின்படி கடுமையான தண்டனை விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது. சட்டத்தையும் அதன் கீழ் உள்ள விதிகளையும் முழுமையாகச் செயல்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், சென்னை காவல் துறை ஆணையருக்கும் தகுந்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளன.